[illegible]

[illegible]

23:226
N01
118394

ஸ்ரீ கணேசாயநம:

மஹரிஷி வேதவியாசரால் செய்யப்பட்ட ஸ்காந்தபுராணத்தில்

அடங்கிய ஸநத்குமாரஸம்ஹிதையில் ஓர் பாகமாகிய

சேதுமாஹாத்மியம்.

இது

பூர்வம் கடலூர் காலேஜில் ஸம்ஸ்கிருத பண்டிதராகவும், இப்

பொழுது சென்னை, திருவல்லிக்கேணி, வெஸ்லியன்

மிஷன் ஹைஸ்கூல், முதல் உதவிபோதகராயுமிருக்கிற

என். ஸ்வாமிநாத சாஸ்திரிகளால்,

எளிய தமிழ்நடையில் ஸம்ஸ்கிருத புராணத்தில் உள்ளபடி

மொழிபெயர்க்கப்பட்டது.

Copy right registered.

சென்னை சுதேசமித்திரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சார்வரி ௵ தை ௴

1901.

இதன் விலை ரூ 1-0-0] [தபால் சார்ஜ் வேறு.]

No 1
118394

To—

M. R. Ry. *Bhaskara Sethupathi Avargal, Raja of Ramnad, whose ancient house, the ruling lords of Sethu, extended their support and help to all pilgrims to that holy spot, the confluence of the two seas, and whose liberal patronage of Tamil literature is well known;*

this work is, with permission, dedicated.

By the Author.

முகவுரை.

இந்தப் பரதகண்டத்தில் சகல பாபங்களையும் போக்கி, புக்தி முக்திகளை எளிதில் கொடுக்கிற அநேக புண்ணிய க்ஷேத்திரங்களுண்டென்று இதிகாச புராணங்களால் விளங்குகிறது. அந்த க்ஷேத்திரங்களெல்லாவற்றிலும் காசி முதலிய சிலவைகள்தான் தீர்த்தம், மூர்த்தி, க்ஷேத்திரம் என்கிற மூவகை விசேஷங்களாலும் சிறப்புப் பெற்றவை. அவற்றுள்ளும் காசியும் இராம சேதுவுந்தான் பஞ்ச மகா பாதகங்களுக்கும் பிராயச்சித்தமாக விதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இராமசேதுவானது மகா பாதக நாசமென்பது லோகப்பிரசித்தம். விசேஷமாய்ப் புத்திரதோஷமுள்ளவர்கள் புத்திராபேட்சையால் சேதுயாத்திரை செய்வது சாதாரணம். இந்த இராம சேதுவின் மகிமையானது சுருதி, ஸ்மிருதி, இதிகாச புராணங்களில் பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

(ஶ்ருதி:) (க) "[illegible]
[illegible]
[illegible] ॥"

(இ-ள்.) விசாலமாயும் அழியாததுமான இரண்டு சமுத்திரங்களும் தாயின் வயிற்றில் குழந்தையின் கால்கள் புரளுவது போல், சேதுவின் இருபக்கங்களிலும் புரளுகின்றன. இந்தச் சமுத்திரங்களுக்கு நடுவில் இருக்கிற சேதுவைப் பார்க்கிறவர்கள் சம்சாரத்தைக் கடக்கிறார்கள்; அதைப் பார்க்காதவர்கள் அந்த சம்சாரத்தைக் கடக்கிறதில்லை.

(உ) "[illegible]
[illegible] ॥"

(ங) "[illegible]
[illegible]
[illegible] ॥"

இம்மாதிரியாகவே "𑌕𑍃𑌤𑍇 𑌤𑍁 𑌮𑌾𑌨𑌵𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾𑌃" என்று தொடங்கிய பராசரஸ்மிருதி ஆசாரகாண்டம் 24-வது சுலோகத்தில் கலியுகத்தில் சிறந்த தர்ம சாஸ்திரமாகப் புகழ்ந்து சொல்லப்பட்ட பராசரஸ்மிருதி பிராயச்சித்தகாண்டம், ஒன்பதாவது அத்தி

யாயம் 69, 70 சுலோகங்களாகிய ‘𑌸𑍇𑌤𑍁𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑍍𑌯𑌪𑍋𑌹𑌤𑌿 । 𑌸𑍇𑌤𑍁𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑍍𑌵𑌵𑌗𑌾𑌹𑍇𑌤 𑌸𑌾𑌗𑌰𑌂 ॥” என்பதில் பிரம்மஹத்தி மகா பாதகங்களும் சேது தர்சனம் பண்ணி அதில் ஸ்நானம் செய்வதினால் நீங்கி விடுகின்றன என்று கூறப்பட்டிருக்கிறது.

அப்படியே வால்மீகி ராமாயணத்தில் “𑌏𑌤𑌤𑍍𑌤𑍁 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌸𑌾𑌗𑌰𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌸𑍇𑌤𑍁𑌬𑌨𑍍𑌧 𑌇𑌤𑌿 𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑍇𑌨𑌾𑌭𑌿𑌪𑍂𑌜𑌿𑌤𑌂 । 𑌏𑌤𑌤𑍍𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌶𑌨𑌂 । 𑌅𑌤𑍍𑌰 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌮𑌕𑌰𑍋𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ॥” என்றும், கூர்மபுராணத்தில் “𑌸𑍇𑌤𑍁𑌮𑌧𑍍𑌯𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌮𑍀𑌶𑌾𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌾𑌸𑌸𑌂 । [illegible] ।”............[illegible] ।.........[illegible] ॥” என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வளவு மகிமை பொருந்திய சேது மாகாத்மியமானது வேதவியாஸ மஹரிஷியினால் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருப்பதால், ஸம்ஸ்கிருதம் தெரிந்தவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்குப் புலப்படாமலும், நிரம்ப அழகிய தேசிகர் என்கிற ஓர் தமிழ் வித்துவானால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டும் செய்யுளில் இருப்பதால், தமிழ் வித்துவான்களைத் தவிர மற்றவர்கள் அறிந்துக் கொள்ளக்கூடாமலும் இருப்பதைக் கண்டு பாலராதி பண்டிதரீறாகவுள்ள சகலரும் எளிதில் வாசித்து சேது மகிமையை அறிந்து சம்சாரத்தைக் கடந்து ஜன்மஸாபல்யம் பெற்று இஷ்டார்த்த சித்தியை அடையும்பொருட்டு சம்ஸ்கிருதத்தில் உள்ளபடி எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கிறேன். இதில் ஏதேனும் பிழைகளிருப்பின் அவைகளை எனக்கு தயை செய்து அறிவிக்கும் பெரியோர்களுக்கு மிக்க வந்தனமளிக்கச் சித்தனாயிருக்கிறேன்.

இங்ஙனம்:

என். ஸ்வாமிநாத சாஸ்திரி.

விஷய சூசிகை

ாயம்]	விஷயம்	[பக்க
க	சேதுமகிமை.	1
உ	சேதுவுண்டான விதமும், அங்குள்ள பிரதான தீர்த்தங்களின் பெயரும்	8
௩	தர்ம்மபுஷ்கரணிக்குச் சக்கிரதீர்த்தமென்றபெயர் வந்த சரித்திரம்.	15
௪	காலவசத்துருவான ராக்ஷஸனுடைய வரலாறு.	22
ரு	சக்கரதீர்த்தத்தில் அலம்புசை விதூமன் இவர்கள் சாபவிமோசனம் அடைந்தது	26
௬	மகிஷாசுரன் உற்பத்தி	36
எ	மகிஷாசுரன் வதையும் தேவிபட்டண வரலாறும்	40
அ	வேதாளவரதீர்த்தமகிமையில் சுதரிசனன் வேதாளமானது.	44
கூ	வேதாளவர தீர்த்தத்தில் சுதரிசனன் சாபவிமோசனம் பெற்றது.	49
க0	பாபவிநாச தீர்த்தமகிமை	54
கக	சீதாதீர்த்த மகிமையில் இந்திரன் பிரம்மஹத்தி நீங்கின கதை	60
கஉ	மனோஜவராஜன் மங்களதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இராஜ்யத்தைப் பெற்றது.	64
க௩	அமிர்தவாவி தீர்த்தமகிமையில் அகஸ்திய சகோதரன் முக்தியடைந்தது.	71
க௪	பிரமகுண்ட வரலாறும் அதில் பிரமதேவர் சாபந்தீர்ந்ததும்.	74
கரு	அநுமகுண்டவைபவத்தில் தர்மஸகராஜன் புத்திரப்பேறு பெற்றது.	78
௬	அகஸ்திய தீர்த்தவைபவத்தில் கக்ஷீவான் மனோரமையை மணந்த கதை	82
எ	கக்ஷீவான் மனோரமையை விவாகம் செய்தது.	87
அ	இராமதீர்த்த மகிமையில் தருமபுத்திர மகாராஜன் பொய்சொன்ன பாவம் நீங்கினது.	91
கூ	இலட்சுமண தீர்த்தமகிமையில் பலராமர் பிரமஹத்தி நீங்கினது.	98
0	ஜடாயுதீர்த்தவைபவம்.	102
க	யுதிஷ்டிரர் இலட்சுமிதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி ஐசுவரியம் பெற்ற கதை.	106

அத்தியாயம்]	விஷயம்	[பக்கம்
௨௨	அக்கினிதீர்த்தமகிமையால் துஷ்பண்ணியன் பிசாசத்துவம் ஒழிந்தது.	109
௨௩	சூரியன் பொற்கை யடைந்த சக்கரதீர்த்த மகிமை.	116
௨௪	சிவதீர்த்தத்தில் பைரவர் பிரமஹத்தி நிவர்த்தி பெற்றது.	120
௨௫	சங்குதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி வத்ஸநாப முனிவர் செய்நன்றி மறந்த பாபநிவர்த்தி யடைந்தது.	124
௨௬	யமுனை, கங்கை, கயை என்கிற தீர்த்தங்களிலே ஸ்நானம்பண்ணினதினாலே ஞானசுருதி யென்கிற இராஜன் ஞானம் பெற்றது.	127
௨௭	கோடிதீர்த்தத்தில் ஸ்ரீகிருஷ்ணன் மாதுலனாகிய கஞ்சனைக்கொன்ற பாபநிவர்த்தி அடைந்தது.	133
௨௮	ஸாத்யாமிர்த தீர்த்தத்தில் புரூரவ சக்கிரவர்த்தி தும்புருசாபம் நீங்கி ஊர்வசியை அடைந்த சரித்திரம்.	139
௨௯	மானசதீர்த்தம் அல்லது சர்வதீர்த்த வரலாறு.	145
௩0	தனுக்கோடிவைபவம்.	149
௩௧	அசுவத்தாமா தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணி ஸுப்தமாரணதோஷம் நீங்கினது.	157
௩௨	தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணித் தர்மகுப்தன் பைத்தியம் நீங்கினது.	164
௩௩	தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்து பாபவசு என்ற பிராம்மணன் பிதுர்ஹத்திதோஷம் நீங்கினது.	168
௩௪	நரிகுரங்குகளின் ஸம்வாத மூலமாகச் சுமதி மஹாபாதகம் நீங்கின கதை.	172
௩௫	நரியும் குரங்கும் தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணிச் சாபவிமோசனமடைந்து சொர்க்கம் பெற்றது.	177
௩௬	தனுக்கோடியில் துராசாரன் ஸ்நானம்பண்ணி ஸம்ஸர்க்கபாதகதோஷம் நீங்கினது.	181
௩௭	க்ஷீரகுண்டத்தின் சொரூபம் கூறியது.	192
௩௮	கத்துரு க்ஷீரகுண்டத்தில் ஸ்நானம்பண்ணி மோசம் பண்ணின பாபம் நீங்கினது.	196
௩௯	கபிதீர்த்தத்தில் ரம்பை சாபவிமோசனமடைந்தது.	204
௪0	காயத்திரி சரஸ்வதி தீர்த்தங்களின் வரலாறு.	208
௪௧	காயத்திரி சரஸ்வதி தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணிக் காசிபர் பாபம் நீங்கினது.	212
௪௨	ரிணமோசன முதலிய தீர்த்தமகிமை.	218
௪௩	இராமநாதருடைய மகிமை.	222
௪௪	ஸ்ரீராமர் இராமநாதலிங்கப்பிரதிஷ்டை செய்த வரலாறு.	230
௪௫	ஸ்ரீராமர் அநுமாருக்குத் தத்துவோபதேசஞ் செய்தது.	238
௪௬	அநுமலிங்கமும் அநுமகுண்டமும்வந்தவரலாறு.	244
௪௭	ஸ்ரீராமருக்குப் பிரமஹத்தி வந்த காரணம்.	249
௪௮	சங்கரராஜன் பிரமஹத்தி, ஸ்திரீஹத்திதோஷம் நீங்கினது.	253
௪௯	இராமநாதர் ஸ்தோத்திரம்.	261
௫0	சேதுமாதவன் இராமசேதுவில் வந்த கதை,	270
௫௧	சேது யாத்திரைசெய்யும்முறையும் ஸ்நானவிதியும்	277
௫௨	சேது மகிமை.	282

R Abdul Hameed

சேதுமாஹாத்மியம்

63

1901

1140
90 A

7/11/78

முதலாவது

சேது மகிமை உரைத்த

அத்தியாயம்.

விநாயகர் வணக்கம்.

விக்கினங்களாகிற மலைகளைப் பிளக்க வல்லவராயும், விக்கினங்களுக்கெல்லாம் நாயகராயுமிருக்கிற யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளானவர் சகல பாபங்களினின்றும் நம்மை விடுவித்து எப்பொழுதும் எவ்விடத்திலும் காத்து இரட்சித்தருள்வாராக.

நூல்.

பூர்வகாலத்தில் அஷ்டாங்கயோகாநுஷ்டான முடையவர்களாயும், பிரம ஞானிகளாயும், முமுக்ஷுக்களாயும், பயமற்றவர்களாயும், பிரமவிசாரஞ் செய்வதே தொழிலாக வுடையவர்களாயும், தர்மக்ஞர்களாயும், அசூயை ஒழிந்தவர்களாயும், சத்தியமே விரதமாகக் கொண்டவர்களாயும், ஜிதேந்திரியர்களாயும், கோபத்தை வென்றவர்களாயும், பூததயையுள்ளவர்களாயும், சிறந்த பக்தியோடு விஷ்ணுவை ஆராதிக்கிறவர்களாயு மிருக்கிற மஹாத்மாக்களான சௌனகாதி அறுபதினாயிரம் ரிஷிகள் முக்தியைக் கொடுக்கின்ற மஹா புண்ணியமான நைமிசாரணியத்தில் தபசு செய்துகொண்டிருந்தார்கள்; ஒருகால் இந்த மஹாத்மாக்கள் தங்களுடைய எண்ணிறந்த சிஷ்யப்பிரசிஷ்யர்களுடனே ஒரு சங்கங்கூடி, மஹா புண்ணியமான கதைகளைப்பேசிக்கொண்டும், முக்தியடையும் உபாயத்தை ஆராய்ந்துகொண்டுமிருந்தார்கள். இந்த சமயத்தில் மஹாவித்துவானும், பௌராணிகோத்தமரும், மஹா முனிவரும், வியாசசிஷ்யருமான சூதர் நைமிசாரணியத்திற்குவர, சௌனகாதி ரிஷீசுவரர்கள் அவருக்கு அர்க்கியபாத்தியாசமனாதிகள்கொடுத்து உபசரித்து உத்தமமான ஆசனத்திலிருக்கச் செய்தார்கள்; அப்படியே ஆசனத்தின்மேலிருந்து அக்கினிபோல்

ஜ்வலித்துக்கொண்டிருக்கிற சூதரைப்பார்த்து உலகத்துக்கு உபகாரமாயிருக்கும் பொருட்டு, அதிக இரகசியமான சில விஷயங்களை வினவத்தொடங்கினார்கள். வாரீர், தர்மார்த்த தத்துவங்களையறிந்த சூதரே! சத்தியவதீசுதரான வியாசரிடத்திலிருந்து புராணங்களைக்கேட்டு, அவற்றின் அர்த்தசாரங்களை நீர் தெரிந்துகொண்டிருக்கிறபடியால், க்ஷேத்திரங்களிற் சிறந்த புண்ணிய க்ஷேத்திரமெது? தீர்த்தங்களிற் சிறந்த புண்ணிய தீர்த்தமெது? ஜீவாத்மாக்கள் சம்சார சாகரத்தைக்கடந்து எப்படி முக்தி பெறுவார்கள்? ஹரிஹரனிடத்தில் மனிதர்களுக்கெப்படி பக்தியுண்டாம்? காயிகவாசிகமானசிகங்களென்கிற மூன்றுவித கர்மங்களுக்கும் பலசித்தியெப்படியுண்டாம்? இவைகளையெல்லா மெங்களுக்குத் தயவுகூர்ந்து சொல்லி யருளவேண்டும். குருமார்கள் தங்கள் பிரியமுள்ள சிஷ்யர்களுக்கு இரகசியங்களையெல்லாம் சொல்வது வழக்கமல்லவா? என்று சொல்ல, சூதமுனிவர் தமது குருவாகிய வியாசமுனிவரை வணங்கிச் சொல்லத் தொடங்கினார்.

ஓ முனிவர்களே! நீங்கள் நல்ல கேள்வி கேட்டீர்கள். இது ஜகத்துக்கு மிகுதியும் இதஞ்செய்கிற இரகசியம். இதை முன்பு ஒருவருக்கும் நான் சொன்னதில்லை. நானிப்பொழுது உங்களுக்குச் சொல்லப்போகிறபடியால் நீங்கள் பக்தி சிரத்தையோடு கேட்கவேண்டும்.

க்ஷேத்திரத்திற்சிறந்தது இராமேசுவரம், தீர்த்தங்களிற்சிறந்தது பரிசுத்தமான இராமசேது. அந்தச்சேதுவைக் கண்டமாத்திரத்தில், புண்ணியம் நிறைந்து, ஹரிஹர பக்தியும், மூவிதமான கர்மபலசித்தியும், சம்சாரசாகரத்தினின்று முத்தியும் உண்டாகுமென்பதிலையமே கிடையாது. மனிதன் தன்னாயுசு காலத்திலெப்பொழுதாவதொருதடவை பக்தியோடு அந்த இராமசேதுவைத் தரிசித்தால், அவன் அடையும் புண்ணியபலனைச் சொல்கிறேன் கேளுங்கள். அவன் ருத்திரகல்பம்வரைக்கும் சுகபோகங்களையனுபவித்து மாதுர்வம்சத்தில் கோடிகுலத்துடனும் பிதுர்வம்சத்தில் கோடிகுலத்துடனும் மோட்ச சாம்பிராஜ்யத்தை அடைகிறான். பூமியிலுள்ள மணலையெண்ணினாலும், ஆகாசத்திலுள்ள நட்சத்திரங்களையெண்ணினாலும், சேதுவைக்கண்டதினாலுண்டாகும் பலனை ஆதிசேஷனாலுமளவிடமுடியாது. சேதுவானது சர்வதேவசொரூபியாயிருப்பதினால் அதைத்தரிசித்தவன் பெறும்

பலனை யாரால் சொல்லமுடியும். சேதுவைத்தரிசித்தவன் சகலயாகங்களைச் செய்த பலனையும், சர்வ தீர்த்தங்களிலும் ஆடினபலனையும், சமஸ்ததபசுகளைச் செய்த பலனையும் அடைகிறான். யாரையாவதொருவனைப் பார்த்து நீ சேதுவுக்குப்போ என்று சொல்லுகிறவனுக்கும் மேலே சொல்லிய பலன் கிடைக்குமென்றால் சேதுவைப்பற்றி யதிகமாகப் பேசவானேன்? சேது ஸ்நானம் பண்ணுகிறவன் சப்தகோடி குலங்களோடு விஷ்ணுலோகத்துக்குப் போய், அங்கே யிருந்தபடியே முக்தியையடைகிறான். சேதுவையும், இராமலிங்கத்தையும், கந்தமாதன பருவதத்தையும் தியானஞ்செய்கிறவன் சகல பாபங்களினின்றும் விடுபட்டு, மாதாபிதா வம்சங்களில் இலட்சகோடி குலங்களோடு சிவலோகம் போய், அவ்விடத்தில் மூன்று கல்பம் வசித்து அங்கிருந்தபடியே முக்தியடைவான். சேது ஸ்நானம் பண்ணுகிறவன் வைதரணி நதியைக்கூடப் பார்ப்பதில்லை. (௧) மூஷாவல்லை, (௨) வஜ்ரகூபம், (௩) சுவபட்சம், (௪) மூத்திரபானம், (௫) சல்மலியாரோகணம், (௬) இரத்தபோஜனம், (௭) கிருமிபோஜனம், (௮) சுவமாம்சபோஜனம், (௯) அக்கினி ஜ்வாலா பிரவேசனம், (௰) சிலாவிருஷ்டி, (௰௧) வன்னிவிருஷ்டி, (௰௨) காலசூத்திரம், (௰௩) க்ஷாரோதகம், (௰௪) உஷ்ணதோயம், (௰௫) அதசிரசோஷணம், (௰௬) க்ஷாரஸேவனம், (௰௭) பாஷாணயந்திரபீடை, (௰௮) மருப்பிரபதம், (௰௯) புரீஷலேபனம், (௨௦) கிருகசதாரணம், (௨௧) புரீஷபோஜனம், (௨௨) ரேதபானம், (௨௩) சந்திதாகனம், (௨௪) அங்காரசையாப்பிரமணம், (௨௫) முசலமர்த்தனம் முதலான நரகங்களை யொருபோதும்பார்ப்பதில்லை. பஞ்சமகாபாதகங்களைச் செய்தவனாயிருந்தா

---

(௧) ஈயம் முதலானதை உருக்குகிற பாத்திரத்திற்கு மூஷை என்றுபேர், அதிலிருக்கிறவஸ்து உருகும்படிக்கு நெருப்பிலே காய்ச்சுகிறதுபோலப் பாபிகளைப்போட்டுக் காய்ச்சுகிற நரகம். (௨) வெந்தண்ணிறைந்தகிணறு. (௩) நாயைவிட்டுத் தின்னச்செய்தல். (௪) மூத்திரத்தைக் குடிப்பிக்கிறநரகம்; (௫) முள்ளிலவமரத்திலேற்றுகிற நரகம். (௬) இரத்தத்தைப்புஜிக்கிறது. (௭) புழுவைத்தின்கிறது. (௮) நாய் மாம்சத்தைத்தின்கிறது. (௯) நெருப்புஜ்வாலையிலே பிரவேசிக்கிறது. (௰) கல்மழை. (௰௧) நெருப்புமழை. (௰௨) யமபாசத்தால் கட்டுகிறது. (௰௩) உப்புஜலம். (௰௪) சுடுநீர். (௰௫) தலைகீழாகத்தொங்கவிட்டு வற்றவடிக்கிறது. (௰௬) உப்பைத்தின்கிறது. (௰௭) கல்செக்கில்போட்டு அரைத்து வருத்துகிறது. (௰௮) தண்ணீரில்லாத இடத்தில் தள்ளிவிடுகிறது. (௰௯) மலத்தைப் பூசுகிறது. (௨௦) இரம்பத்தால் அறுக்கிறது. (௨௧) மலத்தைத்தின்கிறது. (௨௨) விந்துவைக்குடிக்கிறது. (௨௩) தேகமூட்டுகளில் நெருப்பிட்டுக்கொளுத்துகிறது. (௨௪) நெருப்புத்தணலால் செய்யப்பட்ட படுக்கையிலேபோட்டுப் புரட்டுகிறது. (௨௫) உலக்கையாலிடித்து

னும்சேது ஸ்நானம் பண்ணினதினால் அவன்பாபங்களெல்லாம் நீங்கி மாதுர்பிதுர்வம்சங்களில் நூறுகோடி குலங்களோடுவிஷ்ணுபதமடைந்து, மூன்று கற்பம்வசித்து அங்கிருந்தே முக்தியடைகிறான். சேது யாத்திரைபோகிறேன் என்று நூறடிதூரம் போனவன் மஹாபாதகனாயிருந்தாலும், பாபங்களெல்லாமொழிந்து, (௨௬) பகுகாஷ்டயந்திரகர்ஷணம், (௨௭) சஸ்திரபேதனம், (௨௮) பதனோத்பதனம், (௨௯) கதாதண்டநிபீடனம், (௩0) கஜதந்தஹனனம், (௩௧) நானாபுஜகதம்சனம், (௩௨) தூமபானம், (௩௩) பாசபந்தம், (௩௪) நானாசூலநிபீடனம், (௩௫) முகக்ஷாரோதகநிஷேசனம், (௩௬) நாசிகாக்ஷாரோதகநிஷேசனம், (௩௭) க்ஷாராம்புபானம், (௩௮) தப்தாயசூசிபட்சணம், (௩௯) க்ஷாராம்பு பூர்ணரந்திரபிரவேசனம், (௪0) மேஹபோஜனம், (௪௧) ஸ்நாயுச்சேதனம், (௪௨) ஸ்நாயுதாகனம், (௪௩) அஸ்திபேதனம், (௪௪) சிலேஷ்மாசனம், (௪௫) பித்தபானம், (௪௬) மஹாதிக்தநிஷேவணம், (௪௭) அத்யுஷ்ணதயிலபானம், (௪௮) க்ஷாரோதகபானம், (௪௯) கஷாயோதகபானம், (௫0) தப்தபாஷாணபோசனம், (௫௧) அத்யுஷ்ண ஸிகதாஸ்நானம், (௫௨) தசனமர்த்தனம், (௫௩) தப்தாயசயனம், (௫௪) சந்தப்தாம்பு நிஷேவணம், (௫௫) சூசிபிரக்ஷேபணம், (௫௬) சிச்நாயோபாரபந்தனம், (௫௭) விருஷணயோ பாரபந்தனம்,

---

நொறுக்கிறது. (௨௬) அநேக மரச்செக்கில்வைத்து ஆட்டுகிறது. (௨௭) ஆயுதங்களால் தேகத்தைவெட்டுகிறது. (௨௮) கீழும்மேலுமெறிகிறது. (பந்தடிப்பதுபோல). (௨௯) பெருந்தடியாலடிக்கிறது. (௩0) யானைதந்தத்தால் மோதுகிறது. (௩௧) பலவித பாம்புகளால் கடிக்கச்செய்கிறது. (௩௨) புகையைக்குடிக்கிறது. (௩௩) கயிற்றால் கட்டுகிறது. (௩௪) பலவித சூலங்களால் குத்தி வருத்துகிறது. (௩௫) முகத்தில் உப்புஜலத்தை வாரியடித்தல். (௩௬) மூக்கில் உப்புஜலத்தை வாரியூற்றுதல். (௩௭) உப்புஜலத்தைக் குடிப்பித்தல். (௩௮) காய்ச்சின ஊசியைத்தின்னச்செய்தல். (௩௯) உப்புஜலம் நிறைந்த குழிகளில் முழுகச்செய்தல். (௪0) ஆண்குறியைத் தின்னச்செய்தல். (௪௧) நரம்புகளை வெட்டுகிறது. (௪௨) நரம்புகளையெரித்தல். (௪௩) எலும்பை வெட்டுகிறது. (௪௪) கபத்தைத் தின்னச்செய்தல். (௪௫) பித்தத்தை குடிக்கச்செய்தல். (௪௬) மகா கசப்பான வஸ்துக்களைத் தின்னச்செய்தல். (௪௭) அதிகயுஷ்ணமானஎண்ணெயைக் குடிக்கச்செய்தல். (௪௮) உப்புஜலத்தைக் குடிக்கச்செய்தல். (௪௯) அழுகின இலைகளின் சாரத்தையுண்ணச்செய்தல். (௫0) சுட்டகல்லைத் தின்னச்செய்தல். (௫௧) சுட்டமணலால் ஸ்நானம் செய்வித்தல். (௫௨) பற்களால் கடிக்கச்செய்வித்தல். (௫௩) காய்ச்சின இரும்பில் படுக்கவைத்தல். (௫௪) கொதித்த ஜலத்தில் முழுகச்செய்தல். (௫௫) ஊசியின்மேல் இருத்தல். (௫௬) ஆண்குறியில் இரும்பு குண்டுகளைக் கட்டிவிடுதல். (௫௭) விருஷணத்தில் இரும்புகுண்டுகளைக் கட்டிவிடுதல்.

(௫௮) விருக்ஷாக்கிரபதனம், (௫௯) தீக்ஷணதாராஸ்திரசையைமுதலான கோர நரகங்களைப் பார்க்கிறதேயில்லை. சேதுவினுடைய மணல் மத்தியில் படுத்துக்கொள்கிறவன் சரீரத்தில் எவ்வளவு மணல் ஒட்டிக்கொள்கிறதோ அவ்வளவு பிரம்ஹத்தியை யவன் செய்திருந்தாலும், அத்தனை பாதகமும் அவனைவிட்டு விலகிப்போகும். சேது மத்தியிலிருந்து வீசுகிற காற்று எவன்மேல் படுகிறதோ அவன் பதினாயிரம் தடவை சுராபான தோஷம் செய்திருந்தாலும் அதினின்றும் விடுபடுகிறான். எவனொருவன் சேது மத்தியில் க்ஷௌரம் பண்ணிக்கொள்கிறானோ அவன் பதினாயிரந்தடவை குருதல்பகமனம் பண்ணியிருந்தாலும் அந்தப் பாபமும் நிவர்த்தியாகிறது. எவனுடைய எலும்பு சேது மத்தியில் போடப்படுகிறதோ அவன் பதினாயிரம் தடவை சொர்ணத்திருட்டுச் செய்திருந்தாலுமுடனே அந்தப்பாதகம் நீறாய்ப்போகிறது. சேதுமத்தியில் ஸ்நானம் பண்ணுகிறவன், மேலேகுறித்த மஹாபாதகர்களோடு சம்பந்தப்பட்டவனாயிருந்தாலும் அந்தப் பாபங்களினின்றும் முக்தனாகிறான். வழிபறிப்போன், தனக்கென்று பாகம்பண்ணிக்கொள்கிறவன், யதிகளையும், பிராமணர்களையும் தூஷிக்கிறவன், அதிக போஜனம் பண்ணுகிறவன், வேதவிக்கிரயஞ் செய்கிறவன்; பிராமணர்களுக்குப்பணந்தருகிறேனென்று வரவழைத்துப்பின் இல்லையென்கிறவன், பிராமணரிடத்திலிருந்து தர்மங்களைத்தெரிந்துகொண்டு பின்பு அவர்களைத்தூஷிக்கிறவன், பிராமணர்களை அவமதிக்கிறவன், மடுவில் ஜலங்குடிக்கவந்த பசுவை விரட்டுகிறவன், ஆகியபிரமகாதகர்களும், பிரமகாதகதுல்லியர்களும், ஔபாசனத்தைவிட்டவனும், தேவலனுடைய அன்னத்தைச் சாப்பிட்டவனும், சுராபானம் பண்ணுகிற ஸ்திரீயைச்சேருகிறவன், கணிகையின் அன்னபோஜனம் பண்ணினவன், சமாராதனையிற்புசித்தவன், பதிதனுடைய அன்னத்தையுண்டவன் முதலிய சர்வகர்ம அனருகர்களாகிய சுராபானபாதகர்களும், அவர்களுக்குத்துல்லியரானவர்களும், கந்தமூலபலங்கள், கஸ்தூரி, கதம்பப்பொடிகள், பால், சந்தனம், கற்பூரம், பாக்கு, தேன், நெய், தாம்பிரம், வெண்கலம், ருத்திராட்சம் இவைகளைத் திருடுகிறவர்களாகிய சொர்ணஸ்தேயிகளும், அவர்களுக்குத் துல்லியரானவர்களும், சகோதரி, நாட்டுப்பெண், தாரஸ்திரீ, சகோதரன் பாரியை, மித்திரபாரியை, குடிக்கிறவேசி, சனஜாதி

---

(௫௮) மரத்தின் உச்சியிலிருந்து கீழே தள்ளிவிடுதல். (௫௯) கூர்மையான ஆயுதங்களிலே படுக்கச்செய்தல்,

யிற்பிறந்த பெண், கைம்பெண், இவர்களை விரும்பிப் புணருகிறவர் முதலிய சர்வகர்மப் பஹிஷ்கிருதர்களான குருதல்பகாமிகளானவர்களும், அவர்களுக்குத் துல்லியரான பாதகர்களும், மேலே சொன்ன நால்வரைப் பாபிகளோடு கூடியிருக்கிற பாபிகளும் ஆகிய பஞ்ச மஹாபாதகர்களும் சேதுவில் ஒரு ஸ்நானம் பண்ணின மாத்திரத்திலே அப்பாபங்களினின்றும் விடுபட்டு முக்தியடைகிறார்கள். யாகங்கள் செய்யாமலே சொர்க்கத்தில் கிருதாசி முதலான தேவஸ்திரீகளின் சம்யோகத்தை யனுபவிக்க விரும்புகிறவர்களும்; சூரியன், அக்கினி முதலான தேவர்களை உபாசிக்காமலே மங்களம் பெற விரும்புகிறவர்களும், திலம், பூமி, சொர்ணம், தானியம், தண்டுலம் இவைகளைத் தானஞ்செய்யாமலும், உபவாசம், சாந்திராயணம் முதலான விரதங்களால் சரீரம் வருந்தாமலும் சொர்க்கத்தையடைய விரும்புகிறவர்களும், பாபத்தைப் போக்கி முக்தியை யளிக்கின்ற சேதுவில் ஸ்நானம் பண்ணக்கடவர்கள். சேது ஸ்நானமானது மனசுத்தியையும் முக்தியையுமளிக்கிறதென்றும், தபம், ஜபம், தானம், ஹோமம், யாகம் முதலானவைகளைவிடச் சிறந்ததென்றும் புராணங்களில் படிக்கப்படுகிறது. யாதொரு பலாபேட்சையுமில்லாமல் சேதுவில் ஸ்நானம் பண்ணுகிறவனுக்கு மறுஜன்மங்கிடையாது. பிராமணர்களே யிது சத்தியம் சத்தியம்! சம்பத்தைக்கருதி ஸ்நானம்பண்ணுகிறவன் சம்பத்தையும், சுத்தியை விரும்பி ஸ்நானம் பண்ணுகிறவன் சுத்தியையும், சொர்க்கலோகத்தில் அப்சரஸ்திரீகளின் இன்பத்தையிச்சிக்கிறவன் அவ்வின்பத்தையும், மோட்சத்தையுத்தேசித்து ஸ்நானம் பண்ணுகிறவன் பிறப்பிறப்பில்லாத மோட்சத்தையும் அடைகிறான். சேது ஸ்நானத்தினால் பாவம் நீங்கிப்புண்ணியமுண்டாகும். பிராம்மணோத்தமர்களே! சேதுஸ்நானமானது சர்வகாமபலப்பிரதமாயும், சமஸ்தவிரதங்கள், சமஸ்தயாகங்கள், சமஸ்தபோகங்கள், சமஸ்ததீர்த்தங்கள், இவைகளுக்குள்ளே அதிக உத்தமமாகச்சொல்லப்படுகிறது. இந்திரலோகம், பிரமலோகம், விஷ்ணுலோகம், சிவலோகங்களிலுள்ள போகங்களையடைய விரும்புகிறவன் இராமசேதுவிலொருதரம் பக்தியுடன் ஸ்நானம் பண்ணவேண்டும். ஆயுசு, ஆரோக்கியம் சம்பத்து, ரூபம், குணம் அங்கங்களோடு கூடிய நாலுவேதங்களை முற்று முணர்தல், சமஸ்த சாஸ்திரங்களின் எல்லை காணல், சமஸ்தமந்திரங்களில் வல்லமை பெறுதல், இவை

களையபேட்சித்துச் சர்வார்த்தசித்தியைக் கொடுக்கிற சேதுவில் ஸ்நானம் பண்ணினால் அந்தந்தப்பலனை அடைகிறார்கள்; சமுசயமே கிடையாது. சத்தியம், சத்தியம். தரித்திரம், நரகம் இவைகளுக்கு பயப்படுகிறவன் இந்த இராமசேதுவில் ஸ்நானம் பண்ணட்டும். சிரத்தையுடனாவது சிரத்தையில்லாமலாவது இராமசேதுவில் ஸ்நானம் பண்ணுகிறவன் இகபரங்களில் துன்பமேயடையமாட்டான். சேதுஸ்நானத்தினால் சகலருக்கும் பாபராசிகள் அழிந்து, புண்ணியராசிகள் சுக்கிலபட்சத்து சந்திரன்போலவும் சமுத்திரத்திலே இரத்தினங்கள் போலவும் விருத்தியாகின்றன. காமதேனு, கற்பகவிருட்சம், சிந்தாமணியிவைகள் இச்சித்தவைகளைக் கொடுப்பதுபோல சேதுஸ்நானமும் கருதினவைகளையெல்லாங் கொடுக்கிறது. சேது யாத்திரை செய்யச்சக்தியில்லாத தரித்திரன் யோக்கியரிடம் திரவியயாசகஞ் செய்துகொண்டுபோய் ஸ்நானஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தானங்கொடுத்தவன் வாங்கினவனிருவருக்கும் பூர்ணமான புண்ணியமுண்டாகும். சேதுயாத்திரையினிமித்தம் பிராமணர்களிடத்திலாவது, பிராமணன் கொடாத பட்சத்தில் க்ஷத்திரியனிடத்திலாவது, க்ஷத்திரியன் கொடாத பட்சத்தில் வைசியனிடத்திலாவது, திரவிய சகாயம் பெறலாம்; வைசியனுங் கொடாத பட்சத்தில் சூத்திரனிடத்திலொருபோதும் வாங்கக்கூடாது. ஒருவனுக்கு வஸ்திரம், தனம், தானியமுதலியவை கொடுத்துச் சேதுவுக்குப் போகும்படி தூண்டுகிறவன் அசுவமேதம் முதலான யாகபலனும், சதுர்வேதபாராயண பலனும், துலா புருஷன் முதலான ஷோடச மஹாதானங்கள் செய்த பலனும் பெற்றுப், பிரமஹத்தியாதி பாப நிவாரணத்தையுமடைகிறான். சந்தேகமே கிடையாது. அதிகமாகச் சொல்லுவானேன்! சர்வ காமங்களையும் அடைகிறான். மேலே சொல்லிய பொருள்களைப் பெற்றுக்கொண்டு சேது யாத்திரை போகிறவனும் அவனுக்குச் சமானமான பலனை யடைகிறான். சேது யாத்திரைக்காக யாசகம் செய்கிறவனுக்குப் பிரதிகிரகதோஷம் கிடையாது. சேது யாத்திரைக்குப் பணம் தருகிறேனென்று சொல்லிவிட்டுப் பின்பு இல்லையென்றவனும், சேதுவுக்குப் போகிறேனென்று பணம் வாங்கிக்கொண்டு போகாமலிருக்கிறவனும் பிரமகாதிகளென்னப்படுகிறார்கள். பணமிருந்தும் லோபகுணத்தினாலே சேது யாத்திரைக்காக யாசிக்கிறவனை ஸ்தேயி என்று சொல்லுகிறார்கள். எப்படியாவது சேதுவில் ஸ்நானம் பண்ணவே

ண்டியது. சேது யாத்திரைபோகச் சக்தியில்லாதவன் உத்தம பிராம்மணனுக்குத் தக்ஷிணைகொடுத்துப்போகச்சொல்லவேண்டும். யாசகஞ்செய்து யாகஞ்செய்வதனால் தோஷமுண்டாகாததைப் போலச் சேது யாத்திரைக்காக யாசகம் செய்வதனால் தோஷமில்லாமையால் யாசகஞ் செய்துகொண்டாவது சேது ஸ்நானத்துக்குப் போகவேண்டும். கிருதயுகத்தில் ஞானத்தினால் மோட்சம். திரேதாயுகத்தில் யாகத்தால் மோட்சம். துவாபர கலியுகங்களில் தானத்தால் மோட்சம். இந்த நாலுயுகங்களிலும் சேது ஸ்நானத்தால் மோட்சம்.

முதலாவது

அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது

சேதுவுண்டான விதமும், அங்குள்ள பிரதான தீர்த்தங்களின் பெயரும் உரைத்த

அத்தியாயம்.

சௌனகாதியர் சூதரைப்பார்த்து மஹானுபாவரே! உத்தம கர்மங்களைச் செய்த இராமன் ஆழமான சமுத்திரத்திலெப்படி சேது கட்டினார்? சேதுரூபமான கந்தமாதன பருவதத்தில் என்னென்ன தீர்த்தங்களிருக்கின்றன? இவைகளைச் சிரத்தையுடைய எங்களுக்குச் சொல்லியருளவேண்டும் என்று கேட்க, பௌராணிகோத்தமரான சூதர் சொல்லுகிறார்.

ரிஷீசுவரர்களே இராமன் சேதுகட்டினவிதத்தையுங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள். பூர்வம் இராமமூர்த்தியானவர் தந்தையின் சொற்படி சீதா இலட்சுமணருடன் தண்டகாரணியம் சென்று பஞ்சவடியில் வாசம் பண்ணுகையில், மாரீசன்செய்த மாயத்தினாலே இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போய்விட்

டான் பழிகொடுத்த தேவியைத் தேடிக்கொண்டு, மிகுந்த சோக மோகத்தோடு பம்பாநதிக்கரையில் வந்து ஒருவானரத்தைக்கண்டார். அந்த வானரம் நீர் யாரென்ன, தசரதராமன் தன்விருத்தாந்தத்தைச்சொல்லி, நீர்யாரென்றுகேட்க, வானரம் நான்சுக்கிரீவன் மந்திரியாகிய அநுமான்; உமது நேசத்தைவிரும்பி உங்களை யவனிடம் அழைத்துக்கொண்டு போகவந்தேன். ஆகையால் நீங்கள் தயவுசெய்து வாருங்கள் என்றுசொல்ல, ஸ்ரீராமனும் அப்படியே ஆகட்டுமென்று சுக்கிரீவனிடம்வந்து அக்கினிசாட்சியாக ஸ்நேகம் பண்ணிக்கொண்டு வாலியைச் சங்கரிப்பேனென்று பிரதிஞ்ஞைபண்ணினார். சுக்கிரீவனும் சீதாதேவியைக்கொண்டுவந்து கொடுக்கிறேனென்று பிரதிஞ்ஞைபண்ணினான். இருவரும் ஒருவரையொருவர்நம்பி மிகுந்த சந்தோஷத்தோடுகூட ரிசியமுகபருவதத்தில் வசித்துக்கொண்டிருக்கையில், சுக்கிரீவனுக்கு நம்பிக்கையுண்டாகும்படி துந்துபியின் எலும்பைத்தமது பாதத்தின் அங்குஷ்டத்தால் அநேக யோசனைதூரம் போய்விழும்படி யெற்றி, ஏழுமராமரங்களையுந்துளைக்க, அதுகண்ட வீரனாகிய சுக்கிரீவன் சந்தோஷமடைந்து, அதிபராக்கிரமசாலியாகிய உம்மைச்சிநேகனாகப்பெற்றமையால் நான் இந்திராதி தேவர்களுக்கும் பயப்படமாட்டேன். இலங்கேசுவரனாகிய இராவணனைக்கொன்று உமக்குச் சீதையை மீட்டுக்கொடுக்கிறேன் என்றுசொல்லச், சுக்கிரீவன் இலட்சுமணனோடுகூட வாலி அரசாண்டுவருகிற கிஷ்கிந்தை வந்துசேர்ந்தார். பிறகு சுக்கிரீவன் வாலியைவெளியில் இழுக்க நினைத்துக்கர்ஜிக்க; அந்தக்கர்ஜனையைக்கேட்டுச் சகிக்காமல் வாலி அந்தப்புரம்விட்டு வெளியில் வந்து தம்பியோடு கைகலந்து முஷ்டியாலடிக்கச் சுக்கிரீவன் பொறிகலங்கி, அடி பொறுக்கமாட்டாமல் [illegible]லசாலியான ராமனிருக்குமிடம் வந்து விழுந்தான். அப்பொழுது நீண்ட புஜங்களையுடைய ஸ்ரீராமர் சுக்கிரீவன் கழுத்தில் ஒரு மாலையைக்கட்டி மறுபடியுஞ் சண்டைக்கனுப்பச் சுக்கிரீவன் போய் வாலியைக் கர்ஜனையாலழைத்து, தொந்தயுத்தஞ் செய்கையில், ராமன் ஒரு பாணத்தால் வாலியைக் கொன்றார். உடனே சுக்கிரீவன் கிஷ்கிந்தை போய்ச் சேர்ந்து, வருஷாகாலம் நீங்கினபின் சீதாதேவியைத் தருவிக்கும்படி தனது வானரசேனைகளைக் கூட்டிக்கொண்டு இராம இலட்சுமணர்களிருக்குமிடம் வந்துசேர்ந்து, சீதையைத்தேடும்பொருட்டு வானரங்களை நாலாபக்கங்களிலும் அனுப்பினான். வாயு புத்திரனாகிய அனுமான் இலங்கையில் சீதையைத் தேடிக்

கண்டு பிடித்து, அவன் கொடுத்த சூடாமணியைக் கொண்டுவந்து ஸ்ரீராமரிடங் கொடுக்க, அவர் துக்கமும் சந்தோஷமும் அடைந்து, சுக்கிரீவன், தம்பி இலட்சுமணன், புத்திசாலியான அனுமார், சாம்பவன், நளன் முதலானவர்களோடு அபிசித்து என்கிற சுப முகூர்த்தத்தில் பயணப்பட்டு, தேசங்களைக்கடந்து, மகேந்திரபர்வதம் வந்து, சக்கிரதீர்த்தம் போய்த் தங்கியிருந்தார். அவ்விடத்தில் இராவணனுடைய இளைய சகோதரனாகிய தர்மாத்மாவான விபீஷணன் நான்கு மந்திரிமார்களோடும் வருவது கண்டு, ஸ்ரீராமர் அவனுக்கு நல்வரவு கூறியழைக்கச், சுக்கிரீவன் அன்பனோ, பகைவனோவென்றையப்பட்டான். ஸ்ரீராமர் விபீஷணனிடத்திலதிக பழக்கமில்லாதிருந்தாலும் அவனுடைய செய்கைகளாலும், நடக்கைகளாலும் யோக்கியனென்றறிந்து, அவனுக்குத் தகுந்த மரியாதைசெய்து, இராட்சத இராஜ்யத்துக்குத் தலைவனாக முடிசூட்டிச், சுக்கிரீவனைப்போலத் தனக்கு முக்கிய மந்திரியாக்கி, சுக்கிரீவன் முதலானவர்களைப் பார்த்துக் காலோசிதமாகச் சில வசனங்களைச் சொல்லுகிறார்.

ஓ வீரர்களே! நமது சைனியமோ மிகவும் பெரிதாயிருக்கிறது. நீலவர்ணமாயும் அலைகளால் கொந்தளிக்கிறதாயும், துள்ளிக்குதிக்கின்ற மகரமத்சியங்களோடு கூடினதாயும், சங்குகள் முத்துச் சிப்பிகள் நிறைந்ததாயும், ஒரு பக்கத்தில் கொழுந்துவிட்டெரியும் வடவாக்கினியால் வியாபிக்கப்பட்டதாயும், ஒரு புறத்தில் மிகுந்த நுரைகள் பொருந்தியதாயும், அதிகபயங்கரமாயும், பலமான காற்றிலேயிருக்கப்பட்ட நீலமேகங்களோடு கூடினதாயும், பிரளயகாலமேகத்தைப்போல பேரொலியி[illegible]கிறதாயும், பலமானதாயும், காற்றினாலே பொங்குகிறதாயுமிருக்கிற இந்தச்சமுத்திரமோ தாண்டமுடியாததாயிருக்கிறது. நாமெ[illegible]னியங்களோடு மிந்தக்கடலைக் கடந்துபோவோம்? நூறுயோசனைதூரம் விசாலித்ததன்று மனதினாலேகூடச்சொல்ல முடியாததாயிருக்கிற இந்தச்சமுத்திரத்தைப் பராக்கிரமசாலிகளான வானரசைனியத்தோடு கூடத்தாண்டிப்போவதற்கென்ன உபாயம் உங்களுக்குத் தோன்றுகிறது? அடடா! எவ்வளவு விக்கினங்களிருக்கின்றன; எப்படிச் சீதையையடையப்போகிறோம்? மஹாகஷ்டம் வந்துவிட்டதே! நாம் நிர்க்கதியாயிருக்கிறோமே; ஏராளமான நீரையும் பெருங்காற்றையுமுடையதாயும் நிராதாரமாயுமிருக்கிற இந்தச்சமுத்திரத்தை வானரவீரர்கள் தாண்டிப்போகிறதற்கு என்ன உபாயஞ்செய்யலாம்? காட்டிலேவந்து மனையாட்டியை யிழந்தோம்! தந்தையும் இறந்தார்!

இவைகளைவிடச்சமுத்திரத்தைத் தாண்டவேண்டியதுக்கம்பெரிதாயிருக்கிறது. என்னஜலம்! என்ன கர்ஜனை! அது கெட்டது. அகஸ்திய மஹாமுனிவர் நீ மஹா துஷ்டனை இராவணனைச் சங்கரித்துவிட்டுப் பாப நிவர்த்திக்காகச் சந்தமாதனம் வந்துசேரு போவென்று சொன்னாரே யது எப்படிப் பொய்யாகும் ; என்று சொல்லி முடித்தார். அதுகேட்ட சுக்கிரீவன் முதலானவர்கள் அஞ்சலி கூப்பிக்கொண்டு ஸ்ரீராமரைப்பார்த்து, ஓடங்களாலும், தெப்பங்களாலும் கடலைக் கடப்போமென்று சொல்ல, விபீஷணன் ஸ்ரீராமரைப் பார்த்து, ராகவா! இந்தச் சமுத்திரமானது உங்கள் முன்னோர்களாகிய சாகரர்களாலே தோண்டப்பட்டதாகையினால், அந்தக் குலத்திற் பிறந்த உம்முடைய காரியத்தை அது கட்டாயஞ் செய்து முடிக்கும்; ஆகையால் நீர் சமுத்திரத்தைச் சரணமடைவது நல்லது என்றுசொல்ல, இராமர் வானரவீரர்களைச் சமாதானஞ் செய்து, நூறுயோசனை விஸ்தாரமுள்ள பயங்கரமான இந்தச் சமுத்திரத்தைத் தோணிகளாலும், தெப்பங்களாலும் நாமெப்படித் தாண்டுகிறது; தாண்டுவோமென்றாலும் நமக்கு வேண்டிய தோணிகளோ கிடையாது; கப்பலோட்டிகள் போகக்கூடியதான இந்தக் கடலில் நம்மைப்போன்றவர்க ளெப்படிப்போகக்கூடும்? நமது சேனையோ விஸ்தாரமாயிருக்கிறது. இடையிலே சத்துருக்கள் வந்து கொன்றாலுங் கொல்வார்கள். ஆகையால் ஓடங்களையும், கப்பல்களையுங்கொண்டு கடலைத்தாண்டுகிற உபாயம் எனக்குப் பிடிக்கவில்லை; விபீஷணன் சொன்னவிதந்தான் எனக்குச்சம்மதமாயிருக்கிறது; எனக்கு வழிவிடும்படியாகச் சமுத்திரத்தைச் சரணமடைகிறேன். வழிவிடாமற்போனால், வாயுவைவிட வேகமும், அக்கினியைவிட உக்கிரமுமுடைய மஹாஸ்திரங்களினாலே அதைக்கொளுத்திவிடுகிறேன் என்றுசொல்லி, ஆசமனஞ் செய்து, இலட்சுமணரோடுகூடத் தர்ப்பசயனத்தில் சமுத்திரத்தைத் தியானித்துப் படுத்துக்கொண்டார். அவர் ஆதிசேஷனுடலைப்போலத் திரண்டுருண்டிருக்கிற தமது வலது கையைத்தலையணையாகவைத்துக்கொண்டு, சமுத்திரக் [illegible] விரிக்கப்பட்ட தர்ப்பசயனத்தில் வேதிகையில் அக்கினிபோல மூன்[illegible]படுத்து நியமந்தப்பாமல் சமுத்[illegible]பாசனை செய்தும், மதங்கொண்ட சமுத்திரராஜன் வாராமையாலே, [illegible] கோபத்தினாலே கண்கள் சிவந்து இலட்சுமணரைப் பார்த்து, இலட்சுமணா! இதோபார். எனது பாணங்களால் [illegible]ளாகக் கண்டிக்கப்பட்ட மகரங்களாலே இந்தச்ச[illegible]த்தைச்

சந்தேகமில்லாமல் தூர்த்துவிடுகிறேன்? சங்கு, சிப்பி மீன்
மகரங்களாலே நிறைந்திருக்கிற இந்தக்கடலை அமோகமான
பாணங்களைப் பிரயோகஞ் செய்து வற்றி அடித்துவிடுகிறேன்;
நான் பொறுமையாயிருப்பதினாலே என்னைச்சக்தியில்லாதவனென்
றெண்ணுகிறான்; சீ! இப்பேர்ப்பட்டவனிடத்தில் பொறுமை காட்
டலாகாது; நல்ல வார்த்தையினா லிந்தச் சமுத்திரம் வசப்படுகிற
தில்லை. அடே இலட்சுமணா! என் வில்லையும், பாம்புக்குச் சமான
மான அம்புகளையும் கொண்டுவா, சமுத்திரத்தை வற்ற அடித்து
விடுகிறேன். வானரங்களிதன்மேலே தங்களுடைய காலால் நட
ந்து போகட்டும். மரியாதைகடந்த இந்தச் சமுத்திரத்துக்கு நாம்
மரியாதை காட்டலாகாது. அநேக மாயிரமலைகளாலும், தான
வர்களாலும், மகரங்களாலும், முதலைகளாலும் நிறைந்திருக்கிற
இந்தச் சமுத்திரத்தை யொரு நொடிக்குள்ளே கலங்க அடிக்கி
றேன், என்று சொல்லிக் கோபத்தால் கண்கள் துடிக்க,
திரிபுர சம்மாரஞ்செய்த ருத்திரனைப்போல உக்கிரங்கொண்டு, கை
யில் வில்லையெடுத்து, நாணேற்றி, உலகங்களெல்லாம் நடுங்கும்
படி தீட்சணமான பாணங்களைப் பிரயோகித்தார். அந்தக் கொ
டிய பாணங்கள் பத்துத்திக்குகளிலு மெரிந்துகொண்டு, கொழு
த்ததானவர்கள் நிறைந்த சமுத்திரத்துள் புகவே, சமுத்திரராஜன்
நடுநடுங்கிப் பயந்து பாதாளத்திலிருந்து அஞ்சலி கூப்பிக்கொண்டு
வெளியிலே வந்து, கைவல்லியபதகாரணனை ராகவனைச் சரண
மடைந்து, காதுக்கினிய சொற்களாலே ஸ்தோத்திரஞ்செய்ய
வாரம்பித்தான். ஏ! சீதாபதியானராகவா! வணங்கினவர்
களுக்குச் சுகத்தைக்கொடுக்கிற உனது திருவடிக்குநமஸ்
காரம். கௌதம பத்தினியாகிய அகலியைக்குச் சாபவிமோச
னஞ் செய்ததாயும், தேவகணங்களால் வந்தனஞ் செய்யப்பட்ட
மான உன்பாத தூளிக்கு நமஸ்காரம். தாடகையுடலைக்கிழித்தவரா
யும், இராட்சதக்கூட்டங்களை யொழித்தவராயும், விஸ்வாமித்திரரு
டைய யாகத்தையிரட்சித்தவராயும், ருத்திரனுடைய வில்லையொடித்
தவராயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். ப[illegible]தர்களுக்[illegible]ஷ்ட
தைக்கொடுக்கிறவரும், தேவர்கள் காரியத்துக்காக அவதரித்த
[illegible]ான உமக்கு நமஸ்காரம். நாராயணராயும், ஆதியந்த மற்றவ
ராயும், சிவ சொரூபியாயும், அச்சுதராயும், மோட்சத்தைத் தரு
பவராயுமிருக்கிற, ஸ்ரீராமா! உம்மை நான் சரணமடைந்தேன்.
கருணைக[illegible]! யுமது கோபத்தையடக்கி யென் அபராதத்தைப்

பொறுத்துக்கொண்டு என்னைக்காத்தருளும் என்றுதுதித்து, இரா
கவா! பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமுதலான பூதங்களை
பிரமதேவன் யெந்தச்சுபாவத்தோடு ஆதியில் சிருஷ்டித்தானோ
அந்தச்சுபாவம் அவைகளுக்கு மாறாமலேயிருக்கிறது. அதுபோல
எனக்கு ஆதிகாலத்திலே யேற்பட்ட ஆழ்ந்திருத்தல் எனக்குச்
சுபாவம். மேடாகிறதன்மை விகாரத்தாலுண்டாகலாம். இது வாஸ
தவந்தான். ஆனாலும் லோபத்தாலாவது, காமத்தாலாவது, பயத்
தாலாவது, இராகத்தாலாவது நான் என் சுபாவகுணத்தை
விடமுடியாது. ஆகையால் உமது சைனியம் போகும் விஷயத்தில்
உமக்கு உதவி செய்கிறேன், என்று பிரார்த்தித்த சமுத்திரத்
தைப்பார்த்து ஸ்ரீராமர் நான் வானர சைனியங்களோடு இலங்கா
புரிக்குப் போகவேண்டும்; நீ வற்றிவழிவிட்டே தீரவேண்டும்
என்று கட்டளையிட, சமுத்திரம் கெஞ்சி ஐயா! நான் சொல்
வதைக் கவனமாய்க் கேட்டுச் செய்யவேண்டியதைச் செய்யும்.
உமது சேனைகள் நடந்துபோவதற்கு உம்முடைய உத்தரவின்படி
நான் வற்றியிடங்கொடுத்தால் வில்வல்லமையுடைய மற்றவர்க
ளும் இப்படியே செய்வார்கள். ஆகையால் உமது சேனை போவ
தற்கு வேறு உபாயஞ் சொல்லுகிறேன் கேளும். உம்முடைய
சைனியத்தில் நளன் என்றொரு வானரமிருக்கிறது. அது விசுவகர்
மாவென்கிற துவஷ்டாவின் புத்திரன். சிற்பவேலையிற்கைதேர்ந்த
வன். அவன் கையால் தொட்டுவைக்கும் புல்கல் கட்டை முதலிய
வற்றையெல்லாம் நான் சுமந்து கொண்டிருக்கிறேன். அவைகள்
உமக்குச் சேதுவாகும். அதன் வழியாய் இராவணனிருக்கிற இல
ங்காபட்டணத்துக்குப்போம், என்று சொல்லிக் கண்ணுக்கு மறை
ந்து விட்டவுடனே, ஸ்ரீராமன் நளனைப்பார்த்து, ஏ புத்திசாலியான
நளனே! நீ சக்தியுள்ளவனாகக் காணப்படுகிறபடியால் சமுத்திரத்
தில் சேது கட்டுபார்ப்போம் என்று சொன்னார். அதை கேட்ட
நளனும், சுவாமீ! நான் விசுவகர்மாவின் ஔரஸபுத்திரன்; இந்த
ஆழமான சமுத்திரத்தில் நான் சேதுவை கட்டிமுடிக்கிறேன்:
என் தந்தையாகிய விசுவகர்மா மந்திரி[illegible]
ரைப்பார்த்து உன் குமாரன் சிற்பத்தொழிலில் [illegible]னக்குச் சமான
மாயிருப்பானென்று வரங்கொடுத்திருக்கிறபடி[illegible]ல் நான் என்
தந்தையைப்போல்ச் சமர்த்துள்ளவன். இப்[illegible]ழுதே வான
ரங்களெல்லாம் சேதுவைக் கட்ட யத்[illegible]ஞ் [illegible]ய்யட்டுமென்று
சொன்னான். அப்பொழுது ஸ்ரீராமர் உத்தர[illegible]ரில்[illegible]ான
வானரங்களெல்லாம், மரங்களையும், கொடிகளையும் [illegible]றைகளையும்,

மலைகளையும், கொடுமுடிகளையும், கருடனையும் வாயுவையும்போல வேகமாய்க்கொண்டுவந்தார்கள். அவைகளைக்கொண்டு சமுத்திரமத்தியில் பத்துயோசனை விசாலமும், நூறுயோசனை நீளமுமுள்ள சேதுவைக்கட்டி முடித்தான். கேளுங்கள் முனீசுவரர்களே, ஸ்ரீ ராமசந்திரன் விசுவகர்ம்மாவின் புத்திரனை நளனைக்கொண்டு கட்டுவித்த இந்த சேதுவைப்பார்த்து பாபிகளெல்லாரும் முத்தர்களாகிறார்கள். இந்தச்சேதுவில் ஸ்நானம் பண்ணுகிறவர்களிடத்தில் ஸ்ரீபரமேசுவரன் எவ்வளவு திருப்தியோடிருப்பாரோ அவ்வளவு திருப்தியாய் விரதம், தானம், ஓமம், தபசு இவைகளைச் செய்கிறவர்களிடத்தில் இருக்கமாட்டார். சூரிய பிரகாசத்துக் கொப்பான வேறு பிரகாசமில்லா திருப்பதுபோல இந்தச் சேது ஸ்நானத்துக்குச் சமானமான ஸ்நானம் உலகத்தில் கிடையாது. இராமன் இலங்கைக்குப்போக விரும்பி வானரங்களைக்கொண்டு சேதுகட்ட ஆரம்பித்த இடமே சேது மூலமாகும். இதுதானுலகத்தில் தர்ப்பசயனமென்று வழங்கி வருகிறது.

கேளுங்கள் முனீசுவரர்களே! இராமன் சேதுகட்டின விதத்தை யுங்களுக்குச் சொல்லி முடித்தேன். அந்தச்சேதுவில் புண்ணிய தீர்த்தங்கள் கோடி கோடியாக விருக்கின்றன. அவைகளின் கணக்கையும், பெயரையும் சொல்ல ஆதிசேஷனாலும் முடியாது. ஆகையால் அவைகளில் பிரதானமான இருபத்திநாலு தீர்த்தங்களை மட்டு முங்களுக்குச் சொல்லுகிறேன். சக்கிரதீர்த்தம், வேதாளவரத தீர்த்தம், பாபவிநாச தீர்த்தம், சீதா தீர்த்தம், மங்கள தீர்த்தம், அமிர்த வாபி, பிரமகுண்டம், அநுமத்குண்டம், அகஸ்திய தீர்த்தம், இராம தீர்த்தம், இலட்சுமண தீர்த்தம், ஜடா தீர்த்தம், இலட்சுமி தீர்த்தம், அக்கினி தீர்த்தம், சூரியனுக்குப் பொய்கையளித்த சக்கிரதீர்த்தம், சிவ தீர்த்தம், சங்கதீர்த்தம், யமுனா தீர்த்தம், கங்கா தீர்த்தம், கயா தீர்த்தம், கோடி தீர்த்தம், சாத்தியாமிருத தீர்த்தம், மானச தீர்த்தம், தனுக்கோடி தீர்த்தம், இவைகளே முக்கியமான தீர்த்தங்களாம். முனிவர்களே, சேதுமத்தியிலுள்ள முக்கியமான இருபத்துநாலு தீர்த்தங்களின் பெயரை யுங்களுக்குச் சொல்லிவிட்டேன். பாபத்தைப் போக்கிப் புண்ணியத்தைக் கொடுக்கிற இந்த அத்தியாயத்தைப் பக்தியோடு படிப்போரும் கேட்போரும் இவ்வுலகத்தில் இஷ்டார்த்த சித்தியடைந்து பரத்தில் மோட்சத்தை யடைகிறார்கள்.

இரண்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது
தர்ம்ம புஷ்கரணிக்குச்
சக்கிர தீர்த்தமென்று பெயர்வந்த
சரித்திர முரைத்த
அத்தியாயம்.

சூதமுனிவரே சேதுவிலிருக்கிறதாகச் சொன்ன இருபத்துநாலு தீர்த்தங்களுள் முதலாவது தீர்த்தத்துக்குச் சக்கிர தீர்த்தமென்று பெயர்வந்த காரணமென்ன? என்று சௌனகாதியர் கேட்கச் சூதர் சொல்லத் தொடங்கினார்.

கேளுங்கள் பிராமணோத்தமர்களே! நான் பிரதானமென்று சொன்ன இருபத்துநாலு தீர்த்தங்களில் முதலாவதாகச் சொன்ன தீர்த்தம் சர்வலோகப் பிரசித்தமானது.

அந்தத்தீர்த்தத்தை நினைப்பதினாலேயே மறுபிறப்புக்கிடையாது. ஒருதரம் ஸ்நானம் பண்ணுவதினாலும், வாயாலுச்சரிப்பதினாலும் இலட்ச ஜன்மங்களிற் செய்த பாபங்கள் நாசத்தையடைகின்றன. ரிஷீசுவரர்களே! இந்தத்தீர்த்தத்துக்கு ஒப்பாகவாவது உயர்வாகவாவது ஒரு தீர்த்தமுங்கிடையாது. இது நிச்சயம். கங்கை, சரஸ்வதி, ரேவை, பம்பை, கோதாவரி, காளிந்தி, நர்ம்மதை, மணிகர்ணிகை, காவேரி முதலாகப்பூமியிலுள்ள தீர்த்தங்களெல்லாமிந்தத்தீர்த்தத்தின் கோடியிலொரு பங்குக்கு மொப்பாகாது. கேளுங்கள் முனிவர்களே. இந்தத் தீர்த்தத்தைப் பௌராணிகோத்தமர்கள் தர்ம தீர்த்தமென்று சொல்லுகிறார்கள். அதற்குச் சக்கிரதீர்த்தமென்று பெயர் வந்தகாரணத்தையிப்பொழுது உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள். சேதுமூலமென்கிற தர்ப்பசயனத்திலேயே மகாபாதகநாசனமான இந்த சக்கிர தீர்த்தமிருக்கிறது. தெக்ஷண சமுத்திரக்கரையில் ஆலாசிய க்ஷேத்திரத்துக்கு அதிக தூரமில்லாமலும் புல்லகிராமத்துக்கும் க்ஷீரசரசுக்கும் சமீபத்திலிருக்கிற தர்மபுஷ்கரணிக்கரையில் கிருபாமூர்த்தியும், சத்தியவந்தரும், அகப்புற இந்திரியங்களை யடக்கினவரும், சிற்றின்பத்தை வெறுத்தவரும், கோ[illegible] சுகதுக்கங்களை யொப்பக் கருதுகிறவரும், சகல ஜீவாத்மாக்களையும் தன்னு

யிர்போலப் பாவித்து இதஞ்செய்கிறவரும், விஷ்ணுபக்தருமான காலவரென்கிற ஒரு மஹா ரிஷியானவர் பதினாயிரம் வருஷம் தபசு பண்ணிக்கொண்டிருந்தார். சில வருஷம் உதிர்ந்த சருகுகளை உண்டும், சில வருஷம் ஜலத்தை யருந்தியும், இன்னும் சில வருஷம் காற்றையுண்டும், இப்படியாக ஐயாயிரவருஷம் தேவர்களாலுஞ் செய்யமுடியாத [illegible]ந்தபசு செய்தார்; இன்னும் ஐயாயிரம் வருஷம், ஆகாரமில்லாமலும், வெளிச்சத்தைப் பாராமலும், மூச்சு விடாமலும், ஆகாரமில்லாமலும், வருஷா காலத்தில் வெளியில் நின்று கொண்டும், பனிகாலத்தில்ஜலத்தில் முழுகியிருந்தும், வெயிற்காலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து கொண்டும், அஷ்டாட்சரத்தை ஜபித்து நாராயணனைத்தியானித்துத் தபசுபண்ணிக்கொண்டிருந்தார். இவ்விதம் பதினாயிரம் வருஷம் தபசுபண்ணிக்கொண்டிருக்கையில் அவருடைய தபசுக்கு மனமகிழ்ந்து, பக்தர்களுக்கெளியவரான ஸ்ரீலெட்சுமி நாராயணர் சந்திரசாமரங்கள்வீச, ஹாரகேயூர கடக மகுட கௌஸ்துவாதி ஆபரணங்கள் ஜொலிக்க, விஷ்வக்சேனர், சனந்தர் முதலான கிங்கரர்கள் சூழ்ந்துவர, நாரதர் முதலான முனிவர்கள் வீணை வேணு மிருதங்கமுதலிய வாத்தியங்களிலேயவர்புகழைப்பாடிவர, சனகாதி மஹாயோகிகள் இருப்பக்கத்திலும் சேவித்துவர, பொற்பிரம்பேந்திய அநேக கட்டியக்காரர்கள் கட்டியங் கூறிவர, அரையில் பீதாம்பரம் பிரகாசிக்க, திருமார்பில் லெட்சுமிவிளங்க, ஒருகை தாமரை மலரையசைத்துக்கொண்டிருக்க, மூவுலகையுமோகிக்கச் செய்யும் மந்தகாசம் இலங்க, நீலமேகத்தையொத்த தமது திருமேனியின் பிரகாசமானது பத்துத்திக்குகளிலும் பரவ, சங்கு சக்கர கதாதாரியாய், கோடி சூரியப்பிரகாசராய், மலர்ந்த தாமரை மலரின் இதழைப்போல அகன்று நீண்ட கண்களையுடையவராய்க், கருடாரூடராய் எதிரில் தோன்றினார். ஸ்ரீவத்ஸம் என்கிற மறுவானது பிரகாசித்துக் கொண்டிருக்கிற திருமார்பினையுடைய ஜகத்பதியான மஹா விஷ்ணுவைக்கண்டு காலவமுனிவர் மிகுந்த பக்தியோடுகூடத் துதிக்கத்தொடங்கினார். சங்கு சக்கரதரராயும் தேவாதிதேவராயும், நித்தியராயும், சுத்தராயும், சச்சிதானந்த சொரூபியாயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். பக்தருடைய துக்கத்தை நீக்குகிறவராயும், ஹவ்ய கவ்ய சொரூபியாயும், சிருஷ்டிஸ்திதி சம்ஹாரமென்கிற முத்தொழிலையுஞ் செய்யும் மும்மூர்த்தி சொரூபராயும், வியாபகராயும், இலட்சுமிபதியாயும், பரபிரம

சொரூபியாயும், சூரிய சந்திரர்களைக் கண்களாக வுடையவராயும், பிரம்மாதி தேவர்களால் வணங்கப்படுகிறவராயு மிருக்கிற உமக்கு வந்தனம்; வந்தனம்; நாம ரூப ஜாதி குண கர்ம்மரஹிதராயும், ஒரு தோஷமுமில்லாதவராயும், சமஸ்த சமுசாரபாரத்தை நீக்குகிறவராயும், அசுரசங்காரியாயும், வேதாந்த வேத்தியராயும், வைகுண்டவாசியாயும், பிரமனுக்குத் தந்தையாயும், சத்துக்களின் பாபங்களையும், துக்கங்களையும் விலக்குகிறவராயும், அளவிடப்படாத பராக்கிரமத்தையுடையவராயும், வசுதேவ புத்திரராயும், சாரங்கமென்னும் தனுசையுடையவராயும், ஆதிசேஷனாகிய சயனத்தில் படுத்துக்கொண்டிருப்பவராயுமிருக்கிற இலட்சுமீபதியானஉமக்கு அடிக்கடி நமஸ்காரஞ்செய்கிறேன் என்று காலவர் காதுக்கினிமையாக ஸ்தோத்திரம் பண்ணினதைக்கேட்டுஸ்ரீமந்நாராயணரானவர் பரமசந்தோஷமடைந்து காலவமுனிவரைத்தமது நாலுகைகளாலும் ஆலிங்கனம் செய்துகொண்டு மஹா சந்தோஷத்தோடு "காலவமுனிவரே நீர் செய்த தவத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், நமஸ்காரத்தாலும், நான் திருப்தியடைந்து உமக்கு வரங்கொடுக்க வந்திருக்கிறேன், வேண்டிய வரங்களைக்கேட்டுக் கொள்ளும்" என்று சொல்லக் காலவர் நாராயணா! ராமநாதா! பீதாம்பரதரா! ஜகன்மயா! ஜனார்த்தனா! ஜகத்வியாபகா, கோவிந்தா, நரகாந்தகா!" உம்மைத் தரிசித்தமாத்திரத்திலேயே நான் கிருதார்த்தனாய் எல்லாருக்கு மேலானவனாய்விட்டேன். பாபிகளுக்கெட்டாதவராயும், பிரமன், ருத்திரன், வேதங்களாலறியப்படாதவராயும், யோகிகள், கர்ம்மடாள் முதலானவர்களாற் காணப்படாதவராயும், நினைத்தமாத்திரத்தில் மஹா பாபிகளுக்கும் முத்தியையளிக்கிற பரமாத்மாவான உம்மைத் தரிசிப்பதைவிட வேறு வரமெனக்கென்ன வேண்டும்? உமது பாதாரவிந்தத்தில் அசைவற்ற பக்தி ஒன்றே வேண்டும் என்று பிரார்த்திக்கப், பகவானும் அப்படியே நிராசையான திடபக்தியுண்டாகக்கடவது. மேலும் என்னையே நம்பி, என்னையே தியானம் பண்ணிக்கொண்டு, என்னூழியத்தையே செய்துகொண்டு இந்த ஆச்சிரமத்தில் வாசம்பண்ணிக்கொண்டிரும்; இந்தப் பிராரப்த சரீரமுடிவில் என் சாரூபத்தையடைவீர். இந்தத் தர்ம்ம புஷ்கரணியானது பாபத்தை யொழித்துப் புண்ணியத்தைக் கொடுக்கத்தக்கது. இதன் கரையில்செய்யப்படுகிற தபசு சித்திபெறக்கூடியது.

பூர்வகாலத்தில் தருமதேவதை யிவ்விடத்தில்வந்து மஹா தேவனைக் குறித்துத் தபசு செய்கையில் ஸ்நானம் பண்ணுகிற

தற்காக இந்தத் தீர்த்தத்தை யுண்டாகிற்று. அதனாலிதற்குத் தருமதீர்த்தமென்று பேராயிற்று. கேளுங்காலவரே! நீரெப்படி யென்னைக் குறித்துத் தபசு செய்தீரோ அதுபோலவே தருமதேவதை சூலபாணியாகிய மகேசுவரனைக் குறித்துத் தபசுபண்ண, அந்தத்தபசினால் திருப்தியடைந்த மஹாதேவன் தமது காந்தியால் பத்துத் திக்குகளையும் விளங்கச் செய்துகொண்டு பிரத்தியட்சமாக வந்தார். கிருபாநிதியான பரம[illegible] பிரத்தியட்சமானதைக் கண்ட தருமதேவதை அவரை ஸ்தோத்திரம்பண்ண வாரம்பித்தது. ஜகந்நாதராயும், ஈசானராயும், பிரணவசொரூபியாயும், சகல தேவதா சொரூபியாயும், ஆதி யந்த மத்தியம் அற்றவராயும், ஊர்த்துவரேதஸாயும், விரூபாட்சராயும், விசுவரூபராயும், சமஸ்த ஜகதாதாரராயும், அநந்தராயும், அஜராயும், அவ்யயராயுமிருக்கிற உம்மை நமஸ்கரிக்கிறேன், வாக்குப்புஷ்டி முதலான பத்துவகைப் புஷ்டிகளைக் கொடுக்கிறவரென்று யோகிகளால் சொல்லப்படுகிற உம்மை நமஸ்கரிக்கிறேன். லோகங்களுக்கெல்லாம் அதிபதியாயும், வஞ்சிக்கிறவராயும், எங்கும் வியாபகராயும், [illegible]ண்டராயும், பிரமா முதலாக ஸ்தாவரங்களீறுள்ள பசுக்களுக்கெல்லாம் பதியாயும், கல்மஷத்தை நாசம் பண்ணுகிறவராயும், மேகரூபமாய்ச் சதா மழை பொழிகிறவராயும், உலக முடிவு காலத்தில் எல்லாரையும் அழச்செய்கிற ருத்திரராயும், அஷ்டநோய்களை நீக்குகிற சத்ருத்திரராயும், சிறந்த ஞானசொரூபராயும், பிநாகமென்கிற வில்லையும், சூலத்தையும் கைக்கொண்டவராயும், சிற்சொரூபராயும், பரிபூரண குணமுடையவர்களுக்கெல்லாம் தலைவராயும், ஐந்து முகங்களுடையவராயும், சரீரங்களுக்கெல்லாம் அதிபதியாயிருந்தாட்டுவிக்கிறவராயும் இருக்கிற உமக்கு வந்தனம் வந்தனம். என்றிவ்விதமாகத் தருமதேவதை ஸ்தோத்திரம் பண்ணினதைக்கேட்ட லோகங்களுக்கெல்லாம் சுகத்தைக் கொடுக்கிற சங்கரன் மிக சந்தோஷமடைந்து, தருமதேவதையே! நீ செய்த ஸ்துதியினால் நான் திருப்தியடைந்துவிட்டேன்; உனக்கு வேண்டியதைக் கேள் என்று சொல்லத் தருமதேவதை பார்வதிநாதனே நான் உமக்கு வாகனமாகவேண்டும்; அதனால் நான் கிருதார்த்தனாய் விடுவேன். இந்த வரந்தான் எனக்குவேண்டும் என்று கேட்டுக்கொண்டது; ஈசன் உலகங்களாலெப்பொழுதும் பூஜிக்கப்பட்ட தருமதேவதையே நீயெனக்கு வாகனமாகக்கடவாய்; என்னைச் சுமக்கத் தக்கசக்தியும் உனக்கு உண்டாகட்டும்; உன்னைச்சேவிக்கிறவர்களுக்கு என்னிடம் எப்பொழுதும் பக்தியுண்டாகும்; இதில் சந்தேகமேகிடையாது என்று சொல்லத் தருமதேவதையும் அது முதலாக ரிஷபரூபமாய்ப் பரமசிவனுக்கு வாகனமாயிற்று. கேளுங் காலவரே! மஹாதேவன் அந்த ரிஷபவாகனத்திலேறிக்கொண்டு, அதைப்பார்த்து தெட்சண சமுத்திரக்கரையில் நீ உண்டாக்கின இந்தத்தீர்த்தத்துக்குத் தர்மபுஷ்கரணியென்று உலகத்தில் பெயர் வழங்கும். இதன் கரையில் செய்யப்படுகிற ஜப ஹோம தான வேதாத்தியாயனமுதலியவையெல்லாம் அனந்த பலனைக்கொடுப்பதாகும்; இதில் சந்தேகப்படவேண்டாம் என்று வரங்கொடுத்துக் கைலாசம்போய்ச் சேர்ந்தார். ஆகையால் காலவமுனிவரே இந்தத் தருமதீர்த்தக்கரையில் உமது கர்ம சரீரம் விடுபடுகிறவரைக்கும் [illegible] பண்ணிக்கொண்டிரும். உமக்கு ஏதாவது பயமுண்டானால் அப்பொழுது உடனே யென் சக்கிராயுதத்தையனுப்பி பயத்தை நீக்கி யிரட்சிக்கிறேன். தேகாந்தத்தில் என்னை யடைவீர் என்று சொல்லிப் பகவான் அந்தர்த்தானமாயினார்.

கேளுங்கள் முனிவர்களே! இப்படி மஹாவிஷ்ணுமறைந்த பின் காலவமுனிவர் அந்தத் தீர்த்தக்கரையில் மஹாவிஷ்ணுவைத் தியானஞ்செய்துகொண்டு, திரிகாலங்களிலும் சாளக்கிராமத்தில் விஷ்ணுவை யாராதனைபண்ணி, விரக்தராய், இந்திரிய நிக்கிரகஞ் செய்து தபசு செய்துகொண்டிருந்தார். இப்படியிருக்க ஒரு காலத்தில் மாக மாசம் சுக்கிலபட்ச ஏகாதசியில் உபவாசம்பண்ணி இராத்திரி கண் விழித்துக்கொண்டு விஷ்ணுவாராதனை பண்ணி, விடிந்தவுடனே துவாதசியில் தர்ம்ம புஷ்கரணியில் ஸ்நானம்செய்து, சந்தியாவந்தனாதி நித்திய கர்ம்மங்களை முடித்துக்கொண்டு, துளசி முதலான புஷ்பங்களை யெடுத்துக்கொண்டு, விஷ்ணு பூஜை செய்து ஸ்தோத்திரம் பண்ண ஆரம்பித்தார். ஸஹஸ்ரசீரிஷராயும், மச்சியம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமர், தசரதராமர், பல பத்திரராமர், கிருஷ்ணர், கற்கியென்ற தசாவதாரஞ் செய்த உமக்கு நமஸ்காரம்; வசுதேவ புத்திரராயும், ஆதாரமற்றவராயிருந்தாலும் சர்வ பூதங்களுக் காதாரமாயும், பக்தர்களுடைய துக்கங்களை நீக்குகிறவராயும், சர்வஞ்ஞராயும், சர்வகர்த்தராயும், சச்சிதானந்த சொரூபராயும், அறியப்படாதவராயும், இத்தன்மையுள்ளவரென்று குறிக்கப்படாதவராயும், ஜனார்த்தனராயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம், என்று ஸ்தோத்திரம் பண்ணித் தியானம் பண்ணிக்கொண்டிருந்தார். இந்தச் சமயத்திலொரு துஷ்டனான ராட்சதன் பசியால் வருந்தி வேகமாயோடிவந்து காலவரைப்பிடித்

னத்தின்ன யத்தனம் செய்தபோது, காலவர் நாராயணா, சக்கிரபாணி, கிருபா சமுத்திரமே, சரணமடைந்தவர்களுக்குக் கதியாயிருப்பவரே என்னைக் காப்பாற்றும், காப்பாற்றும்; பரமேசா, பரமாநந்தனே, சரணாகதபாலகா, கருணைக்கடலே, இராட்சதனிடத்தில் அகப்பட்டுக்கொண்ட என்னைக் காத்தருளும்; இலட்சுமிநாயகனே, வைகுண்டா, கருடத்துவஜா, விஷ்ணுவே, ஹரியே, அரக்கனால் பிடிக்கப்பட்ட என்னை முதலைவாயிலகப்பட்ட கஜேந்திரனைக் காப்பாற்றினதுபோலக் காப்பாற்றியருளும். தாமோதரா, ஜகந்நாதா, ஹிரணியாசுரமர்த்தனா! பிரகலாதனைக் காத்ததுபோல என்னையுங் காத்தருளவேண்டும் என்று வாய்விட்டலற, விஷ்ணு தன் பக்தராகிய காலவருடைய பயகாரணத்தையறிந்து, அவரைக் காத்தருளும் நிமித்தம் அநந்த சூரியாக்கினிகளுக்குச் சமானமாய் விளங்கும் மஹாராட்சச வைரியாகிய சக்கிராயுதத்தை யனுப்பினார். அது, நெருப்புஜ்வாலைகளை வீசிக்கொண்டு பேரிரைச்சலிட்டு அதிக வேகமாய்த் தர்ம்ம புஷ்கரணியை நோக்கி வருவதைக்கண்டு அரக்கன் ஓட்டம்பிடித்தான். சக்கிராயுதம் அவனைத் துரத்திப் பிடித்து அவன் தலையை யறுத்துவிட்டது. இப்படி அரக்கன் பட்டவே காலவர் சந்தோஷத்தை யடைந்து சுதரிசனாழ்வாரை ஸ்தோத்திரஞ் செய்யத்தொடங்கினார். ஜகத்தைக்காக்கும் விஷயத்தில் தீக்ஷைகொண்டு, நாராயணனுடைய கரகமலங்களுக்கு அலங்காரமாய் விளங்குகிற சக்கிராயுதமே! உமக்கு நமஸ்காரம். இராட்சதர்களை யுத்தத்தில் வெல்லவல்லவராயும், பேரொளியுடையவராயும், பக்தர்களுடைய துக்கத்தை நீக்கும் சுபாவமுள்ளவராயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். பயத்தினால் நடுங்கிக்கொண்டிருக்கிற என்னைச் சகல பாபங்களினின்றும் விடுவித்து, முத்தியைவிரும்புகிறவர்க்குச் சுபத்தை யருளும்பொருட்டு இந்தத் தருமதீர்த்தத்திலெப்பொழுதும் பிரசன்னராயிருந்தருளும் என்று ஸ்தோத்திரம் பண்ண, சக்கிராயுதம் காலவரிடத்தில் நேசமுடையதாய், காலவமுனிவரே! உத்தமமாயும், புண்ணியமாயுமிருக்கிற இந்தத தருமதீர்த்தத்தில் லோகங்களுக்கு இதஞ்செய்யும்பொருட்டுச் சதாவாசம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். நீர் விஷ்ணுபக்தராகையால் கொடிய அக்கனால் நீர் துன்பப்படுவதையறிந்து, மஹாவிஷ்ணுவானவர் என்னையனுப்ப நான் அதிவேகமாய்வந்து அந்த இராட்சத அதமனைச் சங்கரித்து உம்மை விடுவித்தேன். நீர் கேட்டுக்கொண்டபடி நானிந்தத் தரும தீர்த்தத்தில் வாசம் பண்ணிக்கொண்டு வருகிறேன்; அதனால் உமக்காவது மற்றவர்களுக்காவது இராட்சதரால் துன்பம் வாராது. சமஸ்த பாபங்களையு நிர்மூலஞ்செய்கிற இந்தத் தருமதீர்த்தத்தை முன் காலத்தில் தருமதேவதையுண்டாக்கிற்று. இது தேவீ பட்டணம் வரையில் பரவியிருக்கிறது. இந்தத் தருமதீர்த்தம் முழுவதிலும் நான் வாசம் பண்ணப்போகிறபடியால் இதற்குச் சக்கிரதீர்த்தமென்கிற பேர்வரும். இந்தச் சக்கிரதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவன் தன்னுடைய புத்திர பௌத்திரர்களோடும் மற்றுமுள்ள வம்சஸ்தர்களோடும் பாபங்களையெல்லாமுதறிவிட்டு அந்தத்தில் பரமமான விஷ்ணுபதத்தை யடைவான். கேளும் காலவரே பிதுர்க்களை யுத்தேசித்து இந்தத் தீர்த்தக் கரையில் பிண்டமிடுகிறவன் சொர்க்கம்போவான். அவனுடைய பிதுர்க்களும் திருப்தியடைவார்கள் என்று சொல்லிவிட்டுக் [illegible]லவரும் மற்றவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தரும தீர்த்தத்தில் புகுந்து மறைந்துபோயிற்று.

கேளுங்கள்முனிவர்களே! அதுமுதலாகத் தருமதீர்த்தத்துக்குச் சக்கரதீர்த்தமென்று பேர். இந்தத்தீர்த்தத்துக்கு சமானமான தீர்த்தம் இருந்ததுமில்லை; இருக்கப்போகிறதுமில்லை. இதில் ஸ்நானம் பண்ணுகிறவர்கள் மோட்சம் அடைவார்களென்பதி லாக்ஷேபனை கிடையாது. இந்த அத்தியாயத்தைப் பக்தியோடு படிப்போருக்கும் கேட்போருக்கும் சக்கிரதீர்த்த ஸ்நானபலனுண்டாய் இக லோக பரலோக சுகங்களை அடைவார்கள். தரும தீர்த்தத்தையும், உக்கிரமான தபசு பண்ணின காலவரையும், இராட்சத சங்காரஞ் செய்த சக்கிராயுதத்தையும், ஒருதரமாவது தியானிக்கிறவன் பாபங்களை அடையவேமாட்டான்.

மூன்றாவது

அத்தியாயம்

முற்றுப் பெற்றது.

நாலாவது.

காலவ சத்துருவான ராக்ஷதனுடைய வரலாறு கூறிய

அத்தியாயம்.

ஐயா! சூதமுனிவரே! தாங்கள் புராணஞ்சொல்லத் தெரிந்தவருள் சிறந்தவரன்றோ! ஆகையால் விஷ்ணுபக்தியிற்சிறந்த மஹாத்மாவான காலவ மஹாரிஷியைத் துன்பப்படுத்தின இராட்சதன் வரலாற்றை யெங்களுக்கு விவரமாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூதர் சொல்லுகிறார்.

வாரீர் பிராமணர்களே! அந்த அரக்கன் முனிவரர்கள் சாபத்தினாலே இராட்சதனான சரித்திரத்தைச் சொல்லுகிறேன். ஆதரவுடனே கேளுங்கள். பூர்வகாலத்தில் கயிலாசகிரிக்கு ஒப்பானதும் பரமேசுவரனுக்குப் பிரியமுள்ளதுமான ஆலாசியமென்கிற மதுரையில் வசிஷ்டர் முதலாக இருபத்தினாலாயிரம் முனிவர்களிருந்தார்கள். அவர்களெல்லாரும் சர்வாங்கமும் விபூதியை உத்தூளனஞ் செய்துகொண்டு, நெற்றியில் திரிபுண்டரமாக வணிந்து, ருத்திராட்சமாலை பூண்டு, பஞ்சாட்சரஜபம் பண்ணிப், பிரமவிசாரஞ் செய்துகொண்டு ஆலாசியத்தில் விளங்குகிற சந்திரனையணிந்த உமாபதியான சுந்தரேசுவரரை முத்திபெறும் பொருட்டுப் பத்தியுடனே யாராதித்து வந்தார்கள். சிவபத்தர்களான புகழ்ச்சிறந்த இவர்கள் அங்கே பத்தி செய்துவருங்காலத்தில் ஒருநாள் சிற்றின்பத்தில் மூழ்கிக்கிடந்த விசுவாவசு என்ற கந்தர்வன் புத்திரனாகிய துர்த்தமன் என்கிற ஒரு பலமுடைய கந்தர்வன் ஒருவன் நிர்வாணமாயிருந்த அநேகமான கந்தர்வ கன்னிகைகளோடு தானும் நிர்வாணியாயிருந்து, சுந்தரேசுவரர் சந்நிதியிலிருக்கிற புஷ்கரணியில் ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தான். அத்தருணத்தில், வசிஷ்டர்முதலான ரிஷிகள் மாத்தியாநிகம் முடிக்கக்கருதிக், கோயிலிலிருந்து புஷ்கரணிக்கு வந்தார்கள். அந்த ரிஷிகளைக்கண்டு நிர்வாணிகளான கந்தர்வ கன்னிகைகள், திடுக்கிட்டு வெட்கி வஸ்திரங்களால் தங்கள் மானத்தை மூடிக்கொள்ள, நெஞ்சுத்துணிவுள்ள துர்த்தமன் மாத்திரம் வஸ்திரமில்லாமலே நின்றான். அதுகண்ட வசிஷ்டர் மிகக்கோபங்கொண்டு, நாணமற்ற கந்தர்வனைப்பார்த்து, அடா துர்த்தமா! நீ பெண்

களைக் கண்டபின்பாவது வெட்கமடைந்து வஸ்திரத்தால் மானத்தை மறைத்துக்கொள்ளாதிருந்தபடியால் இராட்சதனாக ஜனிக்கக்கடவாய்! என்று சபித்து, அவன் பத்தினிகளைப்பார்த்து பெண்களே! நீங்கள் எங்களைக் கண்டவுடனே நாணி வஸ்திரமுடுத்துக்கொண்டமையால் உங்களைச் சபிக்காமல்விட்டேன். நீங்கள் சொர்க்கலோகம்போய்ச் சேரலாம் என்று செல்வுகொடுக்க, அப்பொழுது அந்தப்பெண்கள் முனிவர்களாற் சூழப்பட்ட வசிஷ்டரைப் பத்தியுடன் வணங்கிச் சுவாமீ பிரமகுமாரா! மஹாநுபவா! சகல தர்மங்களையுமுணர்ந்த கருணைக் கடலாகிய தாங்கள் எங்கள்பேரில் கோபங்கொள்ளலாகாது. கணவன் தானே பெண்களுக்குச் சிறந்த ஆபரணம்; கணவனில்லாத பெண்டிர்களுக்கு நாலு புத்திரர்களிருந்தாலும் விதவையென்கிற பெயர் வந்துவிடுகிறதே; அது மரணத்துக்குச் சமானந்தானே; ஆகையால் எங்கள் கணவன்பேரில் கருணைகூர்ந்து தமது சீடனான துர்த்தமனை மன்னிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். வசிஷ்டர் கோபந்தணிந்து, பிரசன்னராகி, அழகிய உருவங்களையுடைய பெண்களே! நான் சொன்னவார்த்தை பொய்போகாது. ஆனால் உங்களுக்கொரு உபாயஞ் சொல்கிறேன், இவன் பதினாறு வருஷம் இராட்சதனாயிருந்து சாபத்தை அநுபவித்தே தீரவேண்டும். பதினாறும் ஆண்டின்முடிவில் உங்கள் பதியான துர்த்தமன் இராட்சதரூபத்தோடு எதிர்ச்சையாய்ச்சக்கிரதீர்த்தம் போய்ச்சேர்ந்து, அதன் கரையிலிருக்கும் காலவரிஷி என்னுமொரு விஷ்ணுபக்தனை பட்சிக்க விரும்பித் துரத்துவான். அப்பொழுது, மஹாயோகியான காலவரைக்காக்கும் பொருட்டு நாராயணர் தமது சக்கிரத்தையனுப்புவார். அந்தச்சக்கிரமிவன் சிரசை அறுத்துத்தள்ளப்போகிறது. உடனே துர்த்தமன் இராட்சத சொரூபம் நீங்கித் தன் சுயரூபமடைந்து, திவ்யசரீரத்தோடு சொர்க்கம்வந்து உங்களுக்கு மறுபடியும் கணவனாகி, ஆனந்தமளித்து வாழ்ந்திருப்பான் என்று அவர்களுக்குத் தேறுதல் சொல்லிவிட்டுத் தமதாசிரமம்போய்ச் சேர்ந்தார். அப்பொழுது பெண்களெல்லாரும் தங்கள் கணவனைக் கட்டியணைத்துக்கொண்டு, துக்கசாகரத்தில் மூழ்கினவர்களாய் வாய்விட்டுக் கதறியழுதார்கள். அப்படி யழுதுகொண்டிருக்கும்பொழுதே துர்த்தமனுக்குத் தெற்றுப்பல்லும், செம்பட்டமயிரும், பிரமாண்டசரீரமும், செவந்த விழியும் உள்ள இராட்சத சொரூபம் வரக்கண்டு, அப்பெண்கள் பயந்து நடுநடுங்கித் தங்களிருப்பிடமான சொர்க்கம்போய்ச் சேர்ந்தார்கள். இராட்சத

ஞன துர்த்தமனும், பார்த்தவர்கள் நடுங்கும்படியான பெரிய சரீரமுடையவனுய்க் கையிலகப்பட்ட பிராணிகளை யடித்துத் தின்றுகொண்டு, நானாதேசங்களையும், வனங்களையுங் காற்றுப்போலச் சுற்றித் திரிந்துகொண்டிருந்தான். இப்படிச் சஞ்சரிக்கையில் பதினாறு வருஷங்களுமுடிய, அவ்வருஷக்கடைசியில் எதிர்ச்சையாகச் சக்கிரதீர்த்தம் வந்து, அத்தீர்த்தக்கரையில் வசித்துக்கொண்டிருந்த காலவமுனிவரைத்தின்ன எண்ணங்கொண்டு, வாயுவேக மனோவேகமாக நடந்து துரத்தினான். அப்பொழுது காலவர் ஸ்ரீமந் நாராயணனைத்துதிக்க, நாராயணமூர்த்தி அரக்கனால் பிடிக்கப்பட்ட முனிவரைக் காக்கும் பொருட்டுத் தமது சக்கரத்தை அனுப்பினார். அது வந்து இராட்சதன் தலையை அறுத்துத் தள்ளிற்று. உடனே கோரரூபம்போய்த் திவ்யசரீரம் பெற்றுப் புஷ்பமாரி பொழிய விமானத்தின்மேலேறி, அஞ்சலிகூப்பிச் சக்கரத்தை வணங்கி இன்பமான சிறந்தவசனங்களாலே, திருமால் கரத்துக்காபரணமாயும், இராட்சதர்களைச் சங்கரிப்பவரும், ஆயிரம் சூரியனுக்கொப்பாகப் பிரகாசிக்கின்ற வருமான உமக்கு நமஸ்காரம்; திருமாலுக்குப் பிரியமான சக்கிராழ்வாரே! உமது கருணைத்துளியால் நான் இராட்சத சொரூபம் நீங்கிச் சுயமான திவ்யரூபம் அடைந்தேன். என் பெண்டிர்களெல்லாரும் என்னைப் பிரிந்திருப்பதினால் மனம் மெலிந்து வருந்திக்கொண்டிருப்பார்கள். ஆகையால் சொர்க்கத்துக்குப் போகும்படி விடைதந்தருளவேண்டும்; நான் சாகுமட்டும் உம்மை மறவாமல் தியானித்துக்கொண்டிருப்பேன், என்மேற் கிருபைகூர்ந்தருளுமென்று பக்தியுடன் துதித்தான். சக்கிராழ்வாரும் அவனைப்பார்த்து ஐயா! நல்லது; அப்படியேயாகட்டும், போய்வாருமென்று செல்வு கொடுத்தனுப்பிய பின், துர்த்தமன் காலவரிஷியை வணங்கி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு சொர்க்கலோகம்போய்ச் சேர்ந்தான். காலவமுனி விஷ்ணுவினுடைய உத்தம ஆயுதமாகிய சக்கிராழ்வாரே! பெரிய அரக்கனைச் சங்கரித்த உமக்கு நமஸ்காரம் பண்ணுகிறேன். தேவி பட்டணம் வரையில் விசாலித்தகன்றிருக்கிற சகல பாபநாசனமான உத்தம தர்ம்ம தீர்த்தத்தில் நீரெப்பொழுதும் வாசம் பண்ணிக்கொண்டு, இதில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுடைய பாபங்களை நீக்கி அவர்கள் சாசுவிதமான முத்தியை அடையும்படி செய்யத் திருவுளம் பற்றியருளவேண்டும். அன்றியும் இந்தத் தீர்த்தத்துக்குச் சக்கிரதீர்த்தமென்று பெயர் வழங்கச்செய்து, இங்குள்ளமுனிவர்களுக்குப் பூதபிரேத பிசாசங்களாலுண்டாகும் அச்சத்தைப்

போக்கியருளவேண்டுமென்று வணங்கச், சக்கிராயுதம் அவைகளெல்லாம் அப்படியே நடக்கக்கடவதென்று வரமளித்து, அந்தத் தீர்த்தத்துக்குள் மறைந்தது.

கேளுங்கள் பிராமணோத்தமர்களே! நீங்கள் கேட்டுக்கொண்டபடி, இராட்சதனுற்பத்தியையும், கேட்டவர்களுடைய பாபங்களை நிவர்த்தி செய்கின்ற சக்கிர தீர்த்தமகிமையையு முங்களுக்குச் சொன்னேன் என்று சூதர்சொல்ல, ரிஷீசுவரர்கள், மஹா பிராஞ்ஞரும், பௌராணிகோத்தமரும், வியாசர் சிஷருமான சூதமுனிவரே! தர்ப்பசயனமுதல் தேவிபட்டணம் வரையில் பரவி விசாலித்திருந்த சக்கிர தீர்த்தமானது இப்பொழுது மத்தியில் அழியப்பட்டாமலிருப்பதற்குங் காரணமென்ன? இந்தப்பெரிய சந்தேகத்தைத் தீர்த்தருளவேண்டுமென்று கேட்கச் சூதர் சொல்லுகிறார்.

பூர்வகாலத்தில் மலைகளுக்கெல்லாஞ் சிறகு முளைத்திருந்தபடியினால், அவைகள் தங்களடிவாரத்திருந்த குன்றுகளோடும், ஆகாயத்தில் அதிவேகமாய்ப் பறந்து தங்களுக்கு இஷ்டமான நாடு நகரங்கள், கிராமங்கள், வனங்கள், இவைகளின்மேலிறங்குவதினால், அவ்வவ்விடங்களிலுள்ள ஜீவஜந்துக்களும், மரம், செடி, கொடிமுதலானவைகளும், பிராமணர் முதலான ஜாதியார்களும், பாரம் பொறுக்கமாட்டாமல் மண்ணோடு மண்ணாய்மடிய, யாகமுதலான வைதிககர்மங்களெல்லாம் நசிக்கத், தேவர்கள் அன்னாகாரமில்லாமல் தவிக்க, இந்திரன் மிகச்சினந்து வச்சிராயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, அதிக வேகமாய்ப் புறப்பட்டுப்போய்ப் பருவதங்களைத் துரத்தி யவைகளின் சிறகுகளைத் துணித்துச்சின்னபின்னப்படுத்தினபோது,மலைகளெல்லாம்நிர்க்கதியாய்ப்பயமடைந்து சமுத்திரத்தில் விழுந்து மறைந்துகொண்டன. அப்பொழுது சிலமலைகளிந்தச் சக்கிரதீர்த்தத்தையும் சமுத்திரமென்று நினைந்து அதில் வந்துவிழுந்தன. ஆகையால் சக்கிரதீர்த்தம் மத்தியில் மறைபட்டுக் காணப்படுகிறது. யார்செய்த புண்ணியத்தினாலோ சக்கிரதீர்த்தத்தி னிருபுறத்திலும் பெரிய மலைகள் விழவில்லை. அதனாலேதான் தர்ப்பசயனத்திலும், தேவிபட்டணத்திலும் அத்தீர்த்தம் இரண்டுபட்டதுபோலக் காணப்படுகிறது. இந்தக்காரணத்தினாலேதான் சக்கிரதீர்த்தத்தின் மத்தியபாகம் கண்ணுக்குத் தோன்றாமலிருக்கிறது. கேட்டீர்களோ முனிவர்களே, உங்கள் சந்தேகத்துக்குச் சமாதானஞ் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தைப் படிப்போரும், கேட்போரும் புத்திர பௌத்

திர களத்திராதிகளுடன் சகலபோகங்களையும் அனுபவித்து அந்தத்தில் முத்தியை அடைவார்களென்பதிற் சந்தேகமேயில்லை.

நாலாவது

அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது

சக்கரதீர்த்தத்தில் அலம்புசை விதூமன் இவர்கள் சாப விமோசனம் அடைந்தது கூறிய

அத்தியாயம்.

முனீசுவரர்களே கேளுங்கள். பாவநிவர்த்தகமாயும்புண்ணியப்பிரதமாயு மிருக்கிற சக்கிரதீர்த்தமகிமையை உங்களுக்குச் சொன்னேன். இன்னமும் அத்தீர்த்தத்தின் அற்புதமான ஒரு விசேஷஞ்சொல்லுகிறேன். பூர்வகாலத்தில் விதூமன் என்கிற ஒருவசுவும், அலம்புசை என்கிற ஒரு அப்ஸரஸ்திரீயும், பிரமதேவனுடைய கொடியசாபத்தினாலே மானிடஜன்மமெடுத்துப், புண்ணியமான இந்தச் சக்கிரதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி அந்தச் சாபத்தினின்றும் விடுபட்டார்கள் என்று சூதர்சொல்ல, நைமிசாரணியவாசிகள் ஐயா! நிகரில்லாத பௌராணிகரான சூதமுனிவரே! நீர் பிராஞ்ஞராயும், வியாசசிஷ்யராயுமிருப்பதால் உமக்குத் தெரியாதது ஒன்றுமிராது. ஆகையால் பிரமதேவன் விதூமனையும், அலம்புசையையும், எந்த அபராதத்துக்காகச் சபித்தார்! அவர்கள் யாரிடத்தில் பிறந்தார்கள்? அவர்களுக்கெப்படிச் சாபவிமோசனமாயிற்று? இவைகளைக்கேட்க ஆவலாயிருக்கிற எங்களுக்குச் சவிஸ்தாரமாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூதர்சொல்லுகிறார்.

ஒரு காலத்தில் பெருமைதங்கினவராயும், சுயம்புவாயுமிருக்கிற பிரமதேவர் சத்தியலோகத்தில் தேவதாசிகளின் நாட்டியத்தைப்பார்த்து ஆனந்திக்க விரும்பிக் கானஸமாஜமொன்று ஏற்படுத்திச் சரஸ்வதி, சாவித்திரி யென்கிற இரண்டு தேவிமார்களிரு புறத்திலும் விளங்கச், சிரஞ்சீவியான ஸனகர், மெய்ஞ்ஞானியான ஸனந்தனார், மஹாத்மாவான நாரதர், இன்னமற்றுமுள்ள ரிஷீசுவரர்களெதிரில் வீற்றிருக்க அநேகமாயிரம் தேவர்களோடும், ஆதித்திய ருத்திர நவக்கிரகங்களோடு மிந்திரன் துதிக்கச், சித்த சாத்திய கின்னர கிம்புருஷரும், அஷ்டவசுக்களும் சூழ்ந்திருக்க அந்தச்சபையிலெழுந்தருளியிருந்தார். மேக கர்ஜனைபோன்ற கம்பீரமாயும், கேட்டோர்கள் மனதுக்கானந்தமாயும் வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் முதலான வாத்தியங்களொலிக்க, ஆகாயகங்கையின் அலைகளிலெழுந்த துளிகளோடுகூடின மந்தமாருதமெத்தென்று வீச, ஊர்வசிமுதலான தேவதாசிகள் முறைப்படி ஆடின சிரமத்தினால் சோர்ந்திருந்தார்கள். அப்பொழுது அழகும் யௌவனமுமுடைய அலம்புசை என்னும் தேவதாசியானவள் பார்ப்பவர் மனது மயங்கும்படி சபைநடுவில் நர்த்தனஞ் செய்கையில், அவள் கட்டியிருந்த உள்ளாடை காற்றினால் விலகினபடியால், அவளுடைய தொடைமூலம் யாவருங் காணும்படியிருந்தது. அப்பொழுது பிரமதேவன் முதலான தேவர்கள் வெட்கத்தினால் தங்கள் கண்களைமூடிக்கொண்டார்கள். விதூமன் என்கிற வசுமாத்திரம் காமமீறச், சரீரத்தில் மயிர்க்கூச்செறிய, ஆனந்தத்தினால் கண்கள் மலர, அலம்புசையின் அவயவங்களை நாணமில்லாமல் பார்த்துக்கொண்டிருந்தான். இவ்விதம் அலம்புசையினிடத்தில் மோகங்கொண்டதைக் கண்ட பிரமதேவன் விதூமனைப்பார்த்து, “அடா துஷ்டா! இப்படிப்பட்ட துர்ச்செய்கையைச்செய்த நீ பூலோகத்தில் மனிதனாகப் பிறக்கக்கடவாய், இந்தத் தேவதாசியுமுனக்குப் பாரியையாகக்கடவள்” என்று சபிக்க, அது கேட்ட விதூமன் மனதில் பயமடைந்து, பிரமனை வணங்கிச் சுவாமீ பக்தவத்சலா! இந்தக்கடும் சாபத்தை நான் சுமக்கமாட்டேன்! கருணைகூர்ந்தென்னைக் காத்தருளவேண்டுமென்று கெஞ்சிக் கேட்கச், சரஸ்வதி நாதரான பிரமதேவரும் மனமிரங்கி, “அப்பா விதூமா! நான் கொடுத்த சாபம் வியர்த்தமாகாது, அது நிவர்த்தியாகும் காலம் சொல்லுகிறேன். நீயும் அலம்புசையும் பூலோகத்தில் மனிதராகப்பிறந்து சக்கிரவர்த்தியாய், நெடுங்காலம் இராஜ்யபரிபாலனம் பண்ணி, உன் பத்தினியாகியவளிடத்திலுற்பத்தியாகிற நிகரில்லாத புத்திரனுக்குத் தகுந்த வயதில் பட்டங்கட்டியபின் தெட்சண சமுத்திரக்கரையில்

புல்லகிராமத்துக்கருகாமையிலிருக்கிற சக்கிரதீர்த்தத்தில் உன் பத்தினியோடுகூட ஸ்நானஞ் செய்கிறபொழுது பாம்புசட்டையுரிப்பதுபோல மானிட சரீரத்தைவிட்டு நீங்களிருவரும் சொர்க்கலோகம் வந்து சேர்வீர்கள். சக்கிரதீர்த்தந் தவிர வேறெந்த தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினாலும் தீராது. சொன்னேன் சொன்னேன்." என்று சாபவிமோசன வழிகூறினபின் விதூமன் சந்தோஷமடைந்து பிரமாவிடஞ் செலவுபெற்றுத் தன்னிருப்பிடத்துக்குப்போய் ஆலோசிக்கலானான். இப்பொழுது நான் மனிதஜன்மமெடுத்துத் தீரவேண்டும், பூமியில் எந்தத்தாய் தகப்பன் வயிற்றில் பிறப்பேன் என்று பலவாறுயோசித்துக், கடைசியில், கௌசாம்பி நாட்டில் அதிக சூரனும் பாக்கியவானுமாயிருக்கிற சதாநீகனென்கிற அரசன், விஷ்ணுவுக்குப் பிரியமான இலட்சிமியைப்போலத் தன்னிடத்தில் நேசமாயிருக்கிற விஷ்ணுமதி யென்னும் பதிவிரதாசிரோமணியான மனைவியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறான், நான் என் வினைப்பயனால் அவர்களுக்குப் புத்திரனாகப் பிறப்பேனென்று நிச்சயித்துக்கொண்டு, மாலியவான், புஷ்பதந்தன், பலோற்கடன் என்னும் வேலைக்காரர்களை யழைத்து தனக்கு நேர்ந்த சாபத்தினாலே பூலோகத்தில் சதாநீகன் விஷ்ணுமதி யென்கிற தம்பதிகளிருவருக்கும் தான் புத்திரனாய்ப் பவிக்க நிச்சயித்திருப்பதையும் சொன்னான். அது கேட்ட விதூமனுடைய வெளிப்பிராணனொத்த வேலைக்காரர்கள் தாரை தாரையாகக் கண்களில் நீர் பெருகத், தங்கள் தலைவனைப்பார்த்து, ஐயா, உம்மைவிட்டு நாங்கள் மூவரும் பிரிந்திருக்கமாட்டோமாகையால், சதாநீகனுடைய மந்திரியாகிய யுகந்தரன், ரணகளத்தில் முந்திச்செல்கிற விப்பிரதீகனென்கிற சேனாபதி, வல்லபனென்கிற விளையாட்டுத் தோழனான பிராமணன் இம்மூவருக்கும் நாங்கள் புதல்வராய்ப் பிறந்து உமக்கு ஊழியஞ்செய்துவருவோம் என்று சொன்னார்கள். அது கேட்ட விதூமன் நீங்களென்னிடத்தில் மிகுதியான நட்புக் கொண்டிருக்கிறீர்களென்பதை நான் நன்றாயறிவேனாயினும் நானுங்களுக்குச் சொல்லப்போகிற இதமான வசனத்தைச் செவிகொடுத்துக் கேளுங்கள். நான்தான் தீவினையால் இழிவான மானிடகுலத்தில் பிறக்கும்படி பிரமசாபம் நேரிட்டிருக்கிறது. நீங்களுமிச் சாபத்துக்குள்ளாகவேண்டிய காரணமென்ன? ஆசையாலீனமானிடப் பிறப்பில் ஆசை வையாமல் நான் சாபவிமோசனமாய் வரும் வரையில் என்னைப் பிரிந்திருக்குந் துக்கத்தைச் சகித்துக்கொண்

டிருங்களென்று சொல்ல, அம்மூவரும் ஐயா! இதுவரைக்குமெங்களைப்பாது காத்து வந்த தாங்கள் குற்றமற்றவர்களாயும் பக்திவந்தராயுமிருக்கிற எங்களைக் கைவிடத்துணிந்தீர்கள். தங்களைவிட்டுப் பிரிந்திருப்பதைவிட இழிவான மனிதஜன்மமெடுப்பது நலமாகுமென்று எங்களுக்குத் தோன்றுகிறது. ஆகையாலிப்பொழுது எங்களுக்கு உத்தரவுகொடுத்துக் காக்கவேண்டியது தமது கடமையென்று அடிக்கடிகாலில் விழுந்து பிரார்த்தித்துத் துதிக்க, விதூமனும் அநுமதிகொடுத்து அம்மூவரோடுங்கூடக் கௌசாம்பி நாட்டுக்குப்போக இச்சைகொண்டான். இது இப்படியிருக்கப் பூலோகத்தில் சோமவம்சசிரோமணியாயும், அர்ச்சுனனைப்போலக் கீர்த்திபெற்றவனாயும், ஜனமேஜயன் புத்திரனாயும், புத்திசாலியாயும், நீதிமானாயும், வாக்குச்சாதுரியமுடையவனாயும், தன்னுயிர்போல மன்னுயிரைப் பாதுகாக்குந் தன்மையுடையவனாயும், இரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச்சேனைகள் நிறைந்தவனாயும், புஜவலியுடையவனாயும், யௌவனமுடையவனாயுமிருக்கிற சதாநீகராஜன் யுகந்தரனென்கிற மந்திரி, விப்பிரதீகனென்கிற சேனாபதி, வல்லபனென்கிற விளையாட்டுத்தோழனான பிராமணன் இவர்களோடுகூடக் கௌசாம்பி நாட்டில் அரசுபுரிந்து வருகையில், தனக்குப் புத்திரனில்லாதிருப்பதைக் கண்டு பரிதபித்து, யோசனையிற் சிறந்த மந்திரியாகிய யுகந்தரனையழைப்பித்து, எந்த உபாயத்தால் தனக்குப் புத்திரோற்பத்தியாமென்று கேட்க, மந்திரியானவன் அரசனைப்பார்த்து, ஐயா! சாண்டில்யர் என்கிற ஒரு ரிஷியிருக்கிறார். அவர் மஹா சுத்தர்; அவர் சொன்னவாக்குத் தவறுகிறதில்லை; சத்துருவும் மித்துருவும் அவருக்குச்சமம்; அவர் இந்திரிய நிக்கிரகம் பண்ணி மனதை யடக்கினவர்; எப்பொழுதும் வேதமோதிக்கொண்டிருப்பவர்; பிரமதேஜஸால் அக்கினிபோல ஜொலிப்பவர், அந்த மஹானுபவரிடத்தில் சென்று அவரை வணங்கி, உமக்குச் சமானமான புத்திரன் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள்ளும். அந்த மஹாரிஷி கருணைக்கடலாகையால் உமது மனோரதத்தைப் பூர்த்திசெய்வார், சந்தேகமேயில்லையென்று ஆலோசனை சொன்னான். அப்பொழுது சதாநீகனுடைய இருகண்களும் சந்தோஷத்தால் மலர்ந்தன. அரசன் யுகந்தரனோடு அம்முனிவராச்சிரமத்துக்குச் சென்று அவரைக்கண்டு ஷாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். சாண்டில்யமுனிவர் தம்மைவணங்கின அரசனைப்பாத்தியாதிகளாலுபசரித்து, வாருமையாவென்று அழைத்து, ஐயா சதாநீகரே! நீர் என்னாச்சிரமத்துக்கு வந்தகாரணமென்ன?

உமக்குத் தேவையானதை நான் செய்துகொடுக்கிறேனென்று பிரியமாய்ப் பேசினதை மந்திரிகேட்டு ஐயா மஹாநுபாவா! இவ்வரசன் புத்திர னில்லாமையால் மிக வருத்தப்படுகிறார். பிள்ளையைப்பற்றித்தா னிப்பொழுது சரணமடைந்திருக்கிறார். ஆகையால் சுவாமீ அரசன் மனத்துயரை நீக்கிக் காக்கவேண்டு மென்று வேண்டிக்கொள்ள, முனிசிரேஷ்டரானவர் அரசனைப் பார்த்து ஐயா! உமக்குப் புத்திர னுண்டாவா னென்றாசீர்வதித்து, அவ்வரசனோடும் மந்திரியோடும் கௌசாம்பி நகரத்துக்குவந்து, அவ்விடம் அரசன் செய்த புத்திரகாமேஷ்டி யாகத்துக்கு ஆசாரியராயிருந்து அதை முடித்துத் தமதாசிரமம் போய்ச் சேர்ந்தார். பிறகு அம்முனிவர் அநுக்கிரகத்தால் அரசனுக்குச் சஹஸ்ராநீகனென்கிற ஒரு புத்திரன் ஸ்ரீராமரைப்போல உற்பத்தியானான். கேருங்கள் முனிவர்க்கு விரமன் சதாநீகன் வயிற்றில் சஹஸ்ராநீகனுகப்பிறந்தான். அக்காலத்தில் சதாநீகனுடைய மந்திரி, சேனாபதி, விளையாட்டுத்தோழர்களுக்கும் அவரவர் குலத்துக்குரிய புத்திரர்கள் பிறந்தார்கள். மாலிராஜன் என்பவன் மந்திரி யுகந்தரனுக்குப் புத்திரனாகப்பிறந்து யௌகந்தராயணன் என்றபெயர் வகித்து வளர்ந்து வந்தான். புஷ்பதந்தன் விப்பிரதீக னென்கிற சேனாபதிக்கு ருமண்வான் என்றுபெயர்கொண்ட புத்திரனாகப்பிறந்தான். பலோத்கடன் வல்லபனென்கிற பரிகாசத்தோழனுக்கு வசந்தன் என்கிற புத்திரனாகப்பிறந்தான். இப்படிப்பிறந்து வளர்ந்துவரும் நாலு புத்திரர்களுக்கும் ஒத்தவயதாயின், அலம்புசை யானவள் அயோத்தியராஜன் கிருதவர்மனுக்கு மிருகாவதி யென்கிறபெண்ணாய்ப்பிறந்தாள். இப்படி இந்த பேரும் பூமண்டலத்தில் உதித்து வளர்ந்துவருங்காலையில், தஹீதம்ஷ்டிரன் என்கிற மஹாபலசாலியான ஒரு கொடிய அசுரன் யுத்தமத்தங்கொண்டு, தன் சேனைகளையும் வித்தலசிரசு என்கிற தம்பியையும் அழைத்துக்கொண்டுபோய்த் தேவநகரியான அமராபதியை முற்றிக்கைபோட்டு அதிலுள்ள தேவர்களையெல்லாம் துன்பப்படுத்தினதினால், தேவாசுரர்களுக்கு யுத்தம் தொடங்கிட்டது. அப்பொழுது தேவேந்திரன் சதாநீகனைத் தனக்குதவிவரும்படி கேட்கச் சதாநீகன் தன்புத்திரனுக்கு இளவரசபட்டம் கட்டிவைத்துவிட்டு, மாதலி கொண்டுவந்த தேரின்மேலேறித் தேவலோகம்போய்க் கையில் வில்லையெடுத்துத் தேவர்கள் பார்த்திருக்கும்படி அசுரர்களைச் சங்கரித்துத் தானும் அந்த இரணகளத்தில் சத்துருக்களால் அடிபட்டு மடிந்தான். பிறகு தேவேந்திரன் உத்திரவின்படி மாதலி சதாநீகன் சரீரத்தைத் தேரின்மேலேற்றிக்கொண்டு கௌசாம்பி நாட்டுக்குப்போய்ச் சஹஸ்ராநீகனுக்கு நடந்தசமாசாரத்தைத் தெரிவிக்கச், சஹஸ்ராநீகன் மிகத்துயரங்கொண்டு அவர்களோடுகூடத் தன் பிதாவுக்குச்செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்துமுடித்தான். சதாநீகன் பத்தினியான விஷ்ணுமதி யென்பவள் தன் நாயகனிறந்தவுடனே அநுமரணஞ் செய்தாள். இவ்விதம் சதாநீகனும் அவன் மனைவி விஷ்ணுமதியுமிறந்துபோனபின், சகஸ்ராநீகன் மந்திரிகளின் வேண்டுகோளின்படிச் சிங்காசனமேறிச் செங்கோல் செலுத்தினான். மந்திரி, சேனாபதி விளையாட்டுத் தோழனிவர்களிறந்தபிறகு அவர்களுடைய புத்திரர்களும் தத்தம்பிதாக்களின் உத்தியோகத்தைப்பெற்றுச் சகஸ்ராநீகனுக்குத் தாங்கள் செய்யவேண்டிய ஊழியத்தைச் செய்துவந்தார்கள். இப்படிச் சகஸ்ராநீகன் அரசுசெலுத்தி வருநாளிலொருநாள் தேவேந்திரன் தன்னுடைய நந்தனமென்கிற சிங்காரத்தோட்டத்தில் தான் செய்த ஓர் மஹோற்சவத்துக்குச் சகஸ்ராநீகனை வரவழைத்து உற்சவமுடிந்தவுடன் அந்த ராஜனைப்பார்த்து ஐயா, அலம்புசையென்கிற தேவதாசி பிரமதேவன் சாபத்தால் அயோத்தியரசனுக்கு மிருகாவதி யென்னும் பெண்ணாய்ப் பிறந்திருக்கிறாள். நீர் பூர்வம் விதூம னென்னும் வசுவாயிருக்கையில், பிரமன்சபையில் நடித்துக்கொண்டிருந்த அலம்புசையின் வஸ்திரம் காற்றினால் விலக, நீர் அதிக மோகத்தோடும் அவளைப்பார்த்து மதிமயங்கியிருந்த படியால் பிரமதேவன் நீரும் அவளும் மானிடராகிக்கூடி வாழ்ந்து அவள் வயிற்றிலொரு புத்திரன் பிறந்தபின் அவனுக்குப்பட்டங்கட்டிவைத்துத், தென்சமுத்திரக்கரையிலிருக்கிற சக்கிரதீர்த்தத்தில் மனைவியோடுகூட ஸ்நானம்பண்ணினவுடனே சாபவிமோசனமாகுமென்று பிரமதேவன் சொல்லியிருக்கிறார். ஆகையால் மிருகாவதியென்கிற அலம்புசையானவள் வெகு சீக்கிரத்தில் உமக்கு மனைவியாவாளென்று நடக்கப்போகிறகதையைச் சொன்னான். சஹஸ்ராநீகனும் இந்திரனிடத்தில் விடைபெற்று மிருகாவதியைவிவாகஞ்செய்யவேண்டுமென்கிற ஆவலோடு கௌசாம்பி நாடுநோக்கி வருகையில், திலோத்தமையென்கிற தேவதாசி சிலசமாசாரம் பேசஆரம்பித்தாள். அப்பொழுது அவனுடையசித்தமெல்லாம் இந்திரன் சொன்னதைப்பற்றி யோசனையிலிருந்ததனால் பேசவந்த திலோத்தமையைக் கவனித்துப் பாராமலே நடந்தான். திலோத்தமை கோபங்கொண்டு தன்னைஅலட்சியஞ் செய்துபோகிற அரசனைப்பார்த்து, அரசனே நீர் மிருகாவதியை மனதிலெண்ணிக்கொண்டிருந்தமையால் அல்லவா என்னையலட்சியம் பண்ணினீர்.

செல்வமிருந்த சீமாட்டிகள் அவமானத்தைப் பொறுக்கமாட்டார்களென்பது உமக்குத்தெரியாதா! நீரெந்த மிருகாவதியை நினைத்துக்கொண்டு என்னை அவமதித்தீரோ; அந்த மிருகாவதி உம்மைவிட்டுப் பதினாலுவருஷம பிரிந்துபோவாள் பாருமென்றுசொல்ல, அரசன் நான் மிருகாவதியை எவ்வகையிலாவது அடைவேனேயானால் பின் அவளைப் பதினாலுவருஷம் பிரிந்திருப்பது எனக்குப்பெரிதல்ல என்றுசொல்லி, அந்த மிருகாவதியை நினைத்துகொண்டே தன்பட்டணம்போய்ச்சேர்ந்தான். கொஞ்சகாலஞ்சென்றபின் காமன்களஞ்சியம் போலிருக்கிற மிருகாவதியைமணம் புரிந்து, அழகென்ற விருட்சத்துக்கு அலங்காரமான பூங்கொத்தாயும், காமசமுத்திரத்து அலைகள்போன்றவளாயும் இருக்கிற மிருகாவதியோடுகூடிக் காமலீலைகளைச் செய்து மகிழ்ந்துவரும் நாளையில மிருகாவதி கர்ப்பந்தரித்துச் சரீரம் வெளுத்து, அமிர்தத்தில் முழுகி எழுந்த சந்திரகலைபோலவும், கர்ப்பச்சின்னம் நன்றாய்த்தோன்றினபின், உதயமாகுந்தருணத்திலிருக்கிற சந்திரனோடுகூடிய கீழ்த்திசையைப்போலும் விளங்கினாள். மனைவிகர்ப்பவதியாயிருந்ததைக்கண்டு சந்தோஷமடைந்து, இராஜன் அவள்விரும்பிய வஸ்துக்களையெல்லாம் அழைப்பித்துக்கொடுத்தான். ஒருநாள் மிருகாவதிக்கு இரத்தவர்ணமான தடாகத்தில் குளித்துவிளையாட விருப்பமுண்டானதைக்கண்டு, அரசன் உடனேயிரத்தம்போன்ற குங்கும ஜலத்தினாலே நிறைந்த ஒரு தடாகமுண்டாக்க அந்தக்குளத்தில் ஸ்நானம்பண்ணி, மலர்ந்த புரசம்பூவைப்போல விளங்குகிற இராஜமகிஷியை மாமிசமென்றெண்ணி, யொருபருந்து கொண்டுபோய், உதயகிரியின் குகையிலிறக்கியது. இராஜபத்தினி மூர்ச்சையாயிருந்து கொஞ்சகாலத்துக்குப்பிறகு மூர்ச்சைதெளிந்து எழுந்திருந்தபோது கொடிபோன்ற அவளது சரீரம் நடுங்கியது; இரண்டுகண்களிலிருந்து தாரைதாரையாக நீர் பெருகிற்று. ஐயோ பிராணநாதா, நான் உம்மைவிட்டுப் பிரிந்திருக்க என்ன தீவினை செய்தேனோ? இப்பொழுதெனக்கென்ன கதி; நானெங்கேபோவேன்; உமது முகத்தையெப்பொழுது பார்ப்பேனென்று புலம்பி, உயிரைவிடத் துணிந்து, சிங்கம், யானை யிவைகளினெதிரில் நிற்க அந்தமிருகங்கள் அவளைமுகர்ந்துகூடப் பார்க்கவில்லை. காலமல்லாத காலத்தில் மரணமெப்படிவரும்; கேட்டவர்கள் உருகும்படி யழுவதைக் கேட்ட மிருகாதிகளிரை யெடுக்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தன. அந்தச்சமயத்திலொரு ரிஷிகுமாரன் வந்து புலம்பிக்கொண்டிருந்தஅவள்பேரில் தயவுகூர்ந்து, தன் ஆச்சிரமத்துக்குஅழைத்துக்

கொண்டுபோய்த் தன் பிதாவாகிய ஜமதக்கினியிடத்தில் சமாசாரத்தைத் தெரிவிக்க, தர்மகுணமுள்ள ஜமதக்கினிமுனிவர் அந்தப்பெண்ணைச் சமீபத்தில் அழைத்து அம்மா! உன் பிதா இருந்தவர்மனைப்போல நான் உன்னைப்பாதுகாத்து வருகிறேன். நீ பயப்படாமலிங்கிரு என்று தைரியப்படுத்தினார். மிருகாவதியும் அம்முனிவராச்சிரமத்தில் வசித்துக்கொண்டிருந்தாள். கொஞ்சகாலத்துக்குப் பின் பார்வதி சுப்பிரமண்ணியரைப் பெற்றதுபோலச், சௌரியமும், தைரியமுமுள்ள ஒரு புத்திரனைப்பெற்றாள். அவள் பிரசவ அறையிலிருந்தபோது, அங்குள்ள ரிஷிபத்தினிகளெல்லாரும் மருந்து முதலியகொடுத்துத் தாயைப்போல அவளைப்பாதுகாத்து வந்தார்கள். அந்தப்பிள்ளை உதயபருவத்தில் ஜனித்தபடியால் அவனுக்கு உதயனன் என்று பேரிடவேண்டுமென்று ஆகாசவாணி சொல்ல அப்படியே யந்தப்பிள்ளைக்கு உதயனன் என்றுபேரிட்டார்கள். ஜமதக்கினிமுனிவர் அக்குழந்தைக்கு சௌளமுதலியன செய்து வித்தியாப்பியாசம் பண்ணிவைத்தார். அவனுக்குப்பாலியம் நீங்கி யௌவனம் வந்தபோது அவன்ஒருநாள் காட்டுக்குப் போகையில்ஒருவேடன் பாம்பொன்றைப் பிடித்துக்கொண்டிருக்கக்கண்டுமனமுருகி, அவ்வேடனைப் பார்த்து அப்பா இந்தப்பாம்பைப் பிடித்துவருத்துகிறதினால் உனக்கென்ன லாபம்வரும்? ஆகையால் தயவுசெய்து அதைவிட்டுவிடென்று சொன்னான். அதுகேட்டு வேடன், ஐயா, அந்தப்பாம்பைப் பிடித்துக்கொண்டு, கிராமங்களிலும், பட்டணங்களிலும் போனால் எனக்குப் பிச்சை நிரம்பஅகப்படுமாகையாலிதைவிடமாட்டேனென்று அதைப்பிடித்து ஒருபெட்டியிலடைத்துவிட்டான். உதயனன் தன்தாயார் தனக்குக்கொடுத்திருந்த தங்கக்காப்பை, அந்தப்பண ஆசைகொண்ட வேடனுக்குக் கொடுத்துப்பாம்பை விடுவிக்க, அதுஉடனே ஒருமனிதருபமடைந்து கைகூப்பி வணங்கி யவனோடு சிநேகங்கொண்டு, அவனைப் பாதாளலோகத்துக்கு அழைத்துக்கொண்டு போயிற்று. இப்படி திருதராஷ்டிர குமாரனான கின்னரன் என்னும் பாம்பினால் பாதாளத்துக்குக் கொண்டுபோகப்பட்ட உதயனன் கின்னரன் சகோதரியான லலிதை யென்ற ஒருஅழகிய பெண்ணை மணந்து சுகித்து வாழ்ந்திருந்தான். கொஞ்சகாலங் கழிந்தபின் லலிதை கர்ப்பவதியாகி நிகரில்லாத பராக்கிரமத்தோடு கூடின ஒருபுத்திரன் பிறந்த வுடனே, லலிதை உதயனனிடத்திலே வந்து பிராணேசா! நான் பூர்வஜன்மத்தில் சுகண்டி என்கிற வித்தியாதரஸ்திரீ; சாபவசத்தா

ல் நாககன்னிகையாகப் பிறந்திருக்கிறேன். எனக்குக் குழந்தை பிறந்தவுடனே சாபந் தீரவேண்டுமாகையால், இந்தப் பிள்ளையையும் வாடாதபூமாலையையும், கோஷவதி யென்கிற இந்த வீணையையும் வாங்கிக்கொண்டு என்னை யனுப்பிவிடுமென்று சொல்ல, அவனுமப்படியே யாகட்டுமென்று அவைகளையெல்லாம வாங்கிக்கொண்டவுடனே, நாகங்களெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க அவள் ஆகாசமார்க்கமாகப் போய்விட்டாள். உதயனன் வீணை முதலியவற்றைக் கைக்கொண்டு, தன்மாமனார் முதலானவரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, தன்னைவிட்டுப் பிரிந்திருப்பதினால் துக்கித்துக் கொண்டிருக்குந் தாயாரைப்பார்க்கவிரும்பி ஜமதக்கினி ஆச்சிரமம் வந்துசேர்ந்து, அவரால் ஆறுதல் சொல்லப்பட்டிருந்த தாயைக்கண்டு அவளுக்குத் தன்னுடைய சகல விருத்தாந்தங்களையுந் தெரிவிக்க அவள் ஆநந்தபரிபூரிணை யானாள். இங்கே இப்படியிருக்க உதயன னிடத்தில் காப்பை வாங்கிக்கொண்டு போன வேடன், அந்தக்காப்பை விற்கவிரும்பிக் கௌசாம்பிநகரம் சென்று, அங்கிருந்த ஒருவியாபாரி யிடத்தில் விலைகூற, அந்தவணிகன் காப்பில் வெட்டியிருந்த சஹஸ்ரானீகன் என்ற பேரைப்பார்த்து அவ்வேடனைக் கூட்டிக்கொண்டு, அரசனிடம் சென்று நடந்தவற்றைத் தெரிவித்தான். மிருகாவதியை விட்டுப்பிரிந்து கரைந்துருகிக் கொண்டிருக்கிற சகஸ்ரானீகன் அவளுடைய ஹஸ்த ஸ்பரிசத்தால் அமிர்தம்போலக் குளிர்ந்திருக்கும் கங்கணத்தை மார்பிலணைத்துத் துக்கித்துப் புலம்பி, அக்காப்பின் வரலாற்றை அந்தவேடனாலே தெரிந்துகொண்டு, தன் பிராணநாயகியான மிருகாவதியைப் பார்க்க ஆவல்கொண்டு, சூரியன் சந்திரன் முதலான கிரகங்களுதயமாகிற உதயாசலத்தை நோக்கி மந்திரிகளோடு புறப்பட்டுப் போகையில், மிருகாவதியைக் காணவேண்டுமென்கிற விருப்பத்தினால் இரவெல்லாந் தூக்கமில்லாம லவன் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த போது, வசந்தகன் பற்பலகதைகளைச் சொல்லி மனத்துயர் நீக்கிக்கொண்டு வந்தான். இப்படி வழியெல்லாங் கடந்து, யானையுஞ் சிங்கமும் விரோதமில்லாமல் வாழ்ந்திருக்கும்படி சாந்தமாயிருந்த ஜமதக்கினி முனிவருடைய ஆச்சிரமத்துக்கு வந்து, அந்தமுனிவரைச்சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தபொழுது, அவரும் அரசனையாசீர்வதித்து, அர்க்கியமுதலியவற்றால் உபசரித்து, ஐயா! நரநாதனே இந்தக்குழந்தை மிருகாவதி வயிற்றிற் பிறந்தவன். மஹா பாக்கிரமசாலியான இவன் திக்குவிஜயம்பண்ணி ஸ்ரீராமச்சந்திரனைப்போலக்

கீர்த்திவந்தனா யிருப்பான். இவன்பேர் உதயனன். இதோ இருக்கிற இவள்தான் மஹாபதிவிரதையான மிருகாவதி. இவ்விருவரையும் பெற்றுக்கொள், தாமதியாதே, என்று இதமாயும், தர்மமாயுஞ் சொல்லிமுடித்தார். உடனே சஹஸ்ரானீகன் தன் மனைவியையும் புத்திரனையு மழைத்துக்கொண்டு மந்திரிகளோடேகூடத் தன் இராஜதானியான கௌசாம்பி வந்து பூர்வம் மகேந்திரன் தனக்குச் சொல்லியிருந்த வசனங்களை நினைத்துப்பார்த்து, மனிதஜன்மத்தில் வெறுப்புண்டாகிப் புத்திசாலியும், இராஜ்யபரிபாலனஞ் செய்யத் தக்கவனுமானபுத்திரனிடத்தில் இராஜ்யத்தை யொப்புவித்துவிட்டு, வசந்தகன், ருமண்வான், யௌகந்தராயணன் என்னும் மந்திரிகளையும் தன் பத்தினியையும் அழைத்துக்கொண்டு சாபநிவாரணஞ் செய்துகொள்ளும்பொருட்டுக், தென்சமுத்திரக் கரையிலிருக்கிற சக்கிரதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணவிரும்பிக், காற்றுப்போல் பறக்குங் குதிரையின்மேலேறிக்கொண்டு சமுத்திரக்கரைவந்து, சக்கிரதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணின மாத்திரத்தில், அவ்வைந்துபேர்களும் தமது சாபம்நீங்கி ஈனமான மனிதசரீரம் போய்த் திவ்யசொரூபிகளாய்ப் பட்டுப்பீதாம்பரமணிந்து, திவ்யசந்தன புஷ்பங்களுந் தரித்து திவ்யாபரணம்பூண்டு, விலையுயர்ந்த விமானத்திலேறி, தங்கள் சாபந்தீர்த்த சக்கிரதீர்த்தத்தைப் புகழ்ந்து, சகலரும் பார்த்துக் கொண்டிருக்கச் சொர்க்கலோகம் போய்ச்சேர்ந்தார்கள். முனிவர்களே! கேளுங்கள், அக்காலந்தொடங்கி ஜனங்களெல்லாரும் சக்கிரதீர்த்த மகிமையையறிந்து, எப்பொழுதும் அதில்ஸ்நானம் பண்ணிவருகிறார்கள். இவ்விதமான பிரபாவத்தையுடைய இந்த தீர்த்தத்தில் ஒருவேளையாவது ஸ்நானஞ்செய்கிறவனுக்குச் சொர்க்கம் நிச்சயமாய்க்கிடைக்கும். நானுங்களுக்குச் சொல்லிவந்த பெரிதானவிசித்ர சரித்திரத்தைப்பத்தியுடன் படிப்போரும் கேட்போரும் தாமிச்சித்தவற்றையுடனே யடைகிறார்கள்.

ஐந்தாவது

அத்தியாயம் முற்றிற்று.

ஆருவது

மகிஷாசுரன் உற்பத்திகூறிய

அத்தியாயம்.

வியாசமஹாரிஷியின் சிஷராகியும், பௌராணிகோத்தமராகியுமுள்ள சூதமஹாரிஷியே, உத்தமமான சக்கிரதீர்த்தமானது தேவீபட்டணம்வரைக்கும் பரவியிருப்பதாகக் கூறினீர்களே, அதைப்பற்றிச் சிறிதுவினாவுகிறோம்: சக்கிரதீர்த்தமென்பது பரவியிருக்கிற தேவீபட்டணமெங்கிருக்கிறது? அதற்கு ஏன் தேவீ பட்டணமென்று பெயர்வந்தது? ஸ்ரீராமசேதுவின் தொடக்கத்தில் ஸ்நானம் பண்ணுகிறபாபிகளுக்கும், சக்கிரதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணுகிற பாவிகளுக்கும், பலனென்ன? இதையும் மற்ற விசேஷங்களையும் எங்களுக்குக் கிருபைகூர்ந்து சொல்லியருளவேண்டும் என்று ரிஷிகள்கேட்கச், சூதமுனிவர் எல்லாவிஷயங்களையு முங்களுக்குச் சொல்லுகிறேன் சாவதானமாய்க் கேளுங்களென்று சொல்லத் தொடங்கினர்.

இந்தக்கதையைப்படிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் பாபங்களெல்லாம் நாசமாய்விடும். சீதாபதியாகிய இராகவன் கடலின்கண் ஒன்பது கற்களை ஸ்தாபித்துச் சேதுவைக்கட்ட எங்கே ஆரம்பம் செய்தாரோ அதுதான் தேவீபட்டணமென்பது. அது வரைக்குஞ் சக்கிரதீர்த்தம் பரவியிருக்கிறது. இவ்விடத்துக்குத் தேவீபட்டணமென்று பேர்வந்த காரணத்தையு முங்களுக்குச் சொல்லுகிறேன். சிரத்தையோடு கேளுங்கள் முனிசிரேஷ்டர்களே.

பூர்வகாலத்தில் தேவாசுரர்களுக்கு யுத்தம் நடந்தபொழுது தேவர்களாலே தனது புத்திரர்களழியப்பெற்ற திதியென்பவள் மிகுந்த துக்கமடைந்து தன் புத்திரியைப்பார்த்துச் சொல்லுகிறாள். நீ இந்திரிய நிக்கிரகஞ்செய்து தவம்புரிந்து, தேவேந்திராதியர்களை நாசஞ்செய்யத்தக்க புத்திரனைப் பெறுவதற்குச் சித்தப்பட்டுப்போ என்று சொன்னாள். தன் தாய் கூறியவசனத்தைக்கேட்ட புத்திரி அப்படியே காட்டுக்குச்சென்று எருமையின் உருவங்கொண்டு பஞ்சாக்கினி மத்தியிலிருந்து கொடுந்தவம் புரிந்தாள்.

அதனால் உலகமெல்லாம் நடுநடுங்கின. மூன்றுலோகங்களும் மிகுதியும் பயமடைந்தன. இந்திராதி முப்பத்துமுக்கோடி தேவர்களும் மயங்கினார்கள். அப்பொழுது சுபார்சுவன் என்னும் ரிஷியானவர் மனக்கலக்கத்தோடு இவளைப்பார்த்துப் பெண்ணே! உனது தபசினால் நான் திருப்தியடைந்தேன். உனக்கொரு புத்திரனுதிப்பான். அவன் மகிஷமுகமும் மனிதவுடலுமுடையவனாய்த் தேவர்களையும் சொர்க்காதிபதியான தேவேந்திரனையும் வருத்துவான். நீ தபசை நிறுத்திவிடென்று சொல்லித் தமதிருப்பிடஞ்சென்றார். பிறகு, மகிஷாசுரன் மகாபராக்கிரமசாலியாய்ப்பிறந்து பௌர்ணியில் கடல்விருத்தியாவது போல்வளர்ந்துவந்தான். அப்படி வளருங்காலத்தில், அசுரர் தலைவனாகிய விப்பிரசித்தியின் புத்திரன் வித்துன்மாலியும், பூலோகத்திலுள்ள மற்ற அசுரசிரேஷ்டர்களும் மகிஷாசுரனுக்குக் கிடைத்தவர மகிமையைக்கேட்டு ஆனந்தமடைந்து, ஒன்றாகக்கூடி யவனிடம்வந்து, அறிவிற்சிறந்த குழந்தாய், பூர்வமெங்களுக்குச் சொந்தமாயிருந்த சொர்க்கலோக அரசாட்சியைத் தேவர்களெல்லாரும் விஷ்ணுவின் சகாயத்தினாலபகரித்துக்கொண்டார்கள். நீ பராக்கிரமசாலியும், வீரமுடையவனும், பிரமதேவனால் நல்ல வரங்கள் பெற்றிருப்பவனுமாதலால், தேவர்களோடு புலோமசநாதனான தேவேந்திரனை வென்று எங்கள் அரசாட்சியை மீட்டுக்கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அதுகேட்ட மகிஷாசுரன், தேவர்களோடு சண்டைசெய்ய நினைத்து அமராபதிக்குப்போய் யுத்தஞ்செய்யத்தொடங்கினான். இந்தச்சண்டை மஹாபயங்கரமாகவும், கேட்டவர்கள் நடுங்கும்படியாகவும், நூறு வருஷம் நடந்தது. கடைசியில் தேவர்களும் தேவேந்திரனும் பயந்து திக்குத்திசைகள்தோறுஞ் சிதறியோடிப் பிரமதேவனிடம் போய்ச்சேர்ந்து முறையிட, அவர் தேவர்களையழைத்துக்கொண்டு லோகநாயகர்களாகிய பரமசிவன், நாராயணனிவர்களிருக்குமிடம் வந்து, அவர்களை வணங்கியநேகமாகத்துதித்து, மகிஷாசுரனது கொடுஞ்செயல்களைச் சொல்லத்தொடங்கினார். மகிஷாசுரனானவன் இந்திரன், அக்கினி, யமன், சூரியன், சந்திரன், குபேரன், வருணன், முதலானவர்களுடைய பதவியைக் கவர்ந்துகொண்டு, அவர்களைத் துரத்திவிட்டுத் தானே யவ்வதிகாரத்தைச் செலுத்தி வருகின்றான். இப்படியே மற்றத்தேவர்களுடைய அதிகாரத்தையும் பறித்துக்கொண்டிருக்கிறான். இவ்வகையாக மகிஷாசுரனால் அதிகாரமிழ

ந்து துன்பப்படுந்தேவர்கள் எல்லாரும் சொர்க்கத்தைவிட்டுப் பூலோகத்துக்குவந்து மனிதரூபங்கொண்டு மறைந்து சஞ்சரிக்கின்றார்கள். இந்தச்செய்தியை உமது சந்நிதியின் முன்பு தெரிவிக்கும் பொருட்டாகவே தேவர்களோடு மிங்கேவந்தேன். கருணைகூர்ந்து நீங்கள் அவர்களைக் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அது கேட்டவுடன், ஸ்ரீ[illegible]சான், நாராயணன் இவர்களுடைய முகங்கள் கோபத்தினால் பார்க்கபயங்கரமாயின. இப்படியாகக் கோபங்கொண்ட சிவவிஷ்ணுக்கள், பிரமதேவனிவர்கள் முகங்களிலும், தேவேந்திரன் முதலான தேவர்களிலுமிருந்து பார்க்கப் பயங்கரமான தேஜசு தனித்தனியே தோன்றின. அந்தத் தேஜசுகளெல்லாமொன்றாகக்கூடி ஓர் அக்கினிமலைபோலக் காணப்பட்டுத் தனது ஜுவாலையாலெங்கும் வியாபித்தது. அப்படிப்பரவிய தேஜோராசியிலிருந்து ஒரு ஸ்திரீசொரூபம் வெளிப்பட்டது. அந்தச்சொரூபத்துக்குச் சிவதேஜசால்முகமும், பிரமதேஜசால் கால்களும், விஷ்ணுதேஜசால் கைகளும், இந்திரதேஜசால் இடுப்பும், யமதேஜசால்ரோமமும், சந்திரதேஜசால் ஸ்தனங்களும், வருணதேஜசால் தொடைமுழங்கால்களும், பூதேஜசால் நிதம்பமும், சூரிய தேஜசால்கால் விரல்களும், அஷ்டவசுக்களின் தேஜசால்கை விரல்களும், குபேரதேஜசால் மூக்கும், நவப்பிரஜாபதிகளின் தேஜசால் பல்வரிசைகளும், அக்கினி தேஜசால் கண்களும், சந்தியா தேஜசால் புருவங்களும், வாயுதேஜசால் காதுகளும், மற்ற தேவர்கள் தேஜசால் மற்ற அவயவங்களும் அமைந்தன. அப்பெண் சொரூபம் தேவர்கள் கண்களாற் பார்க்கவும் கிட்ட நெருங்கவு முடியாமலிருந்தபடியால் துர்க்கையென்று அவளுக்குப் பெயரிட்டார்கள். இப்படித்தோன்றிய தேவியைக்கண்டு, மகிஷாசுரனால் துன்பமடைந்த தேவர்களெல்லாரும் மஹா சந்தோஷமடைந்தார்கள். பிறகு ருத்திராதி தேவர்கள் தத்தம் சூலாதி யாயுதங்களையும், வஸ்திரம், மாலை, சந்தனம், ஆபரணம், இவைகளையும் அவளுக்குக் கொடுக்க, அவ்வாபரணாதிகளால் அலங்காரமாய் விளங்கிய தேவியானவள், பூமியாகாசங்கள் நடுநடுங்கும்படியாக அட்டகாசஞ் செய்ததனால், உலகங்களெல்லாம் நடுநடுங்கின. சிங்கவாகனத்தின்மே லாரோகணித்துக்கொண்டு நிற்குமந்தத்தேவியைச் சித்தர், முனிவர், கந்தர்வர் முதலான பேர்களெல்லாரும் பார்த்து ஜயாவிஜயீபவா வென்று துதித்தார்கள். அப்பொழுது தேவி செய்த சிங்கநாதத்தினால் உலகம் நடுங்கினபொழுது தேவர்

களுக்கு விரோதிகளாகிய தைத்தியர்கள் தத்தம் ஆயுதங்களைக் கைக்கொண்டு யுத்தசன்னத்தரானார்கள். மகிஷாசுரனும் சத்தம் வத்தூநிலையைப் பிடித்துக்கொண்டு, தனது சைனியங்களுடனுயுதபாரியாய், மகாகோபத்தோடும் வந்து சேர்ந்தான். பூமியும், பாதாளவாசிகளாகிய ஆதிசேஷ[illegible]களான நாகங்களும் நிலைகெட்டும்படி சிங்கநாதஞ்செய்துகொண்டு ஆயுதந்தரித்த அநந்தமான கைகள் துலங்கும்படி யிருந்த தேவியை அசுரர்கள் கண்டு தத்தமாயுதங்களையுமெடுத்து யுத்தஞ்செய்யச் சித்தமானார்கள். பின்பு சத்துருக்களை வெல்லும் வல்லமையுள்ள மகிஷாசுரன் சஸ்திரங்களாகிய கதை, முசலம், சக்கரமும், அஸ்திரங்களும், கொண்டு கணக்கில்லாத ரதகஜதுரகபதாதிகளோடு தேவியையெதிர்த்துச் சண்டைசெய்ய ஆரம்பித்தான். அளவில்லாத அசுரசேனாபதிகள் சைனியங்களோடு தேவியைச் சூழ்ந்துகொண்டு சஸ்திரவருஷம் வருஷித்தார்கள். அது கண்டதேவியானவள் தனது வில்லினின்று விடுபடும் அம்புகளினால் அசுரர்களேவிய ஆயுதங்களை விளையாட்டாகக் கண்டதுண்டஞ்செய்துபோக்கி அரக்கருடலையும் எல்லையடைக் கண்சனாகத்துணித்து விட்டாள். அப்பொழுது தேவர்களும் தேவியின்சகாயத்தினால் அச்சமற்று அளவில்லாத வாயுதங்களைச் சொரிந்து ராட்சசசேனைகளை நாசப்படுத்தி நிர்மூலமாக்கினார்கள். இவ்வாறு தன்சேனைகள் நாசமடைந்ததைக்கண்ட மகிஷாசுரன், ஆங்காரங்கொண்டு, தனதுவில்லை வளைத்து நாணேயிட்டுப் பாணவருஷம் பொழியத்தொடங்கி, இந்திரன்மேல் பதினாயிரம் பாணங்களும், யமன்பேரில் ஐயாயிரம் பாணங்களும், வருணன்பேரில் எண்ணாயிரம் பாணங்களும், குபேரன்மேலே ஆறாயிரம் பாணங்களும், சூரியன், சந்திரன், அக்கினி, வாயு, அஷ்டவசுக்கள், அசுவினிதேவர்கள்முதலான மற்றதேவர்கள் பேரில் தனித்தனி பதினாயிரம் பாணங்களும் எய்தான். இவ்வாறு மகிஷாசுரனால் நசுக்கப்பட்ட தேவர்களெல்லாரும் எங்களைக்காத்தருளும் அம்பாவென்று முறையிட்டுக்கொண்டு தேவியைச் சரணமடைந்தார்கள். அப்பொழுது தேவிதனது சேனைகளாகிய பூதப்பிரேதபிசாசங்களை நோக்கி அசுரசேனைகளை நாசப்படுத்துங்கள் நான் விசேஷவரங்கள் பெற்ற மகிஷாசுரனோடு சண்டைசெய்கிறேன் என்று சொல்லியருளினாள். தேவியால் ஏவப்பட்ட கணங்களால் தனது சேனைநாசமடையக்கண்ட மகிஷாசுரன் கோபங்கொண்டு தனது சேனைகளோடு தேவியுடனெதிர்த்தான். அப்பொழுது, மகிஷாசு

னது மந்திரிகளாகிய மஹாநாதன், சுசக்ஷு, மஹாஹநு, மஹாசண்டன், மஹாபட்சன், மஹோதரன், மஹோத்கடன், பஞ்சாஸியன், பாதருடன், பகுநேத்திரன், பிரபாகுகன், ஏகாட்சன், ஏகபாதன், பகுபாதன், என்பவர்களும், மற்றுமுள்ள அனந்த மந்திரிகளும் சண்டைசெய்ய எண்ணித் தேவிமுன்புவந்து நின்றார்கள். அதுகண்டதேவியும் வாயுவேகம் மனோவேகங்களுக்கு மேலான வேகமுள்ள சிங்க வாகனத்தின் மேலேறிப், பிரளயகால மேகம்போல் ஒலிக்கின்ற தனது வில்லை நாணேற்றி வச்சிராயுதத்தை யொத்த பாணங்களைத் தொடுத்தபொழுது, பத்துலட்சம் யானைகளும், நூறுலட்சம் குதிரைகளும், நூறுலட்சம் தேர்களும், பதினாயிரலட்சம் பதாதிகளுமடங்கிய சேனைகளையுடைய மஹாஹநு வென்பவன் இறந்தான். இப்படியே பராக்கிரமம்பொருந்திய அளவுபடா நால்வகைச் சேனைகளுடைய மகிஷாசுரனுடைய மற்ற சேனாபதிகளும் தேவியினது தங்கப்பூண்கட்டப்பட்டு விளங்காநின்ற அம்புகளால் ஒருஜாமநேரத்துக்குள் மடிந்தொழிந்தார்கள். கேட்டீர்களோ பிராமணோத்தமர்களே! இச்செய்கைமிக ஆச்சரியமாயிருந்தது.

ஆறுவது அத்தியாயம்

முற்றிற்று,

ஏழாவது மகிஷாசுரவதையும் தேவிபட்டண வரலாறுங்கூறிய அத்தியாயம்.

இப்படியாகத் தேவியினால் தனது சேனைகள் சங்கரிக்கப்பட்டதுகண்டு மகிஷாசுரன் மஹாகோபங்கொண்டு சண்டகோபனைப் பார்த்து அதிகபராக்கிரமசாலியான சண்டகோபா! துராத்மாவாகிய இந்தப்பெண்ணைச் சண்டைசெய்து சங்கரியென்றான். வீரனான சண்டகோபனுமப்படியே ஆகட்டுமென்றுகூறி யுத்தகளத்தில் வந்து தேவியின்மீது சரமழைபொழியத், தேவியும், தனது பாணங்களால் சண்டகோபனது தேர் குதிரை சாரதி வில்முதலியவற்றை யழித்து, அவனது மார்பிலும் பாணங்களையேவினாள். இப்படித் தேர் குதிரை சாரதி வில்லுமிழந்த சண்டகோபன் வாளாயுதத்தையேந்தித் தேவியிடஞ்சென்று, தேவியினது வாகனமாகிய சிங்கத்தையும் தேவியினிடதுகையிலும் வெட்டினான். தேவியினிடதுபுஜத்தில் பட்ட கத்தியானது ஆயிரந்துண்டுகளாகச் சிதறிப்போயிற்று. தேவி தனது சூலாயுதத்தினால் சண்டகோபனது மார்பில் தாக்கினதினால் அவனும் பூமியில்விழுந்து மடிந்தான். மஹாவீரனான சண்டகோபன் விழுந்தபொழுது சித்திரபானு வானவன் யானையின்பேரிலேறிவந்து, பெரியமணிகள் கட்டப்பட்டு விளங்குகிற ஓர் சத்தியைத்தேவியின்மேலெறிந்தான். தேவி தனது ஹுங்காரத்தினால் அந்தச் சத்தியை விலக்கித் தனது சூலத்தாலவனது மார்பிற்குத்தி விழுத்தினாள். பின்பு கராளன் என்பவன் அதிக வேகமாயோடிவர அவனையுந் தேவி யோர்கைக்குத்தினால் மடித்து, மதோன்மத்தனைக் கதையாலடித்துச் சாய்த்து, பாஷ்கலனை வாளினால் வெட்டி, அந்தகனைச் சக்கிராயுதத்தால் கொன்று யமபுரமனுப்பிவிட்டாள். இப்படியே மகிஷாசுரனுடைய பெருங் காத்திரமுள்ள மந்திரிகளையும் சூலாயுதத்தால் குத்தி யமனுடைய வீட்டுக்கு அதிதிகளாக அனுப்பினாள். இவ்வாறாகத் தன்னுடைய சேனைகள் நாசமானதுகண்ட மகிஷாசுரன் எருமைவடிவங் கொண்டு தேவியின் கணங்களிற் சிலரைத் தன் முகத்தினாலும், சிலரைக்காற்குளம்புகளாலும், சிலரைச் சுவாசத்தினாலும் வதைத்துக் கொன்று தேவியேறிவந்த வாகனமாகிய சிங்கத்தைக் கொல்லும் படிசினங்கொண்டு கர்ஜிக்க, சிங்கமானது உக்கிரங்கொண்டு, தன்பாதத்தினால் பூமியதிரமிதித்துத், தனதுநகங்களால் மகிஷாசுரனது சரீரமுழுதுங்கீறியது. தேவி மஹா சினமுடையவளாய் மகிஷாசுரனைக் கொல்லக்கருதிப் பாசத்தினால் அவனைக்கட்ட, மகிஷரூபத்தை விட்டுச், சிங்கரூபங்கொண்டு கிட்டத், தேவி தனது வாள்கொண்டு வெட்ட, அவன் அவ்வுருவொழித்து வாளாயுதங்கொண்ட மானிடவுருவுகொண்டு நெருக்கத், தேவிமர்ம்மஸ்தானங்களைப் பிளக்கத்தக்க கூரிய பாணங்களால் முருக்க, அவன் துதிக்கை தந்தங்களோடுகூடிய யானையுருவெடுத்துத் தேவிவாகனமாகிய சிங்கத்தை யிழுக்க, சிங்கமும் தனது நகங்களால் அவன் துதிக்கையைக் கிழிக்க, அவன் மீளவுந் தனது சுயரூபமெடுத்துக்கொண்டான். துர்க்கையானவள் மதுபானத்தினால் கண்கள் செவந்து கோபங்கொண்டு சிரிக்க, மகிஷாசுரன் தன் கொம்புகளால் மலைகளைப்

பெயர்த்துத் தேவிமேறு ஏறிய, அம்மனும் அவைகளை யம்புகளாற் பொடிப்பொடியாகச் சிதறவடித்து மகிஷாசுரனைப் பார்த்துச் சொல்லுகின்றாள்: அடே மூடா! நான் மதுபானஞ் செய்யுமளவும் நீ கிறுமாப்புக்கொண்டு திரி; நான் மதுபானம் பண்ணின பிறகு உன்னைக்கொன்று யமலோகஞ் சேர்த்துவிடுகிறேன்; தேவகண்டனை நீ யிறந்தபின் சித்தர், சாத்தியர் முதலான தேவர்கள் சுத்தம் பதவியைப்பெற்று க்ஷேமமாக வாழ்ந்திருப்பார்கள் என்று சொல்லி யவனுடையமார்பிலொருகுத்துக் குத்தினாள். அந்த குத்தினால் அலமலந்த மகிஷாசுரன் தென்சமுத்திரக்கரையை நோக்கியோட்டம் பிடித்தான். தேவியும் தன் சிங்கத்தின்மேலேறி யவனைத்துரத்த, மகிஷாசுரன் பத்துயோசனை நீளமான தர்மபுஷ்கரணியில் விழுந்து மறைந்தான். பின்னால் தொடர்ந்துவந்த தேவி மகிஷாசுரனைக்காணாமல் மயங்கும்பொழுது, "ஏ தேவி உன்கைக்குத்தினால் நொந்த மகிஷாசுரன் இந்தத் தர்மபுஷ்கரணியில் மறைந்து படுத்துக்கொண்டிருக்கிறான், அவனை ஏதாவதொரு உபாயத்தினால் கொன்று முடித்துவிடு" என்று ஒரு அசரீரிவாக்குப் பிறந்தது. அதைக் கேட்டு, மகிஷாசுரனை வதைக்கச் சித்தமாயிருந்த தேவியானவள், தன் வாகனமாகிய சிங்கத்தையழைத்து நீ மகாபராக்கிரமசாலியாகையால் இந்தத் தர்மபுஷ்கரணியிலுள்ள ஜலத்தை ஒருதுளியும் விடாமல் குடித்துவிடு என்று கட்டளையிட, சிங்கம் தர்மபுஷ்கரணியில் தான் பறக்கும்படி யதிலுள்ள நீரைக்குடிக்க, மகிஷாசுரனும் அந்தப்புஷ்கரணியினின்றும் மிகச்சோர்வடைந்தவனாய் வெளிப்பட்டுவர, தேவி தனது திருவடியால் அவன் தலையை மிதித்து, சூலத்தால் கழுத்தில்குத்தி, மிகுந்த கோபத்தோடும் கத்தியினால் அவனுடைய பெரியதலையைவெட்டி யெறிந்தாள். ஓ பிராமணோத்தமர்களே! இப்படியாக மகிஷாசுரன் தன் மந்திரிகள், சேனைகள், வாகனங்களோடு தேவியினாலடிபட்டு மடிந்தபின், தேவர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள், தேவரிஷிகள் முதலானபேர்களும் வந்து துதித்துத் தேவிக்குச் சந்தோஷமுண்டாகச்செய்து அவளிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு தங்கள் தங்களிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள். பிறகு தேவி தெக்ஷிணசமுத்திரத்தின் வடகரையில் தனது பேரால் ஒரு பட்டணம் நிர்மிக்கத், தேவியின் கட்டளையால் தேவேந்திரன் முதலான தேவர்கள் தர்மபுஷ்கரணியை அமிர்தத்தினால் நிரம்பச்செய்தார்கள். ஓ பிராமணர்களே, அதனால் தர்மபுஷ்கரணிக்கு அமிர்ததீர்த்தம் என்றும் பேருண்டு.

பின்பு தேவியானவள், தன்னால் நிர்மிக்கப்பட்ட அந்த பட்டணத்தில், பசுமுதலான சகலபொருள்களும் நிறைந்து, ரோகமில்லாதிருக்கவேண்டுமென்றும், தர்மபுஷ்கரணியில் ஸ்நானம் செய்தவர்களுக்குஇஷ்டார்த்தசித்தியுண்டாகும்படியும் வரமளித்துச் சொர்க்கலோகம் போய்ச் சேர்ந்தாள். தேவியினால் உண்டாக்கப்பட்ட அந்தமகிமை சிறந்த பட்டணத்துக்குத் தேவிபட்டணமென்று பேர். முனிவர்களே, அந்தப் பட்டணத்திலிருந்து தான் தர்மசிந்தையுள்ள ஸ்ரீராமர் சுபமுகூர்த்தத்தில் திலகவிநாயகரைப் பிரார்த்தித்துத், தேவியினுடையஅநுக்ஞைபெற்று, தமது கையால் ஒன்பது கற்களைநட்டுச் சந்தோஷத்தோடும் சேதுகட்ட ஆரம்பித்து வானரங்களாலே மலைகள், மரங்கள், புற்கள், கட்டைகள் முதலியவகளைக்காட்டிலிருந்து சேகரித்துப்பத்துயோசனையகலமும், நூறுயோசனைநீளமுமுள்ளதான அந்தச்சேதுவைச் சமுத்திரத்தில் இலங்காபுரிவரைக்கும் நளனாலே ஐந்து நாட்களில் கட்டிமுடித்தார். தேவிபட்டணத்துக்குச் சமீபத்திலுள்ள நவபாஷாணமென்கிற சேதுமூலத்தில் மனிதர்கள் பாபநாசமாம்பொருட்டு ஸ்நானஞ்செய்யவேண்டியது. அப்படியே சக்கிரதீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து சேதுவுக்கதிபதியாகிய ஸ்ரீராமரைப் பிரார்த்திக்கவேண்டியது. தேவிபட்டணத்திலிருந்து கட்டப்பட்டசேது மஹாபரிசுத்தமுடையது. இந்தச்சேதுமூலத்துக்குக் கிழக்கு எல்லை தேவிபட்டணம், மேற்கு எல்லை தர்ப்பசயனம். இவ்விரண்டும் பாபங்களை நாசமாக்கும் மகிமையுடையவைகள். மனிதர்கள் எந்த வழியாகச் சேதுவுக்கு வந்தாலும் இந்தச்சேது மூலத்திலும், சக்கிரதீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து, சங்கற்பஞ் செய்துகொண்டு பிறகுதான் சேதுவுக்குப் போகவேண்டும். தேவிபட்டணத்திலும், சக்கிரதீர்த்தத்திலும், தர்ப்ப சயனத்திலும் ஸ்நானஞ் செய்வதனால் சகலபாபங்களு நாசமாகும். சக்கிரதீர்த்தத்தை மனதினால் நினைக்குமாத்திரத்தில் இலட்சம் ஜன்மங்களிற் செய்த பாபங்களெல்லாம் பஸ்மமாய்ப் பிறப்பற்று முத்திகைகூடுகிறது. சக்கிரதீர்த்தத்துக்குச் சமமானதீர்த்தம் உலகத்திலிருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை. பூலோகத்திலுள்ள கங்காநதிமுதலான தீர்த்தங்களெல்லாமிந்தச் சக்கிரதீர்த்தத்தின் மகிமையில் பதினாறிலொருபங்குக்கு மிணையாகாது. முதலில் நவபாஷாணமத்தியிலிருக்கிற சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்து க்ஷேத்திரபிண்டம் போட்டு, அதேமாதிரியாகச் சக்கிரதீர்த்தத்திலும் செய்து, சேதுவுக்

சுதிபதியாகிய ஹரியைத் தன் பாபநிவாரணமாம்பொருட்டுப் பணியவேண்டியது. இப்படியே வேறு வழியாகவருபவர்கள் தர்ப்பசயனத்தில் செய்யவேண்டியது. நளனால் நிர்மிக்கப்பட்டு ஸ்ரீராமசந்திரர் வீற்றிருந்த சிம்மாசனத்தை வணங்குகிறவனுக்கு நரகபயமில்லை. முதலில் ஸ்ரீராமரைத் தியானித்து, "ஸ்ரீராமரது திருவடிகளாற் பரிசுத்தமாக்கப்பட்ட தூளிகள்மைந்தனும் இராவணசங்காரத்துக்குக் காரணமாயும், ஸ்ரீராமசந்திரருடைய ஜயகீர்த்திக்கு முக்கியமூலமாயும், சீதாதேவியினது மனமாகியதாமரைக்குச் சூரியனைப்போலவுமிருக்கிற சேதுவே! யுனக்கு நமஸ்க்காரம்" என்கிற இந்த மந்திரத்தையுச்சரித்துச் சேதுவை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, வேதாளத்துக்கு வரங்கொடுத்த பரிசுத்தமானவேதாளதீர்த்தத்துக்குப் போகவேண்டும். இந்தஅத்தியாயத்தைப்படிப்பவர்க்கும், கேட்பவருக்கும், சொர்க்காதிபோகங்களெல்லாம் வெகு எளிதாகக் கிடைக்கும். கைவல்யமும் சித்திப்பதற்குத்தடையேயில்லை.

ஏழாவது அத்தியாயம்

முற்றிற்று.

எட்டாவது வேதாளவரத தீர்த்தமகிமையில் சுதரிசனன் வேதாளமான அத்தியாயம்.

இப்படிச்சொல்லிவந்த சூதமுனீந்திரரைச் சௌனகாதிரிஷிகள் நோக்கி, கிருஷ்ணத்வைபாயனருக்கு மாணாக்கரும் சர்வஞருமான சூதமுனிவரே, உமதுவாக்கிலிருந்து பிறந்த அமிர்தவருஷத்துக்கு ஒப்பானகதைகளைக் கேட்டும் திருப்தியடையாமல், இன்னமும் உமதுவசனாமிருதபானத்தை விரும்புகிற எங்களுக்கு இன்னமும் சிலகதைகளைச் சொல்லியருளவேண்டும். வேதாளவரததீர்த்தமானது சக்கிரதீர்த்தத்துக்குத் தட்சிணபாரிசத்திலிருக்கிறதென்று எங்களுக்கு முன்னமே சொல்லியிருக்கிறீர்கள். அதற்கந்தப் பேர்வந்த காரணமென்ன? அது எவ்விதமான மகிமையுடையது? இவைகளையெங்களுக்குக் கருணைபுரியவேண்டுமென்றுவினவ, சூதமுனிவர் ரிஷிசிரேஷ்டர்களே! நீங்கள் நல்ல கேள்விகேட்டீர்கள். இரகசியமும், அற்புதமாயுமிருக்கிற இந்தக்கதையைச் சொல்லுகிறேன். சிரத்தையோடுங் கேளுங்கள். பாமரர்கள்கூட இந்தக்கதையைக் கேட்டுச்சந்தோஷமடைவார்கள். பூர்வம் ஸ்ரீகைலாசபர்வதத்தில், ஸ்ரீபரமேசுவரரும் பரமேசுவரியும் லீலாவிநோதமாயிருந்தகாலத்தில் பரமேசுவரிக்கு இந்தரகசியமான கதைசொல்லப்பட்டது. பூர்வம், சத்தியவந்தரும் பரிசுத்தருமான காலவமஹாரிஷியானவர் பரபிரமத்தைத்தியானம் பண்ணிக்கொண்டு தமது ஆச்சிரமத்தில் தபசுசெய்துகொண்டிருந்தார். அவருக்குக் காந்திமதியென்ற அழகான யௌவனகுமாரத்தியிருந்தாள். அவள்தன்பிதாவுக்குப் பூஜைக்குப் புஷ்பங்கள்கொண்டுவருதல், வேதிகை சுத்தஞ்செய்தல், சமித்துக் கொண்டுவருதல், முதலான பணிவிடைகளைச் சிரத்தையோடு செய்துவந்தாள். ஒருநாள் அந்தப்பெண் தன்பிதாவின் பூஜைக்குப்புஷ்பங்கொண்டுவருகிறதற்காகக்காட்டில் வெகுதூரம் போய்த்தன்குடலையை அழகான புஷ்பங்களால் நிறைத்துக்கொண்டு ஆச்சிரமத்தை நோக்கிச் சீக்கிரமாய் வரும்போது, சுதரிசனன், சுகர்ணனென்றஇரண்டு வித்தியாதரகுமாரர்கள் விமானத்திற் செல்லுகையில் அவளைக்கண்டார்கள். மூத்தவனான சுதரிசனன், மன்மதன் தேவியாகிய ரதியேயிவ்விதவுருவங்கொண்டு வந்தாளென்று சொல்லும்படியான அந்தப்பெண்ணினது பூர்ணசந்திரன்போன்ற முகத்தைக்கண்டு, ஆனந்தங்கொண்டு, காமத்தால் மயங்கி, அவளை அடிக்கடி பார்த்து, அவளைச்சேரவிரும்பி, விமானத்திலிருந்து கீழிறங்கி, அவளை நெருங்கி, மஹாரூபலாவண்யத்தோடுங் கூடியிருக்கிற நீ யார்! எந்த மஹானுடைய புத்திரி? நிகரில்லாதவுனது சௌந்தர்ய வடிவமானது என்னை மயக்குகிறது; ரதிக்கு ஒப்பான வுன்னைப் பார்த்த என்னை மன்மதன்பாணங்களால் வதைக்கிறான்; சுகண்டன் என்கிற வித்தியாதரசக்கிரவர்த்தியினுடைய அழகிய குமாரன் நான். என்பெயர் சுதரிசனன். பெண்ணே நீ கருணைசெய்து என்னை மணம்புரிந்து காத்தருளவேண்டும். நீ யென்னைக் கணவனாகப் பெற்றால் உனது மனோரதங்களெல்லாம் நிறைவேறுமென்று சொன்னான்.

அது கேட்ட காந்திமதி, நியாயமான மறுமொழி சொல்லுகின்றாள். ஐயா வித்தியாதரகுமாரரான சுதரிசனரே! நான் காலவ

மஹாரிஷியின் புத்திரி; எனக்கின்னம் கலியாணமாகவில்லை; தந்தையின் பூசைக்கு வேண்டிய புஷ்பங்களெடுப்பதற்காக இந்தக் காட்டுக்குவந்தேன்; நானிங்கேவந்து ஒரு ஜாமமாய்விட்டது; நானிங்கே தாமசஞ்செய்து விட்டால் தேவதார்ச்சனைக்குக் குறை வரும்; அதனால் தபசிரேஷ்டரான என்பிதா கோபமடைவார்; ஆகையால் நான் சீக்கிரம் போகிறேன். கன்னிகைகளெல்லாரும் பிதாவுக்கு அடங்கியிருக்கவேண்டுமே யல்லாமல் சுதந்தரமாய் நடக்கக்கூடாதல்லவா? நீர் என்னை மணம் புரியவிரும்பினால் என் தந்தையிடம் வந்துகேளும், என்று சொல்லி ஆச்சிரமத்தை நோக்கிச் செல்லப் பிரயாணப்பட்ட காந்திமதியைக் காமத்தால் மதிமயங்கிய வித்தியாதரகுமாரன் கேசத்தைப் பிடித்திழுத்தான். அப்போது காந்திமதியானவள், ஐயையோ! இந்தத் துஷ்டாத்மாவான வித்தியாதரகுமாரன் என்னைப் பலாத்காரமாய்ப் பிடித்திழுக்கிறானே: ஐயா! பிதாவே யென்னை யிந்தக்கொடிய துஷ்டனிடத்தினின்றும் காப்பாற்றுமென்று குருவிப்பட்சியைப்போலவாய்விட்டுக் கதறியழுதாள். கந்தமாதனப் பருவதத்தில் வாசம்பண்ணிக் கொண்டிருந்த ரிஷீசுவரர்களெல்லாரும் அந்த அழுகுரல் யாதோவென்று அறியும் பொருட்டாகக் காலவமுனிவரை முன்னிட்டுக்கொண்டவ்விடம் வந்தார்கள். அப்பொழுது காலவமஹாரிஷி யானவர் கந்தர்வன்கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் தன் குமாரத்தியையும், கந்தர்வனையும் அவன் சமீபத்திலிருக்கிற அவன் தம்பியையும்பார்த்துக் கோபமடைந்து, வித்தியாதரனை நோக்கி எவித்தியாதரப் பதரே, வேதாளமும் இராட்சதரும் பெண்களை ப்பலாத்காரமாய்ப் பிடித்திழுக்குந் தொழிலுடையவர்கள். அந்தத்தொழிலையே செய்தநீயும் துக்கம் நிறைந்த மனிதஜன்மமெடுத்து, அதேஜன்மத்தில்தானே வேதாள சொரூபம் பெற்று மாங்கிஷம் இரத்தம்முதலானவைகளைப் புசித்து வெகுகாலம் உலகத்தில் திரியக்கடவை; உன் செய்கைக்குடன்பட்டிருந்த உன் தம்பியாகிய சுகர்ணன் மனிதனாகவே பிறப்பான். அவன் இத்தொழிலைத்தான் செய்யாததனாலே வேதாளஜன்மமவனுக்கு வராது. அவனுக்கு விக்ஞப்தி கௌதுகன் என்கிற வித்தியாதராதிபதியைக் கண்டபொழுது சாபம் நீங்கும் என்று இருவரையும் சபித்துவிட்டுத், தமது புத்திரியை அழைத்துக்கொண்டு ரிஷிகளோடுந் தமதாச்சிரமம் போய்ச்சேர்ந்தார். பிறகு சுதரிசனன், சுகர்ணனென்ற இருவரும் முனிசாபத்தால் மனம் நொந்து, தாங்கள் செய்யத்தக்க தின்னதென்று தீர்க்காலோசனை

செய்துகொண்டு, யமுனாதீரத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்த ஆசாரசீலனாகிய கோவிந்தசுவாமி யென்கிற பிராமணன் வயிற்றிற் பிறக்கிறதாக உத்தேசித்துத், தங்களுடைய வித்தியாதரசொரூபத்தைவிட்டு அந்தப்பிராமணன் வயிற்றில், சுதரிசனன், விஜயனென்ற பெயரோடும், இளையவனாகிய சுகர்ணன் அசோகதத்தன் என்ற பெயரோடும், பிறந்து வளர்ந்து வந்தார்கள். அவர்கள் யௌவனதசையடைந்த காலத்தில், யமுனாதீரத்தில் மழையில்லாமையினாலே த்துவாதசவருஷ க்ஷாமமுண்டாகி, தங்கள் நாட்டார் வருத்தப்படுவதைக்கண்ட கோவிந்தசுவாமி யானவர் தமது புத்திரகளத்திரர்களோடும் புறப்பட்டுக் காசியை நோக்கிப் போகையில் பிரயாகையில் தங்கினபொழுது, அவ்விடத்தில் ஒரு ஆலவிருட்சத்தின் கீழ் கபாலமாலை பூண்டு தவஞ்செய்துகொண்டிருந்த முனிவரைக்கண்டு வணங்கினார். அந்த முனிவர் அவரையும், அவரது குமாரர் பத்தினி முதலானவர்களையும், ஆசீர்வதித்துக், கோவிந்தசுவாமியைப் பார்த்துச், சீக்கிரத்தில் உன் புத்திரன் விஜயதத்தனுக்கும் உனக்கும் சம்பந்தம் நீங்கிப்போம் என்றார். அது கேட்ட கோவிந்தசுவாமியானவர் அஸ்தமானமான பின் சந்தியாவந்தனாதி நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு, தமது புத்திரர் பத்தினியுடன் வழிவந்த சிரமத்தினாலே யங்குள்ள ஒருபாழுங்கோவிலில் தங்கினார். அவ்விடத்தில் அசோகதத்தனும் அவன்தாயாரும் கீழே வஸ்திரங்களை விரித்துப்படுத்துக்கொண்டு தூங்கிவிட்டார்கள். விஜயதத்தன் வழிநடந்தவருத்தத்தினாலே சோர்ந்து குளிர்சுரம்கண்டு தன் தந்தையைநோக்கித் தன்னை அணைத்துப்படுத்துக் கொள்ளவேண்டினான். அவருமப்படியே செய்துங் குளிர் நீங்காமையால், தன் பிதாவைநோக்கித் தந்தையே, எனக்குக்குளிர்வருத்த மிகுந்திருக்கிறபடியால், எங்கிருந்தாவது நெருப்புக்கொண்டுவாருமென்று பிரார்த்திக்க, அவரும் அப்படியே நாலாபக்கமும் போய்பார்த்தும் நெருப்பு அகப்படாமையால் திரும்பிவந்து, அப்பா நாலுபக்கங்களில் தேடிப்பார்த்தும் நெருப்பு கிடைக்கவில்லை. இது நடுராத்திரியாகையால் பட்டணத்து ஜனங்கள் கதவடைத்துக்கொண்டு தூங்குவார்கள், ஆகையால் நெருப்புக்கிடைக்காது என்று சொல்ல, விஜயதத்தன் குளிர்பொறுக்கமாட்டாமல் மறுபடியுந் தந்தையை நோக்கி நெருப்புக்கொண்டு வாருமென்று கெஞ்சிக், குளிர்சுரத்தால் வருந்துகிற என்னைப்பனிக்காற்றும்; வருத்துகிறது. நீர் நெருப்பு அகப்படவில்லை

யென்ற வார்த்தை பொய். அதோ ஜுவாலையால் ஆகாயமளாவும்படி யெரிந்து கொண்டிருக்கிற நெருப்பைப்பாரும், அதைப் போய்ச் சீக்கிரங்கொண்டு வாரும், இல்லாவிட்டால் குளிர் தாங்கமுடியாது என்றான். தந்தையானவர் அப்பா நான் பொய்சொல்லவில்லை, அதோ ஆகாயமளவும் ஜுவாலை வீசி யெரிகிற இடம் சுடுகாடு; அந்த நெருப்பும் பிணம் சுடுகிறநெருப்பு; அது தொடத்தகாதது; அசுபமானது; தொடுகிறவர்களுக்கு ஆயுசு க்ஷீணித்துப்போம் ஆகையால், அப்பா உன் ஆயுசு க்ஷீணித்துப்போகாதிருப்பதற்காக நான் அதைக்கொண்டு வரப்பிரியப்படவில்லை யென்று சொன்னார். அப்பா! அது மயான அக்கினியானாலும், யாகாக்கினியானாலும், எதுவானாலும் கொண்டுவராவிட்டால் நான் குளிராலிறந்து போவேன், என்று உக்கிரமாய்த் தன் புத்திரன் சொல்லியது கேட்ட கோவிந்தசுவாமி யானவர், புத்திரவாஞ்சையால்அந்தச்சிதாக்கினியைக் கொண்டுவரும்படிபோனார். விஜயதத்தனும் பின் தொடர்ந்து சென்று, உஷ்ணத்தினால் கொதித்து வெடித்துக் கொண்டிருக்கிற அஸ்திநிறைந்த சிதையைக்கட்டிக்கொண்டு குளிர்தீர்ந்து சுகமடைந்து, பின் தன் தகப்பனைநோக்கி வட்டமாயும், செந்தாமரைமலர்போலுமிருக்கிற அது என்னவென்று கேட்டான். தந்தையானவர், இது கபாலம் நெருப்புஜுவாலை வட்டமாயெரிவதனாலும், ஊனீர், மாமிசம், இரத்தம் முதலியவை நிறைந்திருப்பதனாலும் உனக்குச் செந்தாமரைப் பூவைப்போலத் தோன்றுகிறது என்றார். விஜயதத்தன் ஒரு கட்டையினாலே அந்தக்கபாலத்திலடித்தபொழுது ஊன் இரத்தம் முதலியவை அவன் முகத்தில் தெறித்தன. அவன் அதை நாவால் நக்கி ருசிபார்த்தவுடனே தெற்றுப்பல்லும், செம்பட்டைமயிருமுடைய பயங்கரமான பெரிய வேதாளசொரூபமுண்டாகி அட்டகாசம்செய்து நின்றான். அந்த அட்டகாசத் தொனியினால் பூமியாகாச மெல்லாம் வெடிபட்டன. பிறகு தன்தந்தையைப் பிடித்திழுத்துக் கொல்லப்போகையில் அப்பா இந்த அநியாயஞ் செய்யாதே யென்று ஒரு அசரீரிவாக்குப் பிறந்ததைக்கேட்ட வேதாளம் பிதாவைவிட்டுவிட்டு ஆகாசமார்க்கமாகத் தடையின்றி வெகுதூரம் போய் வேதாளங்களுடன் கூடினபோது, வேதாளங்கள் கபாலத்தை யுடைத்து வேதாளரூபம் பெற்றமையாலவனுக்குக் கபாலஸ்போடனென்று பேரிட்டு, அவனைச் சூழ்ந்துபோய் நராஸ்தி பூஷணன் என்ற வேதாளராஜனிடம் சேர்த்தன. மஹாபலவானான அந்த

வேதாளராஜனும் அவனைச் சேனாநாயகனாக்கிக்கொண்டான். பின்பு ஒரு காலத்தில் சித்திரசேனனென்கிற கந்தர்வராஜன் நராஸ்திபூஷணனை யுத்தத்துக் கழைத்துச் சண்டையிட்டுக் கொன்றுவிட்டான். பிறகு கபாலஸ்போடன் அவன் பதவியடைந்து வேதாளங்களுக்கரசனானான். கேளுங்கள் முனீசுவரரே வித்தியாதர குமாரனாகிய சுதரிசனன் முனிவர் சாபத்தால் மனிதனாய்ப் பிறந்து, பின்பு வேதாளரூபம் பெற்று வேதாளங்களுக் கதிபதியானான்.

எட்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஒன்பதாவது

வேதாளவரத தீர்த்தத்தில் சுதரிசனன் சாபவிமோசனம் பெற்ற

அத்தியாயம்.

விடிந்தபிறகு கோவிந்தசுவாமி யானவர், புத்திர சோகத்தினால் துக்கப்பட்டுத் தன் பத்தினி புத்திரனோடு கூடிப்புலம்பிக்கொண்டிருக்கையில் சமுத்திரதத்தன் என்னும் ஒரு காசிதேசத்து வியாபாரி அவரைத் தன் வீட்டுக்கழைத்துக்கொண்டுபோய்ச், சமாதானப்படுத்தித் தன் சொத்துக்களுக் கதிகாரியாக்கினான். அந்தப் பிராமணனும் முனிவர் வசனத்தைநினைத்துத் தன் மூத்தபுத்திரனைப் பார்க்கவேண்டு மென்கிறவிருப்பத்தோடு தன் பத்தினியோடும் அசோகதத்தனோடும் அவ்வணிகன்வீட்டில் வசித்துக்கொண்டிருந்தான். அசோக தத்தனென்பவன் அஸ்திர சஸ்திரவித்தையிலும், சாஸ்திரங்களிலும் வல்லவனாய்த், தனக்குச் சமானமில்லாதவனாய் அப்பட்டணத்திற் கீர்த்திபெற்று வாழ்ந்து வந்தான். இப்படியிருக்கையில் பிரதாபமகுடன் என்னும் காசிராஜனிடத்துக்குத் தெட்சணதேசத்திலிருந்து ஒரு மல்லன்வந்தான். அரசன் அந்த மல்லனை ஜயிக்கவிரும்பி, அதற்காகப்பலசாலியாகிய அசோகதத்தனை யேவலாளரால் வரவழைத்து, அசோகதத்தா! பலத்தினால் கருவங்கொண்டிருக்கிறஇந்தத்தெட்சணதேசத்து மல்லனைப்பராக்கிரமசாலியாகிய நீ கொன்று ஜயித்தால், யாதொருசந்தேகமில்லாமல் உனது

மனோவிருப்பங்களை யெல்லாம் நிறைவேற்றுகிறேனென்றான். அதைக்கேட்ட அசோகதத்தனும் தெட்சணநாட்டு மல்லனோடு போர்செய்து, அவனையடித்துக் கீழே விழுத்தினான். அந்த மல்லன் பொறிகலங்கி, யுயிரிழந்து பூமியிற் பிணமாய் விழுந்தான். இப்படித் தேவர்களுக்கும் அசாத்தியமான காரியத்தைச் செய்து முடித்த அசோகதத்தனுக்கு அனேக திரவியமும் கிராமங்களும் கொடுத்துத் தன் சமீபத்திலேயே வைத்துக்கொண்டான். அப்படியிருக்கும்பொழுது ஒருநாள் காசிராஜன் அசோ[illegible]த்தனோடு கூடக் குதிரையிலேறிச், சாயங்காலவேளையில் ஜனசஞ்சா[illegible]த ஒரு இடத்தில் போய்க்கொண்டிருக்கையில், "ஓ மஹா[illegible]ராஜனே நான் நிரபராதி, என் சத்துரு அடிக்கடி தூண்டிவிட்டபடியால் நியாயாதிபதி யென்னைக் கழுமரத்திலேற்றினான். கழுவிலேற்றி நாலுநாளாயிற்று. அநியாயம் செய்தவர்களுடைய பிராணனெளிதிற் போவதில்லை. ஓ மஹாராஜனே நான் தாகத்தினாலே [illegible] வருந்துகிறேன்," என்ற இரக்கமான வசனத்தைக்கேட்டு, சமீபத்திலிருந்த தைரிய புருஷனான அசோகதத்தனைப் பார்த்து அப்பா! நிரபராதியாய்க் கழுவிலேற்றப்பட்டுத் தாகத்தால் தவிக்கிற இந்த ஜீவனுக்கு எவ்வகையிலாவது தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று சொல்ல, அசோகதத்தன் குடத்தில் தண்ணீரெடுத்துக்கொண்டு, அந்தமனிதனுக்குக் கொடுக்கும் பொருட்டுப் பூதவேதாளங்கள் நிறைந்த மயானத்துக்குப் போனபோது, கழுமரத்தின் கீழே ரதிதேவியையொத்த சௌந்தரிய வதியான ஒரு யௌவன மாதைக்கண்டு, தைரியம் விடாமல், அழகிய பெண்ணே! நீ யார்? நிர்ஜனமான மயானத்துக்கு வந்த காரணமென்ன? இந்தக் கழுமரத்தின் கீழிருப்பானேன்? என்று, கேட்டான். அந்தமாது, ஐயா! எனது பிராணநாதனை யிராஜன் கழுவிலேற்றிவிட்டான், லோபியானவன் பணத்தை விடாதிருப்பதுபோல இவனும் தன் பிராணனைக்கொஞ்சத்தில் விடாமல் வருந்தப்படுகிறான், இவனுடன் அநுமரணஞ்செய்ய வந்திருக்கிறேன், இவன் தாகத்தினால் வருந்தித் தண்ணீர் கொடுவென்பதைக் கேட்க எனக்கு மிகவருத்தமாயிருக்கிறது, கழுமரத்திலேறிக் கழுத்தண்டை யிருப்பதினால் என்னால் நீர்கொடுக்க முடியவில்லை யென்று சொன்னதைக்கேட்டுத், தயாசமுத்திரனாகிய அசோகதத்தன்! அம்மா என் தோளின் மேலேறி யிவனுக்குக் குளிர்ந்த ஜலங்கொடு, என்று சொல்ல அந்தப் பெண்ணும் அப்படியே சம்மதித்துக், குனிந்து நிற்கும் அவனுடைய தோளின்

மேலேறியபின், புதியதான இரத்தஞ் சொட்டுவதைக் கண்ட அசோகதத்தன் இதென்னவென்று அண்ணாந்து பார்க்க, அவள் அந்தப் பிணத்தைத் தின்கிறதைக்கண்டு, அவளுடைய சிலம்பணிந்த காலைப் பிடித்துக் கொண்டான். அந்தப்பெண் விலையுயர்ந்த புதிய பல ரத்தினங்களிழைத்த சிலம்பை விட்டு விட்டு அதிவேகமாக ஆகாசமார்க்கத்தில் போய்விட்டாள். அசோகதத்தன் தன் கையிலகப்பட்ட அந்த நூபுரத்தை எடுத்துக் கொண்டு அரசனிடம் போய் மயானத்தில் நடந்ததைச் சொல்லி யந்தப்பாதசரத்தையுங் கொடுத்தான். அதுகண்டகாசிராஜன். மற்றவர்களாற் செய்து முடிப்பதற் கருமையான காரியத்தை யிவன் செய்து முடித்தானென்று மகிழ்ந்து, தன் குமாரத்தியான மதனலேகை யென்னும்பெண்ணை அசோகதத்தனுக்குக் கொடுத்தான். பிறகொருநாள் இராஜன் அந்த அழகான நூபுரத்தைப் பார்த்து, இதற்கு ஜோடியான மற்றொரு நூபுரத்தை எப்படிச் சம்பாதிக்கிறதென்று யோசித்துக் கொண்டிருக்கையில், அசோகதத்தன் அது கண்டு, அதைச்சம்பாதிக்கு மார்க்கத்தை யோசித்து, இது நமக்கு மயானத்தில் கிடைத்தது; மற்றொன்று சம்பாதிப்பதற்காக அவளை யெவ்விடத்தில் காண்பது, என்று பலவாறு சிந்தித்து, நாம் மயானத்துக்குப்போய் நரமாமிசம் விற்பனைசெய்வோம், பூதப்பிரேத பசாசங்களை மந்திரத்தினாலழைப்போம், அப்பொழுது அந்தராட்சசியும் வருவாள், வந்த அவளைப்பிடித்துக் கொண்டு மற்றொரு சிலம்பையும் பிடுங்கிக் கொள்வோம், அனேகமாயிரம் வேதாளங்களும், பூதங்களும், ராட்சதர்களும் வந்தெதிர்த்தாலும் புஜசாலியான நமக்கு இலட்சியமில்லை யென்று தன் மனதில் நிர்மானஞ்செய்துகொண்டு, மயானம்போய், மாம்சத்தை வைத்துக்கொண்டு, மந்திரத்தினால் பூதப்பிரேத பசாசகணங்களை யழைத்து, நரமாம்ச விற்பனை செய்கிறேனென்று இராத்திரியில் கூவிக்கொண்டிருந்தான். அப்பொழுது, இராட்சச, பூதவேதாள, பசாசகணங்களெல்லாம், ஆடா, நமக்கிஷ்டமான மாமிசத்தைச் சாப்பிடுவோமென்று சந்தோஷத்தோடேவர, அந்தராட்சசியும் அனேக ராட்சசப்பெண்கள் சூழ, மாமிசந்தின்பதற்கு அங்கே வந்தாள். அவளையே தேடிக்கொண்டிருந்த அசோகதத்தன் அவளைக்கண்டு, நாம் முன்புகண்டது இவள்தானென்றறிந்து, அவளை நோக்கி அம்மா மற்றொரு சிலம்பையு மெனக்குத் தரவேண்டுமென்று கேட்டான். அந்த வித்யுத்கேசியென்ற ராட்சசியும் மனமகிழ்ந்து, வீரா! முன்னுமே யென் சிலம்பைக் கவர்ந்தவனே! [illegible] மற்றொரு சிலம்பை

யும் பெற்றுக்கொள்ளென்று சிலம்பையும், வித்யுத்பிரபை என்கிற தன்பெண்ணையு மவனுக்குக்கொடுத்துத், தன்மருமகனாகிய அவனுக்கு ஒருசொர்ணதாமரைமலரையுங் கொடுத்தாள். அசோகதத்தன் தன்மாமியாரிடத்தில் செலவுபெற்று அந்தப்பெண்ணையு மழைத்துக்கொண்டு இராஜனிடம்வந்தான். அதுகண்டஇராஜன் அவனுடையதைரிய வீரங்களுக்காக அவனை மெச்சிக்கொண்டான். பின்பு, அசோகதத்தன் தன்மனைவியாகிய வித்யுத்பிரபையோடு சுகமாக வாழ்ந்து வருகையிலொருநாள் அவளைப்பார்த்துப் பெண்ணே, உன்தாயார் இந்தச் சொர்ணபுஷ்பங் கொடுத்தாளே; அதுஅவளுக்கெப்படிக்கிடைத்தது? இதுமாதிரியான மலர்கள் எங்கேஅகப்படும் என்று கேட்டான். வித்யுத்பிரபை யானவள், பிராணநாதா! கபாலஸ்போட னென்கிற வேதாள சக்கிரவர்த்திக்கு ஒருதிவ்யமான தடாகமிருக்கிறது. அதிலனேகமான சொர்ணதாமரைமலருண்டு. அங்கே உமது மாமியார்ஜலக்கிரீடை செய்யப்போனகாலத்தில் ஒருமலர் கொண்டுவந்தாள் என்றுசொல்ல, அசோகதத்தன் அப்படியானால் என்னை அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டு போவென்று சொல்ல, அவள் அப்படியே யிந்தச் சொர்ணதடாகத்தருகிற் கொண்டு போய்விட்டாள். பிறகு அசோகதத்தன் குளத்திலுள்ள சொர்ணமலரைப் பறிக்கத்தொடங்குகையில், அங்கே காவலாயிருந்த வேதாளங்கள் மறிக்க, அவன் அவர்களைக் கொல்ல, அதுகேட்ட கபாலஸ்போடன் தன் சேனைகளோடு சண்டைக்குவந்தான். அசோகதத்தன் கபாலஸ்போடனையுங் கொல்லத் தொடங்குகையில், விந்ருப்திகௌதுகன் என்கிற வித்யாதரராஜன் விமானத்தின் மேலேறிவந்து, அசோகதத்தா! இந்தஅநியாயமான காரியத்தைச் செய்யமுயலாதே என்று கூற, விமானத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்த வித்தியாதர ராஜனைப் பார்த்தமாத்திரத்தில் அசோகதத்தனுக்கு மனிதரூபம்போய் திவ்யாபரண பூஷிதமான வித்யாதரசொரூபம் வரச் சாபமும் நீங்கி, விமானத்திலேறினன். அப்பொழுது விந்ருப்திகௌதுகன் அசோகதத்தனைப் பார்த்து, அப்பா சுகர்ண! உன்சகோதரனான சுதரிசனன் காலவ மஹாரிஷி புத்திரியைப் பலாத்காரஞ் செய்த பாபத்தினாலே சாபம் பெற்று வேதாளமானன். நீயுமந்தச் செய்கைக்குடன் பட்டிருந்ததனாலுனக்கும் சாபம் வந்தது. நீ அற்பமான பாபம் செய்தபடியால் என்னைக்காணும்போது உனக்குச் சாபவிமோசனமென்று காலவ மஹாரிஷியானவர் காலவெல்லையிட்டிருந்தார். உன் சகோதரன் சாபத்துக் கெல்லை கூறவில்லை. ஆகை

யால் சாபம்நீங்கின நீ யென்னுடனேகூடச் சொர்க்கம் வந்துவிடு என்றான். சுகர்ணன் அதுகேட்டு வித்தியாதராதிபதியைப் பார்த்து ஐயா! என்மூத்த சகோதரனை விட்டுவிட்டுச் சகல சுகங்களும் நிறைந்த சொர்க்கத்துக்கு நான் போகமாட்டேன். என்சகோதரனுடைய சாபம் நீங்கும் மார்க்கத்தை நீர் எனக்குச் சொல்லவேண்டுமென்று கேட்க, வித்தியாதராதிபதி நீங்குதற்கரிய சாபத்தை யாரால் நீக்கமுடியும்? ஆனாலும் பூர்வம் பிரமதேவர் சனகாதிகளுக்குச் சொன்ன அதிக ரகசியத்தை யுனக்குச்சொல்லுகிறேன். கேள்; சகல தீர்த்தங்களும் நிறைந்த புண்ணியமான தென்சமுத்திரக் கரையில் சக்கிரதீர்த்தத்தின் சமீபத்தில் பார்த்தமாத்திரத்தில் சகல பாபங்களையும் விலக்கத்தக்க பெருமையுள்ள தீர்த்தமொன்றிருக்கிறது. அதில் ஸ்நானஞ் செய்வதினால் வருகிற புண்ணியபலன் இவ்வளவென்று சொல்லமுடியாது, உன் தமையன் அதில் ஸ்நானம் பண்ணினால் அவனுக்குக் காலவ மஹாரிஷியின் சாபத்தினால் வந்த வேதாளரூபம் நீங்கிப்போம், என்று சொன்னதைச் சுகர்ணன் கேட்டுத், தன் சகோதரனை யழைத்துக்கொண்டு, பிரமதேவரால் சனகாதியர்க்குச் சொல்லியதும், சக்கிரதீர்த்தத்துக்குத் தென் புறத்திலும் கந்தமாதன பர்வதத்துக்கு வடக்கிலும் உள்ள தீர்த்தத்தருகில் வந்து, சகோதரனைப் பார்த்து, அண்ணா, காலவ மஹாரிஷியின் கோரமான சாபம் நீங்குவதற்காக இந்த உத்தம தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணும் என்று சொன்னான். கேளுங்கள் ரிஷீசுவரர்களே! அந்தச் சமயத்தில் அந்தத் தீர்த்தத்தின் நீர்த்துளிகள் காற்றினால் வேதாளத்தின் மேற்பட்ட மாத்திரத்தில் வேதாள சொரூபம் விலகிப் பழைய பிராமணவடிவம் வந்துவிட்டது. பிறகு சங்கற்பஞ் செய்துகொண்டு அந்தத் தீர்த்தத்தில் தனது மானிடத்தன்மை நீங்குவதற்காக ஸ்நானஞ் செய்து எழுந்தமாத்திரத்திலே திவ்யமான வித்தியாதரசொரூபம் வந்துவிட்டது. உடனே திவ்யாபரண பூஷிதனாகித், தேவஸ்திரீகள் தன்னைச் சூழ்ந்துவரத் தன் சகோதரனோடு தேவவிமானத்திலேறி, யந்தத் தீர்த்தத்தைப் புகழ்ந்துகொண்டு, விந்ருப்தி கௌதுகனை முன்னிட்டுக்கொண்டு சொர்க்கலோகம் போய்ச்சேர்ந்தான். கேளுங்கள் முனிவர்களே! அந்தத் தீர்த்தத்தின் துளிகள் பட்ட மாத்திரத்தில் வேதாளத்துருவம் நீங்கினதினால் அதற்கு வேதாளவரதமென்று பேராயிற்று. அந்தத்தீர்த்தத்தில் எப்பொழுதாவது ஸ்நானம் பண்ணினவர்கள் ஜீவன் முத்தர்களாய் விடுவார்கள்.

இந்தத் தீர்த்தத்துக்குச் சமானமான தீர்த்தமுங் கிடையாது. இனிமேல் உண்டாகப்போவதுமில்லை. இந்தச் சுபகரமான வேதாளவரதீர்த்தத்தில் சங்கல்ப பூர்வமாய் ஸ்நானம் பண்ணி நியமத்துடன் பிதுர்க்களுக்குப் பிண்டதானஞ் செய்யவேண்டியது. முனிவர்களே! இம்மாதிரியாக அந்தத்தீர்த்தின் வரலாற்றையும், அதன் பெயரின் காரணத்தையு முங்களுக்குச் சொல்லிவிட்டேன். இச்சரித்திரத்தைக் கேட்டவர்களும், படித்தவர்களும் முத்தராவார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.

பத்தாவது.

பாபவிநாச தீர்த்தமகிமை யுரைத்த

அத்தியாயம்.

பிராமணோத்தமர்களே! இந்த வேதாளதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டுக் கந்தமாதன மலைக்குப் போகவேண்டும். இந்தக் கந்தமாதன பர்வதமானது சமுத்திரத்தில் சேதுரூபமாயிருக்கின்றது. இது பிரமலோகத்துக்குப் போகுமார்க்கமாக விசுவகர்த்தாவால் நியமிக்கப்பட்டது. இந்தப்பருவதத்தில் அநந்தமான புஷ்கரணிகளும், நதிகளும், சமுத்திரங்களும், புண்ணியவனங்களும், ஆசிரமங்களும், வேதாரணிய முதலான க்ஷேத்திரங்களும், வசிஷ்டர் முதலான மஹாரிஷிகளும், சித்தர், சாரணர், கின்னரர்களும், பூதேவியோடுகூட ஸ்ரீமஹாவிஷ்ணுவும், சாவித்திரி, சரஸ்வதியோடு பிரமதேவரும், விக்நேசுவரரும், சுப்பிரமணிய கடவுளும், இந்திரன் முதலான தேவர்களும், ஆதித்தியாதி நவகிரகங்களும், அஷ்டவசுக்களும், பிதுர்த்தேவதைகளும், லோகபாலர்களும், கௌரியோடுகூட ஸ்ரீபரமேசுவரரும், மற்றுமுள்ள தேவகணங்களும், இரவும் பகலும் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். மஹாபாதககூட்டங்களையெல்லாம் நாசம் பண்ணுகிற இந்தப்பருவதத்தில் கின்னர ஸ்திரீகளெல்லாரு மெப்பொழுதும் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அதன் சிகரத்தில் வாசம்பண்ணுகிற சித்த

சாரணஸ்திரீகள், எப்பொழுதும் பார்வதிகாந்தனாகிய பரமசிவனைப் பூஜை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இப்பர்வதத்தைக் கண்டவுடனே மனிதர்களுக்கு ஞானம் உண்டாகிறது. இந்தக் கந்தமாதன பருவதத்தினின்றும் வீசுகிறகாற்று மேலே பட்டமாத்திரத்தில் அநேகம் பிரமஹத்தி பாதகங்களும், போகத்தகாத இடங்களுக்குப் போவதனாலுண்டான பாபங்களும் உடனே நசித்துப்போகின்றன. இந்தக் கந்தமாதன பர்வதம் முன்பு அலைகளாற் பொங்கிக்கொண்டிருக்கிற சமுத்திரமத்தியில் ரிஷீசுரர்களாலே மாத்திரம் தரிசிக்கத்தக்கதாயிருந்தது. பின் ராமன் சேது கட்டினபொழுது சமுத்திரமத்தியிலிருந்த கந்தமாதனமானது யாவருங்கண்டு தரிசிக்கும்படியாயிற்று. அப்படிப்பட்ட கந்தமாதனத்தைப் பார்த்துச் "சமஸ்ததேவர்களுக்கும் வாசஸ்தலமாயுள்ள புண்ணியபருவதமே, விஷ்ணுவாதி தேவர்களும் கூட உன்னை சிரத்தையுடன் வணங்குகிறார்கள். அப்பேர்ப்பட்ட உன்பேரில் நான் கால்வைத்து நடக்கிறேன். நீ யென்மேலே தயவுசெய்து அந்தக்குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். உன் உச்சியில் வசிக்கிற சங்கரனை நான் தரிசிக்கும்படி செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு மெதுவாக நடக்கவேண்டும். பிறகு அதனருகிலுள்ள சமுத்திரத்தில் ஸ்நானம் பண்ணிக் கந்தமாதன பர்வதத்தில் கடுகளவாவது பிண்டம் போடவேண்டும். அதனால் அவனது பிதுர்த்தேவதைகள் கற்பாந்தம் வரையில் திருப்தியடைகிறார்கள். வன்னியிலையளவு பிண்டம் போட்டாலும் சொர்க்கத்திலுள்ள பிதுர்க்கள் மோட்சத்தையும், நரகத்தில் அவஸ்தைப்படுகிற பிதுர்க்கள் சொர்க்கத்தையுமடைகிறார்கள். அந்த மலையின்மேலே லோகபிரசித்தி பெற்றதும், சர்வதீர்த்தோத்தமமுமான பாபநாசமென்கிற ஒரு புண்ணிய தீர்த்தமிருக்கிறது. அதை நினைத்தமாத்திரத்தில் அவனுக்குக் கர்ப்பவாசமே கிடையாது. அந்தத் தீர்த்தத்தில் எவனும் தன் பாபநிவர்த்திக்காக ஸ்நானம் செய்யவேண்டும். ஸ்நானஞ் செய்தவன் தடையில்லாமல் வைகுண்டத்தையடைகிறான்.

இப்படிச் சொல்லிவந்த சூதமுனிவரைப் பார்த்து ரிஷீசுவரர்கள், வியாசமஹரிஷியிடத்தில் கேட்டுத்தெரிந்த உமக்கு எல்லாந் தெரியுமாகையால் அந்தப் பாபநாச தீர்த்தமகிமையை எங்களுக்குச் சொல்லியருளவேண்டும் என்று வினவச், சூதர் சொல்லத் தொடங்கினார். பிராமணோத்தமர்களே! ஹிமோத் பருவதத்தின்

பக்கத்தில் இருக்கிற பிரமாசிரமத்தில் நடந்த புண்ணியகதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

பிரமாசிரமமென்னுமிடத்திலிருக்கிற அநேகவிருட்சங்களடர்ந்ததும், பலவகையான செடிகொடிகள் நிறைந்ததும், பலமிருகங்களுக்கு இருப்பிடமானதும், சித்தர், சாரணர்கள் கூடியிருக்கப்பெற்றதும், பூஞ்சோலைகளுள்ளதும், அநேகவிரதிகள் வசிக்கப்பெற்றதும், அளவில்லாத தபசிகளால் விளங்கப்பெற்றதும், சூரியன், அக்கினிகளுக்கு ஒப்பான அநந்தமான தபவிரதங்களையுடைய பிராமணோத்தமர்கள் மிருந்திருப்பதும், மிதபோஜன முடையவர்களாயும், யோகாநுஷ்டான முள்ளவர்களாயும், வேதாத்தியயன சம்பன்னர்களாயும், வேதமார்க்கந்தவறாதவர்களாயு மிருக்கிற தீட்சிதர்களாற் சூழப்பெற்றதும், தத்தம் வருணாசிரமாநுஷ்டானந்தவறாத பிரமசாரிகள், கிருகஸ்தர், வானப்பிரஸ்தர், சந்நியாசிகள், வாலகில்லியர்கள், பரிசுத்தமான மரீசிபர்கள் முதலிய ரிஷிக்கூட்டங்களால் நிறைந்ததுமான ஒரு புண்ணிய ஆசிரமமிருந்தது. நீடமதியென்கிற தைரியமுள்ள ஒரு சூத்திரன் பிராமணர்கள் வசிக்கிற அந்த ஆசிரமத்துக்கு வந்து, அந்தப் பிராமணர்களுக்கு ஷாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அவர்களாலடையத்தக்க மரியாதையைப் பெற்றுக்கொண்டு, யாகயக்ஞங்கள் செய்து பிரமதேஜஸால் விளங்குகிற தேவர்களுக்குச் சமானமான அந்த ரிஷிகணங்களைக்கண்டு சந்தோஷங்கொண்டு, அவர்களைப்போலத் தானும் யாகஞ்செய்யவிரும்பி, அந்த ரிஷித்தலைவரிடத்திற்போய் சுவாமீ! கிருபாமூர்த்தியே! நானுமக்குவேண்டிய பணிவிடைகளைச்செய்கிறேன்; நானும் யாகஞ்செய்ய விரும்புகிறேன்; எனக்கு யாகதீட்சை செய்துவைத்துக் காப்பாற்றும்; நான் கீழ்ப்பட்ட சூத்திரசாதி; தங்களுக்குச் சிசுருஷை செய்யவந்திருக்கிறேன்; கருணைகூர்ந்தருளுமென்று பிரார்த்தித்தான்.

அது கேட்ட ரிஷித்தலைவரும், அப்பா! ஈனமான சூத்திரஜாதியிற் பிறந்தவனுக்கு யாகதீட்சை செய்துவைக்கலாகாது? உனக்கிஷ்டமிருந்தால் சிசுருஷைசெய்துகொண்டிரு. கீழ்ச்சாதியானுக்குபதேசஞ் செய்துவைக்கும் ஆசாரியருக்கும் பெரியதோஷம் வரும். புத்திசாலியானவன் சூத்திரனுக்கு யாகம் பண்ணிவைக்கக்கூடாது. வியாகரணம், நாடகம், காவியம், புராணம், இதிகாசம், அலங்காரம் இவைகள் ஒன்றையுஞ் சொல்லிவைக்கக்கூடாது. அப்படி யொருபிராமணன் சூத்திரனுக்குச் சொல்லிவைப்பானானால் அந்தப் பிராமணனைப் பிராமணர்கள் கிராமத்தைவிட்டுத் துரத்திச் சண்டாளனைப்போல ஒதுக்கிவைக்கவேண்டும். படித்த சூத்திரனையும் தூரத்தில் தள்ளிவைக்கவேண்டும். ஆகையால் அப்பா! நீ சிரத்தையோடு பிராமணர்களுக்குச் சிசுருஷை செய்வதே தகுதி. சூத்திரன் பிராமணருக்குச் சிசுருஷை செய்யவேண்டியதென்றே மனுவாதிஸ்மிருதிகர்த்தர்களாலும் விதிக்கப்பட்டிருக்கிறது. உனக்கியல்பாக ஏற்பட்ட கர்மத்தை விடுவது உனக்கு நியாயமல்ல என்று முனிவர் சொன்னதைக் கேட்ட சூத்திரன், இப்பொழுது நாமென்ன செய்கிறது? நமக்கு யாகஞ்செய்ய விருப்பமிருக்கிறது. எப்படி ஞானமடையத்தக்கதோ அந்த மார்க்கத்தைத் தேடுவோமென்று மனதிலுறுதி செய்துகொண்டு, அவ்வாசிரமத்துக்கு வெகு தூரத்தில் ஒரு ஆசிரமம், தேவாலயம், புண்ணியமடங்கள், புஷ்பத்தோட்டம், தடாகங்கள் முதலானவைகளையுஞ் செய்துமுடித்துக் கந்தமூல பலாதிகளைப் புசித்து, இந்திரியங்களையடக்கி ஏகாந்த விரதஹோமாநுஷ்டானங்களையுஞ் செய்து, உபவாசஞ்செய்து, வந்த அதிதிகளுக்குப் பூஜைசெய்துகொண்டு, வெகுகாலங்கழித்துவந்தான். ஒரு நாள் சத்தியவந்தரும், கர்க்கர்குல சிரேஷ்டருமான சுமதி யென்ற வொருபிராமணோத்தமர் அந்த ஆசிரமத்துக்கு வந்தார். அப்பொழுது அவன் வாருங்களென்று நமஸ்கரித்து, கந்தமூலபலாதிகளாலுபசரித்துத் திருப்திசெய்வித்து, யோகக்ஷேமங்களை விசாரித்து, புண்ணியகதைகளைச்சொல்ல, அவனை யந்தப்பிராமணரும் ஆசீர்வாதமுதலியகூறி மகிழ்வித்தார். இப்படியே அவர் அடிக்கடி வருவதுவழக்கமாயிற்று. அந்தச் சூத்திரனிடத்தில் விசுவாசமுடையவரானதால் அவன் வார்த்தையைத் தட்டுவதில்லை. இப்படிச் சிநேகத்தினால் வசப்பட்ட பிராமணரைப்பார்த்து ஐயா கர்மவிதிகளும், பிதுர்க்காரியவிதியும், தேவகாரியவிதிகளும், மஹாளயவிதியும், அஷ்டகாசிராத்தவிதியும், இன்னுமற்றுமுள்ள வைதிக கர்மவிதிகளையும் எனக்குபதேசம் பண்ணித் தாங்களே யெனக்குக் குருவாயிருந்து நடத்திவைக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, அவரும் அப்படியே பிதுர்க்காரியாதிகளையுஞ் செய்வித்தார். இப்படியே வெகுகாலமாகச் சூத்திரனுக்கு வைதிக கிருத்தியங்களைச் செய்வித்துக்கொண்டு அவனாற் போஷிக்கப்பட்டு வந்த பிராமணனைச் சகலபிராமணர்களும் விலக்கிவிட்டார்கள். பிறகு அவனிறந்து போக யமதூதர்கள் அவனை

யமலோகங்கொண்டு போய்க் கொடிய நரகங்களில் தள்ள, பல கற்பகாலம் நரகத்தில் அவதிப்பட்டுக், கடைசியில் ஸ்தாவரமாகவும், கழுதையாகவும், மலத்தைப்புஜித்து ஜீவிக்கிற பன்றியாகவும், நாயாகவும், காக்கையாகவும், சண்டாளனாகவும், சூத்திரனாகவும், வைசியனாகவும், க்ஷத்திரியனாகவும் பிறந்து, பலசாலிகளால் வதை செய்யப்பட்டிறந்து;பின்பு பிராமணனாக ஜனித்து, ஏழாவது வயதில் தந்தையால் உபநயனஞ்செய்யப் பெற்றுத், தன் குலாசாரத்தைக் கைவிடாமல் வளர்ந்து வருங்காலத்திலொருநாள் வனத்துக்குப் போனபோது ஓர் பிரமராட்சசுபிடித்துக்கொண்டது. அதனால், பித்துப்பிடித்தவன்போலச் சில சமயம் அழுகிறதும், ஓடுகிறதும், சுற்றுகிறதும், இடறிவிழுகிறதும், உரக்கச் சிரிக்கிறதும், ஐயோ ஐயோ வென்கிறதுமாகி வைதிககிருத்தியங்களை மறந்துவிட்டுத் திரிந்துகொண்டிருந்தான். இப்படியாக இருந்த தன் குமாரனைத் தந்தை கண்டு மெத்தவருந்தி, அவனை யழைத்துக்கொண்டு அகஸ்தியமுனிவராசிரமம் போய், அவரைப்பணிந்து, சுவாமீ! இவன் எனக்கு ஒரேகுமாரன்; பிதுர்க்கிருத்தியஞ்செய்ய இவனைத் தவிர வேறுபுத்திரனில்லை; இவனைப்பிரமராட்சசு பிடித்துக்கொண்டு வருத்துகிறது; அது இவனைவிட்டு விலகவும், இவன் சுகமடையவு முபாயத்தைக் கூறியருளவேண்டும். தேவரீருக்குச் சமானமான தவசிரேஷ்டர் மூன்றுலோகங்களிலுமில்லை; சிவபக்தாக்கிரேசரென்று மஹரிஷிகள் சொல்லுகிறார்கள். உம்மைத்தவிர என் புத்திரனைக் காப்பாற்றுவோர் வேறொருவருமில்லை; தங்களைப்போன்ற சாதுக்கள் தயாசீலர்களாதலால் என் புத்திரனிடங் கிருபை கூர்ந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தான்.

அதுகேட்ட கும்பயோனியும் சிறிதுநேரந்தியானத்திலிருந்து, பிராமணனைப்பார்த்து, ஐயா பிராமணரே! உமது குமாரன் பூர்வஜென்மத்தில் சுமதியென்ற பிராமணன்; ஒரு சூத்திரனுக்கு வேதமந்திரங்களை யுபதேசித்து வைதிக கிருத்தியங்களைச்செய்வித்தபடியால் அநேககோடி கற்பகாலம் நரகத்தில்கிடந்து, பின் ஸ்தாவராதியோனிகளில் ஜனித்து, இப்பொழுது கர்மசேஷத்தால் பிராமணனாய்ப்பிறந்து, யமனாலனுப்பப்பட்ட பிரமராட்சசால் பீடிக்கப்பட்டு அலைகிறான்; அந்தப் பிரமராட்சசு நீங்குமுபாயமொன்று சொல்கிறேன் கேளும். தெட்சண சமுத்திரக்கரையில் தேவர்கள் சேவிக்கும்படியான கந்தமாதனபருவதமென்றொரு பரிசுத்தமலையுண்டு. அதனுச்சியில் சகலபாபங்களையும் போக்குகிற பரிசுத்தமான பாபநாசனமென்ற புண்ணியதீர்த்தம் ஒன்றுண்டு; அது பூதபிரேதபிசாச பிரமராட்சச வேதாளாதி துர்த்தேவதைகளாலுண்டாகும் துன்பத்தையும், தீராதரோகங்களையும் நிவர்த்திக்கு மகிமையுள்ளது; ஆகையால் உமது குமாரனையழைத்துக்கொண்டு சேதுமத்தியிலிருக்கிற அந்தத் தீர்த்தத்தில் ஆசாரத்தோடு மூன்றுநாள் அவனை ஸ்நானம் பண்ணுவித்தால் பிரமராட்சசு விலகிப்போம்; இதைத்தவிர வேறு உபாயம் பூலோகத்தில் கிடையாது. ஆகையால் பிராமணரே! தாமதஞ்செய்யாமல் சீக்கிரமாக முக்தியைக்கொடுக்கும் இராமசேதுவுக்குப்போய் உமது புத்திரனை ஸ்நானஞ்செய்வியும் போமென்றார். அது கேட்ட பிராமணன் அகஸ்தியமுனிவருக்குத் தண்டாகாரமாக நமஸ்கரித்து,அநுக்ஞைபெற்றுத் தன் குமாரனையழைத்துக்கொண்டு கந்தமாதனம்போய்ச், சங்கற்பபூர்வமாக பாபநாசன தீர்த்தத்தில் மூன்றுநாள் ஸ்நானம் பண்ணுவித்துத், தானும் ஸ்நானஞ்செய்தான். அதில் ஸ்நானஞ்செய்த பிரபாவத்தால் அந்தப் பிராமணபுத்திரன் பிரமராட்சசும் ரோகங்களும் நீங்கி யாரோக்கியமடைந்து, சுந்தரசரீரமுடையவனாய்ச் சகல போகபாக்கியங்களையுமனுபவித்துத் தேகாந்தத்தில் முக்தியடைந்தான். அவனது தந்தையும் பாபநாச தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்த விசேஷத்தினால் தேகாந்தத்தில் மோட்சபதம் பெற்றான். சுமதியிடத்திலுபதேசம் பெற்ற சூத்திரனும் அநேக காலம் பலபல நரகங்களையனுபவித்து, அநேக ஈனஜன்மங்களெடுத்துக் கடைசியில் கந்தமாதன பருவதத்தில் கழுதையாகப்பிறந்து திரிகையிலொருநாள் தண்ணீர் குடிக்கும்பொருட்டுப் பாபநாசன தீர்த்தத்துக்குவந்து குளித்து நீர்குடித்தது. உடனே கழுதை வடிவம் நீங்கி தேவசொரூபமடைந்து, திவ்ய வஸ்திராபரண சந்தமாலாதி பூஷணாலங்கிருதனாய்த் தேவவிமானத்திலேறி; அப்சரஸ்திரீகள் சாமரைவீசக், குடைபிடிக்க அமராபதிபோய்ச் சேர்ந்தான்.

கேட்டீர்களோ முனிவர்களே! இந்தப் பாபநாசன தீர்த்தம் சொர்க்கமோட்சங்களைக் கொடுக்கத்தக்கதும், சகல பாபங்களையும் போக்கத்தக்கதும், பிரம, விஷ்ணு, மகேசுரன் முதலானவர்களாற் சேவிக்கப்பட்டதுமான மகிமையுடையது. இது பாபங்களை நிவர்த்தி செய்யுந்தன்மையுடையதாகையாலிதற்குப் பாபநாசன தீர்த்தமென்றுபேர். கொடியதான துர்க்காரியங்களைச் செய்த பிராமண

வுக்கும், ருத்திரனுக்கும் மோட்சங்கொடுத்ததான பாபநாசன தீர்த்த ரகசியத்தை யுங்களுக்குச் சொல்லிவிட்டேன்.

பத்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

பதினோராவது

சீதாதீர்த்த மகிமையில் இந்திரன் பிரம்மஹத்தி நீங்கினகதை உரைத்த அத்தியாயம்.

சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களைப் பார்த்துச்சொல்லுகிறார். கேட்டீர்களோ முனிவர்களே! சமஸ்தமான பாபங்களையு நிவர்த்தி செய்கிற பாபநாசன தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிவிட்டுச் சீதாதீர்த்தத்துக்குப்போய், நியமத்தோடு அதில் ஸ்நானஞ்செய்யவேண்டும். இந்தப் பிரமாண்டத்திலிருக்கிற புண்ணிய தீர்த்தங்களெல்லாந் தாங்கள் பரிசுத்தமாவதற்காக இந்தச் சீதா தீர்த்தத்தில் வசித்துக்கொண்டிருக்கின்றன. இப்படியே காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களும் தங்களுடைய பாப நிவாரணார்த்தமாக இந்தச் சீதாதீர்த்தத்தை இரவும் பகலும் சேவித்துக் கொண்டிருக்கின்றன. விஷ்ணுவினிடத்தில் பிரியமுள்ள பஞ்சமஹாபாதகங்களை நாசஞ்செய்கிற பஞ்சமுகங்களையுடைய பரமசிவனும் அதனிடத்தில் வசிக்கிறார். பூர்வத்தில் இந்திரனிதில் ஸ்நானம் பண்ணி பிரமஹத்தி விமோசனமடைந்தான். இப்படிச்சொல்லி வந்த சூதமுனிவரைச் சௌனகாதிமஹரிஷிகள் பார்த்து ஓ முனி சிரேஷ்டரே! இந்திரனுக்கேன் பிரமஹத்திவந்தது? சீதாதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினதினாலெப்படி முக்தனானான்? என்று வினவ, சூதமுனிவர் சொல்லுகிறார். முற்காலத்தில் கபாலாபரணனென்கிற ஒரு இராக்ஷதன் சகல தேவர்களாலும்கொல்ல முடியாத

வரம் பெற்றிருந்தான். அவன் ஜயந்தமென்ற பட்டணத்தில் சவபட்சணனென்றமந்திரியோடு ரத கஜ துரக பதாதிகளாகிய நூறு அக்குரோணிசேனைகளையுடையவனாய் வசித்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் சவபட்சணனை நோக்கி, ஓ மந்திரீ! நீ மந்திர சாஸ்திரத்தில் வல்லவனான படியால் நாம் இந்திரலோகத்துக்குப் போய்த்தேவர்களைச் சண்டையில் ஜயித்து, இந்திரனுடைய அழகான அரண்மனையிற் சைனியத்தோடும் தங்கியிருந்து, அவனுடைய பூஞ்சோலையில் அரம்பாஸ்திரீகளுடன் கேளிவிலாசமாயிருப்போம் என்றுசொல்லச், சவபக்ஷணன் அப்படியே ஆகட்டுமென்றான். கபாலாபரணன் துர்மேதஸ் என்கிற சூரனை தன் புத்திரனைத் தன் பட்டணத்திலிருத்திவிட்டு தனது நால்வகைச் சேனைகளையுந் திரட்டிக்கொண்டு, அந்தச் சேனைகள் நடப்பதனாலுண்டாகிய தூளிகளால் ஆறுகளும், சமுத்திரங்களும் வற்றவும், பருவதங்களெல்லாம் பொடிப்பொடியாயிடிந்து உதிரவும், வாத்திய கோஷத்தினாலே பூமியும் ஆகாசமும் எதிரொலியிடவும், குதிரை கனைத்தலாலும், யானை கர்ஜனையாலும், ரதசக்கிரங்களின் சப்தத்தாலும், பதாதிகளுடைய சிங்கநாதத்தாலும் திக்குயானைகளினுடைய காதுகள் செவிடுபடவும், தேவர்களோடு சண்டை செய்வதற்காக அமராபதிபோய்ச் சேர்ந்தான். ராட்சச சேனைகளின் ஆரவாரத்தைத் தேவேந்திரன் முதலான தேவர்கள் கேட்டு அவர்களோடு சண்டைசெய்வதற்காக நகரத்தைவிட்டு வெளியில் வர உலகத்தார் முன்பின் கேட்டறியாத யுத்தம் நடந்தது. அதில் தேவர்கள் ராட்சதர்களையும், ராட்சதர் தேவர்களையுமடித்துக் கொன்றார்கள். பிறகு கபாலாபரணன் இந்திரனோடும், சவபட்சணன் யமனோடும், கைசிகன் வருணனோடும், நதிராட்சன் குபேரனோடும், கபாலாபரணனுடைய சகோதரர்களான மாம்சப்பிரியன், மத்திய சேவி, தநாதிருஷ்டி, பயாபஹன், என்பவர்கள் அசுவினிதேவர்கள், அக்கினிவாயுக்களோடும் எதிர்த்து யுத்தஞ்செய்தார்கள். யமன் தன் காலதண்டத்தினால் சவபட்சணனை யடித்துக்கொன்று அவனோடு கூடிவந்த முப்பது அக்குரோணி சேனைகளையுமடித்தான். வருணன் தன் கைக்கத்தியால் கைசிகன் சிரசைவெட்டினான். குபேரன் கதாயுதத்தால் நதிராட்சனைச் சாய்த்தான். அசுவினிதேவர்களும் அக்கினிவாயுக்களும் கபாலாபரணனுடைய சகோதரர்களை யடித்து மடித்தார்கள். இவ்விதம் ஒரு முகூர்த்தத்துக்குள்ளாகத் தன்னுடைய நூறு அக்குரோணிசேனைகளு மடிந்ததைக்கண்டு, கபா

லாபரணன் தன் வில்லைக் கையிலேந்தி இந்திரனைப்பார்த்து, அடா இந்திரா! ஓடாதே, ஓடாதே யென்றுகூவி தீட்சணமும் வேகமுமுடைய ஐந்துபாணங்களால் அவன் தலையிலடித்தான். தேவேந்திரனும் அந்த அம்புகள் தன் மேற்படவொட்டாம லம்புகளால் தூளாய்நொறுக்கி விட்டான். பின் கபாலாபரணன் சூலாயுதத்தை யிந்திரன் மேலெறிய இந்திரன் அதையும்தன் சத்தியினால் துண்டித்தான். பிறகு கபாலாபரணன் ஐயாயிரம் துலாம்பாரமும், நூறு முழநீளமுமுள்ள இரும்புதண்டத்தினால் இந்திரன் மார்பிலடிக்க அவன் சோர்ந்து தன் தேரிலே விழுந்துவிட்டான். அது கண்ட பிரகஸ்பதிபகவான் மிருதசஞ்சீவினியென்கிற மந்திரத்தினாலிந்திரனைப் பிழைப்பிக்க, இந்திரனெழுந்து, ஐராவதத்தின் மேலேறிக்கொண்டு மஹாகோபத்துடன் தன் வச்சிராயுதத்தால் கபாலாபரணனை யவன் தேர்குதிரை சாரதிகளோடுந் தூள்தூளாகும்படியாக அடித்து முடித்தான். கபாலாபரணனிறந்தபின் அவனால் வெகு காலங் கஷ்டப்பட்ட உலகத்துக்கு க்ஷேமமுண்டாயிற்று. இந்திரனைப் பிரமஹத்தி பிடித்துக்கொண்டது. அந்தப் பிரமஹத்தியானது கோரரூபத்தோடு பத்துத்திக்குகளும் எதிரொலிக்கும்படியாகப் பேரொலியிட்டுக்கொண்டு பின்தொடர்ந்தது என்று சொல்லிவந்த சூதரைச் சௌனகாதிகள் நோக்கி ஐயா! கபாலாபரணன் இராட்சதன் தானே பிராமணனல்லவே; அவனைக்கொன்றதனால் இந்திரனுக்குப் பிரமஹத்திவந்த காரணமென்ன? என்று கேட்கச், சூதர் முனிவர்களே! ஒரு ஆச்சரியமான இரகசியஞ் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று சொல்லுகிறார்.

பூர்வகாலத்தில், விந்தியமலைச்சாரலில் திரிவக்திரன் என்கிற ஒரு இராட்சதனிருந்தான். அவனுக்குச் சகல நற்குணங்களும், பேரழகும் நிறைந்த சுசீலையென்கிற ஒரு மனைவியிருந்தாள். அவள் ஒரு நாள் சர்வாலங்காரத்துடன் மலர்ந்த முகமுடையவளாய் அந்தச்சாரலில் உலாவிவரும்போது, அந்தக் காட்டில் தவம்புரிந்து கொண்டிருந்த வேதாத்தியயன சீலரான சுசியென்ற முனிவரது ஆசிரமத்துக்குச் சமீபமாகவந்தாள். அந்த ரிஷியானவர் அவளைக் கண்டு மதிமயங்கிக், காமன் கணையால்நொந்து, அவளருகில்வந்து, அம்மா வாரும்; நீர் யாருடையமனைவி? இந்தப்பயங்கரமான காட்டில் வரவேண்டியகாரணமென்ன? மிகுதியுஞ் சளைப்படைந்திருக்கிறபடியால் நீரிந்த ஆசிரமத்தில் வசித்துக்கொண்டிரும் என்று

சொல்ல, அவள் சுவாமீ! நான் திரிவக்திரன் என்னும் ராட்சதனுடைய மனைவி; என் பெயர் சுசீலை. நான் புஷ்பம் கொய்யவிருப்பங் கொண்டு இங்கே வந்தேன். எனக்குப் புத்திரனில்லாததைக் கண்டு என்கணவன் சுசி என்னும் முனிவரைப் பிரார்த்தித்துப் புத்திரப்பேறடை யென்று கட்டளையிட்டதனால் நான் தங்களிடம் நாடிவந்தேன். ஆகையால் என் பேரில் கருணைசெய்து எனக்குப் புத்திரபாக்கிய மருளவேண்டும் என்றாள். சுசியானவர் பெண்ணே உன்னிடத்திலெனக்கு விருப்பமுண்டாயிருக்கிறது. என் மனோரதத்தை நிறைவேற்றென்று கூறி மூன்றுநாள் அழகான அப்பெண்மணியைத் தழுவிப் பெண்ணே! உன் வயிற்றில் அதிக வீரனான கபாலாபரணன் என்னும் புத்திரனுதிப்பான். அவன் ஆயிரவருஷம் பிரம்மதேவனை நோக்கித் தவஞ்செய்து, இந்திரனைத்தவிர மற்றெவராலுஞ் சாகாதவரம் பெற்று, வெகு காலம் ராச்சியபரிபாலனஞ் செய்வான் என்று வரங்கொடுத்துத் தாம் காசிக்குப் போய்விட்டார். அந்தரிஷிவாக்கின்படி சுசீலையும் வீரவானான புத்திரனைப்பெற்றாள். அவன் தான் இந்திரனால் கொல்லப்பட்ட கபாலாபரணன். அவன் சுசியென்னும் பிராமணனுக்குப் பிறந்தவனானதால் அவனைக்கொன்ற இந்திரனுக்குப் பிரமஹத்திபிடித்தது.

அந்த இந்திரன் எவ்விடத்துக்குப்போனபோதிலும் பிரமஹத்தியுமவனைவிடாமல் பின்தொடர்ந்துபோயிற்று. பிரமஹத்தியால் பின்தொடரப்பட்ட இந்திரன் மிகவும் வருத்தங்கொண்டு, பிரமலோகம் போய்ப் பிரமதேவனைப்பார்த்து, ஐயா லோகநாதா! தீராத பிரமஹத்தி யென்னைத் தொந்தரவு செய்கிறது; அது தொலையும்வழி யெனக்குச் சொல்லியருளுமென்று பிரார்த்தித்தான். அது கேட்ட பிரமதேவனு மிந்திரனைப்பார்த்து அப்பா! கந்தமாதனத்தில் சீதா குண்டமென்றொரு தீர்த்தமிருக்கிறது; இதன் கரையில் சதாசிவனை நோக்கி யாகங்கள்செய்து, அந்தத் தீர்த்தத்தில் நீ ஸ்நானம் பண்ணினால் பிரமஹத்தி நீங்கிப் பரிசுத்தனாகிச், சமஸ்தமான துக்கங்களுமொழிந்து, நீ மறுபடியும் சொர்க்கலோகம் போவாய்; இந்தச் சீதாதீர்த்தம் சகல பாபங்களையும் நீக்கித், துக்கங்களையொழித்துத், தரித்திரங்களைத் தொலைத்துத், தனதானிய சம்பத்துக்களைக்கொடுத்து, வைகுண்டாதிபதவிகளைத் தந்து, முக்தியிற் சேர்க்கும்படியான மகிமையுடையதாகையால் நீ அவ்விடத்தில் கட்டாயம் யாகஞ்செய் என்றுசொல்ல, இந்தி

ரன் கந்தமாதனம் வந்து சீதாகுண்டத்தில் ஸ்நானம்செய்து, அதன் கரையில் யாகஞ்செய்து, பிரமஹத்திதோஷம் விலகித், தன் அமராவதிபட்டணத்துக்குப் போய்ச்சேர்ந்தான்.

ரிஷீசுவரர்களே! கேளுங்கள்; இவ்வகையான மகிமையையுடையது சீதாகுண்டம். சீதாதேவியானவள் தன் கற்புடைமையை ஸ்ரீராமருக்கு விளக்கும்பொருட்டு அக்கினிப்பிரவேசஞ் செய்து, சகல தேவர்களும் பார்த்திருக்கும்படி யாதொரு ஊனமுமில்லாமல் வெளிவந்தபிறகு, உலகக்ஷேமத்தின் பொருட்டுத் தன் பேரால் இந்த உத்தமமான தீர்த்தத்தையுண்டாக்கி, அதில் தான் ஸ்நானம் பண்ணினபடியால் சீதாதீர்த்தமென்று பேர் பெற்றது. இந்தச் சீதாதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவனுக்குச் சகலமனோபீஷ்டங்களும் கைகூடிவருகிறது. கேளுங்கள் முனிவர்களே! சீதாதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிப் பலவகையான தானங்களைச் செய்து, வெகு தட்சணைகொடுத்து, யாகங்களைச் செய்கிறவன் அந்தியத்தில் பரமேசுவர லோகமடைகிறான். இந்தச் சரித்திரத்தைக் கேட்பவரும் படிப்பவரும் இகத்தில் போக போக்கியங்களையடைந்து, மறுமையிலும் சுகத்தையடைவார்கள்.

பதினோராவது அத்தியாயம்

முற்றிற்று.

பனிரண்டாவது

மனோஜவராஜன் மங்களதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து இராஜ்யத்தைப்பெற்ற

அத்தியாயம்.

கேளுங்கள் முனிவர்களே! இந்த மஹாபுண்ணியமான சீதாதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணின்பிறகு, பக்தியுடனே மங்களதீர்த்தத்துக்குப்போகவேண்டும்; இந்த மங்களதீர்த்தத்தில் மஹாவிஷ்ணுவுக்குப் பிரியமான மஹாலட்சுமி ஸதாவஸித்துக்கொண்டிருக்கிறாள். தாரித்திர நிவர்த்தியர்த்தமாக இந்திரன் முதலான தேவர்களெல்லாரும் நித்தியம்வந்துகொண்டிருக்கிறார்கள். இந்தத் தீர்த்தத்தைப்பற்றிய ஒரு புண்ணியகதை சொல்லுகிறேனென்று சூதர் சொல்லத்தொடங்கினார்.

பூர்வகாலத்தில் சந்திரவம்சத்தில் மனோஜவனென்ற ஒரு இராஜன் நாற்கடல் சூழ்ந்த உலகத்தைத் தர்மமாய் அரசாண்டு வருங்காலத்தில், யாகங்களால் தேவர்களையும், அன்னதானத்தால் பிராமணர்களையும், பிரதிவருஷஞ் செய்யும் சிராத்தத்தால் பிதுர்தேவர்களையும் திருப்திசெய்தான். மூன்று வேதங்களையுமோதியுணர்ந்தான். சாஸ்திரங்களை யர்த்தத்தோடு கற்றுத்தெளிந்தான். தனது பராக்கிரமத்தால் சத்துருக்களை ஜயித்தான். சிவவிஷ்ணுக்களிடத்தில் பக்திசெலுத்திவந்தான். நீதிசாஸ்திரங்களைப் பிரியமுடன் கற்றுக்கொண்டான். உத்தமமான மந்திரங்களை ஜபித்துவந்தான். இவ்வகையாகச் சத்துருக்களில்லாமல் உலகையாண்டுவருகையில், புத்திரர்களையும் சம்பத்தையும் நாசமாக்கும் அகங்காரம் அவன் மனதிலுதித்தது. கேளுங்கள் முனிவர்களே! எவ்விடத்தில் அகங்காரமுண்டாகிறதோ அவ்விடத்தில் காம குரோத லோப மோக மத மாற்சரியங்களும், பிறரை யிம்சித்தலும் உண்டாகின்றன. இந்தக் குணங்களெவனிடத்திலிருக்கின்றனவோ அவன் தன் புத்திரபௌத்திரர்களோடு சகல சம்பத்துக்களையுமிழந்துவிடுகிறான். ஆகையால் மனோஜவராஜனுக்குத் தன் பிரஜைகளிடத்தில் வெறுப்புண்டாயிற்று; இவ்வகையான வெறுப்பும், அகங்காரமும், பேராசையும், நிறைந்த அந்த அரசனுக்குப் பிராமண கிராமங்களில் வரிதண்ட எண்ணம்பிறந்து, அவர்களிடம் போய், அவர்களுடைய தன தானியாதிகளையும், சிவவிஷ்ணுவாலய திரவியங்களையும், அப்படியே சிவவிஷ்ணுவாலயங்களுக்கு விடப்பட்ட மானியங்களையும் அநியாயமா யபகரித்துக் கொண்டான். இப்படித் தேவர்களையும், பிராமணர்களையும் விரோதித்துவந்த அரசனுடைய கர்மவசத்தினால் கௌடதேசாதிபதியாகிய கோலபன் என்ற ராஜன் தனது நால்வகைச் சேனைகளோடும் வந்தெதிர்த்து ஆறுமாசம் யுத்தஞ்செய்து, மனோஜவனுடைய கருவத்தையடக்கி, யவனைச்செயித்து, இராஜ்யத்தை விட்டுத் துரத்தி யவனரசையும் கைப்பற்றிக் கொண்டான். இராஜ்யமிழந்த மனோஜவன் மனம்வருந்தித், தன் புத்திர தார சமேதனாய்ப் பசியாற்றாமல், நடக்க சக்தியில்லாமல் அடிக்கடியிடறிவிழுந்து, வண்டுகளும், புலி முதலிய துஷ்டமிருகங்களும்

காட்டானை, காட்டுப்பன்றி, காட்டெருமை, முதலியவை நிறைந்த ஒரு பெரியகாட்டில் வந்து அலைந்து திரிந்துகொண்டிருக்கையில், அவனுடைய குழந்தை தன் பிதாவையும் மாதாவையும் பார்த்து எனக்குப்பசிக்கின்றது அன்னங்கொடுங்கள் என்று கேட்டது. அது கேட்ட பெற்றோர்கள் மனத்துயரந்தாங்கமாட்டாமல் மயக்கமடைந்தார்கள். அரசன் தன் மனைவி சுமித்திரையைப்பார்த்துப் பெண்ணே! குழந்தை அன்னங்கேட்கிறதே நான் என்னசெய்வேன்? எங்கேபோவேன்? அன்னம் கொடாவிட்டால் பசியால் மெலிந்து குழந்தையிறந்துபோமே. இதற்கென்ன உபாயம்! பெண்ணே! துர்ப்பாக்கியனான என்னைப் பிரமதேவன் ஏன் படைத்தான். துஷ்டகிருத்தியத்தினாலுண்டான இந்த துக்கத்தினின்றும் என்னை யார்விடுவிப்பார்கள்? நான் பூர்வஜன்மத்தில் சிவவிஷ்ணுக்களையாவது, சூரியன், அக்கினிமுதலிய தேவர்களையாவது ஆராதிக்கவில்லை. அதனாலேதான் எனக்கு அகங்காரம் மேலிட்டுப் பிராமணர் சொத்துக்களையும், தேவாலய சொத்துக்களையும் அபகரித்து அநியாயம் பண்ணினேன். அந்த அநியாயத்தினாலேதான் கோலபன் என்னும் அரசன் என்னை ஜயித்துக்காட்டில் துரத்திவிட்டான். இக்காட்டில் பணமில்லாமலும், அன்னமில்லாமலும் வருந்திக்கஷ்டப்படுகிற நான் குழந்தைக்கு எப்படி அன்னங்கொடுப்பேன்? நான் பூர்வம் பிராமணர்களுக்கு அன்னதானம் பண்ணினதில்லை; சிவவிஷ்ணு முதலிய தேவாராதனை செய்யவுமில்லை. அக்கினியில் ஹோமம் செய்ததுமில்லை; புண்ணிய தீர்த்தஸ்நானம்பண்ணவுமில்லை. மாதுர் பிதுர் சிராத்தங்களையும், அவர்களைக்குறித்துப் பார்வண சிராத்தம், ஏகோதிஷ்டம் முதலிய கர்ம்மங்களைச் செய்யுவுமில்லை. சித்திரைமாசம் சித்திராநட்சத்திரத்தில், பானகம், பலாப்பழம், ருசியான வாழைப்பழம், குடை, தண்டம், பாதரட்சை, தாம்பூலம், புஷ்பம்; கலவை சேர்ந்த சந்தனம் முதலியவற்றைச் சித்திர குப்தனைத்திருப்தி செய்வதற்காக வேதவித்துக்களான பிராமணர்களுக்குத்தானஞ் செய்யவில்லை. பிராணிகளுக்குத் தாபத்தைநீக்கி நிழல் கொடுப்பதற்கு அரசமரத்தையாவது, ஆலமரத்தையாவது, புளியமரத்தையாவது, மாமரத்தையாவது, வேப்பமரத்தையாவது, விளாமரத்தையாவது, நெல்லிமரத்தையாவது, தென்னைமரத்தையாவது வழியில் வைத்துப் பயிராக்கவில்லை. சிவவிஷ்ணுவாலயங்களில் திருவலகிட்டுச் சுத்தம் செய்யவில்லை; குளம், குட்டை கிணறுமுதலிய வெட்டிவைக்கவில்லை; பூந்தோட்டம், துளசிவனம் இவைகளைப் பயிராக்கிவைக்கவில்லை; சிவாலயம், விஷ்ணுவாலயங்கள் கட்டுவிக்கவில்லை; பிதுர் மாசத்தில் பிதுர்க்களைக்குறித்து மஹாளயசிராத்தம், அஷ்டகாசிராத்தம், நித்தியசிராத்தம், காமியசிராத்தம், நைமித்திகசிராத்தம் முதலியசெய்ததுமில்லை; நிரம்பதட்சணைகொடுத்து யாகங்கள் செய்யவுமில்லை; மாச உபவாசம், ஏகாதசி உபவாசம் பண்ணினதில்லை; தனுர்மாதத்தில் உஷக்காலத்திலெழுந்திருந்து சிவ விஷ்ணுவாதி தேவர்களை விதிப்படி பூஜித்து நைவேத்தியம் பண்ணினதில்லை. சிவநாம, விஷ்ணுநாமங்களை நாவாலுச்சரித்து, ஜாபாலோபநிஷத்தில் சொல்லப்பட்ட விரஜாபஸ்ம முதலான எழுவித பஸ்மாவைத் தேகத்தில் உத்தூளனமாகவாவது, திரிபுண்டரமாகவாவது தரித்துக்கொள்ளவில்லை; ருத்திராட்சதாரணம் பண்ணிக்கொண்டதுமில்லை; ருத்திரஸூக்தம், புருஷஸூக்தம், பஞ்சாட்சரம், அஷ்டாக்ஷரம், இவைகளை ஜபித்ததுமில்லை. பெண்ணே! மற்றுமுள்ள தர்மங்களையும் யான் செய்ததில்லை. ஆகையாலேதான் நானிப்படிப்பட்ட துக்கத்தையனுபவிக்கும்படி நேரிட்டது, என்று சொல்லிப்புலம்பி, வாயுலர்ந்து, தொண்டைவரண்டு மூர்ச்சித்துப் பூமியில் தொப்பென்று விழுந்தான். அது கண்ட சுமித்திரையும் தன் நாயகனையணைத்துக்கொண்டு, சந்திரகுல துரந்தரனே என் பிராணநாதா! சிங்கத்தைக்கண்ட மான்போல நடுங்கி உம்மைப் பின்பற்றிவந்த என்னையும், என் குழந்தையையும் இந்தக்காட்டில் விட்டுவிட்டு நீர் எங்கே போய்விட்டீர்? நீர் இறந்துபோனால் நானும் உம்மோடுகூடஅநுமரணஞ்செய்துவந்து விடுவேனேயல்லாமல் நாயகனைவிட்டு ஒருக்ஷணமாகினுமிங்கே தனித்திருக்கமாட்டேன் என்று புலம்பித் தன்புதல்வனைப் பார்த்து அப்பா! சந்திரகாந்தா! பூமியில் விழுந்திருக்கிற உன் தந்தையைப்பார் என்று கூவிச்சொன்னாள். சந்திரகாந்தனும் தன் பிதாவைக்கட்டிக்கொண்டு தேம்பியழுதுகொண்டிருந்தான்.

கேளுங்கள் பிராமணர்களே! அப்பொழுது ஜடாவற்கலதாரியாயும், பஸ்மோத்தூளித சர்வாங்கராயும், நெற்றியில் திரிபுண்டரமணிந்தவராயும், கழுத்தில் ருத்திராட்சமாலை புனைந்தவராயும், வெளுத்த யக்ஞோபவீதந்தரித்தவராயும், சஜ்ஜனர்களால் விரும்பப்பட்டவராயுமுள்ள பராசரமுனிவர் யதேச்சையாய் அவ்விடத்துக்கு வந்தார். அது கண்ட பதிவிரதையான சுமித்திரை தன் குமாரனோடும் அவரது திருவடியில் விழுந்துபணிந்தவுடன், பராசரர் சுமித்திரை

யைப் பார்த்து, அம்மா நீ துக்கப்படாதே; என்று சமாதானப்படுத்தி, நீயார்; முன்னாலே விழுந்திருப்பவன் யார்? இந்தக்குழந்தையார்? உண்மையைச் சொல்லென்றுகேட்க, பதிவிரதாசிரோமணியான சுமித்திரை சொல்லுகிறாள். கேளும் முனிசிரேஷ்டரே! இதோ! கீழே விழுந்திருப்பவர் எனது கணவன்; நான் அவருக்கு மனைவி, சந்திரகாந்த னென்கிற இந்தப்பிள்ளையெங்களுக்குப் பிறந்த குழந்தை; சந்திரகுலத்தில் பிறந்த இந்தராஜன் 'பேர் மனோஜவன்; இவர் தந்தை விக்கிரமாட்டிய மஹாராஜன்; இவர் சௌரியத்தில் மஹாவிஷ்ணுவுக் கொப்பானவர்; இவருடைய மனைவியாகிய என் பேர் சுமித்திரை; இவரைக்கோலபன் என்பவன் யுத்தத்தில் ஜயித்து இராஜ்ஜியத்தைவிட்டுத் துரத்திவிட்டதனால் நிர்க்கதியாய் என்னையும் புத்திரனையும் அழைத்துக்கொண்டு கொடியமிருகங்களடர்ந்த இந்தக்காட்டில் வந்து சேர்ந்து, பசியால் வருந்தின குழந்தை யாகாரம் கேட்டவுடன் ஆகாரங்கொடுக்கச்சக்தியில்லாமல் மனம் நொந்து மூர்ச்சையாய்க் கீழேவிழுந்துவிட்டாரென்று, துக்கத்தால் வாய்குளறிச் சொல்லியதைக்கேட்ட சக்தி புத்திரரான பராசரரும் அக்கினிசிகையை ஒத்த சுமித்திரையைப்பார்த்து அம்மா பயப்படவேண்டாம். உங்களுடைய துக்கங்களெல்லாம் சீக்கிரத்தில் நீங்கிப்போம்; மூர்ச்சையான உன் கணவனுமெழுந்துவிடுவான் என்று சொல்லித் திரிலோசனனான ஸ்ரீபரமேசுவரனைத் தியானம் பண்ணி, மந்திரித்துக்கொண்டு, விழுந்துகிடக்கும் அரசனைத் தமது திருக்கரத்தினால் தொட்டமாத்திரத்தில் மனோஜவராஜன் மூர்ச்சை தெளிந்தெழுந்திருந்து, பராசரமுனிவரைப்பணிந்து, சந்தோஷத்தோடு அஞ்சலியஸ்தனாய், முனிவரே யுமது பாதாரவிந்த சேவையினால் என்னுடைய மூர்ச்சை தெளிந்து பாவமும் நீங்கியது. உமது தரிசனம் பாபிகளுக்கொருநாளும் கிடைக்காது. சத்துருக்களால் இராஜ்யமிழந்த என்னைக் காத்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, முனிவர் அரசனே! சத்துருவை ஜயிக்க ஒரு உபாயம் சொல்லுகிறேன். மஹா புண்ணியமான ராமசேதுவாகிய கந்தமாதனத்தில் சமஸ்த ஐசுவரியத்தையுங் கொடுப்பதான மங்களதீர்த்த மென்றொருதீர்த்தமிருக்கிறது. ஸ்ரீராமமூர்த்தியானவர் ஜனங்களுக்கனுக்கிரகம் செய்வதற்காக லட்சுமியாகிய சீதாதேவியோடு சதாகாலமும் அவ்விடத்தில் வசித்துக்கொண்டிருக்கிறார்; நீ புத்திர, பாரியையோடு அவ்விடத்துக்குப்போய், அதில் பத்தியோடு ஸ்நானம் பண்ணி, யதன்

கரையில் சேதுமந்திர சிராத்தாதிகளைச் செய்வாயானால், உனக்குத் துன்பத்தைக்கொடுக்கிற இந்தத்தரித்திரம் நீங்கி, சகல ஐசுவரியங்களையுமடைந்து, பகைவனைவென்று, இராஜ்யத்தையும் பெறுவாய்; ஆகையால் உனது மனைவி குமாரர்களோடு சீக்கிரம்புறப்படு; உனக்கு அனுக்கிரகம் செய்யும்படி நானும் வருகிறேனென்று கூறி, அரசன் முதலிய மூவரோடும் சேதுவைநோக்கிப் புறப்பட்டு வனம், வனாந்திரம், நாடு, கள்ளர்குடியிருக்கும் கிராமம் முதலியவைகளை யெல்லாங்கடந்து, கந்தமாதனத்திலிருக்கும் மங்களதீர்த்தம் வந்து சேர்ந்து, விதிபூர்வமாகத்தாம் முதலில் ஸ்நானம்செய்து, அரசன்முதலானவர்களையும் முறைப்படி ஸ்நானஞ் செய்வித்தார். அரசன் பிதுர்க்களைக் குறித்துச் சிராத்தம் செய்து மூன்றுமாதகாலம் ஸ்நானம்செய்துகொண்டிருந்தான். அதுவரைக்கும் பராசர முனிவருங்கூடவேயிருந்து ஸ்நானம்செய்து, அரசனுக்குச் சமஸ்த துக்கங்களையும் போக்குகிற ஸ்ரீராமர் ஷடாக்ஷரமந்திரத்தையுபதேசித்தார். அரசன் அம்மந்திரத்தை யுபதேசமுறைப்படி நாற்பதுநாள் ஜபித்துவர, அந்த மங்களதீர்த்தத்தினின்றும் முனிவரது அனுக்கிரகத்தால் ஒரு பலமான வில்லும், அக்ஷய தூணிரங்களும், தங்கப்பிடிபோட்ட இரண்டுகத்திகளும், கேடகமும், ஒரு குண்டாந்தடியும், ஒரு முசலாயுதமும், மஹா நாதத்தோடுங்கூடிய ஒரு சங்கமும், சாதிக்குதிரைகொடிகளோடு கூடிய தேரும், அக்கினிபோல் விளங்குகிற தங்கமயமான கவசமும், ஹார கேயூர மகுட கடக முதலிய ஆபரணங்களும், திவ்வியமான ஆயிரம் வஸ்திரங்களும், சொர்ணதாமரையாலாகிய வைஜயந்தியென்கிற ஒரு மாலையும் வெளிவந்ததைக்கண்டு, அரசன் முனிவருக்குத் தெரிவிக்க, முனிவர் அந்த மங்களதீர்த்தத்தினின்றும் கொஞ்சந் தீர்த்தமெடுத்து அரசனுக்கு மந்திரபூர்வமாக ஸ்நானம்பண்ணிவைத்தார். அரசன் அப்பொழுது மெய்குளித்த ஹார கேயூர மகுட கடகாபரண பூஷிதனாய், வில், வாள் கேடகமுதலிய ஆயுதங்களை யேந்தித் தேரின்மேலேறிக்கொண்டு மத்தியான சூரியனைப்போல யௌவனபுருஷனாய் விளங்கினான். பிறகு அந்த மஹா ரிஷியானவர் அரசனுக்கு அங்கம், உபாங்கம், பிரயோகமுறை, மீட்குமுறை முதலியவைகளோடு பிரமாஸ்திரம் முதலானவைகளையுபதேசித்து ஆசீர்வாதம் பண்ணி அனுப்ப, அரசன் முனிவரைப் பணிந்து, வலம் சூழ்ந்து, உத்தரவு பெற்றுக்கொண்டு, தேரின்மேலேறிப் பத்தினி புத்திர,

களோடு தன்னுடைய பட்டணம்வந்து, கோலபனைச் சண்டைக் கழைக்கும்பொருட்டுச் சங்கத்தொனி செய்தான். அது கேட்டுக் கோலபனும் தன் சேனைகளோடு சண்டைக்கு வெளிப்பட்டு, மூன்றுநாள் மனோஜவனோடு சண்டைசெய்து, நாலாம் நாள் மனோஜவன் விடுத்த பிரமாஸ்திரத்தால் சேனைகளோடுமடிந்தான். பின் மனோஜவனும் புத்திரபாரியையோடு நகரத்துட்புகுந்து, அரசாட்சியைக்கைக்கொண்டு உலகமுழுதையும் பரிபாலித்து வந்தான். அப்பொழுது மனோஜவன் அகங்காரம் பர இம்சை செய்தல் முதலிய துர்க்குணங்களற்றவனாய், மனஅடக்கத்தோடு ஆயிரவருஷகாலம் தர்மந்தவறாமல் அரசுபுரிந்து, பிறகு உலக வாழ்வை வெறுத்துத் தன் புத்திரனுக்கு மகுடாபிஷேகஞ் செய்து வைத்துவிட்டுத், தன் பத்தினியோடுகூடக் கந்தமாதனத்துக்கு வந்து, மங்களதீர்த்தக்கரையில் சதாசிவனைக் குறித்து வெகுகாலந் தவம்புரிந்து கடைசியில் அந்தத் தீர்த்தமகிமையால் சரீரத்தைவிட்டுச் சிவலோகமடைந்தான். அவன் மனைவியாகிய சுமித்திரையும் தன் கணவனோடுகூட அநுமரணஞ்செய்து அவளுஞ் சிவபதமடைந்தாள்.

கேளுங்கள் முனீசுவரர்களே! இவ்வளவு மகிமையுடையது அந்த மங்களதீர்த்தம். இந்த உத்தமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்தபலத்தினால் மனோஜவன் தன் பகைவரை வென்று உலகை யாண்டு சிவலோகவாழ்வையடைந்தான். ஆகையால் ரிஷீசுவரர்களே பரிசுத்தமாயும், மங்களகரமாயும், மனிதர்களுக்கு எப்பொழுதும் புத்தி முத்திகளைக் கொடுப்பதாயும், பாபராசியாகிய பஞ்சுக்குவியலுக்கு நெருப்பாகவுமிருக்கிற மங்களதீர்த்தத்தில் முக்தியடையும்பொருட்டு நீங்கள் ஸ்நானம் பண்ணுங்கள்.

பனிரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று

பதின்மூன்றாவது

அமிர்தவாவி தீர்த்தமகிமையில் அகஸ்தியசகோதரன் முக்தியடைந்த அத்தியாயம்

கேளுங்கள் முனிவர்களே! மங்களதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தபிறகு, ஏகாந்த ராமநாதமென்கிறக்ஷேத்திரம் போகவேண்டும். அங்கே ஸ்ரீராமர் லோகங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வதற்காக சீதாலட்சுமண அநுமசமேதராய் வானரசைனியங்களோடு எப்பொழுதும் வாசம் பண்ணிக்கொண்டிருக்கிறார். அவ்விடத்தில் அமிர்த தீர்த்தமென்கிற புண்ணிய தீர்த்தமொன்றிருக்கிறது. அதில் ஸ்நானம் பண்ணினவர்கள் சிவப்பிரசாதத்தால் யமபயம், நரகபயமில்லாமல் மோட்சமடைவார்கள். பரமசிவன்கூட ஜனங்களுக்கு முத்தியளிப்பதற்காக அந்தத் தீர்த்தக்கரையிலெப்பொழுதும் வாசமாயிருக்கிறார் என்று சொல்ல, ரிஷீசுவரர்கள் ஐயா! வியாசர் மாணாக்கரான முனிவரே! இதற்கு அமிர்த தீர்த்தமென்று பெயர்வந்த காரணமென்ன? அதன் மகிமை யெப்படிப்பட்டது? தமது வசனாமிர்தத்தைத் தெவிட்டாமல் பானம் பண்ண விரும்பும் எங்களுக்குச் சொல்லியருளுமென்று கேட்கச், சூதர் பிராமணோத்தமர்களே! யவைகளை யுங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் சாவதானமாய்க் கேளுங்களென்று சொல்லுகிறார்.

பூர்வகாலத்தில், நானாவித ரிஷிகள் நிறையப்பெற்றதும், சித்தசாரண கந்தர்வகின்னரர்களுக்கு வாசஸ்தானமாயும், சிம்ம வியாக்கிர வராக மகிஷ கஜம் முதலியமிருகங்கள் உலாவப்பெற்றதும், தமாலம், தாலம், ஹிந்தாலம், சண்பகம், அசோகம் முதலிய விருட்சங்களடர்ந்ததும், அன்னம், குயில், வலியான், சக்கிரவாகம் முதலான பட்சிகள் கூவிக்கொண்டிருப்பதும், தாமரை, நீலோத்பலம், செங்கழுநீர், அல்லி முதலிய புஷ்பங்கள் நிறைந்ததடாகங்கள் சூழ்ந்ததுமான இமயமலைச்சாரலில் சத்தியவந்தராயும், சீலராயும், வாக்குவல்லவராயும், இந்திரியநிக்கிரகஞ் செய்தவராயும், சிவபக்தராயுமிருந்த அகஸ்திய முனிவரது சகோதரரானவர், திரிகாலமும் சிவார்ச்சனைசெய்து, தமதாசிரமத்துக்கு வந்த அதிதிகளைக் கந்தமூலபலாதிகளாலுபசரித்து, அக்கினிபூஜை, சந்தியா

வர்த்தனம் முதலியவைகளைச் செய்தும், காலந்தவறாமல் காயத்திரி முதலான மஹாமந்திர ஜபஞ்செய்துகொண்டும், மோட்சாபேட்சையுடையவராய்த் தவஞ்செய்துகொண்டிருந்தார்.

அவர் பிராம்ம முகூர்த்தமென்கிற நாலாவது ஜாமத்தில் நித்திரை தெளிந்தெழுந்திருந்து, ஸ்ரீமஹாவிஷ்ணுவைத் தியானித்து, உஷக்காலத்தில் ஸ்நானஞ்செய்து, சந்தியாவந்தனமுடித்துக், காயத்திரியை ஜபித்துச், சிவபூஜை, விஷ்ணுபூசைசெய்து, வேதமோதி, வைசுவதேவம்பண்ணி, காகபலியிட்டு, அதிதி யாராதனைசெய்து, புராணங்களைக்கேட்டுச், சாஸ்திராராய்ச்சிசெய்து, இவ்வகையாக நித்திய கர்மங்களைக் குறைவறச்செய்தும், வருஷந்தோறும் மாதாபிதாக்களுக்குச் சிராத்தஞ்செய்தும், இதர சிராத்தங்களை முறைப்படிசெய்தும், ஆயிரவருஷம் அருந்தவம்புரிந்தும் ஸ்ரீபரமேசுவரன் பிரத்தியட்சமாகாமையால், கிரீஷ்மகாலத்தில் பஞ்சாக்கினியிலிருந்துகொண்டு, மௌனமாய் இடதுகால் கட்டைவிரலால் நின்றுகொண்டு சலனமற்றுக் கைகளையுயரவெடுத்து, நிராதாரராய் அதிக கடூரமான தபசுபுரிந்தார். அது கண்டு கிருபாநிதியாகிய பரமேசுவரர் மகிழ்ச்சியடைந்து, தமது சரீரகாந்தியால் பத்துத்திக்கும் பிரகாசிக்கும்படி விருஷபவாகனத்தின்மேல் பார்வதிதேவியாரோடுங் காட்சி தந்தருள, முனிவர் அவரைக் கண்டு வணங்கித் துதிக்கின்றார். பார்வதிகாந்தா! நீலகண்டா! மகேசுவரா! சிவா! ருத்திரா! மஹாதேவா! சம்போ! விபோ! உமக்கு நமஸ்காரம். ஸ்ரீகண்டா! உமாபதே! சூலி! பகனென்னும் சூரியனுடைய கண்களைப் பறித்தவனே! சங்கரா! விரூபாட்சா! ருத்திரா! உமது கோபத்துக்கு நமஸ்காரம். காலகாலா! காமாரி! வேதவேத்தியனே! ஜகத்பதியே! சுவாமி! பசுபதியே! அநந்தமானவிற்கலையுடைய உமக்கு நமஸ்காரம்; கட்டியாக நாசகராயும், ஸ்தாயுவென்கிற சோரர்களுக்குப் பதியாயும், எஜமானன் வீட்டில் திருடுவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருப்பவர்களான "நிசேரு" என்பவராயும், வீரர்களுக்குத் தலைவராயிருக்கிற உமக்கு நமஸ்காரம். கிருபாசமுத்திரமான மஹாதேவா! உமக்கு அடிக்கடி நமஸ்காரம். திரிலோசனா! தாண்டமுடியாத சம்சாரசாகரத்திலிருந்து என்னைக் கரையேற்றும், என்று தோத்திரம் பண்ணின அகஸ்தியர் சகோதரனைப் பார்த்துப், பரமசிவன் அவர் சந்தோஷிக்கும்படி சொல்லுகிறார். அகஸ்திய சகோதரரே! நீர் முத்தியடையுமுபாயமொன்று சொல்லுகிறேன் கேளும்; சேதுமத்தியிலிருக்கிற கந்தமாதனத்தில் மங்களதீர்த்தத்துக்குச் சமீபத்தில் அமிர்ததீர்த்தமென்கிற ஒரு மஹா தீர்த்தமிருக்கிறது. அங்கேபோய் ஸ்நானஞ்செய்வீரேயானால் நீர் முத்தியடைவீர். அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணுவதைவிட உமக்கு முத்தியடையும் சுலபமான உபாயம் வேறில்லை. அதன் விசேஷத்தைச் சொல்ல என்னாலுமாகாது. நீர் சந்தேகப்பட வேண்டியதில்லை. ஆகையால் சம்சாரசாகரத்தைக்கடக்க விரும்பினால் சீக்கிரம் அங்கேபோய்ச் சேரும் என்று சொல்லி ஈசன் அந்தர்த்தானமான உடனே, அகஸ்தியபிராதாவானவர் சமுத்திரத்திலிருக்கிற சேதுவுக்குப் போய்க், கந்தமாதன பர்வதத்திலிருக்கிற அமிர்ததீர்த்தத்துக்குச் சிவாக்ஞையின்படி சீக்கிரம்போய்ச் சேர்ந்தார். மஹாபுண்ணியமானதாயும், ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு முத்தியைத்தருவதாயும், ஏகாந்த ராமநாதக்ஷேத்திரத்துக்கு அலங்காரமாயுமிருக்கிற அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் மூன்றுவருஷம் நியமமாய் ஸ்நானஞ்செய்து, நாலாவது வருஷத்தில் சமாதியிலிருந்து, பிராணவாயுவைக் கபாலத்திலேற்றிப், பிரமரந்திரத்தின் வழியாய்ப் போக்கி, இந்தச்சரீரத்தைவிட்டு, முத்தியடைந்தார். சமஸ்த துக்கங்களையும் நீக்குகிற இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்த அவருக்கு அமிர்தத்துவம் வந்ததனால் அதற்கு அமிர்ததீர்த்தம் அல்லது அமிர்தவாபியென்று பேராயிற்று. ரிஷீசுவரர்களே! கேளுங்கள்; சோம்பலில்லாமல் மூன்று வருஷகாலம் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு அமிர்தத்துவம் சித்திக்கின்றது. அந்த தீர்த்தத்துக்கு அமிர்தவாபியென்று பெயர்வந்த காரணத்தையும், அதன் பிரபாவத்தையுமுங்களுக்குச் சொல்லிவிட்டேன். இன்னமென்னகேட்க விரும்புகிறீர்கள் என்று சூதர் வினவ, ரிஷிகள் ஐயா! அந்த ஸ்தலத்துக்கு ஏகாந்த ராமநாதமென்று பெயர்வந்த காரணமென்ன? அதையெங்களுக்குச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூதர் சொல்லுகிறார். பூர்வகாலத்தில் வானரங்கள் சமுத்திரத்தில் சேதுகட்டுகையில் தசரதராமரானவர் சுக்ரீவன், விபீஷணன், இலட்சுமணன், யோசனைசிறந்த அநுமானிவர்களோடு இராவணனைக் கொல்லுமுபாயத்தை யோசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது சமுத்திரத்தில் அலைகள் பொங்கிப்பேரொலி செய்ததனால் ஒருவர் பேசுவதை யொருவரறியக் கூடாதிருந்தது. ஸ்ரீராமர் கோபங்கொண்டு புருவத்தை நெரித்துச்

சமுத்திரத்தையடக்கி, அவர்களோடு ஏகாந்தயோசனை செய்துகொண்டிருந்தபடியால் அந்த ஸ்தலத்துக்கு ஏகாந்த ராமநாதமென்று பேர்வந்தது. ராமர் புருவம் நெரித்தலினால் அடக்கப்பட்ட சமுத்திரமானது அந்த இடங்களில் மாத்திரம் இப்பொழுதுகூட அலையில்லாமலிருக்கிறது. இந்த ஏகாந்த இராமநாதத்துக்கு வந்து அமிர்தவாபியில் நியமத்துடன் ஸ்நானம் பண்ணி, இராமர் முதலானவர்களைச் சேவிக்கிற அத்துவிதஞானமில்லாத விவேக ஞானியர்கள், விரக்திபிறவாதவர்கள், சமாதியிலிருக்கச் சக்தியில்லாதவர்கள், யாகாதிகர்மானுஷ்டானஞ் செய்யாதவர்கள் முதலானவர்களுக்கும் அமிர்தத்துவங் கட்டாயங் கிடைக்கிறது.

பதின்மூன்றாம் அத்தியாயம்

முற்றிற்று

பதினாலாவது

பிரமகுண்ட வரலாறும் அதில் பிரமதேவர் சாபந்திர்ந்ததும் உரைத்த

அத்தியாயம்.

பிராமணோத்தமர்களே! நீங்கள் அமிர்தவாபியில் ஸ்நானம்பண்ணி, ஸ்ரீராமரைச் சேவித்து, இந்திரியத்தையடக்கிச் சேதுமத்தியிலுள்ள கந்தமாதனத்திலிருக்கிற பிரமகுண்டமென்கிற தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணவேண்டும். சகல தரித்திரங்களையும் நீக்கும் ஔஷதமாயும், அநேகமாயிரம் பிரமஹத்திதோஷங்களைத் தரிசனமாத்திரத்தில் நிவர்த்திசெய்வதாயுமிருக்கிற இந்தத் தீர்த்தத்தைத் தரிசிக்கிறவன் வேறு தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுவானேன்? யாகாதிகிருத்தியங்களைச் செய்வானேன்? தபசுபுரிவானேன்; மஹாதானங்கள் பண்ணுவானேன்? இந்தப்பிரமதீர்த்தத்திலொருதரம் ஸ்நானம் செய்தமாத்திரத்தில் வைகுண்டங்கையில் கிடைக்கின்றது. பிரமகுண்டத்திலுண்டான திருநீற்றைத் தரித்துக்கொள்ளுகிறவனுக்குப் பிரம விஷ்ணு ருத்திரர்கள் மூவரும் வசமாகிறார்கள். அந்தப் பஸ்மத்தைத் திரிபுண்டரமாகத் தரிக்கிறவனுக்குக் கைவல்லியம் நிச்சயமாய்க் கிடைக்கும். அந்தப்பஸ்மத்தில்

ஒரு அணுப்பிரமாணமாவது நெற்றியில் தரிப்பவனுக்கு முத்தியெளிதில் கிடைக்கிறது. அதை உத்தூளனம் பண்ணிக்கொள்கிறவன் அடையும் புண்ணிய பலமிவ்வளவென்று சொல்லச் சிவனுக்குத்தான் தெரியுமோ. தெரியாதோவறியேன். அந்த விபூதியைத் தரித்துக்கொள்ளாதவன் இரௌரவ நரகத்தில் சந்திரதாரகங்களுள்ளமட்டுந் துன்பப்படுகிறான். அதைத் திரிபுண்டரமாகவாவது, உத்தூளனமாகவாவது தரித்துக்கொள்ளாதவனுக்கு ஒருபோதும் சுகமில்லை. இந்த விபூதியை நிந்திக்கிறவனும்? இந்த விபூதியை மற்றத்திருநீறுகளுக்குச் சமானமாகவாவது, அல்லது கீழ்ப்பட்டதாகவாவது சொல்லுகிறவனும், இந்தத் திருநீறிருக்கையில் மற்ற நீற்றைத் திரிபுண்டரமாக அணிந்துகொள்கிறவனும், ஒருபொழுது மதைத்தரித்துக்கொள்ளாதவனும் விபசாரி புத்திரனென்று எணிக்கவேண்டியது. இந்தத் திருநீற்றைப் பிராமணர்களுக்குக் கொடுக்கிறதானது நாலுகடல் சூழ்ந்த பூமியைத்தானம் பண்ணின பலனுக்குச் சமானமாகிறது. இதில் சந்தேகமேகிடையாது என்று கையைத்தூக்கிக்கொண்டு மூன்றுதரம் சத்தியம் பண்ணுகிறேன். ஆகையால் பிராமணோத்தமர்களே! இந்தப்பரிசுத்தமான விபூதியைத் தரித்துக்கொள்ளுங்கள்.

பூர்வகாலத்தில் சர்வலோகபிதாமகரான பிரமதேவர் கந்தமாதன பர்வதத்துக்குவந்து, சமஸ்ததேவர்களும் பார்த்திருக்கப், பூர்ணதட்சணைகொடுத்து ஸர்வயாகங்களையுஞ் செய்து சிவசாபத்தினின்றும் விடுபட்டார். ஆகையால் பிராமணர்களே! இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவர்கள் சிவசாயுஜ்யமடைவதில் ஐயமேயில்லை என்று சூதர்சொல்ல, ஐயா! புராணார்த்தங்களையெல்லாம் அறிந்த பிராக்ஞரான சூதமுனிவரே! ஈரேழுபதினாலு லோகத்துக்கும் சிருஷ்டிகர்த்தாவாய்ப் பாரதிபதியான பிரமதேவருக்கு எந்தக் குற்றத்தினாலே எவ்வகையான சாபங்கிடைத்தது? இவைகளையெங்களுக்கு விபரமாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

பூர்வகாலத்தில் பிரமாவும் விஷ்ணுவும் நானே கர்த்தா; என்னைத்தவிர வேறொருவருமில்லையென்று தம்மைத் தாமே புகழ்ந்து கலகஞ் செய்தார்கள். அப்பொழுது இவர்களுடைய கருவத்தையடக்கும்பொருட்டாகவும், தேவர்களுக்கு அறிவுண்டாவதற்காகவும் அவ்விருவர்க்கு மத்தியில் புராதனமான சுயஞ்சோதி

லிங்கமொன்று தோன்றியது. அது கண்டு பிரம விஷ்ணுக்களிருவரும் வியப்படைந்து, இந்த லிங்கம் ஆதியந்தமற்றதாயும், அநேக சூரியர் அக்கினிகளுக்குச் சமானமாயும் விளங்குகிறது; இதனாதியையும் அந்தத்தையும் நமக்குள் எவன் காண்கிறானோ அவனே பெரியவன் அவனே லோக கர்த்தா; அவனே பிரபு; என்று தேவர்களுக்கு முன்னாலே சபதம் பண்ணிக்கொண்டார்கள். பிறகு பிரமதேவன் நான் மேலேபோய் இந்தலிங்கத்தைத் தேடிப்பார்த்து வருகிறேன். நீர் அதன் அடியைத் தேடிப்பார்த்துவாரும் என்று சொல்ல, மஹாவிஷ்ணுவு மப்படியே யாகட்டுமென்றொத்துக் கொண்டார். பிறகு விஷ்ணுவானவர் வராகரூபத்தையும், பிரமதேவன் அன்னரூபத்தையு மெடுத்துக்கொண்டு தேடப்புறப்பட்டார்கள். மஹாவிஷ்ணுவானவர் அநேகமாயிரம் வருஷம் கீழுலகங்கள் எங்குந்தேடிப்பார்த்துந் தன்னிடம் வந்து தேவர்களுக்கெதிரில் லிங்கத்தின் அடியை நான் பார்க்கவில்லையென்று உண்மையைச் சொல்லியிருந்தார். மேலே தேடப்போன பிரமாவானவரும் அவ்விடம் வந்து நான் லிங்கத்தினுடைய சிரசைக் கண்டேனென்று பொய்சொன்னார். அதுகேட்ட மகேசுவரன் பொய்சொன்ன பிரமாவைப்பார்த்து பிரமனே நீயெனக்கெதிரில் பொய்சொன்னதினால் உனக்கு உலகத்திலெங்கும் எப்பொழுதும் பூசைகிடைக்காதென்று சொல்லி, விஷ்ணுவைப்பார்த்து நீர் உண்மை கூறினபடியால் எனக்குச் சமானமான பூஜை உமக்குக் கிடைக்கும் ஆக்ஷேபணையில்லை; என்று சொல்ல பிரமதேவன் முகம்வாடி, ஸ்ரீ சங்கரனைப்பார்த்துக் கிருபாநிதியான சுவாமீ! என் குற்றத்தைப்பொறுத்துக்கொள்ளும்; பெரியோராயிருப்பவர்கள் குற்றங்களை மன்னிக்கிறது நியாயம். ஆகையால் ஜகதீசனே தேவரீர் நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளவேண்டுமென்றுபிரார்த்திக்க, மகேசுவரனும் பிரமதேவனைப்பார்த்து அப்பா! என் வார்த்தை பொய்யாய்ப்போகாது; உனக்கொரு உபாயஞ்சொல்லுகிறேன், சீக்கிரமாகக் கந்தமாதனத்துக்குப்போய், அவ்விடத்தில் யாகங்களைச் செய்தால் பொய் சொன்னபாபம் உன்னைவிட்டு நீங்கும்; அப்பொழுது சிரௌதகர்மங்களிலும் ஸ்மார்த்தகர்மங்களிலும் உனக்கு பூஜை நடக்கும், உனக்கு விக்கிரகத்திலாராதனை கிடைக்கமாட்டாது என்று சொல்லி அந்தர்த்தானமானார். பிரமதேவன் கந்தமாதனத்துக்கு வந்து யக்ஞ கர்த்தாவான பரமேசுவரனைக்குறித்து எண்ணாயிரம் வருஷம் பௌண்ட்ரீகமுதலான சகல யாகங்களையுஞ்செய்து முடித்தார். அப்பொழுது சம்புவானவர் திருப்தியடைந்து பிரத்தியக்ஷமாய் அப்பா பிரமாவே! நீசெய்த யாகங்களால் பொய்சொன்ன குற்றம் போய்விட்டது; ஆனாலும் முன்பு நான் சொன்னபடி சிரௌத ஸ்மார்த்த கர்மங்களில் மாத்திரம் பூஜை கிடைக்குமேயன்றி விக்கிரகத்தில் கிடைக்காது. இந்த யாகஸ்தலத்துக்கு பிரமகுண்டமென்று பேர்வழங்கிவரும். பிரமகுண்டமென்கிற இந்தப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினவனுக்கு முக்தியுலகத்தின் கதவு திறக்கப்பட்டிருக்கும்; பிரமகுண்டத்திலுண்டாகிற விபூதியை நெற்றியில் தரித்துக்கொள்ளுகிறவன் மாயா கபாடத்தை யுடைத்துக்கொண்டு முத்திவாசற்படியிலேறிப்போவான். அந்தப் பிரமகுண்டத்தின் விபூதியை யெவன்தரித்துக்கொள்ளவில்லையோ அவன் தன் சொந்த பிதாவுக்கு பிறந்தவனோ இல்லையோ வென்பது சந்தேகம்; பிரமகுண்டத்தின் விபூதியை நெற்றியில் தரித்துக்கொண்டவன் செய்த பதினாயிரம் பிரமஹத்திதோஷம், பதினாயிரம் சுராபானதோஷம், பதினாயிரம் சொர்ணத்திருட்டு, பதினாயிரம் குருபத்தினிகமனதோஷம், இவர்களோடு சேர்ந்ததனாலுண்டாகிய பதினாயிரம் பாபங்களும், பூத பிரேத பிசாசாதிகளும் உடனே நசித்துவிடும் என்று சொல்லி மறைந்தருளினார். பிரமதேவன் யாகங்களை நிறைவேற்றி, பரமேசுவரனிடத்திலிருந்து மனோரதசித்தி பெற்றுச் சத்தியலோகம்போய்ச் சேர்ந்தார். அதுமுதல் தேவர்களும், ரிஷீசுவரர்களும், சித்த சாரண கின்னரர்களும் அந்த க்ஷேத்திரமகிமையை யுணர்ந்து, அவ்விடத்தில் வெகுகாலம் வாசமாயிருந்து, அநேக யாகங்களைக் கிரமப்படி முடித்துத் தங்கள் தங்களிடத்துக்குப்போனார்கள். ஆகையால் யாகஞ் செய்ய விரும்புவோர்களெல்லாரும் இவ்விடத்திலேயே செய்யவேண்டியது. மனிதர்கள், தேவர்கள், முனிவர்கள் முதலானவர்களால் வணங்கப்பட்டதும், சகலமான சம்சார துக்கங்களை நீக்குகிறதும், சமஸ்தசம்பத்துகளைக் கொடுக்கிறதும், சமஸ்த பாபங்களைப் போக்குகிறதுமாய் விளங்கிக்கொண்டிருக்கிறது இந்தப் பிரமதீர்த்தமானது.

பதினாலாவதத்தியாயம்

முற்றிற்று

பதினைந்தாவதத்தியாயம்

அநுமகுண்ட வைபவத்தில் தர்மஸக ராஜன் புத்திரப் பேறுபெற்ற அத்தியாயம்.

மஹா புண்ணியமான இந்தப் பிரமகுண்டத்தில் ஸ்நானம் பண்ணினபிறகு அநுமகுண்டத்துக்குப்போகவேண்டும். கேளுங்கள் பிராமணோத்தமர்களே! பூர்வகாலத்தில் இராவணன் முதலான ராட்சதர்களைச் சங்கரித்து ராமர்முதலானவர்கள் கந்தமாதனத்துக்கு வந்தபோது, வாயு புத்திரனை அநுமான் உலகோபகாரார்த்தமாக இந்த உத்தமமான தீர்த்தத்தைத் தன்பேரால் உண்டாக்கினார். இந்தத் தீர்த்தவைபவத்தையறிந்து ருத்திரமூர்த்தி அங்கே வசித்துக்கொண்டிருக்கிறார். இந்தத் தீர்த்தத்துக்குச் சமானமாக வேறொரு தீர்த்தமிருந்ததுமில்லை யிருக்கப்போகிறதுமில்லை. அதில் ஸ்நானம் பண்ணின மனிதர்கள் புராதனமான சிவலோகத்தையடைகிறார்கள். மஹாபாபங்களையெல்லாம் நாசம் பண்ணுகிற இந்தத் தீர்த்தத்தை வாயு குமாரனை அநுமான் சர்வலோகோபகாரமாகச் செய்தபொழுது, சகலமான நரகங்களும் சூனியமாயிருந்தன. அந்தத் தீர்த்தமகிமை சங்கரருக்குத் தெரியுமோ தெரியாதோ நானறியேன்; கேகய வம்சத்தில் பிறந்தவனை தர்மஸகன் என்கிற அரசன் பூர்வம் பக்தியோடிதில் ஸ்நானஞ்செய்து நூறு புத்திரர்களையடைந்தான்" என்று சூதர் சொல்லச் சௌனகாதிகள் அநுமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து நூறு பிள்ளைகளைப்பெற்ற தர்மஸகன் கதையைச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூதர் சொல்லுகிறார்.

கேளுங்கள் ரிஷிகளே! அந்த அரசனுடைய சரித்திரத்தைச் சுருக்கிச்சொல்லுகிறேன். பூர்வத்தில் தர்மஸகன் என்கிற இராஜன் சத்துருக்களை ஜயித்துத் தர்மத்தையும் நீதியையும் கைக்கொண்டு, மன்னுயிரைத் தன்னுயிர்போலப் பாதுகாத்துவந்தான். அவனுக்குப் பதியையே தெய்வமாகக்கொண்ட நூறு பத்தினிமார்களிருந்தார்கள். இப்படிப் பாதுகாத்துவருங்காலை

யில் வம்சவிருத்தி செய்வதற்கான ஒரு குழந்தைகூட அவனுக்குப் பிறக்கவில்லை. ஆகையால் அவன் புத்திரோற்பத்தியைக்குறித்து மஹா தானம் செய்தும், தேவர்களையுத்தேசித்து அசுவமேத முதலான யாகங்களைச்செய்தும், துலாபுருஷன் முதலான வெகு தானங்கள் பண்ணியும், பருப்பு, பலவகைக்கனிகள் முதலியவற்றோடு அர்த்தராத்திரிவரைக்கும் வந்தபேர்க்கெல்லாம்தடையில்லாமல் அன்னதானஞ்செய்தும், பிதுர்க்களையுத்தேசித்து சிராத்தங்களைச் செய்தும், புத்திரனையளிக்கும்படியான அநேக மந்திரங்களை யிந்திரியநிக்கிரகமுள்ளவனாய் ஜபித்தும், இன்னம் பலவகையான தருமங்களை வெகுகாலம் செய்தும் கிழவனாகிறபரியந்தம் புத்திரசந்தானமில்லாமற் போயிற்று. கிழத்தன்மையடைந்தும் புத்திரப்பேற்றைக்குறித்து விடாமுயற்செய்து வந்ததனால் அவனது மூத்தபத்தினியிடத்தில் சுசந்திரனென்ற ஒரு அழகானபுத்திரன் பிறந்தான். அந்தக் குழந்தையை மற்றப் பத்தினிமார்களும் வித்தியாசமில்லாமல் பால் முதலானவை கொடுத்து வளர்த்தார்கள். அந்தக் குழந்தையானவன் தன் மாதாபிதாக்களுக்கும், மந்திரிகளுக்கும், நகரத்தாருக்கும் நயனானந்தத்தையும், இதயானந்தத்தையுங்கொடுத்து வளர்ந்துவந்தான். அரசனும் குழந்தையைச் சீராட்டிப் பரமசந்தோஷமடைந்தான். ஒருநாள் குழந்தை தொட்டிலில் தூங்கும்போது அதன் காலில் ஒரு தேள் பலமாய்க்கொட்டிவிட்டது. அந்த உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் குழந்தை கோவென்றழ அதன் தாய்மார்களும் குழந்தையைச்சூழ உட்கார்ந்து கூக்குரலிட்டழுதார்கள். அப்பொழுது மந்திரி பிரதானி புரோகிதர்களோடு சபைநடுவிலுட்கார்ந்திருந்த அரசன் அந்த அழுகுரலைக்கேட்டு, ஒரு சேவகனை நோக்கி அந்த அழுகுரல் யாதென்று விசாரித்துவாவென்றனுப்ப, அவன் அந்தப்புரத்தின் வாசலுக்குப்போய், அங்கிருந்த கிழ அலிகளைப் பார்த்து, இராஜ ஸ்திரீகளேன் அழுகிறார்கள்? அதை விசாரித்துச் சொல்லுங்கள், சபையிலிருந்து அரசன் என்னையிதற்காக அனுப்பினார் என்று சொல்ல, அந்த அலிகள் துக்ககாரணத்தை விசாரித்து அவனுக்குச் சொல்லச், சேவகனோடிவந்து அந்தச் சேதியை அரசனுக்குத் தெரிவித்தான். அரசனும் அதிவேகமாயெழுந்து மந்திரி புரோகிதர்களோடு அந்தப்புரம்போய், மந்திரிகளால் விஷவைத்தியர்களையழைப்பித்துச் சிகிச்சைசெய்வித்ததின்பேரில் துன்பம் நீங்கிச்

சுகப்பட்ட குழந்தையைச் சீராட்டி மகிழ்ந்து, வைத்தியர்களுக்கு சொர்ணம், இரத்தினம், முத்து முதலானவைகளை வெகுமானமாகக் கொடுத்து அனுப்பிவிட்டு, அந்தப்புரத்தினின்றும் வெளிப்பட்டுச், சிந்தைத்துயரத்தோடுகூடச் சபையிலிருக்கும் சிங்காதனத்தில் வீற்றிருந்து, அங்கு வந்திருந்த ரித்துவிக்குகள், புரோகிதர்கள், மந்திரிமார் முதலானவர்களைப் பார்த்து நியாயமான இந்த வார்த்தையைச் சொன்னான். ஐயா பிராமணோத்தமர்களே! ஏக புத்திரனையுடையவனாயிருப்பது எப்போதுந் துன்பத்தைத்தரும்; ஓரே பிள்ளையைப் பெற்றிருப்பதைவிடப் புத்திரனேயில்லாதிருப்பது மேன்மையாகும்; ஓரே பிள்ளையையுடையவனாயிருப்பதில் அநேக அபாயங்களிருக்கின்றன; இதையோசித்துத்தான் நான் நூறு மனைவிகளைக் கல்யாணஞ்செய்துகொண்டேன்; எனக்கும் என் பத்தினிகளுக்கும் மிகுதியும் வயதாய்விட்டது; எங்களுடைய பிராணன் அந்த ஒரே பிள்ளையின்பேரிலிருக்கிறது. அது இறந்துபோனால் நாங்களெல்லாரு மிறந்துபோவோ மென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் என்னுடைய பத்தினிகளில் ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு குணசாலியான புத்திரனைப் பெறவும், நான் வெகு புத்திரர்களையுடையவனாயிருக்கவும் சாஸ்திரங்களைப் பரியாலோசனை செய்து ஒரு உபாயஞ் சொல்லுங்கள்; அது கடினமாயிருந்தாலும், எளிதாயிருந்தாலும் பலன் கிடைப்பதானால் நான் அதை அநுஷ்டானம் பண்ணுகிறேன்; நீங்கள் சொன்ன கர்மத்தைத் தவறாமல் அநுஷ்டிப்பேனென்பதற்கு நான் செய்திருக்கிற புண்ணியத்தின் மேலாணையிட்டேனென்று சொல்லப், புரோகிதர்களும் ரித்துவிக்குகளுமொன்றாய்க்கூடி யோசனைசெய்து, ஒரு தீர்மானம் பண்ணி, அரசனைப்பார்த்து, மஹாராஜாவே! உமது பத்தினிமார் நூறு பேருக்கும் நூறு புத்திரர் பிறக்கும்படியான உபாயத்தைச் சொல்லுகிறோம் கேளும்; தென்சமுத்திர மத்தியில் சேதுரூபமாகக் கந்தமாதனமென்றொரு மலையிருக்கிறது. அது சித்த சாரண கந்தர்வ, தேவ ரிஷிகூட்டங்களால் நிறைந்திருக்கிறது. அந்த மலையைத் தொட்டாலும், பார்த்தாலும், மஹா பாதகங்களையெல்லாம் நீக்கித், துக்கங்களைப்போக்கி, நரகதுன்பத்தை ஒழித்துத், தரித்திரத்தைக் கழித்துப், புத்திரனில்லாதபேர்களுக்குப் புத்திரனையளித்து, ஸ்திரீகளில்லாதபேர்களுக்கு ஸ்திரீகளைக்கொடுத்து, சொர்க்ககாமிகளுக்குச் சொர்க்கத்தையும், மோட்சகாமிகளுக்கு மோட்சத்தையுந் தருவதான அநுமகுண்டமென்கிற ஒரு புண்ணியதீர்த்தமிருக்கிறது; அதில் நீர் ஸ்நானம் பண்ணி, அதன் கரையில் நியமத்தோடு புத்திரகாமேஷ்டியாகஞ் செய்வீரானால், உம்முடைய மனோபீஷ்டப்படி உமது நூறு பாரியைகளில் ஒவ்வொருத்திக்கும் ஒவ்வொரு புத்திரனாக நூறு பிள்ளைகள் பிறக்கும். இதில் சந்தேகப்படாதேயும் என்று சொன்னதைக் கேட்ட அரசன் தன் பாரியர்கள், புரோகிதர், ரித்துவிக்குகள், மந்திரிகள், வேலைக்காரர்களோடும் யாகத்துக்குவேண்டிய திரவியத்தையெடுத்துக்கொண்டு தென் சமுத்திரத்திலிருக்கிற கந்தமாதனத்தை நோக்கிச்சென்று, அநுமகுண்டத்துக்கு வந்து, அதில் சைனியத்தோடு ஸ்நானம் பண்ணி, ஒரு மாதம் அதின் கரையில் வசித்திருந்து, வசந்தகாலம் வந்தவுடன் சித்திரைமாதத்தில் புத்திரகாமேஷ்டியாகத்தைத் தொடங்கி, ரித்துவிக்குப் புரோகிதர்களைக்கொண்டு செய்துமுடித்து, புரோகிதரால் தன் பத்தினிகளுக்கு ஹோமசேஷத்தையுண்பித்து, நூறு பத்தினிகளோடும் அநுமகுண்டத்தில் அவபிருத ஸ்நானஞ்செய்து, ரித்துவிக்குகளுக்கு ஏராளமான திரவியத்தைத் தக்ஷிணையாகக்கொடுத்து, மற்றுமுள்ள பிராமணர்களுக்குக் கிராமதானம் பண்ணி, மந்திரிபரிவாரம் பத்தினிசமேதனாய்ச் சந்தோஷத்துடன் திரும்பித் தன் பட்டணம் போய்ச்சேர்ந்தான். சிறிதுகாலஞ் சென்றபிறகு அவனுடைய நூறு பாரியைகளும் கர்ப்பந்தரித்துப் பத்தாவது மாசத்தில் குணசாலியான நூறு புத்திரர்களைப் பெற்றார்கள். தர்மசகன் ஆனந்தத்தோடு ஸ்நானஞ்செய்து பரிசுத்தனாய்ச் சங்கற்பஞ்செய்துகொண்டு ஜாதகர்மத்தை முடித்துக் கோதானம், பூதானம், திலதானம், ஹிரணியதானம், முதலான தானங்களைப் பிராமணர்களுக்குக்கொடுத்துச் சிலகாலம் வாழ்ந்திருந்தான். பிறகு, தன்குமாரர் நூற்றொருவரும் யௌவனதசையையடைந்ததும் தன் ராஜ்யத்தை யவர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டுத், தான் பத்தினிகளுடன் கந்தமாதனத்திலிருக்கும் அநுமதீர்த்தம் வந்துசேர்ந்து, அதன் கரையில் சிவனை யுத்தேசித்துத் தவம்புரிந்து வெகுகாலமிருந்து, மனவடக்கமுடையவனாய்த் தன் சரீரத்தைவிட்டு வைகுண்டம்போய்ச் சேர்ந்தான். அவன் பத்தினிகளும் அநுமரணம் பண்ணித் தங்கள் நாயகனிருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள். அரசனுடைய ஜேஷ்டபுத்திரனாகிய சுதந்திரன் மாதா பிதாக்களுடைய சரமகிரியைகளைச் செய்து, சிராத்தத்தையு நடத்தி மஹா பராக்கிரமசாலிகளாயிருக்கிற தன் சகோதரர்களோடு விரோதமில்லாமல் கூடி யிராஜ்யபரிபாலனஞ்

செய்துவந்தான். அதேமாதிரியாக மற்ற இராஜகுமாரர்களும் தங்கள் தங்களுக்குக் கிடைத்த இராஜ்யத்தையாண்டுகொண்டு சுகமாய் வாழ்ந்திருந்தார்கள். கேளுங்கள் முனீசுவரர்களே! இந்த அநுமகுண்டவைபவத்தையும், தர்மசகராஜனுடைய திவ்யசரித்திரத்தையுமுங்களுக்குச் சொல்லிவிட்டேன். ஆகையால் சமஸ்த மனோரதசித்தியின்பொருட்டு அந்த அநுமதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்ய வேண்டும். இந்த அத்தியாயத்தைச் சிரத்தையோடு படிப்பவரும், கேட்பவரும் இம்மையில் அளவில்லாத சுகத்தையனுபவித்து, மறுமையில் தேவர்களோடுகூடிக் குலாவி வாழ்ந்திருப்பார்.

பதினைந்தாவது அத்தியாயம்

முற்றிற்று

பதினாறாவது

அகஸ்திய தீர்த்தவைபவத்தில் கக்ஷீவான் மனோரமையை மணந்த கதையுரைத்த

அத்தியாயம்

ருத்திரமூர்த்திவாசம் பண்ணிக்கொண்டிருக்கும் அநுமதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டுப், பிறகு நியமத்தோடு அகஸ்திய தீர்த்தம் போகவேண்டும். இதைக் கும்பத்தில் பிறந்த அகஸ்தியர் உண்டாக்கினார். பூர்வம் விந்தியபருவதத்துக்கும் மேருமலைக்குஞ் சண்டைநேரிட, விந்தியமலையானது ஆகாயத்தையளாவி யுயர்ந்து நிற்கப், பிராணிகளெல்லாம் மூச்சுவிடக்கூடாமல் வருந்தத், தேவர்கள் கைலாஸ பருவதம்போய்ப் பரமசிவனுக்குத் தெரிவித்தார்கள். சிவபெருமான் அப்பொழுது பார்வதியை விவாகஞ்செய்யப் பிரயத்தினஞ் செய்துகொண்டிருந்தபடியால், பார்வதியைத் தனக்குப் பாணிக்கிரகணஞ்செய்து தரும்படியாகக்கேட்டு நிச்சயித்துவர இமயாசலராஜனிடம் வசிஷ்டாதி முனிவர்களையனுப்பி, அகஸ்தியரைப் பார்த்து நீர் விந்தியபருவதத்தின் கருவத்தையடக்குமென்று கட்டளையிட, அகஸ்தியர், சுவாமீ, உமது திருமணக்கோலத்தை யெப்படி தரிசிப்பேன்? என்று விஞ்ஞாபனம் பண்ணப், பரமசிவன் அகஸ்தியரைப் பார்த்து அகஸ்தியரே! பார்வதி கல்யாணகோலத்தை வேதாரணியக்ஷேத்திரத்தில் தரிசிப்பிக்கின்றேன்? ஆகையால் விந்தியாசலத்தையடக்க நீர் சீக்கிரம் புறப்படும் என்று சொன்னார். அகஸ்தியர் உடனே புறப்பட்டுப்போய் விந்தியத்தை அடக்கித், தமது காலால் பூமியைச் சமனாகச்செய்து, தெட்சணதேசங்களில் சுற்றிக் கந்தமாதனம் வந்துசேர்ந்து, அதன் வைபவத்தையறிந்து, அவ்விடத்தில் தமது பேரால் ஒரு புண்ணியதீர்த்தத்தை நிர்மாணம் பண்ணி, லோபாமுத்திரையென்கிற மனைவியாரோடு இன்னமும் வாசம் பண்ணிக்கொண்டிருக்கிறார். அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணித்தீர்த்தபானம் பண்ணினால், அவனுக்கு மறுபிறப்பில்லை. இந்தத் தீர்த்தத்துக்குச் சமானமான தீர்த்தம் இந்த லோகத்தில் முக்காலத்திலுமில்லை. இதில் ஸ்நானம் பண்ணினவர்களுக்குச் சர்வாபீஷ்டமும். மோட்சானந்தமும் கொடுக்கிறது. இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணின மகத்துவத்தால் தீர்க்கதமசு என்கிற முனிவருடைய குமாரனை கக்ஷீவான் தரிசித்த சுவநய னென்பவனுடைய புத்திரி மனோரமையை மணந்தான். ஓ முனிர்களே! பாபத்தையழித்துப் புண்ணியத்தைக்கொடுக்கும்படியான அந்தக் கதையை யுங்களுக்குச் சொல்கிறேன் சிரத்தையோடு கேளுங்கள்.

தீர்க்கதமசு என்கிற பரம தார்மிகரான ஒரு முனிவரிருந்தார்: அவருக்குக் கக்ஷீவான் என்கிற புத்திரனொருவனிருந்தான். அவனுக்குஉபநயனமான பிறகு ஜிதேந்திரியனாய்ப் பிரமசாரியாய், உதங்கரென்னுங் குருவிடத்தில் நாலுவேதங்களையும், ஆறுசாஸ்திரங்களையும், இதிகாசபுராணங்களையும், உபநிஷத்துகளையும், அறுபது வருஷகாலம் அத்தியயனம் செய்து, குருதட்சணை கொடுத்துவிட்டுத் தன்வீட்டுக்குவரப் பிரியப்பட்டுக் குருவைப்பார்த்துச் சுவாமீ! நான் வீட்டுக்குப்போக அநுமதிகொடுத்தருளவேண்டும்; என்னிடத்தில் கருணைகூர்ந்து என்னைக் காப்பாற்றவேண்டும். என்று பிரார்த்திக்க, உதங்கரும் அவனைப்பார்த்து உனக்கு வீட்டுக்குப் போக அநுமதி கொடுக்கிறேன். நீ விவாகஞ்செய்துகொள்கிற உபாயமும் உனக்குச்சொல்லுகிறேன் கேளு; இராமசேதுவாகிய கந்தமாதனத்துக்குப்போய், ஸர்வாபீஷ்டத்தையுங் கொடுக்கிற

தாயும், சகலபாபங்களையும் கெடுக்கிறதாயும், புத்திமுத்திகளை யளிப்பதாயுமிருக்கிற அகஸ்திய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கொண்டு மூன்றுவருஷம் அங்கேயே விரதமநுஷ்டித்துக்கொண்டிரு, நாலாவது வருஷம் அந்தத்தீர்த்தமிலிருந்து நாலுதந்தங்களையும், பெரிய சரீரத்தையும், சரத்காலமேகம்போல வெளுத்த நிறத்தையுமுடைய ஒரு பெரிய யானையானது வெளியில்வரும் அப்பொழுது அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து யானையின்மேலேறிக்கொண்டு குவநயன் என்கிற அரசனுடைய பட்டணம்போய்ச்சேரு, நாலு தந்தங்களுள்ள யானையின்மே லைராவதேந்திரனைப்போல்வருகிற உன்னைப்பார்த்து அந்த ராஜரிஷியானவர், தன் கன்னிகையின் விவாகத்தினிமித்தமாக அடைந்திருக்கிற துயரம் நீங்கிச் சந்தோஷமடைவார். இராஜபுத்திரியாகிய மனோரமையென்பவள், நாலுதந்தங்களும், பெரிய சரீரமும், வெள்ளைநிறமுமுடைய யானையின்மேலேறிக்கொண்டு வருகிற புருஷனையே நான் மணம் புரிவேனென்று சபதஞ் செய்துகொண்டாள். அதுகேட்ட அரசன் மனம் வருந்தியிருக்கையில் ஒருநாள் அவ்விடத்துக்கு நாரதமுனிவர் வந்தார். வந்தமுனிவரைக் கண்ட தார்மிகனான அரசன் சந்தோஷத்துடன் எதிர்கொண்டழைத்துவந்து, அர்க்கிய, பாத்திய, ஆசமனீய, ஆசனங்கள் கொடுத்து உபசரித்துப் பாதத்தில் வணங்கி, அவரிடத்தில் தன் குமாரத்தி செய்துகொண்டிருக்கும் சபதத்தைச்சொல்லி, இவ்விதமான யானை இவ்வுலகத்திலில்லையே! தேவலோகத்திலல்லவோ உள்ளது. பேதையான என் குமாரத்தி நிறைவேற்றக்கூடாத பிரதிக்ஞைசெய்துகொண்டாளேயென்று என்மனம்வருந்துகிறது. பெண்ணுக்கு விவாகஞ் செய்துவையாத தகப்பனுக்கு எப்பொதும் துக்கமேயுண்டாகுமென்று கூறிய ராஜரிஷியைப் பார்த்து நாரதமுனிவர் ஐயா! வருத்தப்படாதேயும்; பூலோகத்தில் கக்ஷீவான் என்ற பிராமணோத்தமனொருவன் இவ்விதமான வெள்ளை யானையின்மேலேறிக்கொண்டு உமக்கு மருமகனாகவருவான் என்று சொல்லி யாகாசமார்க்கமாகப் போய்விட்டார். நாரதர் சொல்லியதைக்கேட்ட குவநயன் என்ற அரசன், இவ்விதமான மாப்பிள்ளையின் வரவுக்கு இரவும் பகலும் எதிர்பார்த்திருக்கிறான். ஆகையால், பாலதபசியாகிய கக்ஷீவானே நீ அகஸ்தியதீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதற்காகச் சீக்கிரம்போ! உனக்குச் சர்வ மங்களமும் உண்டாகும் சந்தேகமில்லை என்று சொன்னார். இவ்விதம் உதங்கரால்

அநுக்கிரகிக்கப்பட்ட கக்ஷீவான் குருவினிடத்தில் விடைபெற்றுக் கொண்டு, சீக்கிரமாக அகத்தியதீர்த்தம் வந்து ஸ்நானம் பண்ணி ஒருநாள் க்ஷேத்திரோபவாசஞ் செய்து, மறுநாள் பாரணைபண்ணி இராத்திரியில் அங்கேயே தூங்கினார். இவ்விதம் நியமத்தோடு இருந்துவருகையில் ஒருநாள் குறைய மூன்றுவருஷமாய்விட்டது. மூன்றும் வருஷக் கடைசிநாளில் சாயந்திரம் சந்தியாகிரியை முடித்துக்கொண்டு, அதன் கரையில்படுத்து நித்திரை செய்யுங் காலத்தில், விடியசாமத்துக்குப்பிரளயகாலத்தில் அலைவீசிக் கொந்ளிக்கும் சமுத்திர கோஷத்துக்கு ஒப்பான ஒரு பேரொலிகேட்டுக் கண்விழித்துப் பார்த்தார். அப்பொழுது மதுராபதியான குவநயன் என்கிற அரசன் யானை, சிங்கம், வராக, மகிஷம், ருரு என்கிற மான் முதலிய மிருகங்களை அம்பினால் கொன்று வேட்டையாடிக் ளைத்து நால்வகைச் சேனைகள், மந்திரிமுதலானவர்களோடு, கஸ்திய தீர்த்தக்கரையில் வந்து களையாறிக்கொண்டிருந்தான். டிந்து வெளிச்சமானவுடனே கக்ஷீவான் என்கிற ரிஷியானவர், கஸ்தியதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனாதிகளை டித்துக்கொண்டு அதன் கரையில் ஜபம்பண்ணிக்கொண்டிருந் ார். அந்தச்சமயத்தில் கைலாசமலை இந்த உருக்கொண்டுவந்த தாவென்று நினைக்கும்படியாக நாலு தந்தங்களுடைய ஒரு பரிய வெள்ளையானையானது அந்தத் தீர்த்தத்தினின்றும் புறப்பட் க் கக்ஷீவான்கிட்டவந்து நின்றது. உதங்கர் சொன்ன லட்சணங்க ளாடு கூடியிருக்கிற அந்த யானையைக்கண்ட கக்ஷீவான், அதன் மலே தீம்படியாக ஸ்நானஞ்செய்து, அந்தத்தீர்த்தத்தை நமஸ் ரித்துத் துதித்து, யானையின்மேலேறிச், குவநயன் பட்டணத்தை நாக்கிப் போகப்புறப்படுகையில், அந்தக் குவநயனென்கிற ராஜா யும், இவன்தான் கக்ஷீவானாக இருக்கவேண்டுமென்று கருதிச் ந்தோஷமடைந்து, அவன்கிட்டவந்து, ஐயா! பிராமணோத்த மரே! நீர் யாருடைய பிள்ளை? உமதுபேரென்ன? இந்த யானை யின்மேலேறிக்கொண்டு எவ்விடம்போகிறீர்? என்று கேட்டான். அதுகேட்ட கக்ஷீவான், ஐயா! என் தகப்பனார் தீர்க்கதமசு முனி வர், என்பேர் கக்ஷீவான் என்று சொல்வார்கள், நான் குவநய னென்கிற அரசன் பட்டணத்துக்குப்போய், மனோரமையென்கிற அவன் பெண்ணை மணம்புரிந்து, அவனுடைய பிரதிக்ஞையைப் பூர்த்திசெய்விக்கப்போகிறேன் என்ற அமிர்தவருஷம்போன்ற வசனத்தைக்கேட்டு, ஆனந்தத்தினால் கண் மலர்ந்து, அவனைப்

பார்த்து ஐயா! கக்ஷீவானே! நீர் யாருடைய குமாரத்தி மனோரமையை மணம்புரியப்போகின்றீரோ அந்தச் சுவநயனென்கிற அரசன் நானே? நானிப்பொழுது கிருதார்த்தனானேன்; வாரீர் பாலதாபசரே! நீர் என் பெண்ணை விவாகம்புரிந்து, அவளோடுகூடிக் கிரகஸ்த தர்ம்மங்களைச்செய்து வாழ்ந்துவருவீராகவென்று சொன்னான். அதுகேட்ட கக்ஷீவான் அரசனைப்பார்த்து ஐயா! என் தந்தை வேதாரணியத்தில் தபசு பண்ணிக்கொண்டிருக்கிறார். அவருக்கு ஒரு பிராமணனையனுப்பிவையுமென்று சொல்ல, அரசனப்படியே தன் புரோகிதரான சுதரிசனன் என்கிற பிராமணனை ஏராளமான சேனைகளோடு வேதாரணியத்துக்கு அனுப்பினான். அந்தப் புரோகிதனும் வேதாரணியம்போய், அங்கே ஓராச்சிரமத்தில் வேதாரணியேசுவரரை நோக்கித் தவம்புரியும் தீர்க்கதமசு என்ற முனிவரைக்கண்டு நமஸ்காரம் செய்து அவருக்குச் சந்தோஷமுண்டாகும்படியாக ஐயா! முனிவரே க்ஷேமமா? தபசு விருத்தியடைந்து வருகிறதா? ஆச்சிரமத்திலெல்லாரும் சௌக்கியமா? தர்மம் சரிவரநடந்துவருகிறதா? என்று க்ஷேமம் விசாரிக்க, தீர்க்கதமசும் அர்க்கியபாத்தியாதிகளாலுபசரித்து, ஐயா! பிராமணோத்தமா! வேதாரணியேசுவரருடைய கிருபையினால் எல்லாரும் சௌக்கியம். அசௌக்கியமே கிடையாது? நீர் சௌக்கியமா! சுகமாக வந்தீரா! நீர் வேதவித்துக்களுக்கெல்லாம் சிரேஷ்டராகிய சுவநயன் என்பவனுடைய புரோகிதர் அல்லவா? அவனைவிட்டுச் சேனைகளோடும் என் ஆசிரமத்துக்கு வந்தகாரணமென்ன? என்று கேட்டார்.

சுதரிசனரும், தேஜசால் விளங்குகிற அம்முனிவரைப்பார்த்து ஐயா! தங்கள் கிருபையினால் எல்லாரும் சௌக்கியம்தான். சுவநயராஜன் சாஷ்டாங்கமாகத் தங்களை நமஸ்கரித்து, வணக்கத்தோடும் என் மூலமாகத் தெரிவிப்பதாவது, கட்சீவான் என்னும் தமது குமாரன் கந்தமாதன பர்வதத்தில் அகஸ்தியதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிக்கொண்டிருக்கிறார். அவருடைய ரூபத்தையும், தர்மாசாரத்தையும், வைதிக கர்மாநுஷ்டானத்தையும், வேதசாஸ்திர சாமர்த்தியத்தையும், உத்தமகுலப் பிறப்பையும் யானறிந்து, என் பெண்ணாகிய மனோரமையை அவருக்குக்கொடுக்க இச்சிக்கிறேன்; வேட்டையாடவந்த நான் உமது புத்திரனிடத்திலிருக்கிறேன். தமது குமாரனும் தந்தை அனுக்ஞையில்லாமல் விவாகஞ் செய்யமாட்டேனென்று சொல்லுகிறார். ஆகையால் தாங்கள் தயவுசெய்து என் குமாரத்தியை உமது குமாரன் மணம்புரியும்படி அநுக்கிரகஞ்செய்யவேண்டும். இந்தக்காரியத்தை யுத்தேசித்தே என் புரோகிதரைத் தங்களிடம் அனுப்பியிருக்கிறேன் என்று சொல்லி யென்னைத் தங்களிடத்துக்கு அனுப்பினார் என்று சொல்லி முடித்தவுடனே, தீர்க்கதமசு ஐயா சுதரிசனரே! அப்படியேயாகட்டும், சுவநயனுக்கு எது இஷ்டமோ அது எனக்குமிஷ்டந்தான். நானுங் கந்தமாதன பர்வதத்துக்கு வருகிறேன் என்று சொல்லி, வேதாரணியேசுவரரைப் பக்தியுடன் நமஸ்கரித்துச் சுதரிசனரோடுகூடச் சேதுவைநோக்கிப் புறப்பட்டு, ஆறுநாளில் கந்தமாதனம் வந்து, அகஸ்தியதீர்த்தக் கரையிலிருக்கிற தம் புத்திரனைக்கண்டார். புத்திரனும் தந்தையைக்கண்டு, தன் பெயரைச் சொல்லி நமஸ்காரம் பண்ண, தகப்பன் பிள்ளையைத் தன் மடியிலிருத்திக்கொண்டு, உச்சிமோந்து, அன்போடு கட்டித்தழுவிப் புளகாங்கிதராய் க்ஷேமம் விசாரித்து, அப்பா கட்சீவானே! எல்லா வேதத்தையும் அத்தியயனஞ் செய்தாயா! இவைகளையெல்லாமெனக்குச் சொல்லு என்று வினவ, புத்திரன் எல்லாவற்றையுமன்போடு சொல்லிமுடித்தான்.

பதினாறாவது அத்தியாயம்

முற்றிற்று

பதினேழாவது கக்ஷீவான் மனோரமையை விவாகஞ்செய்த அத்தியாயம்

முனிசுவரர்களே கேளுங்கள், கட்சீவான் தந்தையைப்பார்த்துச் சொல்லுகிறான். நான் படித்துக் குருதக்ஷிணைகொடுத்த பிறகு என்னுடைய குருவாகிய உதங்கர் கட்டளையின்படி சுவநயராஜன் புத்திரியை விவாகஞ்செய்யும்பொருட்டு இந்த அகஸ்தியதீர்த்தம் வந்து, அவரது உபதேசப்படி மூன்றுவருஷம் நடந்துகொண்டு

வந்தேன். மூன்றாம்வருஷக் கடைசியில், சுவநயன் யதிர்ச்சையாக வந்து உனக்கு பெண்ணைத்தருகிறேனென்று சொன்னான். நான் அவசியம் என் தந்தைக்குத் தெரிவிக்கவேண்டுமென்றதினால் தங்களிடமொரு பிராமணனையனுப்பிச் சமாசாரந்தெரிவித்தானென்று சொல்லிமுடித்தான். இதன் மத்தியில் சுதரிசனன் என்ற புரோகிதன் சுவநய ராஜனிடம்போய்த் தீர்க்கதமசு வந்திருக்கிறாரென்று தெரிவித்தான். அரசன் அதைக்கேட்டுத் தன் கூடாரத்தைவிட்டுப் புறப்பட்டு அகஸ்தியதீர்த்தக் கரையில் தன் புத்திரனோடு பேசிக்கொண்டிருக்கிற தீர்க்கதமசு முனிவரைக்கண்டு, தேவேந்திரன் பிரமாவை வணங்குவதுபோல உலகத்துக்கெல்லாம் க்ஷேமத்தைச் செய்யும்படியான அவர் திருவடிகளில் நமஸ்கரிக்கத் தீர்க்கதமசு அவனைத் தூக்கியெடுத்து ஆசீர்வாதஞ்செய்தார். இச்சமயத்தில் உதங்க முனிவர் இராமசேதுவில் விளங்குகிற தனுக்கோடியில் ஸ்நானஞ் செய்யவிரும்பி அநேக சிஷர்களோடும் இலட்சக்கணக்கான முனிவர்களோடும் அகஸ்தியதீர்த்தத்துக்கு வரக்கண்ட கக்ஷீவான் எதிர்கொண்டுபோய்த் தன் குருபாதாரவிந்தத்தில் வணங்க, அவரும் அவனுக்கு ஆசீர்வாதம் பண்ணினார். தீர்க்கதமசு முனிவர் உதங்கரைக்கண்டு ஒருவருக்கொருவர் குசலம் வினவியபின், லோகபிரசித்தர்களான இருவரும் புண்ணியகதைகளைப் பேசிக்கொண்டிருக்கையில் சுவநய ராஜன் உதங்கரை வணங்கியவரது ஆசீர்வாதம் பெற்றபின்பு சந்தோஷத்தோடு தீர்க்கதமசைப் பார்த்துச் சுவாமீ கல்யாணத்துக்கு எத்தனஞ் செய்யலாமேயென்று சொல்ல, முனிவரும் அப்படியேயாகட்டும்; நாளையதினம் நல்ல முகூர்த்தத்தில் இந்தக் கந்தமாதன பருவதத்திலேயே விவாகத்தை நிறைவேற்றுவோம். ஆகையால் உன் பெண்ணைக் கன்னியாமாடத்தினின்றும் வரவழையென்று சொல்ல, அரசனும் தன் கூடாரத்துக்குவந்து விருத்தர்களான அநேகம் அந்தப்புரக்காவலாளிகளையனுப்ப, அவர்களும் வாயுவேகம், மனோவேகமுள்ள குதிரைமேலேறிக்கொண்டுபோய் அந்தப்புரத்துக்குச் சமாசாரமெல்லாந் தெரிவித்து, அந்தப்புர ஸ்திரீகளையும், கன்னிகையையும் அழைத்துக்கொண்டு கந்தமாதனம் வந்துசேர்ந்தார்கள். மறுநாள் சுபமுகூர்த்தத்தில் கோதான முதலான சடங்குகளை விதிப்படி செய்தபின் கக்ஷீவான் நாலு கொம்புகளையும் பெரிய காத்திரத்தையும் உடைய வெள்ளையானையின்மேல் இரண்டாவது தேவேந்தி

ரனைப்போல ஏறிக்கொண்டு, மனோரமையின் பிரதிக்ஞையை நிறைவேற்றிவைக்கும்படியாக, மங்களாசாசனஞ் செய்துகொண்டுவருகிற அநேகம் பிராமணர்களோடும், தன் பிதாகுரு முதலானவர்களோடும், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிற அரசனுடைய கூடாரத்துக்குச் சந்தோஷத்தோடும் வருவதைக்கண்டு விவாககோலங்கொண்டிருக்கிற மனோரமையானவள் நமது பிரதிக்ஞையின்றுதான் நிறைவேறிற்றென்று களித்திருந்தாள். அப்போது இராஜன் தன் கூடாரவாசலில் உதங்கர் முதலானவர்களோடும் வந்த கட்சிவானைப் புரோகிதரோடும் எதிர்கொண்டுவந்தான். அப்பொழுது அந்தப்புரத்தாதிகளெல்லாரும் ஆலாத்தி சுற்றினார்கள். பிறகு பிராமணர்களோடுகூட இலட்சுமிவிலாசம் பொருந்திய கட்சீவான் கூடாரத்திற் பிரவேசிக்க, அரசன் மிகுந்த வணக்கத்தோடு தீர்க்கதமசு, உதங்கர், இருவர்க்கும் அர்க்கியபாத்தியமுதலிய கொடுத்து உபசரித்தான். பிறகு வஸ்திர சாமர தோரணாதிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிற கல்யாண மண்டபத்தில் மாப்பிள்ளையான கட்சீவான், தீர்க்கதமசு, உதங்கர் முதலானவர்களும் மற்றுமுள்ள ரிஷிகளும் உட்கார்ந்தார்கள். அரசனும் மந்திரி புரோகிதர்களோடும் உட்கார்ந்தான். அப்பொழுது அழகிய கூந்தலையும், கொவ்வைப் பழம்போன்ற இதழையும், பருத்து உயர்ந்த தனபாரங்களையும், சர்வாங்க லட்சணமுமுடைய மனோரமையை திவ்ய வஸ்திராபரணாதிகளால் அலங்காரஞ்செய்து, ஜனங்கள் நிறைந்த கல்யாண மண்டபத்துக்கு அழைத்துவந்தார்கள். மனோரமை தன் கையிலிருக்கிற தாமரை மலர்மாலையைக் கட்சீவான் கழுத்திலிட, உதங்கமுனிவர் வதூவரர் இருவரையும் திருமணமேடையிலுட்காரச்செய்து, அக்கினி வளர்த்து லாஜஹோமம் முதலான அக்கினிகாரியங்களையுமுடித்துப், பாணிக்கிரகணஞ் செய்வித்து விவாகக்கிரியைகளை நிறைவேற்றினார். அப்பொழுது அங்கிருந்த பிராமணர்களெல்லாம் வதூவரர்களுக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள். பிறகு அரசன் தன் சம்பந்திகளுக்கும், தன் பந்துஜனங்களுக்கும், மற்றுமுள்ள அதிதிகளுக்கும் ஷட்ரசோபேதங்களோடும் விருந்துசெய்வித்துத் தாம்பூலாதிகள்கொடுத்து மரியாதை செய்தான். பிறகு உதங்கர், தீர்க்கதமசு முனிவரிடம் சொல்லிப்பெற்றுக்கொண்டு தமதாசிரமம் போனார். மற்றைய பிராமணர்களெல்லாரும் தத்தமிடங்களுக்குப் போனார்கள். வெள்ளையானையும் அகஸ்தியதீர்த்தத்தில் மறைந்துபோயிற்று. தீர்க்கதமசும் தன் குமாரன் மருமகளோடு இஷ்டப்பிரதமான அகஸ்திய தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிச் சர்வ

லோகப் பிரசித்தமான அந்தத் தீர்த்தத்தைப் புகழ்ந்து, வேதாரணியத்திலிருக்கும் தமது புண்ணியாசிரமத்துக்குப்போக எண்ணங்கொண்டு, அரசனிடந்தெரிவிக்க, அரசனும் சந்தோஷத்தோடு கூடத் தன் குமாரத்திக்கு ஆயிரம்பசுக்கள், ஆயிரம்தாதிமார்கள், ஐந்நூறு கிராமங்கள், இலட்சம் பொன், திவ்யமான பதினாயிரம் வஸ்திரங்கள், நூறு நகைப்பெட்டிகள், ஆயிரம் முத்துமாலை, ரத்நமாலைமுதலிய ஆபரணங்களும், சீதனமாகக்கொடுக்க, தீர்க்கதமசு அந்தச் சீதனங்களோடு வதூவரர்களை அழைத்துக்கொண்டு வேதாரணியம் போய்ச்சேர்ந்து, புத்திமுக்திகளையருளும் வேதாரணியேசுவரரைச் சேவித்துக்கொண்டு சுகமாகவாழ்ந்திருந்தார். கட்சீவானும் தன் பத்தினியோடு நெடுங்காலம் வாழ்ந்து சுகித்திருந்தான். சுவநயனென்கிற ராஜரிஷியும் அகஸ்தியதீர்த்தத்தில் சகல சேனைகளோடும், அந்தப்புர ஸ்திரீகளோடும் ஸ்நானஞ்செய்து தன் பட்டணமாகிய மதுராபுரிபோய்ச் சேர்ந்தான். பிராமணர்களே! அகஸ்தியதீர்த்த மகத்துவத்தால் கட்சீவானென்கிற ரிஷி பிறருக்குக் கிடைப்பதற்கருமையான இராஜகுமாரத்தியை விவாகம் செய்துகொண்டார்.

இந்தப் புண்ணியகதையானது வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஐசுவரியம், கீர்த்தி, ஆயுசுமுதலியவற்றை விருத்தி பண்ணுகிற இந்த இதிகாசத்தை யெவ்வகையிலாவது படிக்கவேண்டியது அல்லது கேட்கவேண்டியது. இந்தப்புராதனமான இதிகாசத்தைப் படிக்கிறவர்களும், கேட்கிறவர்களும் இகபரமிரண்டிலுந்தரித்திரத்தையும், துக்கத்தையும் ஒருபோதும் அடையமாட்டார்கள்.

பதினேழாவது அத்தியாயம்

முற்றிற்று

பதினெட்டாவது:

இராமதீர்த்த மகிமையில் தருமபுத்திர மஹாராஜன் பொய்சொன்ன பாவம் நீங்கின

அத்தியாயம்.

கேளுங்கள் முனீசுவரர்களே! அகஸ்திய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டுத் தன் பாபநீங்கும்படி புண்ணியமான ராமகுண்டம்போகவேண்டும். இந்த ராம தீர்த்தக்கரையில் சுவற்பமான தட்சணைகொடுத்து யாகஞ்செய்தாலும் அது சம்பூரணமான தட்சணைகொடுத்துச் செய்தயாகபலனைக் கொடுக்கும்: அப்படியே அதின்கரையில் செய்யும் அத்தியயனமும் அநந்தபலனைத்தரும். இதன்கரையில் மூர்க்கனுக்கு ஒருபிடி அன்னமிட்டாலும் அதுவும் அநந்த பலனைத்தரும். பாபத்தை நீக்கிப்புண்ணிய பலனைக்கொடுக்கிற இந்த ராம தீர்த்த சரித்திரத்தை உங்களுக்குச்சொல்லுகிறேன். பூர்வம் அகஸ்தியர் சிஷ்யரான சுதீட்சணனென்ற ஒரு பிராமணோத்தமன் இராமனுடைய சரணாரவிந்தங்களை இதயத்தில் வைத்து இந்தத் தீர்த்தக்கரையில் மஹாகோரமான தபசுசெய்துவந்தார். தினந்தோறு மிந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி, இராமஷடாக்ஷர மந்திரத்தை ஐயாயிர உருஜபித்துப், பிக்ஷையெடுத்து மிதாகாரபோஜனஞ்செய்து, கோபத்தையும், இந்திரியத்தையும் அடக்கி, வெகுகாலம் தவசு புரிந்தார். இராமசந்திரனைச் சதா தியானம் பண்ணிக்கொண்டிருந்த அந்தமுனிவர் தினந்தோறும் பக்திபூர்வமாக சீதாசமேதரான ஸ்ரீராமசந்திரனை ஜானகிநாதா! அனுமப்பிரியா! கௌசிகமுனிவர் செய்த யாகசம்ரக்ஷணை விஷயத்தில் தீக்ஷைசெய்து கொண்டவரே! உமக்கு நமஸ்காரம், கௌசலை புத்திரனும், விசுவாமித்திரருக்குப் பிரியராயிருக்கிற உமக்கு நமஸ்காரம். சிவனுடைய வில்லை முறித்தவரே, தேவர்களாலே துதிக்கப்பட்டவரே! மாரீசாந்தகா! தாடகையின் பிராணனை யபகரித்தவரே, இராஜேந்திரா உமக்கு நமஸ்காரம்; தசரதகுமாரா! ஹரியே உமக்கு நமஸ்காரம்; பரசுராமனை ஜெயித்தவராயும் கரனைக்கொலைத்தவராயும், சுக்கிரீவனுக்கு நாதராயும், வாலியைச்

சம்ஹரித்தவராயும், விபீஷணனுடையப் பயத்தையும், துக்கத்தையுந்தீர்த்தவராயும், பாபத்தைப்போக்குகிறவராயும், அகலிகையின் துக்கத்தை அகற்றினவராயும், பரதனுக்கு மூத்தசகோதரராயும், சமுத்திரத்தின் கருவத்தை நீக்கினவராயும், அந்தச்சமுத்திரத்தில் சேதுவைக்கட்டினவராயும், அண்டினவர்களைச் சம்சாரத்தினின்றும் விடுவிப்பவராயும், பிரமசொரூபியாயும், இலட்சுமணனுக்குச் சகோதரராயும், இராட்சதரைச் சங்கரித்து, இராவணனைக்கொன்றவராயும், கோதண்டத்தைக் கையிலேந்தினவராயும், சமஸ்தமான இராக்ஷதரையும் நாசம் பண்ணினவராயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம், என்று இந்தமாதிரி ஸ்தோத்திரம் பண்ணி அவரது திருவடியிலேயே சிந்தையைச் செலுத்திவந்தார். இப்படித்தியானித்து வருகிற அவருக்கு ஸ்ரீராமரிடத்தில் நிலையான பக்தியும், ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றென்கிற அத்துவித ஞானமும், தான் அத்தியயனம் பண்ணியிராதவும் கேட்டிராதவுமான வேதங்களினறிவும், பரகாயப்பிரவேச சாமர்த்தியமும், ஆகாசகமன சக்தியும், அறுபத்து நாலுகலைக்ஞான வுணர்ச்சியும், கௌதசாஸ்திரங்களைக் குருவில்லாமலறியும் அறிவும், எல்லா உலகங்களிலும் தடையில்லாமல் போகும்படியான வல்லமையும், இந்திரியங்களுக்கெட்டாதவைகளைப் பார்க்குந் தன்மையும், தேவர்களோடு பேசும் சாமர்த்தியமும், எறும்பு முதலான ஜந்துக்களின் பாஷையையறியும் வல்லமையும், இன்னமும் யோகிகளுக்குக் கிடைக்கக்கூடியதான சகலமும் கிடைக்கப்பெற்றார்.

இவ்வளவு வைபவமுடைய இந்தத்தீர்த்தமானது, மஹாபாதகங்களைப்போக்குகிறது. மஹாசித்திகளைக்கொடுக்கிறது. அபமிருத்தியுவை நீக்குகிறது. புக்தியையும் முக்தியையுந் தருகிறது. மனிதர்களுக்கு நரகதுக்கத்தை நாசமாக்குகிறது. இராமனிடத்தில் பக்தியைத்தருகிறது. சம்சாரதுக்கத்தை விலக்குகிறது. இப்படிப்பட்ட தீர்த்தக்கரையில் ஸ்ரீராமரானவர் லோகாநுக்கிரகார்த்தமாக ஒரு மஹாலிங்கத்தை ஸ்தாபித்துப் பூசைசெய்தார். இந்த இராம தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி மஹாலிங்க தரிசனஞ் செய்தவனுக்கு முக்தியே கைகூடிவருகிறதானால் மற்றப்பொருள் கிடைக்குமென்பதில் ஐயமென்ன ? கேளுங்கள் முனிவர்களே ! பூர்வம் தர்மபுத்திரர் இதில் ஸ்நானம் பண்ணிச் சிவதரிசனஞ்செய்து தான் பொய்சொன்ன தோஷத்தினின்றும் அக்ஷணத்தில் விடுபட்டார் என்றுசொல்ல, முனிவர்கள் ஐயா சூதமுனிவரே! தர்மபுத்திரர் இந்தப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினதனால் நிவர்த்தியான கொடிய பொய்யை யேன் சொன்னார்? என்றுகேட்க சூதர் தர்மபுத்திரர் சண்டையில் வஞ்சனையாகச் சொல்லியதும் இந்தத்தீர்த்தத்தினால் நிவர்த்தியானதுமான பொய் யின்னதென் றுங்களுக்குச் சொல்லுகிறேன்.

பூர்வகாலத்தில் தர்மபுத்திரன் முதலான பாண்டவர்களும், துரியோதனன் முதலான தார்த்தராட்டிரர்களும் இராஜ்ய விஷயமாகப் பலமான மனஸ்தாபமடைந்து ஏராளமானசேனைகளோடு குருக்ஷேத்திரம் போய் முன்வைத்த காலைப் பின்வாங்காமல் சண்டைசெய்தார்கள். அப்பொழுது கங்காபுத்திரரான பீஷ்மர் பத்து நாள் யுத்தஞ்செய்து பூமியில் விழுந்து விட்டபின் மஹாபல பராக்கிரமங்களையுடைய துரோணாசாரியார் திருஷ்டதுய்ம்மனோடு கூட ஐந்துநாள் சண்டைசெய்து, அநேக அஸ்திரசஸ்திரங்களால் பாண்டவசேனையை வதைக்க, திவ்யாஸ்திரங்களையறிந்த சூரனான திருஷ்டதுய்ம்மனும், சரமாரிபொழிந்து துரோணர் சேனையைச் சின்னபின்னப்படுத்தினன். துரோணரும் திருஷ்டதுய்ம்மன் மேல் அம்புமழை சொரிந்தார், துரோணரது பாணவருஷத்தால் துன்பமடைந்த பாண்டவருடைய சைனியங்கள் பத்துத்திக்குகளிலுஞ் சிதறியோடினதினாலே தேராளிகளிற்சிறந்த அர்ஜுனன் துரோணரை யெதிர்க்க, யுத்தவீரர்களான இருவரும் கைகலந்து யுத்தஞ்செய்தார்கள். அதைப் பார்க்கும்படி தேவர்கள் ஆகாயத்தில் கும்பல்கும்பலாகக் கூடினார்கள். துரோணார்ஜுனர்களுடைய யுத்தத்துக்குச்சமானமான சண்டை பூலோகத்தில் கிடையாது. கோபத்தோடு யுத்தஞ்செய்த துரோணார்ஜுனர்களுடையயுத்தத்துக்கு அந்தச்சண்டையே சமானமாகும். இப்படிச்சண்டை செய்கையில் துரோணர் தன்பிரியசிஷ்யனான அர்ஜுனனுடைய சாமர்த்தியத்தை மெச்சி, அவனை விட்டுப்பாஞ்சால சேனைக்குள் புகுந்து, அநேகமாயிரம் இராஜர்களையும், அநேகமாயிரம் யானை குதிரைகளையும் நாசம்பண்ண, திருஷ்டதுய்ம்மன் கோபங்கொண்டு தன் பாணங்களால் துரோணரை யடித்தான். துரோணர் வில்லைக் கையிலேந்தி அதிதீட்சணமான அக்கினிசிகையையொத்த அம்புகளால் அடிக்க திருஷ்டதுய்ம்மன் முகந்திரும்பியோட, அதைக்கண்ட பீமசேனன் அவனைத் தன் தேரிலேற்றிக்கொண்டு, துரோணரைப்பார்த்து, அதமப்பிராமணர்கள் தங்கள் குலவிருத்தியத்தை விட்டு, அஸ்திராப்பியாசம் பண்ணிக்கொண்டு

தயையைவிட்டுச் சண்டை செய்யாமல் போனால் அரசர்கள் சண்டையில் சாகப்போகிறதில்லை. பிராமணர்களுக்கு முக்கிய தர்மம் இதர ஜீவ இம்சைசெய்பக்கூடாதென்று ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்டிருக்கிறது. குடும்பரட்சணைத்துக்கு ஜீவ இம்சை செய்கிறது வேடர்தொழில்; நீர் ஒரு பிள்ளையைக் காப்பாற்ற வேண்டியதற்காக அநேகம் இராஜர்களைச் சண்டையில் கொல்லுகிறீர்; ஓ பிராமணரே! அந்த ஒரு பிள்ளையும் ரணகளத்தில் செத்துக்கிடக்கிறான். அவன் செத்தும் உமக்கு வெட்கமும் துக்கமுமில்லாமலிருக்கிறதே என்று சொன்னான். அவ்வசனத்தைத் தர்மபுத்திரர் வாக்கால் கேட்டு, உண்மையென்று எண்ணித், தன் ஆயுதங்களை யெறிந்து விட்டுத்தமது இரதத்தின் நடுவில் விழுந்து, யோகசித்தியால் பிராயோபவேசம் (சாவதற்காகச் சங்கற்ப பூர்வமாகச்சகலத்தையும் வெறுத்து உண்டியை ஒழித்துப்படுத்திருத்தல்)செய்தார். இதுசமையமறிந்து துஷ்டதுய்ம்மன் சத்தியையேந்திக்கொண்டுபோயவர்கழுத்தைவெட்ட ஓடிவருகையில், துரோணர்சிரசினின்றும் ஒரு ஜோதியானது கிருஷ்ணன், அர்ஜுனன், தர்மபுத்திரர், கிருபாசாரியார் முதலானவர்கள் பார்த்திருக்கமேலே கிளம்பிப்போயிற்று. இப்படி ஜீவன்போய்க்கிடந்த துரோணருடைய சிரசைத்திருஷ்டதுய்ம்மன் வெட்டியெறிந்தான். பரத்துவாஜ கோத்திரத்தில் பிறந்த துரோணரிறந்ததுங்கௌரவசேனைகள் பயந்தோடினார்கள். அப்படியோடுவதைக்கண்ட பாண்டவர்களும் திருஷ்டதுய்ம்மன் முதலானவர்களும் சந்தோஷித்தார்கள். சேனைகளோடிவருவதைக்கண்ட அசுவத்தாமன் துரியோதனனைப்பார்த்து ஐயா ஏன்? நமது படை ஆயுதங்களைவிட்டு ஓடுகிறதென, யுத்தத்தில் துரோணரிறந்தாரென்று தான் சொல்லப்பிரியமில்லாமல் கிருபாசாரியாரை நீர் சொல்லுமென்றேவ, கிருபாசாரியர் அசுவத்தாமனைப்பார்த்து, அப்பா அசுவத்தாமா! பராக்கிரமசாலியான உன் பிதா பிரமாஸ்திரத்தால் அநேகம் சத்துருக்களைக்கொன்று யமலோகத்துக் கனுப்பியபோது, கிருஷ்ணரானவர், துரோணர் ஜயிக்கமுடியாத வீரபராக்கிரமமுடையவரென்றுகண்டு, பாண்டவர்களைப்பார்த்து இவரைஜயிப்பதற்கோருபாயமிருக்கிறது. அதென்னவென்றால்துரோணரேயுமதுகுமாரனை அசுவத்தாமன் யுத்தத்திலிப்பொழுதிறந்தானென்று, நம்பத்தகுந்த சத்தியவந்தனை ஒருவன் சொன்னால் துரோணர் தக்ஷணமே ஆயுதங்களையெறிந்துவிட்டு ரணகளத்தினின்று திரும்பிவிடுவார். ஆகையால் தர்மபுத்திரரே யிந்தப் பொய்வார்த்தையை நீர் சொல்லவேண்டும்: இல்லாமற்போனால் யுத்தவீரனாகிய துரோணரை ஜயிக்கமுடியாது. ஒருவனைத் தர்மயுத்தத்தினாலே ஜயிக்கமுடியாமற்போனால் தர்மத்தைவிட்டு அதர்ம்மத்தினாலாவது சத்துருவை ஜயிக்கவேண்டும் என்று கிருஷ்ணர் சொன்னதைக்கேட்ட பீமசேனன், உன் தந்தையிடத்தில் வந்து துரோணரே! அசுவத்தாமனிப்பொழுது இறந்துபோனானென்று சொல்லத், துரோணர்அதை நம்பாமல் தர்மபுத்திரரிடம்வந்து தர்மபுத்திரா! என் பிள்ளை சண்டையிலிறந்தானாமே அது உண்மைதானா? நீ சத்தியவாதியல்லவா? என்று கேட்க, சத்தியவந்தரான தர்மபுத்திரரும், நாமிப்பொழுதென்ன பண்ணுகிறதென்று மனதிற் சஞ்சலமடைந்து, அசுவத்தமா என்கிற யானை பீமனாலடிப்பட்டிறந்துபோயிருந்ததினால், அசுவத்தாமா சண்டையிலிறந்தது உண்மைதானென்று கபடமாய்ச்சொன்னதைக்கேட்ட உன் தகப்பனும் ஆயுதங்களையெறிந்துவிட்டு யுத்தகளத்தைவிட்டுத் திரும்பினார். அது கண்ட தர்மபுத்திரர் அசுவத்தாமா இறந்தது என்பதற்கு, அன்னியருடைய யானையென்பது எனதபிப்பிராயமேயல்லாமல் உமது புத்திரனாகிய அசுவத்தாமா என்பதல்லவென்று சொல்லியுங்கேளாமல், நானெறிந்த ஆயுதங்களை மீண்டுமெடுப்பதில்லையென்று பிரதிக்ஞை பண்ணியிருப்பதினால், நானெறிந்த ஆயுதங்களை யெடுக்கமாட்டேனென்று சொல்லிச் சஸ்திரத்தையெடுக்காமலிருந்துவிட்டார். அப்பொழுது திருஷ்டதுயம்மன் தனக்கு மிருத்தியுவென்றறிந்து, இரதமத்தியில் சமாதிகூடிப் படுத்துக்கொண்டிருந்தபோது, அவரது கபாலம் பிளந்து பிராணவாயு மேலேகிளம்பத், திருஷ்டதுய்ம்மன் கையில் கத்தியெடுத்து, அவரது குடுமியைக் கையால் பிடித்துக்கொண்டு, பார்த்தனாதியர் கொல்லாதே கொல்லாதேயென்று சொல்லியுங் கேளாமல் அவர் சிரசைவெட்டியெறிந்துவிட்டான் என்று சொன்னார். இப்படித் தகப்பனிறந்ததைக்கேட்ட அசுவத்தாமா வெகுநாழிகையழுது பிறகு கோபமேற்கொண்டு என் தகப்பன் சஸ்திரங்களைக் கீழேயெறியும்படியாகப் பொய்சொல்லிய தர்மபுத்திரனையும், மற்றைய பாண்டவர்களையும், நிராயுதராயிருந்த என் தந்தையின் சிகையைப் பிடித்துக்கொண்டு சிரசைவெட்டின திருஷ்டதுயம்மனையும், ஒரு நொடியிற் கொன்றுபோடுகிறேன்; என் பராக்கிரமத்தைக் கிருஷ்ணனும் பாண்டவரும் பார்க்கட்டும் என்று பயங்கரமான பிரதிக்ஞை பண்ணிக்கொண்டான். அப்பொழுது சூரியாஸ்தமனமாய்விட்டது. இரண்டுகட்சி அரசர்களும் தங்கள் தங்கள்கூடாரங்களுக்குப்போய்ச்சேர்ந்தார்கள். பிறகு மூன்றுநாள்யுத்தத்தில்

கர்ணன், சல்லியன், துரியோதனன் முதலியவர்களைக்கொன்று ஜயித்துச் சண்டையிலிறந்துபோனவர்களெல்லாருக்கும் தௌமியர் முதலிய பிராமணர்களைக்கொண்டு உத்தரக்கிரியைகளைச் செய்துமுடித்துத், தம்பியார்களோடுகூடித் திருதராஷ்டிரனை வணங்கி, அவனுடைய அநுமதிபெற்றுச் சண்டையில் மிகுந்தசேனைகளோடு அஸ்தினாபுரம்போய்ச்சேர்ந்து, அரண்மனையில் வசித்துக்கொண்டிருந்தார். சில நாள் கழிந்தபின் பட்டணத்து ஜனங்களும், தௌமியாதி ரிஷிகளும் ஒன்றாகக்கூடித் தர்மபுத்திரருக்குப் பட்டாபிஷேகஞ்செய்ய ஆரம்பித்தபோது, ஆகாயத்தில் ஒரு அசரீரவாக்கு, சத்துருக்களுக்கும் வேண்டியவனான தர்மபுத்திரனே! நீ பட்டாபிஷேகம் செய்துக்கொள்ளாதே. நீ இராஜ்யபாரஞ்செய்வதற்கு அருகனல்ல. ஏனென்றால் பொய்பேசிப் பிராமணோத்தமனை நிராயுதபாணியாக்கி, வெட்கமில்லாமல் கொன்றாயல்லவா! ஆகையால் இந்தப்பாபம் போகும்படி பிராயசித்தம் பண்ணிக்கொண்டால் அல்லாமல் உனக்கு இராஜ்யபரிபாலனஞ் செய்யும் யோக்கியதையுண்டாகாது. ஆகையால் நீ சீக்கிரத்தில் பிராயசித்தஞ்செய்து கொள்ளென்று வெளிப்பட்டதைக்கேட்ட தர்மபுத்திரரும் நடுநடுங்கி, ஐயோ! மூடத்தனத்தினாலே பேராசைகொண்டு முன்பின் யோசியாமல் அற்பமான ராஜ்யத்துக்காக இப்பேர்ப்பட்ட கொடும் பாபத்தைச் செய்துவிட்டேனே, இந்தப்பாபம் போவதற்கு என்னவழி? நான் எங்கே போவேன், என்னசெய்வேன்? என்னதானம் பண்ணுவேன்? என்று புலம்பிக்கொண்டிருக்கும் பொழுது, வியாசமுனிவர் அங்கேவந்தார். தர்மபுத்திரர் உடனே யெழுந்திருந்து நமஸ்கரித்து பக்தியுடன் அர்க்கியபாத்தியாசமனங்கொடுத்துப் பூஜைசெய்து, அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு, அசரீரிசொல்லியதையெல்லாம் அவருக்குச்சொன்னார். அதுகேட்டு அந்த மஹாமுனிவர் வெகு நேரத்தியானத்திலிருந்து, தர்மபுத்திரரைப்பார்த்துச் சொல்லுகிறார், அரசனே நீர் அஞ்சவேண்டாம். பாப நிவர்த்திக்கு உபாயஞ்சொல்லுகிறேன்; நீர் அதைக்கேட்டு அனுஷ்டானம் பண்ணும்; தெக்ஷிண சமுத்திரத்தில் சேதுரூபமாகிய கந்தமாதன மலையொன்றிருக்கிறது; அதில் இராமதீர்த்தமென்கிற மஹாபாதக நாசனமானபுண்ணியதீர்த்தமொன்றிருக்கிறது. அதைக்கண்டமாத்திரத்திலே பாபராசியெல்லாம் சூரியனைக்கண்ட இருளைப்போல நாசமடையும். இராமனால் நிர்மாணம் பண்ணப்பட்டிருக்கிற இராமதீர்த்தத்தைப்பார்த்தவுடனே பிரமஹத்தி நீங்கிப்போய்விடுகிறது; இதில் சந்தேகமே யில்லை. மஹாராஜனே! முத்தியளிக்கின்ற

அந்தத்தீர்த்தத்துக்குப்போய் ஸ்நானம் பண்ணும்; பிறகு அதன் கரையில் பசு, பூமி, எள்ளு, வஸ்திரம், தங்கம், வெள்ளி, இவைகளைத் தானம் பண்ணும். நிச்சயமாய் உமது பாபம் விலகிநீர் இராஜ்யம் ஆளுகிறதற்கு அருகராய்விடுவீர் என்று சொல்லத் தர்மபுத்திரரும் அக்ஷணமே சகாதேவனென்கிற தம்பியை இராஜ்யத்தில் வைத்துவிட்டு இதரமான தம்பிகளோடும், தௌமியமுனிவரோடும், பாதசாரியாய் இராமசேதுவை நோக்கிப் புறப்பட்டுக் கொஞ்சநாளில் அவ்விடம் போய்ச்சேர்ந்து புரோகிதரான தௌமியர் சொல்லியபடி சங்கற்பஞ்செய்துகொண்டு, புண்ணியமான இராமதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, ஆசமனம் பண்ணி, ஆத்மசுத்திசெய்துகொண்டு, க்ஷேத்திரபிண்டம் போட்டு, வியாசர் சொன்ன சகலதானங்களும்செய்தார். இப்படியே ஒருமாதகாலம் நிராகாரராய் ஸ்நானம் பண்ணிப் பணத்திலாசையில்லாமல் சகலதானங்களும் செய்துவந்தார். மாசாந்தத்தில் மறுபடி அசரீரிவாக்குத் தோன்றி, யுதிஷ்டிர மஹாராஜனே! நீர் கபடமாய்ப்பொய்சொல்லிப் பூர்வம் ஆசாரியனைக்கொன்றதனால் உண்டாகிய பாபங்களெல்லாம் நீங்கிப்போய்விட்டன; இராஜ்பாருகனாய்விட்டாய்; உன் இராஜதானி போய்ப்பட்டாபிஷேகஞ்செய்துகொண்டு இராஜ்யபரிபாலனம் பண்ணு என்று சொன்னதைக்கேட்டுத் தர்மபுத்திரர் பரமானந்த பூரிதராய், அசரீரி தோன்றிய திக்குநோக்கி நமஸ்கரித்து, அஸ்தினாபுரம் போய்ச்சேர்ந்து, பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு இராஜ்யத்தை யாண்டிருந்தார். கேளுங்கள் பிராமணோத்தமர்களே! இவ்விதம் தர்மபுத்திரர் இராம தீர்த்தத்தில் ஸ்நானம்செய்ததனால் சகல பாபங்களும்போய்ப், பரிசுத்தராய் இராஜ்ய பரிபாலனத்துக்கு யோக்கியரானார். இந்தப்படி யிராமதீர்த்தத்தின் அழகான சரித்திரத்தை யுங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்தத்தீர்த்தமானது சகலபாபங்களையும் போக்கிப் புத்தி முத்திகளைக் கொடுக்கிறது. இந்த அத்தியாயத்தைப் படிப்பவரும் கேட்பவரும் சகல பாபங்களினின்றும் விடுபட்டுப், பிறருக்குக் கிடைப்பதற்கருமையான கைலாசத்தையடைந்து மறுபிறப்பில்லாமல் வாழ்ந்திருப்பார்கள்.

பதினெட்டாவது அத்தியாயம்

முற்றிற்று

பத்தொன்பதாவது

இலட்சுமண தீர்த்தமகிமையில் பலராமர் பிரமஹத்தி நீங்கின

அத்தியாயம்.

கேளும் முனிவர்களே! தாரகப்பிரம்மமாகிய ஸ்ரீராமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்தபின் நியமத்தோடு இலட்சுமண தீர்த்தம் போகவேண்டும். அந்த இலட்சுமணதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோர் சகல பாபங்களினின்றும் விடுபட்டு, தாரித்திரம் நீங்கி, ஆயுசு ஓங்கி, குணஞ்சிறந்து, கல்விநிறைந்து, புத்திர பௌத்திரர்கள் மிகுந்து, பிறப்பற்ற மோக்ஷசாம்பிராஜ்யத்தையடைந்து வாழ்ந்திருப்பார்கள். அத்தீர்த்தக்கரையில் இலட்சுமண மந்திரத்தை ஜபிப்பவர் சகல வேத சாஸ்திர பண்டிதராகிறார்கள். அந்தக்கரையில் இலட்சுமணர் ஒரு மஹாலிங்க ஸ்தாபனஞ்செய்திருக்கிறார். அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி இலட்சுமண லிங்கத்தைப் பூஜிப்பவர்கள் இகத்தில் தரித்திர ரோகங்கள் நீங்கி அந்தத்தில் சமுசாரபந்தத்தினின்றும் விடுபடுவார்கள். கேளுங்கள் பிராமணோத்தமர்களே! பூர்வகாலத்தில் ரோகிணி புத்திரரான பலராமர் இந்த இலட்சுமண தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி இலட்சுமணலிங்கத்தைத் தரிசித்துப் பிரமஹத்தியினின்றும் நீங்கினார் என்று சொன்னதைக்கேட்ட முனிவர்களும், ஓ சூதமுனிவரே! பலராமருக்கு ஏன் பிரமஹத்தி வந்தது அது எப்படி நீங்கிப்போயிற்று? என்று கேட்கச் சூதர் சொல்லுகிறார்.

பூர்வகாலத்தில் சேஷனுடைய அவதாரமாகிய பலராமர், கௌரவரும் பாண்டவர்களும் யுத்தத்துக்குச் சித்தமாயிருந்ததுகண்டு, பந்துக்கள் மடியப்போவதைப் பார்க்கப் பிரியமில்லாதவராய்த், தமக்குள் ஒரு யுக்தியை யோசித்துத் தீர்மானித்தார். அதாவது நாம் கௌரவர்களுக்கு உதவிசெய்தால் பாண்டவர்கள் நம்மிடத்தில் கடுங்கோபங் கொள்வார்கள். பாண்டவர்க்குத் துணைசெய்தால் துரியோதனன் கோபமடைவான். நாமிருவருக்கும் பொதுவாயிருக்

கவேண்டும் ஆகையால் தீர்த்த யாத்திரை யென்கிற காரணத்தை முன்னிட்டு நாம் போய்விடுவோமென்று யோசித்துப், புறப்பட்டுப்போய்ப் பிரபாசமென்கிற தீர்த்தத்துக்கு வந்து சங்கற்பபூர்வமாக அதில் ஸ்நானம்பண்ணித், தேவ ரிஷி பிதுர்கணங்களுக்குத் தர்ப்பணஞ்செய்து, பின்பு மேற்குமுகமாயோடும் சரஸ்வதி தீர்த்தம், பிருதூதகம், பிந்துசரஸ், முக்திப்பிரதமான பிரமதீர்த்தம் கங்கை, யமுனை, சிந்து, சதத்துரு, சுதரிசனம் முதலிய தீர்த்தங்களிலாடி, முனீந்திரர்கள் வசிக்கின்ற நைமிசாரணியம் போய்ச்சேர்ந்தார். அவ்விடத்தில் தீர்க்கசத்திரம் என்ற யாகத்தைச் செய்துகொண்டிருந்த நாமவந்தர்களாகியும், இந்திரிய நிக்கிரகஞ் செய்தவர்களுமாகிய முனிவர்கள் யதுகுலசிரேஷ்டரான பலராமர் வந்ததைக்கண்டு, ஆசனத்தை விட்டெழுந்திருந்து நமஸ்காரம்பண்ணி ஓராசனமளித்து, சந்தமூலங்களாலுபசரித்தார்கள். அலாயுதரான பலராமர்பிராமணர்களெல்லாருந்தன்னை வணங்கினதையும், வியாசசிஷ்யரான சூதர் தன்னை வணங்காமல் உயர்ந்த ஆசனத்தில் அஞ்சலியஸ்தராயுட்கார்ந்திருப்பதையும் கண்டு, கோபங்கொண்டு, சங்கிரணஜாதியிற் பிறந்த சனனான சூதன் முனிவர்களுக்கு நடுவே உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருப்பது தகுதியல்ல; மேலுந் தர்மசம்ரக்ஷகனான நம்மைக்கண்டு எழுந்து நமஸ்காரம் பண்ணாமலும், அச்சமில்லாமலும் அலக்ஷியமாயுட்கார்ந்து கொண்டிருக்கிறான். இவன் வியாசரிடத்தில் இதிகாச புராணங்களையும் தர்மசாஸ்திரங்களையும் படித்துக்கொண்ட இறுமாப்பினால் நம்மைக்கண்டு எழுந்திராமலிருக்கிறான். வியாசர் சிஷ்யரான பயிலராதி ரிஷிகளிப்படி அகர்மத்தைச் செய்யமாட்டார்கள். நாம் துஷ்டர்களை நிக்கிரகம் பண்ணுவதற்காகப் பூலோகத்தில் அவதாரஞ் செய்திருக்கிறோம். ஆகையா லிந்தத் துராத்மாவும், அசேதனனுமாயிருக்கிற சூதனைக்கொன்று விடுவோம்; நமது கையாலடிபட்டிறந்தா லிந்தத் துஷ்டன் பரிசுத்தனவான்; ஐயமேயில்லையென்று சொல்லிக்கொண்டு, முசலாயுதத்தையும் அலாயுதத்தையும் உடைய பலராமர் தன் கையிலிருந்த தர்ப்பைப்புல்லினால் அவன் தலையை அறுத்து எறிந்தார். அதுகண்ட முனிவர்களெல்லாரும் ஐயோ கஷ்டமேயென்றழுது பலராமரைப்பார்த்து, ஏ சங்கருஷணரே நீர் அநியாயஞ் செய்துவிட்டீர்; இந்தச் சூதருக்கு நாங்கள் தீர்க்க சத்திரயாகத்தில் பிரமாசனங்கொடுத்து, அக்ஷயமான ஆயிசுங்கொடுத்திருப்பதை யறியாமல் அவரைக்கொன்று பிரமஹத்திசம்பாதித்துக் கொண்டீர்;

யோகிகளிற் சிறந்த உம்மை யடக்கி ஆள்கிறவனொருவனுமில்லை. ஆனால் நீர்செய்த பிரமஹத்திக்குப் பிராயச்சித்தத்தை விசாரித்து லோகானுக்கிரகார்த்தஞ்செய்துகொள்ளவேண்டும். வேறு காரணத்துக்காக இல்லை என்று முனிவர் கூறக்கேட்ட பலராமர் ஆஸ்திகர்களே! லோகங்களுக்கு அநுஷ்டித்துக் காட்டும் பொருட்டு நான் பிராயசித்தம் பண்ணிக்கொள்கிறேன்; நான் செய்துகொள்ளவேண்டிய பிராயசித்த மின்னதென்று நீங்களே யோசித்துச்சொல்லுங்கள். நீங்களிந்தச்சூதனுக்குத் தீர்க்கமான ஆயுசுகொடுத்திருப்பதினால், நான் ஜகத்தைச்சிருஷ்டிக்கும்படியான என் சக்தியால் இவனுக்கு மனம் இந்திரிய முயிர் முதலியவற்றைக் கொடுக்கிறேன் என்று சொல்ல ரிஷிகள் பிரபுவே உம்முடைய அஸ்திர வீரியமும், இவனுடைய சாவும், எங்கள் வாக்கும் பொய்யாகாதபடி செய்தருளவேண்டும் என்று சொல்லப், பலராமர் தன்னாத்மாவே தனக்குப் புத்திரனாகிறானென்று வேதங்கள் முறையிடுகிறபடியால் இந்தச்சூதனுடைய சரீரத்திலிருந்து ஒரு பிள்ளை பிறந்து, தீர்க்காயிசாயிருந்து, சர்வஞ்ஞனாகி யுங்களுக்குத் தினமும் புராணங்களைச் சொல்லப்போகிறான் என்று சொல்லி, மறுபடியுமவர்களைப்பார்த்து உங்களுக்கு இஷ்டமான பிராயச்சித்தத்தைச் சொல்லுங்கள் நான் செய்யத்தயாராயிருக்கிறேன்; நான் செய்த பாபத்துக்கு நீங்களே பரிகாரஞ்சொல்லுங்கள் என்று வணக்கமாய்ச்சொன்னார். முனிவர்கள் இல்வலன் புத்திரனாகிய வற்கலன் என்கிற அசுரன் பருவகாலத்தில் இங்கேவந்து, அஸ்தி, இரத்தம் மாம்ச மூத்திர மலங்களை யிறைத்து எங்களுடைய யாகங்களைக் கெடுக்கிறான். ஆகையால் லோககண்டகனான அவனை நீர் கொன்றால் எங்களுக்குப் பூஜைபண்ணினதாகும். நீர் ஒருவருஷகாலம் இந்தப்பாரதவருஷத்திலிருக்கிற தீர்த்தங்களிலெல்லாம் நியமத்தோடு ஸ்நானம் பண்ணினால் உமக்குப் பாபசாந்தியுண்டாம் என்று சொன்னார்கள். அப்பொழுது பருவகாலம்வந்தது; ரிஷிகளும் யாகத்தைத்தொடங்கினார்கள். அப்பொழுது புழுதிகளையும், இரத்தத்தையும், ஊன் தண்ணீரையும்; மலத்தையும் மழைசொரிவதுபோல இறைத்துக்கொண்டு பெருங்காற்று வீசும்படி நடந்துவந்து, யக்ஞசாலையில் நுழைந்த சூலபாணியாயும் மஹாபல பராக்கிரம முடையவனாயும், எரிகிற மலைபோலவும், உருகின தாம்பிரத்தைப்போலவும் தெற்றுப்பல்லும் செம்பட்ட மயிரும் பொருந்திப், பயங்கரமான முகத்தையுடைய வற்கலாசுரனைப் பலராமர்பார்த்துச் சத்துருக்களைப்

பிளக்கிற முசலத்தையும், அசுரர்களையழிக்கிற கலப்பையாயுதத்தையும், தைத்தியர்களைக்கொல்லும் ஆயுதத்தையும் நினைக்க உடனேயவைகள் கிட்டவந்தன. அப்பொழுது பலராமர் கலப்பையினால் ஆகாயத்திலோடுகிற வற்கலாசுரனை வளைத்திழுத்து, கோபங்கொண்டு முசலத்தால் தலையில் அடித்தார். அவன் மண்டை பிளந்து, இரத்தம் கக்கிக்கொண்டு, [illegible], வஜ்ஜிராயுதத்தாலடிபட்ட மலையைப்போலப் பூமியில் விழுந்து மடிந்தான். அப்பொழுது ரிஷிகளெல்லாரும் ராமனுக்கு ஆசீர்வாதம் பண்ணித் தேவர்கள் விருத்திரனைக் கொன்ற இந்திரனுக்கு அபிஷேகஞ் செய்ததுபோலப், புண்ணிய தீர்த்தத்தால் அபிஷேகஞ்செய்து, தாமரைமலரால் கட்டின வைஜயந்தி என்கிற மாலையையும், இரண்டு அழகான வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் கொடுத்தார்கள். அவைகளால் அலங்கரிக்கப்பட்ட பலராமர் புஷ்பித்த விருக்ஷங்களோடு கூடின கயிலாச மலையைப்போல விளங்கினார். பிறகு முனிவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு ஒருவருஷம் நியமத்தோடு தீர்த்தயாத்திரைசெய்து வருஷமுடிவில் தன் பட்டணம்போக யத்தனஞ்செய்கையில் கறுத்துமெலிந்த ஒரு நிழல் பின் தொடரக்கண்டார். அப்பொழுது ஆகாயத்திலொரு அற்புதமான வாக்குத்தோன்றி, மஹா பாகுவான **பலபத்திரா**! நீ செய்த தீர்த்தயாத்திரையினால் உன் பிரமஹத்தி முழுமையுந் தொலையவில்லை என்று சொன்னதைக்கேட்டு ஒருவருஷம் தீர்த்தயாத்திரை செய்தும் பிரமஹத்தி போகவில்லையாமே, என்னசெய்வோமென்று மனநொந்து நைமிசாரணியம் வந்து சேர்ந்து, முனிவர்களுக்குத் தான் கேட்டுவந்த ஆகாசவாணியையும், தன்னை நிழல்போலத் தொடர்ந்த பிரமஹத்தியையும் தெரிவிக்க, முனீசுவரர்கள் ஐயா! உமக்குப் பிரமஹத்தி முழுதும் நீங்காமலிருக்குமானால் கந்தமாதன பருவதத்திலிருக்கிற மஹா துக்கத்தையும், கொடியரோகங்களையும் போக்குகிற இலட்சுமண தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி அங்கிருக்கும் லிங்கத்தைத் தரிசனம் செய்தால் உமக்குப் பிரமஹத்திதோஷம் முற்றுமொழிந்து போமென்பதில் ஸந்தேஹமே யில்லையென்று சொன்னார்கள். அதைக்கேட்ட பலராமரும் கந்தமாதனம்போய் இலட்சுமண தீர்த்தத்தில் சங்கற்ப பூர்வமாக ஸ்நானம்பண்ணிப்பிராமணர்களுக்குப் பசு, பூமி, தனம், தானியம் முதலியவைகளைத் தானம்பண்ணினார். அப்பொழுது ஆகாசத்திலொரு அசரீரிவாக்குத் தோன்றி, ஹலாயுதா! உம்முடைய பிரமஹத்தி யிப்பொழுது முற்றுமொ

ழிந்து போயிற்று. சந்தேகப்படாதேயும்; நீர் உம்முடைய பட்டணத்துக்குச் சுகமாகப் போய்ச்சேரும் என்று சொல்லக்கேட்டபலராமரும் அந்தத்தீர்த்தத்தைப்புகழ்ந்து, அங்கிருக்குந் தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானஞ்செய்து, தனுக்கோடிக்குப்போய் அவ்விடத்திலும் ஸ்நானம் பண்ணி இராமநாதரைத் தரிசனஞ் செய்து, சகல பாவங்களும் நீங்கித் தன் பட்டணமான துவாரகைக்கு வந்துசேர்ந்தார். கேளுங்கள் முனிவர்களே! இந்தப்படி பிரமஹத்தியாதிபாவங்களை நீக்குகிறதும், பவித்திரமாயும், நிர்மலமாயுமிருக்கிற இலட்சுமணதீர்த்தத்தின் மகிமையையுங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தைப் படிப்போரும், கேட்போரும் பிறப்பற்றமுத்திபதத்தை யடைகிறார்கள்.

பத்தொன்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.

இருபதாவது

ஜடாதீர்த்தவைபவம் உரைத்த

அத்தியாயம்.

கேளுங்கள் முனீசுவரர்களே! பிரமஹத்தியைப் போக்குகிற இலட்சுமணதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினபின் சித்தசுத்திபெறுவதற்காக ஜடாதீர்த்தம் போய்ச்சேர வேண்டும். பிறப்பிறப்பு, நரைதிரைகளால் நிறைந்த சமுசாரத்தில் கிடந்துழலுகிற மனிதர்களின் அஞ்ஞானத்தை நீக்க ஜடாதீர்த்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை. உலகத்தில் மோட்சத்தை யடையவேண்டிச் சித்தசுத்திபெற இச்சிக்கிற சிலர் வேதாந்தத்தை வாயினால் மட்டும்படிக்கிறார்களே ஒழிய அநுபவத்துக்குக் கொண்டுவருகிறதில்லை. பூர்வபட்சமென்கிற பெரியமுதலைகள் உலாவிக்கொண்டிருக்கிறதும், சித்தாந்தமென்கிற மீன்கள் துள்ளிவிளையாடுகிறதுமான வேதாந்த சமுத்திரத்தில் அஞ்ஞானத்தினால் மூழ்கிக்கிடக்கிறார்கள். சித்தசுத்திக்காக வேதாந்தத்தைப் படிப்பவர்கள் படித்தபின் வீண்வாதம்பண்ணிக் கலகஞ்செய்கிறார்கள். வேதாந்த சாஸ்திரத்தில் மனதுக்கு மயக்கமுண்டாமிடங்கள் அநேகமாயிருப்பதினாலே எளிதில் சித்தசுத்தி

கிடைப்பதில்லை. ஆகையால் முனிவர்களே! வேதாந்த சாஸ்திரத்தைச் சித்தசுத்திக்காகக் கொள்கிறதில்லை. உங்களுக்குச் சித்தசுத்தி சுலபமாய்க்கிடைக்க வேண்டுமானால் ஜடாதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுங்கள். பூர்வகாலத்தில் சகலரும் அஞ்ஞானம் நீங்கி ஞானத்தை யடையும்படி சாட்சாத் பரமசிவனே கந்தமாதன பருவதத்தில் இந்தத் தீர்த்தத்தை யுண்டாக்கினார். தர்மிஷ்டரான இராமர் இராவண சங்காரஞ் செய்தபின், இந்தத்தீர்த்தத்தில் தம்முடைய ஜடையை அலம்பிக் கொண்டதினால் இதற்கு ஜடாதீர்த்தமென்று பேர் வந்தது. அறுபதினாயிர வருஷம் கங்காநதியில் ஸ்நானம்பண்ணின பலனானது, பிரகஸ்பதி சிம்மராசியிலிருக்கிற காலத்தில் கோதாவிரி நதியில் ஒரு ஸ்நானம்பண்ணினதினால் கிடைக்கிறது; அப்படிக் கோதாவிரியிற் செய்கிற ஆயிரம் ஸ்நானபலன் ஜடாதீர்த்தத்தைக் கண்ட மாத்திரத்திலுண்டாகிறது; அந்த ஜடாதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு அந்தக் கரணசுத்தி யுண்டாய் அஞ்ஞானமொழிந்து, ஞானோதயமாகி முத்திசித்தித்து, அகண்ட சச்சிதானந்த பூரணத்துவங் கைகூடுகிறது. இந்த விஷயத்தில் வியாசருக்கும் அவரது குமாரராகிய சுகருக்கும் நடந்த சம்வாதமான புராதன இதிகாச மொன்றிருக்கிறது.

பூர்வகாலத்தில் சுகரானவர் முனிசிரேஷ்டராயும், தன்னை யறிந்தவராயும், விஷ்ணுசொரூபியாகியும், பரம்பராதர்மங்களை யறிந்தவராயும், சகல சாஸ்திர நிபுணராகியுமிருக்கிற வியாசரைச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, சர்வஞ்ஞான என்பிதாவே! அந்தக்கரணசுத்தியுண்டாய், அஞ்ஞான நீங்கி, ஞானோதயமாகி, அந்தத்தில் சாசுவிதமான முத்தி எனக்குக் கைகூடும்படியான ஒரு உபாயத்தை என்னிடத்தில் அன்புகூர்ந்து சொல்லியருளவேண்டும். தங்களிடத்தில் நான் வேதாந்தமும், இதிகாச புராணமும் முற்றிலுங் கற்றுணர்ந்தும் எனக்கு மனத்தெளிவுண்டாகவில்லை. ஆகையால் மனச்சுத்தி யுண்டாகும்படியான ஒரு இரகசியத்தை யெனக்குபதேசிக்க வேண்டுமென்று கேட்க வியாசர் சொல்லுகிறார்.

வா சுகா! உன்னுடைய அவித்தையாகிய முடிச்சை அவிழ்க்கிறதும், புத்திசுத்தியைக் கொடுக்கிறதும், ஜனனமுதலிய பயத்தை நீக்குகிறதுமான இரகசியத்தைச் சொல்லுகிறேன். இராமசேதுவிலிருக்கிற புண்ணியமான கந்தமாதன பருவதத்தில் பாபத்தைப்

போக்கும் ஜடாதீர்த்தமொன்றிருக்கிறது. அதில் தசரதராமன் தன்னுடைய ஜடையை அலம்பிவிட்டு, இதில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு யாகம், யக்ஞம், உபவாசம், தானம், ஜபங்கள் செய்யாமலே அந்தக்கரணசுத்தி யுண்டாகட்டும்; இதில் ஸ்நானம் பண்ணுவனுக்குண்டாகிற பலமானது சகல தானங்களையும் பண்ணுகிறதாலுண்டாகிறபலனுக்குச் சமானமாகட்டும் என்று வரங்கொடுத்திருக்கிருர். இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவன் சகல துக்கங்களையுந்தாண்டி, மஹாபுண்ணிய லோகங்களை யடைகிருன். அப்பா சுகனே! அந்தக்கரணசுத்தியை விரும்பினால் ஜடாதீர்த்த ஸ்நானத்தைத் தவிர வேறு ஜபவிரதாதி உபாயங்களில்லை. ஐசுவரியம், கீர்த்தி, ஆயுசு விருத்திகளைக் கொடுக்கிற சர்வலோகப்பிரசித்தமான இந்த ஜடாதீர்த்தமானது பரிசுத்தமானவைகளுக்கெல்லாம் பரிசுத்தமானதும், மங்களங்களுக்கெல்லாமங்களமானதும், சர்வபாபங்களையும் நீக்குகிறதுமான தீர்த்தம். அப்பா முற்காலத்தில் வருணகுமாரராகிய பிருகுவென்பவர் தன் தந்தையைப் பார்த்துப் பிதாவே சித்தசுத்தியை யடையுமுபாயத்தை யெனக்குச் சொல்லவேண்டுமென்று கேட்க, வருணனும் அப்பா பிருகுவே! இராமசேதுவாகிற கந்தமாதனத்திலிருக்கிற ஜடாதீர்த்தத்தில் ஸ்நானம்செய்தமாத்திரத்தில் சித்தசுத்தி கட்டாயமுண்டாகுமென்று சொல்லப், பிறகு தகப்பனர் சொன்னபடி கந்தமாதனத்திற்குவந்து ஜடாதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சித்தசுத்தியையடைந்து, அஞ்ஞான கூட்டங்கள் விலகி, அத்துவிதஞானம் பிறந்து அகண்டசச்சிதானந்த சொரூபியானன். அப்பாசுகனே! சங்கராம்சமான துர்வாசரும், விஷ்ணு அம்சமான தத்தாத்திரேயரும், இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி, அந்தக் கரணசுத்தியடைந்து பிரமானந்தர்களாய் விட்டார்கள். அதிக சுத்தமாயும், சர்வ பாபநிவர்த்தகமாயும், புண்ணியமாயுமிருக்கிற ஜடாதீர்த்தத்தில் அஞ்ஞான ஒழிவை விரும்புகிறவன் ஸ்நானம் செய்யவேண்டும். ஆகையால் புத்திசாலியானசுகனே! மனசுத்தியைக் கொடுக்கிற ஜடாதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணு என்று பிதாவான வியாசர் சொல்லச், சுகமுனிவர் மஹாபுண்ணியமான கந்தமாதனபருவதம் போய்ச் சங்கற்பஞ்செய்துகொண்டு சித்தசுத்தியை அடைந்து, ஸ்வசொரூபமான பரமானந்தரூபியாய் விட்டார்.

கேளுங்கள் பிராமணோத்தமர்களே! மனச்சுத்தியை யடைய விரும்புகிறவர்கள் பக்தியுடனேகூட இந்த ஜடாதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணட்டும். [illegible] ! [illegible] ஜடாதீர்த்தமிருக்க அஞ்ஞானிகள் மற்ற தீர்த்தங்களை [illegible] அஞ்ஞானத்தினால் அலைகிறார்கள்! இந்த ஜடாதீர்த்தத்தில் [illegible] புத்தியையும் முக்தியையும் அடைகிறார்கள். பிராமணர்களே! இது உண்மையே. வேதாந்த சிரவணஞ் செய்வதாலும், யாகம் பண்ணுவதாலும், தானம் பண்ணுவதாலும், தபஸ் பண்ணுவதாலும், தீர்த்த யாத்திரையாலும், உபவாசம் பண்ணுவதாலும், ஜபம் பண்ணுவதாலும், யோகாப்பியாசம் பண்ணுவதாலும் மனிதர்களுக்கு மனச்சுத்தி யுண்டாகலாம்; இவைகளொன்றுமில்லாமலே இந்த தீர்த்தத்தில் கேவலஸ்நானம் பண்ணுவதினாலேயே பிராமணர்களுக்கு மனச்சுத்தியுண்டாகிறது. ஜடாதீர்த்தமகிமையை யென்னுலே சொல்லமுடியாது. அதன் மகிமையைப் பிரமவிஷ்ணு ருத்திராதிகளே அறிவார்கள். ஜடாதீர்த்தத்துக்குச் சமானமான தீர்த்தம் இருந்ததுமில்லை; இருக்கப்போகிறதுமில்லை. ஜடாதீர்த்தம் [illegible] த்துக்குச் சமானமாகிறது. [illegible] ஜடாதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவன் பாபங்களையும் [illegible] யும், [illegible] டைகிறதில்லை. பிராமணோத்தமர்களே! இவ்விதமான ஜடாதீர்த்தமகிமையை உங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தை யெவர்கள் படிப்பவரும் கேட்பவரும், பாபங்களினின்றும் விடுபட்டு [illegible] கள்.

இருபதாவது அத்தியாயம்.

முற்றுப்பெற்றது.

இருபத்தோராவது
யுதிஷ்டிரர் இலட்சுமி தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி ஐசுவரியம் பெற்றகதையுரைத்த
அத்தியாயம்.

மகருஷிகளே! முனிவர்களே! சர்வபாதகநாசகமான லட்சுமி தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிப் பரிசுத்தனாய் இலட்சுமி தீர்த்தம் சேர்கின்றனர். ஒருவனொருவன் சர்வகாம ஆசையோடு இதில் ஸ்நானம்பண்ணுகிறானோ அவனவன் அந்தந்த ஆசையில் சித்தியடைகிறான். மகாதரித்திரத்தையும், மகா துக்கத்தையும் போக்குகிறது, அனந்தரவிய சமிர்த்தியைக் கொடுப்பதுமான இந்தத் தீர்த்தத்தில் இந்திரப்பிரஸ்தத்தில் அரசாட்சி செய்துகொண்டிருந்த தருமபுத்திரர் ஸ்ரீகிருஷ்ணனுடைய வசனத்தின்படி ஸ்நானம்பண்ணி மகத்தான ஐசுவரியத்தை யடைந்தார். அவ்வ, ரிஷிகள் அதைப்பற்றி [illegible] கூறுகிறேன், கேளுங்கள்.

பூர்வம் திருதராஷ்டிரனுடைய வசனத்தின்படி மகாபல பராக்கிரமசாலிகளான பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருக்கும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவர்களைப் பார்க்கவந்தார். அதுகண்டு பாண்டவர்கள் வெகுப்ரியத்தோடும் அவரை அரண்மனைக்கழைத்துக்கொண்டுபோய்க் கிருஷ்ணர் அந்த உத்தமமான பட்டணத்தில் கொஞ்சகாலம் வசித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் யுதிஷ்டிரர் வாசுதேவரைத் திருவடி [illegible] ஜகத்குருவான கிருஷ்ணனைப் பூஜைசெய்து பிரார்த்தனை [illegible] கிருஷ்ணா! எந்தத் தீர்த்தத்தைச் சேர்ந்து மனிதர்கள் மகத்தான ஐசுவரியத்தையடைகிறார்களோ அந்தத் தீர்த்தத்தின் வைபவத்தைச் சொல்லுமென்று பிரார்த்திக்க, கிருஷ்ணர் சொல்லுகிறார்: மகாராஜனே! தர்மபுத்திரனே! சகல ஐசுவரியத்தையுங் கொடுக்கின்ற இலட்சுமி தீர்த்தமென்றொரு தீர்த்தமிருக்கிறது. அதில் ஸ்நானம்பண்ணினால் ஐசுவரியத்தையும் தனதானியசமிர்த்தியையும் அடைவார்கள். [illegible] புண்ணியத்தினால் மகாபாபாத்மாக்களான [illegible]

தார்கள். அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு ஐசுவரியமும், தர்மமும் உண்டாகும். இதில் [illegible] யும்; அபகரணமும் பாதகங்களும், தானங்களும், [illegible] க்கன்றுமெப்படி ஐசுவரியத்தையடைகின்றார்களோ அதுபோல இலட்சுமி தீர்த்த ஸ்நானத்தினால் சமஸ்தபாபங்களும், ரோகங்களும், வியாதிகளும் நீங்கி சகலமேன்மையும் பெற்று சித்தியை அடைகிறார்கள். இதில் சந்தேகமேயில்லை. கேளும் தர்மபுத்திரரே! இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினதினால் குபேரன் யக்ஷராஜனாகவும் தனாதிபனாகவும் அப்ஸரஸ்களுக்கெல்லாம் சிரேஷ்டமான புஷ்பக விமானத்தை அடைந்தான். அப்படியே அவனுடைய [illegible] னும் இதில் ஸ்நானம் பண்ணிப் [illegible] மகாராஜனே! நீ பிராமணர் முதலியவர்களோடுங்கூட இலட்சுமி தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணு; நீ ஐசுவரியத்தை யடைவாய்; சந்தேகமில்லை; இதில் சந்தேகப்படவேண்டாம் என்று கிருஷ்ணர் சொல்ல, தர்மபுத்திரர் தம்பிமார்களோடும் [illegible] திரௌபதியோடுங்கூட இந்திரப்பிரஸ்தத்திலிருந்து இலட்சுமி தீர்த்தத்தில் வந்து ஸ்நானம் பண்ணி, தோத்திரமும், பூஜையும், பிராமணர்களுக்கு தானமும் [illegible] கங்கள் செய்து, இந்திரப்பிரஸ்தத்துக்குப் போய் ராஜசூய யாகஞ் செய்யவேண்டும் ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஆள் அனுப்பினார். உடனே ஸ்ரீகிருஷ்ணர் சத்தியபாமையோடு அனேகசேனையோடும் துவாரகாபட்டணத்தை விட்டுப் புறப்பட்டு வெகு சீக்கிரமாய் இந்திரப்பிரஸ்தம் வந்து சேர்ந்தார். அதுகண்டு தர்மபுத்திரரும் தான் இராஜசூயத்துக்கு யத்தனம் பண்ணினதைத் தெரிவிக்க, கிருஷ்ணனும் அப்படியே செய்யவேண்டுமென்று அனுமதி கொடுத்து, அரசனே! இதமான ஒரு வசனஞ் சொல்லுகிறேன் கேள், ராஜனே! கேளும்; இந்த ராஜசூயமென்கிற யாகம் ராஜாக்களாலும் செய்யமுடியாததாயிருக்கிறது. அநேகவருஷம் இந்த [illegible] செய்து முடிக்கவேண்டிய [illegible] யாகம் பண்ணுகிறதற்கு முன்னே திக்குவிஜயஞ் செய்து ராஜாக்களையும் ஜயித்து, அவர்கள் கொடுக்கும் கப்பங்களைக் கொண்டு யாகத்தைச் செய்து முடிக்கவேண்டும். உனக்கு [illegible] இந்திரனை [illegible]

[illegible] புசித்து, தம் [illegible] தம்பிமார்கள் நால்வரும் [illegible] புறப்பட்டு [illegible] தேசத்திலே அங்கிருந்த [illegible] திரவியத்தைப் பெற்றுக்கொண்டு [illegible] மஹாபாரதத்தி [illegible] இரத்தினங்களையும், [illegible] திரவியங்களையும் கொண்டுவந்தார்கள் [illegible] இவ்விதம் [illegible] யாகத்தைப் பூர்த்தி செய்து, பிராமணர்களுக்கு [illegible] திரவியங்களையும் அன்னதானமும், பூதானமும், கோதானமும், [illegible] கொடுத்தார். யாசகர்கள் [illegible] இவ்வளவு திர [illegible] யாசகர்கள் கொண்டு போக [illegible] எவ்வளவு திரவி [illegible] இரத்தினங்களும் சொர்ண

ரூமிருக்கக்கண்டு, அரசன் யாசகர்களுக்குக் கொடுத்தது [illegible] சந்தோஷமடைந்தார்கள். இவ்விதம் தர்மபுத்திரர் இந்த ஆயாகத் தைப்பூர்த்தி செய்தவர்களின் திரவியத்தை யுடையவராய்த் தம்பியர்களோடு இந்திரப்பிரஸ்தத்தில் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தார். கேட்பீரா முனிவர்களே! இலட்சுமி தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணின மகத்துவத்தினால் தர்மபுத்திரர் இவ்வளவு ஐசுவரியத்தை யடைந்தார்; இந்தத் தீர்த்தமகிமையைக் கூறினேனென்று சொல்லேன்; இந்தத் தீர்த்தமானது மஹாபுண்ணியகரமாயும், மஹாதரித்திரநாசனமாயும், ஞானப்பிரதமாயும், மஹாபாதகநாசனமாயும், மஹாநரகசங்காரியாயும், மஹாதுக்க நிவாரணமாயும், மஹாகடின பொறுப்பதாயும், ஐசுவரியத்திரவியங்களைக் கொடுப்பதாயும், துர்ச்சொப்பன நாசனமாயும், சர்வாபீஷ்டப்பிரதமாயும் உள்ளது. இந்தத்தீர்த்தத்துக்குச் சமமான தீர்த்தம் இருந்ததுமில்லை; இனி இருக்கப்போவதுமில்லை. இந்த அத்தியாயத்தைப் படிப்பவரும் கேட்பவரும் இகத்தில் தனதானிய சம்ருத்தியையும் [illegible] யும், அந்தத்தில் முக்தியையும் அடைவார்களென்பதில் சந்தேகமேயில்லை.

இருபத்தோராவது அத்தியாயம்

முற்றிற்று.

இருபத்திரண்டாவது

அக்கினிதீர்த்த மகிமையால் துஷ்பண்ணியன் பிசாசத்துவம் ஒழிந்த

அத்தியாயம்.

கேளுங்கள் பிராமணோத்தமர்களே! சாலச்சிறந்ததாயும் [illegible] வையாயும், மங்களகரமாயு மிருக்கிற இலட்சுமி தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டு, அக்கினிதீர்த்தம் போகவேண்டியது. இந்த அக்கினிதீர்த்தமானது மஹாபாதகங்களை யழித்து [illegible] பாதகங் கெடுக்கச்செய்கிறது. இது தீர்த்தங்களுக்குள்ளே உத்தமமானது; சர்வாபீஷ்டங்களையும் கைகூடச்செய்கிறது. இந்தத் தீர்த்தத்தில் பாபவிமுக்தியைப் பெற்றதற்கு [illegible] ஒரு [illegible]

[illegible]

5

சொரூபம் உடையவனாகி [illegible] இருக்கிறான். ஆகை யால் தேவரீர் இவனுக்கு [illegible] என்று பிரார்த்தனையில் [illegible] வைத்து இந்த தீர்த்தத்தை அதிகாரம் பண்ணிக்கொள்ளும், என்று சொல்ல, அதுகேட்டுத் தேவர்களும், மஹரிஷிகளும், வித்தியாதரர்களும், கந்தர்வர்களும், [illegible]களும், [illegible]களும் மற்றும் முனிவர்களும் ஸ்ரீராமனையும், ஜனகபுத்திரியாகிய சீதையையும் அழைக்க, பகவான் ஸ்ரீராமர் அக்கினி தேவன் வாக்கின்படி தீர்த்தத்தை அதிகாரம் பண்ணிக்கொண்டார். தேவர்கள் [illegible]க்குத் தயைசெய்! ஸ்ரீராமர் சீதையின் சுத்திக்காக அழைத்த அக்கினி தேவன் இங்கே தீர்த்தத்தில் [illegible] சுத்தி அக்கினியினால் தோன்றின அவ்விடமே அக்கினி தீர்த்தமென்னப் படும். இந்தத் தீர்த்தத்தில் பக்தியுடன் ஸ்நானம் பண்ணி உபவாசமிருந்து, வேத வித்துக்களான பிராமணர்களுக்குப் பொருளைக் கொடுத்து வைத்து, அவர்களுக்கு வஸ்திரம், தனம், பூமி, அன்னம் [illegible] கன்னிகை [illegible] கொடுத்தால் சகல பாபங்களினின்றும் விடுபட்டு விஷ்ணு சாரூப்யத்தைப் பெறுவார்கள். இந்த அக்கினி தீர்த்தக்கரையில் அன்னதானஞ் செய்தால் [illegible] இந்தத் தீர்த்தத்துக்கு சமானமான தீர்த்தம் இருந்ததுமில்லை இருக்கப்போகிறதுமில்லை. இத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினதினால் மஹாபாதகங்களும் [illegible] கொடியவனான [illegible] சொரூபத்தை விட்டுத் திவ்ய சொரூபத்தை அடைந்தான்.

பூர்வகாலத்தில் பாடலிபுரமென்கிற நகரத்தில் பசுமான் என்னுமொருவன் வசித்திருந்தான். அவன் தாம் [illegible], பிராமண [illegible]களையுடையவன்; அவன் இடைவிடாமல் திருடிக்கொண்டே செய்துகொண்டும், பசுக்களைக் காப்பாற்றிக்கொண்டும், கண்டவிடத்தில் பொன் முதலிய பொருள்களைத் திருடியும் [illegible] கொண்டும், பதிவிரதா ஸ்திரீகளான [illegible] மனைவிகளை [illegible] அபஹரித்துக்கொண்டும் இருந்தான். இப்படி இவன் பல காலத்தில் [illegible] பாவியன், புண்ணியவான், சாதுக்களை [illegible]

துஷ்யன்னியனை அழைப்பித்தானுடைய தூதர்களாலே, நீ இந்தத் தேசத்தைவிட்டு [illegible] போவாயாக; நீ இங்கேயிருந்தால் சேர்வியுண்டுபோவாய், என்று பயமுறுத்தித், தூதர்களைக்கொண்டு பட்டணத்துக்கு வெளியில் துரத்திவிட்டான்; துஷ்யன்னியன் காட்டைவிட்டு ரிஷீசுவரர்கள் நிறைந்திருக்கும் ஒரு காட்டுக்கு வந்து, அவ்விடத்திலும் ஒரு ரிஷி குமாரனைத் தண்ணீர்க்குள் அமிழ்த்திவிட்டான். செத்துப்போய்த் தண்ணீர்மேல் மிதந்துகொண்டிருந்த அந்த ரிஷி புத்திரனை, விளையாடும் நிமித்தமாக அவ்விடத்துக்கு வந்த ரிஷி குமாரர்கள் கண்டு, மனம் வருந்தி, அந்தக் குமாரனுடைய தகப்பனாகிய உக்கிரசிரவஸ் என்கிற ரிஷிக்குத் தெரிவிக்க, அவர் தமது தபோமகிமையால் அது துஷ்யன்னியனுடைய காரியமென்று அறிந்து, அவனைப் பார்த்து அடா துஷ்டா, நீ என்னுடைய புத்திரனைத் தண்ணீரில் தள்ளிக் கொன்றபடியினால் நீயும் தண்ணீரிலேயே விழுந்து சாகக்கடவாய்; [illegible] பிரதேசங்களை அலைந்து திரியக்கடவாய், என்று சபித்தான். துஷ்யன்னியன் மிக்கவும் சித்தம் நொந்து அந்தக் காட்டைவிட்டு சிங்கம் முதலிய கொடிய துஷ்டமிருகங்கள் நிறைந்த வேறொரு காட்டுக்கு வந்தான், அப்பொழுது புழுதிகளை வாரியிறைத்துக்கொண்டும், மரங்களை முறித்து விழுத்திக்கொண்டும், பெரிய முழக்கத்தோடு பெருங்காற்றும் மழையும் கலந்தடித்தது. துஷ்யன்னியன், காற்றுமழையால் மிகுந்த வருத்தமடைந்து, இன்னது செய்கிறதென்று தெரியாமல் தயங்கித்திரியும்போது, [illegible] கேயிருக்கிற ஒரு குகையின் [illegible] அந் [illegible] புகுந்துகொண்டான். அவன் [illegible] பொழுதும், [illegible] அந்த [illegible] [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இருபத்துமூன்றாவது அத்தியாயம்

[illegible]

இருப[illegible]

[illegible]த்தில் [illegible] பிரம்ம[illegible]

[illegible]பெற்ற

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] சமஸ்த பிராணிகளும் [illegible] ற்பவிக்கப்பட்டு விளங்க [illegible] திலே பக்தியுடனே ஸ்நானம் [illegible] முற்றும் [illegible] சொல்லியபடிக்கு கைலாசம் [illegible] சிவாக்கினையின்படி பிரமகபாலத்தை [illegible] முதலானவர்களுடைய [illegible] அங்கங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் [illegible] பங்குப் பிரம்மஹத்தி [illegible] சிவாக்கினையின்படிக்கும் [illegible] தரமான சிவதீர்த்தத்தில் ஸ்நானம் [illegible] பிரம்மஹத்தியும் [illegible] செய்யுமானவர் [illegible] உனக்குப் பிரம்மஹத்தி தோஷம் [illegible] கின்றது.

[illegible]

இருபத்து நாலாவது அத்தியாயம்

முற்றிற்று.

இருப்புநிலைக் குறிப்பு.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] பெற்ற

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இருபத்தா[illegible] அதிகாரம்

[illegible]

இருபத்[illegible] அதிகாரம்

கோபுர நிர்மாணத்தில் [illegible]

[illegible] செய்[illegible]

பாய[illegible]

[illegible]

[illegible]

கிறான். அவனை சீக்கிரம் தேடிப்பிடி, என்று சொல்லிவிட்டு ஆகாசத்திற்கிளம்பி, மனிதர்கள் செய்யும் பூஜையை பெற்றுப் பலனளிக்கின்ற தன் ஸ்வரூபங்கொண்டு தேவலோகம்போய் விட்டாள். மாயாப்பெண்ணின் வசனங்கேட்ட கம்ஸன் மிகவியாகூலங்கொண்டு தன்னைக்கொல்லப் பிறந்த பிள்ளையையும், மற்றுமுள்ள குழந்தைகளையுங் கொல்வதற்காகப் பூதனை முதலானவர்களை யனுப்பினான். அவர்கள் நந்தகோகுலம் வந்துசேர்ந்து ஸ்ரீகிருஷ்ணனால் உயிரிழந்து யமலோகம் போனார்கள். பிறகு ராமகிருஷ்ணர்களிருவரும் கோகுலத்தில் பாலலீலைகள் செய்தும், இடையர்களைப்போலத்தளிர் மலர்களை யணிந்து, புல்லாங்குழலூதியும், கன்றுகளையும், பசுக்களையு மேய்த்தும் காலத்தைக் கழித்துச் சுகமாக வளர்ந்து வந்தார்கள். ஒரு நாள் கம்ஸன் அக்ரூரனை யழைத்து நந்தகோகுலம்போய் ராமகிருஷ்ணர்களை சீக்கிரமாக அழைத்துவரும்படி அனுப்பினான். அவரும் அப்படியே கோகுலத்திலிருந்த ராமகிருஷ்ணர்களை யழைத்துக்கொண்டுவந்து, திவ்யதோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மதுராபுரி வந்துசேர்ந்து, கம்ஸனைக் கண்டு சமாசாரந் தெரிவித்துத் தன் வீடுபோய்ச்சேர்ந்தார். மறுநாள் மத்தியான வேளையில் ராமகிருஷ்ணர்கள் தமக்கு இஷ்டமான இடைப்பிள்ளைகளோடும், அகழ், மதில், கோபுரம், உப்பரிகைகள் முதலியவற்றால் விளங்குகிற மதுராபுரியின் வீதியில் அந்நகரத்துப் பருவப்பெண்கள் துதிப்பதைக் கேட்டுக்கொண்டுபோய், வில்சாலையை யடைந்தார்கள். அங்கே பலமான நாணேற்றியிருக்கிற ஒரு பெரிய வில்லைக்கண்டு, அதைக் காத்துக்கொண்டிருந்த காவலாளரை விலக்கிவிட்டு அதிக பலமாக வில்லையெடுத்து நாணேற்றும்படி அதை வளைக்க, அது நடுவில் பிளந்ததனாலுண்டான தொனியைக் கேட்டு ஓடிவந்த காவலாளர்களை, ஒடிந்துபோன வில்துண்டுகளை யிருவரும்பேருக்கொன்றாக எடுத்துக்கொண்டு அடித்துக்கொன்றார்கள். பின் அரண்மனைவாயிலிற் கட்டியிருந்த குவலயாபீடமென்கிற யானையைக்கொன்று, அதனிரண்டு கொம்புகளையும் பிடுங்கிப் பேருக்கொன்றாகத் தோளில் சாத்திக்கொண்டு சபாமண்டபத்துக்குப்போனார்கள். அங்கே சாணூரன், முஷ்டிகன் முதலான மல்லர்களைக்கொன்று யமலோகஞ் சேர்த்துவிட்டு, பின்பு பெரிய மஞ்சத்தின் மேலுட்கார்ந்திருந்த கம்ஸனிடம்போய், அற்பமிருகத்தைக் கண்ட சிங்கக்குட்டிகளைப்போல் அவனை யலட்சியஞ் செய்து நின்றார்கள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் மஞ்சத்தின்மே லுட்கார்ந்திரு

ந்த கம்ஸனைக் காலைப்பிடித்திழுத்து ஆகாயத்தில் தூக்கி அவனுயிர் போம்படி சுழற்றிக் கீழே யெறிந்துவிட்டார். பலராமர் கம்ஸனுடைய அஷ்டசகோதரர்களையும் முஷ்டியாலடித்துக் கொன்று நாசம்பண்ணினர். இவ்விதம் ஸ்ரீகிருஷ்ணர் கம்ஸனைக் கொன்று, தம்தாய் தந்தைகளைச் சிறையினின்றும் விடுவித்து, எல்லாரையும் சமாதானப்படுத்திக், கம்ஸன் செய்த இம்சை பொறுக்கமாட்டாமல் ஓடிப் போயிருந்த பந்துவர்க்கங்களைத் திரும்பவும் மதுரைக்கு வரவழைத்து, உக்கிரசேன மஹாராஜாவுக்குப் பட்டங்கட்டிவைத்தார். தம்மாதாபிதாக்களுக்குச்செய்த துன்பத்தைச் சகிக்கமாட்டாமல் தேவபிராமண கண்டகனான கம்ஸனைக்கொன்று ஜயம்பெற்றிருந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை ஒருநாள் நாரதாதிமுனீசுவர்கள் பார்க்கவர அம்முனிவர்களைக் கண்ணன் பார்த்து பிராம்மணோத்தமர்களே! மஹாபாபியான என்மாமனைக் கொன்றுவிட்டேன்; மாமனைக் கொல்லுவது தோஷமென்று சாஸ்திரந்தெரிந்த பெரியோர்கள் சொல்லுகிறார்கள்; ஆகையால் என் பாபநிவர்த்திக்காக நீங்கள் பிராயச்சித்தம் விதிக்கவேண்டும் என்றார். நாரதமஹாமுனிவர் பக்திவிநயத்தோடுகூட மதுரமாகச் சொல்லுகிறார். சுவாமீ! நித்திய சுத்தராயும், முத்தராயும், சகலமுமறிந்தவராயும், சச்சிதானந்த சொரூபராயும், பரமாத்மாவும் ஸநாதனராயுமிருக்கிற உமக்குப் புண்ணியபாபம் கிடையாது; லோகசிக்ஷார்த்தம் உமக்குப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டுமென்கிற விதியில்லையானாலும், உலகத்தாருக்கு உபதேசிக்கும்பொருட்டாக நீர் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டியதாகையால் மஹாபுண்ணியமான கந்தமாதனபருவதத்தில் முன்காலத்தில் ஸ்ரீராமர் இராமநாதனென்கிற ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து, அதற்கு அபிஷேகம் பண்ணும் நிமித்தம் தமது வில்லின் நுனியால் பூமியைப் பிளந்து உண்டாக்கின கோடிதீர்த்தமென்கிற ஒரு தீர்த்தம் இருக்கிறது. உம்முடைய பூர்வாவதாரமாகிய ஸ்ரீராமர் தாம் ஸ்வயமாகவே பிரம்மஹத்தி நிவர்த்திக்காக உண்டாக்கின தீர்த்தமாகையால் நீர் இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் மாதுலனைக் கொன்றபாபம் உம்மை விட்டு உடனே விலகிப்போம். இந்தக் கோடிதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் பிரம்மஹத்தியாதி பாபங்கள் நீங்கி, ஆயுராரோக்கியம்பெற்றுச், சொர்க்காதிபோகங்களையடைந்து, மோட்ச சாம்ராஜ்யத்தையும் கைக்கொள்வார்கள், என்று நாரதர் சொன்னவசனத்தைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணர் முனிவர்களுக்கு விடைகொடுத்

தனுப்பிவிட்டுச், சேதுயாத்திரையை உத்தேசித்துப் புறப்பட்டுச், கொஞ்சநாள்களில் கோடிதீர்த்தம்வந்து, அதில் சங்கற்ப பூர்வமாக ஸ்நானம் பண்ணி, அநேக தானங்களைக்கொடுத்து மாதுலஹத்தாலுண்டான தோஷத்தினின்றும் விடுபட்டு, ஸ்ரீராமநாதரையும் சேவித்துத் தமது மதுராபுரி பட்டணம்வந்து சேர்ந்தார்.

கேட்டீர்களா முனிவர்களே! கோடிதீர்த்தம் இப்படிப்பட்ட மகிமையுடையது, இதற்குச் சமானமான தீர்த்தம் உலகத்தில் ஒன்றும் கிடையாது. இதில் ஸ்நானம் பண்ணினால் பிரம்ம விஷ்ணு ருத்திரர்களாகிய மும்மூர்த்திகளும், இதரமான தேவர்களும் திருப்தியடைகிறார்களென்பதில் சந்தேகமேயில்லை. இந்தப் புண்ணியமான அத்தியாயத்தைப் படிப்பவரும் கேட்பவரும் பிரம்மஹத்தியாதி பாபங்களினின்றும் விடுபடுவார்கள் என்பது நிச்சயம்.

இருபத்தேழாவது அத்தியாயம்

முற்றிற்று

இருபத்தெட்டாவது

ஸாத்யாமிர்த தீர்த்தத்தில் புரூரவசக்கிரவர்த்தி துப்புருசாபம் நீங்கி ஊர்வசியை அடைந்த சரித்திரங்கூறிய

அத்தியாயம்

கேளுங்கள் முனீசுவரர்களே! மஹா புண்ணியமான கோடிதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணியபின் இந்திரியங்களையடக்கிக்கொண்டு சாத்தியாமிர்த தீர்த்தம் போகவேண்டும். இந்த ஸாத்தியாமிர்த தீர்த்தமானது சமஸ்த பாபங்களையும்போக்கி, சகல துக்கங்களையுநீக்கி, புண்ணியத்தைத் தந்து, சர்வாபீஷ்டங்களையும் பூர்த்தி பண்ணுகிற தீர்த்தம். இதில் பக்தியோடு ஸ்நானம் பண்ணுகிறதனால் அடைகிறபலனைத் தபசினாலும், பிரமசரியத்தினாலும், யாகங்களாலும், தானங்களாலும் ஒருவன் அடையமாட்டான். இந்தச் சுபமான சாத்தியாமிர்தஜலம் எவனுடைய சரீரத்தில் படுகிறதோ

அவனுடைய சரீரத்திலிருக்கிற பாபம் உடனே விலகிப்போம். அகமருஷண ஜபஞ் செய்துகொண்டு ஸாத்தியாமிர்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவன் சமஸ்த பாபங்களையும் இவ்விடத்தில் உதறிவிட்டு விஷ்ணுலோகம்போய் அங்கே சிறந்து வாழ்ந்திருப்பான். பாலியத்தில் பாபங்களைச் செய்துவிட்டு அந்திய காலத்தில் பச்சாத்தாபமுண்டாகிச் சாத்தியாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவன் சமஸ்த பாபங்களினின்றும் முத்தனாய் விடுகிறானென்பதிலையமே கிடையாது. சாத்தியாமிர்தத்தில் ஸ்நானம்பண்ணுகிற பாபிகள் அநேக துக்கங்கள் நிறைந்த கொடியநரகங்களைப் பார்ப்பதேயில்லை. சாத்தியாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு உண்டாகும் நல்லகதியானது யாகங்களாலும், வேதங்களாலும், புண்ணியகருமங்களாலும் உண்டாகமாட்டாது. ஒருவனுடைய எலும்பு சாத்தியாமிர்த தீர்த்தத்தில் எவ்வளவுகாலங் கிடக்கிறதோ அதுவரைக்கும் அவன் சிவலோகத்தில் மிகச்சிறப்பாக வாழ்ந்திருக்கிறான். ஸாத்தியாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணுகிறவன் உதயகாலத்தில் சூரியனானவன் இருட்கூட்டங்களைச் சிதறவடித்துக்கொண்டு புறப்படுவதுபோலச் சகல பாபங்களையும் உடைத்துக்கொண்டு பிரகாசிப்பதுமன்றிச் சகல மனோரதங்களையும் அடைகிறான். கேளுங்கள் முனிவர்களே! இத்தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிப் புரூரவசக்கிரவர்த்தியானவர் தும்புருசாபத்தால் உண்டான ஊர்வசி பிரிவினை நீங்கிச் சுகத்தையடைந்தார் என்று சூதர் சொல்ல, முனிவர்கள் சூதரைப்பார்த்து ஐயா! மஹாநுபாவா! ராஜாகிய புரூரவச்சக்கிரவர்த்திக்குத் தேவஸ்திரீயான ஊர்வசி சங்கமம் எப்படிக்கிடைத்தது? எந்தக்காரணத்தினால் தும்புரு சாபம் நேரிட்டது? இவைகளை யெங்களுக்குச் சவிஸ்தாரமாகச் சொல்லியருளவேண்டுமென்று கேட்கச் சூதர் சொல்லத்தொடங்கினார்.

பூர்வகாலத்தில் இந்திரனுக்குச் சமானமான பராக்கிரமமும், குபேரனுக்குச் சமானமான ஐசுவரியமும் பொருந்திய புரூரவசக்கிரவர்த்தி அநேகயாகங்களைச் செய்தும், தானங்களைக்கொடுத்தும் தர்மமாய் ராஜ்யபரிபாலனஞ் செய்துகொண்டு வருங்காலத்தில் மித்திராவருணருடைய சாபத்தால் பூமியில் அவதாரம் பண்ணின ஊர்வசியானவள் இராஜநகரத்துக்கடுத்த பூந்தோட்டத்தில் வீணையை வைத்துக்கொண்டு குயிலைப்போலக் காதுக்கினிமையாகப் பாடிக்கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் அரசன் உத்தியானவனம்போகப் பிரியப்பட்டுக் குதிரையின்மேலேறி யௌவனமாதர் சூழ்ந்துவர உத்தியானவனம்போய்ப் பிடிக்குள் அடங்கும்படியான சிறிய இடையினையுடைய அந்த ஊர்வசியைக்கண்டு மோகங்கொண்டு பெண்ணே யெனக்கு மனைவியாகவருகவென்று நயமாகக் கேட்டான். அந்த ஊர்வசியும், அரசன்மேல் மோகங்கொண்டு, ஸ்வாமீ இராஜேந்திரா! நீர் கேட்டபடியே யாகட்டும்; எனக்கொரு சபதம் பண்ணிக்கொடுத்தால் உம்மிடத்தில் சந்தோஷமாகவசித்திருப்பேன் என்று சொல்ல, அரசனும் நல்ல புருவத்தையுடைய பெண்ணே! நீ கேட்டபடியே சபதஞ்செய்து தருகிறேன் என்று சொன்னான். ஊர்வசி மனமகிழ்ந்து, ஐயா! எனக்குப் பிள்ளைகளாக இருக்கிற இரண்டு செம்மறியாட்டுக்குட்டிகளைக் காப்பாற்றவேண்டும். எனக்கெதிரில் நீர் நிர்வாணமாக இருக்கக்கூடாது. எனக்கு எச்சிலைக்கொடுக்கப்படாது. நான் நெய் ஒன்றையே புசித்துக் கொண்டிருப்பேன், இவைகளுக்கு நீருடன்பட்டால் நானும்மிடத்தில் வாழ்ந்துகொண்டிருப்பேன் என்று சொல்ல, அரசன் அப்படியே நல்லதென்று சொல்லித் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், அளகையில் சிலகாலமும், சைத்திரவனத்தில் சிலகாலமும், தாமரை மலர்களால் நிறைந்தசரஸ்வதி தீர்த்தத்தில் சிலகாலமுமாக அறுபத்தொருவருஷம் அவளோடு கூடிச்சுகித்துவந்தான். ஊர்வசியும் தினந்தோறும் அரசனிடத்திலாசைபொங்க மகிழ்ந்து தேவலோக சுகத்தைக்கூட மறந்திருந்தாள். இப்படியிருக்கையில், ஊர்வசியில்லாமல் தேவலோகம் பாழாய்ப் போய்விட்டமையால் அவளைக்கொண்டுவரவேண்டுமென்று விசுவாசு என்கிற கந்தருவன் பூலோகம் வந்து, ஊர்வசிக்கு அரசன் செய்துகொடுத்த சபதத்தையறிந்து, இராக்காலத்தில் கந்தர்வர்களோடு ஊர்வசியின் படுக்கைகிட்ட வந்து ஒரு செம்மறியாட்டைத் தூக்கிக்கொண்டு ஆகாசமார்க்கமாகப் போனான். அப்போது அந்த ஆட்டின சப்தங் கேட்ட ஊர்வசி, என்னுடைய பிள்ளையை யாரோ கொண்டுபோகிறானே! அந்தப் பிள்ளையை விடுவிக்கவேண்டுமே; நான் அநாதையாய்விட்டேன், யாரைச் சரணமடைவேன், என்று புலம்பி மூர்ச்சையாய் விழுந்தாள். அரசன் அவள் புலம்பினதைக் கேட்டும் நாமிப்பொழுதுபோனால் அவளுக்குமுன் நக்னனாய்க் காணப்படுவோமேயென்று நினைத்துப் போகாமலிருந்துவிட்டான்.

பின்பு கந்தருவர்கள் மற்றொரு ஆட்டையும் பிடித்துக்கொண்டு போனார்கள். அந்த ஆடும் உரக்க சப்தம்பண்ண அதைக்கேட்ட ஊர்வசியும், ஐயோ! என்பிள்ளையைத்திருடர்கள் தூக்கிக்கொண்டு போகிறார்களே! கேள்வி முறையில்லையா! நான் எந்தப் புருஷனைச் சரணமடைவேன்? என்று வாய்விட்டலற, அரசனும் அவள் சொன்ன வார்த்தை பொறுக்காமல், எவ்விடத்திலு மிருட்டா யிருப்பதனால் பாதகமில்லையென்று கையில் கத்தியையெடுத்துக் கொண்டு, அடா துஷ்டா! எங்கடா போகிறாயென்று கந்தர்வர்களைத் துரத்திக்கொண்டுபோனான். அந்தச் சமையத்தில் கந்தர்வர்களுடைய வுத்தரவால் ஒரு மின்னல் மின்னிற்று; அந்த மின்னலொளியால் அரசன் நக்னமாயிருப்பது ஊர்வசி கண்களுக்குத் தோன்ற, அவள் அரசன் சபதந்தவறினானென்று அந்தக்ஷணமே மறைந்துபோனாள். கந்தர்வர்களும் ஆடுகளைவிட்டுவிட்டு ஓடிப்போனார்கள். இராஜன் ஆடுகளைப் பிடித்துக்கொண்டு சந்தோஷத்தோடு தன் படுக்கை அறைக்குவந்து, விசாலமான கண்களையுடைய ஊர்வசியைக் காணாமல் மனமேங்கி, பைத்தியக்காரனைப்போல நக்னமாகவே வெளிக்கிளம்பி, உலகமெல்லாஞ் சுற்றிக் கடைசியில் குருக்ஷேத்திரம்போய், அங்கொரு தாமரைத்தடாகத்திலே நாலு அப்ஸரஸ்திரீகளோடு ஜலக்கிரீடை பண்ணிக்கொண்டிருந்த ஊர்வசியைக் கண்டு, ஏ! ஐயமுடையவளே! கடினசித்தமுடையவளே! நில்லு நில்லு, என்று அடிக்கடி சொல்லிப் புலம்பி நின்றான். அதைகேட்ட ஊர்வசி, பாபமற்ற மஹாராஜனே! துக்கப்படவேண்டாம். உம்மால் நான் கர்ப்பவதியாயிருக்கிறேன், உமக்கு மஹா தர்மவானான ஒரு புத்திரன் பிறப்பான்; இவ்வருஷக் கடைசியிலிங்கே வாரும்; அப்பொழுது ஓரிரவுமுழுவதும் உம்மோடு கூடியிருப்பேன் என்று சொல்ல, அரசனும் வெகுசந்தோஷத்தோடு தன் பட்டணம் போய்ச் சேர்ந்தான். பிறகு ஊர்வசி தன்னோடிருந்த தோழிமார்களைப்பார்த்துச், சகிமார்களே மன்மதன்போன்ற சுந்தரவடிவுள்ள இந்த அரசனிடத்தில்தான் நான் மோகக்கடலில் முழுகினவளாய் மயங்கி இதுவரைக்கும் கூடிவாழ்ந்திருந்தேன் என்று சொல்ல, தோழிமார்களும் நல்லகாரியம் பண்ணினாய், நல்லகாரியம் பண்ணினாய், இந்த சுந்தரனோடு நாங்கள் சதா கூடியிருக்கப் பிரியப்படுவோமே யென்றார்கள். ஒரு வருஷம் சென்றபின் இராஜன் ஊர்வசி சொன்னபடியே யந்தக் குளக்கரைக்கு வந்தான்.

ஊர்வசியும் வெகு சந்தோஷத்துடனே தான் பெற்ற ஆயுஸ் என்ற குமார இரத்தினத்தைக்கொடுத்துத் தான் சொன்னபடியே ஓரிரவு முழுவதும் அரசனோடேகூடிக்கலந்திருந்து, ஐந்து புத்திரர்களைப் பெறும்படியான கர்ப்பந்தரித்து, மஹா சந்தோஷத்தையுடையவளாய், அரசனைப்பார்த்து, மஹாராஜனே என்னிடத்திலிருக்கிற பிரியத்தினாலே கந்தர்வர்கள் நீர் கேட்ட வரங்கொடுப்பார்கள் என்று சொல்ல, இராஜன் கந்தர்வர்களைப் பார்த்து மஹாநுபாவர்களே! எனக்குச் சம்பூர்ணமான ஐசுவரியமிருக்கிறது; நான் சத்துருக்களெல்லாரையும் ஜயித்திருக்கிறேன்; ஊர்வசியோடுகூடி ஒரே லோகத்தில் வசிப்பதைவிட நான் விரும்பக்கூடிய வரம் வேறொன்றுமில்லை; ஆகையால் அந்த ஊர்வசியோடு எப்பொழுதுங் கூடி வாழ்ந்திருக்க எனக்கு வரங்கொடுக்கவேண்டுமென்று கேட்கக், கந்தர்வர்களுமதிக சந்தோஷம்கொண்டு, ஒரு அக்கினிஸ்தாலியை யரசனிடங்கொடுத்து மஹாராஜனே நீர் வேதமார்க்கத்தின்படி நடப்பவரானபடியால் தக்ஷிணாக்கினி, காருகபத்தியம், ஆகவனீயமென்கிற மூவகையான அக்கினிகளை வளர்த்து யாகஞ்செய்வீரேயானால் நீர் ஊர்வசியோடுகூடி ஒரே யிடத்தில் வாழும்படியான பாக்கியம் பெறுவீர் என்று சொல்லி மறைந்துபோனார்கள். இராஜன் அக்கினிஸ்தாலியை வாங்கிக்கொண்டு, அடா மோசம்போனேனே மூடனேனே! ஊர்வசியைப் பெற்றுக்கொள்ளாமல் இந்த ஸ்தாலியை வாங்கிக்கொண்டதனால் என்ன பிரயோசனம்? என்று பரிதபித்து, அந்த ஸ்தாலியைக் காட்டிலேயே வைத்துவிட்டு, ஊர்போய்ச் சேர்ந்தான்; நடுராத்திரியில் விழித்துக்கொண்டு ஐயோ! ஊர்வசியோடு ஒரே இடத்தில் வசிப்பதற்காகக் கந்தர்வர்கள் ஸ்தாலி கொடுத்தார்களே, அதைக்கூட வீட்டுக்குக் கொண்டுவராமல் காட்டில்வைத்து வந்துவிட்டேனே! அந்த இடத்துக்குப்போய் ஸ்தாலியை எடுத்துக்கொண்டு வருவோமென்று எழுந்திருந்து காட்டுக்குவந்து தான் வைத்தவிடத்தில் ஸ்தாலியைக் காணாமல், ஒரு அரசமரத்தின் மத்தியில் வன்னிமரம் முளைத்திருப்பதைக்கண்டு ஐயோ! நானிங்கேதானே ஸ்தாலியை வைத்திருந்தேன். வன்னிமுளைத்த அரசமரம் தானேயிருக்கிறது. அக்கினிரூபமான இந்த அரசமரத்தை வெட்டிக் கொண்டுபோய் அரணிசெய்து, அதிலிருந்து அக்கினி உண்டுபண்ணி ஆராதனைசெய்துவருவோமென்று தீர்மானஞ்செய்து, அரசமரத்தையெடுத்துக்கொண்டு ஊருக்குவந்து, அரணி செய்யத்தொடங்கிச், சாயத்

திரியை ஜபித்து, அந்தக் காயத்திரியில் எத்தனை அக்ஷரங்களிருக்கின்றனவோ அவ்வளவு அங்குலப் (இருபத்திநாலு) பிரமாணம் அரணிசெய்து கடைந்த மூன்று அக்கினிகளையும் வளர்த்தி, ஊர்வசி லோகத்தில் வாழ்ந்திருக்கிற பலனை உத்தேசித்து வேதவிதிப்படி ஹோமம் பண்ணி, அதேமாதிரி யின்னம் அநேக யாகங்களையுஞ்செய்து கந்தர்வலோகம்போய் அங்கே ஊர்வசியுடனேகூடி வெகுகாலம் வாழ்ந்திருந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் தேவேந்திரன் சகலமான தேவர்களுடனேகூட அப்ஸரஸ்திரீகளின் நாட்டியம் பார்த்துக்கொண்டிருக்கையில் புரூரவனும் அந்த நாட்டியம் பார்க்கும்படி தேவசபைக்கு வந்தான். அப்ஸரஸ்திரீகள் முறைப்படி நடனம் பண்ணிவந்தார்கள். பின்பு ஊர்வசி முறைப்படி வந்து நடித்தாள். நாட்டியம், அபிநய முதலானவைகளில் தனக்குச் சமானமில்லையென்று கெருவங்கொண்டிருந்த அழகில் சிறந்தவளான அந்த ஊர்வசி புரூரவனைக்கண்டு சிரிக்க, அவனும் அவளைப் பார்த்துச் சிரித்தான். நாட்டியாசாரியரான தும்புருவானவர், அவர்கள் சிரித்ததைக் கண்டு கோபங்கொண்டு, அவர்களைப் பார்த்து அநேக தேவர்கள் கூடியிருக்கிற இந்தச் சபையில் நீங்களிருவரும் காரணமில்லாமல் சிரித்தபடியால் இந்த க்ஷணத்திலேயே நீங்களிருவரும் பிரிந்து போவீர்களென்று சாபங்கொடுத்தார். இவ்வென்று சாபம்பெற்ற புரூரவன் மஹா துக்கங்கொண்டு, இந்திரன் பாதத்தில் விழுந்து சுவாமீ! ஊர்வசியைப் பிரியாமல் கூடிவாழ்வதற்காக நான் அநேக யாகங்களைச் செய்து இவ்விடத்திற்கு வந்தேன், இப்பொழுது நான் அவளைப் பிரிந்திருக்கும்படி சாபம் வந்துவிட்டதே! இந்தத் துக்கத்தை நான் எப்படிச் சகிப்பேன், என்னைக் காத்தருளவேண்டுமென்று கெஞ்சிக் கேட்க, புரூரவனைப் பார்த்து, ஐயா! அரசனே! நீர் பயப்படவேண்டாம்; உம்முடைய சாபந்தொலைவதற்கு மார்க்கங்காட்டுகிறேன். தென்சமுத்திரக்கரையில் விளங்காநின்ற புண்ணியமாகிய கந்தமாதன பருவதத்தில் சமஸ்த தேவர்களாலும், சித்தசாரண கின்னரர்களாலும், ஸனகாதி மஹா யோகிகளாலும் ஸேவிக்கப்பட்டதாயும், ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்குப் புக்திமுக்திகளைக் கொடுப்பதாயும், சகல சாபங்களையும் நிவர்த்திசெய்வதாயுமுள்ள சாத்தியாமிர்த தீர்த்தமென்று ஒன்றிருக்கிறது. நீர் சீக்கிரமாய்ப்போய் அதில் ஸ்நானம்பண்ணும் ஸ்நானம்பண்ணினால் நீர் மறுபடியும் ஊர்வசியோடுகூடி வாழ்ந்திருக்கும் வாழ்வுண்டாய் எவ்விதத்திலும் நீங்காமல் வசித்துக்கொண்டிருப்பீர்; இதில் சந்தேகமில்லை. இதில் ஸ்நானம் பண்ணுகிறவர்களெல்லாருக்கும் அமிர்தமென்கிற மோக்ஷம் சத்தியமாய்க் கைகூடிவருவதாய் இருப்பதினாலே அதற்கு சாத்தியாமிர்தமென்று பேர்வந்ததென்று தேவேந்திரன் சொல்லப், புரூரவன் அதிக சந்தோஷமடைந்து, உடனே புறப்பட்டு சாத்தியாமிர்த மஹாதீர்த்தமிருக்கிற இடத்திற்குவந்து, அதில் ஸ்நானம்பண்ணினவுடனே சாபம்நீங்கி, ஊர்வசியோடுகூட விமானத்திலேறி, அமராவதிபோய்ச்சேர்ந்து, தேவலோகத்திலே தேவர்களைப்போல ஊர்வசியுடனேகூடி மறுபடியும் வாழ்ந்திருந்தான்.

கேட்பீர்களாக முனிவர்களே! சாத்தியாமிர்த தீர்த்தத்தினுடைய உத்தமமான வைபவத்தைப் பூர்வத்தில் பிரமதேவன் ஸநகாதிகளுக்குச் சொன்னபடியே [illegible] விஸ்தாரமாயுங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்த மஹாபாதகநாசனமான தீர்த்தத்தில் காமியார்த்தமாக ஸ்நானம்பண்ணுகிறவன் தான் கொண்டிருந்த மனோரதபூர்த்தியையும், நிஷ்காமமாய் ஸ்நானம் பண்ணுகிறவன் மோக்ஷத்தையும் அடைகிறான். புண்ணியமான இந்த அத்தியாயத்தைப் படிப்பவரும், கேட்பவரும் வைகுண்ட பதத்தையடைந்து சுகமாக வாழ்ந்திருப்பார்கள்.

இருபத்தெட்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

இருபத்தொன்பதாவது

மானசதீர்த்தம் அல்லது சர்வதீர்த்த வரலாறு உரைத்த

அத்தியாயம்.

கேளுங்கள் ரிஷிசிரேஷ்டர்களே! புரூரவசக்கிரவர்த்தியினுடைய சாபந்தீர்க்க சாத்தியாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணிவிட்டு பாதகத்தை நாசம்பண்ணுகிறதாய், மஹா புண்ணியமானதுமான சர்வதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினவன் மஹாபாதகங்களைச்

செய்தவனானாலும், ஸர்வபாதகங்களைச் செய்தவனானாலும், உடனே சுத்தியடைகிறான். இந்த ஸர்வதீர்த்தத்திலொருவன் ஸ்நானம் பண்ணுதவரையில் அவனைச் சரீரத்தைவிட்டுப் பாபம் நீங்காமலிருக்கிறது. இந்த ஸர்வதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணவேண்டுமென்று பயணப்படுகிற பிராணியைக்கண்டு அவன் சரீரத்திலிருக்கிற பாபங்கள் ஐயோ! நாம் நசித்துப்போவோமே யென்று நடுங்குகின்றன. இந்த ஸர்வதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணுகிறவரையிலேதான் மனிதர்கள் கர்ப்பவாஸமுதலான துக்கங்களுக்குள்ளாகிறார்கள். மஹாயாகங்களைச்செய்வதாலும், தீர்த்தயாத்திரை செய்வதாலும், காயத்திரியாதி மஹாமந்திரங்களை நியமமாகச் செபிப்பதாலும், நாலுவேதங்களையும் பக்திபூர்வமாக நாலுதடவை பாராயணம் பண்ணுவதாலும் பக்தியுடனே சிவலிங்கங்களைப் பூஜைசெய்வதாலும், ஏகாதசி, முதலான திதிகளில் உபவாசம்பண்ணுவதாலும், என்னபலனுண்டாகுமோ அந்தப்பலன்களெல்லாம் இந்த ஸர்வதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணுவதால் அடைகிறான் என்று சூதர்சொல்ல, முனிவர்கள் ஐயா! சூதரே! இந்தத்தீர்த்தத்துக்கு ஸர்வதீர்த்தமென்று பேர்வந்த காரணமென்ன? இதை யெங்களுக்கு விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்கச், சூதர் சொல்லத்தொடங்கினார்.

பூர்வகாலத்தில் பிருகுவம்சத்தில் பிறந்த ஸுசரிதர் என்று ஒரு ரிஷியிருந்தார். அவர் பிறவிக்குருடராயும், கிழவராயுமிருந்ததனால், தீர்த்தயாத்திரை செய்யமுடியாமலிருந்தும் ஸர்வதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்யவிருப்பங்கொண்டு, தெட்சணசமுத்திரத்திலிருக்கிற கந்தமாதனம்போய்ச் சேர்ந்து இந்திரியநிக்கிரகம்பண்ணித் திரிகாலஸ்நானஞ்செய்து, விபூதியை உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும் தரித்துக்கொண்டு, ஜாபாலோபநிஷத்தில் சொன்னபடி உருத்திராட்சமாலை யணிந்து, அதிதிகளைப்பூசித்துச், சிலகாலம் வாயுபட்சணஞ்செய்தும், சிலகாலம் உபவாசமிருந்தும், சிலகாலம் ஜலபட்சணம்பண்ணியும், முப்பொழுதும் சிவாராதனை செய்தும், குளிர்காலத்தில் ஜலமத்தியிலிருந்தும், கிரீஷ்மகாலத்தில் பஞ்சாக்கினிமத்தியிலிருந்தும், வருஷகாலத்தில் வெறும் வெளியிலிருந்தும், பரமசிவனைக்குறித்துப் பத்துவருஷகாலம் கொடுமையான தபசுபுரிந்தார். இப்படித் தபசுசெய்துவருகையில், சந்திரனைமுடியிலணிந்தவராயும், சூலபாணியாயும், பார்வதியைப் பாதிசரீரத்தி

லுடையவராயும், கோடிசூரியனுக்குச்சமானமான தமது தேகப்பிரகாசத்தினாலே பத்துத்திக்குகளையும் விளங்கச்செய்தவராயும், விபூதியினால் வெளுத்திருக்கிற ஸர்வாங்கமுடையவராயும், ஜடைமுடிதரித்தவராயும், அனந்தாதி மஹாநாகங்களை யாபரணங்களாக அணிந்தவராயுமிருக்கிற சங்கரமூர்த்தியானவர் அவருடைய தபசுக்குச்சந்தோஷமடைந்து பூதகணங்களுடன் ரிஷபாரூடராய்ச் சுசரிதருக்குப் பிரத்தியட்சமாகித், தம்மைத்தரிசிக்கும்படி அவருக்குக் கண்களைக்கொடுத்தார். உடனே யந்தப்பிராமணரும் பரமாத்மாவைக்கண்டு ஆனந்தபரவசராய் ஸ்தோத்திரம்பண்ண ஆரம்பித்தார். மஹாதேவா! மஹேசா! சங்கரா! தூர்ஜடே! திரிபுராந்தகா! அந்தகாந்தகா! காமாந்தகா! உமாகாந்தா! அமலா! சம்சாரவைத்தியா! பூதபாலகா! சிவா! காசரூபிகா! பிரமாதிதேவர்களால் பூஜிக்கப்பட்டவனே வாழி வாழி, திரியம்பகா! பக்தரக்ஷணதீக்ஷிதா! வியோமகேசா! கருணாமூர்த்தி! நீலகண்டா! சம்சாரமோசகா! மஹேசுவரா! பரமானந்தவிக்கிரகா! கங்காதரா! ஸர்வேசுவரா! சகலத்தையளிப்பவனே! வாழி வாழி, சம்புவாயும், வாசுதேவராயும் (எங்கும் நிறைந்தவராயும், ஸ்வயம்பிரகாசராயும்) சர்வராயும், உக்கிரராயும், பர்க்கராயும், கைலாசபதியாயிருக்கிற உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம்; கருணைக்கடலே என்னுடைய நடத்தையையோசியாமல் என்னைக் கிருபாகடாட்சத்தினாலே பார்த்துக்காத்தருளவேண்டும் என்று துதித்த ஸுசரிதரைப்பார்த்துக் கருணைக்கடலான உமாபதியானவர், ஐயா! ரிஷியே உமக்குவேண்டிய வரத்தைக்கேட்டுக்கொள்ளும், உமக்கு வரங்கொடுப்பதற்காக நானுமது புண்ணியாச்சிரமத்துக்கு வந்திருக்கிறேன் என்று சொன்னார். அப்பொழுது ஸுசரிதரும் பகவானைப்பார்த்துச் சந்திரசேகரா! நீர் என்னிடத்தில் பிரசன்னராயிருந்தால் எனக்கு வேண்டிய ஒருவரம் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜரையினாலே என் தேகமெல்லாம் நரைத்துப்போயிருக்கிறபடியால் ஒரு இடத்துக்கும்போக முடியவில்லை. ஆனாலும் ஸர்வதீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ண வேண்டுமென்கிற ஆசையிருக்கிறது. ஆகையால் ஸர்வதீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணின பலனையடையத்தக்கதான ஓர் உபாயமெனக்குச் சொல்லியருளவேண்டும் என்று பிரார்த்திக்க, மஹாதேவர் இராமசேதுவினால் பரிசுத்தமான இந்தக்கந்தமாதனத்தில் ஸர்வதீர்த்தங்களையும் வரவழைத்துவிடுகிறேன் என்று சொல்லி, அந்த

முனிவருக்குச் சந்திரசேகரப்படியாகச் சர்வதீர்த்தங்களையும் கந்தமாதனத்தில் வரவழைத்து முனிவரைப்பார்த்து சர்வதீர்த்தங்களும் வந்திருப்பதினாலே இந்தத்தீர்த்தத்துக்கு சர்வதீர்த்தமென்னும், இதில் எல்லாத்தீர்த்தங்களையும் என் மனதினாலே வரவழைத்தபடியால் இதற்கு மானஸதீர்த்தமென்னும் பேராகும். ஆகையால் முனிசுவரரே! மகா பாதகங்களுக்குக் காட்டுத்தீயாயும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் சோகமோ இவைகளை நாசப்படுத்துவதாயும், வேதாந்த ஞானமில்லாமலே மோக்ஷத்துக்கு ஏதுவாயும், ஜன்மம், விருத்தி முதலான முதல்கள் நிறைந்த சம்சாரசாகரத்துக்கு ஓடமாயும், கும்பிபாகமுதலான நரகாக்கினிகளை அவிப்பதாயுமிருக்கிற இந்த ஸர்வதீர்த்தத்தில் நீர் ஸ்நானம்பண்ணினால் இகத்தில் போக பாக்கியங்களையடைந்து பரத்திலே முக்தியை அடைவீர் என்று சொல்ல, அம்முனிவர் மஹாதேவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி எழுந்திருக்கும்போது அவருடைய சரீரத்தில் ஜரையினாலுண்டான நரைகளெல்லாம் மாறிப்போய், அழகுள்ள யௌவன புருஷனானவுடனே ஸுசரிதரும், மற்றுமுண்டான ரிஷிகளும் அந்தத்தீர்த்தத்தைக் கொண்டாடினார்கள். அப்பொழுது மஹாதேவன் ஸுசரிதரைப் பார்த்துப் பிராமணோத்தமா! நீர் பூமியிலுள்ள வேறு பல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யவேண்டுவதில்லை. இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிக்கொண்டு, முக்தியைச் சேருகிறபடியால் என்னைத் தியானஞ்செய்து இந்நகரத்தில் வசித்துவந்தால் அந்தத்திலே என்னுடைய பதவியை அடைவீர் என்பதில் ஆட்சேபணையேயில்லை. இந்தத்தீர்த்தத்தில் ஜனங்கள் ஸ்நானம்பண்ணினாலும் எப்பதவியை அடைவார்களென்று சொல்லி அந்தர்த்தானமடைந்து விட்டார். பிறகு ஸுசரித மகாரிஷியும் அநேககாலம் அந்தத்தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம்பண்ணி தன் கடைசியில் சிவத்திருவடி கைலாசத்தில் ஸாரூப்யத்தையும் இன்னும் விசேஷ செல்வத்தையும் அடைந்தார்.

கேளுங்கள் முனிசுவரர்களே! ஸர்வதீர்த்தத்தின் வைபவத்தை உங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தைப் படிப்பவரும், கேட்பவரும் சகல பாபங்களினின்றும் விடுபடுகிறார்கள்.

இருபத்தொன்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.

முப்பதாவது

தனுஷ்கோடி வைபவம் உரைத்த

அத்தியாயம்.

ரிஷிகளே! பவித்ரமான சர்வதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டுப், பிரமஹத்தியாதி பாதகங்களை நாசம்பண்ணுகிற தனுஷ்கோடி தீர்த்தத்துக்குப் போகவேண்டும். இந்தத் தனுஷ்கோடியை ஸ்மரிக்க மாத்திரத்திலே மனிதன் முக்தனாவானென்பதில் சமுசயமேயில்லை. தனுஷ்கோடியைக் கண்ணால் பார்க்கிறவர்களும், அதில் ஸ்நானம் பண்ணுகிறவர்களும், அதை வாயாலுச்சரிக்கிறவர்களும், (1) தாமிஸ்ரம், (2) அந்த தாமிஸ்ரம், (3) ரௌரவம், (4) மஹா ரௌரவம், (5) கும்பீபாகம், (6) காலசூத்திரம், (7) அஸிபத்திரவனம், (8) கிருமிபட்சம், (9) அந்தகூபம், (10) ஸந்தம்ஸம், (11) சல்மலி, (12) ஸூர்மி, (13) வைதரணி, (14) பிராணரோதம், (15) விசஸனம், (16) லாலாபக்ஷம், (17) அவீசி, (18) ஸாரமேயாதனம், (19) வஜ்ரகண்டகம், (20) க்ஷாரகர்த்தம பாதனம், (21) ரக்ஷோகணாசனம், (22) சூலப்ரோதவிபேதனம், (23) தந்தசூகாசனம், (24) பரியாவர்த்தனம், (25) நிரோதனம், (26) சூசிமுகம், (27) ஸ்வசோணிதபட்சம், (28) விஷாக்

---

(1) இருட்டுள்ள; (2) கும்மிருட்டுள்ள; (3) பயங்கரமான; (4) மகா பயங்கரமான; (5) குயவன் சட்டிபானைகளைச் சூளையில் சுடுகிறதுபோல் பாவிகளைச் சுடுகிற; (6) பாவிகளைக் கட்டி இழுக்கிறதற்கு வேண்டிய கருப்புக்கயிறுள்ள; (7) பட்டாக்கத்திகள் நிறைந்த; (8) பாவிகள் புசிக்கிறதற்கு வேண்டிய புழுக்களுள்ள; (9) பாதாளக் கிணறுள்ள; (10) கடிக்கிற; (11) முள்ளிலவமரங்களுள்ள; (12) அலைமோதிக்கொண்டிருக்கிற; (13) போகும் வழியில் வைதரணி என்னும் நதியோடு கூடிய; (14) மூச்சு விடாமல் தடுக்கிற; (15) காயப்படுத்துகிற; (16) குடிப்பதற்கு வேண்டிய லாலாவை (எச்சிலை) (வாயால் வழிகிற எச்சில்) நிறைந்த; (17) அலைகளில்லாத; (18) தின்பதற்கு வேண்டிய நாய் மாமிசமுள்ள; (19) வஜ்ரப்பொடிகளுள்ள; (20) தன்னிலிருப்பதற்கு வேண்டிய உப்புச்சேறு நிறைந்த; (21) பாவிகளைத் தின்பதற்கு வேண்டிய இராக்ஷஸக் கூட்டங்களையுடைய; (22) சூலமுனைகளால் துன்பப்படுத்துகிற; (23) பாம்புகளால் ஹிம்சை செய்கிற; (24) திருப்பச் செய்கிற; (25) பார்வையை மறைக்கிற; (26) ஊசிமுனையுள்ள; (27) குடிக்கிறதற்கு வேண்டிய சொந்த இரத்தமுள்ள; (28) விஷஜ்வாலையால் துன்பப்படுத்துகிற;

கினி பரிபீடனம், என்கிற இருபத்தெட்டுவிதமான நரகத்தை அடையமாட்டார்கள். அன்னியருடைய பொருள், மனைவி, மக்களிவர்களையபகாரம் பண்ணுகிற பாபிகள் பயங்கரர்களான யமதூதர்களால் காலபாசத்தாற் கட்டப்பட்டுத் தாமிஸ்ரமென்கிற நரகத்தில் தள்ளிவிடப்பட்டு வெகுகாலம் அதிலே கிடப்பார்கள். தன் எஜமானனைக் கொன்று அவனுடைய திரவியத்தை யனுபவிக்கிறவன் மஹா துக்க நிறைந்த அந்த தாமிஸ்ர நரகத்தை யடைகிறான். தன் குடும்பத்தைக் காப்பாற்றுகிறதாய் மற்றவர்களுக்குத் துரோகம் பண்ணுகிறவன் விஷத்தைக் கக்கிக்கொண்டிருக்கிற சர்ப்பங்கள் நிறைந்த ரௌரவ நரகத்தில் யமபடர்களால் தள்ளிவிடப்பட்டுத் துக்கத்தை யனுபவிக்கிறான். தன் மனைவி மக்களைச் சோற்றுக் கலையவிட்டுத் தன் சரீரத்தைமட்டும் போஷித்துக்கொள்ளுகிறவன் மஹா ரௌரவநரகத்திலே தன் மாம்சத்தையே புசித்துக்கொண்டு நெடுங்காலம் துக்கத்தை யனுபவிப்பான். உயிரோடிருக்கிற பட்சிகளையும், மிருகங்களையும் மாம்ச பட்சணிகள்கூட வெறுக்கும்படியாக இரக்கமில்லாமல் அடைத்துவைக்கிறவன் எண்ணெய் கொதித்துக்கொண்டிருக்கிற கும்பீபாக நரகத்தில் விழுகிறான். தாய் தந்தையர்களைத் துவேஷிக்கிற அதமன் பதினாயிரம் யோசனை விஸ்தாரமான காலசூத்திர நரகத்தில் விழுந்து கீழே அக்கினிஜ்வாலையாலும், மேலே சூரியனுடைய தாபத்தாலும் தகிக்கப்பட்டுப் பசியால் வருந்திக் காய்ந்துகொண்டிருக்கிற தாம்பிரத்தில் கிடந்து தவிக்கிறான். வேதமார்க்கத்தைக் கடந்து துர்மார்க்கத்திலே நடக்கிறவன் கோரமான அஸிபத்திரவனமென்கிற நரகத்தில் விழுந்து துன்பப்படுகிறான். பஞ்ச மஹாயஞ்ஞங்களைச் செய்யாதவனும் பக்திபேதம் பண்ணி அன்னம் உண்ணுகிறவன் கிருமிபட்ச நரகத்தில் விழுந்து புழுக்களால் தின்னப்பட்டுத், தானும் புழுக்களைத் தின்று, புழுவாகிப் பாபம் தீருகிறவரையில் அதிலேயே கிடக்கிறான். தங்களையே நம்பியிருக்கிறவர்களை யிம்சிக்கிறவன் இருள் நிறைந்த பயங்கரமான அந்தகூப நரகத்திலே விழுந்து தான் இம்சித்தவர்களாலே யிம்சிக்கப்பட்டுத் தூக்கமில்லாமல் தவித்துத்திரிகிறான். பிராமணன் திரவியத்தைத் திருட்டினால் அபகரிக்கிறவனும், அன்னியர் சொத்தைப் பலாத்காரமாகப் பறித்துக்கொள்ளுகிற இராஜன் அல்லது அவனுடைய உத்தியோகஸ்தர்களும் ஸந்தம்சமென்கிற நரகத்தில், ஸந்தம்சங்களென்கிற யமதூதர்களாலே பிடிக்கப்பட்டு இரும்பினால் செய்யப்பட்ட அக்கினிகுண்டங்களில் போட்டு வறுக்கப்படுகிறார்கள்.

ஜீவப்பிராணிகளைப் பலவித உபாயங்களாலே இம்சிக்கிறவன் முள்மயமான சல்மலி நரகத்திலே விழுகிறான். அணையத்தகாத ஸ்திரீகளைச் சேருகிற புருஷனும், சேரத்தகாத புருஷனைச் சேருகிற ஸ்திரீயும் ஸூர்மி என்கிற நரகத்திலே இரும்பினால் செய்யப்பட்டுக் காய்ந்துகொண்டிருக்கிற ஸ்திரீ புருஷ சொரூபங்களைத் தழுவிக்கொண்டு சந்திர சூரியர்களுள்ள பரியந்தந் துன்பமனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இராஜனாவது, அவனுடைய அதிகாரம் பெற்றவர்களாவது பாஷண்டமதத்தை யனுசரித்துத் தரும எல்லைகடந்து நடக்கிறவர்கள் வைதரணி நரகத்தில் விழுந்து வருந்துகிறார்கள். நாய்களையும், அம்புகளையும்கொண்டு வேட்டையாடிக் காட்டிலிருக்கிற மிருகங்களை வதைக்கிற தொழிலுடையவன் பிராணரோத மென்கிற நரகத்தில் யமகிங்கிரர்களால் எய்யப்பட்ட அம்புகளால் வருந்திக்கிடக்கிறான். விதியனுஷ்டானங்களில்லாமல் டம்பத்துக்காகப் பசுவதம்செய்து யாகம்பண்ணுகிறவன் விரஸனமென்கிற நரகத்திலே ரம்பங்களாலே யறுப்பட்டுத் துன்பமடைகிறான். வழிபறிக்கிறவன், விஷமூட்டுகிறவன், நெருப்பிட்டுக் கிராமங்களைக் கொளுத்துகிறவன், வியாபாரிகள் சொத்தை யபகரிக்கிறவன், இவர்கள் வஜ்ரதம்ஷ்டரம் என்கிற நரகத்திலே விழுந்து வெகுகாலம் துன்பப்படுகிறார்கள். தன்னுடைய தர்மபத்தினியைத் தன் ரேதஸைக்குடிக்கும்படி செய்கிறவன் ரேதக்குண்டமென்கிற நரகத்திலே ரேதஸைப் பானம்பண்ணிக்கொண்டு துன்பப்படுகிறான். சௌசாசாரமில்லாமல் வேதவிதிகடந்து வெட்கமில்லாமல் பசுக்களைப்போலச் சூத்திரஸ்திரீ சம்போகஞ்செய்து திரிகிறவன் நாற்றம்வீசுகிற மலம், மூத்திரம், இரத்தம், சிலேஷ்மம், பித்தம் இவைகள் நிறைந்த அதிபீற்சமென்கிற நரகத்திலே விழுந்துகிடக்கிறான். தண்டிக்கத்தகாதவனைத் தண்டிக்கிறவனும், பிராமணனுக்குச் சரீரதண்டனை செய்கிறவனும், ஸூகரமுகமென்கிற நரகத்திலே கரும்புபோல் ஆலையில் வைத்து அரைக்கப்பட்டு வருந்துகிறான். தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணுகிறவன் மேலே சொன்ன நரகங்களிலும், மற்றுமுள்ள நரகங்களிலும் விழுந்து வருந்தவே மாட்டான். தனுக்கோடியில் ஒரு தடவை ஸ்நானம்பண்ணுகிறவன் அசுவமேதபலனையும், துலாபுருஷதானபலனையும், ஆயிரம்கோதானபலனையும், பிரமஞானத்தையும் பெற்றுப்பாபத்தில் வெறுப்பு உண்டாகித் துக்கமொழிந்து, புத்திதெளிந்து ஸாலோக, ஸாமீப, ஸாரூப, ஸாயுஜ்யமென்கிற நாலுவகை முக்தியையும் கிரமமாக

அடைகிறான். தர்ம, அர்த்த, காம, மோட்சங்களி லொன்றை யுத்தேசித்து ஸ்நானம் பண்ணுகிறானோ அவன் அதை யடைகிறான். மஹாபாதகங்களைச் செய்தவனானாலும், ஸர்வபாபங்களையும் செய்தவனானாலும் தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணின மாத்திரத்தில் அவைகளினின்றும் விடுபட்டுத் தர்மத்தில் புத்தியுள்ளவனாகி ஐச்வரியம், கீர்த்தி, புத்தி, ஞானம், மனச்சுத்தி முதலானவைகளை யடைகிறான். பதினாயிரம் பிரம்மஹத்தி செய்திருந்தாலும், பதினாயிரம் ஸுராபானம் பண்ணியிருந்தாலும், பதினாயிரம் சொர்ணஸ்தேயம் பண்ணியிருந்தாலும், பதினாயிரம் குருதல்பகமனஞ் செய்திருந்தாலும், அவர்களோடு கூடி ஸம்ஸர்க்கபாபங்களைச் செய்திருந்தாலும், பஞ்சமஹாபாதகங்களுக்குச் சமானமான பாதகங்களைச் செய்திருந்தாலும், அவைகளெல்லாம் இந்தத் தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணினவுடனே நசித்துப்போகின்றன. இதில் சந்தேகமே யில்லையென்று நான் எரிமழுவை நாக்கில் வைத்துக்கொண்டு நிச்சயமாகச் சொல்லுவேன். இவைகளெல்லாம் அர்த்தவாதமென்று சொல்லுகிறவன் ஸர்வகர்மங்களினின்றும் விலக்கப்பட்டு நரகத்திலே விழுகிறான். பிராம்மணோத்தமர்களே! மஹாபாதகங்களையும் நீக்கி, இஷ்டகாமியங்களைக் கொடுத்து, அஞ்ஞானத்தைப்போக்கி, அத்வைத ஞான ஒளியைக்காட்டி, முக்தியின் பதத்தைக்கொடுக்கிற இந்தத் தனுக்கோடி தீர்த்தமிருக்கையில், அதைவிட்டு வேறு தீர்த்தங்களில் மனிதர்கள் புத்திசெலுத்துகிறார்களே! ஆ! ஆ! இதென்ன மூடத்தனம், இதென்ன மூடத்தனம்! இதென்ன மூடத்தனம்! இந்தத் தனுக்கோடியின் மஹத்துவத்தை நானென்னவென்று சொல்லுவேன். இதில் ஸ்நானம் பண்ணினவர்களுக்கு நரகபயமேயில்லை. தனுக்கோடியைப் பார்க்கிறவர்களும் நமஸ்காரம் பண்ணுகிறவர்களும், நினைக்கிறவர்களும், ஸ்பரிசிக்கிறவர்களும், அதில் ஸ்நானம்பண்ணுகிறவர்களும் மறுபடியும் பிறந்து தாய்முலைப்பால் குடிக்கிறதேயில்லை என்று தனுக்கோடியின் மகிமையைச் சூதபுராணிகரெடுத்துச் சொல்ல, ரிஷீச்வரர்கள் ஓ! சூதபுராணிகரே! இந்தத் தீர்த்தத்துக்குத் தனுக்கோடி யென்று பெயர்வந்தகாரணமென்ன? இதை எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்க சூதர் சொல்லுகிறார்.

பூர்வம் ஸ்ரீராமர் லோககண்டகனான இராவணனைச் சங்கரித்து, விபீஷணனுக்கு இலங்கையில் பட்டங்கட்டினவுடனே

லட்சுமணன், சுக்கிரீவன் முதலான வானரவீரர்களோ
டு, சாரணர், கந்தர்வர், வித்யாதரர், ரிஷிகணங்கள்,
ஸித்தர்கள் முதலானவர்கள் ஸேவித்திருந்து [illegible]
ம்பன்னின ஸ்ரீருத்திரமூர்த்தியைப் போலக்
ட்டத்தை சார்ந்து … கந்தமாதனமலையை ய
ப்பெருமாள் … விபீஷணர் [illegible]
காண்டு ராகவ … [illegible]
மார்க்கமாகப் ப … [illegible]
ந்தரவுசெய்வார் … [illegible]
வில்லின் நுனியால் … [illegible]
ரார்த்திக்க, இராகமா … லை
னவை உடைத்துவிட்டார்.
தீர்த்தத்துக்குத் தனுக்கோ
ராமருடைய தனுக்கோடியினால்
ந்தக்கோட்டைத் தரிசிக்கிறவன்
பவாசத்தைக் காணுகிறவன் மோக்ஷ
டில் ஸ்நானஞ்செய்கிறவன் அடைகி
எ… த்தெரியாது. கர்மநாசீ தீர்த்தத்தில் நடப்
பாதகங்கள் நீங்கும்; கங்கையாற்றங்கரையில் [illegible]
மோட்சமடைவார்கள்; குருக்ஷேத்திரத்திலே தானம்பண்ணினால் ப்ர

ம்மஹத்தியாதி பாபங்கள் நீங்கும்; தனுக்கோடியில் செய்கிறதபசும், அடைகிற மரணமும், கொடுக்கிற தானமும், மஹாபாதகங்களைப் போக்கி, அபீஷ்டஸித்தியையுங்கொடுத்து, மோட்சத்தையுங் கொடுக்கிறது. முக்தியைக்கொடுக்கிற தனுக்கோடியைப் பணிகிறவரில் ஒருவனுக்குப் பாபங்களாலும், உபபாதகங்களாலும் பயமுண்டாகிறதா. தனுக்கோடியைக் கண்டவனுக்கு இருதயகமலம் மலர்ந்து, ஸகல ஸம்சயங்களும் நீங்கிப், பாபங்களெல்லாம் ஒழிகின்றன. தெட்சணசமுத்திரத்தில் விபீஷணருக்கு இஷ்டமுண்டாகும் பொருட்டு ஸ்ரீராமரால் கிழிக்கப்பட்டகோடிதான் சொர்க்கலோகம், பிரம்மலோகம், வைகுண்டம், சிவலோகம் முதலியவைகளுக்குப் போகிறவழியாகும். இதில் ஸந்தேகமில்லை. தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணுகிறது ஸமஸ்த யாகங்களுக்கும், ஸகலமான தானங்களுக்கும், மந்திரங்களுக்கும் மேலானது. தனுக்கோடியை நினைக்கிறவனுக்குக் காயக்கிலேசமுண்டாக்குகிற தபசுகளாலும், யாகங்களாலும், வேதங்களாலும், சாஸ்திரங்களாலும் என்ன பிரயோச

னம் தனுக்கோடி ஸ்நானம் கிடைக்கப்பெறாதவனுக்குக் கா ளுந்தி, [illegible] காவேரி முதலான தீர்த்த ஸ்நா னங்களுக்கு [illegible] தனுக்கோடி ஸ்நானங்கிடை முக்திக்ஷேத்ர காசியில் மரணமடைந்தது போலிருப் [illegible] கோடியில் [illegible] ஸ்நானம்பண்ணி, உபவா சொர்ணதானம் கோதானங்க [illegible] த்தவன் [illegible] அகடு விருப்பாமே [illegible] [illegible] [illegible] யில்லை. தனுக்கோ [illegible] வெகு தக்ஷிணைக [illegible] யவர்களும் வருகிற [illegible] டி தீர்த்தமானது ஸா [illegible] ர்ல்லுகிறார்கள். உலகத்தில் [illegible] ந்தரங்களும், அஷ்டவசுக்களும் [illegible] மருத்துக்களும், சாத்தியர்களும் [illegible] வித்தியாதரர்களும், இன்னும் உள்ள [illegible] ந்திரர்களும், பார்வதி, லக்ஷ்மி [illegible] தனுக்கோடி தீர்த்தத்தில் எப்பொழுதும் [illegible] கள். இந்தத் தனுக்கோடிக் கரையிலே தே [illegible] பஞ்செய்து, சகல சித்திகளையும் அடைந்தார் [illegible] தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிப் பிதுர்க்களுக்குத் தே வர்களுக்கும் திருப்திசெய்வித்தால் அவன் மஹாபாதகங்களினி ன்றும் விடுபட்டுப் பிரமலோகத்திலே மகிமையோடு வாழ்ந்திருப் பான். இங்கே பக்தியோடு ஒரு பிராமணனுக்கு அன்னங்கொடுக் கிறவன் இவ்வுலகத்தில் சகல போகங்களையும் அனுபவித்துப் ப ரத்திலேயும் சுகத்தை அடைகிறான். [illegible] தபசுபண்ணச் சக்தியில்லாதவனும், அசுவமேதயாகஞ் செய்யச் சக்தியில்லாதவனும், இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினால் அந்தப் பலனையடைகிறான். நான்கு வருணங்களில் எந்தவரு ணத்தாராயிருந்தாலும் இந்தத் தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணி னால் அவன் இதைப்போல ஜன்மத்தை யடைகிறதேயில்லை. சூரியன் மகரராசியிலிருக்கிற மாகமாசத்திலே இந்தத் தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணுகிறவனுடைய பலத்தைச் சொல்லமுடி யாது. மாதமெல்லாந் தனுக்கோடி தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணு கிறவர்கள் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் ஜன்மமுதல் கொண்டு செய்த பாபங்களைப்போய், [illegible] ஸர்வதீர்த்த புண்ணி

யடைந்து, [illegible] போகங்களை யனுபவித்து மோக்ஷசாம்ரா ஜ்ஜியத்தையு மடைகிறார்கள். [illegible] தேவர்களிடம் [illegible] படி [illegible] அப்படியே சாவித்திரீகளிடமும் இந் தத் தனுக்கோடி உத்தமமானது. மாக மாசம் முப்பதுநாளும் இவ் விதிகளை யடக்கிக்கொண்டு விதிப்படி இந்தத் தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணுகிறவனுக்குப் [illegible] போஜனத்தைச் செய்துகொண்டு [illegible], இந்தத் தனுக் கோடியில் மாகமாசம் ஸ்நானம் பண்ணுகிறவன் பிரம்மலோகத்தையடை [illegible] மாகமாசத்தில் தனுக் கோடியில் ஸ்நானம்பண்ணி, மாசக்கடைசியில் சிவராத்திரி [illegible] இந்திரியநிக்ரஹமுள்ளவனாய், இராத் கண்விழித்திருந்து, [illegible] இராமநாதனை [illegible] படி [illegible] பண்ணி, மறுநாள் [illegible] கோடியிலும் [illegible] தீர்த்தங்களிலும் [illegible] [illegible] ங்களை நிறைவேற்றி, இராமநாதனை [illegible] தரிசித்து நமஸ்காரஞ்செய்து, தன் சக்திக்குத் தக்கபடி பிராம ணர்களுக்கு அன்னங்கொடுத்து, [illegible] பூமி, பசு, [illegible] தானியம், தனம், இவைகளை யவர்களுக்குக் கொடுத்து, அவர்களுடைய அநுமதியின் பேரில் மௌனமாயிருந்து போஜ னஞ்செய்கிறவனுக்கு மகேஸ்வரரான இராமநாதர் அவன் செய்த சகல பாபங்களையும் அழித்துப் பக்தியைக் கொடுக்கிறார். ஆகையால் முனிசிரேஷ்டர்களே! புருஷர்கள் மாகமாசத்தில் அவ சியம் தனுக்கோடி ஸ்நானஞ்செய்யவேண்டும். அர்த்தோதய மஹோதய புண்ணியகாலங்களில் தனுக்கோடி ஸ்நானஞ்செய்கிற வர்களுக்குச் சகல பாபங்களும் நாசமடைந்துபோய், புருஷார்த்தங்க ளும் வசப்படுகிறார்கள். அவன் [illegible] ஞானசாதனமில்லாமலே சாயுஜ்யமடைகிறான். அர்த்தோதய மஹோதய கால ஸ்நானமானது பாபங்களுக்குப் பிராயச்சித்தமாக மனுவாதி களாலே விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புண்ணிய காலங்களில் தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணுகிறவன் [illegible] செய்யப் படவேண்டியதின் சம்பூர்ணபலனை யடைவதில் சந்தேகமில்லை. சந் திரசூரிய கிரகணகாலங்களில் இந்தத் தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணுகிறவனுடைய புண்ணியபலனை ஆதிசேஷனாலுஞ் சொல்லி முடியாது. மேலே சொன்ன இந்தப் புண்ணியகாலங்களாவன, பிரம்

[illegible] பாபங்களுக்கும் பிராயச்சித்தமாகவும் [illegible] பண்ணிக் [illegible] களாகவும் [illegible] சொல்லப்பட்டிருக்கிறது. [illegible] அர்த்தோதய [illegible] புண்ணியகாலங்களிலும், சந்திர சூரிய கிரகணபுண்ணிய [illegible] அந்தக் கோடியில் ஸ்நானம்பண்ணவேண்டியது.

[illegible] எல்லாவற்றையும் விட [illegible] புத்திமுக்திகளைக் கொடுக்கிற [illegible] அங்கே, பிதுர்க்களுக்கு [illegible] இங்கே பிண்டம் போட்டால் பிதுர்க்களுக்கு [illegible] திருப்தியுண்டாகிறது. [illegible] இந்த முறையும், ஸ்ரீராமர் பிதுர்க்களுக்கு [illegible] செய்திருக்கிறார். இந்த [illegible] பிதுர் [illegible] இந்த முன்றிடங்களுக்கும் [illegible] [illegible] தனுஷ்கோடி [illegible] தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினவர்கள் [illegible] ஜன்மத்தில் [illegible] இன்னும் [illegible] [illegible] இந்த அத்தியாயத்தைப் படிப்பவரும் கேட்பவரும் [illegible] நீங்கி சகல [illegible] அநுபவித்து அந்தத்தில் மோக்ஷ [illegible] பெறப் போவார்கள் [illegible]

[illegible]பதாவது அத்தியாயம்

முற்று.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அத்தியாயம்.

[illegible]

[illegible]

[illegible] இருக்க விரும்பினால் [illegible] அவர்களை [illegible] கொண்டு [illegible] செய்து [illegible] வசித்திருந்தார்கள்.

இனி, இப்படியிருக்கச் சாயங்காலவேளையில் கிருதவர்மா, கிருபாசாரி, அசுவத்தாமா முதலிய மூன்று பேர்களும் துரியோதனனிடம் வந்து, பீமசேனனுடைய கதையினால் தொடையொடிபட்டுத், தேகமெல்லாம் இரத்தம் பெருகிப், புழுதியில் புரண்டுகொண்டு பிராணவேதனைப்பட்டுக் கொண்டு துக்கப்படத், துரியோதனனும் அவர்களைப் பார்த்துக் கண்ணீர் ததும்ப தாரைதாரையாய்க் கண்ணீர் பெருக அழுதான். அப்பொழுது அசுவத்தாமா கோபத்தினால் ஜொலித்து, கண்கள் சிவப்பாகக் கைகளைப் பிசைந்துகொண்டு விம்மி அழுது [illegible] துரியோதனனைப் பார்த்து, இந்த அற்பர்கள் என் பிதாவைக் கபடமாய் யுத்தத்தில் கொன்றதைப் பற்றிக்கூட எனக்கு வருத்தமுண்டாகவில்லை. இரணகளத்தில் விழுந்து கிடக்கிற உன்னைப் பார்க்கும்போது என் வயிறு எரிகிறது; [illegible] நான் செய்த புண்ணியத்தின் [illegible] இந்தக் கிருஷ்ணன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே [illegible] பாண்டவர்களை [illegible] கொன்றுவிடுகிறேன்; எனக்கு உத்தரவு கொடு என்று சொல்ல, அதைக் கேட்ட துரியோதனன் மனமகிழ்ந்து அப்படியே [illegible] என்று சொல்லிக், கிருபாசாரியரைப் பார்த்து அசுவத்தாமாவுக்குச் சேனாபதியாக அபிஷேகஞ் செய்து வையுங்கள் என்று சொல்ல, அவரும் அப்படியே அபிஷேகஞ் செய்யப், பிறகு அபிஷேகம் பெற்ற அசுவத்தாமாவும் துரியோதனனைக் கட்டியணைத்து கிருதவர்மா கிருபாசாரியாருடனே கூடக் கோபத்தோடும் அதிவேகமாய்ப் புறப்பட்டுப் [illegible] முன் [illegible] பாண்டவர்களைக் [illegible] பாண்டவர்கள் [illegible] சேனாதிபதி [illegible] [illegible] படுக்கைகள் [illegible] தங்கள் [illegible] தங்கும் [illegible]

[illegible]

க்கையில் சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு அர்ஜுனன் கொல்லவில்லையா ! இதேமாதிரியாக மற்றவர்களையும் கபடமாய்க் கொல்லவில்லையா ! அப்படியே நானும் இராத்திரியில் தூங்கிக்கொண்டிருக்கிறவர்களைக் கொன்றேதீருவேன் என்று சொல்லிக்குதிரையை இரதத்தில் பூட்டிச் சத்துருவிருக்கிற விடத்தைநோக்கிப் புறப்பட்டுப் போனான். கிருதவர்மன் கிருபர் இருவரும் கூடப்போனார்கள். அப்பொழுது கூடாரத்துக்குள்ளிருந்த ஜனங்களெல்லாரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அசுவத்தாமா கூடாரவாசலில்போய்க், கருணாநிதியான பிரமசிவனைத்தியானித்து ஒரு அகலமான கத்தியைப் பெற்றுக்கொண்டு, கிருதவர்மன், கிருபாசாரி யிருவரையும் வாசலிலே வைத்துவிட்டுத், தான் உள்ளேபுகுந்து, கத்தியைச்சுழற்றிக் கூடார முடியச்சுற்றிவந்து துஷ்டதுய்ம்மனுடைய கூடாரத்துக்குப்போய் அங்கே பகலில் சண்டைசெய்த சிரமத்தால் சுகமாய்த்தூங்கிக்கொண்டிருக்கிற சேனைகளின் மத்தியில் வெள்ளைநிறமான படுக்கையில் படுத்துத்தூங்கின துஷ்டதுய்ம்மனைத் தன்காலால்உதைக்க, அவன் படுக்கையைவிட்டெழுந்திருந்து கண்ணைவிழித்து எதிரில் அசுவத்தாமா நின்றுகொண்டிருந்ததைப்பார்த்தான். பலசாலியான அசுவத்தாமன் அவன் தலைமயிரைப்பிடித்துக்கையாலே கசக்கிப்பூமியில் தள்ளிவிட்டான். துஷ்டதுய்ம்மனுக்குத் தூக்கக்கெளியாமலும் பயமதிகமாயிருந்தபடியினாலும் ஒன்றுஞ்செய்யாமல் சும்மாவிருந்தான். அசுவத்தாமன் துஷ்டதுய்மனுடைய மார்பிலே காலைவைத்து மிதித்துக்கொண்டு வில்நாணியால் கழுத்திலேகட்டி, அவன் கதறக் கதற இழுத்துக்கொண்டு வந்து, ஆட்டை அறுப்பதுபோல அறுத்துவிட்டான். அப்படியே யுதாமன்யூ உத்தமோஜா சிகண்டி துரோபதியின் புத்திரர்களான உபபாண்டவர்கள் மிகுந்த சேர்மர்கள், இவர்களையும் துஷ்டதுய்ம்மனுடைய எல்லாச் சேனைகளையும் வெட்டியெறிந்தான். அசுவத்தாமனுக்குப்பயந்து வெளியிலோடினவர்களை வாசலிலிருந்த கிருதவர்மன், கிருபாசாரியாரிருவரும் பிடித்து அடித்துக் கொன்று யமன்வீட்டுக்கு அதிதிகளாயனுப்பி விட்டார்கள். மஹா பலசாலிகளான மூவரும் பாண்டவர்கூடாரத்தை யிப்படியாக அழித்து நாசம்பண்ணப் பிரளயகாலத்தில் உலகமிருப்பதுபோல அந்த கூடாரங்கள் சூனியமாய்விட்டன. இப்படிப் பாழாக்கினபின் கூடாரத்தைவிட்டு வெளிப்பட்டு, பாண்டவர்களுக்குபயந்து நடுநடுங்கி அதிவேகமாய்த் தனித்தனியே பிரிந்து ஓடிப்போனார்கள். அசுவத்தாமா ரேவாநதிக்கரை போய்ச்சேர்ந்தான், அவ்விடத்திலே புண்

ளியதைகளைப் பேசிக்கொண்டும், யோகவிசாரம் செய்துகொண்டும் தபசியிருந்த முனிவர்கள் அசுவத்தாமனுடைய கெட்டசெய்கையைத் தங்கள் யோகபலத்தால் தெரிந்துகொண்டு, அவனைப்பார்த்து ஐயா! உம்மைப் பார்த்ததனாலேயே யெங்களுக்குப் பாபம் வரும், உம்மோடு பேசினால் பதினாயிரம் பிரம்மஹத்திதோஷமும் வந்துவிடும்; ஆகையால் இந்த ஆச்சிரமத்தில் நில்லாமல் ஓடிப்போம் என்று சொல்லக்கேட்ட அசுவத்தாமன் வெட்கப்பட்டு, முனிவர்களிருந்த அந்த ஆச்சிரமத்தை விட்டுப் போய் கங்கைமுதலான தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணி, அங்குள்ள மஹாத்மாவான பிராமணர்களாலே நிந்திக்கப்பட்டுக் கடைசியாகப் பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ள விரும்பிப், பதரிகாசிரமத்தில் தபசுபண்ணிக்கொண்டிருந்த வியாசரைக்கண்டு, பக்தியுடனே நமஸ்காரம்பண்ணிச் சரணமடைந்தான். வியாசர் அவனைப் பார்த்து நீ தூங்குகிறவர்களைக் கொன்ற மஹாபாபி, உன்னோடு பேசினால்கூட எனக்குப் பாபம் வந்துவிடும், இந்த ஆச்சிரமத்தில் நில்லாதே; ஓடிப்போவென்று சொல்ல, அசுவத்தாமன் ஐயா எல்லாரும் என்னை நிந்திக்கிறார்களென்று நானும்மைச் சரணமடைந்தேன். நீரும் இப்படிச் சொல்லிவிட்டாலெனக்கார்க்கதி? நான் செய்த பாபநிவர்த்திக்கு ஒரு பிராயச்சித்தம் எல்லாந்தெரிந்த நீரே விதிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தான். அப்பொழுது அவர் வெகுகாலந் தியானம் பண்ணித் துரோணபுத்திரனே கேளு; இந்தப் பாபத்துக்குப் பிராயச்சித்தம் ஸ்மிருதியில் கிடையாது; ஆனாலும் ஒரு உபாயம் சொல்லுகிறேன். தெட்சணசமுத்திரத்தில் விளங்காநின்ற முக்தியைக் கொடுக்கும்படியான இராமசேதுவில் தனுக்கோடியென்கிற பாபநாசனமான ஒரு புண்ணியதீர்த்தமிருக்கிறது; அதில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்குப் பிரம்மஹத்தியாதி சகல பாபங்களும் ஒழிந்து துர்ச்சொற்பனம், நரகதுன்பம், அகாலமிருத்யு, தாரித்திரியம் இவைகள் விலகி, ஆயுசு, சாந்தி தாந்தி, சித்தசுத்தி, விஜயம் முதலான மங்களங்களெல்லாம் உண்டாகிச், சர்வாபீஷ்டமுங் கைகூடிச் சொர்க்கமும், மோட்சமும் சித்திக்கிறது. அப்பேர்ப்பட்ட தனுக்கோடியில் ஒருமாதகாலம் நாள்தவறாமல் ஸ்நானம் பண்ணுவாயானால் ஸப்தமரண தோஷத்தினின்றும் விட்டு நீ பரிசுத்தனாவாய்; நான் சொன்னதை உடனே கேளு என்று சொல்ல, அசுவத்தாமனுமப்படியே தனுக்கோடிபோய்ச் சேர்ந்து ஒருமாசகாலம் சங்கல்ப பூர்வமாக மூன்றுவேளையிலும் ஸ்நானம்

பண்ணி, இராமநாதரைத் தரிசித்துவந்தான். முப்பதாம் நாள் ஸ்நானம் பண்ணிப் பஞ்சாட்சரத்தை ஜபித்து உபவாசம் பண்ணி, இராத்திரியில் இராமநாதர் சன்னிதியில் கண்விழித்துக்கொண்டிருந்து பொழுதுவிடிந்தவுடனே சங்கற்ப பூர்வமாகத் தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணி, இராமநாதரைப் பக்தியோடு சேவித்துத் துதித்து, ஆனந்தக் கண்ணீர்பெருக, இராமநாதருக்கு முன்னாலே நிர்த்தனம் பண்ணினான். அப்பொழுது பகவான் பிரசன்னராய் அவனுக்கெதிரில்தோன்ற அசுவத்தாமன் ஸ்துதிக்க ஆரம்பித்தான். கருணைக்கடலே! தேவதேவேசா! சங்கரா! ஆபத்தாகிற சமுத்திரத்திலே முழுகினவர்களுக்கு ஓடம்போன்ற திருவடியுடைய மஹாதேவா! தூர்ஜடீ! நீலலோகிதா, உமாகாந்தா, விருபாட்சா, சந்திரசேகரா, உமக்கு நமஸ்காரம் நமஸ்காரம்; மிருத்தியுஞ்செயா, திரிநேத்திரா, பார்வதிபதீ, திரிபுரஸம்ஹாரா, சம்பூ, பிநாகபாணீ, திரியம்பகா, வந்தனம் வந்தனம்; அநந்தன் முதலான மஹாநாகங்களை ஆபரணமாக அணிந்த சூலபாணீ, கங்காதரா, மிருடா, அவ்யயா, பாபக்கூட்டிலேயிருந்து என்னைக் கிருபாகடாட்சத்தினாலே விடுவித்துக் காப்பாற்றியருளவேண்டும்; என்று துதித்த அசுவத்தாமனைப் பார்த்து மஹாதேவன் சந்தோஷப்பட்டு, அசுவத்தாமா! தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணினதினால் உனக்கு ஸப்தமரண தோஷம் நீங்கிப்போய்விட்டது. நான் பிரத்தியட்சமாயிருக்கும் பொழுது உனக்கு எதுதான் துர்லபம்? உனக்கிஷ்டமான வரத்தைக்கேள் என்று சொல்லத் துரோணபுத்திரனாகிய அசுவத்தாமனும் மஹேசுவரா! உம்மைத் தரிசித்தமாத்திரத்திலே நான் கிருதார்த்தனாய்விட்டேன்; பாபிகள் கோடி ஜன்மம் எடுத்தாலும் உம்மைக் காணமாட்டார்கள்; ஆகையால் உம்முடைய சரணாரவிந்தங்களில் அசஞ்சலமான பக்தியொன்றே எனக்குவேண்டும். இந்த வரத்தையே நான் விரும்புகிறேன் என்று சொல்ல மஹாதேவன் அப்படியே யாகட்டுமென்று சொல்லி அசுவத்தாமன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அந்தர்த்தானமாய்விட்டார். அசுவத்தாமன் கோடிதீர்த்த ஸ்நானத்தினாலே பரிசுத்தனான பிறகு மஹாரிஷிகளெல்லாரும் அவனைப் பரிசுத்தனென்று அங்கீகாரம் பண்ணிக்கொண்டார்கள். கேளுங்கள் முனீசுவரர்களே துரோணபுத்திரனாகிய அசுவத்தாமனுக்குப் பாபநிவர்த்திசெய்து பரிசுத்தத்தைக் கொடுத்த தனுக்கோடிமகிமையை யுங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தைப் பக்தியுடனே படிக்கிறவ

ரும் கேட்கிறவரும் சகல பாபங்களையும் உதறிவிட்டுச் சிவலோகம் போய்ச் சிறப்புடனே வாழ்ந்திருப்பார்கள்.

முப்பத்தோராவது அத்தியாயம்

முற்றிற்று

முப்பத்திரண்டாவது

தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணித் தர்ம்மகுப்தன் பைத்தியம் நீங்கின

அத்தியாயம்

கேளுங்கள் நைமிசாரணியவாசிகளே! தனுக்கோடியின் மகிமையை யின்னமும் உங்களுக்குச் சொல்லுகிறேன் சிரத்தையுடன் கேளுங்கள். பூர்வகாலத்தில் சந்திரவம்சோற்பவனான நந்தன் என்கிற மஹாராஜாவானவர் தர்மத்தோடு நாலுசமுத்திரத்துக்குட்பட்ட பூமியை ஆண்டுவந்தார். இப்படி யிருக்கையில் அவருக்குத் தர்ம்மகுப்தன் என்கிற பிள்ளைபிறந்து, இராஜ்யபாரத்தை வகிக்கும் வயதுவந்தபோது, நந்தமஹாராஜாவானவர் இராஜ்யத்தைப் புத்திரன் கையில் ஒப்புவித்துவிட்டு, இந்திரியங்களை நிக்கிரகம்பண்ணி ஆகாரத்தை ஒடுக்கித், தபசுபண்ணுவதற்காகத் தபோவனம் போய்ச்சேர்ந்தார். பிறகு தர்மத்தையும் நீதியையுமறிந்தவனான தர்மகுப்தன் பலவிதமான யாகங்களைச்செய்து, இந்திரன் முதலான தேவர்களையும், தனம் பூமிகளைக்கொடுத்துப் பிராமணர்களையுஞ் சந்தோஷப்படுத்தித் தர்மமாய் இராஜ்யபாரம் நடத்திக்கொண்டு வரும்போது, பிரஜைகளெல்லாரும் தத்தம்வருணா ஆச்சிரமகிரமந்தவறாமலும், சோராதி பீடைகளில்லாமலும் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள். இப்படியிருக்கையில் ஒருநாள் தர்மகுப்தன் குதிரைமேலேறிக்கொண்டு வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குப்போய்த் திக்குகளையளாவிக்கொண்டிருக்கின்ற தமாலம், தாலம், இந்தாலம், குரவம் முதலிய விருட்சங்களடர்ந்து, சிங்கம் வியாக்கிர முதலான மிருகங்களாலே பயங்கரமாயும், தடாகங்களில்தாமரை, செங்கழுநீர், அல்லி, நீலோத்பலம் முதலிய மலர்களில் மதுவையுண்டு மயங்கிக்கிடக்கும் வண்டுகளின் ரீங்காரத்தொனியானது திகாந்தமளவும் பரவவும், தவம் புரியும் தபோதனர்கள் நிறைந்திருப்பதுமான அந்தக் காட்டிலே சுற்றித்திரிந்து கொண்டிருக்கையில் சூரியன் அஸ்தமானமாய்த், திக்குகளெல்லாமிருளும்படி யிராத்திரி வந்தது. இராஜனும் சாயம் சந்தியைமுடித்து வேதமாதாவாகிய காயத்திரியை ஜபித்துக், கரடி சிங்கம் முதலிய மிருகங்களால் துன்பமுண்டாகுமோவென்று பயந்து ஒரு மரத்தின்மேலேறி யுட்கார்ந்திருந்தபோது, சிங்கத்தைக் கண்டு பயந்து ஓடிவந்த ஒரு கரடியானது அந்த மரத்தின்மேலேறி மஹாபல பராக்கிரமசாலியான அந்த ராஜாவைக்கண்டு, ஐயா நீர் பயப்படாதேயும், ஒரு பெரியசரீரத்தையும், தெற்றுப்பல்லையும் உடைய பலமுள்ள ஒரு சிங்கமானது என்னை விரட்டிக்கொண்டு வந்து இந்த மரத்தடியி லுட்கார்ந்திருக்கிறது. இராத்திரிமுன் பாதியில் நான் விழித்துக்கொண்டிருந்து உம்மைக் காப்பாற்றுகிறேன். பின் பாதியிரவில் நீர் விழித்துக்கொண்டிருந்து என்னைக் காப்பாற்றும். இப்படி யிராப்போதைக் கழிப்போம் என்று சொல்லிற்று. அரசனும் அப்படியே யாகட்டுமென்று சொல்லிவிட்டுத் தூங்கிக்கொண்டிருக்கையில் சிங்கம் கரடியைப்பார்த்து ஓகரடியே, தூங்குகிற இராஜனை யென்னிடந் தள்ளிவிடென்று சொல்லத், தர்மந்தெரிந்த கரடியானது சிங்கத்தைப் பார்த்து ஏ மிருகேந்திரா! உனக்குத் தர்மந்தெரியாது; நம்பினவர்களைக் கைவிட்டவர்க்கு மஹாகஷ்டங்கள் நேரிடுகின்றன. மித்திரத்துரோகிகளின் பாபம் பதினாயிரம் யாகம்பண்ணினாலுந் தீராது; பிரம்மஹத்தியாதி பாபங்களுக்கு ஒருக்கால் பிராயச்சித்தமிருந்தாலும் இருக்கலாம்; நம்பிக்கைத் துரோகம்பண்ணினவன் பாபமானது கோடி ஜன்மம் எடுத்தாலும் நசிக்கிறதில்லை. சிங்கமே மஹாமேருமலையைக்கூட நான் பாரமாக நினைக்கவில்லை; விசுவாச காதகத்தையே நான் பாரமாக நினைக்கிறேன் என்று தர்மோபதேசம்பண்ணச் சிங்கம் சும்மாவிருந்துவிட்டது. பிறகு தர்மகுப்தராஜன் விழித்திருக்கக், கரடி தூங்கினபோது சிங்கம் அரசனைப் பார்த்துக் கரடியைக் கீழே தள்ளிவிடு என்று சொல்ல, அரசன் தன்மடியில்தலையைவைத்துக்கொண்டு படுத்திருந்த கரடியை ஆலோசியாமல் தள்ளிவிடக், கரடி தெய்வாநுகூலத்தினாலே நகங்களால் மரக்கிளையைப் பிடித்துக்கொண்டு கீழேவிழாமல் தப்பித்துக்கொண்டு அரசனிடம் வந்து ராஜனே நான் பிருகுகுலத்தில் பிறந்த தியானகாஷ்டன் என்கிற ரிஷி, காம

ரூபியானதால் காடி ரூபங்கொண்டிருக்கிறேன். குற்றமற்ற என்னைத் தள்ளிவிட்டபடியால் நீ உடனே சித்தப்பிரமை பிடித்து ஊரெல்லாந் திரியக்கடவாய் என்று சபித்துச், சிங்கத்தைப்பார்த்து, ஏ சிங்கமே நீ பூர்வஜன்மத்தில் குபேரன் மந்திரியாகிய பந்திரன் என்கிற யக்ஷன்; நீ ஒரு காலத்தில் இமயமலைக்கு வந்து கௌதமருடைய ஆச்சிரமத்துக்குச் சமீபத்தில் உன் ஸ்திரீயோடு கூடி நக்னனாய்க் காமலீலை பண்ணிக்கொண்டிருக்கையில் கௌதமர் சமித்துக்காக ஆச்சிரமத்தைவிட்டு திடீரென்று வெளியில் வந்து, நீ நிர்வாணமாக இருப்பதைப் பார்த்துக் கோபங்கொண்டு "என் ஆசிரமத்தில் நிர்வாணமாகக் காணப்பட்டபடியால் நீ சிங்கமாய்ப் போகக்கடவாய்" என்று சபித்தபடியால் நீ சிங்கமானாய். நான் இவைகளை யென்தபோமகிமையால் தெரிந்துகொண்டேன். குபேரனும் அவனுடைய வேலைக்காரர்களும் தர்மசீலர்களாயிருக்கையில் நீ மட்டும் ரிஷியாயிருக்கிற என்னைத் துன்பப்படுத்துகிறாயென்று சொன்னவுடனே சிங்கமானது தன் சிங்கரூபத்தைவிட்டு யக்ஷரூபமடைந்து தியானகாஷ்டரைப் பார்த்துச்சுவாமீ! இப்போது தான் என் பூர்வோத்திரம் எனக்குத் தெரியவந்தது. கௌதமர் சபிக்கையில் காடி ரூபமாயிருக்கிற தியானகாஷ்டரோடு உனக்குச் சம்வாதம் நேரிடும்போது சிங்கரூபமொழிந்து யட்சரூபம் வருமென்று சொல்லியிருந்தார். இப்பொழுதெனக்குச் சிங்கரூபம் நீங்கினபடியால் தாங்கள் காமரூபியான தியானகாஷ்டரென்கிற பரிசுத்தமான ரிஷியென்று நானறிந்துகொண்டேன் என்று சொல்லி நமஸ்காரம்பண்ணி வந்திருந்த விமானத்தின்மேலேறிக்கொண்டு அளகாபுரிபோய்ச் சேர்ந்தான். பிறகு இஷ்டமான இடத்துக்குப் போகக்கூடிய தியானகாஷ்ட மஹாரிஷியும் தமக்கிஷ்டமான இடத்துக்குப் போய்விட்டார். அந்த மஹாரிஷியின் சாபத்தால் பைத்தியம் பிடித்த தர்மகுப்தனும் தன்னூர் போனான். மந்திரிகள் அவன் பைத்தியகாரனாயிருப்பதைக்கண்டு, அழகான ரேவாநதிக்கரையில் தபம் பண்ணிக்கொண்டிருக்கிற அவனுடைய பிதாவினிடம் அழைத்துக்கொண்டு போய்விட்டு உமது புத்திரனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்று சொன்னார்கள். அவனும் சமாசாரந்தெரிந்து தன் குமாரனையழைத்துக்கொண்டு ஜைமினி முனிவரிடத்துக்குப்போய் நடந்த சமாசாரத்தை யாதியோடந்தமாகத் தெரிவித்துச் சுவாமீ! என் புத்திரனுடைய பைத்திய நீங்குவதற்கு ஒரு உபாயம்சொல்லியருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். முனிசிரேஷ்டரான ஜைமினியும் அரசனைப்பார்த்துத் தியானகாஷ்டருடைய சாபத்தால் வந்த பைத்தியம் நீங்குவதற் கோருபாயம் சொல்லுகிறேன். தெட்சணசமுத்திரத்தில் புண்ணியமான சேதுவில் தனுக்கோடியென்று பிரசித்தமான உத்தமதீர்த்தமொன்றிருக்கிறது. அது பவித்திரமானவைகளுக்கெல்லாம் பவித்திரமாயும், மங்களமானவைகளுக்கெல்லாம் மங்களமாயும், சுருதிசித்தமாயும், பிரம்மஹத்தியாதி பாபங்களையெல்லாம் சோதித்துப் பரிசுத்தமாக்குகிறதாயுமிருக்கிற தீர்த்தம். அதில் உமது புத்திரனை ஸ்நானஞ் செய்வித்தால் பைத்தியம் நீங்குவதில் ஆக்ஷேபனையில்லையென்ற ஜைமினியை நமஸ்கரித்து நந்தன் தன் குமாரனைத் தனுக்கோடிக்கழைத்துக்கொண்டுபோய் ஒருமாசகாலம் நியமத்தோடு ஸ்நானஞ்செய்விக்க உடனே அவனுக்குப் பைத்தியம் நீங்கிப்போயிற்று. நந்தனும் பக்திபூர்வமாகத் தானும் ஸ்நானம்பண்ணி ஒருநாளிருந்து கிருபாமூர்த்தியாயும், சாம்பமூர்த்தியாயுமிருக்கிற இராமநாதரைச்சேவித்துத் தன் புத்திரனிடம் செலவுபெற்றுக்கொண்டு தபோவனம்போய்ச் சேர்ந்தான். தர்மகுப்தனும் பிராம்மணர்களுக்கும், இராமநாதருக்கும் பக்திபூர்வகமாக அநேக திரவியங்களையும், தானியங்களையும், பூமிகளையும் கொடுத்து, மந்திரிகளோடுகூடப் பட்டணம்போய்ச் சேர்ந்து சத்துருக்களில்லாமல் பரம்பரையாகத் தனக்குவந்த இராஜ்யத்தைத் தர்மமாக ஆண்டுகொண்டுவந்தான். உன்மத்தம், அபஸ்மாரம், பசாசு முதலியவற்றால் வருத்தப்படுகிறவர்கள் இதில் ஸ்நானம்பண்ணினால் அவைகளுடனே நீங்கிப்போகும், இது சத்தியம், சத்தியம். தனுக்கோடி தீர்த்தத்தைவிட்டு வேறு தீர்த்தங்களைத் தேடிப்போகிறதானது கையிலேயிருக்கிற பசுவின்பாலைவிட்டுக் கள்ளிப்பாலைத் தேடிப்போகிறதுபோலிருக்கிறது. எந்த ஜலத்திலாவது ஸ்நானம்பண்ணும்பொழுது தனுக்கோடியென்று மூன்றுதரம் உச்சரிக்கிறவர்களுக்குப் பரமபதவி கிடைத்துவிடும். கேட்டவுடனே பிரமஹத்தி, ஸ்வர்ணஸ்தேயாதி பஞ்ச மஹாபாதகங்களையும் நசிக்கச்செய்கிற தர்மகுப்தன் கதையை யுங்களுக்குச் சொல்லிவிட்டேன்.

முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

முற்றிற்று.

முப்பத்துமூன்றுவது

தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்து பராவசு என்ற பிராம்மணன் பிதுர் ஹத்திதோஷம் நீங்கின

அத்தியாயம்.

கேளுங்கள் முனிவர்களே! அற்புதமாயும் இரகசியமாயும், கேட்கிறவர்களை யெல்லாம் பரிசுத்தப்படுத்துவதுமான தனுக்கோடி வைபவத்தை மறுபடியுமெடுத்துச் சொல்லுகிறேன். பூர்வ காலத்தில் பிரஹத்யும்நன் என்கிற மஹாபலமான சக்கிரவர்த்தி நாற்கடல்சூழ்ந்த பூமியைப் பரிபாலனஞ் செய்கிறபொழுது சத்திரயாகஞ்செய்யத்தொடங்கினான். அதில் பரமதார்மிகராயும், மஹா வித்துவானுமிருந்த ரைப்பியர் என்ற முனிவர் ஒருவரிருந்தார். அவருக்கு பராவசு, அர்வாவசு என்று இரண்டு குமாரர்களிருந்தார்கள். அவ்விருவரும் ஆறங்கங்களோடு கூடிய வேதங்களையும், சிரௌத ஸ்மார்த்த விதிகளையும், கணாதர் செய்த வைசேஷிகத்தையும், ஜைமினி செய்த பூர்வமீமாம்சையும், கபிலர் செய்த ஸாங்கியத்தையும், வியாசர் செய்த உத்தரமீமாம்சை அல்லது வேதாந்தத்தையும், கௌதமர் செய்த நியாயசாஸ்திரத்தையும், பதஞ்சலி செய்த யோகசாஸ்திரத்தையும். பாணினி செய்தவியாகரண சாஸ்திரத்தையும், மநுவாதிகள்செய்த ஸ்மிருதிகளையும், கற்றுணர்ந்து தேர்ந்தவர்களாயும், அசுவினிதேவர்களைப்போல அழகுள்ளவர்களாயுமிருந்தார்கள். அவர்களைப் பிரஹத்தியுமனராஜன் தன்யாகத்தை நிறைவேற்றிவைக்கும்படி கேட்க, அவர்கள் தங்கள் பிதாவின் அநுமதிபெற்று யாகசாலைக்கு வந்தார்கள். ரைப்பியர் மாத்திரம் மூத்தமருமகளோடு ஆச்சிரமத்திலிருந்தார். அந்த இரண்டு சகோதரர்களும் சத்திரயாகத்தை மந்திரதந்திர லோபங்களில்லாமல் நடத்திவருகையில், அரசனாலழைக்கப்பட்ட வசிஷ்டர், கௌதமர், அத்திரி, ஜாபாலி, காசியாபர், கிரது, தக்ஷர், புலஸ்தியர், புலகர், நாரதர், மார்க்கண்டேயர்; சதாநந்தர், விசுவாமித்திரர், பராசரர், குத்ஸ, பிருதர், வால்மீகி வியாசர், தௌமியர் முதலான ரிஷீசுவர்கள் எல்லாரும் கணக்கில்லாத சிஷ்யப்பிரசிஷியர்களோடும் வந்தார்கள். நாலுதிக்குகளிலிருந்து சதுரங்கபலங்களோடு அரசர்களும், வைசிய சூத்திரர்களும், பிரமசாரிகள், கிருகஸ்தர்கள், வானப்பிரஸ்தர்கள், சந்நியாசிகளாகிய நாலு ஆச்சிரமிகளும் யாகத்துக்கு வந்தார்கள். வந்த ரிஷீசுவரர்களை அர்க்கியபாத்தியாதிகளால் உபசரித்து, மற்றவர்களுக்குத் தக்கபடி உபசாரஞ்செய்து எல்லாருக்கும் ஷட்ரஸோபேதமாய்ப் போஜனமளித்து, வஸ்திராபரணங்களுங்கொடுத்து, வெகுமானஞ் செய்தார். ரைப்பிய புத்திரர்களாகிய பராவசு அர்வாவசு இருவரும் யாகத்தை முறைதவறாமல் நடத்துவதைப்பார்த்த ரிஷிகளெல்லாரும் சபாசு என்று சிரக்கம்பஞ்செய்தார்கள். மூன்றுவது யாகம்முடிந்ததும் மூத்தவனான பராவசு என்பவன் சில காரியங்களை முடித்துவிட்டுக் கிருசகிருத்தியம் பார்த்துவருவதற்காகத் தன் ஆச்சிரமம் போனான். அந்த ராத்திரி காலத்திலே ரைப்பியர் மான்தோலைப் போர்த்துக்கொண்டு வனத்திலே உலாவிக்கொண்டிருந்தார். இருண்டராத்திரியில் பராவசுவானவன் வழிநடந்த சிரமத்தாலும், நித்திரைமயக்கத்தாலும் மயங்கி, மான்தோல் போர்த்திருந்த தன் தந்தையைப் பார்த்துத் தன்னைக் கொல்லவரும் மிருகமென்று நினைத்து, அவரைக்கொன்றுவிட்டான். பிறகு கிட்டப்போய்ப் பார்த்துத் தன் பிதாவென்றறிந்து தன்னை மறந்து அழுது பிரேதகாரியத்தை முடித்து மறுபடியும் அரசனுடைய யாகசாலைக்கு வந்து தன் தம்பிக்கு நடந்த காரியத்தைச் சொன்னான். அவனும் மிகுந்த துக்கமடைந்தழுதான். பராவசு என்பவன் தம்பியைப்பார்த்து அப்பா இராஜன் பெரியயாகஞ்செய்யத் தொடங்கியிருக்கிறார்; இதை நடத்துவதற்குப் பாலனாகிய உன்னால் முடியாது; நான் மிருகமோவென்று சந்தேகப்பட்டுத் தகப்பனைக்கொன்றதனால் எனக்குப் பிரம்மஹத்தி தோஷம் வந்திருக்கிறது; அதற்கு அவசியம் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும். நான் ஒருவனாகவிருந்து யாகத்தை நிறைவேற்ற முடியுமாகையால் நான் செய்யவேண்டிய விரதத்தை நீ செய்துகொண்டுவா! என்று சொல்ல அண்ணா! அப்படியே யாகட்டும்; பிரம்மஹத்தி நீங்குவதற்கு நான் விரதமிருக்கிறேன் என்று புறப்பட்டுப் போய்விட்டான். பராவசு அத்வர்யுவாகவிருந்து யாகத்தை நடத்திவந்தான். அப்பொழுது தம்பியாகிய அர்வாவசு பனிரண்டுவருஷம் விரதமிருந்து, பிறகு யாகசாலைக்குவரத், தமையனாகிய பராவசு அரசனைப்பார்த்து இவன் பிரமஹத்தி செய்தவன்; இவனை யாகசாலைக்கு

வெளியிலே துரத்திவிடவேண்டும்; இல்லாவிட்டால் பாபபலன் விளைந்துபோய்விடும் என்று சொல்ல, மஹாராஜாவும் தன் வேலைக்காரர்களால் துரத்துகையில் அவன் மஹாராஜாவே நான் பிரம்மஹத்திசெய்யவில்லை; அண்ணாதான் செய்தார்; அவருக்காக நான் விரதமிருந்தேன் என்று சொல்லவும், அரசன் அதைக்கேளாமல் துரத்திவிட்டான். பிராம்மணர்களும் அர்வாவசுவைச் சேர்த்துக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். உடனே அர்வாவசு வரைமுடிக்கொண்டு முனிவர்கள் நிறைந்த தபோவனம்போய்ச், சூரியனைக்குறித்துத் தேவர்களாலுஞ் செய்யமுடியாத கடுமையான தபசுசெய்தான். அவனுடைய தபசுக்கு மகிழ்ந்து கர்மசாட்சியும், ஜகச்சக்ஷுவும், தேவசிரேஷ்டனுமாகிய சூரியன் இந்திரன் முதலான சகல தேவர்களையும் அழைத்துக்கொண்டும், தன் தேககாந்தியால் உலகத்தை விளக்கிக்கொண்டும், அவனுக்குமுன் தோன்றி, அப்பா அர்வாவசுவே! தபசாலும், பிரமசரியத்தாலும், ஆசாரத்தாலும், வைதிகாநுஷ்டாத்தாலும், வேதசாஸ்திராதிபரிசீலனத்தாலும் நீ மேலானவன். உன் தமையனை பராவசு உன்னை யவமானஞ்செய்து துரத்தியடித்தாலும் நீ கோபங்கொள்ளாமல் பொறுமையுடனே யிருந்தாய்; உன் தகப்பனைப் பராவசு கொன்றானேயொழிய நீ கொல்லவில்லை. அவனுடைய பிரம்மஹத்திக்காக நீ விரதமனுஷ்டித்துமிருக்கிறாய்; ஆகையால் நாங்கள் உன்னைச் சிரேஷ்டனாகக்கொண்டு அவனை நிராகரித்துவிடுகிறோம் என்று சொல்லி, உனக்குப் பிரியமான வரத்தைக் கேட்டுக்கொள்ளென்றார்கள். அப்பொழுது அர்வாவசு என் தந்தை மறுபடியும் உயிர்பெற்று எழுந்திருக்கவும், தாம் இறந்துபோனதை அவரறியாதிருக்கவும் வரந்தந்தருளவேண்டுமென்றும், என் சகோதரனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் தீரவேண்டுமென்றும் பிரார்த்திக்கத், தேவர்கள் அர்வாவசு நீ கேட்டுக்கொண்டபடியே உன் தகப்பன் உயிர் பிழைத்தெழுந்திருப்பார். அவருக்குத் தான் இறந்துபோனது ஞாபகம் வராது. பிராம்மணனாகிய தகப்பனைக் கொன்றதனாலுண்டாகிய பிரம்மஹத்தி தோஷம் உன் தமையனுக்கு வந்திருக்கிறது. தான் செய்த பஞ்ச மஹாபாபத்துக்குப் பிறர் பிராயச்சித்தம் செய்துகொண்டால் அது தீராது. தகப்பனாகிய பிராம்மணனைக்கொன்ற பிரம்மஹத்தி தோஷத்துக்குப் பிராயச்சித்தமில்லையாகையால் உன் தமையனுடைய பாபந்தீராது. தீர்ந்ததாகச் சொல்ல எங்களால் முடியாது என்று தேவர்கள் சொல்ல, அர்வாவசு அப்படியானாலும் என் தமையனுடைய பாப நிவர்த்திக்குத் தகுந்த பிராயச்சித்தத்தை நீங்களே ஆராய்ந்து சொல்லவேண்டும் என்று மறுபடி கெஞ்சிக்கேட்கத், தேவர்கள் ஒருநேரம் யோசித்துப் பிறகு அப்பா அர்வாவசு ஒரு உபாயஞ் சொல்லுகிறோம் கேளு! தெட்சணசமுத்திரத்தில் முத்தியைக் கொடுக்கிற புண்ணியமான இராமசேதுவில் தனுக்கோடியென்கிற ஒரு தீர்த்தமிருக்கிறது. அது பிரமஹத்தியாதி பஞ்ச மஹா பாதகங்களையும், துஸ்வப்னங்களையும், நரக துக்கத்தையும், தரித்திரத்தையும், கடன்களையும், நிவர்த்தியாக்குகிறது. யாதொரு பலனையும் உத்தேசியாமல் ஸ்நானம் பண்ணுகிறவனுக்கும், தனுக்கோடி என்று மூன்றுதரம் ஸ்மரிப்பவனுக்கும் சொர்க்கம், கைலாசமுதலிய முத்திகளும், மோட்சமும் கைகூடிவரும். அப்பேர்ப்பட்ட தீர்த்தத்தில் உன் தமையன் ஸ்நானம் பண்ணினால் அவன் பிரமஹத்தி தோஷத்தினின்றும் விடுபடுவான். இது இரகசியமான பிராயச்சித்தம் என்று சொல்லித் தேவர்கள் தத்தமிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். அர்வாவசு தன் தமையனையழைத்துக்கொண்டு சேதுவுக்குப்போய்ச் சங்கல்ப பூர்வமாக ஸ்நானம் பண்ணியெழுந்திருந்தவுடனே ஒரு அசரீரி வாக்குத்தோன்றிப் பராவசுவே உன் பிரமஹத்தி தோஷம் போய்விட்டது என்று உடனே பராவசு தம்பியோடுகூடத் தனுக்கோடியை நமஸ்காரம் பண்ணி ஸ்ரீ ராமநாதரான மஹாதேவனைச் சேவித்துப் பாதகம் நீங்கிப் பிதாவினுடைய ஆச்சிரமம் வந்தபோது இறந்துபோன ரைப்பியர் உயிர்பெற்றெழுந்திருந்து வந்தகுமாரர்களைக் கண்டு சந்தோஷங்கொண்டு அவர்களோடுகூடச் சுகமாகவசித்துக்கொண்டிருந்தார். ஸ்நானம் பண்ணினமாத்திரத்திலே பராவசுவினுடைய பிரமஹத்தியைப் போக்கின தனுக்கோடியின் வைபவமிது. இதில் ஸ்நானம் பண்ணினவுடனே சுராபானாதி மஹா பாதகங்களும் ஓடிப்போகின்றனவென்று கையைத்தூக்கிக்கொண்டு சத்தியம் பண்ணுகிறேன். இந்த அத்தியாயத்தைப் படிப்போருக்கும் கேட்போருக்கும் பிரமஹத்தியாதி மஹாபாதகங்களும் உடனே நிவர்த்தியாகும் என்பதில் சந்தேகமில்லை.

முப்பத்துமூன்றாம் அத்தியாயம்

முற்றிற்று

முப்பத்துநாலாவது நரிகுரங்குகளின் ஸம்வாதமூலமாகச் சுமதி மஹாபாதகம் நீங்கின கதையுரைத்த அத்தியாயம்.

கேளுங்கள் முனீசுவரர்களே! தனுக்கோடி வைபவத்தை விளக்குகிற நரி குரங்குகளின் ஸம்வாதமான ஒரு இதிகாசம் சொல்லுகிறேன். முன்காலத்தில் பூர்வஜன்மஞானமுள்ள ஒரு நரியும் குரங்குமிருந்தன. அவைகள் மனிதராயிருந்தகாலத்தில் தோழர்களாயிருந்ததுபோல இப்பொழுதுஞ் சிநேகமாயிருந்தன. ஒருநாள் குரங்கானது மயானத்தில் நின்றுகொண்டிருந்த நரியைப் பார்த்ததும் பூர்வஞானமுண்டாய் ஓ நரியே! நீ மயானத்தில் நாடிக்கொண்டிருக்கிற பிணங்களைத்தின்னும்படி பூர்வத்தில் என்ன பாதகஞ்செய்தாய் என்று வினவ நரிசொல்லுகின்றது. நான் பூர்வஜன்மத்தில் **தேவசர்மா** என்ற பிராமணன். வேதத்தில் கரைகடந்தவனாகவும், சகலதர்மங்களையும் அறிந்த வித்துவானாகவுமிருந்தேன். அப்படியிருந்தும், பிராமணர்களுக்குப் பணங்கொடுப்பதாகப் பிரதிக்ஞைபண்ணிப் பின்பு கொடாமலிருந்ததோஷத்தால் இப்படிப்பட்ட இழிவான சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன். கொடுக்கிறேனென்று பிரதிக்ஞைசெய்தபின் கொடாமலிருக்கிறவன் என்போல நரிஜன்மமெடுத்திருக்கிறான். பிரதிக்ஞைசெய்தபின் கொஞ்சமாவது கொடாதவனுடைய எண்ணங்கள் நபும்சகனுக்குப் பிரஜோத்பத்தியில்லாததுபோலப் போய்விடுகிறது. பிராம்மணனுக்குக் கொடுக்கிறேனென்று வாக்குக்கொடுத்துப் பின்பு கொடாமலிருக்கிறவன் பத்து ஜன்மங்களில் செய்த புண்ணியங்கள் உடனே நசித்துப் போகின்றன. தருகிறேனென்று பிரதிக்ஞைசெய்து கொடாமலிருக்கிற பாபத்துக்கு நூறு அசுவமேதஞ்செய்தாலும் பரிசுத்திவராது. என்னுடைய இந்தப் பாபத்துக்கு எப்பொழுது நிவர்த்தியுண்டாகுமோ எனக்குத்தெரியாது. ஆகையால் தெரிந்தவன் பிரதிக்ஞைசெய்ததை எப்படியாவது கொடுத்துவிடவேண்டியது. பிரதிக்ஞைசெய்ததைக் கொடாமலிருக்கிறவன் கட்டாயம் நரியாகப்பிறக்கிறான் என்று சொல்லிவிட்டுக், குரங்கைப்பார்த்து நீயென்ன பாபஞ்செய்து குரங்காய்ப்பிறந்து குற்றமில்லாதவைகளாய்ப் பின்தொடர்ந்துவரும் பட்சிகளை யிம்சிக்கிறாய்! அந்தப்பாபத்தை யெனக்குச் சொல்லென்று கேட்க வானரஞ் சொல்லுகிறது. நான் பூர்வஜன்மத்தில் **வேதநாதன்** என்ற பிராமணன்; என்தந்தை விசுவநாதன்; என்தாயார் பேர் கமலாலயை; ஓ நரியே பூர்வஜன்மத்தில்கூட நாமிருவரும் சிநேகமாயிருந்தது உனக்குத்தெரியவில்லை. நான் பரமசிவனை யாராதித்து, அவருடைய பிரசாதம் பெற்றதனால் நான் விசேஷஞானத்தையடைந்து, நாமிருவரும் சிநேகமாயிருந்ததைக்கூடத் தெரிந்துகொண்டேன்; நரியே பூர்வஜன்மத்தில் ஒரு பிராம்மணனுடைய் காய்கறிகளைத்திருடினபடியால் அந்தப்பாபத்துக்காக நரகத்தையநுபவித்துவிட்டு, இப்பொழுது குரங்காய்ப்பிறந்திருக்கிறேன். அப்பா! பிராம்மணனுடைய சொத்தைத்திருடவேகூடாது; திருடினால் நரகத்தையநுபவித்துக் குரங்காய்ப் பிறக்கவேண்டும். ஆட்சேபணையில்லை. பிராம்மணன்சொத்தைத் திருடுகிறதைவிட மேலானபாபம் கிடையாது. விஷம் குடித்தவனைமட்டுங் கொல்லுகிறது. பிராம்மணன்சொத்தோ குடும்பத்தோடு நாசம்பண்ணுகிறது. இந்தப்பாபத்தினால் கும்பீபாகாதி நரகங்களில்விழுந்து கஷ்டப்பட்டுப் பிறகு வானரமாகவும் பிறக்கவேண்டும். ஆகையால் பிராமணன் பாலனாயிருந்தாலும், தரித்திரனாயிருந்தாலும், கிருபணனாயிருந்தாலும், வேதசாஸ்திரமறியாதவனாயிருந்தாலும், அவனையவமதிக்காமல் அவனிடத்தில் பொறுமையாயிருக்கவேண்டும். அவன் கோபித்துக்கொண்டால் நெருப்புக்குச்சமானமாயிருப்பான். ஆகையால் பிராம்மணனுடைய சொத்தைத்திருடவேகூடாது. எனக்குச் சென்ற ஜன்மத்தில் நடந்ததும், இனிவரும் ஜன்மத்தில் நடக்கப்போகிறதும் நன்றாய்த்தெரிகிறது. ஆனால் இப்பொழுது அநுபவிக்கிறபாபத்தை நிவர்த்திசெய்கிறவழிமட்டுந் தெரியவில்லை. நீயும் பூர்வஜன்மஞானமுடையவனாயிருந்தாலும் பிரதிபந்தத்தினாலே நடந்ததும், நடக்கப்போவதும் உனக்கு நன்றாய்த் தெரியவில்லை. கொஞ்சகாலம்வரைக்கும் இந்தத்துக்கத்தை யநுபவிப்போம்; நம்மிருவரையுமிந்தபாபத்தினின்றும் எவன்விடுவிப்பானோ? என்று சொல்லிக்குரங்கும், நரியும் பேசிக்கொண்டிருக்கையில் அவைகளுடைய புண்ணியவசத்தால் ஸர்வாங்கமும் விபூதியை உத்தூளனம்பண்ணிக்கொண்டு, நெற்றியில் திரிபு

ண்டாமணிந்து, ருத்திராட்சமாலையை ஆபரணமாகத் தரித்துச் சிவகாமசிந்தனஞ் செய்துகொண்டு மஹாதேஜஸையுடையவரான சித்துத்வீபர் என்கிற மஹாரிஷியானவர் தெய்வச்செயலாய் அவ்விடத்துக்குவந்தார். அப்பொழுது நரியும், குரங்கும் சந்தோஷப்பட்டு இவரைக்கண்டு பணிந்து, சுவாமி! சகல தர்மங்களுந் தெரிந்த தேவரீர் எங்கள்பேரில் கிருபைகூர்ந்து, எங்களுடைய குரங்குத்தன்மையும், நரித்தன்மையு நீங்கும்படி ஒரு உபாயஞ் சொல்லி யெங்களைக் காத்தருளவேண்டும்; தங்களைப்போலொத்த புண்ணியவான்களான சாதுக்கள், அனாதைகளாயும், கிருபணர்களாயும், அஞ்ஞானிகளாயும், பாலர்களாயும், ரோகிகளாயுமிருக்கிறவர்களைக் கிருபைகூர்ந்து பிரதியுபகாரத்தை யெதிர்பாராமல் எப்பொழுதும் இரட்சிக்கிறது வழக்கம் அல்லவா? ஆகையாலெங்களைக் காப்பாற்றியருளவேண்டும் என்று பிரார்த்திக்க, சித்துத்வீபமஹரிஷி நெடுங்காலம் யோசித்து ஏ குரங்கு நரிகளே! உங்களை நான் நன்றாயறிவேன். ஓ நரியே நீ பூர்வத்தில் **வேதசர்ம்மா** என்கிற பிராமணனாயிருந்து ஒரு பிராமணனுக்குத் தருகிறதாக வாக்குத்தத்தம் பண்ணியிருந்த தானியத்தைக் கொடாமலிருந்தபடியால் இந்த நரிஜன்மத்தை யடைந்திருக்கிறாய்! ஏ குரங்கே! நீ பூர்வஜன்மத்தில் வேதநாதன் என்கிற பிராமணன், ஒரு பிராமணனுடைய வீட்டிலிருந்து காய்கறிகளைத் திருடினபடியால் ஸர்வ பட்சிகளும் பயப்படும்படியான குரங்காயிருக்கிறாய். உங்கள் இருவருக்கும் பாபம் நிவர்த்தியாகும் வழி சொல்லுகிறேன் கேளுங்கள். சேதுசமுத்திரத்திலிருக்கும் தனுக்கோடியில் சீக்கிரம் போய் நீங்கள் ஸ்நானம் பண்ணினால் உங்களுக்கு இந்தப் பாபம் நீங்கிப்போய்விடும். பூர்வம் கள்ளைக்குடித்துக்கொண்டு கிராதஸ்திரீ சம்போகஞ்செய்திருந்த சுமதியென்கிற ஒரு பிராமணன் இந்தத் தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணிப் பாபம் நீங்கிப் பரிசுத்தனானானென்று சொல்ல, நரிகுரங்குகள் சித்துத்வீப முனிவரைப்பார்த்துச் சுவாமீ அந்தப் பிராமணனுடைய சரித்திரத்தை விஸ்தாரமாக எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க, மஹாரிஷி சொல்லத் தொடங்கினார்.

மஹாராஷ்டிர தேசத்தில் **யக்ஞதேவ**ரென்கிற ஒரு ஆஸ்திகப் பிராமணரிருந்தார். அவர் வேத வேதாங்க பாரங்கதராய்த், தயாளுவாய் அதிதிபூஜை, சிவ விஷ்ணுபூஜைகளைச் செய்துகொண்டி

ருந்தார். அந்தப் பிராமணருக்குச் சுமதி என்கிற ஒரு பிள்ளையிருந்தான். அவன் தன்மாதாபிதாக்களையும், பதிவிரதையான தர்மபத்தினியையும் தள்ளிவிட்டு விடகோஷ்டிகளோடு கூடி உற்கலதேசம் போய்ச் சேர்ந்தான். அந்த தேசத்தில் யௌவன புருஷர்களை மயக்கி, அவர்களுடைய திரவியத்தை வஞ்சனையாகப் பறித்துக்கொண்டுவந்த ஒரு வேடஸ்திரீயிருந்தாள். அவள்வீட்டுக்குச் சுமதி யென்பவன் கையில் பணமில்லாமல்போனபடியால் அவள் அவனை யங்கீகாரம்பண்ணவில்லை. சுமதி எப்படியாவது அவளைச்சேர வேண்டுமென்கிற எண்ணங்கொண்டு, நாலுபக்கங்களிலும்போய்த் திருடிப் பணங்களைக்கொண்டுவந்து கொடுத்து அவளுடன்கூடி ஒருகலத்தில் புசித்தும், ஒரே பானபாத்திரத்தில் கள்ளைக்குடித்தும் சிற்றின்பத்தில் மூழ்கித்தன் தாய்தந்தைகளையும், மனையாளையு நினையாமல் மறந்துவாழ்ந்திருந்தான். ஒரு சமயத்தில் வேடர்களெல்லாரும் ஒன்றாய்க்கூடி லாடதேசத்துக்குக் கொள்ளையிடப் போகையில் சுமதியும் வேடவேஷந் தரித்து அவர்களோடுகூடிக், கையில்கத்தியேந்திக்கொண்டு துணிவோடு ஒரு பிராம்மணன் வீட்டில் புகுந்து, அவனையும் அநியாயமாய்க்கொன்று, அவனுடையதிரவியத்தையுங் கொள்ளையாடிக் தன்வைப்பாட்டியான வேடச்சி வீட்டுக்குவருகையில், நீலவஸ்திரமும், செம்பட்டமயிருமுடைய பயங்கரமான பிரம்மஹத்தியானது பூமி ஆகாயமெல்லாங் கிடுகிடென்று நடுங்கும்படி அஷ்டகாசஞ்செய்துகொண்டு பின்தொடர்ந்தது. அதினாலே சுமதி உலகமெல்லாஞ் சுற்றித்திரிந்து, பயமடைந்து தன்னூருக்குவந்து, வீட்டுக்குள் நுழைந்து அப்பா! என்னைக்காப்பாற்றும், காப்பாற்றுமென்றலறிக்கொண்டு தன் தகப்பன் பாதத்தில் விழுந்தான். தகப்பன் அப்பா! பயப்படாதேயென்று சொல்லி யவனைக் காப்பாற்ற முயன்றார்: பின் தொடர்ந்துவந்த பிரம்மஹத்தியானது அவன் தகப்பனைப் பார்த்து ஓ பிராம்மணசிரோமணியே! இந்தப் பிள்ளையை நீர் வைத்துக்கொள்ளாதேயும் இவன் சுராபானம் பண்ணி, சொர்ணத்தைத் திருடி மாதுர் துரோகம், பிதுர்த்துரோகம், பாரியாதுரோகம் பண்ணிக் கள்ளைக்குடித்துக், கிராதஸ்திரீயோடு கலந்து பிரம்மஹத்தி செய்த இந்த மஹா பாதகனை நான் ஒருபோதும் விடமாட்டேன். நீர் இந்த மஹா பாதகனை ஆதரித்தால், உம்மையும், உமதுபத்தினியையும், மருமகளையும், இவனையும், உமது வம்சத்தாரையும் பட்சித்துவிடுவேன். இவனை

நீர் விட்டுவிடுவீரானால் உங்களை நான் விட்டுவிடுவேன். ஒருவனுக்காகக் குலமுழுவதையு நாசம்பண்ணாதேயும் என்று சொல்ல, யக்ஞதேவன் பிள்ளையென்கிற ஆசாபாசம் என்னைத்தொந்தரவு செய்கிறதே; இவனை யெப்படிக்கைவிடுவேன்! என்று சொல்லப் பிரம்மஹத்தி ஓ பிராம்மணா! இவன் பதிதனும் வர்ணாசிரமமிழந்தவனுமாயிருக்கிறான். இவனைக்கண்டாலுந்தோஷம்வரும். இவனிடத்தில் நீர் ஆசைவையாதேயும் என்று, யக்ஞதேவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சமதியை ஓங்கி அறைந்தது. அவன் அப்பா! அப்பாவென்று வாய்விட்டுக்கதற, அவனுடைய தந்தை தாய், மனைவிகளும் கண்ணாலே தாரைதாரையாகக் கண்ணீர் பெருகக் கோவென்று கதறியழுதார்கள். இந்தச் சமயத்தில் சங்கராம்சமாகிய துருவாசமஹாரிஷி அங்கே திடீரென்று வரக்கண்டு யக்ஞதேவர் அவரைத்துதித்து வணங்கிச் சரணமடைந்து, ஐயா! சங்கராம்சமான யோகீசுவரரே! துர்ப்பாக்கியர்களுக்குத் தங்களுடைய தரிசனங்கிடைக்கிறது துர்லபம்; என் புத்திரனாகிய இவன் பஞ்ச மஹா பாதகங்களையும் செய்திருக்கிறான், பிரம்மஹத்தி யிவனை யடிப்பதற்குத் தொடர்ந்து வந்திருக்கிறது. எனக்கு இவனைத் தவிர வேறு பிள்ளைகள் கிடையாது. இவனிறந்துபோனால் வம்சம் நாசமாய்ப் போய்ப் பிதுர்க்களுக்குப் பிண்டதானம் செய்யப் பிள்ளையில்லாமல் போய்விடும். ஆகையால் எங்கள்பேரில் கிருபை செய்து என் பிள்ளை பிரம்மஹத்தியினின்றும் விடுபடுவதற்கு ஒரு உபாயஞ் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். துருவாசர் கருணைகூர்ந்து நெடுநேரஞ் சிந்தித்து, யக்ஞதேவரைப் பார்த்து ஐயா! உமது குமாரன் குரூரமான பாபங்களைச் செய்திருக்கிறான், இதற்குப் பிராயச்சித்தங் கிடையாது; ஆனாலுமொரு உபாயஞ் சொல்லுகிறேன் ஜாக்கிரதையாய்க் கேளும்; தெட்சணசமுத்திரத்திலிருக்கிற தனுக்கோடி தீர்த்தத்தில் இவன் ஸ்நானம் பண்ணினால் உடனே பாபவிமோசனமாகும். பூர்வத்தில் துர்விநீதன் என்ற பிராமணன் இதில் ஸ்நானம் பண்ணி மாதுருகமன தோஷத்தினின்று உடனே விடுபட்டான். சாட்சாத் ஸ்ரீ ராமமூர்த்தியினுடைய வில்லின் நுனியால் செய்யப்பட்ட இந்தத் தனுக்கோடி தீர்த்தமானது ஸ்நானம் பண்ணினவுடனே உமது குமாரனுடைய பாபங்களையெல்லாம் நாசம் பண்ணிவிடும் என்று சொன்னார்.

முப்பத்துநாலாவது அத்தியாயம்

முற்றிற்று.

முப்பத்தைந்தாவது

நரியுங் குரங்கும் தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணிச் சாபவிமோசனமடைந்து சொர்க்கம் பெற்ற

அத்தியாயம்.

யக்ஞதேவர், ஐயா! சதசத்துக்களின் சொரூபங்களை யுணர்ந்த மஹா பிராக்ஞரான ரிஷீசுவரரே! மாதுர்கமனம் பண்ணின துர்விநீதன் கதையை யெங்களுக்கு விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்டார். துருவாசர் சொல்லுகிறார்.

பூர்வத்தில் பாண்டிநாட்டில் இத்மவாகன் என்ற சாஸ்திரந் தெரிந்தஒரு பிராமணனிருந்தான். அவனுக்கு நசீ என்ற மனைவியும், துர்விநீதன் என்கிற பிள்ளையுமிருந்தார்கள். துர்விநீதன் பாலியமாயிருக்கும்போதே தகப்பனிறந்துபோனார். பிறகு துர்விநீதன் தகப்பனுக்குரிய உத்தரகிரியைகளை முடித்துவிட்டு விதவையான தாயாரோடுகூடக் கொஞ்சகாலம் வீட்டில் வசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது துவாதச வருஷக்ஷாமம்வந்து, பிரஜைகள் துன்பப்பட, துர்விநீதன் தாயாரோடு தேசாந்தரம்போய்ச் சுபிக்ஷமாயிருந்த கோகருணத்தில் வெகுகாலம் வாசம்பண்ணிக்கொண்டிருந்தான். அப்படியிருக்கையில் ஒருநாள் பூர்வஜன்ம வினைப்பயனால் மன்மதபாணங்களாலடிப்பட்டுக் காமத்தால் மதிமயங்கி, அப்பா! வேண்டாம், வேண்டாமென்று தடுத்த தாயாரைப்பலாத்காரமாகப் பிடித்திழுத்துப் புணர்ந்தான். ரேதஸ்கலனமானவுடனே நல்லறிவு தோன்றி ஐயோ! நாம் காமன் கணையால் புத்திகெட்டுப் பெற்ற தாயாரைப் புணர்ந்து மஹா பாதகஞ் செய்துவிட்டோமே யென்று வாய்விட்டலறி வருத்தப்பட்டு, ரிஷிகளிடத்திலோடி, நாணி அவர்களைப் பார்த்து, ஸர்வ சாஸ்திரந்தெரிந்த மஹாத்மாக்களே! மாதுர்காமியான எனக்குப் பிராயச்சித்தம் விதித்து என்னைக் காத்தருள வேண்டும்; தாங்களென்ன பிராயச்சித்தம் விதித்தாலும் அதைச்

ச்சயப்ர சித்தமாயிருக்கிறேன்; மரணமே பிராயச்சித்தம் என்று சொன்னாலும் சாகத்துணிந்திருக்கிறேன்; சந்தேகமில்லை என்று சொன்னதைக் கேட்ட சில முனீசுவரர்கள் இவனோடு பேசினாலும் தோஷம் வருமென்று வாய்மூடிக்கொண்டிருந்தார்கள். இன்னம் சிலர் மாதுர்காமியான பாதகா! எங்கள்முன் நில்லாதே; ஓடு ஓடு; என்று துரத்தி யடித்தார்கள். அப்பொழுது கிருபாசீலராயும், ஸர்வக்ஞராயுமிருக்கிற கிருஷ்ணத்வைபாயனர் அந்த ரிஷிகளைச் சாந்தப்படுத்தித், துர்விநீதனைப் பார்த்து அப்பா! இராமசேதுவில் இருக்கிற தனுக்கோடிக்கு உன் தாயாரை யழைத்துக்கொண்டு சீக்கிரம்போய்ச், சூரியன் மகரத்திலிருக்கிற மாக மாசத்தில், இந்திரியங்களின் கோபத்தையடக்கிப், பரத்ரோகத்தைவிட்டு, ஆகாரமில்லாமல் தாயாரோடு நிரந்தரமாய் ஒரு மாசம் ஸ்நானம் பண்ணினால் மாதுர்க்கமனதோஷம் நிவர்த்தியாய்விடும். நீயும், உன் தாயாரும் பரிசுத்தராவீர்கள். சுருதிஸ்மிருதி புராணங்களில் தனுக்கோடியானது மஹாபாதகநாசனமாக அநேகந் தடவை சொல்லப்பட்டிருக்கிறது. சேது ஸ்நானத்தினால் நிவர்த்தியாகாத பாபங் கிடையாது. மநுமுதலியோர் ஸ்மிருதிகளில் வேறு பிராயச்சித்தம் விதித்திருந்தாலும், இந்தத் தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணினால் கோடி பாதகங்கள்கூட நிவர்த்தியாய் விடுமென்பதை நீ வேதவாக்கியமாக நம்பி உடனே புறப்பட்டுத் தனுக்கோடிக்குப்போ என்று சொன்னார். துர்விநீதன் வியாசரையும், தனுக்கோடியையும் நமஸ்காரம்பண்ணித், தனுக்கோடிபோய், மாகமாசத்தில் சூரியன் மகரத்திலிருக்கும்பொழுது இந்திரியங்களையும், கோபத்தையும் அடக்கி ஒரு மாசம் நிராகாரனாய்ச் சங்கல்பபூர்வமாய், நிரந்தரமாய் ஸ்நானம்பண்ணித் திரிகாலங்களிலும் இராமநாதரைப் பக்தியுடனே தரிசித்து, மாசக்கடைசியில் பாரணைபண்ணிப் பரிசுத்தமான தாயாரோடு வியாசரிடம் வந்து அவரை வணங்கி, சுவாமீ, கருணைக்கடலே; மஹாதபஸ்வா! நான் தாயாரை அழைத்துக்கொண்டு தனுக்கோடிக்குப்போய், ஒருமாசம் ஆகாரம் சோம்பலில்லாமல் ஸ்நானம்பண்ணி, மஹேசுவரனைத் தரிசனம்பண்ணி வந்தேன்; பக்தவத்ஸலா இனிமேலே நான் செய்யவேண்டியதைச் சொல்லியருளும் என்று பிரார்த்தித்தான். நாராயணாம்சமான வியாசமுனிவர் துர்விநீதனுக்குத் தர்மோபதேசம் பண்ணத்தொடங்கினார். அப்பா! சேது ஸ்நானத்தினால் உனக்கு மாதுர்க்கமன தோஷம் நிவர்த்தியாயிற்று. உன் தாயாருக்கும் உன்னோடுசேர்ந்த தோஷம்

போய்விட்டது. இதில் சந்தேகமே கிடையாது. நான் சத்தியமாய் சொல்லுகிறேன். உன்னுடைய பந்துக்களும மற்றுமுள்ள பிராமணர்களும் உன்னையும், உன் தாயாரையும் பரிசுத்தர்களாக அங்கிகரித்துக்கொள்வார்கள். தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணின நீ விவாகஞ் செய்துகொண்டு கிருகஸ்த தர்மத்தை யனுஷ்டித்துவா பிராணி ஹிம்சையைவிட்டு எப்பொழுதும் ஸஜ்ஜனங்களைப் பக்தியோடு பணி! சந்தியோபாசன முதலிய நித்தியகர்மங்களைவிடாதே இந்திரியங்களை யடக்கு; ஹரியையும், ஹரனையும் பூஜைசெய்; பிறரை நிந்தைகூறாதே; அசூயைகொள்ளாதே! பிறர்வாழ்வைக்கண்டு பொறாமையடையாதே; அன்னியன் மனைவியைத் தாயாரைப் போல் எண்ணு; ஓதினவேதங்களை யொருபோதும் மறவாதே; அதிதியை அவமதிசெய்யாதே; பிதுர்த்தினத்தில் சிராத்தத்தை விட்டுவிடாமல் செய்; சொற்பனத்தில்கூடப் பிறர்மேல் கோள் சொல்லாதே; இதிகாசங்கள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள், வேதாங்கங்கள், வேதாந்தம் இவைகளைபடிக்கடி பரிசிலனைசெய்துகொண்டிரு. ஹரிஹர நாமங்களை வெட்கப்படாமல் சொல்லிக்கொண்டிரு. ஜாபாலோபநிஷத்தில் சொல்லியிருக்கிற மந்திரங்களை யுச்சாரணம் பண்ணிக்கொண்டு விபூதியை உத்தூளனஞ் செய்துகொண்டு, திரிபுண்டரமாகவும் அணிந்துகொள்; ருத்திராட்சத்தைத்தாரணம் பண்ணிக்கொள்ளு; எப்பொழுதும் சௌசாசாரபரனாக இரு; துளசிபத்திரத்தால் நாராயணனையும், வில்வபத்திரத்தால் பரமேசுவரனையும் ஒருபொழுதாவது, இருபொழுதாவது, அல்லது மூன்றுபொழுதுமாவது பூஜைபண்ணு. விஷ்ணு நிர்மாலியத்தின்மேல் துளசிதளத்தையும் அவருடைய பாதோதகத்தையும் இட்டு அவர் சந்நிதானத்தில் புசி; சிவநிர்மாலியத்திலே வில்வதளத்தையும் அபிஷேக தீர்த்தத்தையும் இட்டுச் சிவசந்நிதியிலே புசி; அன்னம் சுத்தியாவதற்காக வைசுவதேவம் பண்ணு; வீட்டுக்குவந்த யதீசுவரர்களையும்; பிரம நிஷ்டர்களையும், விருத்தர்களையும், அநாதைகளாயிருக்கிறவர்களையும், ரோகிஷ்டர்களையும், அன்னங்கொடுத்து ஆதரி; மாதாவைப் பூஜைபண்ணு; ஔபாசனம் விடாதே; பிரணவத்தோடுகூடின பஞ்சாட்சர அஷ்டாக்ஷரங்களையும், இதரமந்திரங்களையும், பரிசுத்தனாயிருந்துகொண்டு மந்திராதிஷ்டான தேவதைகளைத் தியானித்துக்கொண்டு ஜபி; இப்படியே ஸ்மிருதியில் சொல்லப்பட்ட இதர தர்மங்களையும் எப்பொழுதும் அநுஷ்டித்துவா; இப்படிச் செய்துகொண்டுவந்தால் தேகாந்

தத்தில் நீ முக்திபெறுவாய். என்று சொன்ன வியாசரைப்பணிந்து துர்விநீதன் அவர் சொன்னபடி தர்மாநுஷ்டானம் பண்ணித் தேகாந்தத்தில் முக்தியும் அடைந்தான். அவனுடைய மாதாவுங் காலத்தில் இறந்து தனுக்கோடி ஸ்நானபலத்தினால் இறப்புப் பிறப்பில்லாத முக்தியை யடைந்தாள். கேளும் யக்ஞதேவரே இவ்விதமாகத் துர்விநீதனும் அவன் தாயாரும் தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணி முக்தியடைந்தார்கள். ஆகையால் உமது புத்திரனுடைய பிரம்மஹத்தி நிவர்த்திக்காக முக்தியைக் கொடுக்கும் தனுக்கோடிக்குப்போம் என்று துர்வாசர் சொன்னதைக் கேட்டு யக்ஞதேவரும் தன் புத்திரனை யழைத்துக்கொண்டு தனுக்கோடி போய்ச்சேர்ந்து, அங்கே ஆறுமாசம் தங்கியிருந்து ஸ்நானம்பண்ணிவந்தார். ஆறுமாசக்கடைசியில் ஒரு அசரீரிவாக்குத் தோன்றி ஏ யக்ஞதேவரே! உன் பிள்ளையைப் பிடித்திருந்த பிரமஹத்தியும், சுராபானம், சொர்ணஸ்தேயம், கிராதஸ்திரீ சங்கமம் முதலான பாபங்களும் இன்றோடே விமோசனமாய்விட்டது, யக்ஞதேவரே நீர் இந்த விஷயத்தில் சந்தேகப்படாதேயும் என்று சொன்னவுடனே யக்ஞதேவர் சந்தோஷித்து இராமநாதரைச் சேவித்துப், பிள்ளையோடுகூட ஊர் வந்துசேர்ந்து சுகமாய் வெகுகாலம் வாழ்ந்திருந்தார். கேளுங்கள், நரிகுரங்குகளே யக்ஞதேவர் குமாரனான சுமதி என்பவன் தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணி மஹாபாபங்களினின்றும் விடுபட்டதை யுங்களுக்குச் சொல்லிவிட்டேன். நீங்களும் உங்களுடைய பாபவிமோசனத்துக்காகத் தனுக்கோடிபோய்ச் சேருங்கள். பாபநிவர்த்திக்கு வேறுவழிகிடையாது என்று சித்தவிபர் சொன்னார்.

அதைக்கேட்ட நரியும் குரங்கும் அதிசீக்கிரம் வழிநடந்து சிரமத்தோடு தனுக்கோடிபோய், அதில் ஸ்நானம் பண்ணி ஸர்வபாபங்களினின்றும் விடுபட்டு, ஹாரகேயூர மகுடகடகாதி திவ்யாபரணங்கள் அணிந்து, தேவர்கள் புஷ்பமாரிபொழியத், தேவஸ்திரீகளிருபுறத்திலும் வெண்சாமரைகள் வீச அழகான தேவலோகம் போய், இந்திரனுடன் அர்த்தாசனத்தில் வீற்றிருக்கும் மகிமை பெற்றன.

கேளுங்கள் முனிவர்களே, தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணி நரியும் குரங்கும் பாபத்தினின்றும் விடுபட்ட கதையை உங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தைப் படிப்பவரும்

கேட்பவரும் தனுக்கோடி ஸ்நானபலனையடைந்து, யோகிகளுக்குங் கிட்டாத முக்தியையும் பெறுவார்கள்.

முப்பத்தைந்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

முப்பத்தாறுவது

தனுக்கோடியில் துராசாரன் ஸ்நானம்பண்ணி ஸம்ஸர்க்கபாதக தோஷம் நீங்கினதாகூறிய

அத்தியாயம்.

கேளுங்கள் முனிவர்களே! தனுக்கோடி வைபவத்தை யுங்களுக்கு இன்னமுஞ் சொல்லுகிறேன். துராசாரன் என்பவன் இதில் ஸ்நானம்பண்ணி முக்தனானனென்று சொல்ல, முனிவர்கள் ஐயா! சகல தத்துவமுந் தெரிந்த சூதமுனிவரே! துராசாரன் என்பவன் யார்! அவன் என்ன பாபஞ்செய்தான். எப்படி முக்தியடைந்தான்? இவைகளை யெங்களுக்கு விஸ்தாரமாக எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்கச் சூதர் சொல்லுகிறார்.

பூர்வம் கௌதமி தீரத்தில் துராசாரன் என்ற ஒரு பிராமணனிருந்தான். அவன் மஹாபாபி, சதா குரூர கர்மங்களைச் செய்துகொண்டு பிரம்மஹத்தி, சுராபானம், சொர்ணஸ்தேயம், குருதல்பகமனம் என்கிற நால்வகைப்பாபஞ் செய்தவர்களோடு சிநேகமாயிருந்து காலங்கழித்து வந்தபடியால் இவனுக்குப் பிராமணத்வம் முற்றிலும் தொலைந்து போய்விட்டது. மஹாபாதகர்களோடு சேர்ந்து ஒருநாள் வாசம்பண்ணுகிறவனுக்குப் பிராம்மணியத்தில் நாலிலொரு பங்கு உடனே தொலைந்துபோய்விடுகிறது. சம்சயமில்லை. இரண்டுநாள் மஹாபாதகர்களைப் பார்த்து, ஸ்பரிசித்து, பந்தியில் ஸஹபோஜனம் செய்து, ஒரு படுக்கையில் சேர்ந்து படுத்துக் கூடியிருக்கிறவனுக்கு இப்படியே இரண்டுபங்கும், மூன்றுநாளிருப்பவனுக்கு மூன்றுபங்கு பிராம்மண்யமும் போய்விடுகிறது. நாலுநாள் கூடியிருப்பவனுக்குப் பிராமண்யம் முற்றுந்தொலைந்து

விடுகிறது. அதற்குமேல் அவர்களோடு சேர்ந்திருக்கிறவன் அவர்களுக்குச் சமானமான பாபியாய்விடுகிறான். இந்தத் தூராசாரன் மஹா பாதகர்களோடு கலந்திருந்தபடியால் பிராமணியத்தையிழந்து மஹா பாதகனாய்விட்டான். பின்பு பயங்கரமான பலமுள்ள ஒரு பெரிய வேதாளத்தால் பிடிக்கப்பட்டுத் துன்பமடைந்து, தேச தேசாந்தரங்கள், வனம் வனாந்தரங்கள் எல்லாஞ் சுற்றித் திரிந்து, பூர்வபுண்ணிய பரிபாகத்தால், மஹா பாதகநாசனமான தனுக்கோடியை யடைய அவனைப் பிடித்துக்கொண்டிருந்த வேதாளம் அவனை நீரில் அமுக்கிற்று. அந்தத் தீர்த்தத்தில் முழுகியெழுந்திருந்தவுடனே வேதாளம் அவனைவிட்டு விலகிப் போய்விட்டது. உடனே **தூராசாரனுக்கு** நல்லறிவுவந்து, இது எந்த தேசம், இதென்ன சமுத்திரம், கௌதமிதீரத்திலிருந்த நாம் இங்கே வரவேண்டியகாரணமென்ன? என்று யோசித்துத் தனுக்கோடியில் வாசம்பண்ணிக்கொண்டிருந்த **தத்தாத்திரேயர்** என்கிற மஹா யோகீச்வரரைக் கண்டு வணங்கிச் சுவாமீ! இந்தத் தேசத்துக்குப் பேரென்ன? நான் கௌதமிதீரத்தில் வாசம்பண்ணிக்கொண்டிருந்தேன். என்பேர் **தூராசாரன்** நான் இங்கே எப்படி வந்தேன்! கிருபைகூர்ந்து எனக்குச் சொல்லியருளவேண்டுமென்று கேட்கக் கிருபாநிதியான தத்தாத்திரேயர் ஒரு முகூர்த்த காலந் தியானம் பண்ணி ஏ **தூராசாரா**! நீ மஹா பாதகர்களோடு சேர்ந்திருந்தபடியால் பிராம்மணியத்தை யிழந்து, வேதாளத்தால் பிடிபட்டு, மதிமயங்கிச் சுவாதீனமற்று இங்கேவந்து சேர்ந்தாய். உன்னைப் பிடித்திருந்த வேதாளம் உன்னைத் தனுக்கோடி தீர்த்தத்தில் அமிழ்த்திற்று நீ அதில் முழுகி யெழுந்திருந்தவுடனே உன் பாதகம் விடுபட்டுப் போயிற்று. தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணுகிறவர்களுடைய பஞ்ச மஹாபாதகங்களும் நசித்துப்போகின்றன. ஆகையால் இதில் ஸ்நானம்பண்ணின நீ மஹாபாதக ஸம்ஸர்க்க தோஷத்தினின்றும் விடுபட்டாய். உன்னைப்பிடித்திருந்த வேதாளமும் விலகிப்போய்விட்டது. அந்த வேதாளம் பூர்வஜன்மத்தில் ஒரு பிராமணன். பாத்திரபதமாதம் கிருஷ்ண பட்சத்தில் பார்வணவிதிப்படி மஹாளய சிராத்தம் செய்யாதபடியால் பிதுர் சாபம்பெற்று வேதாளமாயிற்று, தனுக்கோடியைக் கண்டவுடனே வேதாளத்துவம் விட்டொழிந்து விஷ்ணுலோகம் போய்ச்சேர்ந்தது. பாத்திரபத மாசத்தில் பிதுர்க்களை உத்தேசித்து மஹாளய சிராத்தம் பண்ணாதவர்கள் வேதாளமாகவே பிறப்பார்கள். சந்தேகமேயில்லை. ஆகையால் பிதுர்க்களை யுத்தேசித்துச் சக்தியாநுசாரம் ஒன்று, இரண்டு அல்லது மூன்று பிராம்மணர்களை வைத்து மஹாளயசிராத்தஞ் செய்தால் அவனுக்கு ஒருபோதுந் துர்க்கதி கிடையாது. இந்த மஹாளயசிராத்தத்துக்குப் பாத்திரபதமாத முதல் விருச்சிகமாசபரியந்தம் தத்துவதரிசிகளான முனிவர்கள் கால அளவு ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனாலும் பாத்திரபதமாசம் கிருஷ்ணபட்சம் மிகவும் விசேஷமானது. கிருஷ்ணபட்சம் பிரதமாதிதியில் வேதவித்தான பிராமணனைவைத்து மஹாளயசிராத்தம் பண்ணினால் அக்கினிதேவன் திருப்தியடைந்து அவனுக்கு இகத்தில் சகல போகபாக்கியங்களையுங் கொடுத்து, அந்தத்தில் தன்னுலகத்தில் வாழ்ந்து ஆனந்திக்கிற பெருமையைக் கொடுக்கிறார். பண்ணுகிறவனுடைய பிதுர்க்களும் பதினாயிரம் கற்பம் திருப்தியடைகிறார்கள். பிரதமாதிதியில் சிராத்தம் பண்ணாவிட்டால் அவனுடைய வீட்டையும், வயலையும், ஐசுவரியத்தையும் அக்கினிகொளுத்தி அழித்துவிடுகிறார். துவிதியையில் மஹாளயசிராத்தம் பண்ணினால் பவானிபதியாகிய சம்பு திருப்தியடைந்து, இகத்தில் சகல வாழ்வையுங் கொடுத்து, முடிவில் கைலாசபதவியையுங் கொடுக்கிறார். பண்ணினவனுடைய பிதுர்க்களும் இருபதினாயிரம் கற்பம் சந்தோஷமடைந்து இவனுடைய சந்ததி விருத்தியாகும்படி ஆசீர்வதிக்கிறார்கள். அந்தத் திதியில் மஹாளயம் பண்ணாமல் போனால் சம்புவானவர் கோபங்கொண்டு அவனுடைய பிரமதேஜஸை அழித்துக் காலசூத்திரமென்கிற ரௌரவ நரகத்திலே தள்ளுகிறார். திருதியைதிதியில் மஹாளய சிராத்தம் பண்ணினால் லோகபாலனான குபேரன் திருப்தியடைந்து, மஹாபத்மமுதலான நிதிகளை அவன் வசப்படுத்துகிறான். பிரம விஷ்ணு ருத்திரர் மூவரும் அவனுக்கு வசப்படுகிறார்கள். அவனுடைய பிதுர்க்களும் முப்பதினாயிரம் கற்பம் திருப்தியடைகிறார்கள். அந்தத்திதியில் மஹாளயம் பண்ணாமல்போனால் குபேரன் கோபங்கொண்டு, அவனுடைய ஐசுவரியத்தை அபகரித்துக்கொண்டு மஹாதுக்கம் நிறைந்த தரித்திரத்தைக் கொடுக்கிறான். சதுர்த்திதிதியில் பக்தியுடனே மஹாளயம் பண்ணினால் பார்வதி குமாரனாகிய விநாயகமூர்த்தி திருப்தியடைந்து அவனுக்குவருகிற விக்கினங்களை யெல்லாம் நிவிர்த்தி பண்ணுகிறார். அவனுடைய பிதுர்க்களும் நாற்பதினாயிரம் கற்பம் சந்தோஷப்பட்டு ஏராளமான சந்ததியைக்கொடுத்து

நிரந்தரமாகச் சிராத்தத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள். அந்தத்திதியில் செய்யாவிட்டால் விக்கினேசர் கோபங்கொண்டு, அவன் தொடங்குகிற காரியங்களுக்கெல்லாம் விக்கினத்தை யுண்டாக்கிச் சண்டகோலாகல மென்கிற நரகத்தின் ஆழத்தில் தள்ளி யழுத்தி விடுகிறார். பஞ்சமிதிதியில் மஹாளயம் பண்ணினால் அவனிடத்தில் விஷ்ணுபத்தினியாகிய இலட்சுமீதேவியானவள் அவனுடைய வீடு, வயல், மனைவி முதலானவர்கள் சிறந்து விளங்கும்படி யெப்பொழுதும் அவனிடத்தில் வாசமாயிருக்கிறாள். அவனுடைய கீர்த்தியும் சந்திரசூரியர்கள் உள்ளவரைக்கும் பூலோகத்தில் ஓங்கி வளரும்படி கருணை செய்கிறாள். அவனுடைய பிதுர்க்களும் ஐம்பதினாயிரம் கற்பம்வரைக்கும் திருப்தியடைந்து அவனுடைய சந்ததியும் இடையறாமல் விருத்தியாகச் செய்கிறாள். மஹா ஐசுவரியத்தைக்கொடுக்கிற பார்வதிதேவியாரும் அவனிடத்தில் பிரசன்னமாயிருக்கிறாள். அந்தத்திதியில் மஹாளயம் பண்ணாமல்போனால் கலகத்துக்கு ஆதாரமான மூதேவி அவன் வீட்டில் பிரசன்னமாயிருந்து கொண்டிருக்கிறாள். ஷஷ்டிதிதியில் மஹாளயம்பண்ணினால் பார்வதி புத்திரனாகிய ஷண்முகக்கடவுள் திருப்தியடைவார். அவருடைய பிரசாதத்தால் புத்திர பௌத்திரர்களெல்லாரும் பாலக்கிரக தோஷம் முதலான துன்பங்களில்லாமல் சுகமாக வாழ்ந்திருப்பார்கள். அவனுடைய பிதுர்க்கள் அறுபதினாயிரம் கற்பம் திருப்தியடைந்து ஏராளமான சம்பத்தையும், சந்ததியையும் கொடுக்கிறார்கள். அந்தத்திதியில் மஹாளயம் பண்ணாவிட்டால் சண்முகதேவர் கோபங்கொள்வார். அவனுடைய பிரஜைகளும் பூஸ்பரிசமானவுடனே அழிந்துவிடுகின்றன. இல்லாவிட்டால் பூதனாதி கிரகங்களால் குழந்தைகளெல்லாம் நிரந்தரமாய்ப் பிடிக்கப்பட்டு வருந்துகிறார்கள். அவனும் வன்னிஜ்வாலாப் பிரவேச நரகத்தில் விழுந்து துன்பப்படுவான். ஸப்தமிதிதியில் மஹாளயம் பண்ணினால் ஹிரண்யபாணியான சூரியதேவன் திருப்தியடைந்து ஆரோக்கியத்தைத் தந்து, திடகாத்திரனாய்ச் செய்து தமதுணையாலே சொர்ணத்தையள்ளிக்கொடுக்கிறார். அவனுடைய பிதுர்க்கள் எழுபதினாயிரம் கற்பம் திருப்தியடைந்து அவனுடைய சந்ததியறாமல் விருத்தியாகச் செய்கிறார்கள். பண்ணாதவன் க்ஷயம் முதலிய ரோகங்களால் இரவும் பகலும் வருந்திக் கடைசியில் தீக்ஷண தாராஸ்திரசையை என்கிற நரகத்திலே விழுகிறான். அஷ்டமிதிதியில் மஹாளயசிராத்தம் செய்கிறவனிடத்தில் மிருத்யுஞ்சயராயும், கிருத்திவாசராயுமிருக்கிற சங்கரர் பிரசன்னராய்க் கைவல்யமாகிய மோட்சத்தைக் கொடுக்கிறார். சாட்சாத் திரியம்பகமூர்த்தியே பிரசன்னராயிருக்கும்போது பதினாலுலோகங்களிலேயும் அவனுக்குக் கிடைக்காதது என்ன இருக்கிறது? அவனுடைய பிதுர்க்கள் எண்பதினாயிரம் கற்பம் திருப்தியடைந்து ஆசீர்வதித்து அவனுக்கு வரும் இடையூறுகளையும் நீக்கி யழியாத சந்ததியையும் கொடுக்கிறார்கள். மூடத்தனத்தினால் சிராத்தம் பண்ணாதவன் கோரமானசம்ஸாரஸாகரத்தில் விழுந்து முழுகிக்கிடக்கிறான். அவன் பூமியிலுள்ள பரியந்தம் அவனுடைய எண்ணங்கள் நிறைவேறுகிறதில்லை. கடைசியில் சந்திர நட்சத்திரங்களுள்ள பரியந்தம் வைதரணி நரகத்தில் விழுந்து வருந்துகிறான். நவமிதிதியில் மஹாளயம் பண்ணுகிறவனிடத்தில் சம்பு பத்தினியாகிய துர்க்காதேவி பிரசன்னமாயிருந்து க்ஷயாபஸ்மார குஷ்டாதிரோகங்களையும், சனமான பூதப்பிரேத பிசாசங்களையும் விலக்கிக்காக்கிறாள். அவனுடைய பிதுர்த்தேவதைகளும் தொண்ணூறாயிரம் கற்பம்திருப்தியடைந்து கெடாத சந்ததியையுங் கொடுக்கிறார்கள். அந்தத்திதியில் மஹாளயம் பண்ணாவிட்டால் அபஸ்மார ரோகத்தாலும், பிரமராக்ஷஸாலும், பில்லிசூனியங்களாலும் துன்பப்படுகிறான். தசமிதிதியில் மஹாளயம் பண்ணுகிறவனிடத்தில் பதினாறு கலைகளோடுகூடிய சந்திரன் பிரத்தியட்சமாகி அவனுடைய நெல் முதலான தானியங்களையும், செடிகொடிப் பயிர்களையும் வளர்த்தோங்கச் செய்கிறான். அவனுடைய பிதுர்க்களும் நூறாயிரம் கற்பம் திருப்தியடைந்து சந்ததியைக் கொடுக்கிறார்கள். பண்ணாமல்போனால் அவனுடைய செடிகொடிகள் பயனற்றுப்போய், வேளாண்மைத் தொழிலும் கெட்டுப்போகிறது. ஏகாதசியில் மஹாளயம் பண்ணுகிறவனிடத்தில் சகல லோகஸம்ஹார கர்த்தராகிய ருத்திரமூர்த்தி பிரசன்னராய் அவனுடைய சத்துருக்களை ஜயிக்கிறார். பதினாயிரம் பிரம்மஹத்தி தோஷங்களும் தொலைந்து போகின்றன. அக்கினிஷ்டோமாதியாகங்களின் பூரண பலனும் கைகூடுகிறது. இருநூறாயிரம் கற்பம் அவனுடைய பிதுர்க்கள் திருப்தியடைந்து சந்ததியைக்கொடுக்கிறார்கள். பண்ணாமல் போனால் ருத்திரமூர்த்தி கோபங்கொள்ளுகிறார். அவன் அநேகமான சத்துருக்களால் துன்பப்படுகிறான். அவன் வெகு தொகைகொடுத்துச் செய்கிற அக்கினிஷ்டோமாதியாகங்கள் சாம்பலிற் செய்த ஆகுதிபோல் நிஷ்பிரயோஜனமாகின்றன. இவன் சிராத்தம்பண்ணாத தோஷத்தால் பிரம்மஹத்தி செய்

தவனுக்குச் சமானமாய் விடுகிறான். துவாதசித்திதியில் மஹாளயம் பண்ணினால் இலட்சுமிபதியாகிய ஸ்ரீமந்நாராயணர் பிரசன்னராகிறார். தேவதேவனான ஜனார்த்தனன் பிரசன்னராயிருக்கும்போது சராசரமான உலகமெல்லாமவனிடத்தில் பிரியமாயிருக்கிறது. விஷ்ணுவினுடைய தேவிமார்களான பூமிதேவியும், இலட்சுமிதேவியும் அவனுடைய தானியசம்பத்தையும் தனசம்பத்தையும் வளர்ந்தோங்கச் செய்கிறார்கள். நாராயணர் கையிலிருக்கிற கதை அபஸ்மாராதி பூதங்களையும், தீட்சணமுனைகளையுடைய சக்கிராயுதம் அவனுடைய சத்துருக்களையும், சங்கமானது ராட்சசர் பிசாசாதிகளையும் அழித்துத் தொம்சம் பண்ணுகின்றன. இப்படியாகக் கேசவன் சகலவிதமான கஷ்டங்களையும் நிவர்த்திசெய்கிறார். அவனுடைய பிதுர்க்களும் அறுநூறாயிரம் கற்பம் திருப்தியடைந்து சந்ததிகளை அவிச்சின்னமாகச் செய்கிறார்கள். பண்ணாமல்போனால் அவனுடைய சம்பத்தும், வயல்முதலியவைகளும் நசித்துப்போகின்றன. அபஸ்மாராதி பூதங்களும், சத்துருக்களும், ராட்சசர், பேய் முதலியவைகளும் துன்பப்படுத்துகின்றன. கடைசியாக அஸிபதனமென்கிற நரகத்திலும் விழுகிறான். திரயோதசியில் மஹாளயம் பண்ணினால் இரதிதேவி நாயகனாகிய காமதேவன் பிரசன்னமாய்ச் சந்தனம், மாலை, பெண்முதலிய விஷயாதிபோகங்களைக் கொடுத்துப் பிறந்தது முதல் சாகும்வரையில் சுகத்தையே கொடுக்கிறான். அவனுடைய பிதுர்க்களும் பத்து இலட்சம் கற்பம் திருப்தியடைந்து சந்ததிவிருத்தியைக் கொடுக்கிறார்கள். பண்ணாமல்போனால் காமதேவன் கோபங்கொண்டு, அவனுடைய மனைவிமுதலிய போகவஸ்துக்களை நாசம்பண்ணிக் கடைசியில் அந்தகாரசைபாபிரமணம் என்கிற நரகத்திலும் தள்ளிவிடுகிறான். சதுர்த்தசியில் பக்தியோடு மஹாளயம் பண்ணினால் சாக்ஷாத் சங்கரமூர்த்தியவனுடைய அபீஷ்டசித்தியைக் கொடுத்துச் சுராபானம், சொர்ணஸ்தேயம், விருஷலஸ்திரீ சம்போகம், சண்டாளஸ்திரீ சங்கமம், முதலான மஹாபாதகங்களையும்போக்கிச், சிவஞானத்தையூட்டிச் சாயுஜ்யத்தையுங்கொடுக்கத் தயாராயிருக்கிறார். ஆயிரம் அசுவமேதயாகம், பதினாயிரம் பௌண்டரீகயாகங்கள் செய்த பூர்ண பலசித்தியுண்டாகிறது. அவனுடைய பிதுர்க்களும், நூறாயிரம் இலட்சங்கோடி கற்பம் திருப்தியடைந்து, அவிச்சின்னமான சந்ததியையும் கொடுக்கிறார்கள். நரகத்திலிருக்கிற பிதுர்க்கள்கூட சொர்க்கத்தை யடைகிறார்கள். பண்ணாமல்போனால் நூறாயிர இலட்சங்கோடி கற்பம் சம்சாரம் என்

இருண்டகிணற்றில்விழுந்து பிராயச்சித்தமில்லாமல் திரிகிறவன் தங்கத்தைத் திருடாமலிருந்தாலும், சுராபானம் பண்ணாமலிருந்தாலும் அந்தப் பாபங்களையடைகிறான். இவன் கிரமப்படி செய்த யாகங்களும் நிறைவேறாமல் நிஷ்பலமாகின்றன. அமாவாசையில் மஹாளயஞ் செய்தால் அவனுடைய பிதுர்த்தேவதைகளெல்லாரும் அமிர்தபானம் பண்ணின தேவர்களைப்போலத் திருப்தியடைவார்கள். இந்த அமாவாசையானது பிதுர்த்தேவதைகளால் நமஸ்கரிக்கப்பட்டது. பரமசிவனுக்குப் பிரியமானது, பிரம்மஹத்தியாதி மஹாபாதகங்களையும் போக்கத்தக்கது. விதிப்படி செய்யப்பட்ட சகல பலனையும், தர்ம்மபலனையுங் கொடுக்கத்தக்கது. அதில் மஹாளயம் பண்ணுகிறவன் பிரத்தியக் பிரம்மத்தை யறிந்து சாயுஜ்ஜியமடைகிறான். அதில் மஹாளயம் பண்ணாதவனுடைய பிதுர்த்தேவதைகள் பிரம்மலோகத்திலிருந்தாலும் நரகத்தில் விழுகிறார்கள். சந்ததியும் அற்றுப்போகிறது. இந்த அமாவாசையில் மஹாளயஞ் செய்து விதிப்படி பிராம்மணர்களுக்கும் அன்னம் கொடாமலிருக்கிறது பெரிய கெடுதி.

புரட்டாசிமாசம் வந்தவுடனே பிதுர்க்களெல்லாரும் நம்முடைய புத்திரர்கள் நம்மை உத்தேசித்துப் பிராமணர்களுக்கு அன்னம் அளிப்பார்கள், அதனால் நம்முடைய நரகவாதனை தீர்ந்துவிடும்; சூரிய சந்திர நட்சத்திரங்களுள்ளமட்டும் நமக்குச் சொர்க்கவாழ்வு கிடைக்கும் என்று ஆநந்தத்தாலே நர்த்தனம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பாத்திரபதமாசத்தில் தினந்தோறும் வேதவித்தான | ஒரு பிராமணனுக்கும், விசேஷமாய்க் கிருஷ்ணபட்சம் முழுமையுமாவது, அல்லது கிருஷ்ணபட்சம் ஸப்தமிமுதல் அமாவாசைவரைக்கும் தினம் வேதமுணர்ந்த மூன்று பிராம்மணர்களுக்கும், அல்லது துவாதசிமுதல் அமாவாசைவரைக்கும் கட்டாயம் தினம் மூன்று வேதப்பிராம்மணர்களுக்கும், எண்ணெய் கொடுத்து நெய், பருப்பு, பால், பாயசம், தயிர், அதிரசம், வடை, தேன், திரட்டுப்பால், நாநாவிதமான சாகாதிகள், அநேகவித பட்சணங்களோடு சம்பா அரிசி அன்னம் திருப்தியாகும் வரைக்கும் தாராளமாய்ப் போடவேண்டும். இப்படி போட்டால் அவனுடைய மாதுர்வம்ச பிதுர்வம்ச பிதுர்க்கள் ஒரு கற்பம் அமிர்தபானம்பண்ணிக்கொண்டு திருப்தியடைந்திருக்கிறார்கள்; அக்கினிஷ்வாத்தாதி பிதுர்த்தேவதைகளும், இந்திராதிதேவர்களும், மும்மூர்த்திகளும் சந்தோஷப்படுகிறார்கள். அதிகமாகச் சொல்லுவானேன்? மூன்று

உலகங்களும் ஆனந்திக்கின்றன. இந்த மஹாளயத்தைப் பார்வண சிராத்தமாகச்செய்து, மாதுர்வம்ச பிதுர்க்களையும் பிதுர்வம்ச பிதுர்க்களைப்போல அழைத்துச் சக்திக்கேற்றபடி தட்சணைகொடுக்கவேண்டியது. இந்த தட்சணை யாகங்களில் புரோகவமென்று சொல்லப்படுகிறது. இந்தப்புரோகவ மில்லாமல் செய்யப்படுகிற யாகமெப்படி நிஷ்பலனாய்ப் போய்விடுகிறதோ அதுபோலத் தட்சணையில்லாமல் செய்யப்படுகிற மஹாளயசிராத்தமும், வியர்த்தமாய்ப்போய்விடுகிறது. ஆகையால் மஹாளயத்தில் கொஞ்சமாவது தெட்சணை கொடுக்கவேண்டியது. புத்திரர்களில்லாத விதவைகள் கூடத் தங்களுடைய பர்த்தாக்களையுத்தேசித்துச் சமாராதனை ரூபமாய் மஹாளயத்தைச் செய்யவேண்டியது. செய்யாமலிருந்தால் அவர்களுக்குத் தர்மஹானியும், குரூரமான நரகமும் சம்பவிக்கும். பாத்திரபதமாசத்தில் மஹாளயஞ் செய்யாமலிருக்கிறவனுடைய குலம் நாசமாய்ப்போய்விடுகிறது. ஐசுவரியமழிந்து தரித்திரம் வந்து பிரம்மஹத்தி சூழ்ந்துகொள்ளுகிறது. சிரத்தையோடு பிதுர்க்களையுத்தேசித்து மஹாளயம் பண்ணுகிறவர்களுடைய சந்ததி ஒருபோதும் அழிந்துபோகிறதில்லை. அழியாத சம்பத்துமுண்டாகிறது. அவன்-குடும்பம் எப்பொழுதும் மங்களகரமாகவே வாழ்ந்துக்கொண்டிருக்கிறது, மஹம் என்றால் மங்களத்துக்குப் பெயர். ஆலயம் என்றால் இருப்பிடத்துக்குப் பெயர். மங்களத்துக்கு இருப்பு இடமானபடியால் இந்தச்சிரார்த்தத்துக்கு மஹாளயமென்று பெயர். இந்த மஹாளயம் செய்கிறவனுக்கு ஒருபோதும் அமங்களமுண்டாகாது. மாதாபிதாக்களிறந்த திதியில் சிராத்தம் பண்ணாவிட்டாலும், அவசியம் மஹாளய சிராத்தம் பண்ணித்தீரவேண்டும்; மஹாளயம் பண்ணச் சக்தியில்லாமல்போனால் சிஷ்டர்களான பிராம்மணனிடத்தில் தனதானியங்களை யாசகஞ் செய்தாவது செய்து தீரவேண்டும். பதிதர்களிடத்தில் யாசகம் பண்ணக்கூடாது. தனதானிய யாசகம் செய்வதற்குப் பிராம்மணனில்லாமற்போனால் யோக்கியனான க்ஷத்திரியனிடத்திலும், க்ஷத்திரியன் கிடைக்காமல்போனால் யோக்கியனான வைசியனிடத்திலும் யாசகம் பண்ணவேண்டியது. வைசியனும் கிடைக்காமற்போனால் பசுவுக்குப் புல்போடவேண்டியது. அல்லது காட்டுக்குப்போய்க் கையினால் வயிற்றிலடித்துக்கொண்டு ஓ பிதுர்த்தேவதைகளே! தங்களுக்குத் திருப்திசெய்விக்கவேண்டிய பாத்திரபதமாசம் வந்துவிட்டதே; நானோ தரித்திரனாகவும், வெட்கமற்றவனாகவும், பாபியாகவு மிருக்கின்றனே; உங்களுக்கு மஹாளய சிராத்தம்பண்ணச் சக்தியில்லை. உலகமுடியச் சுற்றித்திரிந்தும் எனக்குக் காசுகிடைக்கவில்லை. நீங்கள் தயாமூர்த்திகளானபடியால் என்பேரிலிரக்கம் வைத்துப் பொறுத்துக்கொள்ளவேண்டும் என்று கண்ணீர்விட்டுக் கதறியழவேண்டும். அப்படிச் செய்தால் அவனுடைய பிதுர்த்தேவதைகள். அமிர்தபானம் பண்ணின தேவர்களைப்போலத் திருப்தியடைகிறார்கள். மஹாளயத்தில் பிராம்மணர்களுக்குப் போஜனஞ் செய்வித்தால் எவ்வளவு திருப்தி யடைவார்களோ அப்படியே பசுவுக்குப் புல் போடுவதாலும், காட்டிலேபோய் அழுவதாலும் திருப்தியடைகிறார்கள். இந்தப்பாத்திரபதமாசத்தில் மஹாளயஞ் செய்வதற்கு இடையூறாகச் சூதகம்முதலிய ஆசௌசம் நேரிட்டால் சூதகம் போனபிறகு விருச்சிகமாசத்துக்குள்ளே ஒரு நாள் செய்துவிடவேண்டியது. மஹாளய சிராத்தத்தில் தகப்பனுக்காக ஒரு வேதவித்தான பிராம்மணனையும், பிதாமனுக்காக ஒரு பிராம்மணனையும்; பிரபிதாமகனுக்காக ஒரு பிராம்மணனையும், மாதாமகன் மாதுப்பிதாமகன், மாதுப்பிரபிதாமகன் இம்மூவரையும் உத்தேசித்து மூன்று பிராம்மணர்களையும், விசுவே தேவர்களுக்காக இரண்டு பிராம்மணர்களையும், மஹாவிஷ்ணுவுக்காக ஒரு பிராமணனையுமாக ஒன்பது பிராம்மணனைவரிக்கவேண்டியது. அப்படியில்லாவிட்டால் மாதுர்வர்க்கத்துக்கு ஒரு பிராமணனும், பிதுர்வர்க்கத்துக்கு ஒரு பிராம்மணனும், விசுவே தேவர்களுக்காக ஒரு பிராம்மணனும், மஹா விஷ்ணுவுக்காக ஒரு பிராம்மணனுமாக நாலு பிராம்மணர்களையும் வரிக்கவேண்டியது அவசியம். வரிக்கப்படும் பிராம்மணர்களும் வேதவித்துக்களாயும், ஆசாரசம்பன்னர்களாயும் இருக்கவேண்டும். அப்படியில்லாமல்போனால் மஹாளயம் நஷ்டம். துராசாரனே கேளு; பாத்திரபதமாசத்தில் விசேஷமாகக் கிருஷ்ண பட்சத்திலாவது சிரத்தையோடும் மஹாளயம் பண்ணினால் ஸர்வ தீர்த்தஸ்நான பலனும், அக்கினிஷ்டோமம் முதலான நூறுயாகங்கள் பண்ணின பலனும், துலாபுருஷ தான முதலான தானங்கள் பண்ணினபலனும், சாந்திராயணாதி விரதங்கள் பண்ணின பலனும், சாங்கமாக நாலுவேதங்களையும் பாராயணம் பண்ணின பலனையும், காயத்திரியாதி மஹா மந்திரங்களை ஜபித்த பலனையும், இதிகாசபுராணங்களைப் படித்தபலனையும் அடைந்து, அந்தத்திலே பிரம விஷ்ணு ருத்திரர்களுடைய பதவிகளையும் கிரமமாக அடைவான். மஹாளயத்துக்

குச் சமானமான விரதம் கிடையாது. மஹாளயமுதலிய சிராத்தம் நித்தியமென்றும் காமியமென்று இரண்டு வகைப்படும். ஆகையால் செய்யாத பட்சத்தில் கெடுதியும். செய்தால் இஷ்டசித்தியும் உண்டாகுமென்பதில் ஆக்ஷேபனையில்லை. மஹாளயத்தைச் செய்தால் பூதப்பிரேத பிசாச, டாகினி முதலிய துஷ்டதேவதைகளும் அபஸ்மாரம் முதலான துஷ்டகிரகங்களும் இராட்சதர்களும் உடனே ஒளித்துப்போகிறார்கள். ஏராளமான சம்பத்துமுண்டாகிறது.

பூர்வகாலத்தில் தசரதரானவர் வசிஷ்டருடைய உபதேசத்தினால் புரட்டாசி மாசத்தில் மஹாளய சிராத்தம்பண்ணி லோகப்பிரியர்களான இராமன் முதலான நாலு பிள்ளைகளையும் பெற்று உலகத்திலே மேலான செல்வத்தையும், உத்தமமான கீர்த்தியையும் அடைந்தார். இராஜஸத்தமனாகிய யயாதிமஹாராஜாவும் யது முதலாயின வம்சவர்த்தனர்களான புத்திரர்களைப்பெற்று, பிறகுக் கெட்டாத சொர்க்கத்தையும் அடைந்தான். துஷ்டியந்தமஹாராஜனும் மஹாளயஞ் செய்ததனால் பரதனென்கிற புத்திரனைப் பெற்றான். தமயந்திநாயகனாகிய நளமஹாராஜனும் இந்த மஹாளயத்தைச் செய்து கொடுமையான கஷ்டங்களையுங்கடந்து, கலியையும் புஷ்கரனையும் ஜயித்து இராஜ்யத்தையு மடைந்து, வாழ்ந்து, இந்திரசேனனென்கிற தார்ம்மிகனான புத்திரனையும் பெற்றான். சத்தியவாக்கியனான அரிச்சந்திர மஹாராஜாவானவர் மஹாளயம் பண்ணின புண்ணியத்தினாலே விசுவாமித்திரர் செய்த கொடுமையினின்றும் விடுபட்டுச், சந்திரமதி என்கிற பாரியையும், லோகிதாசுவன் என்கிற குமாரனையும் மீட்டுச் சுகப்பட்டான். பலசாலியான கார்த்தவீரியார்ச்சுனன் மஹாளயஞ்செய்த புண்ணியத்தினாலே பதினெட்டுத் தீவுகளுக்கும் ஆதிபத்தியத்தைப் பெற்றான். தாசரதராமன் தண்டகாரணியத்தில் மஹாளயஞ்செய்த பலத்தினால் இராவணனை ஜயித்துச் சீதையை மீட்டுக்கொண்டார். யுதிஷ்டிர மஹாராஜாவும் மஹாளயஞ்செய்து துக்கசாகரத்தைக் கடந்து, துரியோதனாதியர்களை வென்றார். வசிஷ்டர், அத்திரி, பிருகு, குத்ஸர், கௌதமர், ஆங்கிரஸ், காசியபர் பரத்வாஜர், விசுவாமித்திரர், அகஸ்தியர், பராசரர், மிருகண்டு, மற்றுமுள்ள ரிஷிசிரேஷ்டர்களும் இந்த மஹாளயம் பண்ணின பலத்தினாலே அணிமாதி அஷ்டசித்திகளுக்கும், விரதங்களுக்குமிருப்பிடமாகி உலகத்திலே மேன்மைபெற்றவர்களாய்ச் சிவன் முக்தராயிருந்தார்கள். ஆகையால் துராசாரா! க்ஷேமத்தைவி

ரும்புகிறவன் அவசியம் மஹாளயஞ்செய்து தீரவேண்டும். உன்னைப் பிடித்துக்கொண்டிருந்த வேதாளம் பூர்வ ஜன்மத்தில் குசஸ்தலி என்கிற கிராமத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருந்த பாத்துவாசர் என்கிற பிராமணனுக்கு வேதநிதி யென்கிற புத்திரனாகப் பிறந்திருந்தான். அவன் மஹாளய சிராத்தம் செய்யாத தோஷத்தால் பிதுர் சாபம்வந்து இந்த ஜன்மத்தில் வேதாளமாகப் பிறந்திருந்தான். புரட்டாசிமாசத்தில் அவசியம் மஹாளய சிராத்தம் பண்ணு; பண்ணினால் தாரித்ரியம் வாராது; சுகமாக வாழ்ந்திருப்பாய்; மஹாபாதக ஸம்ஸர்க்கம்பண்ணாதே; நீ வேதாளத்தினிடம் அகப்பட்டுக்கொண்டு பட்டகஷ்டம்போதும்; சீக்கிரம ஊர் போய்ச்சேரு; நான் அனுமதிகொடுத்து விட்டேன் என்று தத்தாத்திரேயர் சொன்னார். துராசாரன் அவரை நமஸ்காரம்பண்ணிக் கிருதார்த்தனாகித், தன்னூர்போய்ச்சேர்ந்து, தத்தாத்திரேயர் சொன்னபடி பாதகருடைய சேர்க்கையை ஒழித்துவிட்டுத், தன்னாச்சிரமத்துக்குரிய ஆசாரத்தை யனுஷ்டித்துக்கொண்டிருந்து, தேகாந்தத்தில் மோட்சம்போய்ச் சேர்ந்தான்.

கேட்டீர்களோ முனிவர்களே; துராசாரனானவன் மஹாபாதகநாசனியான தனுக்கோடியில் ஸ்நானம்பண்ணிப், பாபத்தினின்றும் விடுபட்ட சரிதத்தையுங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்தத் தனுக்கோடியின் மகிமையை நானென்னென்று சொல்வேன்? பிராயச்சித்தமில்லாத பாபங்களைக்கூட இந்தத்தனுக்கோடி நாசம்பண்ணிவிடுகிறது. சூத்திரன் பூஜைபண்ணின சிவ விஷ்ணுக்களை வணங்குகிற பிராம்மணனுக்கும், பிராம்மண நிந்தை செய்கிறவனுக்கும், நம்பிக்கைதுரோகம் பண்ணுகிறவனுக்கும், செய்த நன்றி மறக்கிறவனுக்கும், பிராதுர்ப்பாரியா சங்கமம் செய்கிறவனுக்கும், சூத்திரனுடைய அன்னத்தைப் புசிக்கிறவனுக்கும், வேதநிந்தை செய்கிறவனுக்கும், கன்னியாவிக்கிரயம் பண்ணுகிறவனுக்கும், குதிரை விக்கிரயம் பண்ணுகிறவனுக்கும், வேதவிக்கிரயஞ் செய்கிறவனுக்கும், வேதவிக்கிரயத்தையே தொழிலாகக் கொண்டவனுக்கும், தர்ம்மவிரதம், தீர்த்தம் இவைகளை விக்கிரயம் பண்ணுகிறவனுக்கும், மாதுர்த்துரோகம், பிதுர்த்துரோகம், யதிதுரோகம் செய்வதில் ஆசைகொண்டவனுக்கும், குருநிந்தை, யதிநிந்தை, சிவநிந்தை, விஷ்ணுநிந்தை பண்ணுகிறவனுக்கும், நல்ல கதையைத் தூஷிக்கிறவனுக்கும் பிராயச்சித்தமில்லையென்று ஸ்மிருதிகர்த்தர்

கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதகர்கள்கூடத் தனுக்கோடிஸ்நானத்தினால் பரிசுத்தராகிறார்கள். ரிஷீசுவரர்களே! இவ்விதமாகத் தனுக்கோடி வைபவத்தையுங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்த வைபவத்தைக் கேட்கிறவனுக்குச் சகலபாபங்களும் நீங்கிவிடுகின்றன.

முப்பத்தாறுவது அத்தியாயம்

முற்றிற்று.

முப்பத்தேழாவது

க்ஷீரகுண்டத்தின் சொரூபம் கூறிய

அத்தியாயம்.

கேளுங்கள் முனீசுவரர்களே! சக்கிரதீர்த்தம் முதலாக இருபத்துநாலு தீர்த்தங்களையும் உங்களுக்குச் சொல்லிவிட்டேன். இன்னம் எந்த அற்புதமான விஷயங்களை நீங்கள் கேட்க விரும்புகிறீர்கள் என்று கேட்க. ஐயா! க்ஷீரகுண்டத்துக்கு சமீபத்தில் சக்கிரதீர்த்தமிருக்கிறதாகச் சொன்னீர்களே! க்ஷீரகுண்டம் எங்கேயிருக்கிறது? அது எப்படிம்பட்டது! அதனுடைய வைபவமென்ன? இவைகளைச் எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூதர் சொல்லுகிறார்.

மஹாபுண்ணியமான தேவீ பட்டணத்துக்கு மேல்திசையில் கொஞ்சதூரத்தில் புல்லகிராமமென்றொரு இடமிருக்கிறது. இவ்விடத்திலே தான் ஸ்ரீ ராமர் சேதுக்கட்ட ஆரம்பித்தார், அந்தப் புல்லகிராமம் ஒரு புண்ணிய க்ஷேத்திரம் அதிலே தான் பாபநாசனமான க்ஷீரகுண்டமிருக்கிறது. அதைத்தியானம் பண்ணினாலும், கண்டாலும், தொட்டாலும், வாயாலே அதன்பேரை உச்சரித்தாலும் மோட்சத்தைத் தரத்தக்கது. அதற்கு க்ஷீரகுண்டமென்கிற பெயர்வந்த காரணத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன் சாவதானமாய்க் கேளுங்கள்.

பூர்வத்தில் தெட்சணசமுத்திரக் கரையில் புண்ணியமான புல்லகிராமத்தில் வேதோக்தமான கருமங்களைச் செய்துகொண்டி-

ருந்த முத்கலரென்கிற ஒரு முனிவர் நாராயணனைக்குறித்து ஒரு யாகம்பண்ணினார். ஸ்ரீமந்நாராயணரும் அவருடைய யாகத்துக்கு மகிழ்ந்து பிரசன்னராய் யக்ஞபூமியில் வந்து நின்றார். காளமேக சொரூபராயும், பீதாம்பரதாரியாயும், கௌஸ்துபாலங்கிருதராயும், சங்க சக்கிர கதாபத்மதாரியாயுமிருக்கிற ஸ்ரீமந்நாராயணர் இலட்சுமிதேவியோடு, கருடாரூடராய் வரக்கண்ட முத்கலர் ஆனந்த பரவசமடைந்து, புளகாங்கிதராய்க், காதுக்கினிய சொல்லுக்களாலே துதிக்கிறார். சுவாமீ, ஜகத்தைச்சிருஷ்டித்துப், பரிபாலித்து,சங்கரிக்கின்ற ஸ்ரீமந்நாராயணனாகிய உமக்கு நமஸ்காரம், மச்சம, கூர்மம, வராகம், நாரசிம்மம், வாமனம், பரசுராமன், தாசரதராமன், பலபத்திராமன், கிருஷ்ணன், கற்கி, என்று தசாவதாரங்களை யெடுத்த சச்சிதானந்த சொரூபியாகிய உமக்கு நமஸ்காரம்; கருணைக்கடலாகிய நாராயணமூர்த்தியே! வெட்கமற்றவனும், ஈனனும்; குரூரனும், கோள்சொல்லுகிறவனும், டாம்பிகனும், பிறனுடைய பொருள்-ஸ்திரீ-பூமி யிவைகளிலாசை கொண்டவனும், அசூயை நிறைந்தவனும் இருக்கிற என்னைத் தயவுசெய்து காப்பாற்றியருளவேண்டும்; என்று ஸ்தோத்திரம்பண்ணின முத்கலரைப் பார்த்து மேககர்ஜனைபோன்ற தொனியோடு ஐயா! முத்கலரே நீர்செய்த ஸ்தோத்திரங்களாலும், யாகத்தாலும் நான் சந்தோஷமடைந்தேன். நீர் கொடுக்கிற அவிசை நேரிலே வாங்கிப்புசிக்கும்படியாக யாகசாலையில் வந்திருக்கிறேன் என்று சொல்ல முத்கலரும் சந்தோஷப்பட்டு ஐயா, நானும் என் மனைவி புத்திரர்களும் கிருதார்த்தர்களாய் விட்டோம்; என்னுடைய ஜன்மம், தபசு, வம்சம், ஆச்சிரமம் எல்லாம் இன்றைக்குத்தான் ஸபலமாயின. யோகீசுவரர்கள் யோகாப்பியாசம்பண்ணித் தங்களுடைய ஹிருதய கமலத்தில் தேடிக்கொண்டிருக்கிற சுவாமீ! தாங்கள் சாட்சாத்தாக என்னுடைய யக்ஞபூமிக்கு வந்துவிட்டபடியால் என் யாகம் ஸபலமாய்விட்டது என்றுசொல்லி, ஆசனங்கொடுத்துச் சந்தன புஷ்பங்களால் பூஜித்து, அர்க்கியங்கொடுத்து மனமகிழ்ச்சியோடு புரோடாச மென்கிற அவிசையுங்கொடுத்தார். அப்பொழுது லோகபாவனரான நாராயணர் முத்கலர் கொடுத்த அவிசைத் தமது கையாலெடுத்துப் புசிக்க, அக்கினிமுதலான தேவர்களும், ரித்துவிக்குகளும், எஜமானனும், அங்கிருந்த பிராமணர்களும், சராசரமான உலகமும் திருப்தியடைந்தார்கள். பிறகு நாராயணர் முத்கல முனிவரைப்பார்த்து ஐயா! நல்ல அனுஷ்டானமுடைய

ரே! உமக்கு வேண்டுமென்கிற வரத்தைக் கேட்டுக்கொளுமென்று சொல்ல, முத்கலர் பகவானே என் யாகசாலைக்கு நீர் பிரத்தியட்சமாக வந்து அவிர்ப்பாகத்தை வாங்கிக்கொண்டபடியால் நான் கிருதார்த்தனாய் விட்டேன் எனக்கு வேறென்ன வேண்டியிருக்கிறது; ஆனாலும் உம்மிடத்தில் கபடமில்லாத திடமான பத்தியிருக்கவேண்டும். மாதவா! காலை மாலைகளாகிய இரண்டு வேளைகளிலும் பசுவின்பாலைக்கொண்டு உம்முடைய சொரூபமான அக்கினியில் ஹோமம்பண்ண விரும்புகிறேன். இந்த இரண்டாவது வரத்தை யெனக்குக் கொடுத்தருளவேண்டும். சுருதியிற் சொல்லுகிற பயஹோமத்துக்கு வேண்டிய பால் கொடுக்கும்படியான பசுக்கள் எனக்குக் கிடையாது என்று சொன்னதைக்கேட்ட ஸ்ரீமந்நாராயணர் சிற்பியாகிய விசுவகர்ம்மாவைக் கூப்பிட்டு; ஸ்படிக முதலிய கல்லுகளைக்கொண்டு ஒரு குளத்தைகட்டுவித்து, அதைச் சுற்றிலும் பிராகாராதிகளால் அலங்கரித்துக், காமதேனுவை யழைத்து, என் பக்தனாகிய இவன் எனக்குத் திருப்தி செய்யும்படி பாலால் ஹோமஞ்செய்ய விரும்புகிறான். ஆகையால் நான் சந்தோஷப்படும்படி நீ காலைவேளையிலும் சாயங்காலத்திலும் இவ்விடத்தில் வந்து, உன்மடியிலிருந்துண்டாகிற பாலால் இந்தச்சரசை நிரப்பிவிடு; இவன் இரண்டு வேளைகளிலும் ஹோமஞ்செய்யட்டும் என்று ஆக்ஞாபித்து, முத்கலரைப்பார்த்து, முனிவரே! நீர் இந்தக் குளத்திலுண்டாகிற பாலைக்கொண்டு தினந்தோறும் இரண்டு வேளைகளிலும் ஹோமம்பண்ணும் நான் திருப்தியடைவேன். அதனாலுமக்குச் சருவசித்திகளும் உண்டாகும். இந்தச் சரசுக்கு க்ஷீரசரசு என்று பேர்வரும். இந்தச் சரசில் ஸ்நானம்பண்ணினவர்களுடைய பஞ்சமஹாபாதகங்களும் மற்றுமுள்ள பாதகங்களும் உடனே பஞ்சாய்ப்பறந்துபோம்; நீரும் தேகாந்தத்தில் ஸமஸ்த பந்தங்களு மொழித்து என்னை வந்தடைவீர் என்று சொல்லி முத்கலரைக் கட்டிக்கொண்டு, அவரால் நமஸ்காரம்பண்ணப்பட்டு அந்தர்த்தானமடைந்து விட்டார். முத்கலரும் அநேகமாயிரம் வருஷம் காமதேனுவின் பாலால் அக்கினியில் ஹோமம்பண்ணிக்கொண்டு வந்து. கடைசியாக முக்தியைக் கொடுக்கும்படியான புல்லக்கிராமத்திலேயே சரீரத்தைவிட்டு விஷ்ணுசாயுஜ்ய மடைந்தார்.

கேளுங்கள் முனிவர்களே! இந்தத் தீர்த்தத்துக்கு க்ஷீரகுண்டமென்று பேர்வந்த காரணத்தை சொல்லிவிட்டேன். இதில் சுத்

தமனதோடு ஸ்நானம்பண்ணுகிறவர்கள் சமஸ்தமான பாதகங்களும் நீங்கி புண்ணிய சீலர்களாகி முக்தர்களாகிறார்கள். க்ஷீரகுண்டத்தைக் கண்ணால் பார்ப்பவர்களுக்கு யாகம், வேதம், தீர்த்தயாத்திரை, ஜபம், விரதம், முதலியவை எதனத்துக்கு! க்ஷீரகுண்டத்திலிருந்து வீசுகிற காற்று எவன் பேரிலடிக்கிறதோ அவன் பிரமலோகம்போய், சேர்ந்து அங்கிருந்தபடியே முக்தியடைகிறான். க்ஷீரகுண்டத்தில் ஸ்நானம்பண்ணுகிறவர்கள் சூரியனையும் அலட்சியம்பண்ணி, அக்கினிபோல ஜ்வலித்துக்கொண்டு சூரியனுடைய சிரசின்மேலே வீற்றிருப்பார்கள். க்ஷீரகுண்டத்தில் ஸ்நானம்பண்ணினவர்களுக்கு வைதரணிநதி குளிர்ந்துபோகிறது. அவன் நரகங்களையடைகிறதில்லை. காமதேனுவுடனே கூடியிருக்கிற க்ஷீரகுண்டமிருக்கும்பொழுது வேறு தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணும்படி அலைகிறவன் பசுவின்பாலைக் கையிலே வைத்துக்கொண்டு எருக்கம்பாலுக்கு அலைகிறவன்போலிருக்கிறது. இதில் ஸ்நானம்பண்ணினவர்களுக்குக் கிடையாதது என்ன? முக்திகூடக் கையிலிருக்கிறது இந்த விஷயத்தில் நான் சத்தியம்பண்ணுகிறேன். இந்த லோகப்பிரசித்தமாயும் புண்ணியமாயுமிருக்கிற இந்த க்ஷீரகுண்டத்தில் காசியபர் பத்தினியாகிய கத்ரு என்பவள் தன் பர்த்தாவினுடைய வாக்கியப்படி நியமத்தோடு ஸ்நானம்பண்ணி, வஞ்சனையாலே தன் சக்களத்தியை ஜயித்த பாபத்தினின்றும் விடுபட்டாள் என்று சூதமுனிவர் சொல்லச் சௌனகாதியர்கள், சூதமுனீந்திரரே; கத்ரு என்பவள் யார்? அவள் யாருடைய பெண்? அவளுடைய பதியார்? தன்னுடைய சக்களத்தியை அவள் என்ன மோசஞ்செய்து ஜெயிக்கவேண்டும். இவைகளை யெங்களுக்குச் சவிஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூதர் சொல்லலானார்.

முப்பத்தேழாவது அத்தியாயம்

முற்றிற்று.

முப்பத்தெட்டாவது

கத்துரு க்ஷீரகுண்டத்தில் ஸ்நானம் பண்ணி மோசம்பண்ணின பாபம்நீங்கின

அத்தியாயம்.

சௌநகாதி முனிசுவரர்களே! கிருதயுகத்தில் பிரஜாபதிக்கு விநதை, கத்துரு என்ற இரண்டு குமாரத்திகளிருந்தார்கள். அவ்விரண்டு பேரையும் காசிபமுனிவர் விவாகஞ் செய்துகொண்டார். கத்துரு அநந்தன் வாசுகி முதலிய அநேகமான விஷமுள்ள நாகங்களைப் பெற்றாள். ஒரு நாள் இந்த இரண்டு சகோதரிகளும் உச்சைச்சிரவம் என்ற தேவேந்திரனுடைய வெள்ளைக்குதிரை வரக்கண்டு, கத்துரு விநதையைப் பார்த்துச் சகோதரியே இந்தக் குதிரையின் வால் வெளுப்பா! கறுப்பா! உனக்கென்ன தோன்றுகிறது என்று கேட்க, விநதை இதனுடைய வால் வெளுப்பாகத்தான் எனக்குத் தோன்றுகிறது; உனக்கெப்படி தோன்றுகிறது சொல்லென்று கேட்டாள். கத்துரு அதன் வால் கறுப்பென்று எனக்குத் தோன்றுகிறது என்று தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள். பிறகு இருவரும் தோற்றவர்கள் ஜயித்தவர்களுக்கு அடிமையாகிறதென்று பந்தயம் போட்டுக்கொண்டார்கள். பின்பு கத்துரு தன் புத்திரர்களாகிய வாசுகிமுதலானவர்களையழைத்துக் குமாரர்களே! என்னுடைய இஷ்டம் நிறைவேறும்படியும், நான் விநதைக்கு அடிமையாகாதபடியும் நீங்கள் அந்தக் குதிரையின் வாலை மறைத்துக்கொள்ளவேண்டியது என்று சொல்ல, அந்நாகங்கள் அவள் பேச்சை அங்கிகாரம் பண்ணாமையினால், கத்துரு உக்கிரமான கோபங்கொண்டு, நீங்கள் எல்லாரும் ஜநமேஜயனுடைய சர்ப்பயாகத்திலே சாகக்கடவீர்களென்று சபித்தாள். உடனே கார்க்கோடகன் என்கிற நாகம் அதிக பயங்கொண்டு, அவள் காலில் விழுந்து, அம்மா நீ பயப்படாதே! நான் உச்சைச்சிரவத்தினுடைய வாலைமைபோலக் கறுப்பாகச் செய்துவிடுகிறேன் என்று கெஞ்சிச்சொல்லித், தன்னுடைய உடலாலே யந்தக் குதிரையின்வாலை மறைத்து மைபோலக்கறுப்பாக்கி விட்டான். பிறகு இரண்டுசகோதரிகளும் குதிரையைப்பார்க்க அதிவேகமாகப் புறப்பட்டுச், சந்திரன், சங்கு, மாணிக்கம், முத்து, ஐராவதம் இவைகளுக்குப் பிறப்பிடமாயும், யுகாந்தத்தில் ஸ்ரீமந்நாராயணருக்கு யோகநித்திரை செய்கிற சயனமாயுமிருக்கிற திருப்பாற்கடலைக் கடந்து, தேவேந்திரனுடைய வாகனமாகிற உச்சைச்சிரவமென்கிற குதிரையைக்கண்டார்கள். அதன் வால் கறுப்பாக இருக்கிறதை விநதை கண்டு, அதிக விசனங்கொண்டு, தாங்கள் செய்துகொண்ட பிரதிக்ஞையின்படி கத்துருவுக்கு அடிமையானாள். இப்படியிருக்கையில் மலைபோன்ற சரீரத்தையுடைய கருடனானவன் முட்டையையுடைத்துக்கொண்டு தேவர்கள் புகழவும், அவனுடைய பெரிய சரீரத்தைக்கண்டு மூன்று லோகங்களும் நடுங்கவும், அக்கினியைப்போல உயரக்கிளம்பி, தன்னுடைய சரீரத்தைக்கண்டவர்கள் பயப்படுவார்களென்று நினைத்துச், சரீரத்தைச்சுருக்கி அருணனைத்தன் தோளின்மேல் ஏற்றிக்கொண்டு தாயாராகிய விநதையிடம் வந்து சேர்ந்தான். அப்பொழுது கத்துருவானவள் தனக்குப்பயந்து அடங்கியிருக்கிற விநதையைப் பார்த்து, அடி சேடி! நான் தேவலோகம் போகவேண்டும், என்னை நீ தூக்கிக்கொள்ளு: என் புத்திரர்களை கருடன் தூக்கிப்போகட்டுமென்றாள். விநதை கருடனைப்பார்த்து அப்பா! நானிந்த கத்துருவைத் தூக்கிக்கொள்ளுகிறேன், நீ அவளுடைய குமாரர்களாகிய பாம்புகளைத் தூக்கிக்கொள்ளு, என்று சொல்லித்தான் கத்துருவைத் தூக்கிக்கொண்டாள். கருடனும் தாய்சொல்படி பாம்புகளைத் தூக்கிக்கொண்டான். தூக்கிக்கொண்டு போகும்போது சூரியன் கிட்டப் போகப் போகப்பாம்புகளெல்லாம் சூரியவெப்பம் பொறுக்கமாட்டாமல் சுருண்டுபோகக், கத்துரு தன் புத்திரர்களுடைய வெப்பத்தைச் சாந்தப்படுத்தும்படி யிந்திரனைப்பிரார்த்திக்க, அவன் மழைபொழியும்படி செய்து வெப்பத்தைத் தணித்தான். பிறகு தேவலோகம்போய்ச் சேர்ந்தார்கள். போனவுடனே நாகங்களெல்லாம் கருடனைப்பார்த்து நாங்கள் தீபாந்தரம்போய்ப் பார்க்க அதிக விருப்பமுள்ளவர்களாக இருக்கிறோம், ஆகையால் பணிவிடைக்காரி புத்திரனாகிய கருடா! எங்களை அதனத்துக்குள் தூக்கிக்கொண்டுபோ, என்று சொன்னார்கள். அப்பொழுது கருடன் தன் தாயாகிய விநதையைப் பார்த்து அம்மா! நானேனிந்தப் பாம்புகளைச் சுமக்கவேண்டும்? நீயேன் கத்துருவைச் சுமக்கவேண்டும் இந்தப் பாம்புகள் சேடிபுத்திரனே யென்று என்னைக் கூப்பிடவேண்டிய காரணமென்ன? இவைகளையெல்லாம் அம்மா! எனக்கு

உண்மையாய்ச் சொல்லியருளவேண்டும்? என்று வினவ வினதையும் அப்பா என்னுடைய கொடிய சக்களத்தியானவள் என்னைக் கபடமாய்ச் செயித்தபடியால் நானவளுக்கு அடிமையாயிருக்கிறேன், நீயும் சேடிபுத்திரனாயிருக்கிறாய், ஆகையால்தான் நான் இவளைச் சுமக்கிறேன். நீயும் பாம்புகளைச் சுமக்க நேரிட்டது என்று ஆதியோடந்தமாய் அவனுக்குச்சொல்லி முடித்தாள். அதுகேட்ட கருடன் தன் மாதாவைப் பார்த்து அம்மா! இந்த அடிமை நீங்குவதற்கு நாம் என்ன செய்யவேண்டுமென்று கேட்க, வினதை நீ பாம்புகளைப் பார்த்து என் தாயின் அடிமைத்தனம் நீங்குவதற்கு நானுங்களுக்கு என்னசெய்ய வேண்டுமென்று கேள், என்று சொல்லக், கருடன் சர்ப்பங்களினிடம்போய்க் கேட்க, அவர்கள் நீ தேவலோகத்திலிருந்து சீக்கிரம் அமிர்தம் கொண்டுவருவாயேயானால் உன் தாயின் அடிமைத்தனம் நீங்கிவிடும் என்று சொன்னார்கள். பிறகு கருடனும் தன்தாயினிடம்வந்து அவளை வணங்கி அன்னையே நான் அமிர்தம்கொண்டுவரப்போகிறேன். எனக்கு அன்னம்போடு என்றுகேட்டான். தாயார் தன் புத்திரனைப்பார்த்து அப்பா சமுத்திரத்தியில் சில வேடர்களிருக்கிறார்கள்; அவர்களைப் புசித்துப் பசிதீர்த்துக்கொள்ளு; ஆனால் அவர்களுக்குள்ளே ஒரு பிராமணன் வேடச்சியோடுகூடி விடபுருஷனாக இருந்துகொண்டிருக்கிறான், அவனைப் புசித்தால் அவனுடைய பிரமதேஜஸால் உன் தொண்டையெரிந்துபோம்; ஆகையால் அவனைவிட்டுவிடு என்று சொல்லி, உன்னுடைய சிறகு முதலான அவயவங்களை, மருத்து முதலான தேவர்கள் காப்பாற்றக்கடவர்களென்று ஆசீர்வதித்து அனுப்பினாள். கருடன் வேடர்களிருக்கிற இடம்போய் வாயைத்திறந்து தின்ன ஆரம்பித்தபோது, வேடர்கள், மலைக்குகையில் பட்சிகள் புகுவதுபோல அவனுடைய வாயிலே புகுந்தார்கள். பிராமணனுங்கூட வாயிற் புகுந்து தொண்டையில் சுடக்கண்ட கருடன், அந்தப் பிராமணனைக்கூப்பிட்டு நீ மஹாபாபியாயிருந்தாலும், நான் உன்னைக்கொல்லத்தகாது. நீ வெளியிலோடிப்போ என்று சொல்ல, அந்தப் பிராமணன் என் மனைவியாகிய வேடச்சியுங்கூட வரவேண்டுமென்று கேட்க, அப்படியே யாகட்டுமென்று அவ்விருவரையுங் கக்கிவெளியில்விட, அந்தப் பிராமணன் வேடச்சியை யழைத்துக்கொண்டு தனக்கிஷ்டமான இடம்போய்ச் சேர்ந்தான். கருடன் கிராதகர்களைத்தின்றுவிட்டுத் தன் தகப்பனாகிய காசிபரிடம்போய்ச் சேர்ந்தான் காசிபர் அப்பா கருடா! எங்கே போகிறாய் என்று கேட்க, ஐயா

என் தாயாருடைய அடிமைத்தன்மையை நீக்கும்பொருட்டு அமிர்தங்கொண்டுவரப் போகிறேன். வருகிற வழியில் அநேக கிராதகர்களைத் தின்றும் என் பசிதீரவில்லை, அருந்தபசியானது அல்லும்பகலும் என்னை வருத்துகிறது, ஆகையால் இப்பசி நீங்கி அமிர்தங்கொண்டுவரும்படியான சக்தியுண்டாகும்படி ஒரு ஆகாரம் கொடுத்தருளவேண்டும் என்று பிரார்த்திக்கக், காசிபர் அப்பா! பூர்வத்தில் விபாவசு சுப்பிரதீகனென்கிற இரண்டு முனிவர்கள் தங்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பாகத்துக்காகச் சண்டைபோட்டுப் பகைமுற்றிக் கோபத்தாலொருவரையொருவர் சபித்துக்கொண்டு, சுப்பிரதீகன் ஆறுயோசனை உயரமும் பனிரெண்டு யோசனை நீளமுமுள்ள ஒரு யானையாகியும் விபாவசு மூன்று யோசனை உயரமும், பத்துயோசனை விசாலமுமுள்ள ஆமையாகியும் இந்தச் சரசில் வைரம் நீங்காதவர்களாய் இன்னமும் சண்டைபோட்டுக் கொண்டே யிருக்கிறார்கள். அவர்களிரண்டு பேரையும் பட்சித்துப் பசியாற்றிக்கொண்டு அமிர்தத்தைக் கொண்டுவா என்று சொல்லக், கருடனுமப்படியே பிரம்மாண்ட சரீரத்தையும், மிகுந்த பல பராக்கிரமத்தையும் உடைய அந்த யானையையும், ஆமையையும் நகங்களில் இடுக்கிக்கொண்டு, விளம்பம் என்னும் தீர்த்தக்கரையில் வந்து இறங்கினவுடனே, அந்தக்கரையில் ஓங்கிவளர்ந்த ஒரு பெரிய ஆலமரமானது அப்பா! கருடா நூறுயோசனை நீளமுள்ள இந்த என்கிளையின்மேலே யுட்கார்ந்து நீ கொண்டுவந்த ஆகாரத்தைப் பட்சித்துச் சுகமாகப்போவென்று சொன்னதைக் கேட்ட மனோவேகமுள்ள பட்சிராஜனும், இந்தக் கிளையின் மேலுட்கார்ந்த வுடனே அது மளுக்கென்று முறிந்தது. அதில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்த அங்குஷ்டப்பிரமாணமுள்ள வாலகில்லியர்கள் அறுபதினாயிரம் பேரையும் கண்டு, அவர்கள் கீழே விழுந்துவிடுவார்களென்கிற பயத்தினால் அந்தக்கிளையையும், ஆமை, யானைகளையும் தூக்கிக்கொண்டு ஆகாசமார்க்கமாக வந்த தன் புத்திரனைக் காசிபர் கண்டு அப்பா! நிர்ஜனமான ஒரு மலையின்மேலே இந்தக்கிளையை யிறக்கிவிடு என்று சொல்ல, அது கேட்ட கருடனும் அப்படியே நிர்ஜனமான ஒரு மலையிலிறக்கிவிட்டு, ஆமையையும், யானையையும் பட்சித்துக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் தேவலோகத்தில் ஒரு அபசகுனங்கண்டது. அது கண்ட இந்திரன் தன் குருவாகிய பிரகஸ்பதியிடத்தில் இந்த அபசகுனத்துக்குக் காரணமென்னவென்று அடிக்கடி கேட்க,

பிரகஸ்பதியும், ஏ! இந்திரா பூர்வம் காசிபர் யாகம்பண்ண ஆரம்பித்து ரிஷிகளையும், தேவர்களையும், யட்ச கந்தருவ கின்னர கிம்புருடர்களையும், யக்ஞவஸ்துக்களைக் கொண்டுவரும்படி யனுப்பின போது யக்ஞசாமான்களை யெடுத்துக்கொண்டு வந்த வாலகில்லியர்கள் மாட்டுக்குளம்படி நீரில் முழுகிப்போக, நீர் அதைகண்டு சிரித்ததனாலுண்டான கோபத்தால் காசிபருக்குப் பிறக்கப்போகிற இந்தப்பிள்ளை யிந்திரனுக்குப் பயத்தைக்கொடுக்கிற சத்துருவாக இருக்கக்கடவது என்று யாகாக்கினியில் ஹோமம்பண்ண, அந்த மந்திரபலத்தால் காசிபருக்குற்பத்தியான கருடன் அமிர்தத்தை யபகரித்துக்கொண்டு போவதற்காக வந்துகொண்டிருக்கிறான், அதனாலேதான் துர்ச்சகுன முண்டாயிருக்கிறதென்று சொல்ல, அதைகேட்ட இந்திரன் அக்கினி முதலான தேவர்களை யழைத்துக் கருடன் அமிர்தத்தைக்கொண்டு போகாதபடி காத்துக்கொள்ளுங்களென்று ஆக்ஞாபனம்பண்ண அப்படியே தேவர்களெல்லாரும் ஆயுதபாணிகளாகிக் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது கருடனும் அங்கே வந்துவிட்டான். மஹாபலவானான கருடனைக் கண்டு பயந்தார்கள். தேவர்களுக்கும் கருடனுக்கும் பலமான யுத்தமுண்டாகக் கருடன் அமிர்தத்தைக் காத்துக்கொண்டிருந்த பௌமனன் என்பவனைத் தன் மூக்கினால் கடித்துத் துண்டித்துப் போட்டான். அதைகண்ட தேவர்கள் கோபங்கொண்டு நானாவித சஸ்திரங்களால் அடித்துத் தொந்தரவு செய்யக் கருடன் கோபங்கொண்டு அக்கினி முதலான தேவர்களைச் சிறகினால் தூரத்திலே தூக்கித் தள்ளிவிட்டான். தேவர்கள் பின்னும் கோபித்து நாராசம் பிண்டிபால முதலான பல ஆயுதங்களைக் கருடன்மேலெறிய, அவன் தன் சிறகினால் புழுதியை வாரியிறைத்துத் தேவர்கள் கண்களை மறைத்துவிட்டான். தேவர்கள் காற்றினாலே தூளியை யடக்கிவிட்டார்கள். இப்படிச் சிறிதுநேரம் யுத்தஞ்செய்த பின் கருடன் வசுக்கள், ருத்திரர், ஆதித்தியர், மருத்து மற்றுமுள்ள தேவர்களையும் மூக்காலும் இறகுகளாலும் அடித்துவருத்தித் துரத்திவிட அக்கினி மாத்திரம் எதிரில் வந்து ஜ்வலித்துக்கொண்டு நிற்கக்கருடன் நதியிலிருக்கிற நீரை யெல்லாம் குடித்து மழையைப்போல ஜலத்தை வருஷித்து அக்கினியை அவித்துவிட்டான். பின்பு அமிர்தத்துக்குச் சமீபத்தில் சுழன்றுகொண்டிருக்கிற கூர்மையான முனைகளோடுங்கூடின சக்கிராயுதத்தின் ஆரையின் வழியாகச் சரீரத்தைச் சுருக்கிக்கொண்டு உள்ளே புகுந்து, கண்ணிலே பார்த்தவர்களைக்கூடப் பஸ்மீகரமாக்கத்தக்கதாய் வாயைத்திறந்துகொண்டு பயங்கரமாக உட்கார்ந்துகொண்டிருந்த இரண்டு சர்ப்பங்களைக்கண்டு தன் சிறகாலும் மூக்காலும் அவைகளை நாசப்படுத்தி, அமிர்தத்தைத் தூக்கிக்கொண்டு உயரக்கிளம்பின கருடனைப்பார்த்து இலட்சுமீபதியான மாதவன் அப்பா கருடா! நான் உன்னிடத்தில் திருப்தி அடைந்திருக்கிறேன், ஆகையால் உனக்கு வேண்டிய வரத்தைக்கேள் என்று சொன்னார்; கருடன் ஐயா நான் உமக்குமேலாக இருக்கவேண்டும்: கிழத்தன்மையும், சாவும், எனக்கு வாராதிருக்கவேண்டும் என்று கேட்க ஹரியும் அப்படியே யாகட்டுமென்று சொன்னார். உடனே கருடன் விஷ்ணுவைப்பார்த்து உமக்கு வேண்டிய வரத்தை நீர் கேட்டுக்கொள்ளுந் தருகிறேனென்ன, அவர் அப்படியானால் நீ எனக்கு வாகனமாகவும், கொடியாகவுமிருக்கவேணடுமென்று கேட்க, அப்படியே யாகட்டுமென்று கருடன் வரங்கொடுத்தான். பின்பு கருடன் அமிர்தத்தைக்கொண்டு போனதைக்கேட்ட இந்திரன், அதிக வேகமாக ஓடிவந்து வச்சிராயுதத்தினால் கருடனுடைய சிரசில் அடித்தான். அதைக்கண்ட கருடன் சிரித்து, இந்திரா, உன் வச்சிராயுதத்தினால் எனக்கொரு சேதமுமில்லை; ஆனால் உன் வச்சிராயுதம் வியர்த்தமாகாதபடி ஒரு இறகைக்கொடுக்கிறேன் என்று சொல்லி ஒரு இறகை உதிர்த்தான். அந்த இறகு அழகாயிருந்தபடியால் கருடனுக்கு சுபர்ணன் என்று பேர்வந்தது. தங்கநிறமான இறகைக்கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். பிறகு கருடன் இந்திரனைப் பார்த்து உன்னோடுகூடச் சேர்த்து இந்த உலகத்தையெல்லாம் சுமக்கும்படியான சக்தி யெனக்கிருக்கிறது; உன்னைப்போல ஆயிரமிந்திரர்கள் சண்டைசெய்ய வந்தாலும், எனக்கு இலட்சியமில்லை என்று சொன்னதைக்கேட்ட இந்திரன் இந்த அமிர்தத்தினால் உனக்கென்ன பிரயோசனம்? அமிர்தத்தை யென்னிடங்கொடுத்துவிடு, நீ இந்த அமிர்தத்தைப் பாம்புகளுக்குக் கொண்டுபோய்க் கொடுத்தால் அவர்கள் புசித்துவிட்டு ஜராமரணங்களற்று நம்மைக்காட்டிலும் பலவந்தர்களாகித் தேவர்களைத் துன்பப்படுத்துவார்கள் என்று சொல்லக், கருடன் இந்திரனைப்பார்த்து நான் கொண்டுபோய் வைக்கிற விடத்திலிருந்து நீ தூக்கிக்கொண்டுபோய்விடு, என்று சொல்ல, இந்திரன் புத்திசாலியான கருடா! உனக்கென்ன வரம் வேண்டும் கேளென்று சொல்ல, ஐயா! அப்படியானால் என் தாயாரைக் கபடமாக வெள்ளாட்டியாக்கின சர்ப்பங்கள் எனக்கு

எப்பொழுதும் இரையாயிருக்கவேண்டும் என்று கேட்க, இந்திரன் அப்படியே யாகட்டுமென்று சொல்லிக் கருடனுக்கு விடைகொடுத்தனுப்பினான். உடனே கருடன் அமிர்தத்தை யெடுத்துக்கொண்டு அதிக வேகமாகப் போகும்போது இந்திரனும் பின் தொடர்ந்து போனான். கருடன் தன் தாயாரிடம்போய், சர்ப்பங்களே, நான் கொண்டுவந்த அமிர்தத்தைத் தர்ப்பையின்மேலே வைக்கிறேன், நீங்கள் ஸ்நானம்பண்ணிப் பரிசுத்தர்களாக வந்து இதைப் புசியுங்கள், என் தாயாருக்கும் இன்றோடே அடிமைத்தன்மை நீங்கிவிடவேண்டும், என்று சொல்லச் சர்ப்பங்களும் அப்படியே யாகட்டுமென்று சொல்லின. விநதையும் அடிமையினின்றும் நீங்கினாள். சர்ப்பங்கள் அமிர்தத்தைப புசிப்பதற்காக ஸ்நானம்பண்ணப்போயின. அந்தச் சமயத்தில் இந்திரன் அமிர்தத்தை யெடுத்துக்கொண்டு போய்விட்டான். ஸ்நானம்பண்ணித் திரும்பிவந்த ஸர்ப்பங்கள் அமிர்தத்தைக்காணாமல், அது வைக்கப்பட்டிருந்த இடத்திலுள்ள தர்ப்பத்தை நாக்காலே நக்க நாக்கு இரண்டாகப் பிளந்துபோயிற்று. கேளுங்கள் ரிஷீசுவரர்களே! அது முதலாகச் சர்ப்பங்களுக்குத் துவிஜிஹ்வம் (இரண்டு நாக்குள்ளவை) என்று பேர் வந்தது. கருடன் இப்படியாகத் தன் தாயாரை அடிமையினின்றும் மீட்டுக்கொண்டபின், கத்துருவைப்பார்த்து நீ என் தாயாரை மோசஞ்செய்து ஜயித்து அடிமைகொண்டபடியால் உன் கணவனுடைய பணிவிடைக்கு நீ உபயோகப்படாமல் போகக்கடவதென்று சபித்துவிட்டு இஷ்டமான இடத்துக்குப்போனான். பிறகு கத்துருவையும், விநதையுஞ்சேர்ந்து தங்கள் பர்த்தாவிடம்போக அவர் முகத்தைத் திருப்பிக்கொண்டு கோபத்தினால், கத்துரு நீ வஞ்சனையாலே விநதையை ஜயித்து அடிமையாக்கிக்கொண்ட துராத்மாவானபடியால் என் பணிவிடைக்குத் தகாதவள்; பெண்ணாவது, ஆணாவது ஒருவனைக் கபடமாக ஜயித்தால் அவர்கள் பாதகர்களாகிறார்கள்; அவர்களோடே பேசுகிறவனும், பிரம்மஹத்தி, சுராபானம், சொர்ணஸ்தேயம், குருதல்பகமனம், இவர்களோடு சம்பந்தப்பட்ட பாதகம் ஆகிய பஞ்சமஹாபாதகங்களையுஞ் செய்தவனாக ரிஷிகளால் சொல்லப்படுகிறான். ஆகையால் உன்னோடு பேசினால்கூட நரகத்துக்குப் போகும்படியான தோஷம் எனக்கு வந்துவிடும். குரூரமான கத்துருவே நீ யென் எதிரில் நில்லாதே கபடமாய் ஜயித்தவனுடனே ஸஹபோஜனம் பண்ணினவனுடன் பேசினாலுங்கூட நரகசமுத்திரத்திலே முழுகிக்கிடக்கவேண்டும். வஞ்சனையாலே ஜயித்தவனைப் பார்த்ததோஷ நிவர்த்திக்காகச் சூரியனையாவது, நெருப்பையாவது, ஜலத்தையாவது பார்க்கவேண்டும். அவனிருக்கிற ஆச்சிரமத்திலாவது, வீட்டிலாவது தங்கக்கூடாது; தங்கினால் நரகத்தை யனுபவிக்கவேண்டும். துர்மார்க்கத்தில் செல்லாத பரிசுத்த இருதயமுடைய இந்த விநதையை வஞ்சனைசெய்து ஜயித்தபடியால் நீ யென்கண்முன்னே நில்லாதே; ஓடிப்போ ஓடிப்போ என்று கத்துருவைத் திக்காரம்பண்ணி விரட்டி, நல்ல சுபாவமுள்ள விநதையைச் சேர்த்துக்கொண்டார். இப்படி வைது விரட்டப்பட்ட கத்துருவானவள் மிகத்துக்கங்கொண்டு மனம் நொந்து கோவென்று கதறி யவர்காலில் விழுந்தும், அவள் செய்தபாபத்தைநினைத்து மனமிரங்காமல் அவளை யங்கீகாரஞ் செய்யமாட்டேனென்று சொல்ல, விநதை அவர் பாதத்தில் வணங்கிச் சுவாமீ; கருணைக்கடலே என் சகோதரியானவள் பேதைமையாலே யிந்தப் பாபத்தைச்செய்து விட்டாள். அதைத் தேவரீர் பொறுத்தருளவேண்டும். பெரியோர்களுக்கு எல்லாரிடத்திலும் தயவுவைக்கிற சுபாவமல்லவோ! என்று கெஞ்சிக்கேட்டும், காசிபர் விநதையைப் பார்த்துப் பெண்ணே; இவள்செய்த பாபத்துக்குப் பிராயச்சித்தஞ் செய்யாமலிவளைச் சேர்த்துக்கொள்ளமாட்டேன். சொன்னேன்; சொன்னேன்; சொன்னேன்; என்று மறுத்துவிட்டார். மறுபடியும் வணங்கிச் சுவாமீ என்னுடைய சகோதரியின் பாபத்துக்குத் தேவரீரே பிராயச்சித்தஞ் சொல்லி, அவள் தம்முடைய பரிசாரகத்துக்குத் தகுந்தவளாகிற வழியைத்தேடிக் கொடுக்கவேண்டும் என்று பிரார்த்தித்தாள். பிறகு மரீசிபுத்திரனாகிய காசிபர் ஒரு முகூர்த்தம் மனசால் யோசித்து விநதையே தெட்சிணசமுத்திரக்கரையிலிருக்கிறமுக்தியைக்கொடுக்கும்படியான புல்லகிராமத்தில் பாபத்தைப் போக்கும்படியான க்ஷீரகுண்டமென்றொரு புண்ணிய தீர்த்தமிருக்கிறது, அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணின மாத்திரத்தில் இவளுடைய பாபமெல்லாம் நசித்துப்போம், அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணாமல் என்ன பிராயச்சித்தம் பண்ணிக்கொண்டாலும் இவளுடைய பாபந்தீராது. ஆகையாலிவள் அந்தச் சரஸுக்குப்போகட்டும் என்று பிராயச்சித்தம் விதித்தார். கத்துரு பிராம்மணோத்தமரான தன் பர்த்தாவை வணங்கி உடனே பிள்ளைகளை யழைத்துக்கொண்டு கொஞ்சநாளையில் க்ஷீரகுண்டம் வந்து சேர்ந்து, இந்திரியங்களை யடக்கி, ஆசாரமாய்ச் சங்கற்பஞ் செய்துகொண்டு மூன்றுநாள் நியமத்தோடு ஸ்நானம்பண்ணி உபவாச,

மிருந்து, நாலாவதுநாள் இவள் பக்தியோடு ஸ்நானம் பண்ணுகிற பொழுது ஆகாயவாணியானது, ஏ! கத்துருவே! இதில் ஸ்நானம் பண்ணினதினால் நீ வஞ்சனைசெய்து ஜயித்த பாபம் போய்விட்டது, உன்னுடைய பர்த்துரு சிசுருஷைக்கு அருகமாய்விட்டாய், கருடன் கொடுத்த சாபமும் நீங்கிவிட்டது, உன் பர்த்தாவிடம் போனால் உன்னை யவர் கட்டாயம் அங்கீகாரம் பண்ணிக்கொள்வார் என்று சொன்ன ஆகாசவாணியை மகிழ்ச்சியோடு நமஸ்காரம்பண்ணித், தீர்த்தத்தைத் தன் புத்திரர்களோடும் வலம்வந்து வணங்கிப் பர்த்தாவுக்குச் சிசுருஷை பண்ணவேண்டுமென்கிற பிரியத்தோடு பர்த்தாவிடம் வந்துசேர, அவரும் க்ஷீரகுண்டத்தில் ஸ்நானம்பண்ணிப் பரிசுத்தமானாள் என்பதைச் சமாதியாலறிந்து தன்னுடைய சிசுருஷை செய்யும்படி அங்கீகாரம் பண்ணிக்கொண்டார்.

கேட்டீரோ முனிவர்களே! கத்துருவின் பாபமானது இந்த க்ஷீரசரசில் ஸ்நானம்பண்ணினதினால் விமோசனமான சரித்திரத்தை யுங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தைப் படிப்பவரும், கேட்பவரும் க்ஷீரகுண்ட ஸ்நானபலனையும், அசுவமேதாதியாகங்களின் பூர்ணபலனையும், கங்காதி ஸர்வதீர்த்தபலனையும், பரமஹம்சன் அடைகிற கதியையும் அடைகிறார்களென்பதில் சந்தேகமே கிடையாது.

முப்பத்தெட்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

முப்பத்தொன்பதாவது

கபிதீர்த்தத்தில் ரம்பை சாப விமோசனமடைந்த

அத்தியாயம்.

சௌனகாதிமுனிவர்களே! கந்தமாதனத்தில் கபிதீர்த்தமென்றொரு தீர்த்தமிருக்கிறது. அதன் மகிமையை யுங்களுக்கெடுத்துச்சொல்லுகிறேன். பூர்வகாலத்தில் இராவணாதி ராட்சதர்களைச் சம்ஹாரம்பண்ணிவிட்டு, ஸ்ரீராமரோடு திரும்பிவந்த வானரங்க

ளான கபிகளெல்லாமிந்தத் தீர்த்தத்தை யுண்டுபண்ணி, சந்தோஷத்தோடும் அதில் ஸ்நானம்பண்ணி, இந்தத் தீர்த்தத்தில் பக்தியோடு ஸ்நானம்பண்ணுகிறவர்கள், மஹாபாதகங்களொழிந்து, தரித்திரம் நீங்கி, நரகபயமற்று, யமபயமில்லாமல் முக்தியடையக்கடவார்கள்; கபிதீர்த்தத்துக்குப் போகிறேனென்று சொல்லிக்கொண்டு நாறடி தூரம்போனாலும் அவனுக்குப் பரமபதங்கிடைக்கவேண்டும்; இந்தத் தீர்த்தத்துக்குச்சமான தீர்த்தங்கிடையாமற்போகட்டும்; என்று ஸர்வஜனோபகாரமாக வரங்கொடுத்து ஸ்ரீராமமூர்த்தியை வணங்கிச், சுவாமீ நாங்களுண்டாக்கின இந்தத் தீர்த்தத்துக்குத், தேவரீரும் அற்புதமான வரங்கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தன. அப்பொழுது ஸ்ரீராமசந்திரனும் அதிக சந்தோஷத்தோடு இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணுகிறவர்களுக்குக் கங்கா ஸ்நானபலனும், பிரயாகை ஸ்நானபலனும், ஸர்வ தீர்த்தபலனும், அக்கினிஷ்டோமாதி யாகங்களின் பூர்ணபலனும், காயத்திரியாதி மஹாமந்திர ஜெபபலனும், ஆயிரம் கோதான பலனும், நாலுவேதங்களைப் பாராயணஞ்செய்த பலனும், பிரம விஷ்ணு மஹேசுரர் முதலாகிய தேவர்களைப் பூஜை செய்த பலனும் கிடைக்கக்கடவதென்று வானரங்கள் திருப்தியடையும்படி வரங்கொடுத்தருளினார். இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், முக்கண்ணனான ஈசானன், ஆகிய அஷ்டதிக்குப் பாலகர்களும், பிரமா, சந்திரசூரியர்கள், சாத்தியர்கள், வசுக்கள், விசுவேதேவர்கள் முதலான தேவர்களும், அத்திரி, பிருகு, குத்ஸர், கௌதமர், பாராசரர், கண்ணுவர், அகஸ்தியர், சுதீக்ஷணர், விசுவாமித்திரர் முதலான ரிஷிகளும், ஸனகாதி யோகிகளும், நாரதாதி தேவரிஷிகளும், ஸர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கும்படியான இந்தத்தீர்த்தத்தை வெகுவாகச் சிலாகித்து ஸ்நானம்பண்ணி, இது கபிகளால் நிர்மாணம் பண்ணப்பட்டபடியால், கபிதீர்த்தமென்று பிரசித்தமடையட்டும் என்று சொல்லிப் போனார்கள். ஆகையால் ரிஷீசுவரர்களே முமுட்சுக்கள் இந்தக் கபிதீர்த்தத்திற்கு அவசியம் போகவேண்டும்; இந்தத் தீர்த்தத்தின் பெருமையைச் சொல்ல என்னால் முடியாது; பூர்வகாலத்தில் கௌசிகசாபத்தால் கல்லாய்ப்போன ரம்பை யிந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிச் சாபநீங்கி நிஜசொரூபம் பெற்றுச் சொர்க்கம்போய்ச் சேர்ந்தாள், என்று சூதர் சொல்ல, ரிஷீசுவரர்கள் ஐயா! கௌசிகர் ரம்பையை ஏன் சபித்தார்? கல்லாய்ப்போன ரம்பை யெப்

படி சக்ரதீர்த்தத்துக்குப் போனாள்? இவைகளை யெங்களுக்கு விளங்கச் சொல்லவேண்டுமென்று வினவச் சூதர் சொல்லுகிறார்.

குசிக குலத்திற்பிறந்த விசுவாமித்திரர் என்கிற பராக்கிரமசாலியான மஹாராஜா சதுரங்கசேனைகளோடு புறப்பட்டுப் பூமியிலிருக்கிற இராஜ்யங்களைப் பார்க்கவிரும்பி, வெகுதேசங்களைச்சுற்றிக்கடைசியாக வசிஷ்டாச்சிரமத்துக்குவந்தார். அப்பொழுதுமஹாத்மாவாகிய வசிஷ்டரும் அவரை ஆதித்தியத்துக்காக அழைக்க அரசனும் அப்படியே யாகட்டுமென்று சொல்லித் தண்டம்போல வசிஷ்டர் காலில் விழுந்தார். பிறகு காமதேனுவின் மகிமையால் விசுவாமித்திருக்கும், அவருடைய சேனைகளுக்கும், பிரம புத்திரரான வசிஷ்டர் விருந்துசெய்து திருப்தி செய்வித்தார். விசுவாமித்திரர் காமதேனுவின் மகிமையை யறிந்து, கேட்டதை யெல்லாம் கொடுக்கும்படியான காமதேனுவைத் தனக்குக் கொடுக்கும்படி பிரார்த்தித்தார். அவர் மாட்டேனென்று மறுத்தமையால் பலாத்காரமாகக் காமதேனுவைப் பிடித்திழுத்தார். உடனே காமதேனுவினால் சிருஷ்டிக்கப்பட்ட மிலேச்சர்கள் அவரை அடித்துத்துரத்த விசுவாமித்திரரும் மஹாதேவரைப் பிரார்த்தித்து அவரிடத்திலிருந்து பிரம்மாஸ்திரம் முதலான அஸ்திரங்களைப்பெற்றுத் திரும்பி வசிஷ்டாச்சிரமம் வந்து அவ்வஸ்திரங்களைப் பிரயோகித்தார். அப்பொழுது பிரமகுமாரனான வசிஷ்டர் தம்முடைய தபோபலத்தால் சிருஷ்டிக்கப்பட்ட பிரம்மதண்டத்தினால் அவைகளை நாசஞ்செய்துவிட்டார். விசுவாமித்திரர் தோல்வியடைந்ததனால் வெட்கப்பட்டு, தனக்குப் பிராமண்யம் சித்திக்கவேண்டுமென்று தபசு செய்வதற்காகக் காட்டுக்குப்போய் கிழக்கு, தெற்கு, மேற்கு, என்கிற மூன்றுதிசைகளிலும் தவம்புரிந்து, அங்கு உண்டான மஹாவிக்கினங்களினாலே தபசு நிறைவேறாமல், வடதிக்குப்போய்ச் சேர்ந்து நிர்மலமான இமயமலையில் புண்ணியமான கௌசிகி தீரத்தில் தேவவருஷத்தில் ஆயிரம்வருஷம் இந்திரியங்களையும் கோபத்தையுமடக்கிச், சுவாசத்தை ஒடுக்கி, ஆகாரமில்லாமல் கண்ணைமூடிக்கொண்டு, சலனமற்றுக் கையைத்தூக்கிக்கொண்டு, ஆதாரமில்லாமலிருந்து, கிரீஷ்மகாலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலேயும், பனிகாலத்தில் ஜலத்திலேயும், வருஷாகாலத்தில் வெட்ட வெளியிலிருந்தும் கொடூரமான தபசுசெய்தார். அதுகண்ட சொர்க்கவாசிகளான இந்திராதி தேவர்களெல்லாரும் பயந்து, ரம்பையைப் பார்த்துப் பெண்ணே, இமயமலையில் கௌசிகி தீரத்தில் தபசு

செய்துகொண்டிருக்கிற விசுவாமித்திரரை உன்னுடைய லீலைகளினாலே மயக்கித் தபசுக்கு விக்கினம் உண்டாகும்படி செய்யவேண்டும் என்று ஆக்ஞாபிக்க, ரம்பை அவர்களை வணங்கிக் கைகூப்பி நின்று தேவர்களே! விசுவாமித்திர முனிவர் மஹா குரூரமானவர்; கோபிஷ்டர்; அவரென்னைச் சபித்துவிடுவாரே! அவரைக்கண்டால் பயமாயிருக்கிறதே; தங்களுடைய பணிவிடைக்குரிய என்னை தயவுசெய்து காப்பாற்றிவிடுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள், அப்பொழுது இந்திரன் ஏ! ரம்பையே நீ விசுவாமித்திரருக்காகப் பயப்படவேண்டாம், உனக்குச் சகாயமாக மன்மதனை யழைத்துக்கொண்டு நானும் வருகிறேன். கோகிலங்கள் கூவுகிற வசந்தகாலமும் வரும், நீ அதிசுந்தரரூபங்கொண்டு அந்த மஹாரிஷியை மயக்கிவிடு, என்று தைரியஞ்சொல்லக்கேட்ட ரம்பை நன்றாய் அலங்காரம் பண்ணிக்கொண்டு விசுவாமித்திரருடைய ஆச்சிரமத்துக்குப்போய் அவருக்கெதிரில் நின்றுகொண்டு, அவர் மனமயங்கும்படியான லீலைகளைச்செய்து அவரைமயக்க ஆரம்பித்தாள். அப்பொழுது குயில், கேட்டவர் மனமுருகும்படி கூவிற்று; குயில் கூவுவதையும், ரம்பை யெதிரில் நிற்பதையும் கண்டு சந்தேகங்கொண்ட விசுவாமித்திரர், இவையெல்லாம் இந்திரனுடைய ஏவுதலென்று அறிந்து, ரம்பையைப் பார்த்து ரம்பையே கோபத்தை ஜெயிக்கவேண்டுமென்றிருக்கிற எனக்குக் கோபம் உண்டாக்கினபடியால் நீ பத்துலட்சம் வருஷம் கல்லாய்க்கிடக்கக்கடவது சாபத்தின் முடிவில் ஒரு பிராமணனுடைய சகாயத்தாலே சாபவிமோசனமடையக்கடவாய் என்று சபித்தார். இப்படி சாபம் பெற்ற ரம்பை உடனே கல்லாய்ப்போய் அவருடைய ஆச்சிரமத்திலேயே கிடந்தாள். அப்படியிருக்கும்போது அந்த ஆச்சிரமத்தில் அகஸ்தியருடைய சிஷ்யனாகிய சுவேதன் என்ற மஹாரிஷி மோட்சத்தையுத்தேசித்து வெகுகாலமாய்த் தவசு பண்ணிக்கொண்டிருந்தார். ஓர் நாள் அவருடைய தபசைக் கெடுக்க எண்ணங்கொண்ட அங்காரகை என்கிற ராட்சசி மலமூத்திர இரத்தங்களை வாரி யிறைத்துக்கொண்டும், மேகம்போலக் கர்ஜித்துக்கொண்டும் வந்து தொந்தரவு பண்ணினாள். அப்பொழுது சுவேதர் கோபங்கொண்டு, விசுவாமித்திரர் சாபத்தால் கல்லாய்க்கிடந்த ரம்பையை எடுத்து, வாயு மந்திரத்தை யுச்சரித்து அதை வாயு வாஸ்திரமாகப் பிரயோகம் பண்ணினார். அந்தக்கல்லு ராட்சசியைத் துரத்தும்போது அவள் பயந்தோடி தெட்சணசமுத்திரக் கரைக்கு

வந்து கபிதீர்த்தத்தில் விழுந்தாள் விரட்டிக்கொண்டு பின்தொடர்ந்து வந்த கல்லானது அவள் தலையில் பொத்தென்று விழ ராட்சதி மடிந்தாள், அந்தக்கல் கபிதீர்த்த மகிமையால் சிலாரூபம் போய்ப் பழைய ரம்பையாகி திவ்யாம்பரமணிந்து, ஹாரம், கேயூரம், கடகம், மூக்குத்தி, புல்லாக்கு முதலான திவ்யாபரணங்களைத் தரித்துத் திவ்ய விமானத்திலேறி, ஊர்வசிமுதலான தோழிகளாகிய அப்ஸரஸ்திரீகள் சூழ்ந்துவரத் தேவர்கள் புஷ்பவ்ருஷம் வருஷிக்க, கபிதீர்த்தத்தைப் புகழ்ந்துகொண்டு, சந்திரசேகரரான இராமநாதரைச் சேவித்து அழகான அமராபதிபோய்ச் சேர்ந்தாள். அந்த ராட்சசியானவள் பூர்வ ஜன்மத்தில் கிருதாசியென்கிற தேவஸ்திரீ அகஸ்தியர் சாபத்தால் இராட்சசியாகி யிந்தக் கபிதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினதினால் சாபமொழிந்து பழைய வடிவம் பெற்றுச் சொர்க்கலோகம் போய்ச் சேர்ந்தாள்.

கேளுங்கள் முனிவர்களே! இப்படியாகச் சுவேதருடைய பிரசாதத்தால் ரம்பையும் கிருதாச்சியும் சாபவிமோசனம் பெற்ற கபிதீர்த்தமகிமையை யுங்களுக்கு வெளிப்படுத்தினேன். இந்த அத்தியாயத்தைப் படிப்பவரும் கேட்பவரும் கபிதீர்த்தஸ்நான பலனை யடைவார்கள்.

முப்பத்தொன்பதாவ அத்தியாயம்

முற்றிற்று.

நாற்பதாவது

காயத்ரீ சரஸ்வதி தீர்த்தங்களின் வரலாறுரைத்த

அத்தியாயம்.

கேளுங்கள் முனிவர்களே! கந்தமாதனத்திலிருக்க சாயத்திரீ, சரஸ்வதியென்கிற தீர்த்தமகிமையை யுங்களுக்கெடுத்துரைக்கிறேன். பிரமபத்தினிகளான காயத்திரீ சரஸ்வதியென்கிற இருவரும் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிறபடியால் அதற்கு இந்தப் பெயர் வந்ததென்று சூதர்சொல்ல, ரிஷிகள் ஐயா! சூதமுனிவரே பிரமபத்தினிகளாகிய காயத்திரீ, சரஸ்வதியென்பவர்கள்

கந்தமாதனத்துக்குவந்த காரணமென்ன? என்று வினவச் சூதர் சொல்லுகிறார்.

பூர்வகாலத்தில் பிரம்மதேவர் வாக்கு என்கிற தன் புத்திரியைக்கண்டு, காமவிவசியால் மயங்கி மோகங்கொண்டார். அந்தப் பெண் தன் தகப்பன் தன்னிடத்திலாசைப்படுவதைக்கண்டு வெட்கப்பட்டுப் பெண் மானுருவங்கொண்டு ஓடினாள். பிரமதேவன் ஆண் மானுருவங்கொண்டு அவளைத் துரத்தினான். அதுகண்ட தேவர்களெல்லாரும் லோகசிருஷ்டாவாகிய பிரமா தன் மகளைப் பெண்டாளச் செல்வது அக்கிரமம் என்று தூஷித்தார்கள். அப்பொழுது பரமசிவன் அநியாயத்தைப் பிரவிர்த்தித்தது பொறுக்காமல் வேடரூபந்தரித்துப் பினாகமென்கிற வில்லைக் கையிலெடுத்து வளைத்துக் காதுவரைக்கும் இழுத்து, அம்பைத்தொடுத்துப் பிரயோகம் பண்ணினார், அப்பொழுது பிரம்மாவாகிய மான் பரமசிவன் அம்பாலடிபட்டுப் பூமியில் விழுந்து மடிந்தது. உடனே யதனுடைய சரீரத்திலிருந்து ஒருபெரிய ஜோதிகிளம்பி ஆகாசம்போய், மிருகசிரிஷ நட்சத்திரம் ஆயிற்று. பரமசிவன் உடனே யாருத்திரா நட்சத்திரமாய் மிருகசிரிஷ நட்சத்திரமான பிரமதேவனைத் துன்பப்படுத்தினார், இப்பொழுதுங்கூடப் பரமசிவன் வேடரூபமாய் மிருகசிரிஷ நட்சத்திரத்தின் சமீபத்தில் காணப்படுகிறது நிச்சயம். இந்தமாதிரியாகப் பரமசிவனால் பிரமதேவன் உயிரிழந்ததைக் கேட்ட காயத்திரீ சரஸ்வதி யிருவரும் வைதவ்யத்தை யடைந்த துக்கத்தினால் வருந்தி நமது கணவனை உஜ்ஜீவிப்பதற்கு நாமென்னசெய்வோமென்று பரஸ்பரம் யோசனைசெய்துகொண்டு சர்வோத்க்ருஷ்டமாய்ச் சிவபெருமானுக்கு இருப்பிடமாய் எல்லாருக்கும் அபீஷ்டத்தைக்கொடுக்கும்படியான கந்தமாதனத்துக்குப் போய்ச் சிவனை யுத்தேசித்துத் தபசுபண்ணத் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தங்கள் ஸ்நானத்திற்காகத் தங்கள் பேராலிரண்டு தீர்த்தங்களை யுண்டாக்கியவைகளில் தினமும் மூன்றுவேளை ஸ்நானம் பண்ணிக் காமக்குரோதாதிகளைவிட்டு ஆகாரமில்லாமல் பஞ்சாட்சர மகாமந்திரமொன்றையே ஜபித்துச் சிவத்தியானம் பண்ணிக்கொண்டு வெகு காலம் உக்கிரமான தபசு பண்ணினார்கள். அவர்களுடைய தபசினால் திருப்தியடைந்த கிருபாமூர்த்தியான பரமசிவன் அவர்களுடைய தபப்பலனை யளிக்க எண்ணங்கொண்டு, ஸ்ரீவிக்கினேசுவரரும், சுப்பிரமண்ணியசுவாமியு மிருபக்கத்திலும்வர பார்வதீச

மேதராய் அவர்களுக்கெதிரில் தோன்றக்கண்ட அவ்விருவரும் பரமேசுவரனை ஸ்தோத்திரம்பண்ணத் தொடங்கினார்கள்: நீக்கமுடியாத சமுசாரமாகிற இருளைத் தொம்சம்பண்ணுகிறதற்கு முக்கிய காரணராயும், எரித்துக்கொண்டிருக்கிற ஜ்வாலைகளாலே பயங்கரமான காளகூட விஷத்தைப் பானம்பண்ணினவராயும், ஜகத்தை மோகிக்கச்செய்கிற பஞ்சபாணங்களையுடைய மன்மதனுடைய சரீரத்தை எரித்தவராயும், ஜகத்தை வதிக்கிற குரூரனான யமனை அழித்தவராயும், கங்கையின் அலைகள் மோதும்படியான ஜடாமண்டலத்தையுடையவராயும், பாலசந்திரனைத் தரித்தவராயும், பினாகமென்கிற வில்லினுடைய பயங்கரமான டங்காரத்தொனியால் திரிபுரங்களை நடுநடுங்கச் செய்தவராயும் நானாவிதமான உலகத்தைப் படைத்தவரான பிரமதேவனுடைய சிரசை அறுத்தவராயும், குளிர்ந்த பாவனமான கிருபாதிருஷ்டியால் மார்க்கண்டேயனைக் காப்பாற்றினவராயும் இருக்கிற உமக்கு வந்தனம், வந்தனம்; கிரிஜாநாதா, மகாதேவா, ஜகந்நாதா திரிபுராந்தகா! சங்கரா வாமதேவா, சரணமடைந்த எங்களைக் காத்தருளும் என்று துதிக்க, தேவதேவரான மகேசுவரரும் பிரீதியோடுகூட அவர்களிருவரையும் பார்த்துப், பெண்களே உங்களிடத்தில் நான் பிரியமாயிருக்கிறேன்; உங்களுக்கு வேண்டியவரத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லக் காயத்திரீ, சரஸ்வதிகள் தேவதேவா! எங்களுடைய பர்த்தாவான பிரமதேவனைக் கிருபைகூர்ந்து உயிர்ப்பித்துத் தரவேண்டும்; எங்களுக்குப் பிதாவாகிய திரிபுராந்தகா! புத்திரிகளாகிய எங்களுக்குப் பரித்ராணம்பண்ணி யெங்களைக் காப்பாற்றவேண்டும் என்று பிரார்த்திக்கச், சம்புவானவர் அப்படியே யாகட்டுமென்று சொல்லிப், பிரமாவினுடைய சிரசுகளை நந்தி பிருங்கி முதலான பூதகணங்களைக்கொண்டு தருவித்துப், பிரமாவின் சரீரத்தில் பொருத்தினபோது காயத்திரீ சரஸ்வதியிருவரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே பிரமதேவன் நாலுமுகங்களோடேகூடத் தூங்கி யெழுந்தவனைப்போலெழுந்திருந்தான் எழுந்திருந்தவுடனே சந்திரசேகரரான சங்கரனைக்கண்டு பாரியைகளோடு உத்தமமான வசனங்களாலே தோத்திரம்பண்ணினான் தேவதேவா, ஈசா, கருணாகரா, சங்கரா, கருணாவித்தாவே, சம்புவே உமக்கு நமஸ்காரம். சம்புவே நான் இனிமேல் குமார்க்கத்தில் போகாதபடி யென்னைக் காத்தருளும்! என்று பிரார்த்திக்க, பார்வதிபதியான பரமசிவன் அப்பா பிரமாவே இனிமேல்

தலைத்தாழ்ச்சியான செய்கைசெய்யாதே; குமார்க்கத்தில் போகிறவர்களை நான் எப்பொழுதும் சிக்ஷித்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிச், சரஸ்வதியையும், காயத்திரியையும் பார்த்துப், பெண்களே! என்னுடைய அனுக்கிரகத்தால் உங்களுடைய பர்த்தாவான பிரமதேவன் உயிர்பிழைத்தெழுந்திருக்கிறான்; அவனோடேகூடச் சீக்கிரம் பிரமலோகம்போய்ச் சேருங்கள்; நீங்கள் உங்களுடைய அம்சத்தினாலே இந்தத் தீர்த்தங்களில் எப்பொழுதும் வாசம்பண்ணிக் கொண்டிருப்பதால் இந்தத்தீர்த்தங்கள் காயத்திரீ சரஸ்வதி யென்கிற உங்கள் பெயரால் பிரக்கியாதியாயிருக்கட்டும். இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவர்கள் சகல பாபங்களும் நீங்கிச், சுத்தி, சாந்தியுண்டாகிச் சருவாபீஷ்டமும் கைகூடி, என்னுடைய அனுக்கிரகமும் விஷ்ணுவினுடைய அனுக்கிரகமும் பெற்றுச் சாயுஜ்யமென்கிற முத்தியையும் அடையக்கடவார்கள். இந்தத் தீர்த்தத்துக்குச் சமானமான தீர்த்தமும் மேலான தீர்த்தமுமிருந்ததுமில்லை; இருக்கப்போகிறதுமில்லை. காயத்திரீயுபாஸ்தியில்லாமலும், வேதாப்பியாசம் பண்ணாமலும், ஔபாசனம் செய்யாமலும், பஞ்சமகா யக்ஞானுஷ்டானம் பண்ணாதவர்களும், நித்தியகர்மானுஷ்டானம் பண்ணாதபாபிகளும், இந்தக் குண்டங்களில் ஸ்நானம்பண்ணிச் சுத்திபெற்று அந்தந்தப் பலன்களை யடைக்கடவார்கள் என்று சொல்லி யெல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அந்தர்த்தானமடைந்து விட்டார். பிறகு காயத்திரீ சரஸ்வதி யென்கிற இரண்டு தேவிமார்களும் தங்கள் கணவனை யழைத்துக்கொண்டு பிரமலோகம் போய்ச்சேர்ந்தார்கள்.

கேளுங்கள் முனிவர்களே! கந்தமாதனத்தில் காயத்திரீ, சரஸ்வதி யிருவரும் வந்த காரணத்தை யுங்களுக்குச் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தைப் படிப்போரும், கேட்போரும் அந்தத்தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணின பலனை யடைகிறார்கள். இதில் ஸந்தேகமில்லை.

நாற்பதாவது அத்தியாயம்.

முற்றிற்று.

நாற்பத்தோராவது

காயத்திரீ சரஸ்வதி தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணிக் காசிபர் பாபம்நீங்கின

அத்தியாயம்

முனீசுவரர்களே! இந்தக் காயத்திரி, சரஸ்வதி தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணிக் காசிபர் என்ற பிராமணன் நரகத்தைக் கொடுக்கத்தக்க பாபத்தினின்றும் விடுபட்டு முக்தியை அடைந்தாரென்று சூதர் சொல்ல, ரிஷீசுவரர்கள், ஐயா, கிருபாமூர்த்தியாகிய சூதமுனிவரே! காசிபரென்ற பிராம்மணன் என்ன பாபம் செய்தார்? உம்முடைய வாக்காகிய அமிர்தத்தைப் பானம்பண்ணித் திருப்தர்களாய்ப் பசிதாகங்கூட இல்லாமல் சிரத்தையோடு கேட்டுக்கொண்டிருக்கிற எங்களுக்கு அதைச் சவிஸ்தாரமாகச் சொல்லியருளும் என்று கேட்க, முனிவர்களே! காயத்திரி, சரஸ்வதி தீர்த்தங்களின் மகிமையை விளக்குகிறதாயும், கேட்பவருடைய பாபத்தைப் போக்குகிறதாயுமிருக்கிற அந்த இதிகாசத்தைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சூதமுனிவர் சொல்லுகிறார்.

பூர்வகாலத்தில் அபிமன்யுவின் புத்திரனான பரிட்சித்துமஹாராஜாவானவன் தர்ம்ம மாய்ச்செங்கோல் செலுத்தி அஸ்தினாபுரத்தில் வாழ்ந்து வந்தான். அவனுக்கு அறுபது வயதானபொழுது, ஒரு நாள் வேட்டையாட விரும்பிக்காட்டுக்குட்புகுந்து, வேட்டையாடி, தப்பி ஓடிப்போன ஒரு மானைத்துரத்திக்கொண்டு போய்ப் பசிதாகங்களால் வருந்தி வருகையில் அவ்விடத்தில் மரவுரிதரித்துத், தியானம் பண்ணிக்கொண்டிருந்த சமீகமுனிவரைக் கண்டு முனீந்திரரே! என் அம்பால் அடிபட்டுப் பயந்து ஓடிவந்த மானைப்பார்த்தீரோவென்று கேட்க, அந்த முனிவர் சமாதியிலிருந்தபடியால் மௌனமாயிருந்து விட்டார், அப்பொழுது அரசன் கோபங்கொண்டு, தன்வில்நுனியால் செத்துக்கிடந்த ஒருபாம்பையெடுத்து அந்த முனிவருடைய தோளில் போட்டுவிட்டுத் தன்னகரம் போய்ச்சேர்ந்தான். அந்த ரிஷீசுவரருடைய குமாரனான சிருங்கி என்பவனைப் பார்த்து அவனுடைய தோழனான கிருசன் என்பவன் ஏ மித்திரா! உன் தகப்பன் தோளில் செத்த பாம்பைப் போட்டுக்

கொண்டிருக்கிறாரே! உனக்குக் கருவமென்னத்துக்கு? அந்த வீண் கருவத்தைவிட்டுவிடு, என்று பரிகாசம்பண்ணிச் சிரிக்கச், சிருங்கனுக்குக் கோபமுண்டு, என் தகப்பன் தோளிலே செத்தபாம்பைத் தூக்கிப்போட்டமுடன் இன்னம் ஏழுநாட்களுக்குள் தட்சகன் என்கிற சர்ப்பத்தால் கடிக்கப்பட்டிறக்கக் கடவதென்று சபித்தான். அது கேட்ட அவனுடைய தந்தையாகிய சமீகர் அப்பா! சமஸ்த ஜனங்களையும் பரிபாலிக்கிற மகாராஜனை யேன் சபித்தாய்; அரசனில்லாமற் போனால் நாமெல்லா மெப்படி ஜீவிக்கிறது கோபத்தால் பாபமுண்டாகும், பொறுமையால் சுகமுண்டாகும். உண்டான கோபத்தைப் பொறுமையால் அடக்கிக்கொள்ளுகிறவன் இகபரமிரண்டிலும் சுகத்தை யடைகிறான். பொறுமையுள்ளவர்கள் அல்லவோ உலகத்தில் உத்தமமான கீர்த்தியை அடைகிறார்கள் என்று சொல்லித், தன் சிஷ்யனாகிய கௌரமுகன் என்பவனை நோக்கி அப்பா நீ பரிக்ஷித்து மஹாராஜாவினிடம் போய், என் புத்திரன் கொடுத்த சாபத்தைச் சொல்லிவிட்டுச் சீக்கிரந் திரும்பி வா? என்று அனுப்பினார். கௌரமுகன் சுபத்திரை புத்திரனாகிய பரிக்ஷித்துவினிடம்போய், ஓ மஹாராஜாவே; நீர் சமீகரிஷியினுடைய தோளில் செத்தபாம்பைப் போட்டுவந்தபடியால் அவருடைய குமாரன் சிருங்கி என்பவன், கோபங்கொண்டு, இன்று ஏழாம்நாள் தட்சகன் என்கிற பாம்பினாலே நீர் கடிக்கப்பட்டு விஷாக்கினியாலெரிக்கப்பட்டிறக்கக் கடவதென்று சபித்திருக்கிறான் இதை உம்மிடம் சொல்லிவிட்டு வரும்படி என் குருவாகிய சமீகர் என்னை யனுப்பினார். என்று கௌரமுகன் திரும்பிப்போய் விட்டான். உடனே பரிக்ஷித்துமஹாராஜன் சோகசாகரத்தில் முழுகி ஆகாசமளாவியிருக்கிற ஒரே கம்பத்தை நாட்டியதன்மேல், விஸ்தாரமாயும், உயரமாயுமிருக்கிற ஒரு மண்டபம் கட்டி, மதில் கருடமந்திரம் தெரிந்தரிந்தவர்களையும், ஔஷதந்தெரிந்த வைத்தியர்களையும், அநேக தேவரிஷி, பிரம்மரிஷி, ராஜரிஷிகளையும் வைத்துக் கொண்டு ஸ்ரீமந்நாராயணனைத் தியானம்பண்ணிக் கொண்டிருந்தான். அந்தச் சமையத்தில் மாந்திரீகோத்தமரான காசிபர் என்கிற பிராமணன் தரித்திரத்தினாலே பொருளை யிச்சித்து, பரிட்சித்து மஹாராஜனைக் கடிக்கப்போகிற தட்சகனுடைய விஷத்தை யிறக்குவதற்காக வந்துகொண்டிருந்தான். இந்தச் சமையத்தில் தட்சகனும் பிராமணவேஷந் தரித்துவர இருவரும் நடுவழியில் சந்தித்தார்கள். அப்பொழுது தட்சகன் காசிபரைப் பார்த்து ஓய் பிரா

மனே! நீர் எங்கே போகிறீர்? எனக்குச் சொல்லவேண்டுமென்று கேட்க, காசிபரும் தட்சகனைப்பார்த்து ஐயா! பரிட்சித்துமஹாராஜாவைத் தட்சகன் கடிக்கப்போகிறானாம்; அந்த விஷத்தை யிறக்கப் போகிறேன் என்றான். தட்சகன் ஓய் பிராம்மணோத்தமா! நான் தட்சகன், நான் கடித்தவிஷத்தை யிறக்குவதற்கு நூறுவருஷம் மஹாமந்திர ஜபம்பண்ணினாலும் முடியாதே. நான் கடித்ததைச் சிகிச்சை செய்யும் சக்தி உமக்கிருந்தால், அநேக யோசனைதூரம் வளர்ந்திருக்கிற இந்த ஆலமரத்தைக் கடிக்கிறேன்; அதைப்பிழைப்பித்தால் அப்பொழுது நீர் கெட்டிக்காரர்தானென்று சொல்லியந்தமரத்தை யுடனே கடித்தான். அந்த உயரமான மரமும் பஸ்மீகரமாய்விட்டது. அந்த மரத்தில் முன்னமே ஒருவன் ஏறியிருந்தான். அவனுங்கூடத் தட்சகனுடைய விஷஜுவாலைகளால் எரிந்துபோனான். அது காசிபர் தட்சகர்களுக்குத் தெரியவராது. அப்பொழுது மாந்திரீகோத்தமனான காசிபன் தட்சகன் கேட்கும்படியாக என் மந்திர சக்தியை இப்பொழுது எல்லாரும் பார்க்கட்டுமென்று பிரதிக்ஞைபண்ணி விஷாக்கினியால் எரிந்துபோன ஆல்விருட்சத்தை மறுபடியும் பிழைக்கப் பண்ணினபொழுது அதிலிருந்த மனுஷனும் பிழைத்துவிட்டான். அப்பொழுது தட்சகன் மந்திரத்திற் சிறந்த காசிபனைப் பார்த்து, ஐயா! அந்த ரிஷியினுடைய வாக்குப் பொய்யாதபடி நீர் செய்யவேண்டும்; அரசன் கொடுக்கிற திரவியத்தைவிட இரண்டு பங்கு நான் தருகிறேன். நீர் சீக்கிரம் வீடுபோய்ச்சேருமென்று சொல்லி, அவருக்கு விலையுயர்ந்த ரத்தினங்களைக் கொடுத்து அனுப்பிவிட்டான். காசிபரும் தட்சகனிடத்தில் இரத்தினத்தைப் பெற்றுக்கொண்டு தன் ஞானதிருஷ்டியால் அரசனுக்கு அற்பாயுசுதானென்று தெரிந்துகொண்டு மௌனமாய் வீடுபோய்ச் சேர்ந்தான். அந்தக்ஷணத்திலேயே தட்சகன் பாம்புகளையழைத்து நீங்களெல்லாரும் முனிவர் வேஷந்தரித்துப் பரிக்ஷித்துமஹாராஜாவுக்குக் காணிக்கையாகப் பழங்களை யெடுத்துக்கொண்டுபோய்க் கொடுங்கள் என்று சொல்ல, அவர்கள் கொண்டுபோன ஒரு இலந்தைப்பழத்திலே புழுவடிவம்கொண்டு அரசனைக் கடிக்கும்படியாக உட்கார்ந்திருந்தான். அந்தப் பாம்புகளும் பழங்களை யெடுத்துக்கொண்டுபோய் இராஜாவுக்குக் கொடுத்தன. பரிட்சித்துமஹாராஜா பிராமணரூபங்கொண்ட சர்ப்பங்கள் கொடுத்த பழங்களையெல்லாம், மந்திரத்தில் சிறந்த பிராமணர்களுக்குக் கொடுத்துவிட்டு, அவைகளில் பெரிதாயிருந்த ஒரு பழத்தைத்தானெடுத்துக்

கையில் வைத்துக்கொண்டான். இந்தச் சமயத்தில் சூரியன் மலைவாயில் விழுந்தது. அப்பொழுது அங்கிருந்த ரிஷிகளும், பிராமணர்களும், ராஜாக்களும், மற்றுமுள்ளவர்களும், ஓ! ஓ! ரிஷிவாசகம் பொய்யாய்ப் போய்விட்டதென்று சொல்லிக்கொண்டார்கள். உடனே அரசன் கையிலிருந்த பழத்திலிருந்து ஒரு சிவந்த புழுவானது யாவரும் பார்க்கும்படியாக வெளியில் வந்தது. அரசன் அந்தப் புழுவை யெடுத்து, இந்தப் புழுத்தானா என்னைக் கடிக்கப் போகிறது என்று சொல்லி அந்தப் பழத்தைத் தன் கழுத்தில் வைத்துக்கொண்டான். அந்தப் பழத்தில் முன்னேதானே புழுவடிவங்கொண்டிருந்த தட்சகன் வெளிப்பட்டு அரசன் தேகத்தைச் சுற்றிக்கொண்டான். உடனே பக்கத்திலிருந்தவர்களெல்லாரும் பயந்து ஓடிப்போனார்கள். அரசனும் விஷாக்கினியாலே மண்டபத்தோடுகூட எரிந்து சாம்பலாய்விட்டான். பின்பு அரசனுடைய புரோகிதர்களெல்லாரும் அவனுக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளைச் செய்து முடித்தார்கள். மந்திரிமார்கள் அரசன் புத்திரனாகிய ஜனமேஜயனுக்கு உலகத்தைப் பரிபாலிக்கும்படி பட்டங்கட்டினார்கள்.

பிராமணோத்தமர்களே கேளுங்கள். பரிக்ஷித்தை இரட்சிக்க வந்து, தட்சகனிடத்தில் பொருளை வாங்கிக்கொண்டு திரும்பிப் போன காசிபர் சமாசாரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அவன் போனவிடங்களிலெல்லாம் யோக்கியர்களாலும், ஜனங்களாலும் நிந்திக்கப்பட்டுத் தேசங்களெல்லாஞ் சுற்றிவந்தான். இவன்போன ஊரிலுள்ள ஜனங்களும், ஆச்சிரமங்களிலுள்ளவர்களும், இவனை யடித்துத்துரத்தி யிடங்கொடாமலிருந்த படியால், கடைசியில் அவன் சாகல்யமஹாரிஷியைச் சரணமடைந்து, வணங்கி ஐயா! சகலமும் தெரிந்தவிஷ்ணு பக்தரான மஹாரிஷியே நான் போன விடங்களிலுள்ள பிராமணர்களும், முனிவர்களும், மித்திரர்களும், மற்றுமுள்ளவர்களும், நிந்தித்துத்துரத்தி யடிக்கிறார்கள் இதற்குக் காரணந்தெரியவில்லை. நான் பிரமஹத்தி, சுராபானம், சொர்ணஸ்தேயம், குருதல்பகமனம், அவர்களுடன் கூடியிருக்கிற பாபங்களாகிய பஞ்சமஹாபாதகங்களை ஒருபொழுதும் செய்திலேன். மற்றைய பாபங்களையுஞ் செய்ததாக எனக்குத் தோன்றவில்லை. அப்படியிருந்தும் பந்துக்கள்கூட வீணாய் நிந்திக்கிறார்களே; சுவாமீ நான் செய்திருக்கிற பாபம் இன்னதென்று உமக்குத்

தெரியுமானால் எனக்குச் சொல்லவேண்டும். என்று கேட்கச் சாகல்யரும் க்ஷணகாலம் யோசித்துச் சொல்லுகிறார் அப்பா ! நீ பரிக்ஷித்தனைத் தட்சகனினின்றுங் காப்பதற்குப் போகும் பாதி வழியில் தட்சகன் பேச்சைக்கேட்டுத் திரும்பிவந்து விட்டாயல்லவா ? விஷம், ரோகம் முதலானவைகளால் பிடிக்கப்பட்டவர்களைச் சிகிச்சைபண்ணச் சக்தியுள்ளவன் காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாற்சரியம் ஆகிய துர்க்குணங்களினால் காப்பாற்றாமல் விட்டுவிட்டால் பஞ்சமஹாபாதகனென்றும், அவனுக்குப் பிராயச்சித்தமில்லையென்றும் சொல்லுகிறார்கள். கன்னிகையை விக்கிரயம்பண்ணுகிறவனுக்கும், குதிரை விக்கிரயம் பண்ணுகிறவனுக்கும், செய்த நன்றி மறக்கிறவனுக்கும், சாஸ்திரங்களில் பிராயச்சித்த மேற்பட்டிருக்கிறது. விஷரோகாதிகளால் பிடிக்கப்படுகிறவர்களைச் சக்தியிருந்தும் காவாதவனுக்குப் பதினாயிரம் பிராயச்சித்தம் பண்ணிக்கொண்டாலும் பரிசுத்தமாகிறதில்லை. அவனோடு பேசவுங்கூடாது, அவனைப் பார்க்கவுங்கூடாது, அவனோடு பந்தி போஜனம் பண்ணவுங்கூடாது. புண்ணியவானும், தார்மிகனும், விஷ்ணுபக்தனும், மஹாபோக்கியனும், சாதுர்வர்ணங்களைக் காப்பாற்றுமான பரிக்ஷித்து வியாசபுத்திரரான சுகமுனிவரிடத்தில் ஹரிகதையைப் பக்தியோடு கேட்டிருந்தான். அப்பேர்ப்பட்ட இராஜனை தக்ஷகன் பேச்சைக்கேட்டு இரட்சியாமல் வந்துவிட்டபடியினால் தான் உன்னை பந்துக்கள்கூட நிந்திக்கிறார்கள். பரிக்ஷித்துமஹாராஜன் க்ஷணத்துக்குள்ளே சாகிறவனாகக் காணப்பட்டாலும் அவன் சாகிறபரியந்தம் புத்திசாலியாகிய நீ சிகிச்சைபண்ணியிருக்கவேண்டியதல்லவா ; உலகத்தில் சாகக்கிடக்கிற ஒருவனுக்கு அவன் மூச்சுப்போகிறவரைக்கும் வைத்தியஞ் செய்யவேண்டியது அவசியமென்றும், அது பலியாமற்போனால் அது காலகதியென்றும் வைத்தியந்தெரிந்த பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் வைத்தியஞ்செய்யச் சக்தியிருந்தும் பாதிமார்க்கத்தில் திரும்பிவிட்டபடியால் நீயே அவனைக் கொன்றுவிட்டாயென்று சொல்லலாம் என்று சொல்லச், சுவாமீ நான் இந்தப் பாபத்தினின்றும் விடுபட்டு என் பந்துக்களாலும், மித்திரர்களாலும் ஏற்றுக்கொள்ளும்படி கிருபைகூர்ந்து செய்தருளவேண்டும் என்று கெஞ்சினான். சாகல்யர் கொஞ்சநேரம் தியானத்திலிருந்து, அப்பா காசிபா! இந்த பாவம் போகும்படியான உபாயஞ் சொல்லுகிறேன் ; நீ அதைத் தாமதியாமல் சீக்கிரஞ் செய். தெட்சணசமுத்திரத்தில் சேது ரூப

மான கந்தமாதனத்தில் காயத்திரி, சரஸ்வதி யென்று இரண்டு தீர்த்தங்களிருக்கின்றன ; அதில் ஸ்நானம்பண்ணின வுடனே நீ பரிசுத்தனாய் விடுவாய் ; அந்தத் தீர்த்தத்தின் ஜலக்காற்று எவன்மேல் படுகிறதோ அவன் சமஸ்தபாபங்களையும் போக்கிச் சுவர்க்கமடைகிறான். ஆகையால் நீ அந்தத்தீர்த்தங்களுக்குப் புறப்பட்டுப்போ என்று சொல்லக், காசிபர் சாகல்யரை நமஸ்கரித்துப், போய்வருகிறேனென்று விடைபெற்றுக்கொண்டு கந்தமாதனம்போய், அந்தத்தீர்த்தங்களையும், சண்டபாணியாகிய பைரவரையும் வந்தனம்பண்ணிச் சங்கற்பபூர்வமாக ஸ்நானம்பண்ணின வுடனே, பாபவிமோசனமடைந்து, அத்தீர்த்தக்கரையில் கொஞ்சநாள் தங்கியிருந்தான். அப்படியிருக்கையில் சர்வாபரண பூஷிதைகளாயிருக்கிற காயத்திரியும், சரஸ்வதியும அவனுக்கெதிரில் வந்து நின்றார்கள். அவர்களைக்கண்டு பக்தியுடன்வணங்கி அம்மா ! ரூபயௌவனசாலிகளான நீங்கள் யாரென்று கேட்டான். அவர்கள் காசிபனை நாங்களிருவரும் பிரம்மதேவன் பத்தினிகளான காயத்திரீ சரஸ்வதிகள். இந்தத்தீர்த்த ரூபமாக நாங்கள் இங்கேயெப்பொழுது மிருந்துகொண்டிருக்கிறோம். இந்தத்தீர்த்தத்தில் நீ ஸ்நானம்பண்ணியிருப்பதால் நாங்கள் உன்னிடத்தில் பிரீதியாய் வந்திருக்கிறோம். உனக்கு வேண்டுமென்கிற வரத்தைக் கேட்டுக்கொள். இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுக்கு நாங்கள் அபீஷ்டசித்தியைக் கொடுப்போம் என்று சொல்லக் காசிபர் சிறந்தவாக்கியங்களால் அவர்களைத் துதிக்கத்தொடங்கினான். சதுரானனுக்குப் பத்தினிகளாயும், ஜகத்துக்கு மாதாக்களாயும், வித்தியா சொரூபிகளாயும், சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகாரணிகளாயும், வேதமாதாக்களாயும் ஹவ்விய கவ்விய சொரூபிகளாயும், சூரிய சந்திரர்களைக் கண்ணாகக் கொண்டவர்களாயும், சமஸ்த தேவர்களுக்கும் ஈசுவரிகளாயுமிருக்கிற உங்களை யெப்போதும் பஜிக்கிறேன். ஜகத்துக்கு ஹிதஞ்செய்கிற நீங்களிருவருமே பார்வதியும், இலட்சுமிதேவியும் ; ஜகத்சிருஷ்டி முதலான வியாபாரங்களெல்லாம் உங்களுடைய கண்களிலேயே யடங்கியிருக்கின்றன. உங்களுடைய விழிப்பே ஜகத்சிருஷ்டியும் கண்மூடுதலே ஜகத்பிரளயமுமாகும். உங்களைக் கண்டதனாலேயே நான் கிருதார்த்தனாய் விட்டேன். இந்தத் தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணிப் பாபவிமோசனமடைந்த என்னைப் பிராமணர்களும், முனிவர்களும், பந்துக்களும், அங்கீகாரஞ்செய்துகொள்ளவேண்டும். இனிமேல் பாபத்திலே புத்திபோகாமல்

தர்மத்திலேயே புத்தி யெப்பொழுதுஞ் செல்லவேண்டும். இதைத்தவிர வேறு வரமெனக்கு வேண்டியதில்லை யென்று சொல்ல, அப்பா! எங்களுடைய அனுக்கிரகத்தால் அப்படியே யாகட்டும், என்று சொல்லி யுடனே யந்தர்த்தானமாய் விட்டார்கள். காசிபரும் கிருதார்த்தராகித், தம்தேசம்போய் பந்துக்களாலும் பிராம்மணர்களாலும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

ரிஷீசுவரர்களே காசிபருக்குப் பாபவிமோசனஞ் செய்த காயத்திரீ சரஸ்வதி தீர்த்தங்களின் மகிமையைக் கூறிவிட்டேன். இந்த அத்தியாயத்தைப் பக்தியுடன் படிப்பவரும் கேட்பவரும் அந்தத் தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணின பலனை யடைகிறார்கள்.

நாற்பத்தோராவது அத்தியாயம்

முற்றிற்று.

நாற்பத்திரண்டாவது

ரிணமோசன முதலிய தீர்த்தமகிமை உரைத்த

அத்தியாயம்.

கேளுங்கள் முனிவர்களே! நானிதுவரையி லுங்களுக்குச் சொல்லாதனவாய்ச் சேதுமத்தியிலிருக்கிற ரிணமோசனம் முதலான தீர்த்தங்களின் மகிமையைச் சொல்லுகிறேன். ரிணமோசனமென்கிற ஒரு புண்ணியதீர்த்தமிருக்கிறது. அதில் ஸ்நானம்பண்ணினவர்களுக்கு மூன்று வகையான கடன்களுந்தீர்ந்து விடுகிறது. துவிஜனாய்ப் பிறந்தவனுக்கு ரிஷிகடன், தேவகடன், பிதிர்க்கடன் என்று மூன்றுகடன் உண்டு. வேதாத்தியயனம் பண்ணாதவனுக்கு ரிஷிகடன் உண்டாகிறது. யக்ஞாதிகள் செய்யாததினால் தேவர்களுக்குக் கடனாளியாகிறான். புத்திரனை யுண்டுபண்ணாமல்போனால் பிதிர்க்களுக்குக் கடனாளியாகிறான். வேதாத்தியயனம், யாகம், புத்திரோத்பாதன மிவைகளில்லாமலே ரிஷி, தேவர், பிதிர்க்கடன்களைத் தீர்க்கவிரும்புகிறவன் இந்த ரிணமோசன தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினால் அந்தக்கடன்கள் உடனே தீர்ந்துபோகின்

றன. இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவனிடத்தில் ரிஷி தேவர் பிதிர்க்களுக்கு உண்டாகிற திருப்தி, பிரமசரியம், யாகம், புத்திரோத்பாதனம் செய்கிறவனிடத்தில் உண்டாவதில்லை. மேலுமிந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினால் தரித்திரனாய்க் கடனாளியாயிருக்கிறவன் கடனெல்லாம் நீங்கிச்சம்பத்தை யடைகிறானென்பதில் சந்தேகமில்லை. ஸ்நானம்பண்ணுகிறவர்களுக்கு ரிணமோசனமுண்டாகிறபடியால் இந்தத் தீர்த்தத்துக்கு ரிணமோசன தீர்த்தமென்று பேர் உண்டாயிற்று. ஆகையால் எவ்வகையான கடனையுடையவர்களும், கடன் தீர்வதற்காக ஸ்நானம்பண்ணித் தீரவேண்டும்.

பாண்டவதீர்த்தமென்றொரு தீர்த்தமிருக்கிறது. தர்மபுத்திராதி பஞ்சபாண்டவர்களுமதில் ஸ்நானம்பண்ணி யிஷ்டார்த்த ஸித்தியடைந்தார்கள். இந்தத் தீர்த்தத்தில் பதினாயிரங்கோடி உத்தமதீர்த்தங்களும், ஆதித்தியர்களும், வசுக்களும், ருத்திரர்களும், மருத்துக்களும், சாத்தியர்களும் சதாவாசம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதில் ஸ்நானம்செய்து பிதிர்க்களுக்கும், தேவர்களுக்கும் தர்ப்பணம்பண்ணி பாவனமான அதன் கரையில் ஒரு பிராம்மணனுக்காவது அன்னம் போட்டால் அவன் இகத்தில் சகல பாபங்களும் நீங்கிப் போகபோக்கியங்களை யனுபவித்துவிட்டுப், பரத்தில் பிரமலோகம்போய்ச்சிறந்து வாழ்ந்திருக்கிறான். இந்தத் தீர்த்தத்தில் புண்ணியகாலங்களில் ஸ்நானம்பண்ணுகிறவன் எந்த வருணத்தில் பிறந்தவனாயிருந்தாலும் நரகத்தைப்பாராமலே முக்தியடைகிறான். இத்தீர்த்தத்தைக் காலையிலும், மாலையிலும் ஸ்மரிக்கிறவன் கங்காதி ஸர்வதீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணினவனாய் விடுகிறான், சந்தேகமேயில்லை. இந்தத் தீர்த்தமானது புக்தியையும், முக்தியையும் கொடுக்கிறது.

தேவதீர்த்தம் என்கிற ஒரு புண்ணியதீர்த்தமிருக்கிறது. இந்திராதி தேவர்கள் தைத்தியர்களைச் செயிக்கும் நிமித்தம் இதன் கரையில் யாகஞ்செய்தார்கள். இதில் ஸ்நானம் பண்ணுகிறவன் சகல பாபங்களுமொழிந்து, சர்வகாமங்களையுமடைந்து, அழிவில்லாத லோகங்களையுமடைகிறான். ஸ்திரீயாகட்டும், புருஷர்களாகட்டும் இதில் ஸ்நானம்பண்ணினால் அவர்கள் ஜன்மமுதல்கொண்டு செய்திருக்கிற சகல பாபங்களுந்தீர்ந்து போகின்றன. விஷ்ணுவானவர் தேவர்களுக்கெல்லாம் ஆதியாகவிருப்பதுபோல இந்தத்தீர்த்

தமானது தீர்த்தங்களுக்கெல்லாம் ஆதியாயிருக்கிறது. ஆயுவருஷம் விடாமல் அக்கினிஹோத்திரம் பண்ணுகிறவர்களுக்கும் இதில் ஒருவேளை ஸ்நானம் பண்ணுகிறவனுக்கும் புண்ணியம் சமமாக இருக்கிறது. இந்தத் தேவதீர்த்தத்துக்குப் போவதும், அதில் ஸ்நானம்பண்ணுவதும், அதன் கரையில் தானம்பண்ணுவதும், வாசம்பண்ணுவதும் மனிதர்களுக்குத் துர்லபம். தேவர், ரிஷி, பிதுர்க்கள் சேவித்துக் கொண்டிருக்கிற இதன் கிட்டப்போனால் அவன் அசுவமேதம்பண்ணின பலனையடைந்து விஷ்ணுலோகம் போகிறான். இரண்டு, மூன்று, ஐந்து, அல்லது ஆறுதினங்கள் இதன் கரையில் வசித்தால் அவன் இறப்புப்பிறப்பு அற்று உத்தமமான சித்தியை யடைகிறான். மூன்றுநாள் ஸ்நானம்பண்ணினவன் வாஜபேய பலனையடைகிறான். தேவதீர்த்தமென்று ஸ்மரித்தவுடனே சகல பாபங்களும் நீங்கிப்போகின்றன. இந்தத் தீர்த்தக் கரையில் பிதுர்க்களையும் தேவர்களையும் பூஜித்தவன் சகல யக்ஞ பலனையடைந்து, சகல மனோபீஷ்ட சித்தியையும் அடைகிறான். இந்தத் தீர்த்தத்துக்குச் சமமான புண்ணியதீர்த்தம் இருந்ததுமில்லை. இருக்கப்போகிறதுமில்லை. இகபரபலன்களை அபேட்சிக்கிற முமுட்சுக்கள் கட்டாயம் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணவேண்டும். இந்தத் தீர்த்தத்தின் மகிமையையுங்களுக்குச் சுருக்கமாகச் சொன்னேன். விஸ்தாரமாகச் சொல்ல என்னால் முடியாது.

சுக்கிரீவதீர்த்தத்தைப் பற்றியுங்களுக்கு நான் சொல்லுகிறேன். இதில் பக்தியோடு ஸ்நானம் பண்ணினவர்கள் சூரியலோகம் போய்ச்சேருவார்கள். இதில் ஸ்நானம்பண்ணினால் பிரமஹத்தியாதி பாபங்கள் நீங்கி அசுவமேத பலனை யடைகிறான். அந்தத் தீர்த்தத்துக்குப்போனால் ஆயிரம்கோதான பலனும் அதை நினைத்தால் வேதபாராயணம் பண்ணின பலனும், அதன் கரையிலொருநாள் வாசஞ்செய்தால் பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளாமலே மஹாபாதக நிவர்த்தியும், அதில் ஸ்நானம்பண்ணிப் பிதுர்க்களுக்குந் தேவர்களுக்குந் தர்ப்பணம்பண்ணினால் அப்தோர்யாமம் என்கிற யாகத்தினெட்டுமடங்கு பலனும், நரமேதம்பண்ணின பலனும் வரும். இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினால் பூர்வஜன்மஞானமுண்டாகும். ரிஷீசுவரர்களே உங்களுக்குச் சுக்கிரீவதீர்த்த மகிமையைச் சொல்லிவிட்டேன். நீங்கள் இஷ்டசித்தியடையும் பொருட்டுச் சுக்கிரீவதீர்த்தம் போகவேண்டும்.

நளதீர்த்தமகிமையைக் கேளுங்கள். இந்த நளதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினால் சொர்க்கலோகம் போய்ச்சேர்வான். இதில் ஒருதடவை ஸ்நானம் பண்ணினதினாலேயே சமஸ்த பாபங்களும் நீங்கி அக்கினிஷ்டோம, அதிராத்திர முதலான யாகபலன்களையும் அடைகிறான். மூன்றுநாள் அதன் கரையில் வசித்துப் பிதுர்க்களுக்குத் தர்ப்பணம்பண்ணினால் அவன் சூரியனைப்போலத் தேஜஸையும், அசுவமேத பலனையுமடைகிறான்.

மஹாபாதக நிவர்த்தகமான நீலதீர்த்த மகிமையைக் கேளுங்கள். இந்தத்தீர்த்தம் அக்கினி குமாரனாகிய நீலனால் நிர்மாணம் பண்ணப்பட்டது. இதில் ஸ்நானம்பண்ணுகிறவன் சமஸ்தபாபங்களினின்றும் விடுபட்டு, வெகு தட்சணைகொடுத்துச் செய்யப்பட்ட யாகத்தினுடைய பத்துமடங்கு பலனையடைந்து, சகல போக போக்கியங்களை யனுபவித்து அந்தத்தில் அக்கினிலோகத்தை யடைகிறான்.

கவாக்ஷதீர்த்த மகிமையைக் கேளுங்கள். இதில் ஸ்நானம்பண்ணினவன் நரகத்துக்கே போகிறதில்லை. அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் தேவேந்திர பதவியைப்பெறுகிறான். கஜன், கவயன், சரபன், குமுதன், ஹரன், பனசன், முதலிய எல்லாவானரங்களாலும் நிர்மாணம் பண்ணப்பட்டுப் புண்ணியமான கந்தமாதனத்திலிருக்கிற தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணுகிறவன் முத்தனாய் விடுகிறான்

விபீஷணதீர்த்தத்தின் மகிமையைக் கேளுங்கள். இதில் ஸ்நானம்பண்ணுகிறவன் மஹாபாதகங்கள், மஹாதுக்கங்கள், மஹாரோகங்கள் மஹாதரித்திரங்கள் நீங்கித், துர்சொற்பனங்களில்லாமல், கும்பீபாக முதலான நரக துன்பமில்லாமல் இறப்புப்பிறப்பற்ற வைகுண்டம்போய்ச் சேருகிறான். விபீஷணனுடைய மந்திரிகளால் செய்யப்பட்ட நாலு தீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணுகிறவன் மஹாபாபங்களினின்றும் விடுபடுகிறான். சரயுநதியானது ஸ்ரீராமநாதராகிய மஹாதேவனைச் சேவிக்கும்பொருட்டு எப்பொழுதும் அங்கே வசித்துக்கொண்டிருக்கிறது. அதில் ஸ்நானம் பண்ணுகிறவர்கள் ஸமஸ்தமான பாபங்களினின்றும் விடுபட்டுச் சகல யக்ஞம், தபசு, தீர்த்தஸ்நானம் பண்ணின பலன்களை யடைகிறான்.

உபவிதாந்திரமென்கிற தீர்த்தத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களும், பிதுர்த்தேவதைகளும், சகல முனிவர்களும், யக்ஷர் சித்தர், கின்னரர்களும், ஸ்ரீராமசந்திரனுடைய ஆக்ஞையால் வசித்துக்கொண்டிருக்கிறார்களென்று பிரம்மதேவர் சொல்லியிருக்கிறார். இந்தப் புண்ணியமான கந்தமர்தனத்தில் பதினாயிரங் கோடி தீர்த்தங்களும், கங்கை முதலான நதிகளும், ஸப்தசமுத்திரங்களும் எப்போதும் வசிக்கின்றன. அதுவும் தவிர புண்ணியரிஷி யாச்சிரமங்களும், புண்ணியமான காடுகளும், உத்தமமான சிவக்ஷேத்திரங்களும் விஷ்ணுக்ஷேத்திரங்களும், விளங்கிக்கொண்டிருக்கின்றன.

கேளுங்கள் ரிஷீசுவரர்களே; இவ்வகையான தீர்த்தங்களின் மகிமையைச் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தை பக்தியோடு படிப்பவரும் கேட்பவரும் துக்கங்களெல்லாம் நீங்கி பிறப்பிறப்பற்ற முக்தியை யடைகிறார்கள்.

நாற்பத்திரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

நாற்பத்துமூன்றாவது

இராமநாதருடைய மகிமையுரைத்த அத்தியாயம்

கேளுங்கள் முனிவர்களே! கேட்டவர்களுடைய சகல பாபங்களையும் போக்குகிற இராமநாதருடைய மகிமையைச் சொல்லுகிறேன். தசரதராமனாலே பிரதிஷ்டைசெய்யப்பட்ட இராமநாதலிங்கத்தை, எப்பொழுதாவதொருதரம் பார்ப்பவன் சிவசாயுஜ்யமென்கிற முக்தியை யடைகிறான். கிருதயுகத்தில் பத்துவருஷம் பண்ணியதபபலனது, திரேதாயுகத்தில் ஒருவருஷத்திலும், துவாபரயுகத்தில் ஒரு மாசத்திலும், கலியுகத்திலொரு நாளிலும் சித்தியாகிறது. கலியுகத்தில் கோடிநாள் செய்யப்பட்ட புண்ணியபலன் இராமநாதரை ஒரு தரம் தரிசித்தவன் நிமிஷத்தோனும் அடைகிறான். இதில் சந்தேகம் கிடையாது. இராமநாதலிங்கத்தில் சகலமான தீர்த்தங்களும் ஸமஸ்தமான தேவர்களும், முனிவர்களும், பிதுர்க்களும் நிறைந்திருக்கிறார்கள். இந்த லிங்கத்தை ஒருகாலமாவது இரண்டுகாலமாவது மூன்றுகாலமாவது அல்லது எப்பொழுதுமாவது ஸ்மரித்துத் துதித்தால் சமஸ்தமான பாபக்கூட்டினின்றும் விடுபட்டு, சச்சிதானந்த அத்துவைதரான பார்வதி சமேதராகிய ருத்திரமூர்த்தியை யடைகிறான். இராமசந்திரன் பூஜைசெய்த இராமலிங்கத்தைஸ்மரித்தவனுக்கு யமபீடையுங்கிடையாது. அந்த லிங்கத்தை ஒருதடவை அர்ச்சனை செய்தவர்களை மனிதர்களென்று நினைக்கக்கூடாது. ருத்திரர்களாகவே நினைக்கவேண்டியது. இந்த லிங்கத்தை அர்ச்சனை பண்ணாதவன் வெகுகாலம் நிஸ்ஸாரமான சம்சார துக்கத்தில் முழுகிக்கிடக்கிறான். இந்த லிங்கத்தை எப்பொழுதாவது ஒருதடவையாவது, பார்க்கிறவர்களுக்குத் தானம், விரதம், தபசு, யாகம் முதலானவை யென்னத்துக்கு? இந்த லிங்கத்தை ஒருக்ஷணமாவது நினையாதவன் அஞ்ஞானியாயும், பாபியாகவும், ஊமையாகவும், குருடனாகவும், செவிடனாகவும், ஆகிறான். அவனுக்கடிக்கடி ஆபத்துக்கள் வந்துகொண்டிருக்கும்; அவனுடைய பிள்ளை பெண்டாட்டி முதலானவர்கள் நாசமடைவார்கள். இராமநாத மஹாலிங்கத்தை ஒருதரம் கண்டால் காசிக்குத்தான் போவானேன்? கயையில்தான் பிண்டங்கொடுப்பானேன்? பிரயாகையில்தான் ஸ்நானம்பண்ணுவானேன்? துர்லபமான மனுஷஜன்மத்தை யடைந்து இராமநாத மஹாலிங்கத்தைப் பூஜைபண்ணுகிறவர்களே கிருதார்த்தர்கள். அவர்களுடைய ஜன்மமே சபலம்; இராமநாதலிங்கத்தைப் பூஜைபண்ணினால் பிரம, விஷ்ணு, இந்திராதி தேவர்களை வணங்குவானேன்?

இராமநாதரைப் பக்தியுடன் வணங்குவோர் திருவடிகளை ஸ்மரித்து வணங்கிப் பூஜைபண்ணுகிறவர்கள் துக்கங்களையடைகிறதில்லை, யமன்வீட்டுக்கும் போகிறதில்லை. இந்த லிங்கத்தைக் கண்டமாத்திரத்திலே ஆயிரம் பிரம்மஹத்திகளும், பதினாயிரம் சுராபான தோஷமும், கோடிஜன்மங்களில் செய்திருக்கிற பாபங்களும் நாசமடைகின்றன. சதாபோகத்தில் இச்சைப்படுகிறவர்களும், தேவேந்திர பதவியை விரும்புகிறவர்களும் இராமலிங்கத்தைச் சந்தோஷத்தோடும் ஒருதரம் தரிசிக்கக்கடவர்கள். சகவாசத்தாலேயாவது, சந்தோஷத்தினாலேயாவது, பேராசையாலேயாவது, பயத்தினாலேயாவது இராமநாதரை ஸ்மரிக்கிறவன் இகபரங்களில் துக்கத்தையே யடையமாட்டான். இராமலிங்கத்தைக் கீர்த்தனம்பண்ணுகிறவனும், அர்ச்சனை பண்ணு

கிறவனும் சிவசாரூபத்தை யடைகிறான். இதில் சந்தேகமேயில்லை. கொழுந்துவிட்டெரிகிற அக்கினியானது விறகுகளை க்ஷணத்துக்குள் சாம்பலாக்கிவிடுகிறதுபோல் இராமநாதருடைய தரிசனமானது பாபங்களையெரித்துச் சாம்பலாக்கிவிடுகிறது. இராமலிங்கத்தைப் பக்திபண்ணுதலானது எட்டுவிதம். அவையாவன; அவருடைய பக்த ஜனங்களிடத்தில் விசுவாசம் வைத்தல்; அவர்களைச் சந்தோஷத்தோடும் பூஜைபண்ணுதல்; தான் பக்தியோடு இராமலிங்கத்தைப் பூஜித்தல், அந்த லிங்கத்துக்கு நியமகயிங்கரியஞ்செய்தல்; அதனுடைய மஹாத்மியங்களைக் கேட்பதில் ஆசைவைத்தல், அதைக் கேட்கும்போது கண்களில் ஆநந்தபாஷ்பம் பொழிதல், மயிர்கிளிர்த்தல், ஸ்வரம் பேதப்படுதல் முதலிய பக்திக்குறிகளையடைதல்; அந்த லிங்கத்தைச் சதா ஸ்மரித்தல்; அந்த லிங்கத்தை யாசிரயித்தே ஜீவித்தல்; என்பவைகளாம். இந்த எண்வகை பக்திகள் மிலேச்சனிடத்திலிருந்தாலும் அவனே முக்தி வீட்டுக்குப் பங்காளியாகிறான். ஜிதேந்திரியர்களான யதிகளுக்கு, வேதாந்த சிரவணத்தினாலே பக்தியுண்டாய், அதனாலே பிரமஞானம் பிறந்து, முத்திகிடைக்கிறது; அந்த முக்தியானது, விரக்தியுண்டாகாமலும், யதியாகாமலும், வேதாந்த சிரவணம்பண்ணி ஞானமடையாமலும், எல்லாவருணத்தாருக்கும், எல்லா ஆசிரமத்தாருக்கும், இராமநாதரைக் கண்டமாத்திரத்திலே வருகிறது. இராமேசுரத்தில் வசிக்கிற கிடம், கிருமிகள், தேவர்கள், முனிவர்கள், தபோதனர்கள் எல்லாரும் இராமநாதருடைய பிரசாதத்தால் தாரதம்மியமில்லாமல் சமமான அந்தஸ்தை யடைகிறார்கள். நான் பாபம்பண்ணிவிட்டேனென்று ஒருவன் பயப்படவும்வேண்டாம், நான் புண்ணியம் பண்ணினேனென்று கருவமடையவும் வேண்டாம். இராமநாதரைத் தரிசித்தமாத்திரத்திலிருவரும் சமனாய்விடுகிறார்கள். இராமநாதலிங்கத்தைப் பக்தியோடு தரிசிக்கிறவனுக்குச் சதுர்வேதங்களை யோதினவனும் சமானமாக மாட்டான். இராமநாதரைப் பக்திபண்ணுகிறவன் நாயை அடித்துத் தின்கிறவனாயிருந்தாலும், அவனுக்கே தானங்களெல்லாம் பண்ணவேண்டும்; இராமநாதரைப்பக்தி பண்ணாதவன் மூன்றுவேதமறிந்த பிராம்மணனாயிருந்தாலும் அவனுக்குத் தானம்பண்ணப்படாது. இந்திரியங்களை ஜயித்து யோகாப்பியாசஞ்செய்கிற முனிவர்கள் அடைகிற கதியை, இராமநாதரைத் தரிசிக்கிறவர்களும் அடைகின்றனர். இராமநாத சிவக்ஷேத்திரத்தில் வசிக்கிறவர்கள் எல்லாரும், ஐந்து முகங்களை

யுடையவர்களாகவும், சந்திரசேகரர்களாகவும், நாகாபரணதாரிகளாகவும், விருஷபதுவஜர்களாகவும், முக்கண்ணர்களாகவும், பஸ்மோத்தூளித ஸர்வாங்கர்களாகவும், கபாலந்தரித்தவர்களாயும், ஆய்விடுகிறார்கள் சந்தேகமேயில்லை. இராமேசுவரத்துக்குச் சந்தோஷத்தோடு போகிறவர்கள் அடிக்கு ஒரு அசுவமேத பலனை யடைகிறார்கள். இராமசேதுவுக்குப்போய் இராமநாதரை உத்தேசித்து ஒரு பிராம்மணனுக்கு ஒருபிடி அன்னம் போடுகிறது காடு, மலை, வனங்களோடுகூடிய பூமியைத் தானம்பண்ணினதற்குச் சமானம். இராமநாதருக்குப் பத்திரம், புஷ்பம், பலம், ஜலம், இவைகளைப் பக்தியோடு கொடுக்கிறவனை இராமநாதர் இரவும், பகலும் காப்பாற்றுவார். கருணாமூர்த்தியாகிய பார்வதீநாதராயிருக்கிற இராமநாதரிடத்தில பக்தியாயிருப்பதும், அவரைப் பூஜை பண்ணுகிறதும், அவரை ஸ்மரிக்கிறதும்கூட மனுஷர்களுக்குத் துர்லபம்; அந்த முக்கண்ணரான இராமநாதரைப் பக்தியோடு சரணமடைகிறவர்களுக்கு இகபரலாபங்களும் ஜயமுங்கிடைக்கின்றன. இராமநாத மஹாலிங்கத்தினிடத்தில் இரவும் பகலும் எவன் சிந்தையை வைக்கிறானோ அவனே தன்னியன். அந்த லிங்கத்தைப் பக்தியோடு பூஜைபண்ணுகிறவனே புத்தி முக்திகளுக்கும் இராஜ்யத்துக்கும் அருகனாகிறான். இந்த லிங்கத்தை யர்ச்சனை பண்ணுகிறதற்குச் சமானமான புண்ணியமேகிடைக்கிறது துர்லபம். இந்த லிங்கத்தை அஞ்ஞானத்தாலே துவேஷிக்கிறவன் பதினாயிரம் பிரம்மஹத்திதோஷத்தை யடைந்தவனாகிறான். அவனோடே பேசினாலும் நரகம் வரும். வேதங்களெல்லாம் இராமநாதனையே சொல்லுகின்றன. யாகங்களெல்லாம் இராமநாதனைக்குறித்தே செய்யப்படுகின்றன. எல்லாம் ராமநாதரைக்குறித்தே செய்யப்படுகின்றன. இராமநாதரைத் தவிர வேறுபொருளில்லை. ஆகையால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இராமநாதரையே ஆசிரயிக்கவேண்டும். இராமநாத மஹாலிங்கத்தைச் சரணமடைந்தால் அவனுக்குத் துர்க்கதி கிடையாது; சிவலோகம் கைக்குள்ளே யிருக்கிறது. சமஸ்தமான யாகம், தபசு, தானம், தீர்த்தஸ்நானம் பண்ணினதினால் வருகிற பலனைவிடக் கோடிபங்கு பலன் இராமநாதரைச் சேவிப்பதினால் வந்துவிடுகிறது. இராமநாதலிங்கத்தை யிரண்டு நாழி சிந்திக்கிறவன் இருபது குலங்களோடுகூடச் சிவலோகம்போய் மகிமையோடு வாழ்கிறான். ஒருநாள் தரிசிக்கிறவன் இவ்வுலகத்திலேயே சகல போகங்களையும் அனுபவித்துவிட்டு அந்தத்தில் ருத்திரனாய்

விடுகிறான். காலையிலெழுந்திருந்து இராமநாதரைத் தியானிக்கிறவன் ஜீவன்முக்தனாய் விடுகிறான். இராமநாத மஹாலிங்கத்தைத் தரிசித்தவனைத் தரிசிக்கிறவனுக்குச் சகல பாபங்களும் போய்விடுகின்றன. இராமநாதரை மத்தியானத்தில் தரிசிக்கிறவனுக்கு ஆயிரசுராபான தோஷம் அந்த க்ஷணத்திலேயே போய்விடுகிறது. சாயங்காலத்தில் தரிசிக்கிறவனுக்குக் குருபத்தினியைச்சேர்ந்த பாபம் போய்விடுகிறது. சாயங்காலத்தில் இராமநாதரை ஸ்தோத்திரம் பண்ணுகிறவனுக்கு ஆயிரம் சொர்ணஸ்தேய தோஷம் அப்பொழுதே போய்விடுகிறது. தனுக்கோடி ஸ்நானமும் இராமநாதர் தரிசனமும் ஒருவனுக்குக் கிடைத்தால் அவன் காசிக்கு ஏன் போகவேண்டும்? இராமநாதரைச் சேவித்தும் கிடைக்காதது வேறெந்தத் தர்மஞ்செய்தாலும் கிடைக்கப்போகிறதில்லை. எப்பொழுதாவது ஒருதரம் இராமநாதரைத் தரிசியாதவன் தன் சொந்தத் தகப்பனுக்குப் பிறவாதவன். காலையிலெழுந்திருந்து மூன்றுதரம் இராமநாதரைத் தியானம் பண்ணுகிறவனுக்கு முதல் நாள் செய்த பாபம் அந்தக்ஷணமே அடியோடே நாசமாய்ப்போகிறது. பக்தர்களைக் காப்பாற்றுகிறதற்கு இராமநாதர் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கும்போது ஏ! ஜனங்களே ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? கருணைக்கிருப்பிடமான இராமநாதர் பிரசன்னரானால் சகல கஷ்டங்களும் சூரியனைக்கண்ட பனிபோல நீங்கிவிடுகின்றன. பிராணன்போகிற சமயத்தில் இராமநாதரை ஸ்மரிக்கிறவன் மறுபடியும் பூமியில் பிறவாமல் சிவனேயாய்விடுகிறான். இராமநாதா! மஹாதேவா! கருணாநிதியே! என்று ஸதா தியானம் பண்ணுகிறவனுக்குக் கலியால் பீடையில்லை. இராமநாதா! ஜகன்நாதா! தூர்ஜட, நீலலோகிதா! என்று உச்சரிக்கிறவனுக்கு மாயையினாலே துன்பங்கிடையாது. நீலகண்டா! மஹாதேவா! இராமேசுவரா! சதாசிவா! என்று தியானிக்கிறவன் காமத்தால் பீடிக்கப்பட மாட்டான். இராமேசுவரா! காலகாலா! காளகூடவிஷாசனா! என்று ஸதா சொல்லுகிறவன் கோபத்தாலே துன்பமடையவே மாட்டான். இராமநாதருடைய கோயிலைக்கட்டைகளால் கட்டுகிறவன் மூன்றுகோடி குலங்களோடு சொர்க்கத்தையும், செங்கல்லால்கட்டுகிறவன் பரமபதத்தையும், கருங்கல்லால் கட்டுகிறவன் பிரமபதத்தை, ஸ்படிகாதிகற்களால் கட்டுகிறவன் விமானத்திலேறிக்கொண்டு சிவலோகத்தையும், தாம்பிரத்தால் கட்டுகிறவன் சிவசாமீபத்தை அடைந்து, சிவனுடைய அர்த்தாசனத்தில் உட்காரும்

பெருமையையும், வெள்ளியால் கட்டுகிறவன் சிவசாரூபத்தையடைந்து சிவனைப்போலச் சதாசந்தோஷத்தையும், சொர்ணத்தால் கட்டுகிறவன் சிவசாயுஜ்யத்தையும் அடைகிறான். ஏழையானவன் மண்ணால் இராமநாதர் ஆலயத்தைக் கட்டுகிறதற்கும், தனிகனானவன் தங்கத்தாலே கட்டுகிறதற்கும் பயனொன்றே. இராமநாத மஹாலிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணிவைக்கிற மூன்று காலங்களிலும், காகள முதலான முகவாத்தியம், பாட்டு, நர்த்தன முதலியவை செய்துவைக்கிறவன் மஹாபாதகங்களினின்றும் விடுபட்டு ருத்திரலோகத்தில் பூஜ்யனாயிருக்குந் தன்மையை அடைகிறான். ருத்திராத்தியாயம், புருஷசூக்தம், திரிஸுபர்ணம், பாவமானியாதி பஞ்சசாந்தியையும் பிரீதியோடு ஜபிக்கிறவனும் பசுவின்பாலாலும் தயிராலும், நெய்யாலும், பஞ்சகவ்வியத்தாலும் அபிஷேகஞ்செய்துவைக்கிறவன், நரகத்தை யனுபவிக்கமாட்டான். இந்த மஹாலிங்கத்துக்கு நெய் அபிஷேகஞ் செய்விக்கிறவன் கற்பகோடி ஜன்மங்களிற்செய்த பாபங்களினின்றும் உடனே விடுபடுகிறான். சோவின் பாலால் அபிஷேகஞ் செய்விக்கிறவன் இருபத்தொருதலைமுறைகளை உத்தாரணம் பண்ணிக்கொண்டு சிவலோகம்போய் அவ்விடத்தில் பெருமையோடு வாழ்ந்திருப்பான். தயிரால் ஸ்நானம்பண்ணுவிக்கிறவன் சமஸ்த பாபங்களினின்றும் விடுபட்டு விஷ்ணுலோகம்போய்ச் சுகமாக வாழ்ந்திருப்பான். தேனால் ஸ்நானம் பண்ணுவிக்கிறவன் சகல பாபங்களையும் உதறிவிட்டுப் பிரமலோகம்போய்ச் சுகமாக வாழ்ந்திருக்கிறான். நல்லெண்ணெயாலபிஷேகஞ் செய்விக்கிறவன் குபேரலோகம்போய் வாழ்வான். கருப்பஞ்சாற்றால் அபிஷேகஞ்செய்விப்பவன் சந்திரலோகம்போய்ச் சேருவான். எலுமிச்சம்பழ ரசத்தாலும், மாம்பழச்சாற்றாலும் ஸ்நானம் பண்ணுவிப்பவன் பிதுர்லோகம் போவான். இளநீரால் ஸ்நானம் பண்ணுவிப்பவனுக்குப் பிரம்மஹத்தியாதி சகல பாபங்களும் தொலைந்து போகின்றன. வாழைப்பழத்தைப் பிசைந்து அபிஷேகஞ்செய்விப்பவன் சகல பாபங்களையும் நாசம்பண்ணிவிட்டு வாயுலோகம்போய் வாழ்வான். வடிகட்டின குளிர்ந்த ஜலத்தால் அபிஷேகஞ் செய்விப்பவன் வருணலோகம்போய் வாழ்வான். சந்தனங்கலந்த ஜலத்தைத் தாளபாத்திரத்தில் விட்டு அபிஷேகஞ் செய்கிறவன் கந்தருவலோகம்போய்ச் சுகித்திருப்பான். தாமரைத்தடாகத்து ஜலத்தைக்கொண்டு வந்து புஷ்பவாசனையூட்டித் தங்கரேக்குடன் கலந்து அபிஷேகம் செய்துவைக்கிறவன்

இந்திரலோகம்போய் அவனுடன் அர்த்தாசனத்தில் வீற்றிருந்து அவனோடு சந்தோஷமாக இருப்பான். பாதிரி, நீலோத்பலம், செங்கழுநீர், சுரபுன்னை, அலரி முதலிய புஷ்பங்களால் வாசனைகட்டிய நீராலே அபிஷேகஞ் செய்விக்கிறவன் பாபங்களினின்றும் விலகிச் சிவலோகம்போய்ச் சிறப்புடன் வாழ்ந்திருப்பான். ஏலம், கற்பூரம், விலாமிச்சைவேர் இவைகளால் வாசனைகட்டின சுத்தஜலத்தால் இராமநாதருக்கு அபிஷேகஞ் செய்து வைக்கிறவன் அக்கினிலோகத்துக்குப்போய்ச் சகல போகங்களையும் அனுபவிக்கிறான். கங்காதீர்த்தத்தைக் கொண்டுவந்து இராமநாதருக்கு அபிஷேகஞ் செய்துவைக்கிறவன் சிவன்கூடப் பூஜிக்கத் தக்கவனாகிறான், சந்தேகமேயில்லை. இராமநாதருடைய அபிஷேகத்துக்காக மண்குடங் கொடுக்கிறவன் நூறுவயது பூலோகத்தில் வாழ்ந்து போகபோக்கியங்களை யனுபவிக்கிறான். தாம்பிரகுடம் கொடுக்கிறவன் தேவேந்திரனாய் விடுகிறான். வெள்ளிக்குடம் கொடுக்கிறவன் பிரம்மலோகத்துக்கும், தங்கக்குடங் கொடுக்கிறவன் சிவலோகத்துக்கும், இரத்தினகுடம் கொடுப்பவன் சிவசமீபத்துக்கும் போகிறான். இராமநாதருடைய அபிஷேகத்துக்காகவும், நைவேத்தியத்துக்காகவும் கறவைப்பசுவைக் கொடுக்கிறவன் சிவலோகத்தை யடைந்து சிவசாரூப்பியத்தை யடைகிறான். இராமசேதுவே, தனுக்கோடியே, இராமநாதா! என்று சொல்லிக்கொண்டு எந்த ஜலத்திலாவது ஸ்நானம் பண்ணினால் அவன் சேது ஸ்நானபலனை யடைகிறான். இராமநாதருடைய ஆலயத்துக்குச் சாந்து பூசுகிறவனுடைய புண்ணியத்தை நூறுவருஷமானாலு மென்னால் சொல்லிமுடியாது. இராமநாதருடைய ஆலயத்தைப் புதுப்பிக்கிறவன் முன் சொன்னவனைவிட நூறு பங்கு அதிகமான பலனை யடைகிறான். ஜீரணமாய்க்கிடக்கிற இராமநாதர் கோவிலைப் பக்தியோடு கட்டிவைக்கிறவனுக்குப் பதினாயிரம் பிரம்மஹத்தி தோஷங்கள் நீங்குகின்றன. இராமநாதர் சந்நிதியில் சந்தோஷத்துடன் தீபங்களேற்றினால் அவன் மாயா படலத்தை யுடைத்துக்கொண்டு பிரம ஐக்கியத்தையடைகிறான். இராமநாதருக்கு நெய், எண்ணெய், பச்சைப்பயறு, சர்க்கரை, அரிசி, வெல்லமிவைகளைக் கொடுக்கிறவன் தேவேந்திர பதத்தையடைகிறான். இராமநாதருக்குப் பெரிய கண்டாமணி, கண்ணாடி, பேரி, மிருதங்கம், படகம், நிஸ்ஸாணம், முரசம், புள்ளாங்குழல், தாளம் முதலான வாத்தியங்களைக் கொடுக்கிறவன் பதினெட்டு வாத்தியங்களும் கோஷிக்கும்படியாக விமானத்தின்மேலேறிப்போய்ப் பலவகையான போகங்களை யனுபவித்துக்கொண்டு அநேக யுகங்கள் சிவலோகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறான். இராமநாதரை யுத்தேசித்துக் சொற்பங் கொடுத்தாலும் கொடுத்தவனுக்கு அது அநந்த பலனாகவளருமென்று சொல்லப்படுகிறது. இராமேசுவரத்தில் இராமநாதருடைய சந்நிதியில் வசிக்கிறவன் இறப்புப் பிறப்பில்லாத முக்தியையடைகிறான். ஆயுசும் யௌவனமும், சம்பத்தும், மனைவி மக்களும், க்ஷணத்துக்குள் அழிந்து போகின்றன. வீடு, வயல் முதலிய ஐசுவரியங்களை அரசர் முதலானவர்கள் அபகரித்துக்கொள்ளுகிறார்கள். ஆகையாலே சம்சார வியாபாரத்தை ஒழித்துவிட்டுத் தன்னைச் சரணமடைந்தவர்களுடைய ஆபத்துக்களை நீக்குகிற ஸ்ரீ ராமநாதரையே ஸ்மரித்துக், கீர்த்தனம் பண்ணி, அவருடைய மகிமையையே கேட்டுக்கொண்டிருக்கவேண்டியது. இராமநாதரை ஸ்மரிக்கிறதும், தரிசிக்கிறதும், ஸ்பரிசிக்கிறதும், அர்ச்சனை பண்ணுகிறதும், அந்த க்ஷணத்திலேயே பாபங்களை நீக்கிவிடும். பாத்திரங்களுக்குள்ளே உத்தமமான பாத்திரம் இராமநாதர். ஆகையால் அவருக்குக் கிராமதானம் பண்ணுகிறவன் தேகாந்தத்திலே சிவனேயாய்விடுகிறான். இராமநாதருக்குக் கொஞ்சங் கொடுத்தாலும் அவன் மறுஜன்மத்தில் பூலோக சக்கிரவர்த்தியாய்விடுவான். ஆகையால் அவருக்கு விசிறி, சத்திரம், சாமரம், சந்தனம், குங்கிலியம், இவைகளைக் கொடுக்கிறவன் மறுஜன்மத்தில் பூமண்டலாதிபதியாவான். இராமநாதர் பூசைக்காக நந்தவனம் வைக்கிறவன் அசுவமேத பலனையடைகிறான். சந்தனம், கோஷ்டம், குங்குமப்பூ, கஸ்தூரி, குங்கிலியம், புனுகு சவ்வாது, சாளக்கட்டை, இவைகளைக் கொடுக்கிறவன் மறுஜன்மத்தில் வேதபாரங்கதனான பிராம்மணனாய்ப் பிறந்து ஐசுவரியத்தை யனுபவிக்கிறான். விலை யுயர்ந்த முத்து, ஆபரணம், வஸ்திரம், இவைகளைக் கொடுக்கிறவன் ஒருநாளுந் தரித்திரத்தை யடையமாட்டான். இராமநாத மஹாலிங்கத்தைச் சேவிக்கிறதற்காகப் போகிறவனைக் கண்டு பாபக் கூட்டங்களெல்லாம் நடுங்குகின்றன. இராமநாதலிங்கத்தின் மகிமையைக் கேட்டாலும், ஸ்மரித்தாலும், தரிசித்தாலும், வணங்கினாலும், பூஜித்தாலும், மனிதனுக்குத் துர்லபமானது ஒன்றுங்கிடையாது. இராமநாத லிங்கத்தைத் தரிசித்தால், வேதமோதுவானேன்! சாஸ்திரம் படிப்பானேன்! தீர்த்தயாத்திரை செய்வானேன்! மோட்சாபேட்சையுள்ளவர்கள் [illegible]

மூப்புவந்து, பொறிபுலன் ஒடுங்கி, மரணம் அடைவதற்கு முன்னே யிராமநாதரைச் சிந்தித்துத் துதித்துப் பூஜிக்கவேண்டும். சகல புராணங்களிலேயும், சகல தர்ம்ம சாஸ்திரங்களிலேயும், இராமநாதர் பூஜைக்குச் சமானமான தர்மம் விதிக்கப்படவில்லை. மஹா கருணையுடையவராயும், பிரபுவாயுமிருக்கிற இராமநாதரைப் பக்தியுடன் நித்தம் வணங்குகிறவர்கள் புத்திர மித்திர களத்திராதிகளுடன் பூலோகத்திலுள்ள சகல போகங்களையும் திருப்தியுண்டாம் வரையில் அநுபவித்துத் தேகாந்தத்தில் இறப்புப் பிறப்பில்லாத சாசுவதமான முக்தியை யடைவார்கள்.

கேளுங்கள் முனிவர்களே! இராமநாதருடைய வைபவத்தை யெடுத்துரைத்துவிட்டேன். இந்த அத்தியாயத்தை நித்தமும் பக்தியுடன் படிப்போரும், கேட்போரும், இராமநாதரைச் சேவித்த பலனையும், தனுக்கோடி மஹா தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணின பலனையும் அடைவார்கள்.

நாற்பத்துமூன்றாவது அத்தியாயம்

முற்றிற்று.

நாற்பத்துநாலாவது

ஸ்ரீராமர் இராமநாதலிங்கப் பிரதிஷ்டை செய்த வரலாறு கூறின

அத்தியாயம்.

சகல வேதசாஸ்திரங்களின் தத்துவங்களை யறிந்து, புராணக் கடலைக் கரைகடந்தவராயும், வியாசருடைய திருவடிச்சேவையினாலே சகல அசுபங்களையும் போக்கிக்கொண்டவராயும், சகலருக்கும் புராணார்த்தோபதேசம் பண்ணி உபகாரம் பண்ணுகிறவராயும், முனிவராயுமிருக்கிற தாங்கள் எங்களுக்குப் புராணங்களைச் சொல்லி யநுக்கிரகம் பண்ணியிருக்கிறீர்கள். இப்பொழுதும் தங்களால் சொல்லப்பட்ட சேது மஹாத்மியத்தைக் கேட்டுக் கிருதார்த்தர்களாய்விட்டோம். ஆயினும் ஸ்ரீராமசந்திர மூர்த்தி ஸ்ரீ ராமலிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணின விதத்தைக்கேட்க ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம். தேவரீர் அதையெங்களுக்குச் சொல்லியருள வேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

கேளுங்கள் பிராம்மணோத்தமர்களே! இந்தக் கந்தமாதனத்தில் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி இராமலிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணின காரணத்தைச் சொல்லுகிறேன். பலசாலியான இராவணன் தண்டகவனத்திலிருந்த தன்பாரியை யபகரித்துக்கொண்டுபோன பின் வீரனான இராமசந்திரன் தம்பி லட்சுமணனோடு வானர சேனைகளை யழைத்துக்கொண்டு மகேந்திரகிரிபோய்ச் சேர்ந்து, அபாரமான சமுத்திரத்திலே அணைகட்டி, அதன் வழியாக இராவணனுடைய இலங்காபுரிக்குப் போனார். அப்பொழுது ஆயிரம் கிரணங்களையுடைய சூரியனஸ்தமனமானபின் பிரதோஷகாலத்தில் பூர்ணசந்திரப்பிரகாசத்திலே சைனியங்களோடுகூடச் சுவேலமலை போய்ச் சேர்ந்தார். அப்பொழுது தன் உப்பரிகையின்மேல் உட்கார்ந்துகொண்டிருந்த இராவணனைக் கண்டு பலசாலியான சுக்ரீவன் அங்கே தாவி, யிராவணனுடைய கிரீடத்தை யுதைத்துக் கீழே தள்ளிவிட்டான். மகுடமிழந்த ராவணன் தன் வீட்டுக்குள் புகுந்தான். ஸ்ரீராமர், தம்பி இலட்சுமணன், சுக்கிரீவன் முதலியவர்களோடுகூடச் சேனையைப் பருவதத்தின்மேலிருந்து கீழிறக்கி, யிலங்கைக்குச் சமீபத்திற் கூடாரமடித்து இருக்கச்செய்தார். அந்தக்கூடாரத்தில் வானரசேனைகள் தங்கியிருக்கும்போது, இராவணனுடைய போர் வீரர்களாகிய பரிவணன், பூதனன், ஜநம்பன், கரன், ரோதவசன், ஹரி ப்ராநசன், அநுஜன், பிரஹஸ்தன் முதலானவர்கள் ஆயுதபாணிகளாய்ச் சைனியங்களை யழைத்துக்கொண்டு, கண்ணுக்குத்தெரியாமல் மறைந்திருந்து அடிக்க ஆரம்பித்தவுடன் விபீஷணன் அவர்கள்மறைந்திருக்கும் மாயாசக்தியைத்தொலைக்க, கண்ணுக்குத்தெரியகின்ற அவர்களை பலசாலியான வானரசேனைகள் அடித்துக் கொன்றார்கள். உடனே இராவணன் சேனைகள் அழிந்ததுகண்டு சகியாமல்வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சேனைகளை அணியாக வகுத்து நின்று, பாணங்களாலே வானரசேனைகளை யெதிர்த்தான். அதுகண்டராமன் இராவணனோடு சண்டைசெய்யும்படியாய்ச் சேனைகளோடும் புறப்பட்டார். அப்பொழுது இலட்சுமணன் இந்திரஜித்தோடும், சுக்கிரீவன் விரூபாட்சனோடும், அங்கதன் கர்வடனோடும், நளன் பவுண்டாரனோடும், பனசன் புடசனோடும், கைகலந்து பயங்கரமான கோரயுத்தஞ்செய்தார்கள். பிறகு பயங்கரமான

வானரப்படைகளால் இராட்சதர்கள் முறியடிக்கப்பட்டு, இரணகளத்தைவிட்டுச் சீக்கிரமாக இலங்காபட்டணத்துக்குள் ஓடினார்கள். அதுகண்ட ராவணன் தன் பிள்ளையான இந்திரஜித்தையனுப்ப, அவன் வந்து நாகபாசத்தால் இராமலட்சுமணர்களைக் கட்டியுருட்டிவிட்டான். உடனே மஹாத்மாவான கருடன்வந்து கட்டவிழ்த்துவிட்டார். பிரஹஸ்தன் என்பவன் அதிவேகமாக ஓடிவந்து, கர்ஜித்து, கதையினாலே விபீஷணரை ஓங்கியடித்தான். மஹா பலவானான விபீஷணன் அந்த அடியால் கொஞ்சங்கூட அசையாமல் இமவானைப்போலிருந்து எட்டுமணி கட்டிய மஹாசக்தியென்னும் ஒரு ஆயுதத்தை மந்திரோச்சாரணஞ்செய்து அவன் தலைக்கு இலட்சியம் வைத்துப் பிரயோகம் பண்ணினார். இந்திரனுடைய வச்சிராயுதம்போல மஹா வேகமாய் வந்த அச்சத்தியால் தலையறுந்து, பெருங்காற்றாலடிப்பட்ட மரத்தைப்போல விழுந்தான். அதுகண்டு தூம்ராட்சன் அதிகவேகத்தோடு வானரசேனையை விரட்டினான். அப்பொழுது வாயு புத்திரனான அனுமான் ஒரு மரத்தை யெறிந்து, அவனையடித்துக்கொன்றார். இவ்விதமாகப் பிரகஸ்தனும், தூம்ராட்சனும் இறந்துபோனதைக் கண்டு மிஞ்சியிருந்த ராட்சதர்கள் தங்களுடைய இராஜனாகிய இராவணனிடத்திற்கோடி தெரிவித்தார்கள். உடனே இலங்கேசனான இராவணன் தூங்கிக்கொண்டிருந்த தன் தம்பியான கும்பகர்ணனை யெழுப்பிச் சண்டைக்கனுப்ப, அவனை இலட்சுமணரானவர் அதிக கோபங்கொண்டு பிரம்மாஸ்திரத்தினாலடித்து மடித்தார். தூஷணனுடைய தம்பிகளாகிய வச்சிரவேகன், பிரமாதி என்னும் இராவணனுக்கொப்பானவர்களை அனுமானும் நீலனும் அடித்து வதைத்தார்கள். விசுவகர்மனுடைய புத்திரனான நளன் வஜ்ரதம்ஷ்டிரனையும், வானர சிரேஷ்டனாகிய குமுதன் அகம்பனையும் கொன்றார்கள். இலட்சுமணன் அதிகாயன் திரிசிரன் சுக்கிரீவன் நராந்தகன் என்பவர்களையும், அனுமான் கும்பகர்ணனுடைய இரண்டு குமாரர்களையும், விபீஷணன் கரன் குமாரனான மகாராட்சனையும், அடித்துக்கொன்றார்கள். இவ்விதம் தோல்வியடைந்த இராவணன் தன் பட்டணத்துக்குள் புகுந்து, பிள்ளையாகிய இந்திரஜித்தைச் சண்டைக்கனுப்பினான். அப்பொழுது இந்திரஜித்து, சகோதரர்களான இராமலட்சுமணர்களை மயங்கவடித்து, அங்கதனுடைய அம்புகளாலே வாகனமிழந்து ஆகாயத்தில் நின்றுகொண்டு குமுதன், அங்கதன், சுக்கிரீவன், நளன், ஜாம்பவான் முதலான படைத்தலைவர்களுடன் வானரங்களை யெல்லாம் அடித்துத் தொம்சம் பண்ணி, ஆகாயத்தில் மறைந்து நின்றான். அப்பொழுது விபீஷணன், இட்சுவாகு குல அலங்காரமான இராமனை நமஸ்கரித்துக் கைகூப்பிக்கொண்டு, ஐயா குபேரனுடைய கட்டளையால் இந்தக் குஹ்யகனானவன் கையில் ஜலம் கொண்டுவந்திருக்கிறான். அந்த ஜலத்தினால் கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்ப்பவர்கள் கண்ணுக்கு மறைந்திருப்பவர்களெல்லாரும் நன்றாய்த் தோன்றுவார்கள். ஆகையால் நீர் இந்த ஜலத்தால் கண்ணைத்துடைத்துக்கொண்டால் மறைந்திருக்கிற பிராணிகளெல்லாம் உம்முடைய கண்ணுக்குத் தோன்றும், என்று சொல்ல, இராமன் அந்த ஜலத்தையெடுத்துத் தன் கண்களிலும், இலட்சுமணன், சுக்கிரீவன், அனுமான், ஜாம்புவான், அங்கதன், மயிந்தன், துவிதன், நீலன் இன்னம் மற்றுமுள்ள வானரங்களினுடைய கண்களிலுமதைப் பூச, ஆகாசத்தில் மறைந்துகொண்டிருந்த இந்திரஜித்து எல்லாருடைய கண்களுக்குந் தெரியப்பட்டான். இப்படிக் கண்ணுக்குத் தெரிந்த இந்திரஜித்தை இலட்சுமணர் விரட்டி யுத்தஞ்செய்ய, இருவருக்கும் பிரகலாதனுக்கும், இந்திரனுக்கும் நேர்ந்தசண்டையைப்போலக் கொடிய சண்டையுண்டாய் வெகு பிரயாசப்பட்டு மூன்றாவது நாளில் இந்திரஜித்தைக் கொன்றார். புத்திசாலியான இராமரும் மூலபல சேனையைத் தொலைத்தார். இந்தமாதிரி தனக்குப் பிரியமான குமாரனிறந்துபோனதைக் கேட்டு, இராவணன் கோபங்கொண்டு, இரதத்தின்மேலேறி, அநேக சேனைகளோடு பட்டணத்திலிருந்து வெளிக்கிளம்பி, நடுவழியில் ஜானகியைக் கொல்லயத்தனப்பட்டான். அதை யங்குள்ள விருத்தர்கள் தடுத்ததனால் நேராக இரணகளம் வந்துசேர்ந்தான். அப்பொழுது இந்திரசாரதியான மாதலியானவன் தோல், மயிர், வால் முதலிய உறுப்புகளெல்லாம் சொர்ணமாயிருக்கிற குதிரைகள் கட்டப்பட்டுச் சூரியனைப்போல ஜ்வலித்துக்கொண்டிருக்கிற தேரைக்கொண்டுவந்து இரணகளத்தில் நிறுத்தினான். மஹா தார்மிகரான ஸ்ரீராமர் அந்தத் தேரின்மேலேறிக்கொண்டு, இராவணனோடு யுத்தம் தொடங்கிப் பிரம்மாஸ்திரத்தால் அவனுடைய பத்துத்தலைகளையும் வெட்டியெறிந்தார்.

இப்படி யிராவணனைச் சங்கரித்தது கண்டு மகிழ்ச்சிகொண்ட தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் வித்தியாதரர்கள் முதலியோர் ஸ்ரீராமசந்திரனை ஜயாவிஜயீபவாவென்று வாழ்த்தியவர்மேல் புஷ்

பவருஷம் பொழிந்தார்கள். பிறகு ராமசந்திரன் விபீஷணனை யிலங்காபதியாக அபிஷேகஞ்செய்துவிட்டு, சீதா இலட்சுமணருடன் வானரசேனைகளோடும், ஆசீர்வதிக்க வந்த தேவர் கூட்டங்களோடும், புஷ்பகவிமானத்தி லேறிக்கொண்டு கந்தமாதனபருவதம் வந்தடைந்து, சீதையின் கற்பைப் பரிசோதித்து மகிழ்ந்திருந்தார். அப்பொழுது தண்டகாரணிய வாசிகளான அகஸ்தியர் முதலான ரிஷிகணங்களெல்லாம் ஸ்ரீராமர் இராவணனைச் சங்காரம்பண்ணி வந்திருப்பதை யறிந்து கந்தமாதனம் வந்து அவரைத்துதிக்க ஆரம்பித்தார்கள். லோகாநுக்கிரகம் பண்ணின ராமசந்திரா! உமக்கு வந்தனம்; இராவணனை யழிக்கப் பூமியில் அவதரித்தவராயும், தாடகை சுபாகு இருவரையுங்கொன்று விசுவாமித்திருடைய யாகத்தைக் காத்தவராயும், பாதபங்கஜதூளியினால் அகலிகைக்குச் சாபவிமோசனஞ் செய்தவராயும், சிவனுடைய வில்லை விளையாட்டாக முறித்துச் சீதையைப் பாணிக்கிரகணம் பண்ணினவராயும், வழியில் வந்த பரசுராமரை ஜயித்து விரட்டினவராயும், கைகேயிக்குக் கொடுத்த வரத்தால் கட்டுப்பட்ட தகப்பனுடைய வார்த்தையை நிலைநிறுத்தும்பொருட்டுச் சீதா இலட்சுமண சமேதராய்க் காட்டுக்குப் போனவராயும், பிரார்த்தித்துக் கேட்ட பரதனுக்குப் பாதுகாதானம் பண்ணினவராயும், சரபங்கரிஷி சொர்க்கத்துக்குப் போக அநுக்கிரகம் பண்ணினவராயும், விராதனை வதம் பண்ணினவராயும். ஜடாயுவுக்குச் சிநேகராயும், மாயாமிருகவேஷம் பூண்டவனான மாரீசனுடைய அங்கத்தைச்சின்னாபின்னப்படுத்தினவராயும், சீதையை அபகரித்துக்கொண்டு போன இராவணனோடு சண்டைசெய்து மடிந்த ஜடாயுக்கு அக்கினி காரியம்பண்ணி மோட்சம் கொடுத்தவராயும், கபந்தசம்ஹாரம் பண்ணினவராயும், சபரியால் பூஜிக்கப்பட்ட திருவடிகளை யுடையவராயும், சுக்கிரீவனுடைய சிநேகத்தைப் பெற்று வாலியை ஸம்ஹரித்தவராயும், சமுத்திரத்தில் சேதுவைக்கட்டி இராவணன் முதலான இராட்சதர்களெல்லாரையும் வதம்பண்ணினவராயும், ஸம்ஸார சாகரத்தைத் தாண்டுவதற்கு ஓடம்போன்றிருக்கிற பாதங்களையுடையவராயும், பக்தர்களுடைய துக்கங்களை நீக்குகிறவராயும், சச்சித்தானந்த சொரூபராயும், ஜகத்துக்கெல்லாம் க்ஷேமத்தைச் செய்கிறவராயும், இராமன் முதலான புண்ணிய நாமங்களை ஜபிக்கிறவர்களுடைய பாபங்களைப் போக்குகிறவராயும், ஸமஸ்தலோகங்களையும் சிருஷ்டித்துப்

பரிபாலித்து ஸம்ஹாரம் பண்ணுகிறவராயும், கருணாமூர்த்தியாயும், பக்தரட்சண தீட்சிதராயும், விபீஷணருக்குச் சுகத்தைக் கொடுத்தவராயும், சீதாசமேதராயுமிருக்கிற உமக்கு வந்தனம், வந்தனம்; ஏ ராமா! இலங்கேசுவரனான இராவணனைவதைத்து உலகத்தையெல்லாங்காத்த நீர் எங்களையும் காத்தருளும்; என்று துதித்தார்கள். கேளுங்கள் ரிஷீசுவரர்களே! தண்டகாரணிய வாசிகளாலே துதிக்கப்பட்ட இந்தஸ்தோத்திரத்தை மூன்றுகாலங்களிலும் பக்தியோடு படிக்கிறவன் இகத்தில் சகல போகங்களையும் அனுபவித்துப் பரத்தில் முக்தியடைவான். பிரயாணகாலத்திலிதைப்படிக்கிறவனுக்கு வழியில் பயமேயுண்டாகாது. இதைப்படித்தால் பூதப்பிரேத பிசாசங்களால் பீடையுமிராது. ஸமஸ்தரோகங்களும் நீங்கிவிடுகிறது பாபங்களும் ஒழிந்துபோகிறது. புத்திரகாமன் புத்திரனையும், தனகாமன் தனத்தையும், மோட்சகாமன் மோட்சத்தையும், அடைகிறான். கன்னிகையிதைப்படித்தால் நல்ல கணவனையுமடைகிறாள். இதைப்படிக்கிறவன் சர்வாபீஷ்டங்களையுமடைகிறான். பிறகு இராமன் முனிவர்களை நமஸ்கரித்துக் கைகூப்பிக்கொண்டு ரிஷீசுவரர்களே சமஸ்தமான ஜனங்களும் பரிசுத்திக்காக என்னையடைகிறார்கள். என் கண்ணில் தென்பட்ட சகல பிராணிகளும் மோட்சத்துக்குப் பாத்திரமாகின்றன. அப்படியானாலும் நான் ஆத்மாவை யறிந்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களாயும், பூததயவுள்ளவர்களாயும், அகங்காரமற்றவர்களாயும், ஊர்த்துவரேதஸ்களாயும், சாந்தர்களாயுமிருக்கிற உங்களைப் பக்தியுள்ள சித்தத்தோடு நமஸ்காரம் பண்ணுகிறேன். ஏனென்றால் பிராம்மணர்களையே நான் தெய்வமாகக் கொண்டிருக்கிற படியினாலே எப்பொழுதும் பிராம்மணர்களைப் பஜிக்கிறது வழக்கம். இப்பொழுது நான் கேட்கிறதை நீங்கள் யோசித்துச் சொல்லவேண்டும். அது என்னவென்றால் இராவணனைக் கொன்றதனால் எனக்குப் பாபம் வந்திருக்கிறது. அந்தப் பாபம் நீங்கும்படியான பிராயச்சித்தம் என்ன? அதை யெனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டார். அப்பொழுது ரிஷீசுவரர்களெல்லாரும் இராமரைப்பார்த்துச், சத்தியவிரதனே; ஜகத்ரட்சகதுரந்தரா! ஜகந்நாதா! கேளும் சர்வலோகங்களுக்கும் உபகாரஞ் செய்யும்படியாகவும், லோகத்துக்குத் தர்மத்தை யனுஷ்டித்துக் காட்டும்பொருட்டாகவும் முக்தியைக் கொடுக்கிற புண்ணியமான இந்தக் கந்தமாதன சிகரத்திலே ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணி அதை நீர்பூஜைபண்ணி

னால் சுக்கிரீவனைக்கொன்ற தோஷம் நீங்கும், சிவலிங்கப் பிரதிஷ்டையின் புண்ணியத்தைச் சதுர்முகங்களையுடைய பிரமாவாலுஞ் சொல்ல முடியாதென்றால் சாதாரண மனுஷனால் சொல்லமுடியுமோ? நீர் இந்தப் பருவதத்தில் ஸ்தாபனம் பண்ணுகிற லிங்கத்தினுடைய தரிசனமானது மனிதர்களுக்குக் காசியிலிருக்கிற லிங்கத்தைத்தரிசிப்பதைவிடக் கோடிமடங்கு அதிகமான புண்ணியத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. புண்ணிய பாபங்களாகிற கட்டைகளை நெருப்புப்போல நாசம்பண்ணுகிற இந்த லிங்கமானது உமது பேராலே இராமலிங்கமென்று உலகத்தில் பிரசித்தியடையட்டும். இராமசந்திரா; கருணாமூர்த்தியே! மஹாநுபாவா! லிங்கப்பிரதிஷ்டை செய்யும் விஷயத்தில் தாமசிக்கவேண்டாம் என்று சொன்னார்கள். அதுகேட்ட ஜகத்பதியான ஸ்ரீராமர் இரண்டுமுகூர்த்தம்வரைக்கும் சுபமுகூர்த்தத்தைப் பற்றி யாலோசித்து, அநுமாரை யழைத்து அஞ்சனைக்கும் வாயுவுக்கும்பிறந்த அநுமானே நீர் சிவனுக்கு வாசஸ்தானமாயிருக்கிற கைலாசத்துக்குப்போய் அதிசீக்கிரத்தில் ஒரு சிவலிங்கம் கொண்டுவாரும் என்று ஆக்ஞாபித்தார். வீரியமுள்ள ஆஞ்சனேயர் இரண்டுமுகூர்த்தவரைக்கும் சுபமுகூர்த்தத்தை யாராய்ந்துபார்த்துப் புஜங்களைத் தட்டிக்கொண்டு, சர்வதேவர்களும், மஹாத்மாக்களான ரிஷிகளும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கந்தமாதனம் நடுங்கும்படி உயரப்பாய்ந்து, அதிவேகமாக ஆகாசமார்க்கமாய்ப்போய்க் கைலாசத்தையடைந்து, லிங்கத்தைத் தேடிப்பார்த்து அகப்படாமையால், சங்கருக்கு வாசஸ்தானமாகிய கைலாசபருவதத்திலேயே கிழக்குநுனியிருக்கும்படி தர்ப்பத்தைப் பரப்பி அதன்மேலே யிருந்து இந்திரியங்களை ஜயித்துச், சுவாசத்தையடக்கி ஊர்த்துவபாகுவாய் நிராலம்ப யோகத்திலிருந்து மஹாதேவனைக் குறித்துத் தபசுபண்ணிக் கொண்டிருந்தார்.

கேளுங்கள் ரிஷீசுவரர்களே! அநுமானிப்படிக் கைலாசத்தில் தபசுபண்ணிக்கொண்டிருக்கையில், கந்தமாதனத்திலிருந்த உண்மைதெரிந்த முனிவர்கள் எல்லாரும் அநுமான் வாராததையும், குறித்த முகூர்த்தகாலம் எல்லாம் சென்று கொஞ்சமாயிருப்பதையுங் கண்டு ஸ்ரீராமரைப்பார்த்து ராமா! குறித்த முகூர்த்தம் தப்பிப்போகிறது. ஆகையால் ஜானகியானவள் விளையாட்டுக்காக மணலால் செய்துவைத்திருக்கிற சிவலிங்கத்தை யெடுத்து நீர் பிரதிஷ்

டைபண்ணிவிடும் என்று சொல்ல, ஸ்ரீராமனும் உடனே இரட்சாபந்தனம் பண்ணிக்கொண்டு, ஆனிமாசம் சுக்கில பட்சம் தசமிதிதி புதன்கிழமை ஹஸ்தநட்சத்திரம் விதிபாதம் கரஜைகரணம் கன்னியாசந்திரன், விருஷபரவி இவைகள்கூடிய சுபமுகூர்த்தத்தில் கந்தமாதன பருவதத்திலே சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணிக் கங்காதரராயும், சந்திரசேகரராயுமிருக்கிற சாம்ப பரமேசுவரனை யாராதனை பண்ணினார். உடனே மஹாதேவர் பார்வதீ சமேதராய் லிங்கத்தினின்றும் ஆவிர்ப்பவித்து, ராமரைப் பார்த்து மஹாத்மாவான ராகவா! தனுக்கோடியில் ஸ்நானம் பண்ணி நீ ஸ்தாபனம் பண்ணின லிங்கத்தைத் தரிசிப்பவர்கள் மஹா பாதகர்களாக இருந்தாலும் அவர்களுடைய பாபங்களெல்லாம் பஞ்சாய்ப்பறந்து போய்விடுகிறது. இராமசந்திரா! இதில் சமுசயமில்லை என்று வரங்கொடுத்தார். ஸ்ரீராகவன் அந்த லிங்கத்துக்கு எதிரில் நந்திகேசுவரரை ஸ்தாபனம் பண்ணி, தன்னுடைய தனுக்கோடியால் பூமியைப்பிளந்து ஒரு கிணற்றை யுண்டாக்கி, அதிலிருந்துண்டான தீர்த்தத்தால் இராமலிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணினார். இந்தத் தீர்த்தத்துக்குக் கோடிதீர்த்தமென்று பெயர். ரிஷீசுவரர்களே யிந்த தீர்த்தத்தைப்பற்றி யுங்களுக்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். தேவர்களும், முனிவர்களும், நாகர்களும், கந்தர்வர்களும், அப்ஸரஸ்களும், வானரங்களும் தனித்தனியே ஒவ்வொரு லிங்கப்பிரதிஷ்டை செய்து பக்தியோடும் பூஜைசெய்தார்கள்.

கேளுங்கள் ரிஷீசுவரர்களே புக்தியும், முக்தியும் கொடுக்கும்படியான இராமநாத லிங்கத்தை ஸ்ரீராமன் பிரதிஷ்டை பண்ணின விதத்தை யுங்களுக்குச் சொன்னேன். இந்த லிங்கப்பிரதிஷ்டை கூறின அத்தியாயத்தைப் படிப்போரும் கேட்போரும் இராமலிங்கத்தைப் பூஜைபண்ணின பலனையடைந்து கடைசியில் சாயுஜ்யத்தையும் அடைவார்கள்.

நாற்பத்துநாலாவது அத்தியாயம்

முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது

ஸ்ரீராமர் அநுமாருக்குத் தத்துவோபதேசஞ் செய்த

அத்தியாயம்

கேளுங்கள் சௌனகாதி ரிஷீசுவரர்களே உத்தமமான கர்மங்களைச்செய்த ஸ்ரீராமர் ஸ்ரீராமலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்தபின்பு, அநுமார் கைலாசத்திலிருந்து இரண்டு சிவலிங்கங்களை யெடுத்துக்கொண்டுவந்து தசரத குமாரனை வீரமுள்ள ஸ்ரீராமரையும், சீதாதேவியையும் லக்ஷ்மணரையும் சுக்கிரீவனையும் வணங்கினார். அப்பொழுது ஸ்ரீராமர் முனிவர்களுடனிருந்துசீதாதேவியால் விளையாட்டுக்காகச் செய்யப்பட்டஸைகதலிங்கத்தைப் பூஜைசெய்துகொண்டிருப்பதைப்பார்த்துக் கோபங்கொண்டு, தான் சிரமப்பட்டுக்கொண்டுவந்தலிங்கம் வீணாய்ப்போய்விட்டதேயென்று துக்கமடைந்து தர்மக்ஞரான ராமரைப்பார்த்து ஸ்ரீராமா! நானெடுத்தஜென்மம் வீணாய்ப்போய்விட்டது. உலகத்திலே துன்பத்தைமட்டும் அநுபவிக்க நான் பிறந்தேன். குரூரர்களான தேவர்களாலும், இராட்சதர்களாலும் நான் வெகுதுன்பங்களை யடைந்திருக்கிறேன். உலகத்திலென்னைப்போலொத்த பிள்ளைகளை ஒருதாயும் பெறவேண்டாம். சம்சாரசாகரத்திலேராளமான துக்கத்தை அநுபவிக்கும்படி யெனக்குநேர்ந்தது. முன்னாலேயும்மைச் சேவிக்கிறதினால் துக்கத்தை அநுபவித்தேன். பிறகு உமக்காகச் சண்டைசெய்து அதைவிட அதிகமான துக்கத்தை யடைந்தேன். இப்பொழுது நீர் என்னை யவமானஞ் செய்தபடியினால் அதிலும் அதிகமான துக்கத்தையடைய நேரிட்டது பாரும்! சுக்கிரீவன் மனைவி நிமித்தமாகவும், இராவணன் தம்பியான விபீஷணன் இராஜ்யத்துக்காகவும் உம்மைச் சேவித்தார்கள் நான் யாதொரு காரணமுமில்லாமலே யும்மைச் சேவித்துவருகிறது உமக்கேதெரியும். வானரப்படைகள் அனேகமிருக்கும்பொழுது நீர் என்னைத் தெரிந்தெடுத்துச் சிவலிங்கங்கொண்டு வருவதற்காகக் கைலாசத்துக்குப் போகும்படி யாக்ஞாபித்தீர். அப்படியே யதிவேகமாகக் கைலாசத்துக்குப்போய், அங்கே சிவலிங்கத்தைக் காணாமல் ஸாம்பபரமேசுவரனைக் குறித்துத் தபசுசெய்து, அவரிடமிருந்து லிங்கத்தைப் பெற்றுக்கொண்டு சீக்கிரமாக வந்திருக்கிறேன். இங்கே நீர் ஒரு ஸைகதலிங்கத்தைப் பிரதிஷ்டைபண்ணி முனிவர்களோடும், தேவர்களோடும், கந்தர்வர்களோடும் குதூகலமாய்ப் பூஜைபண்ணிக்கொண்டிருக்கிறீர். நான் கைலாசத்திலிருந்து கொண்டுவந்த லிங்கம் வீணாகப்போய் விட்டது. இப்படித் துர்ப்பாக்கியனான நான் ஐயோ! பூமிக்குப்பாரமாக ஆய்விட்டேன். ஏ! ஜானகீகாந்தா! பிரபுவே, இரகுநாயகா! இந்தத் துக்கமென்னால் சகிக்கமுடியவில்லை. சுவாமீ நான்என்னபண்ணுவேன்! எங்கேபோவேன்! எனக்குக் கதியில்லையே. இராமா! நீர் செய்த அவமானம் பொறுக்கமுடியாமையால் நானிந்தச் சரீரத்தை விட்டுவிடுகிறேன் என்று பலபடியாகப் புலம்பிக் கோபமும் சோகமும் மேலிட்டுத் தண்டம்போலப் பூமியில் விழுந்தார். அதுகண்ட ராமனும் தேவர்களும், முனிவர்களும், கந்தர்வர்களும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அநுமாருடைய கோபத்தைச் சமனம் பண்ணும்பொருட்டுச் சிரித்தமுகத்துடன் சில வார்த்தைகள் பேசினார். நீ முகூர்த்தந்தப்பி வந்தபடியால் சீதையின் ஸைகதலிங்கத்தை நான் ஸ்தாபனம்செய்யும்படி நேரிட்டது. ஆகையால் நீ இந்த விஷயத்தில் கோபத்தையும் துக்கத்தையும் அடையாதே. அநுமானே என்னுடைய காரியத்தையும், பிறந்தவன், இறந்தவன், பிறந்துகொண்டிருக்கிறவன் எல்லாருடைய காரியத்தையும் நானறிவேன். ஒருவனே தன்னுடைய கர்மவசத்தால் பிறந்து இறக்கிறான். நரகத்துக்கும் போகிறான். பரமாத்மாவோ நிர்குணமாயிருக்கிறது. இந்த உண்மையை அறிந்து துக்கத்தை விட்டுவிட்டு ஆண், பெண், அலியென்கிற பேதமில்லாததாய், மாயாரகிதமாய், பற்றற்றதாய், நிர்விகாரமாய்ச் சோதிமயமாயிருக்கிற பரமாத்மாவை எப்பொழுதுந் தரிசித்துக்கொண்டிரு. தத்துவஞானத்துக்கு விரோதமான துக்கத்தையேன் பாராட்டுகிறாய்? ஏ! வானரோத்தமா! தத்துவஞானத்தைக் கைக்கொண்டு சுவயம்பிரகாசமான பரமாத்மாவைச் சதா தியானம் பண்ணிக்கொண்டிரு. தேகாபிமானங்களை விட்டு விடு; சதா தர்மங்களைச் செய்துகொண்டிரு. பிராணி இம்சை செய்யாதே. பெரியோர்களைவணங்கு, இந்திரியங்களையடக்கு, பிறர் தூஷணைசெய்யாதே. சிவன் விஷ்ணுமுதலான தேவர்களைச் சதா பூஜைசெய், எப்பொழுதும் உண்மைபேசு. துக்கத்தைவிட்டுவிடு, பிரத்தியக்பிரமம் ஒன்றேயுள்ளது. மற்றொன்றுமில்லை யென்கிற ஞானமில்லாமையினாலே மோகமுண்டாகிறது.

அந்த மோகத்தினாலே விகாரமற்ற பிரம்மத்தினிடத்திலே சுக துக்கங்கள் யதார்த்தமாயிருப்பதுபோல கற்பித்துக்கொள்ளுகிறான். சுகமுடையதென்று எண்ணப்படுகிற பதார்த்தத்தினிடத்தில் மூடர்களுக்கு இராகமுண்டாகிறது. அதுபோலவே துக்கமுடையதென்று எண்ணப்படுகிற பதார்த்தத்தினிடத்தில் துவேஷம் ஜனிக்கிறது. இந்த இராகதுவேஷங்களால் புண்ணியபாபங்களாகிற கர்மத்தில் கட்டுப்பட்டுத் தேவர், மனுஷியர், திரியக் முதலான ஜன்மங்களை யடைகிறான். பாரு, சந்தனம், அகில் கற்பூரம் முதலான சோபனமான பரிமள திரவியங்கள் எந்த சரீரத்தில் பட்டமாத்திரத்திலே மலமாய்ப்போகின்றனவோ அந்த சரீரத்தைச் சுகமென்று சொல்லலாமோ? பட்சியம், போஜ்யம் முதலான போஜனவஸ்துக்களெல்லாம் எந்தச் சரீர சம்பந்தத்தால் மலமாய் விடுகின்றனவோ அந்தச் சரீரத்தை எப்படிச் சுகமானதென்று சொல்லலாம்? நல்லவாசனையுள்ளதும், குளிர்ந்ததுமான நீர் எந்தச்சரீர சம்பந்தத்தால் மூத்திரமாகின்றதோ அந்தச் சரீரத்தைச் சுகமென்று எப்படிச் சொல்லாம்? அதிசுத்தமாயும் வெண்மையாயுமிருக்கிற வஸ்திரங்கள் எந்தச்சரீரத்தின் வேர்வையால் அழுக்கடைகின்றனவோ அந்தச் சரீரத்தைச் சுகமுடையதென்று சொல்லலாமா? அனுமாரே! சொல்லுகிறேன். சேளு, சமுசாரமாகிற இந்தக் குழியில் கொஞ்சமாவது சுகங்கிடையாது. ஜீவன் ஜனனம், பாலியம், யௌவனம், வார்த்திகம், மரணம் புனர் ஜனனம் ஆகிய துக்கங்களுக் குள்ளாகிறது. இந்த துக்கங்கள் அஞ்ஞானவைபவத்தால் உண்டாகின்றன. அந்த அஞ்ஞானம் நிவர்த்தியானால் உத்தமமான சுகமுண்டாகிறது. இந்த அஞ்ஞானம் நீக்கமும் ஞானத்தாலுண்டாகுமே யல்லாமல் கர்மத்தாலுண்டாகாது. ஞானமாவது வேதாந்தவாக்கிய சிரவணத்தாலுண்டாகிற பரபிரமஞானமேயாம். அந்தப் பரபிரமஞானமும் ஆசாரியநுக்கிரகம் பெற்ற முக்கியாதிகாரியாகிய விரக்தனுக்குண்டாகிறது. மற்றவர்களுக்குண்டாகிறதில்லை. எப்பொழுது இருதயத்திலிருக்கிற ஆசையெல்லாம் ஒழிகிறதோ அப்பொழுதே அவன் ஜீவன் முக்தனாய் பிரமானந்தத்தை யநுபவிக்கிறான். ஜீவனானது விழித்துக்கொண்டிருந்தாலும், தூங்கிக்கொண்டிருந்தாலும், இருந்துகொண்டிருந்தாலும், சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும், குரூரனாகிய யமதருமராஜன் பிடித்து இழுத்துக்கொண்டு போகிறான். ஜீவியல்களெல்லாம் கடைசியில் க்ஷயத்தையடைகின்றன. உயர்ந்தவைகளெல்லாம் கடைசியில் தாழ்வையடைந்து விழுகின்றன. சேர்ந்தவைகளெல்லாம் முடிவிலே பிரிகின்றன. பிறந்தவைகளெல்லாம் கடைசியில் இறக்கின்றன. பழுத்த பழங்களுக்குக் கீழேவிழுகிறதைத் தவிர வேறுபயமில்லாததுபோலப் பிறந்தவர்களுக்கு மரணமடைவதைத் தவிர வேறு பயமில்லை. வீடானது பலமான ஸ்தம்பங்களால் தாங்கப்பட்டிருந்தும், காலவட்டத்தில் ஜீர்ணதசையையடைந்து அழிந்துபோகிறதுபோல் ஜீவனும் ஜரா மரணங்களுக்குள்ளாகி அழிகின்றது. இரவும்பகலும் சென்றுகொண்டேயிருக்கிறதினால் ஜீவனுக்கு ஆயுசும் கழிந்துகொண்டே வருகிறது. ஒருவனிருந்து கொண்டிருந்தாலும், நின்றுகொண்டிருந்தாலும், ஓடிக்கொண்டிருந்தாலும், ஆயுசு கழிகிறது. ஆனால் ஒருவன் போய்க்கொண்டிருந்தாலும் அவன் கூடவே போகிறது. உட்கார்ந்து கொண்டிருந்தாலும் அங்கூடவே உட்கார்ந்திருக்கிறது. ஒருவன் தூரதேசங்களுக்குப் போய்த் திரும்பிவந்தாலும், அதுவும்கூடவேபோய்த் திரும்பிவருகிறது. விருத்தாப்பியமடைந்து நரைதிரைகளுண்டாகிச் சுவாசகாசாதிகளால் வருந்தின சரீரம் அழிந்துபோகின்றது. ஒரு பெரிய சமுத்திரத்திலே கட்டையும் கட்டையும் சேர்ந்து காலாந்திரத்திலே பிரிந்துபோகிறதுபோல மனைவி மக்கள் பந்துவர்க்கங்கள் [illegible] யம் முதலானவர்கள் ஒரு சமயத்தில் கூடி மற்றொரு சமயத்தில் பிரிந்துபோகின்றனர். ஒரு வழிப்போக்கனானவன் மற்றொரு வழிப்போக்கனோடு [illegible] சேர்ந்து சில தூரம்போய்ப் பிறகு பிரிந்துபோகிறதுபோல பெண்டாட்டி பிள்ளைகளும் கூடிப் பிரிந்துபோகிறார்கள். சரீரத்தோடு [illegible] பிரிகிறது. இப்படி நிச்சயமாயிருக்கிற மரணத்துக்குப் பரிகாரமொன்றுமில்லை. ஒரு சரீரம் விழுந்தபின் ஜீவனானது கர்மவசத்தினால் மற்றொரு சரீரத்தை யடைகிறது. ஆகையால் ஜீவர்கள் பூமியில் [illegible] காமல் கர்மானுசாரத்தின்படி ஜனித்[illegible] பிரிந்துபோகின்றன. பிராணிகளின் சரீரம் எப்படி [illegible] அது போல ஆத்மா அழிகிறதில்லை. ஆகையால் [illegible] [illegible] அஞ்ஞானமாய்ப் பற்றிக்கொண்டு, மற்றொன்றையும் [illegible] த்துக்கொள்ளாமல் சோகமற்றதையும், நித்தியமும், சத்தியமும், அகண்டமுமாயிருக்கிற பிரமத்தை [illegible] தியானம் பண்ணிக்கொண்டிரு; [illegible] உன்செய்கை [illegible]; உன்செய்கை [illegible]; நான் [illegible]

கமானது நீ ஸ்தாபனஞ்செய்த லிங்கமேயாம். ஆனாலும் நீ கைலாசத்திலிருந்து கொண்டுவந்த லிங்கத்தை ஒரு நல்ல சுபமுகூர்த்தத்தில் ஸ்தாபனம்பண்ணு. நீ ஸ்தாபனம் பண்ணுகிற லிங்கமானது உன்பெயரால் அநுமலிங்கமென்று உலகத்தில் பிரசித்திபெறட்டும் இந்த அநுமலிங்கத்தைத் தரிசித்துவிட்டுத்தான் நான் ஸ்தாபித்த இராமலிங்கத்தைத் தரிசிக்கவேண்டியது. பிரமகுலத்தில் பிறந்த அநேகராட்சதர்களை நீ சங்காரஞ்செய்திருக்கிறபடியால் உனக்குப் பிரமஹத்தி தோஷம் வந்திருக்கிறது. அநுமலிங்கமென்கிற ஒரு லிங்கத்தை நீ ஸ்தாபனம்பண்ணினால் உனக்கு அந்தப்பாபம் நிவர்த்தியாகும். சாட்சாத் பரமசிவன்கொடுத்த இந்த அநுமலிங்கத்தையும், இராமலிங்கத்தையும் தரிசிக்கிறவனும், ஆயிரம் யோசனை தூரத்திலிருந்து ஸ்மரிக்கிறவனும் கிருதகிருத்தியனாகி அந்தத்தில் சாயுஜ்யத்தை அடைவான். அநுமலிங்கத்தையும், இராமலிங்கத்தையும் தரிசிக்கிறவன் சமஸ்தமான தபசுபண்ணின பலனையும், சமஸ்தமான யாகம்பண்ணின பலனையும் அடைகிறான். அநுமலிங்கம், இராமலிங்கம், சீதாலிங்கம், இலட்சுமணலிங்கம், சுக்கிரீவலிங்கம், அங்கதலிங்கம், சேதுக்கட்டின நளலிங்கம், ஜாம்பவலிங்கம், விபீஷணன்ஸ்தாபித்த இரத்தின லிங்கம், இந்திராதியர்களால் ஸ்தாபிக்கப்பட்டலிங்கம், ஆதிசேஷன் முதலியோரால் ஸ்தாபிக்கப்பட்டலிங்கம், ஆகிய இந்தப் பதினொரு லிங்கங்களிலும் ஏகாதசருத்திர சொரூபராயிருக்கிற பரமசிவன் சதா வாசம்பண்ணுகிறார். ஆகையால் அநுமானே உன்னுடைய பாபநிவர்த்திக்காக நீ கொண்டுவந்தலிங்கத்தை ஸ்தாபனம் பண்ணு.

உனக்கிஷ்டமில்லாவிட்டால் என்னால் ஸ்தாபிக்கப்பட்டு அதல, விதல, சுதல முதலான கீழேழு உலகங்களையுங் கடந்துபோய் வேரூன்றியிருக்கிற சைகதலிங்கத்தை நீ பிடுங்கியெறிந்துவிட்டாயானால் நீ கொண்டுவந்த லிங்கத்தை நான் ஸ்தாபனம் பண்ணிவிடுகிறேன். ஆனால் அந்தலிங்கத்தைப் பெயர்க்க யாருக்குத்தான் சக்தியிருக்கிறது? உனக்குச் சக்தியுண்டானால் நான் ஸ்தாபித்த லிங்கத்தைப் பிடுங்கியெறிந்துவிட்டு நீ கொண்டுவந்த லிங்கத்தை ஸ்தாபனம் பண்ணு; எழுந்திரு பார்ப்போம்; துக்கப்படாதே என்று இராமன் சொன்னதைக்கேட்டு அநுமானானவன், உடனே ஸ்ரீராமருக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுத், தான் பலசாலியென்று இறுமாப்புக்கொண்டு, இதோ இந்தமணல் லிங்கத்தைப் பிடுங்கி யெறிந்துவிட்டு, நான் கைலாசத்திலிருந்து கொண்டுவந்த

லிங்கத்தை ஸ்தாபித்துவிடுகிறேன். இதைப்பிடுங்கி யெறிவது எனக்கொருபாரமா? என்று தன் மனதிலெண்ணித், தேவர்கள், ரிஷிகள், கவிகள், இராட்சதர்கள், இராமன், இலட்சுமணன், சீதை, எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, அலட்சியமாய் ஒரு கையால் பிடித்துக்கொண்டு வெகு சிரமத்தோடு லிங்கத்தை அசக்கியும் அசைக்க முடியவில்லை. பிறகு அநுமானும் கச்சிட்டு வாலைத்தூக்கிக்கொண்டு தன்னுடைய முழுபலத்தோடு இரண்டு கைகளாலுமசைக்க அப்பொழுதும் அது அசையவில்லை. பின்பு இரண்டு கைகளையும் பூமியிலூன்றிக்கொண்டு, வாலால் அதைச் சுற்றி அதிகமாக ஆகாசத்தில் கிளம்பியிழுத்தான். அப்பொழுது இழுத்தவேகத்தால் லிங்கத்துக்கு ஒரு குரோசதூரத்துக்கப்பால் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு பூமியும், மலைகளும் நடுங்கும்படி பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தான். மூர்ச்சைபாய்க்கிடந்த அவனுடைய கண், மூக்கு, வாய், காது, அபானமுதலான இடங்களிலிருந்து இரத்தம் ஆறாகப்பெருகிவர அதனால் ஒரு பெரிய இரத்தகுண்டமுண்டாயிற்று. அப்பொழுது தேவர், மனிதர், அசுரர்கள் எல்லாரும் ஹா! ஹா! வென்று சப்தித்தார்கள். அப்பொழுது இராம இலட்சுமணரும், ஜானகியும் வானரங்களோடும் அநுமான் விழுந்திருந்த இடத்துக்கு ஓடி அவனுடைய நிலைமையைக் கண்டு துக்கப்பட்டார்கள். சீதையோடும், வானரசேனைகளுங்கூட கந்தமாதன மலையிலிருந்த இராம இலட்சுமணர்கள் இராக்காலத்தில் நட்சத்திரக் கூட்டங்களோடுகூடின சூரிய சந்திரர்களைப்போல விளங்கினார்கள். அவ்விடத்தில் அநுமான் தன் சரீரம் நொறுங்கி, வாயால் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு மூர்ச்சையாய்க் கிடப்பதைக்கண்டு வானரங்களெல்லாம் துக்கத்தினாலே ஹாஹாவென்று கூச்சலிட்டுப் பூமியில் விழுந்தார்கள். அப்பொழுது சீதையானவள் மிகுந்த கருணையோடு பூமியில் விழுந்துகிடந்த அநுமானை யிரண்டு கையாலும் அப்பா! அப்பா! வென்று தொட்டாள். இராமனும் அநுமானைத்தன் மடியில் வைத்துக்கொண்டு கண்ணீர்விட்டுக் கையால் அவன் சரீரத்தைத் தடவிப் புலம்பத்தொடங்கினார்.

நாற்பத்தைந்தாவது அத்தியாயம்.

முற்றிற்று.

நாற்பத்தாறாவது

அநுமலிங்கமும் அநுமகுண்டமும் வந்த வரலாறுகூறின

அத்தியாயம்.

ஏ! வானரசிரேஷ்டனான அநுமானே! பம்பாதீரத்தில் துக்கமடைந்திருந்த காலத்தில் எங்களைச் சூரியகுமாரனான சுக்கிரீவனோடு சிநேகம் செய்வித்து எங்களுடைய துக்கத்தை நீக்கினாய். உன்னைக்கண்ட மாத்திரத்தில் நாங்கள் எங்களுடைய தந்தையையும், தாயாராகிய கௌசலையையும், மற்றுமுண்டான பந்துக்களையும் பாராதிருக்கிற துக்கத்தையும் மறந்துவிட்டோம். அப்பா அநுமானே, நீ யெனக்கு எவ்வளவோ உபகாரம்பண்ணி யிருக்கிறாய். அநேக யோசனை விஸ்தாரமுள்ள சமுத்திரத்தையுந் தாண்டினாய்; நடுவிலே தோன்றின மைநாகமலையையுங் கையினால் அடித்துத் தள்ளினாய். நாகமாதாவாகிய சுரசை என்பவளையும் ஜயித்து, மஹாரூபமுள்ள சாயாக்கிருகிணியையும் ஸம்ஹாரம்பண்ணி, ஆகாய காலம் சுவேலமலையைப்போய்ச் சேர்ந்து, இலங்காதேவியைக் கையால் அடித்து, எனக்காக இராவணனுடைய வீட்டுக்குள்ளே புகுந்து, இராத்திரியில் பயமில்லாமல் சீதையைத்தேடி அங்கே அவளைக்காணாமல் அசோகவனம்போய், அங்கே வைதேகியைக்கண்டு நமஸ்கரித்துச், சூடாமணியை அடையாளமாகப் பெற்றுக்கொண்டு, அசோகவனத்திலுள்ள மரங்களையெல்லாம் நீ முறித்தழித்தாய். அப்பொழுது இராவணனுக்கொப்பான பலசாலிகளான எண்பதினாயிரம் கிங்கரர்கள் இடிகுமுறசப்தத்தோடு வந்தெதிர்க்க என்னிமித்தமாக அவர்களைக்கொன்றாய்; பிறகு பிரகஸ்தன் புத்திரனான ஜம்புமாலியையும், நெருப்புக்கொப்பான எழுமந்திரி குமாரர்களையும், பஞ்சசேனாபதிகளையும், அட்சயகுமாரனையும், எனக்காக அடித்தடித்து யமனுடைய வீட்டுக்கு அநுப்பவில்லையா? பிறகு இந்திரஜித்தினால் இராவணனுடைய சபைக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கே அவனைத்திருணமாக நினைத்துப்பேசி இலங்காபட்டணத்தைக் கொளுத்திவிட்டுப், பின்பு நானிருந்த ரிசியமூகபருவதத்துக்கு வந்தாயே! இந்தமாதிரியான மஹாதுக்கங்களையெல்லாம் என்னிமித்

தமாக அநுபவித்த நீ இப்பொழுது பூமியில் விழுந்துகிடக்கிறதைப் பார்க்க எனக்கு மஹாதுக்கமாயிருக்கிறது. நீ யிறந்துவிட்டாயேயானால் என்னுயிரையும் நான் விட்டுவிடுகிறேன். நீ உயிர்பிழைக்திராமல்போனால் சீதை இலட்சுமணன், பரதன், சத்துருக்கனன் ஐசுவரியம், இராஜியம் இருந்து எனக்கென்ன பிரயோசனம்? அப்பா! அநுமானே, ஏன் பூமியில் படுத்துக்கொண்டிருக்கிறாய், எழுந்திரு; அநுமானே! இந்திரஜித்தானவன் என்னையும், இலட்சுமணனையும் பிரம்மாஸ்திரத்தால் கட்டினபொழுது எங்களை விடுவித்தாய், நீ ஔஷதங்களைக்கொண்டுவந்து இலட்சுமணனை பிழைப்பித்தாய். உன்னுடைய சகாயத்தைக்கொண்டு பலசாலிகளான இராவணன் முதலான ராட்சதர்களை நான் கொன்று என் பிராணநாயகியான மைதிலியை யடைந்தேன். சீதையினுடைய துக்கத்தை நீக்கின அநுமானே! அஞ்சனாபுத்திரா! என்னையும், சீதையையும், இலட்சுமணனையும் அயோத்திகொண்டுபோய்ச் சேர்க்காமல் நடுவழியில் விட்டுவிட்டு நீ போனது நியாயமா? ஏ! இராட்சத கண்டகனான மஹாவீரா! நீ எங்கே போய்விட்டாய்? நான் ஸ்நானத்துக்குப்போகிறேன் என்னுடைய மரவுரியையும், கலசம், மான்தோல், தர்ப்பம் முதலானவைகளையெல்லாங் கொண்டுவா. எனக்கு ஆகாரத்துக்காகக் கந்த மூலபலங்களைச் சேகரி. நான் தூங்குவதற்குப் படுக்கைபோடு. என்று அநுமான் முகத்தைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் பெருகவிட்டுப் புலம்பினார். இராமருடைய கண்ணீர் அநுமான் சரீரத்தில் பட்ட உடனே அவன் மூர்ச்சைதெளிந்து கண்விழித்துப் பார்த்தான். அப்பொழுது இராவணனுடைய பயத்தினாலே நடுங்கிக்கொண்டிருந்த உலகத்தாரைக் காப்பாற்றுவதற்காக மனுஷாவதாரஞ் செய்தவராயும், நீலமேக சாமளராயும், இரணகளத்துளிபடிந்த சரீரமுடையவராயும், ஜடாமண்டலத்தால் பிரகாசிக்கிறவராயும், தாமரைமலர்போல நீண்ட அங்கங்களையுடையவராயும், சண்டைசெய்து சிரமத்தை யடைந்தவராயும், தேவர்கள், ரிஷிகள், பிதுர்க்கள், கின்னரர்கள் முதலானவர்களால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டுக் கொண்டிருக்கிறவராயும், கிருபை நிறைந்த மனமுடையவராயும், சீதா இலட்சுமண சமேதராய், வானரங்களால் சூழப்பட்டவராயும், தன் சரீரத்தைத் தமது கைகளால் தடவிக்கொண்டிருந்தவராயு மிருக்கிற ஸ்ரீராமரைக்கண்டு எழுந்திருந்து, பூமியில் தண்டம்போல விழுந்து நமஸ்கரித்து, அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு துதிக்கிறார்: பிரபுவா

யார், விஷ்ணுவாயும், ஆதிதேவராயும், புராணராயும், கனகமயக் கங்கிலேசத்தினவராயும், சந்தோஷமடைந்த வானரசேனைகளால் சேவிக்கப்பட்ட பாதகமலங்களை யுடையவராயும், நித்தியம் புஷ்பகவிமானத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பவராயும், இராட்சதர்களையெல்லாம் நாசம்பண்ணி ஜகத்துக்கு உபகாரம் செய்தவராயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம்; ஸஹஸ்ரசிரசை உடையவராயும், ஸஹஸ்ரம் கண்களையுடையவராயும், சுத்தராயும், பக்தர்களுடைய துக்கத்தை நீக்குகிறவராயும், சீதாபதியாயும், இராகவனுமாயிருக்கிற உமக்கு நமஸ்காரம்; நரசிம்மாவதாரம் பண்ணி தைத்திய இராஜனாகிய ஹிரணியனைக்கொன்றவராயும், வராகாவதாரம் பண்ணிப் பூமியைப் பல்லிலே தாக்கினவராயும், திரிவிக்கிரமாவதாரம்பண்ணி மஹாபலியினுடைய பாகத்தையழித்தவராயும், கூர்மாவதாரஞ்செய்து மந்தரகிரியைச் சுமந்தவராயும், மத்சியாவதாரம்பண்ணி மூன்றுலோகங்களையும் பரிபாலித்தவராயும், பரசுராமாவதாரஞ் செய்து க்ஷத்திரியர்களை நாசம்பண்ணினவராயும், இராமாவதாரம் பண்ணி மஹாதேவனுடைய மஹாபயங்கரமான பெரியவில்லை முறித்தவராயும், க்ஷத்திரியர்களையெல்லாம் நாசம்பண்ணின பரசுராமனுக்குப் பயத்தையுண்டுபண்ணினவராயும், அகலியாசாபத்தை நீக்கினவராயும், பதினாயிரம் யானை பலத்தோடுகூடிய தாடகையைக் கொன்றவராயும், கல்லைப்போலக் கடினமாயும், விசாலமாயுமிருக்கிற வாலியினுடைய மார்பைப்பிளந்தவராயும், மாயாமிருகமாகவந்த மாரீசனைக்கொன்றவராயும், அநேகமான அலைகளோடுகூடின சமுத்திரத்தினுடைய கருவத்தை யடக்கினவராயும், இராட்சதர்களைச் சம்ஹாரம் பண்ணினவராயும், கோதண்டபாணியாயும், சீதையினுடைய மனதாகிய தாமரைப்பூவுக்குச் சூரியன்போலிருக்கிறவராயும், தசரதனுடைய துக்கமாகிற சமுத்திரத்தை வற்றச் செய்வதில் அகஸ்தியரை யொத்தவராயும், இராஜேந்திரராயும், ஜானகீபதியாயும், தாரகபிரமமாயும், தாமரைபோல் கண்களையுடையவராயும்; சுகசொரூபராயும், விசுவாமித்திரப் பிரியராயும், கரனைச்சம்ஹாரம் பண்ணினவராயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். ஏ! தேவதேவேசா! பக்தர்களுக்கு அபயங்கொடுப்பவனே! கருணைக்கடலே; இராமசந்திரா! என்னைக்காத்தருளும், வேதவாக்குகளுக்கு எட்டாதவராயும், இரகுகுலத்தில் பிறந்தவராயுமிருக்கிற ஏ இராமா! உம்மை நான் சரணமடைகிறேன்; நீரென்னைக் காத்தருளும். ஐயா! இரகு

வீரா; எனக்குண்டாயிருக்கிற மஹாமோகத்தை யிப்பொழுது நீக்கும். நான் ஸ்நானம்பண்ணிக் கொண்டிருக்கும்போதும், ஆசமனம் பண்ணிக்கொண்டிருக்கும் போதும், சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதும், விழித்துக்கொண்டிருக்கும் போதும், சொற்பனவஸ்தை சுழுத்தியவஸ்தை யிலிருக்கும்போதும், எல்லா விடத்திலும் என்னைக் காப்பாற்றும், ஏ இரகுநந்தனா? உம்முடைய மகிமையை ஸ்தோத்திரம்பண்ண யாரால் முடியும்? உம்முடைய பெருமையை நீரேயறியவேண்டும்; என்று இராமசந்திரனை ஸ்தோத்திரம்பண்ணிச், சீதையையும் பக்தியோடுகூட தோத்திரம்பண்ண ஆரம்பித்தார். ஏ ஜானகீ! சமஸ்தபாபங்களை நீக்குகிறவளாயும், தாரித்திரத்தையும், கடன்களையும் போக்கடிக்கிறவளாயும், பக்தர்களுக்கு இஷ்டத்தைக் கொடுக்கிறவளாயும், விதேக இராஜன் புத்திரியாயும், இராகவனுக்கு ஆனந்தத்தைச் செய்கிறவளாயும், பூமிதேவியின் குமாரத்தியாகியும், வித்தியா சொரூபியாகியும், பிரகிருதியாயும், மங்களகரையாயும், இராவணனுடைய ஐசுவரியத்தைக் குலைத்தவளாயும், ஐசுவரிய சொரூபியாயும், சரஸ்வதீ சொரூபியாயும், பதிவிரதாசிரோமணியாயும், அநுக்கிரகம் பண்ணுகிறதற்குத் தயாராயிருக்கிறவளாயும், பாபமற்றவளாயும், விஷ்ணுவுக்குப் பிரியையாயும், ஆத்மவித்யா சொரூபியாயும், வேதசொரூபியாயும், உமாசொரூபியாயும், மலர்ந்த முகத்தையுடையவளாயும், க்ஷீராப்திபுத்திரியாயும், சந்திரன் சகோதரியாயும், சர்வாங்கசுந்தரியாயும், தர்மத்துக்கிருப்பிடமாயும், கருணாமூர்த்தியாயும், வேதமாதாவாயும், தாமரைப்பூவிலிருந்து தாமரைப்பூவைக் கையில் பிடித்தவளாயும், விஷ்ணுவின் மார்பிலிருக்கிற இலட்சுமிதேவியாயும், சந்திரமண்டலத்தில் வசிக்கிறவளாயும், சந்திரனுக்குச் சமானமான முகத்தை யுடையவளாயும், பார்த்தவர்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குகிற சொரூபத்தை யுடையவளாயும், சித்தி சொரூபியாயும், லோகமாதாவாயும், இராமசந்திரனுடைய பிராணநாயகியான சீதாதேவியாயுமிருக்கிற உன்னை இருதயத்தில் எப்பொழுதும் தியானிக்கிறேன் என்று சீதையையும் துதித்து ஆநந்தக் கண்ணீர்பெருக மௌனமாயிருந்துவிட்டார். அநுமார் செய்த இராமசந்திர ஸ்தோத்திரத்தையும் சீதா தோத்திரத்தையும் தினந்தோறும் படிக்கிறவன் மகாஐசுவரியத்தையும், பூமியையும், தனதானியத்தையும், பால்ராசியுள்ள கறக்கிற பசுக்களையும், ஆயுசை

யும், வித்தைகளையும், புத்திரர்களையும், அநேகமான மனைவியையும் அடைகிறான். இந்த ஸ்தோத்திரத்தை ஒருநாள் படிக்கிறவன் பிரம்மஹத்தியாதி மஹா பாபங்களைச் செய்தவனாயிருந்தாலும் அந்தப் பாபங்களினின்றும் விடுபட்டுத் தேகாந்தத்தில் நாசத்தைப் பாராமல் முக்தியடைகிறான்.

மேலே சொன்னபடி அநுமாரால் ஸ்தோத்திரம்பண்ணப்பட்ட ஸ்ரீராமரானவர், அநுமாரைப்பார்த்து ஏ வானரோத்தமா! நீ மூடத்தனத்தால் யோசியாமல் காரியஞ்செய்துவிட்டாய்; நான் ஸ்தாபனம்பண்ணின லிங்கத்தை அசைப்பதற்கு இந்திரன்முதலான முப்பத்து முக்கோடி தேவர்களாலும், பிரமாவாலும், விஷ்ணுவாலும் முடியாது. இப்பொழுது நீ கீழே விழுந்து மூர்ச்சையடைந்தது மஹாதேவனுக்குச் செய்த அபசாரத்தாலே. இனிமேல் நீ சாம்பபரமசிவனுக்கு அபசாரஞ்செய்யாதே. இன்றையமுதல்கொண்டு நீ விழுந்து மூர்ச்சையடைந்த இடத்துக்கு அநுமகுண்டமென்று உலகத்தில் பெயர் வழங்கும். இதில் ஸ்நானம்பண்ணினதினால் மஹாபாதகங்களும் நிவர்த்தியாய்விடும், மஹாதேவனுடைய ஜடையிலிருந்து உண்டான கௌதமி, அந்த நதியில் ஸ்நானம்பண்ணுகிறவனுக்கு ஆயிரம் அசுவமேதயாகபலனை வருகிறது. அதைக் காட்டிலும் நூறுமடங்கு அதிகமான பலனைக் கொடுக்கத்தக்கது கங்கை, யமுனை, சரஸ்வதி, யென்னும் நதிகள். இந்த மூன்று நதியும் சேர்ந்து ஓடுகிற இடத்தில் ஸ்நானம்பண்ணினால் அதைவிட ஆயிரமடங்கு அதிகமான பலனை அடைகிறான். இந்த ஆயிரமடங்கு பலனானது அநுமகுண்ட ஸ்நானத்தினால் வந்துவிடும். துர்லபமான மனித ஜன்மத்தை யடைந்தும் அநுமகுண்டத்தில் பக்தியோடு சிராத்தஞ் செய்யாதவனுடைய பித்ருக்கள் நிராசையாய்க் கோபங்கொண்டு போய்விடுகிறார்கள். அப்படியே முனிவரும், இந்திரன் முதலான தேவர்களும், அவனைக் கோபித்துக்கொள்கிறார்கள். அநுமகுண்ட தீர்த்தத்தில் எவன் தானங்கொடுத்து ஹோமஞ்செய்யவில்லையோ அவனுடைய ஜன்மம் வீண். அவன் இகபரங்களில் துக்கங்களையுமடைகிறான். அநுமகுண்டத்தில் திலதர்ப்பணம் பண்ணுகிறவனுடைய பிதுர்க்கள் சந்தோஷமடைந்து மகிழ்ந்திருப்பார்கள் என்று இராமன் சொன்ன வசனத்தைக் கேட்டதும் வாயு புத்திரனான அநுமான் தான் கொண்டுவந்த லிங்கத்தை இராமலிங்கத்துக்கு வடபுறத்

தில் இராமர் கட்டளையின்படி அநுமலிங்கத்தை ஸ்தாபனம்பண்ணினார். இராமநாதலிங்கமானது அநுமார் வாலினாலே சுற்றப்பட்டதனால் அந்த லிங்கத்தில் இப்பொழுதுகூடப் பிரத்தியட்சமாய்த் தெரிகிறது.

இந்த அத்தியாயத்தைப் படிப்போரும் கேட்போரும் சமஸ்தபாபங்களையுந் தொலைத்துவிட்டுச் சிவலோகம்போய் வாழ்ந்திருப்பார்கள்.

நாற்பத்தாறுவது அத்தியாயம்

முற்றிற்று.

நாற்பத்தேழாவது

ஸ்ரீராமருக்குப் பிரம்மஹத்தி வந்த காரணங்கூறின

அத்தியாயம்.

ஐயா சூதமஹாமுனிவரே! மஹாத்மாவான ராமருக்கு ராட்சதனாகிய ராவணனைக் கொன்றதனால் பிரமஹத்தி யெப்படி வந்தது? உலகத்தில் பிராம்மணனைக் கொன்றதனாலல்லவோ பிரமஹத்தி வருகிறது. இராவணனோ பிராம்மணனல்லவே! அவனைக் கொன்றதனால் ராமசந்திரனுக்குப் பிரம்மஹத்தி யெப்படி வரக்கூடும்? இந்த விஷயத்தைச் சிரத்தையுடைய எங்களுக்குத் தயவுசெய்து சொல்லவேண்டும் என்று நைமிசாரணிய வாசிகளான மஹாரிஷிகள் கேட்கச், சூதமஹாமுனிவர் உத்தரஞ்சொல்லத் தொடங்கினார்.

கேளுங்கள் ரிஷீசுவரர்களே! பூர்வத்தில் பிரமதேவன் குமாரனான புலஸ்தியர் என்கிற மஹாதேஜஸையுடைய ஒரு பிராமணரிருந்தார். அந்தப் புலஸ்தியருக்கு விச்ரவஸ் என்ற ஒரு குமாரனிருந்தான் அவன் வெகுகாலந் தேவர்களாலுஞ் செய்யமுடியாத தபஸைச் செய்துவந்தான். அப்படித் தவஞ்செய்து வருங்காலையில் சொர்ணத்தால் செய்யப்பட்ட தோள்வளையும், காசுமாலையும் தரித்தவனும், நீருண்டமேகம்போலக் கறுத்தவர்ணமுடையவனுமான

சுமாலி என்கிற ஒரு இராட்சதன், கையில் தாமரை மலரைத்தாங்காத இலட்சுமிபோலிருந்த தன் பெண்ணையழைத்துக்கொண்டு பாதாளத்தினின்றும் பூலோகத்தில்வந்து திரிந்துகொண்டிருக்கையில் புஷ்பகமென்னும் விமானத்தில் வீற்றிருந்த விச்ரவஸின் குமாரனை குபேரனைக்கண்டு, இந்தக்குபேரனைப்போன்ற பிள்ளையொருவன் நமக்கிருந்தால் நாம் இராட்சதர்களெல்லாரோடும் நிர்ப்பயமாகவாழ்ந்துவரலாம் என்று யோசித்துக் கிட்டவிருந்த தன் பெண்ணைப்பார்த்து அம்மா கைகசீ உனக்குயௌவனம் வந்துவிட்டபடியால் விவாககாலம் சமீபித்துவிட்டது. உன்னை யாராவது ஒருவரனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தே தீரவேண்டும். பெண்களைத் தகுந்த வயதுவந்த காலத்தில் விவாகம் செய்துகொடாமல்போனால் தகப்பனுக்குத் துக்கமுண்டாகிறது. தவிர நீ சிரேஷ்டமான சர்வகுணங்களும் நிறைந்தவளாயிருக்கிறாய். வரித்தால் வாயிழந்துபோய்விடுவோமோவென்கிற பயத்தினால் ஒருவரும் உன்னைப் பாரியையாக வரிக்கத் துணியவில்லை. மானமுள்ளவன் பெண்ணைப்பெற்றால் பெரியதுன்பமே. அம்மா எந்த வர னுன்னை வரிக்கப்போகிறானோ எனக்குத் தெரியவில்லை. ஆகையால் நீ பிரமகுலத்தில் பிறந்த விச்ரவஸ் என்கிற மஹாரிஷியைப் பர்த்தாவாக நீயே வரித்துக்கொள். அப்படிச்செய்தால் குபேரனுக்குச் சமானமான புத்திரர்கள் உனக்குப் பிறப்பார்களென்பதில் சந்தேகமே கிடையாது என்று இவ்விதமாகத் தகப்பன் சொன்னதைக் கேட்ட கைகசி, தகப்பனிடத்தில் வைத்திருந்த மரியாதையினால் அப்படியே யாகட்டுமென்று சொல்லி விச்ரவஸ் என்பவருடைய பர்ணசாலைக்குட் புகுந்து அவருக்கெதிரில் வெட்கத்தோடுகூட நின்று கொண்டிருந்தாள். அந்தச் சமையத்தில் புலஸ்தியகுமாரனான விச்ரவஸ் என்பவர் சாயங்கால அக்கினி ஹோத்திரத்தைச் செய்துகொண்டு அக்கினிபோல ஜ்வலித்திருந்தார். தகப்பன் பேச்சைக்கேட்டுச் சந்தியாகாலமென்றறியாமல் வந்து வெட்கத்தால் தலை குனிந்து, பெருவிரல் நுனியால் பூமியைக் கீறிக்கொண்டு நின்ற சந்திரன்போன்ற முகத்தையும், சிறுத்த விடையையுமுடைய கைகசியைக்கண்டு விச்ரவஸ் புன்சிரிப்புக்கொண்டு அழகிய பெண்ணே ; உன் தகப்பன் யார்? நீயென்னத்துக்காக இங்கே வந்தாய்? எங்கிருந்து வந்தாய்? உன் கருத்தென்ன? எல்லாவற்றையும் எனக்கு உண்மையாய்ச் சொல்லிவிடு என்று கேட்டார். அப்பொழுது அந்தப் பெண்ணும் வணக்கத்தோடு கைகூப்பிக்கொண்டு சுவாமீ ! என்னுடைய அபிப்பிராயத்

தை உமது தபோமகிமையினால் அறிந்துகொள்ளத் தேவரீர் வல்லவர், ஆனாலும், புலஸ்தியகுலதீபம்போல விளங்குகின்ற பிராம்மணோத்தமா : என் வரலாற்றைச் சொல்லுகிறேன் கேளும். என்பேர் கைகசி என் தந்தைபேர் சுமாலி, என் தகப்பனுடைய கட்டளைப்படி நான் தங்களிடம் வந்திருக்கிறேன், மற்றவைகளையெல்லாந் தங்களுடைய ஞானதிருஷ்டியால் அறிந்துகொள்வீர்களென்பதில் ஐயமே கிடையாது என்று சொல்லிமுடித்தாள். அப்பொழுது க்ஷணகாலந் தியானம் பண்ணியந்தப் பெண்ணைப்பார்த்து அழகிய புருவமுடையவளே ! உன் மனக்கருத்து எனக்குத்தெரிந்துவிட்டது. நீ பிள்ளையை அபேக்ஷித்து என்னிடம் வந்திருக்கிறாய். ஆனால் நீ யிந்தக்குரூரமான சாயங்காலத்தில் புத்திரனை அபேக்ஷித்து என்னிடத்தில் வந்தபடியால் உனக்குப் பிறக்கிற பிள்ளைகளெல்லாம் பயங்கரமான சரீரமுடையவர்களாயும், உன்னுடைய முன்னோர்களுக்குப் பிரியமாயும், கொடிய செய்கைகளைச் செய்கிறவர்களுமான இராட்சதர்களாயிருப்பார்கள் என்று சொன்னதைக்கேட்ட கைகசி அவர் காலில்விழுந்து கைகூப்பிக்கொண்டு சுவாமீ தங்களாலெனக்குப் பிறக்கும் புத்திரர்களெல்லாரும் அவ்விதமாக இருப்பது தகாதே யென்றுசொல்ல, அந்த ரிஷியானவர் பெண்ணே ! உனக்குப் பிறக்கிற கடைசிபுத்திரன்மட்டும் என் வம்சத்துக்குத் தகுந்தவனாகவும், தர்மம், சாஸ்திரமிவைகளை யறிந்தவனாகவும், சாந்தனாகவும், ராட்சதகுணமில்லாதவனாகவுமிருப்பான் என்று பதில்சொல்லி முடித்தார். கொஞ்சகாலஞ்சென்ற பிறகு கைகசிக்குப் பத்துதலைகளும், இருபது கைகளும், சிவந்த உதடும், கறுத்த முகமும், சிவந்த மீசையும், செம்பட்ட மயிரும், பெரியபல்லும், பிரமாண்ட சரீரமும் உடைய உலகங்களுக்கெல்லாம் பயங்கரத்தை உண்டாக்குகிற துஷ்ட புத்தியுள்ள இராவணனென்கிற பிள்ளை பிறந்தான். அவனுக்குப்பின் கும்பகர்ணனும், அவனுக்குப்பின் மஹாதுஷ்டையான சூர்ப்பநகை என்கிற இராட்சசியும், அவளுக்குப்பின் புத்திசாலியாயும், தார்மிகனும், வேதசாஸ்திர மறிந்தவனுமிருந்த விபீஷணன் என்கிற பிள்ளையும் பிறந்தான். கேளுங்கள் ரிஷீசுவரர்களே ! இந்தமாதிரியாக இராவணன் முதலானவர்களெல்லாரும் விச்ரவஸ் என்கிற பிராமணனுடைய பிள்ளைகள். ஆகையால் இராவணனையும், கும்பகருணனையும் ஸம்ஹாரம் செய்ததனால் இராமருக்குப் பிரம்மஹத்திதோஷம் சம்பவித்தது. இந்தப் பிரம்மஹத்தி நிவர்த்திக்

காகத்தான் இராமர் இராமநாதலிங்கத்தை வேதவிதிப்படி ஸ்தாபித்தார். முனிவர்களே லோகப்பிரியரான ஸ்ரீராமமூர்த்திக்குப் பிரம்மஹத்திவந்த வரலாற்றை ஹேதுவோடு சொன்னதுமல்லாமல், அந்தப் பிரம்மஹத்தி நிவர்த்திக்காக இராமநாதலிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணினாரென்பதையும் எடுத்துரைத்து விட்டேன்.

இந்தமாதிரி லிங்கப்பிரதிஷ்டைபண்ணிக் கிருதார்த்தரான இராமசந்திர பரமாத்மாவுக்கு எங்கே பிரம்மஹத்திநிவர்த்தியாயிற்றோ அங்கே பிரமஹத்தியா விமோசனமென்கிற ஒரு தீர்த்தமுண்டாயிற்று. அதில் ஸ்நானம்பண்ணினால் பிரம்மஹத்தி நீங்கி மஹாபுண்ணியமுண்டாகிறது. அங்கே இராவணன் இப்பொழுதுங்கூடச் சாயாரூபமாக இருக்கிறான். அந்தத் தீர்த்தத்துக்கெதிரில் பாதாளலோகத்துக்குப் போகிற பெரிய பிலமிருக்கிறது. இந்தப் பிலத்தில் தசக்கிரீவனைக் கொன்றதனாலுண்டான க்ரூரமான பிரம்மஹத்தியைத் தள்ளிவிட்டு, அதின்பேரில் ஒரு பெரிய மண்டபத்தைக்கட்டி அதின்மேல் பைரவரை ஸ்தாபித்தார். அந்தப் பைரவருடைய பயத்தினால் பிரம்மஹத்தியானது கைகால்களை யடக்கிக்கொண்டு வெளியில் வரச்சக்தியில்லாமல் அங்கேயே யிருக்கிறது.

இந்த ராமநாதருக்குத் தெட்சணபாகத்தில் பரமசிவனுடைய பாதிசரீரமாகிய பார்வதியும், இருபக்கங்களில் சூரியசந்திரர்களும், எதிரில் அக்கினிபகவானும், கிழக்குத்திக்கில் இந்திரனும், ஆக்னேயதிக்கில் அக்கினியும், தென்திசையில் எமனும், நிருதிதிக்கில் நிருதியும், மேற்திசையில் வருணனும், வாயுதிக்கில் வாயுவும், வடதிசையில் குபேரனும், ஈசானதிக்கில் ஈசானனும், மஹாதேவனுடைய குமாரர்களாகிய விநாயகர் சுப்பிரமணியர் இரண்டுபேர்களும், வீரபத்திரர் முதலான பிரமதகண நாயகர்களும், இராமநாதர் ஆலயத்தில் தங்களுக்குரிய இடங்களிலிருந்து கொண்டிருக்கிறார்கள். முனிவர்களும், பன்னகர்களும், சித்தர்களும், கந்தர்வர்களும், அப்ஸரஸ்களும், பக்தியோடு சேவிப்பதற்காக சந்தோஷத்தோடு இராமநாதர் சந்நிதியிலிருந்து கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீராமமூர்த்தியானவர் இராமநாதரைப் பூஜைசெய்வதற்காக அநேக சுரோத்திரிய பிராமணர்களை யிராமேசுவரத்திலேற்படுத்தி, அவர்களுக்கு அநேக கிராமங்களையும் கொடுத்து, இராமநாதருடைய நைவேத்தியத்துக்காக அநேக கிராமங்களையும், வெகு தனத்தையும் தேவஸ்தானத்துக்குக்கொடுத்து, இராமநாதருக்கு முத்துமாலை, கடக கேயூரம், யார்ப்பதக்கம், முதலான ஆபரணங்களையும், அநேகபட்டு வஸ்திரங்களையும் கொடுத்தார். இந்த இராமேசுவரத்தில் கங்கை, யமுனை, சரயு, சரஸ்வதி யென்னும் நதிகள் தங்கள் தங்கள் பாபநிவர்த்திக்காக இராமநாதரைச் சேவித்துக்கொண்டு இருக்கின்றன.

கேளுங்கள் முனிசுவரர்களே! இந்த அத்தியாயத்தைப்படிப்பவரும் கேட்பவரும் சமஸ்த பாபங்களினின்றும் விடுபட்டு சிவ சாயுஜ்யத்தை யடைவார்கள்.

நாற்பத்தேழாவது அத்தியாயம்

முற்றிற்று.

நாற்பத்தெட்டாவது

சங்கரராஜன் பிரமஹத்தி ஸ்திரீஹத்திதோஷம் நீங்கின

அத்தியாயம்

ஏ! ரிஷீசுவரர்களே பாபத்தை நீக்கும்படியான இராமநாதரைப்பற்றிய ஒரு புண்ணியகதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். பூர்வகாலத்தில் சத்துரு பயங்கரனான சங்கரன் என்கிற பாண்டியதேசத்தரசனொருவனிருந்தான். அவன் பிராம்மணரிடத்தில் விசுவாசமுடையவனும், சத்திய சந்தனும், அடிக்கடி யாகம் பண்ணுகிறவனும், தார்மிகனும், வேத வேதாங்கங்களின் தத்துவங்களை யறிந்தவனும், புராணம், ஸ்மிருதிகளில் பாரங்கதனும், சிவன் விஷ்ணு இன்னம் மற்றுமுள்ள தேவதைகளைப் பூஜைபண்ணுகிறவனும், வைதிகாசாரத்தை யனுஷ்டிக்கிறவனும், மஹாத்மாக்களான பிராம்மணர்களுக்கு நித்தமும் மஹா தானம்பண்ணுகிறவனுமிருந்த இந்த அரசன் நாலுவருணங்களையும், ஆசிரமங்களையும் தருமமாகப் பரிபாலனஞ் செய்துகொண்டுவந்தான். இவனொரு சமயத்தில் காலில் பாதுகைபணிந்து, சிவந்த தலைப்பாகை தரித்து, மஞ்சள் வஸ்திரத்தை யிடுப்பில் உடுத்துக் கையுறைபூண்டு, வில், அம்பு, கத்தி முதலான ஆயுதங்கள் தரித்து, வெள்ளைக் குதிரைமேலேறித் தன்னைப்போல வேஷந்தரித்த காலாள்களோ

டும், வேட்டைக்காரர்களோடும் சிங்கம், புலி, முதலிய மாம்சபட்சணிகளான மிருகங்கள் நிறைந்ததாயும், யானை, எருமை முதலான துஷ்டப்பிராணிகளால் பயங்கரமாயும், ஜில்லிகா என்கிறவண்டினுடையபயங்கரமான சப்தத்தோடுகூடினதாயும், பாம்புகள் நிறைந்ததாயும், எரிகிற காட்டுத்தீயோடு கூடினதாயுமிருக்கிற காட்டில் புகுந்து, காட்டாறுகளைத் தாண்டி, மலைக்குகைகளிலே மிருகங்களைத்தேடி, விடாதே விடாதே; இதோ வேகமாயோடுகிறதென்று தன்னுடைய சைனியங்கள் சொல்லத், தான் கிளம்பி ஓடுகிற மானைக்கொன்றும், அடர்ந்த காட்டுக்குள் புகுந்து சிங்கம்வராகம், மகிஷம், யானை, சரபம் முதலான காட்டுமிருகங்களைக் கொன்றும் வேட்டையாடிவந்தான். இப்படி வருகையில், புலித்தோலணிந்து அசையாமல் ஒரு குகையின் மத்தியிலுட்கார்ந்திருந்த ஒரு ரிஷியைப் புலியென்று நினைத்துக் கணுக்குறுகின பாணத்தால் அடித்து சம்ஹாரப்பண்ணி, அவர்கிட்ட உட்கார்ந்திருந்த அவருடைய பத்தினியையும் அடித்துக் கீழே சாய்த்து விட்டான். அப்பொழுது அவர்களுடைய புத்திரனானவன் தன் தாய்தந்தையர் இறந்ததைக்கண்டு துக்கம்மேலிட்டு, ஏ அப்பா! ஏ அம்மா? என்னைவிட்டு நீங்கள் எங்கே போய்விட்டீர்கள். நான் எங்கேபோவேன்? யாரைச் சரணமடைவேன்? அப்பா; எனக்கார்வேதாத்தியயனஞ் செய்து வைப்பார்கள்? அம்மா! எனக்கார் ஊறுகாயோடே அன்னம் போடுவார்கள்? அப்பா! நீர் இறந்த பிறகு எனக்கார் ஆசாரங்களைச் சொல்லிக்கொடுப்பார்கள்? அம்மா? நான் கோபித்துக் கொண்டால், என்னை யார் சீராட்டுவார்கள்? எனக்குப் பிராணனும் குருவாயுமிருந்த நிர் அபராதிகளான நீங்கள் என்ன பாபஞ்செய்து அம்புபட்டு மாண்டீர்கள் என்று வாய்விட்டுக் கதறினான். அதுகேட்டுச் சங்கர ராஜனும் அந்தக் குகையை நோக்கி யோடிவந்தான். அப்படியே அங்கிருந்த ரிஷிகளும் அந்த ஆச்சிரமத்துக்கோடிவந்து அம்பால் அடிபட்டிறந்த முனிவரையும், அவருடைய பத்தினியையும், கையில் வில்லையேந்தின அரசனையும், வாய்விட்டலறிக்கொண்டிருந்த ரிஷிபுத்திரனையும் கண்டு, மிகவும் வருத்தங்கொண்டு, குழந்தையைப் பார்த்து அப்பா! அழாதேயென்றுசொல்லிச் சமாதானப்படுத்த ஆரம்பித்தார்கள். அப்பா! எமதருமராஜாவுக்கு பணக்காரனும் ஏழையும் சரியே; படித்தவனும் மூடனும் சரியே; வலுத்தவனும் இளைத்தவனும் சரியே;

சமஸ்த பிராணிகளும் காட்டில் வசித்தாலுஞ் சரி, நாட்டில் வசித்தாலும் சரி, நகரத்தில் வசித்தாலும் சரி, கிராமத்தில் வசித்தாலும் சரி, பருவதத்தில் வசித்தாலும் சரி, மற்றுமுள்ள இடத்தில் வசித்தாலும் சரி, யெமனிடம் போய்த்தான் தீரவேண்டும்; கர்ப்பத்திலிருந்தாலும் சரியே, பிறந்தாலும் சரியே, சிறுவனாயிருந்தாலும் சரியே, கிழவனாயிருந்தாலும் சரியே, எல்லாரும் எமபட்டணம் போய்த்தான் தீரவேண்டும், காலம் வந்துவிட்டால் பிரமசாரியும், கிருகஸ்தனும், வானப் பிரஸ்தனும், சந்நியாசியும் தேகத்தைவிட்டே தீரவேண்டும். குழந்தாய் கேளு, தேவர்களும், முனிவர்களும், யட்சர்களும், கந்தர்வர்களும், உரகர்களும், இராட்சதர்களும், பிரம விஷ்ணு ருத்திரன் முதலானவர்களும், நாசத்தையடைந்தே தீரவேண்டும். உபநிஷத்தில் சொல்லப்பட்ட சச்சிதானந்த சொரூபியான பிரமமொன்றுக்குத்தான் இறப்புப்பிறப்பு விருத்தி என்கிற விகாரங்கள் கிடையாது. மலபாண்டமாயும், நவத்துவாரமுடையதாயும், இரத்தம், சீழ், ஊன், கண்ணீர் நிறைந்ததாயும், புழுக்கூட்டம் நிறைந்ததாயும், காமக்குரோத மதமாற்சரியம், பயம் துரோக முதலியவைகள் குடிகொண்டதாயும், பரதாரம் பரக்ஷேத்திரம், பரதிரவியமிவைகளில் ஆசைகொண்டதாயும், இம்சை, அசூசை, அசூயையிவைகளால் வியாப்தமாயும், மூத்திரக்காஞ்சியமாயும் நீர்க்குமிழிக்கு ஒப்பாயுமிருக்கிற இந்தச் சரீரத்தை உயர்ந்ததென்று நினைக்கிறவன்பரமமூடன். துர்ப்புத்தியுடையவன். பல ஓட்டையோடுகூடின குடத்துக்குச் சமானமான இந்த அசுசியான தேகத்தில் பிராணனென்கிற வாயுவானது வெகுகாலந் தங்கியிராது. ஆகையால் குழந்தாய்! தாய்தந்தையர் இறந்துபோனதைப் பற்றி நீ துக்கப்படாதே. அவர்களிருவரும் தங்களுடைய கர்மாநுசாரத்தால் தேகத்தைவிட்டுப் போய்விட்டார்கள். நீயும் உன்கரும வசத்தால் இந்தப் பூமியில் தங்கியிருக்கிறாய், உன் பிராரப்தகரும க்ஷயமெப்பொழுதுண்டாகுமோ? அப்பொழுது நீயும் மரிக்கப் போகிறாய். இறந்துபோனவர்களைக் குறித்து நீ அழுவதானது செத்துப்போன பிணத்துக்குச் சாகப்போகிற பிணமானது அழுவதுக்குச் சமானமாயிருக்கிறது. எந்தக்காலத்தில் உன் தாய் தந்தையர்கள் ஜனித்தார்களோ அந்தக்காலத்தில் நீ ஜனிக்கவில்லை. ஆகையால் நீங்கள் போகும்காலமும் வேறுபட்டுத்தானிருக்கும். அவர்களோடு போகுங்காலம் உனக்கும் ஏற்பட்டிருந்தால் அவர்கள்போயிருக்குமிடத்துக்கு நீயும்போயிருப்பாய்; பூதலத்தில் பந்

தாக்கள் விடுகிற கண்ணீரைச் செத்துப் பிரேதமாயிருக்கிறவர்கள் பரலோகத்தில் பானம்பண்ண நேரிடும். ஆகையால் நீ துக்கத்தை விட்டுத் தைரியத்தைக்கைக்கொண்டு அவ்விருவர்க்கும் வேதத்தில் சொல்லப்பட்ட பிரேதகாரியங்களைச் செய். உன் தாய் தந்தையர்கள் அப்படிபட்டு இறந்துபோன தோஷநிவர்த்திக்காக அவர்களுடைய அஸ்திகளை யெடுத்துக்கொண்டு இராமேசுவரம் போய் அங்கே புதைத்து ஸபிண்டீகரணாதி சிராத்தத்தையும் செய். அப்படிச் செய்தால்தான் அவரவர்களுக்குத் தோஷநிவர்த்தியாம். வேறு விதத்தால் கிடையாது என்று சமாதானம் செய்ததன் மேல் ஜாங்கலன் என்கிற சாகல்ய ரிஷிகுமாரன் தன் தாய் தந்தையர்களுக்குப் பிதுர்காரியத்தைச் செய்துமுடித்தான். மறுநாள் அஸ்திகளை யெடுத்துக்கொண்டு ஆலாசியம்போய் அங்கிருந்து உடனே இராமேசுவரம்போய் முனிவர் சொன்னமாதிரியாகத் தாய் தந்தையர்களுடைய அஸ்திகளை அங்கே புதைத்து ஒருவருஷம் தங்கியிருந்து மாசிகமுதலான சிராத்தங்களையும், ஆப்திகசிராத்தத்தையும் செய்து முடித்தான். அன்றையதினம் இராத்திரியில், சொற்பனத்தில் தன் தாய்தந்தையர்கள் சங்குசக்கிர கதாதாரிகளாயும், தாமரைமாலை, துளசிமாலை, மகரகுண்டலம், கௌஸ்துபமிவைகளை யணிந்தவர்களாயும், அரையில் பீதாம்பரந் தரித்தவர்களாகவும், கருடாரூடர்களாகவும் வரக்கண்டு, ஆனந்தம் பொங்கித் தன் ஆச்ரமம் திரும்பிவந்து தான் சொற்பனத்தில் கண்ட சமாசாரத்தை அங்குள்ள ரிஷிகளுக்குத் தெரிவித்தான். ரிஷிகளும் அதுகேட்டுச் சந்தோஷமடைந்தார்கள். பிறகு அந்த ரிஷிகளெல்லாரும் சங்கராஜனைக்கண்டு, அதிக கோபங்கொண்டு மஹாமூடனான பாண்டியராஜனே ! முரட்டுத்தனமாய் ஸ்திரீஹத்தியையும், பிரமஹத்தியையுஞ்செய்த நீ அக்கினியில் விழுந்திறக்காமல் பதினாயிரம் பிராயச்சித்தம் பண்ணிக்கொண்டாலுமுனக்குச் சுத்திகிடையாது. உன்னோடு பேசினதினாலேயே பதினாயிரம் பிரமஹத்தி யெங்களுக்கு வந்துவிடும். பாண்டியகுலத்தைக் கெடுத்த மஹாபாபீ, நீ யெங்கள் முன் நில்லாதே ; ஓடிப்போ என்று கடூரமாய்ப் பேசித்துரத்தினார்கள். அதுகேட்ட சங்கராஜனும் ஐயா ! முனிவர்களே ! தங்களுக்கு முன்னாலே தாங்கள் சொன்னபடியே நெருப்பில் விழுந்து சாகத்தயாராயிருக்கிறேன். அப்படி விழுந்த பிறகாவது எனக்குப் பிரமஹத்தி நீங்கும்படி நீங்களெல்லாரும் அநுக்கிரகம்பண்ணவேண்டும். என்று நயந்து சொல்லிப் பின்பு மந்திரிகளைப்பார்த்து

ஓ மந்திரிகளே ! நான் யோசியாமல் நரகத்தைக் கொடுக்கும்படியான பிரமஹத்தியையும், ஸ்திரீஹத்தியையும் பண்ணிவிட்டேன். இந்தப் பாதகங்கள் நீங்கும்படியாக இந்த ரிஷீசுவரர்கள் சொன்னபடியே யெரிகிற அக்கினியில் என் சரீரத்தைப் போட்டு பிராணனைவிடப்போகிறேன். ஆகையால் சீக்கிரத்தில் காஷ்டங்கொண்டுவந்து அக்கினி மூட்டுங்கள் என்னுடைய புத்திரனாகிய சுநசி. என்பவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவையுங்கள், நான் போகிறேனே யென்று மனவருத்தப் படாதேயுங்கள்; விதியைவெல்லமுடியுமா ? என்று சொன்னவுடனே மந்திரிகளெல்லாருங் கேட்டு மனம் நொந்து சத்துருக்களிடத்திலும் பிரியமாயிருக்கிற பாண்டியநாட்டரசனே ! இதுவரையில் எங்களைப் பரிபாலனம்பண்ணி வந்தீர். அப்பேர்ப்பட்ட உம்மைவிட்டு அமராபதிக்குச்சமானமான பட்டணத்துக்கு நாங்கள் தனிமையாகப் போகமாட்டோம் ஆகையால் நாங்களும் உமக்காக வளர்த்தநீயில் விழுந்து பிராணனைவிட்டு விடுகிறோம் என்று அழுது புலம்பினதைக் கேட்ட சங்கராஜனும் மந்திரிகளே ! மஹாபாதகம் பண்ணின என்னால் உங்களுக்கென்ன பிரயோசனம் ? ஐயோ ; சிம்மாசனம் ஏறுவதற்கு அருகனுப்விட்டேனே. இந்த நாலு சமுத்திரத்துக்குட்பட்ட பூமியைப் பரிபாலனம்பண்ணுவதற்கு என் பிள்ளையை சிம்மாசனமேற்றிவையுங்கள். மந்திரிகளே ! தாமதம்பண்ணுவதில் பிரயோசனமில்லை. சீக்கிரம் அக்கினியை மூட்டுங்கள் என்று சமாதானப்படுத்தினதின்பேரில் மந்திரிகளரசன் சொற்படி காஷ்டங்களைக் கொண்டுவந்து அக்கினி மூட்டினார்கள். உடனே பாண்டியராஜன் ஸ்நானம் பண்ணி, ஆசமனஞ்செய்து பரிசுத்தனாகி, அக்கினியையும், ரிஷீசுவரர்களையும் வலம்வந்து அவர்களை நமஸ்கரித்து, உமாபதியாகிய பரமசிவனைத் தியானித்துத் தைரியத்தைவிடாமல் அக்கினியில் குதிக்கயத்தனம்பண்ணினான். அப்பொழுது ரிஷிகளெல்லாருங் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுதே ஆகாசத்தில் ஒரு அசரீரிவாக்குத் தோன்றி, ஏ ! சங்கராஜனே அக்கினியில் விழாதே ! பிரமஹத்தி பயம் உனக்கு வேண்டியதில்லை. இரகசியமாயும், வேத சம்மதமாயுமிருக்கிற ஒரு உபாயஞ் சொல்லுகிறேன் ஜாக்கிரதையாய்க்கேளு. தெட்சணசமுத்திரக்கரையில் கந்தமாதன பர்வதத்தில் பாபவிநாசனமாயும், புண்ணியப் பிரதமாயுமிருக்கிற இராமசேதுவில் தசரதராமனால் பிரதிஷ்டை பண்ணப்பட்ட இராமலிங்கமென்கிற ஒரு சிவலிங்க

மிருக்கிறது. நீ ஒரு வருஷகாலம் பக்தி பூர்வமாக அந்தச் சிவலிங்கத்தைத் திரிகாலங்களிலும் பிரதட்சண நமஸ்காரம் செய். அந்த லிங்கத்துக்குத் தினம்தோறும் இரண்டு பாரம் பசுவின் நெய், இரண்டுபாரம் பசுவின் பால், பதக்குத்தேன் இவைகளால் மஹாபிஷேகஞ்செய்வித்து, சந்தன, அகரு, கற்பூரங்களைச் சாத்தி, நல்லெண்ணெயால் தீபமேற்றி, பாயசம் முதலான நானாவித நைவேத்தியங்கள் செய்தால் ஸ்திரீஹத்தி பிரமஹத்தி யிவைகளிரண்டும் அந்தக்ஷணமே நசித்துப்போய் விடுகின்றன. இராமநாதரைக்கண்டமாத்திரத்தில் நாலுபுருஷஹத்தியும், பதினாயிரம் பிரமஹத்தியும், பதினாயிரம் சுராபான தோஷமும், பதினாயிரம் சொர்ணஸ்தேய தோஷமும், பதினாயிரம் குருபத்தினி கமனதோஷமும், இவர்களோடு சேர்ந்ததனாலுண்டான தோஷமும் இந்தப் பஞ்சமஹாபாதகங்களுக்குச் சமானமான இதரதோஷங்களும் உடனே பஸ்மமாய்ப்போய்விடுகின்றன. இராமநாதசேவை மனிதர்களுக்குக் கிடைக்குமானால் கங்கை, கயை, பிரயாகை முதலான தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுவானேன்? யாகங்கள்தான் செய்வானேன்? ஆகையால் அரசனே உடனே புறப்பட்டு இராமசேதுவுக்குப்போய், இராமநாதரைச் சேவைசெய்; தாமதம்பண்ணாதே; சீக்கிரம் புறப்படு என்று சொல்லிமுடித்தது. அதுகேட்ட ரிஷிகளெல்லாரும் இராஜனைப்பார்த்து ஐயா! இராமநாதருடைய மகிமையை யறியாமல் நாங்கள் அக்கினிப் பிரவேசத்தைப் பிராயச்சித்தமாக விதித்தோம். இப்பொழுது அசரீரிவாக்கு விதித்தபடி நீர் இராமசேதுவுக்குப்போம் என்று அரசனைத் துரிதப்படுத்தினார்கள். உடனே அரசனும் தன்னுடைய சதுரங்க பலத்தையும் ஊருக்கு அனுப்பிவிட்டு, ரிஷிகளை நமஸ்கரித்துக் கொஞ்ச சைனியத்தோடும், ஏராளமான பணத்தை யெடுத்துக்கொண்டு, அதிக சந்தோஷத்தோடுகூடக் கந்தமாதனம் போய்ச்சேர்ந்து, முக்தியைக்கொடுக்கும்படியான இராமசேதுவில் ஒருவருஷந்தங்கி, ஏகவாரம் போஜனஞ்செய்து, கோபத்தையும் இந்திரியங்களையுமடக்கி, மூன்றுகாலமும் பக்தியோடுகூட இராமநாதரைச் சேவித்து, அசரீரிவாக்குச் சொன்னபடி தினந்தோறும், இராமநாதருக்கு மஹாபிஷேகஞ்செய்வித்து தனுஷ்கோடியில் நித்தியமும் ஸ்நானஞ்செய்து, பிரதிதினமும் பிராமணர்களுக்கு அன்னம்போட்டு, இராமநாதருக்குப் பத்துப்பாரம் திரவியங்கொடுத்து ஆராதனைசெய்து வந்தான். இப்படி ஒருவருஷமான பின் இராஜனுக்குப் பாபம் நீங்கிப் பரிசுத்தமுண்டானதின்

பேரில் அதிக சந்தோஷப்பட்டு கிருபாநிதியான இராமநாதரை ஸ்தோத்திரம்பண்ண ஆரம்பித்தான்.

உமாபதியாயும், ஈசானராயும், ருத்திரராயுமிருக்கிற ராமநாதரே யுமக்கு நமஸ்காரம்; திரிபுரத்தை யெரித்தவராயும், காளகூடத்தைப் பானம்பண்ணினவராயு மிருக்கிற மஹாதேவா! என்பேரில் கிருபைகூர்ந்து என் பிரமஹத்தியை நீக்கி என்னைக் காத்தருளவேண்டும்; ஏ! கங்காதரா! விருபாட்சா! திரிநேத்திரா! கருணைக்கடலே! இராமநாதா! எனக்கு வந்திருக்கிற ஸ்திரீஹத்தி தோஷத்தை நீக்கிக் காத்தருளும்; காமாரீ! பக்தர்கள் கேட்டதை யெல்லாங்கொடுக்கும் இராமநாதா! என்னுடைய பாபத்தை யெல்லாம் நீக்கி யென்பேரில் தயவுவைத்துக் காப்பாற்றும்; தூர்ஜடீ! மார்க்கண்டேயருக்கு அபயங்கொடுத்து மிருத்தியுவை ஜயித்த பரமசிவா! என்னிடத்தில் கடாக்ஷம்வைத்து என்னைப் பரிசுத்தனாக்கும். ருத்திராக்ஷமாலை யணிந்தவராயும், சந்திரனைச்சிரசில் தரித்தவராயும், பார்வதிக்குப் பாதிசரீரத்தைக் கொடுத்தவராயுமிருக்கிற சங்கரா! உமக்கு வந்தனம். என்னை யெப்பொழுதும் பாபந் தீண்டாதவனாகச்செய்து, வேதோக்தமான ஆசாரானுஷ்டானத்துக்கருகனாகச் செய்யும். சூரியனுடைய பல்லையுடைத்தவராயும், சரஸ்வதியினுடையமூக்கை அறுத்தவராயுமிருக்கிற இராமேசுவரா! உமக்கு நமஸ்காரம். சச்சிதாநந்த சொரூபராயும், ஆதியந்த மற்றவராயும், விருஷபத்துவஜராயுமிருக்கிற உமக்கு அடிக்கடி வந்தனம் செய்கிறேன். என்னுடைய பாபங்களெல்லாம் நசித்துப்போகட்டும் என்று பக்தியோடுகூட இராமநாத தேவனை ஸ்தோத்திரம் பண்ணினபொழுது அரசனுடைய முகத்திலிருந்து கறுத்தவஸ்திரமுடுத்ததாயும், மிகச்சிவந்ததாயுமிருந்த பிரமஹத்தியானது வெளிப்பட்டது. அப்படி வந்த பிரமஹத்தியைப் பைரவரானவர் பரமசிவனுடைய உத்தரவினால் தன் சூலத்தினால் அடித்துக்கொன்றார். உடனே இராமநாதரானவர் ஸ்தோத்திரம் பண்ணின சங்கரராஜாவைப்பார்த்து, பாண்டியராஜனே நீ செய்த ஸ்தோத்திரத்தினால் நானுனக்குப் பிரஸன்னமாய்விட்டேன். உனக்கு வந்திருந்த ஸ்திரீஹத்தி, பிரமஹத்தியாகிய இரண்டு தோஷங்களும் நீங்கிப் பரிசுத்தனாய்விட்டாய். நீ முன்போல இராஜ்யபரிபாலனம் செய்யலாம். எவர்கள் இந்த க்ஷேத்திரத்தில் என்னைத் துதிக்கிறார்களோ அவர்கள் செய்த பதினாயிரம் பிரமஹத்தி தோஷங்களையும் இதர தோஷங்களையும் நான் நாசம் பண்ணிவிடுவதில் ஆக்ஷே

பணியில்லை. அரசனே கேள், என்னைப் யாராதிக்கிறவர்களுக்கு மறுபிறப்பே கிடையாது. என்னுடைய சாயுஜ்யத்தையே அடைவார்கள். நீ செய்த இந்த ஸ்தோத்திரங்களால் யார் என்னைத் துதிக்கிறார்களோ அவர்களுடைய மஹாபாதகக்கூட்டங்களை நான் நீக்கிவிடுவேன். மஹாராஜாவே நீ செய்த பக்தியாலும் ஸ்தோத்திரங்களாலும் நான் திருப்தியடைந்திருக்கிறபடியால் உனக்கு வேண்டிய வரங்களைக்கேள் என்று சொன்ன இராமநாதரைப் பார்த்துச் சங்கராஜனானவன் மஹாபிரபோ! தங்களைக்கண்டமாத்திரத்திலேயே நான் கிருதார்த்தனாய்விட்டேன். மிருகண்டு மஹாரிஷியின் பயத்தையும், துக்கத்தையும் நீக்கின உமது பாதார விந்தங்களை நான் கண்டதே பெரிய பாக்கியம். எனக்கு வேறே வரங்கள் வேண்டுவதில்லை. ஆனாலும் உம்முடைய பாதார விந்தங்களில் சலனமற்ற பக்தி கிடைக்கவேண்டும். மறுபடியும் நான் தாயின் வயிற்றில் பிறக்கப்படாது. நான் செய்த ஸ்தோத்திரத்தைப் படிப்பவர்களுக்கும் சகல பாபங்களும் நீங்கி, உம்மைச் சேவைசெய்யப் பலன் கிடைக்கவேண்டும். இந்த மூன்று வரங்களை யருளிக்காக்கவேண்டுமென்று சொன்னான். அப்படியே ஆகட்டுமென்று அநுக்கிரகம் பண்ணி யிராமநாதரானவர் லிங்கத்தில் அந்தர்த்தானமடைந்துவிட்டார். இராஜன் இராமநாதரிடத்தில் அநுக்கிரகம் பெற்றுக் கிருதார்த்தனாய்விட்டோமென்று எண்ணிக்கொண்டு தன் சைனியத்தோடுகூடச் சந்தோஷத்தோடு புறப்பட்டுக், காட்டிலிருந்த மஹாரிஷிகளுக்குச் சமாசாரமெல்லாஞ் சொல்லித் தன் பட்டணம் போய்ச்சேர்ந்து, அந்த ரிஷிகளால் மறுபடியும் பட்டாபிஷேகம் பண்ணப்பட்டுத் தன் புத்திரகளத்திராதிகளோடும் மந்திரிகளோடும் சத்துருபயமற்று வெகுகாலம் இராஜ்ய பரிபாலனம்பண்ணிக்கொண்டு வந்தான். பிறகு அந்தியகாலத்தில் இராமநாதரைத் தியானித்துக்கொண்டு சரீரத்தைவிட்டு நீங்கி இராமநாதருடைய சாயுஜ்யத்தை யடைந்தான்.

கேளுங்கள் முனீசுவரரே யிப்படியாக இராமநாதருடைய வைபவத்தையும், சங்கராஜனுடைய புண்ணிய சரித்திரத்தையும், சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தைச் சிரத்தையோடு படிப்பவரும், கேட்பவரும், சகல பாபங்களினின்றும் முக்தர்களாகி யிராமநாதருடைய சாயுஜ்யத்தை யடைவார்.

நாற்பத்தெட்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

நாற்பத்தொன்பதாவது

இராமநாதர் ஸ்தோத்திரங்கூறின

அத்தியாயம்

கேளுங்கள் ரிஷீசுவரர்களே; மஹாபுண்ணியமான இராமநாதருடைய ஸ்தோத்திராத்தியாயத்தைச் சொல்லுகிறேன். ஸ்ரீராமன் தான் பிரதிஷ்டைபண்ணின இராமநாத லிங்கத்தை ஸ்தோத்திரம் பண்ணினார். அப்படியே இலட்சுமணன், சீதை, சுக்கிரீவன் முதலான வானரங்கள், பிரமாமுதலான தேவர்கள், அகஸ்தியர் முதலான ரிஷிகள், இவர்களெல்லாருந் தனித்தனியே யிராமநாதரைப் பக்தியுடன் ஸ்தோத்திரம் பண்ணினதைச் சொல்லுகிறேன் ஆதரவுடன் கேளுங்கள்.

இராமர் செய்த ஸ்தோத்திரம்—மஹாத்மாவாயும், மஹாமாயியாயும், சூலியாயும், தன்னுடைய பாதாம்புயங்களில் பக்திசெய்கிறவர்களுடைய துக்கங்களை நீக்குகிறவராயும், சர்வத்தையும் அழிக்கிறவராயும் இருக்கிற உமக்கு நமஸ்காரம். தேவாதிதேவராயும், சாட்சியாயும், வேதாந்தவேத்தியராயும், யோகிகளுக்குத் தத்துவத்தை யுபதேசிக்கின்றவராயும், சதானந்த பரிபூரணராயும், உலகத்துக்கெல்லாம் நாதராயும், சம்புவாயுமிருக்கிற இராமநாதருக்கு நமஸ்காரம். பக்தர்களுடைய பயத்தைப்போக்குவதான பாதாம்புயத்தூளிகளோடு கூடினவராயும், எல்லாவற்றுக்கும் நாயகராயும், சாக்ஷாத்பரமாத்மாவாயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். ஆச்சரியகரமான வீரியத்தோடு கூடினவராயும், மஹாபாதகநாசனராயும், காலகாலராயும், காலனையும், காலாதீதராயுமிருக்கிற உமக்கு வந்தனம்; அவித்தையை நாசம் பண்ணுகிறவராயும், பாபத்தைச் சங்கரிக்கிறவராயும், சம்சார தாபத்தை யடைந்தவர்களுடைய துக்கத்தைப் போக்குகிறவராயுமிருக்கிற உமக்கு வந்தனம். என்னுடைய பிரமஹத்தியை நாசம்பண்ணினவராயும், விஷபானம்பண்ணினவராயுமிருக்கிற உமக்கு வந்தனம். பார்வதிநாதா! கைலாசவாசா! அவ்யயா! உமக்கு வந்தனம். கங்காதரா! விருபாட்சா! சகலமான ஆபத்துகளினின்றும் என்னைக் காத்தருளவேண்டும். பினாகத்தைக் கையிலேந்தினவராயும், மன்மதனையெரித்

த்வராயுமிருக்கிற உமக்கு நான் எக்காலத்திலும், எந்த நிலைமையிலும் அடிக்கடி நமஸ்காரம் பண்ணுகிறேன்.

இலட்சுமணர் செய்த ஸ்தோத்திரம்—திரிபுரத்தை யெரித்தவராயும், பார்வதிக்குப் பிராணநாதராயும், கணேசர், ஸ்கந்தர் இவர்களைப் புத்திரர்களாகப் பெற்றவராயும், சூரியன், சந்திரன், அக்கினி, இவர்களை நேத்திரமாகக் கொண்டவராயும், கபர்த்தியாயும், இராமநாதராயுமிருக்கிற உமக்கு வந்தனம் வந்தனம். ஸோமராயும், மார்க்கண்டேயருடைய பயத்தைத் தீர்த்தவராயும், சகல பிரபஞ்ச சிருஷ்டிஸ்திதி சம்மாரங்களுக்குக் காரணமாயும், சிவனுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். உக்கிரராயும், பீமராயும், மஹாதேவராயும், சாக்ஷியாயும், ஸர்வக்ஞராயும், ஸ்ரேண்யராயும், வாமாயும், வரத்தைக் கொடுக்கிறவராயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். ஸ்ரீகண்டராயும், பஞ்ச மஹாபாதகங்களைத் தொலைக்கிறவராயும், சச்சிதானந்த சொரூபராயுமிருக்கிற உமக்கு வந்தனம். ஸம்ஸார ரோகத்தை நிவர்த்தி பண்ணுகிறவரும், ஸ்தாயுக்களுக்கெல்லாம் பதியானவராயும், தஸ்கரர்களுக்கெல்லாம் பதியாயும், வனங்களுக்குப் பதியாயும், விசுவ சொரூபியாயும், விசுவ சாட்சியாயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். சம்புவே! யென்னுடைய கர்மவசத்தால் எந்த ஜன்மமெடுத்தாலும் அந்தந்த ஜன்மத்தில் உமது பாதாரவிந்தத்தில் எனக்குப் பக்தியிருக்கவேண்டும். உம்முடைய கிருபையால் என் மனது துன்மார்க்கத்தில் செல்லாமல், சன்மார்க்கத்திலேயே செல்லவேண்டும், உமக்கு நமஸ்காரம் நமஸ்காரம்.

சீதைசெய்த ஸ்தோத்திரம்—பரமகாரணா! சங்கரா! தூர்ஜடீ! பார்வதியினுடைய ஸ்தனகுங்குமத்தால் விளங்குகிறவரே! பரபுருஷரிடத்தில் என் புத்தி செல்லாமல் என்னுடைய நாயகனிடத்திலேயே என் சித்தமிருக்கும்படி யநுக்கிரகம் பண்ணவேண்டும். கங்காதரா; விரூபாட்சா; நீலலோகிதா! சங்கரா! இராமநாதா! உமக்கு நமஸ்காரம்! கருணாமூர்த்தியே யென்னைக் காத்தருளவேண்டும். தேவதேவேசா; கருணைக்கடலே; சம்சாரத்தில் பயமடைந்தவர்களுக்குச் சம்சாரபயத்தை நீக்குகிறவரே; வந்தனம். வந்தனம். வந்தனம். நாதா; சம்பூ; ஜகத்பிரசித்தரான மார்க்கண்டேயரானவர் உம்முடைய சரணாரவிந்த பக்திபண்ணின படியால் எமபயத்தை உதறி நித்தியத்துவத்தை யடைந்தார். பரேசா! உம்மை ஆச்ரயித்தால் எதுதான் கைகூடிவராது? பரமாநந்தா! சரணாகத

பாலகா; பரேசா; எப்பொழுது மெனக்கு பதிவிரதாதர்மத்தைக் கொடுத்து இரட்சியும். உமக்கு வந்தனம், வந்தனம்.

சுக்கிரீவன்பண்ணின ஸ்தோத்திரம்—ஜன்மமிருத்யு ஜரைகளாகிய, பயத்தோடுகூடியதும், புத்திர தாரதன க்ஷேத்திரங்களாகிய அலைகள் மோதுகிறதும், பிரமாண்டமுழுதும் முழுகிக்கிடக்கிறதுமாகிய சம்சாரசாகரத்தில் விழுந்து கரையேற வழிதெரியாமல் அழுதுகொண்டும், ஏழையாயும், விஷயங்களாகிற துஷ்டஜந்துக்களை கண்டு பயப்பட்டுக்கொண்டும், வியாதிகளாகிற முதலையால் வருத்தப்பட்டுக்கொண்டும், தாபத்திரயங்களாகிற மீன்களால் துன்பப்பட்டுக்கொண்டுமிருக்கிற என்னை இராமநாதா! நீர் காத்தருளவேண்டும், உமச்கு வந்தனம் வங்கனம்.

அநுமார் செய்த ஸ்தோத்திரம்—தேவதேவா! ஜகந்நாதா! கிருபாநிதியே! இராமநாதா! உமக்கு வந்தனம். உம்முடைய பாதாரவிந்தங்களில் எனக்குச் சலனமற்ற பக்தியிருக்கவேண்டும், எவர் இல்லாமல் உலகம் கிடையாதோ, எவர் இல்லாமல் உலகத்துக்குப் பிரகாசமில்லையோ! அப்பேர்ப்பட்ட சத்தாயும், சித்தாயுமிருக்கிற இராமநாதரான உமக்கு நமஸ்காரம்.

அங்கதன் பண்ணின ஸ்தோத்திரம்—எவருடைய பிரகாசத்தால் உலகம் விளங்குகிறதோ; எவருடைய பிரகாசமில்லாமல் உலகம் விளங்கவில்லையோ அப்பேர்ப்பட்ட இராமநாதராயும், சம்புவாயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம்.

ஜாம்பவான் செய்த ஸ்தோத்திரம்—எவருடைய ஆனந்தமானது உண்மையாக ஸர்வானந்தமாய் விளங்குகிறதோ அந்தப் பரமாநந்த சொரூபராகிய இராமநாதருக்கு நமஸ்காரம்.

நீலன் பண்ணின ஸ்தோத்திரம்—எந்த வஸ்துவானது தேசகாலதிக்குப் பேதங்களால் வேறுபடாமல், அத்துவைதமாயிருக்கிறதோ அந்த வஸ்துவான இராமநாதருக்கு நமஸ்காரம்.

நளன் செய்த ஸ்தோத்திரம்—பிரம விஷ்ணு மஹேசன் முதலானவர்களெல்லோரும் எவருடைய மாயையால் தோன்றினார்களோ அந்த மாயைக்குட்படாதவரான இராமநாதராகிய உமக்கு நமஸ்காரம்.

குமுதன் செய்த ஸ்தோத்திரம்—எவருடைய சொரூபத்தை யறியாமல் பிரதானத்தைக் காரணமென்று சொல்லுகிறார்களோ

அந்தப் பிரதானத்துக்கும் காரணராயிருக்கிற இராமநாதா; உமக்கு நமஸ்காரம்.

பனசன் பண்ணின ஸ்தோத்திரம்—எவருடைய அவித்தையாலே ஜாக்கிர, சொற்பன, ஸுஷுப்தி முதலான அவஸ்தைகளுண்டாகின்றனவோ, எவருக்கு அந்த ஜாக்கிராதி அவஸ்தைகள் கிடையாவோ, எவர் ஞானசொரூபியோ அப்பேர்ப்பட்ட உமக்கு நமஸ்காரம்.

கஜன் செய்த ஸ்தோத்திரம்—எவருடைய சொரூபத்தை யறியாமல் சில தார்க்கீகர்களான வைசேஷிகர்கள் காரியங்களுக்கெல்லாம் பரமாணுவைக் காரணமாகக் கற்பித்துக்கொள்ளுகிறார்களோ அப்பேர்ப்பட்ட பரமாணுக்களுக்கும் காரணபூதராய்ப், பரமானந்த சொரூபராய்ச் சர்வசாட்சியாய் விளங்காநின்ற இராமநாதா! உம்மை ஆத்மசொரூபியாக நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

கவாக்ஷன் செய்த ஸ்தோத்திரம்—அஞ்ஞான பாசத்தால் கட்டுண்டிருக்கிற பசுக்களின் பாசமோசனம் செய்கிறவராயும், சாந்தராயும், சிவனாயும், இராமநாதராயுமிருக்கிற உம்மைச் சரணமடைகிறேன்.

கவயன் பண்ணின ஸ்தோத்திரம்—தன்னிடத்தில் ஆரோபணம் பண்ணப்பட்ட ஜகத்துக்கு ஆதாரபூதராயும், சந்திரசூடராயும், உமாபதியாயும், சம்சாரமாகிற ரோகத்துக்கு ஔஷதமாயுமிருக்கிற இராமநாதா உம்மை வணங்குகிறேன்.

சரபன் செய்த ஸ்தோத்திரம்—எதையறியாமல் அந்தக்கரணத்தை ஆத்மாவென்று மூடர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்களோ அப்பேர்ப்பட்ட ஆத்மாவாயிருக்கிற இராமநாதா உமக்கு நமஸ்காரம் பண்ணுகிறேன்.

கந்தமாதனன் செய்த துதி—உமாநாதராயும், கணநாதராயும், திரியம்பகராயும், ஜகதீசுவரராயுமிருக்கிற இராமநாதா என்னுடைய சமஸ்தபாபங்களும் நீங்கி நான் பரிசுத்தனாவதற்காக உம்மை உபாசிக்கிறேன்.

வானரக்கூட்டங்கள் செய்த துதி—பிரபுவே! இழிவும், உயர்வுமான யோனிகளில் ஜனித்துக், கும்பீபாகாதி நரகங்களில் விழுந்து, கர்மசேஷத்தால் மறுபடியும் சனயோனிகளிற் பிறந்து, இவ்விதமாகச் சம்சாரத்தில் விழுந்து, கதியற்று, அலறித் தவிக்கின்ற எங்களை, தயாநிதியே! மகேசுவரா! இராமநாதா காத்தருள வேண்டும்.

விபீஷணர் பண்ணின ஸ்தோத்திரம்—சம்புவே! ஜனங்கள் சஞ்சரிக்கும் வழியற்றதாயும், வியாதிகளாகிற திருடர்களும் சிங்கங்களும் நிறைந்ததும், ஜன்மமாகிற புலியோடு கூடினதும், லயம் என்கிற பாம்போடு கூடியதும், பாலியம் யௌவனம், வார்த்தகம் என்கிற இருண்ட கிணறுகளுள்ளதாயும், கோபம், பொறாமை, பேராசை ஆகிய காட்டுத்தீயை யுடையதாயும், இந்திரிய சுகங்களென்கிற குரூர பர்வதங்களுள்ளதாயும், பயம் துக்கமென்கிற முட்கள் நிறைந்ததாயுமிருக்கிற சம்சாரமாகிற காட்டின் நடுவில் அகப்பட்டுக் கதியில்லாமல் தியங்கிக்கொண்டிருக்கிற எனக்கு நல்வழி காட்டியருளும்.

விபீஷணன் மந்திரிகள் செய்த துதி—வரதராயும், வரேண்யராயும், திரிணேத்திரராயும், திரிசூலியாயும், யோகிகளால் தியானம் பண்ணத்தக்கவராயும், நித்தியராயுமிருக்கிற இராமநாதா! உமக்கு வந்தனம்.

பிரமா செய்த துதி—லோகநாதராயும், சம்புவாயும், சருவேசருமாயிருக்கிற இராமநாதா! உமக்கு நமஸ்காரம். தயவுசெய்து என்னுடைய அவித்தையை நீக்கிவிடும்.

இந்திரன் செய்த ஸ்துதி—இராமநாதா! ஜகன்மாதாவாயும், வேதசொரூபியாயுமிருக்கிற உமாதேவியைச் சக்தியாகப்பெற்றிருக்கிற உமக்கு நமஸ்காரம்,

யமதருமராஜன் செய்த ஸ்துதி—கணேசரையும், ஸ்கந்தரையும், புத்திரர்களாகவும், விருஷபத்தை வாகனமாகவுங் கொண்ட இராமநாதா! என்னுடைய அஞ்ஞானமெல்லாம் நீங்குவதற்காக உம்மை நமஸ்கரிக்கிறேன்.

வருணன் செய்த ஸ்துதி—மிருகண்டு புத்திரரான மார்க்கண்டேயர் யாரைப்பூஜைசெய்து மிருத்யுவை ஜயித்தாரோ அப்படிப்பட்ட மிருத்யுஞ்சயரான இராமநாதா! உம்மை இருதயத்தில் தியானம் பண்ணி உபாசிக்கிறேன்.

குபேரன் செய்த ஸ்துதி—ஈசுவரராயும், கர்ணகுண்டலமணிந்தவராயும், செம்பஞ்சுக்குழம்புபோலச் சிவந்த நிறமுடையவராயும் இருக்கிற இராமநாதா! உமக்கு வந்தனம்.

சூரியன் செய்த ஸ்துதி—திரியம்பகா! மஹாதேவா! இராமநாதா! தட்சயாகத்தை யழித்த உமக்கு நமஸ்காரம் என்னைக் காத்தருளும்.

சந்திரன் செய்த ஸ்தோத்திரம்—விபூதியணிந்தவராயும், கையில் சூலமேந்தினவராயும், சர்ப்பமாலை பூண்டவராயும், தயாநிதியாயும், மஹாமயானத்தில் வாசம் பண்ணுகிறவராயுமிருக்கிற இராமநாதா! உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

அக்கினிதேவன் துதித்தது—இந்திராதி சகல தேவர்களாலுஞ் சேவிக்கப்பட்ட பாதாம்புயத்தை யுடையவராயும், திக்குகளை வஸ்திரமாயுடையவராயும், சுத்தராயுமிருக்கிற இராமநாதா! உமக்கு நமஸ்காரம்.

வாயுதேவன் செய்த துதி—ஹரராயும், ஹரிசொரூபராயும், புலித்தோலை வஸ்திரமாகத் தரித்தவராயுமிருக்கிற இராமநாதா! உமக்கு நமஸ்காரம். என்மனோபீஷ்ட பூர்த்திசெய்தருளவேண்டும்.

பிருஹஸ்பதி செய்த துதி—அகங்காரத்துக்குச் சாட்சிபூதராயும், பிரத்தியக்கு அத்துவைத வஸ்துவாயுமிருக்கிற இராமநாதா! உமக்கு நமஸ்காரம். என்னுடைய அஞ்ஞானத்தை நீக்கிக் காத்தருளவேண்டும்.

சுக்கிரன் பண்ணின துதி—வஞ்சர்களுக்கு எளிதிலகப்படாதவராயும், மஹா மந்திரார்த்த சொரூபியாயும், துவைதமற்றவராயும், சம்புவாயுமிருக்கிற இராமநாதா! உமக்கு நமஸ்காரம்.

அசுவனி தேவதைகள் செய்த துதி—யோகிகளுடைய இருதயத்தில் ஆத்மசொரூபியாய் எப்பொழுதும் விளங்குகிறவராயும். இதர ஒளியால் அறியப்படாதவராயுமிருக்கிற இராமநாதா! உமக்கு வந்தனம்.

கந்தர்வர்கள் செய்த துதி—இராமநாதா அபாரமான துக்கத்தால் நிறைந்த சம்சார சாகரத்தில் முழுகிக் கிடக்கிற எங்களுக்கு உம்மைத்தவிர வேறு கதிகிடையாது.

கின்னரர்கள் செய்த துதி—இராமநாதா! வியாதிகளாகிற புலிகளால் பயங்கரமான சம்சாரமாகிற காட்டில் உம்மைத்தவிர எங்களுக்கு வழிகாட்டுகிறவர் யார்?

யக்ஷர் செய்த துதி—எப்பொழுதும் இந்திரியங்களாகிற சத்துருக்கள் செய்கிற துன்பம் சகிக்கமுடியாது. தூர்ஜடீ! அந்த இந்திரியங்களைச் செயிக்க நீர் எங்களுக்கு உதவி செய்தருளவேண்டும்.

நாகர் செய்த துதி—அம்பிகாபதியான இராமநாதா! அற்ப புத்தியுள்ள நாங்கள் அசிந்திய மகிமையையுடைய உம்மை ஸ்தோத்திரம்பண்ண எப்படிச் சக்தியுள்ளவர்களா யிருக்கக்கூடும்?

கிம்புருஷர் செய்த துதி—இராமநாதா! உமக்கு வந்தனம் பண்ணுகிறோம். நாலுயோனிகளில் பிறப்பதையும், எங்களுடைய அஞ்ஞானத்தையும் நீக்கிவிடவேண்டும்.

வித்தியாதரர் செய்த துதி—விருஷபத்துவஜராயும், அம்பிகாபதியாயும், மாயாசம்பந்தமற்றவராயும், மஹாத்மாவாயுமிருக்கிற இராமநாதா! உமக்கு வந்தனம் கருணைசெய்தருளும்.

வசுக்கள் செய்த துதி—இராமநாதா! பிரமதகணங்களுக்கதிபதியாயும், பிரமதகணங்களால் பூஜிக்கப்பட்ட பாதாம்புயத்தையுடையவராயும், கங்காதரராயும், இரகசியமானவராயுமிருக்கிற உமக்கு வந்தனம்; எங்களை எப்பொழுதுங் காத்தருளும்.

விசுவேதேவர்கள் செய்த துதி—ஞானமொன்றையே பற்றியிருக்கிற யோகிகளுக்கு முத்தியைக் கொடுக்கிறவராயும், ஸாம்பராயும், சங்கரராயுமிருக்கிற இராமநாதா! உமக்கு நமஸ்காரம் எங்களைக் காத்தருளும்.

மருத்துக்கள் செய்த துதி—தத்துவங்களெல்லாவற்றுக்கும் பரதத்துவமாயும் உண்மையான தத்துவமாயும், சுயம்பிரகாசராயும், சம்புவாயுமிருக்கிற இராமநாதா! உமக்கு நமஸ்காரம்.

சாத்தியர்கள் செய்த துதி—தன்னைத் தவிர வேறு இல்லாதவராயும், ஜகத்துக்குச் சத்தைக்கொடுத்தவராயும், மாயையை நீக்குகிறவராயுமிருக்கிற இராமநாதா! உமக்கு நமஸ்காரம்.

தேவர்களெல்லாரும் செய்த துதி—சச்சிதாநந்த சொரூபராயும், துவைதமற்றவராயும், சுயம்பிரகாசராயும், ஆத்மசொரூபராயும், ஆதிமத்தியாந்த வர்ஜிதராயும், விகாரமற்றவராயும், பற்றற்றவராயும், பரிசுத்தராயும், நித்தியராயும், ஆகாசாதி பிரபஞ்சங்களுக்குச் சாட்சிபூதராயும், பரராயும், அமிர்தராயும், பிரமாதிகராயும், பிரமாணங்களுக்கு விளக்கத்தைத் தருபவராயும், தோற்றம், மறைவு, குறைவு முதலிய விகாரங்களில்லாதவராயும், தன்னிடத்தில் ஆரோபணம் பண்ணப்பட்ட இந்தப் பிரபஞ்சத்துக்குச் சாட்

சியாயும், நிர்லேபராயும், பிரமானந்தராயும், பூமாநந்தராயும், சித்ரூபியாயும், மஹாத்மாவாயும், பிரமசொரூபியாயும், இருக்கிற இராமநாதா! ஆத்மாநந்தத்தை யநுபவிக்க விரும்புகிற நாங்களெல்லாரும், எங்களுடைய பாபபரிசுத்திக்காக உம்மைச் சதா சித்தத்தில் தியானிக்கிறோம். கருணைக்கடலான இராமநாதா! உம்மை வணங்குகிறோம், எங்களைக் காத்தருளும். ருத்திரசொரூபியாயும், சம்சார துக்கத்தை நாசம் பண்ணுகிறவராயும், தன்னுடைய மாயையாலே பிரம விஷ்ணுவாதி சொரூப பேதங்களை யடைந்தவராயிருக்கிற இராமநாதா! உமக்கு வந்தனம், வந்தனம்.

அகஸ்தியர் செய்த துதி—ஆதிதேவா! மஹாதேவா! விசுவேசுவரா! சிவா! அவ்யயா! அம்பிகாநாதா! விருஷபதுவஜா! சந்திரசேகரா! இராமநாதா! கிருபைகூர்ந்து நான் செய்த அபராதங்களையெல்லாம் பொறுத்தருளும். புத்திராதிகளிடத்திலுள்ள எனதென்கிற அகங்காரத்தையும், நான் என்கிற அகங்காரத்தையும் நீக்கியருளும்.

சுதீக்ஷணர் செய்த துதி—க்ஷேத்திரங்கள், இரத்தினாதி தனங்கள், வஸ்திரங்கள், பசுக்கள், புத்திரமித்திரகளத்திராதிகள் இவைகளெல்லாம் ஆபத்துக்குதவாதவைகள்; ஆகையால் இராமநாதா! இவைகளிடத்தில் எனக்கு விரக்தியுண்டாகும்படி கிருபைசெய்தருளவேண்டும்.

விசுவாமித்திரர்—இராமநாதா! ஈசுவரனாகிய உம்மிடத்தில் மனிதனுக்குப் பக்தியில்லாமல்போனால், அவன் குருமுகமாய்க் கேட்ட சாஸ்திரங்களும், அத்தியாயனம்பண்ணின மூன்று வேதங்களும் பலன் தராமல் வீணாய்ப்போகின்றன.

காலவர் செய்த துதி—இராமநாதா! உம்மை நமஸ்கரியாதவர்கள் செய்த தானங்களும், யாகங்களும், விரதங்களும், தபசுகளும், கங்காதி தீர்த்தஸ்நானங்களும் வீண் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

வசிஷ்டர் செய்த துதி—இராமநாதா! ஒரு மனிதன் கோரமான எல்லாப் பாபங்களையும் செய்திருந்தபோதிலும் அவனும்மைப் பக்தியோடு வணங்கினானேயானால் அவனுடைய பாபங்களெல்லாம் சூரியனைக்கண்ட இருட்டைப்போல விலகிப்போய் விடுகின்றன.

அத்திரி செய்த துதி—இராமநாதா! மனிதன் ஈசனாகிய உம்மை ஒருபொழுதாவது தரிசித்து, ஸ்பரிசித்து, நமஸ்கரித்தால் அவன் மறுஜென்மமடையாமல் உமது அத்துவைத சொரூபத்தை யடைகிறான்.

அங்கிரஸ் செய்த துதி—இராமநாதா! ஒரு மனிதன் உம்மிடம் வந்து உம்மை நமஸ்காரம் பண்ணும்பொழுது தன்னுடைய பந்துக்களை நினைத்துக்கொண்டால் அந்தப் பந்துக்களும் சகல பாபங்களும் நீங்கிக் கரையேறுவார்களென்றால் நமஸ்காரம் பண்ணினவன் கிருதார்த்தனாவான் என்பதிலாச்சரியமென்ன விருக்கிறது?

கௌதமர் செய்த துதி—உத்தமமாயும், சோகமொழிப்பதாயுமிருக்கிற உம்முடைய பாதாரவிந்தத்தைப் பஜிக்கிறவர்களையெவர்கள் வணங்குகிறார்களோ அவர்கள்கூடத் தன்னியர்களாய் விடுகிறார்கள். இராமநாதா! இது இரகசியமானது.

சதாநந்தர் செய்த துதி—இராமநாதா! வேதாந்த இரகசியங்களை யறிந்தவர்களாயும் முமுட்சுக்களாயுமிருக்கிறவர்கள் அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால் சகல சாஸ்திரங்களையும் விட்டுவிட்டு உம்மைப் பஜிப்பது ஒன்றையே கைக்கொள்ளவேண்டுமென்பதே.

பிருகு செய்த ஸ்தோத்திரம்—இராமநாதா! உம்முடைய இரண்டு பாதகமலங்களையுந் தியானம்பண்ணிப் பாபங்களையுதறி விட்ட மனிதன் பயரகிதமாயும், சத்தாயும், சுகசொரூபமாயும், அத்துவைதமாயும், சுயம்பிரகாசமாயும், மாயாரகிதமாயும், சித்கன சொரூபியாயுமிருக்கிற உம்மையடைகிறான்.

சுக்ரர் செய்த ஸ்தோத்திரம்—இராமநாதா! இரசத்தைக் கிரகிக்கிற எந்த மனிதன் தான் போகமோட்சங்களைக் கொடுக்கிறதாயும், ரௌரவாதி நரகங்களைப் போக்குகிறதாயுமிருக்கிற உமது பாதாரவிந்த சேவையைச் செய்யமாட்டான்?

காசியபர் செய்த ஸ்துதி—இராமநாதா! உம்முடைய பாத சேவை பண்ணுகிறவர்கள் விரதமநுஷ்டிப்பானேன்! தபசுபுரிவானேன்! யாகங்கள் செய்வானேன்! வேதமோதுவானேன்! சாஸ்திரம் படிப்பானேன்! ஜபம் செய்வானேன்! ஆகாசத்திலிருந்து வந்த கங்கையில் ஸ்நானம்பண்ணுவானேன்?

ஆங்கிரஸர் செய்த ஸ்தோத்திரம்—இராமநாதா! சம்போ! என்னுடைய மரணகாலத்தில் நீர் பார்வதி சமேதராய் வந்து சோக மோகங்களைப் போக்குகிறதும், ஞானானந்த சொரூபமாயுமிருக்கிற உமது பாதார விந்தத்தை நானடையும்படி அனுக்கிரகம் பண்ண வேண்டும்.

கேளுங்கள் முனீசுவரர்களே! இப்படியாக இராமாதிகளால் துதிக்கப்பட்ட ஸ்ரீராமநாதரானவர், ஜானகீ காந்தனான இராமா! இலட்சுமணா! ஜானகி! சுக்கிரீவன் முதலான வானரேசர்களே! பிரமாதி தேவர்களே! அகஸ்தியாதி ரிஷீசுவரர்களே! நீங்கள் எல்லாரும் நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேளுங்கள். நீங்களெல்லாரும் அன்போடு செய்த ஸ்தோத்திரங்களைப் படிப்பவரும், கேட்பவரும், பிறர் கேட்கும்படி சொல்லுகிறவர்களும், என்னை அர்ச்சனை பண்ணினபலனையும், இராமதனுஷ்கோடியில் ஸ்நானம் பண்ணின புண்ணிய பலனையும், இராமசேதுவில் ஒருவருஷம் வாசம் பண்ணுகிறதாலுண்டாகும் பலனையும், கந்தமாதன பருவதத்தின் நடுவிலிருக்கிற ஸர்வ தீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணின பலனையும் அடைந்து, ஜன்மதுக்கம், ஜராதுக்கம், மரணதுக்கமென்கிற மூவகைத்துக்கங்களையும் ஒழித்து, என்னுடைய சாயுஜ்யத்தையடைவார்களென்பதில் ஐயமேயில்லை; ஐயமேயில்லையென்று சொல்லியருளினார்.

நாற்பத்தொன்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஐம்பதாவது

சேதுமாதவன் இராமசேதுவில்வந்த கதை உரைத்த

அத்தியாயம்.

பிராமணோத்தமர்களே! பாபஹரமாயும், புண்ணியமாயுமிருக்கிற சேதுமாதவன் வைபவத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

பூர்வகாலத்தில் சந்திரவம்சத்தில் பிறந்த புண்ணியநிதி என்கிற அரசன் ஆலாசியநாதர் விளங்கிக்கொண்டிருக்கிற மதுராபுரியையாண்டு வருகையில், ஒருநாள் இராமசேதுவில் ஸ்நானம்பண்ண

வேண்டுமென்கிற எண்ணங்கொண்டு, தன் புத்திரனை மதுராபுரியைப் பரிபாலிக்க நியமித்துவிட்டுத் தன்னுடைய பத்தினியையழைத்துக்கொண்டு சதுரங்க பல சேனைகளோடு இராமசேது வந்துசேர்ந்து தனுஷ்கோடியிலும், கந்தமாதனத்திலுள்ள வேறு பல தீர்த்தங்களிலும் சங்கற்பபூர்வமாக ஸ்நானம்பண்ணிப் பக்தியோடு இராமநாதரை யாராதித்து, வெகுகாலம் இராமேசுவரத்தில் சுகமாய் வசித்துக்கொண்டிருந்தான். அப்படியிருக்கையில் ஒருநாள் விஷ்ணுவுக்குப் பிரியமான ஒரு யாகத்தைச் செய்து, யாகமுடிவில் பத்தினிபரிவாரம் சகிதமாய்த் தனுஷ்கோடியில் அவபிருதஸ்நானம் செய்து முடித்து, இராமநாதரைத் தரிசனம் பண்ணிக்கொண்டு தன் வீடுபோய்ச் சுகமாய் வசித்துக்கொண்டிருந்தான்.

இப்படி யரசன் வசித்துவரும் நாளையில் ஒருநாள், வைகுண்டத்தில் மஹாலட்சுமிக்கும், மஹாவிஷ்ணுவுக்கும் இவ்வரசனுடைய பக்தியைப்பற்றி விளையாட்டாக விவாதமுண்டாக மஹாலட்சுமியானவள் பந்தயம் போட்டுக்கொண்டு, மஹாவிஷ்ணுவின் உத்தரவு பெற்று, அரசனுடைய பக்தியைப் பரிசோதிக்கும் பொருட்டு, எட்டு வயது பெண்வடிவங்கொண்டு வைகுண்டத்தைவிட்டுக் கந்தமாதனத்திலிருக்கிற தனுஷ்கோடியில் வந்து நின்றாள். அந்தச் சமயத்தில் புண்ணியநிதி ராஜன் தனுஷ்கோடியில் தன் பத்தினியோடும், பரிவாரத்தோடு நியமமாக ஸ்நானம்பண்ணித், துலாபுருஷதான முதலான எல்லாத் தானங்களையும் செய்து, வீட்டுக்குத் திரும்பிப்போக ஆயத்தனாக இருந்தான், அப்பொழுது அதிரூப சௌந்தரியமுள்ளவளாயும், கொவ்வைப்பழம்போலச் செவந்த உதட்டை உடையவளாயும், சிறுத்த இடுப்பை யுடையவளாயும், அழகியகண்களை யுடையவளாயும், அழாமல் சிரித்தமுகமுடையவளாயுமிருந்த எட்டு வயதுள்ள ஒரு கன்னிகையைக்கண்டு, குழந்தாய்! நீ யார்; யாருடைய கன்னிகை? நீ யெங்கேயிருந்து வந்தாய்? எதற்காக வந்தாய்? என்று வினவினான். உற்பலம்போலக் கண்ணையுடைய அந்தப்பெண் மஹாராஜனே! எனக்குத் தாய்தந்தையர்கள் கிடையாது? பந்துக்களுமில்லை. நான் அநாதை; உமக்கு நான் புத்திரியாகி உமது வீட்டிலேயே வசிக்கப் பிரியமுடையவளாக இருக்கிறேன். என்னைப் பலாத்காரம் பண்ணுகிறவனைத் தண்டிக்கிறேனென்று வாக்குக்கொடுத்தீரானால் உம்மைத் தகப்பனாராகப்பாவித்து உமது வீட்டில் வாசம் பண்ணுவதற்கு ஆக்ஷேபனை

யில்லையென்று உக்காருஞ்சொன்னாள். அதுகேட்ட குணநிதியான அந்த அரசன் நீசொன்னபடியே செய்கிறேன். எனக்குப் புத்திரியில்லை. ஒரே புத்திரனிருக்கிறான். நீ யென் வீட்டுக்கு வந்து அந்தப்புரத்தில் வசித்துக்கொண்டிரு. என் பாரியையும் உன்னைப் புத்திரிபோலப் பாவித்து நடத்துவாள். நீ யார்பேரில் விருப்பம் வைக்கிறாயோ அவனுக்கு விவாகஞ்செய்து கொடுக்கிறேனென்று சொன்னதின்பேரில் அந்தப்பெண்ணுமப்படியே நல்லதென்று அரசனோடேகூட வீடுபோய்ச்சேர்ந்தாள். இராஜனும் தன் பாரியையான விந்தியாவளி என்பவளைப் பார்த்துப் பிராணநாயகி! நமக்கு ஒரு கன்னிகை யில்லாமலிருக்கிறது. ஆகையால் இந்த அழகான பெண்ணை நீ வளர்த்து, இதரபுருஷர்களாலிந்தப் பெண்ணுக்குத் துன்பமுண்டாகாதபடி இரட்சித்துக்கொண்டுவா என்று சொல்லி அந்தப் பெண்ணை யவளிடமொப்புவித்தான். விந்தியாவளி அப்படியே யாகட்டுமென்று அந்தப்பெண்ணைக் கைப்பிடித்தழைத்துக் கொண்டுபோய் அந்தப்புரத்தில் வைத்துக்கொண்டாள். அந்தக் கன்னிகையும் அரசனால் தன் பெண்போலப் போஷித்து வளர்த்துச் சீராட்டப்பட்டுச் சுகமாய் வாழ்ந்து வந்தாள். இந்தச் சமையத்தில் ஜகநாதரான மஹாவிஷ்ணுவானவர் கருடவாகனத்திமேலேறிக்கொண்டு, இலட்சுமிதேவியைத்தேடும்பொருட்டு, வைகுண்டத்தை விட்டுப்புறப்பட்டு. ஆகாசமார்க்கத்தைக் கடந்து, பலதேசங்களிலுஞ் சுற்றித்திரிந்தும் இலட்சுமியைக் காணாமல் கடைசியாகக் கந்தமாதனம் வந்து, அங்கே நாலாபுறத்திலும் தேடித்திரிந்து கொண்டிருக்கையில் அரசன் வீட்டில் வளர்ந்துவந்த அந்தப் பெண்ணும், அரண்மனையை யடுத்த பூஞ்சோலையில் புஷ்பம் பறிக்கும்படி சகிகளோடு வந்து, அங்கே பூக்கொய்து கொண்டிருந்தாள். அந்த வேளையில், ஸர்வாங்கமும் விபூதிஉத்தூளனஞ்செய்துகொண்டு, நெற்றியில் திரிபுண்டரம் விளங்க, ருத்திராட்சமாலை யணிந்து, சிவநாமங்களை ஜபித்துக்கொண்டு வலது கையில் பவித்திரம் தரித்துத், தோளில் உத்தரீயம் அணிந்து. கங்காஜலக்காவடி தாங்கிக், காசியாத்திரை போய்வந்த பிராமணனைப்போல வேஷந்தரித்து, மஹாபரிசுத்தரா யெதிரில்வந்து நின்ற மஹாவிஷ்ணுவைக்கண்டு புஷ்பங்கொய்து கொண்டிருந்த அந்தப்பெண் திடுக்கிட்டு நின்றாள். அந்தப் பிராமணன் காதுக்கினிமையாகப்பேசின அழகான பெண்ணைப் பலாத்காரமாகப் பிடித்திழுக்க அவளும் சகிமார்களும் கூச்சலிட்டழுதார்கள். அழுகைச் சத்தங்கேட்டுச், சபையிலிருந்த புண்ணியநிதி யரசன் சில சேவகரோடு தோட்டத்தை நோக்கி யோடிவந்து, பெண்களா! நீங்களேன் அழுதீர்கள்? உங்களைப் பலாத்காரம் பண்ணினவன் யார்? என்று கேட்டான். அந்தப்பெண் பயங்கொண்டு, மனம்நொந்து, கண்ணீர்பெருக அப்பா! இந்த மரத்தடியில் பயமில்லாமலுட்கார்ந்திருக்கிற பிராமணன் தான் என் கையைப்பிடித்திழுத்தான் என்று கோபத்தோடு சொன்னாள். அதுகேட்ட குணநிதியான புண்ணியநிதிராஜன் அந்தப் பிராமணனுடைய பலத்தை யறியாமல் அவனைக் கைப்பிடியாகப் பிடித்து, இராமநாதர் கோவிலுக்குக் கொண்டுபோய்ச் சிக்ஷித்துக், காலில்விலங்கிட்டுக், கயிற்றால்கட்டி மண்டபத்தில் கொண்டுபோய்ச் சிறையாக வைத்துவிட்டுத், தன் பெண்ணைச் சமாதானப்படுத்தி அந்தப்புரத்துக் கனுப்பிவிட்டுத், தானும் தன்னுடைய அழகான அரண்மனை போய்ச்சேர்ந்தான். அன்றிரவு அரசன் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது அவனுடைய சொற்பனத்தில் அந்தப் பிராமணன் சங்குசக்கர கதாதாரியாயும் தாமரைமாலை, துளசிமாலை, கௌஸ்துபமணி யிவைகளை மார்பிலணிந்தவராயும், பீதாம்பரமணிந்தவராயும், நீலமேக சாமளராயும், கருடாரூடராயும், அழகிய பற்களையுடையவராயும், சிரித்தமுகமுடையவராயும், மகரகுண்டலங்களைக் காதிலணிந்த வராயும், விஷ்வக்ஸேநர் முதலான கிங்கரர்கள் சேவிக்க, நாரதாதி முனிவர்கள் துதிக்க, ஆதிசேஷசயனத்தில் பள்ளிகொண்டிருக்கிற ஸ்ரீமஹாவிஷ்ணு சொரூபமாயும், அவருடைய திருமார்பில் கறுத்துச்சுருண்ட அளகத்தையும், உயர்ந்த ஸ்தனங்களையும், சொர்ணத் தாமரைமாலையால் கட்டியகூந்தலையும், திவ்யாபரணங்களையும், முத்துமாலையையும், விலைபெற்ற இரத்தினமிழைத்த புலாக்கையும், தங்கக்காசுமாலையையும், மேகலையையும், பாதசரத்தையும், பீதாம்பரத்தையு முடையவளாய், மலர்ந்த பத்மாசனத்தின் மேலே கையிலே தாமரைமலரை யேந்திக்கொண்டு, திக்குயானைகள் நீர்சொரிய இலட்சுமி சொரூபமாக வீற்றிருந்த தன் பெண்ணையும் கண்டு உடனே படுக்கையை விட்டெழுந்திருந்து அந்தப்புரத்துக்குப்போய்த் தன் பெண்ணைத்தான் சொற்பனத்தில் கண்டபடியே யிருக்கப்பார்த்துச், சூரியோதயமானவுடன் தன்பெண்ணை யழைத்துக்கொண்டு, இராமநாதர் கோவிலிலிருந்த மண்டபத்துக்குப்போய், அந்தப் பிராமணனையும் தான் சொற்பனத்தில் பார்த்

தபடி வனமாலாதி அலங்காரமுடைய விஷ்ணு சொரூபமாகப் பார்த்தா, அவரை விஷ்ணுவென்று அறிந்து துதிக்க ஆரம்பித்தான். கமலாகாந்தா! கருடத்துவஜா; சாரங்கபாணீ; புண்டரீகாட்சா! சக்கிரபாணீ; ஸ்ரீபதி; உமக்கு வந்தனம். என்பேரில் தயவுகூர்ந்து நான் செய்த குற்றத்தைப் பொறுத்துக் காத்தருளும். கௌஸ்துப மணிதரித்தவராயும், ஸ்ரீவத்ஸமென்னும் மறுவையுடையவராயும், பிரமாவைப் பிள்ளையாகவுடையவராயும், அசுரகூட்டங்களைச் சம்ஹாரம்பண்ணுகிறவராயும், எல்லாவுலகங்களும் வசிக்கும்படியான நாபிகமலத்தையுடையவராயும், மதுகைடவரென்கிற அசுரர்களையும், இராவணனையும் சங்கரித்தவராயும், பிரகலாதனைக்காத்தவராயும், பூதேவிக்குப்பதியாயும், நிர்குணராயும் அப்பிரமேயராயும் புத்திசாட்சியாயும், ஸ்ரீநிவாசராயும் ஜகத்தை இரட்சிக்கிறவராயும் பரமாத்மாவாயும், நாராயணராயும், கிருஷ்ணராயும், மதுசூதனராயுமிருக்கிற உமக்கு நமஸ்காரம். தாமரைபோன்ற கண்ணையுடையவராயும், தாமரை மலரைக்கையிலேந்தின இலட்சுமிக்குப் பதியாயும், தாமரைபோலிருக்கிற திருவடிகளையுடையவராயும், தாமரைமாலையையணிந்தவராயுமிருக்கிற ஜகந்நாதா கருணாமூர்த்தியே உமக்கு அடிக்கடி நமஸ்காரம் பண்ணுகிறேன். மதுசூதனா! நானும்மை விலங்குபூட்டிப் பாசத்தால் கட்டி வருத்தின குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளும். உமக்கு அபராதம்பண்ணின தைத்தியர்களெல்லாரையும் உமது சாயுஜ்யங்கொடுத்துக் காப்பாற்றியிருக்கிறபடியால், நான் செய்த அபராதத்தையும் பொறுத்துக்கொள்ளும் என்று ஸ்தோத்திரம்பண்ணினபின் சர்வலோக ஜனனியாகிய இலட்சுமியை ஸ்தோத்திரம்செய்ய ஆரம்பித்தான். ஜகன்மாதா! விஷ்ணுவின் வக்ஷஸ்தலத்தில் வாசம்பண்ணுகிறவளே! சமுத்திரத்தில் பிறந்தவளே! மஹாலட்சுமீ உன்னை நமஸ்கரிக்கிறேன். புஷ்டிசொரூபியாயும், சித்திசொரூபியாயும், ஸ்வதாசொரூபியாயும், ஸ்வாஹாசொரூபியாயும், சந்தியா சொரூபியாயும், பிரபாசொரூபியாயும், மாதுர்சொரூபியாயும், ஐசுவரிய சொரூபியாயும் சிரத்தாசொரூபியாயும், மேதாசொரூபியாயும், சரஸ்வதி சொரூபியாயுமிருக்கிற உன்னை நமஸ்கரிக்கிறேன். யக்ஞவித்யாசொரூபியாயும், மஹாவித்யாசொரூபியாயும் குஹ்யவித்யா சொரூபியாயும், ஆத்மவித்யா சொரூபியாயும், மூன்றுவேத சொரூபியாயும், ஜகன்மாதாவாயும், ஜகத்தை இரட்சிக்கிறவளாயும், சமஸ்த பிராணிகளுக்கும் முக்தியையளிக்கிறவளாயும், ஈசுவரியாயுமிருக்கிற தேவீ உனக்கு வந்தனம். சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமென்கிற முத்தொழிலைச் செய்கிறவளாயும், பிரமதேவனுக்குத் தாயாராயுமிருக்கிற மஹேசுவரீ உனக்கு அடிக்கடி நமஸ்காரம்பண்ணுகிறேன். என்னைக்காத்தருளவேண்டும் என்று மஹாலட்சுமியை ஸ்தோத்திரம் பண்ணினான். பிறகு மஹாவிஷ்ணுவைப்பார்த்துச் சுவாமீ! நான் அஞ்ஞானத்தினால் உமது காலில் விலங்குபோட்டு உமக்குப் பண்ணின துரோகத்தை நீர் பொறுத்தருளவேண்டும். உலகங்களெல்லாம் குழந்தைகளாகவும், நீர் உலகங்களுக்கெல்லாம் தந்தையாகவுமிருக்கிற படியால், பிள்ளைகள் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டுவது நியாயந்தானே. அபராதம்பண்ணின தைத்தியரைக்கூடச் சாயுஜ்யங்கொடுத்துக் காத்தீரே! நான் செய்த அபராதத்தைப் பொறுக்கப்படாதா? உம்மைக்கொல்ல வந்த பூதனையைக்கூட உம்முடைய பாதாரவிந்தஞ் சேர்த்தீரே! சுவாமீ கருணைக்கடலே, இலட்சுமீகாந்தா! கேசவா! என்பேரில் கிருபாதிருஷ்டிவைத்து என்னைக் காத்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தான். அப்பொழுது ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் புண்ணியநிதி ராஜனைப்பார்த்து ராஜனே! நீர் என்னைக் கட்டினீரே யென்று நீர் பயப்படவேண்டாம், நான் பக்தர்களெல்லாருக்கும் வசியனாக இருக்கிறேன் என்பதை உமக்குத் தெரிவித்தேன். அரசனே! எனக்குப் பிரியமான யாகத்தைச் செய்தபடியால் நீர் எனக்கும் பக்தனாய்விட்டீர். ஆகையால் உமக்கு நான் வசியப்பட்டு உம்முடைய பக்திபாசத்தால் கட்டுண்டேன் சத்துருநாசனே! பக்தர்கள் பண்ணின அபராதங்களை யெல்லாம் பொறுத்துக்கொள்வது வழக்கம். உம்முடைய பக்தியைச் சோதிப்பதற்காகவே! என்னுடைய பாரியையான இலட்சுமியை உம்மிடமனுப்பினேன், அவளை நீர் அன்போடு பரிபாலனம்பண்ணி வந்தீர். ஆகையால் உம்மிடத்தில் நான் பிரியமுள்ளவனாயிருக்கிறேன். எனக்கு வேறாகாத இந்த இலட்சுமியினிடத்தில் பக்தியுடையவன் என் பக்தன்; உலகத்திலிவளைத் துவேஷிக்கிறவன் எனக்குத்துவேஷி. இது நிச்சயம். நீ யிவளைப் பக்தியோடு பூஜைபண்ணினது என்னைப் பூஜைபண்ணினதாகும். ஏனென்றால் இவளுக்கும் எனக்கும் பேதங்கிடையாது. ஆகையால் அரசனே நீரெனக்கு அபராதம் பண்ணவில்லை. நீர் என் பத்தினிக்கு வாக்குக்கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படி யென்னைக்கட்டி விலங்

கிட்டு, இலட்சுமியைக் காப்பாற்றினபடியால் உம்மிடத்தில் நான் பிரியமாயிருக்கிறேன், நீர் என்னைக் கட்டினதற்காக மனஸ்தாபப் படவேண்டாம். இலட்சுமியானவள் உம்முடைய புத்திரியென்பதில் சந்தேகமே கிடையாது என்று சமாதானப் படுத்தினார். இலட்சுமியும், மஹாராஜாவே நீர் உமது வீட்டில் கன்னிகையைக் காப்பாற்றினபடியால் உம்மிடத்தில் நான் பிரசன்னையாய்விட்டேன், உம்முடைய பக்தியைச் சோதிப்பதற்காக நான் விஷ்ணுவோடு விளையாட்டுக்கலகம் பண்ணிக்கொண்டு இங்கே வந்தேன். நீர் பண்ணின யாகத்தாலும், பக்தியாலும் நாங்களிருவரும் திருப்தியடைந்துவிட்டோம். எங்களுடைய கிருபையினால் உமக்கு எப்பொழுதும் சுகமும், சமஸ்த பூமண்டலாதிபத்தியமும், எங்களுடைய பாதகமலத்தில் அசஞ்சலமான பக்தியும், தேகாந்தத்தில் புனர் ஜனனமில்லாத என்னுடைய சாயுஜ்ய முக்தியும் உனக்குண்டாகக் கடவது. அரசனே உமக்கு ஒருபொழுதும் பாபத்தில் புத்திசெல்லாமல், புண்ணியத்திலும் விஷ்ணுபக்தியிலும் புத்திசெல்லக்கடவது என்று சொல்லி விஷ்ணுவினுடைய வக்ஷஸ்தலம்போய்விட்டாள்; உடனே மஹாவிஷ்ணுவும் மஹாராஜாவைப் பார்த்து, அரசனே நீர் என்னை விலங்கிட்டுக் கட்டிவைத்தமாதிரியாகவே நான் சேதுமாதவனென்கிற பெயரோடுங்கூட இங்கே வாசம் பண்ணுகிறேன். நான் கட்டிவைத்த சேதுவைக் காக்கிறதற்காகவும், பூதப்பிரேதப்பிசாசாதி உபத்திரவங்களை நீக்குகிறதற்காகவும், எல்லாருடைய இஷ்டங்களையும் பூர்த்திசெய்வதற்காகவும் சகல பாபங்களையும் ஒழிப்பதற்காகவும், நான் பிரமதேவன், இராமநாதரென்கிற சிவன், இந்திராதி திக்குப்பாலர்கள், எல்லாரும் வசிக்கிறோம். உன்னால் விலங்கிடப்பட்ட என்னைத் தரிசிக்கிறவர்களெல்லாரும் சர்வாபீஷ்டங்களையும், என்னுடைய சாயுஜ்யத்தையுமடைகிறார்கள், அரசனே! இந்தப் புண்ணியகதையைப் படிக்கிறவர்கள் தாரித்திரத்தை யடையவேமாட்டார்கள். சகல ஐசுவரியத்தையுமடைவார்கள். நீர் பண்ணின என்னுடைய ஸ்தோத்திரத்தையும், இலட்சுமி ஸ்தோத்திரத்தையும், படிப்பவரும், கேட்பவரும், எழுதினவர்களும் வைகுண்டத்தைவிட்டுத் திரும்பிவரவே மாட்டார்கள் என்று சொல்லித் தன்னுடைய பூர்ணரூபத்தோடு அங்கேயே வாசமாயிருந்துவிட்டார். உடனே புண்ணியநிதி ராஜனும், சேதுமாதவரூபியான விஷ்ணுவைப் பக்தியோடு பிரதட்சிண நமஸ்காரஞ்செய்து, மஹாபூஜைபண்ணி, இராமநாதரையும் சேவித்துக்கொண்டு தன்னரண்மனைபோய்ச் சேர்ந்தான். மதுராபுரியில் தன் புத்திரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்துத் தான் அந்த உத்தமமான இராமேசுவரத்தில் தன் பத்தினியோடு ஆயுசுபரியந்தம் வசித்துத் தேகாந்தத்தில் விஷ்ணு சாயுஜ்யமடைந்தான். பதிவிரதா சிரோமணியான விந்தியாவளி என்கிற அவனுடைய பத்தினியும் அநுமரணம் பண்ணி சத்கதியடைந்தாள்.

கேளுங்கள் பிராமணோத்தமர்களே! சேதுமாதவனைச் சேவிக்கிறவர்கள் கைலாசத்தைவிட்டுத் திரும்பிவரமாட்டார்கள். இந்தச் சேதுமாதவனைச் சேவிக்காதவர்களுக்கு இராமநாதர் சேவை பலனை யளிக்காது. கங்கைக்குப் போகவேண்டுமென்று சேதுமாதவன் சன்னிதியில் சங்கற்பம் பண்ணிக்கொண்டு! கங்கைக்குப் புறப்பட்டுப்போனால் கங்காயாத்திரையானது சபலமாகும். பிராமணர்களே யிந்தப்படியாகச் சேதுமாதவன் வைபவத்தையுங்களுக்கெடுத்துச் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தைப் படிப்பவரும், கேட்பவரும் வைகுண்டத்தையடைவார்கள்.

ஐம்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஐம்பத்தொன்றாவது
சேது யாத்திரைசெய்யும் முறையும் ஸ்நானவிதியும் கூறின
அத்தியாயம்

பிராமணோத்தமர்களே! இப்பொழுது சேது யாத்திரைசெய்யும் முறையை உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள். இதைக்கேட்ட மாத்திரத்தில் மனிதர்கள் பாபங்களினின்றும் விடுபடுகிறார்கள்.

சேது யாத்திரைபோய் ஸ்ரீராமநாதருடையவும், ஸ்ரீராகவனுடையவும் பிரீதியைப்பெற விரும்புகிறவன் ஸ்நானம்பண்ணி யாச

மனஞ் செய்து, நித்தியகருமங்களை முடித்து, வேதப்பிராமணர்களைச்சக்தியுள்ளபடி போஜனஞ்செய்வித்துச் சரீரமுழுவதும் விபூதி உத்தூளனஞ்செய்து, நெற்றியில் திரிபுண்டரமாகத் தரித்து, அல்லது கோபிசந்தனத்தை நெற்றியில் ஊர்த்துவபுண்டரமாகவணிந்து, கழுத்தில் ருத்திராட்சமாலை பூண்டு, பவித்திரத்தை விரலில் போட்டுக்கொண்டு சேது யாத்திரை பண்ணப்போகிறேனென்று பக்தியுடன் சங்கற்பம்பண்ணி, பஞ்சாட்சரத்தையாவது, அஷ்டாக்ஷரத்தையாவது, இராமமந்திரத்தையாவது ஜபித்துக்கொண்டு மௌனமாய் வீட்டைவிட்டுப் புறப்படவேண்டும். போகும்போது காலில் பாதரட்சையும், தலைக்குக் குடையுமில்லாமல், பாதசாரியாய் நடந்துபோகவேண்டும். ஏகவாரம் அவிசுமட்டும் புஜித்து, கோபத்தையடக்கி, இந்திரியங்களை ஜயித்துத், தாம்பூலம் தரித்தல், எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல், ஸ்திரீ சங்கமம் முதலியவற்றை ஒழித்து, சௌசாதியாசாரமுடையவனாய், முக்காலமும் காயத்திரி யோபாசனை செய்து, இராமனைத் தியானம் பண்ணிக்கொண்டும், சேதுபுராணத்தையாவது, இராமாயணத்தையாவது, அல்லது வேறு புராணங்களையாவது பாராயணஞ் செய்துகொண்டும், வீண்பேச்சுப் பேசாமல், பிரதிக்கிரகம் வாங்காமல், சக்தியுள்ளமட்டில் சிவவிஷ்ணுவாதி தேவர்களைப் பூஜை செய்துகொண்டும், வைசுவதேவம் முதலிய பஞ்சமஹா யக்ஞங்களையும், அக்கினிகாரியங்களையும் தவறாமல் அநுஷ்டித்துக்கொண்டும், அதிதிகளுக்கும் யதிகளுக்கும் வஞ்சனையில்லாமல் அன்னங்கொடுத்துச், சிவவிஷ்ணுவாதி தேவநாமங்களையும், ஸ்தோத்திரங்களையும் படித்துக்கொண்டும், நிஷித்தமான காரியங்களைச் செய்யாமலும் சேதுமூலம்போய்ச் சேரவேண்டும்.

அந்தச்சேது மூலத்தில், ஒரு கல்லையாவது, ஏழுகல்லையாவது "பிப்பிலாதரிடத்திலிருந் துண்டானவளாயும், உலகத்துக்குப் பயங்காரியாயுமிருக்கிற க்ருத்தியே உனக்கு ஆகாரமாக ஏற்பட்டிருக்கிற பாஷாணமானது என்னால் கொடுக்கப்பட்டது" என்கிற மந்திரத்தைச்சொல்லிப் போட்டுப், பிறகு ஏ தேவா! இந்த லவணசமுத்திரத்தில் என்னிமித்தம் சாந்நித்தியம் செய்யும் என்கிற மந்திரத்தினால் சமுத்திரத்தையாவாகனம்பண்ணி, விசுவகுப்தனாயும், விஷ்ணுவாயும், அப்பாம்பதியாயும், ஹிரண்யசிருங்கனாயும், நதிபதியாயும், வயுநனாயுமிருக்கிற சமுத்திரமே!

உமக்கு நமஸ்காரமென்ற மந்திரத்தைச் சொல்லிச்சமுத்திரத்தை நமஸ்காரம்பண்ணி, 'ஸர்வரத்னமயா ஸர்வரத்நாகரா ஸ்ரீமந் ஸர்வரத்நப்ரதானா! மஹோததியே! நீர் அர்க்கியத்தைப் பெற்றுக் கொள்ளும்" என்ற மந்திரத்தால் அவனுக்கு அர்க்கியம் கொடுத்து, கிழக்குத்திக்கில் சுக்கிரீவனையும், தெட்சணதிக்கில் நளனையும், மேற்குதிக்கில் மயிந்தனையும், வடதிக்கில் துவிதனையும், நடுவில் ஸ்ரீராமர், இலட்சுமணர், சீதை, அங்கதன், அநுமான், விபீஷணன் இவர்களையிருக்கும்படியாகப் பிரார்த்தனைசெய்துகொண்டு, "ஸமஸ்த ஜகத்துக்கு ஆதாரபூதமானவனே! சங்குசக்கர கதாதாரியே! உம்முடைய தீர்த்தஸ்நான விஷயத்தில் எனக்கு அநுக்ஞைகொடும்" என்ற மந்திரத்தைச் சொல்லி அநுக்ஞைபெற்றுக்கொண்டு, "மஹோததியே! உம்மிடத்தில் ஸ்நானம் பண்ணுகிற எனக்கு, ஸமஸ்தபாபங்களையும் போக்கி, உம்மிடத்தில் வந்து அடைகிற ஸர்வ தீர்த்தபலனையுங்கொடுத்தருளும்" என்கிற மந்திரத்தைச் சொல்லிச் சமுத்திரத்தில் ஸ்நானம்செய்து, ஸ்நானம்பண்ணுகிற பொழுதெல்லாந் தியானிக்கத்தக்கவராயும், அப்படித்தியானிக்கிறவர்களுக்கு ஸமஸ்த பாபங்களையும் நீக்கிப் புனர்ஜன்மமில்லாத மோட்சத்தைக் கொடுக்கிறவராயுமிருக்கிற நாராயணனை "ஹிரண்யசிருங்கம்" என்கிற இரண்டுமந்திரங்களால் தியானித்துப் பின் பிரகலாதர், நாரதர், வியாசர், அம்பரீஷர், சுகர், இன்னுமுள்ள பகவத்பக்தர்களையும் பக்தியோடுதியானித்து "சாகரமே! நீ வேதாதிகள்; வேதவிசிஷ்டயோனி; ஸரித்பதி; இரத்னயோனி; நீ அக்நி; நீ தேஜஸ்; நீ பூமி; நீ பிரமா; நீ விஷ்ணு; நீ அமிருதத்துக்கு இருப்பிடம்; நதிகளிலேவந்து விழுகிற ஜலங்களுக்கு மேலானதான உன்னுடைய ஜலத்தை நான் இந்தச்சரீரத்தோடு வந்தடைந்து, சர்ப்பமானது சட்டையுரிப்பதுபோல என்னுடைய சரீரத்தில் ஒட்டியிருக்கிற பாபங்களையெல்லாம் விட்டுவிடுகிறேன்" என்கிற ஸ்நானமந்திரத்தைச் சொல்லி, "சமுத்திராயவயுநாய:" என்கிற சுருதி வாக்கியத்தைச் சொல்லி நதிபதியாகியும், ஸர்வ தீர்த்தமயனாயும், சுத்தனாயுமிருக்கிற சமுத்திரத்தை நமஸ்காரம் பண்ணி, "த்வௌ சமுத்ரௌ" என்கிற வேதவாக்கியத்தைச் சொல்லி இரண்டாந்தரம் ஸ்நானம் செய்யவேண்டும். பிறகு, ஏ! சூரியனே! பிரமாண்டத்தின் மத்தியிலிருக்கிற ஸர்வ தீர்த்தங்களையும் நீர் தொடுகிறவரானபடியால் எனக்கு ஜலத்

தைக் கொடுத்தருளு" மென்கிற மந்திரத்தைச் சொல்லி, பின்பு, முன் சொன்னதுபோல் கீழ்த்திசை முதலிய திசைகளில் சுக்கிரீவன் முதலானவர்களை யிருக்கும்படி தியானித்து மூன்றுந்தடவை சமுத்திரத்தில் ஸ்நானம் பண்ணவேண்டும். தேவி பட்டண மார்க்கமாகப்போகிற யாத்திரிகளுக்கு இந்த விதிகளைச் சொன்னோம், தர்ப்பசயனத்தின் வழியாகச் சேதுயாத்திரைபோகிறவன் சேதுமூலத்தில் ஸ்நானம்பண்ண விதித்திருக்கிற முறைப்படி தர்ப்பசயனத்தில் ஸ்நானம் பண்ணவேண்டும்.

இந்த மாதிரியாகத் தேவிபட்டணத்திலாவது, தர்ப்பசயனத்திலாவது சமுத்திர ஸ்நானம் பண்ணிவிட்டு, கையில் பவித்திரத்தோடு பிப்பலாதர், கபி, கண்வர், கிருதாந்தர் ஜீவிதேசுவரர் மன்யு காளராத்திரி வித்யை, அகஸ், கணேசுவரர், வஸிஷ்டர், வாமதேவர், பராசரர் உமாபதி வால்மீகி நாரதர் வாலகில்யர்கள் நளன், நீலன், கவாட்சன், கவயன், கந்தமாதனன் மயிந்தன், துவிதன் சரபன், வ்ருஷபன், சுக்கிரீவன், அநுமன், வேததர்சீ, இராமன், இலட்சுமணன், சீதை, இவர்களையுத்தேசித்துக் கிரமப்படி மும்மூன்றுதரம் தர்ப்பணஞ் செய்துவிட்டு, தேவர்கள், ரிஷிகள், பிதுர்க்கள், இவர்களையுத்தேசித்துத் தில தர்ப்பணஞ்செய்து முடிக்கவேண்டும். எந்தத்தீர்த்தத்திலும் தர்ப்பணஞ் செய்தால்தான் ஸ்நானபலன் சித்திக்கும். இவ்விதம் தர்ப்பணம் பண்ணிவிட்டு, நமஸ்காரஞ்செய்து பின்பு ஈரவஸ்திரத்தை விழுத்து, உலர்ந்த வஸ்திரத்தைத் தரித்து, ஆசமனம்பண்ணி, மறுபடியும் பவித்திரம் போட்டுக்கொண்டு பிதுர்த்தேவதைகளுக்கு முறைப்படி பிண்டம்போட வேண்டியது. இந்தப் பிண்டசிராத்தஞ்செய்வது அசக்தனைக்குறித்த விதி, பணமுள்ளவன் அறுவகைச் சுவையோடுகூடிய அன்னசிராத்தஞ் செய்யவேண்டும். சோ, பூ, திலம் முதலான தானங்களையும் செய்யவேண்டும். சேதுமூலத்தில் செய்யும்படி விதித்த பாஷாணதானம் முதலாகத்தர்ப்பணாந்தமான கிரியைகளை இராம தனுஷ்கோடியிலும் செய்யவேண்டும்.

தேவிபட்டணமார்க்கமாகப் போகிறவன் சக்கிரதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிவிட்டுச் சேதுபதியாகிய ஸ்ரீமந்நாராயணனைத்தரிசிக்கவேண்டும், மேற்கு வழியாகப்போகிறவன் அங்கேயிருக்கிற சக்கிரதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டுத் தர்ப்பத்தில் சயனித்துக்கொண்டிருக்கிற நாராயணனைத் தரிசிக்கவேண்டும். பின் கபிதீர்த்தம், சீதாகுண்டம், ரிணமோசன தீர்த்தம், இவைகளில்

முறைப்படி ஸ்நானம் செய்துவிட்டு ரிணமோசன தீர்த்தக்கரையிலிருக்கிற ஜானகிபதியாகிய ஸ்ரீராமமூர்த்தியைத் தரிசிக்கவேண்டும், பின்பு இலட்சுமணதீர்த்தம்போய்க் கண்டபரியந்தம் க்ஷௌரம்பண்ணிக்கொண்டு ஸ்நானம்பண்ணிப் பின்பு, இராமதீர்த்தம்போய் ஸ்நானம்பண்ணித் தேவாலயம்போய்ச் சுவாமிதரிசனம் பண்ணவேண்டும். பிறகு பாபநாசனதீர்த்தம், கங்காதீர்த்தம், யமுனாதீர்த்தம், சாவித்திரீ தீர்த்தம், சரஸ்வதீதீர்த்தம், காயத்திரீதீர்த்தம், அநுமத்குண்டம், பிரமகுண்டம், ஸமஸ்தபாபங்களையும் நிவாரணம்பண்ணி நரகத்தைப்போக்குகிற நாககுண்டம் இவைகளில் முறையே ஸ்நானம் பண்ணவேண்டும். இந்த நாககுண்டத்தில் கங்காதி ஸர்வதீர்த்தங்களும் தங்களுடைய பாபநிவிர்த்திக்காக வசித்துக்கொண்டிருக்கின்றன. இந்த உத்தமமான நாககுண்டத்தை அனந்தன் முதலான அஷ்டமஹாநாகங்களும் முக்தியைக் கொடுப்பதற்காக உண்டாக்கிவைத்தன. இந்த நாககுண்டத்தில் ஸ்நானம்பண்ணினபின் அகஸ்தியகுண்டம், ஸமஸ்தமான துஷ்கருமங்களை நீக்குகிற அக்கினிதீர்த்தம் இவைகளில்முறையே ஸ்நானம் பண்ணி, அக்கினிதீர்த்தக்கரையில் பிதுர்ச்சிராத்தம்பண்ணிக்கோ, பூ, ஹிரண்யம் முதலானவைகளைப் பிராமணர்களுக்குத் தானங்கொடுத்துப் பாபங்களை நிவர்த்திசெய்துகொள்ளவேண்டும். சக்கிர முதலாகச் சொல்லப்பட்ட சகலமான தீர்த்தங்களிலும் வரிசைக்கிரமமாகவாவது, அல்லது தன்னிஷ்டப்படியாகவாவது ஸ்நானம் பண்ணிச் சிராத்தாதிகளை முடிக்கவேண்டும். பிறகு இராமேசுவரம்போய்ப் பரமேசுவரனைத் தரிசித்துச் சேதுமாதவரையும், இராமர் இலட்சுமணர், சீதை, அநுமான், மற்றுமுள்ள வானரர்கள், இவர்களையும் தரிசித்து, அங்கேயிருக்கிற ஸர்வ தீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணி, இராமநாதரையும், மற்றவர்களையுந் தரிசித்துத், தநுஷ்கோடிக்கு ஸ்நானஞ்செய்யப் போகவேண்டும். அங்கே பாஷாணதான முதலானவைகளைச்செய்து முடித்து, பூதானம், கோதானம், கன்னிகாதானம், வஸ்திரதானம், முதலான தானங்களைச், சக்திக்குத்தக்கபடி வேதவித்துக்களான பிராமணர்களுக்குக் கொடுத்துப் பிறகு கோடிதீர்த்தம்போய் ஸ்நானம்செய்து இராமநாதரைத் தரிசித்துத் தன் சக்திக்குத்தக்கபடி சொர்ணதானம், திலதானம், தானியதானம், கோதானம், பூதானம், வஸ்திரதானம், தண்டில்தானம் முதலான தானங்களைக்கொடுத்து, இராமநாதருக்

குத் தூபதீப நைவேத்தியம் முதலான பூஜோபகரணங்களைக் கொடுத்து மறுபடியும் ஸ்நானம் பண்ணி யிராமநாதரைத் தரிசித்து, அநுக்ஞைபெற்றுக்கொண்டு சேதுமாதவன் சந்நிதிக்குப்போய் அவருக்கும் தூபதீபாதி பூஜோபகரணங்களைக்கொடுத்து அவரிடத்தில் அநுக்ஞைபெற்றுக்கொண்டு, நியமத்தோடு வீடுவந்துசேர்ந்து பிராமணர்களுக்கு ஷட்ரசோபேதமாய் அன்னம்போட்டுத் திருப்தி செய்விக்கவேண்டும். இப்படிச்செய்தால்தான் இராமநாதர் யாத்திரிகனிடத்தில் திருப்தியாயிருப்பார். இவனுக்குத் தரித்திரமில்லை, நரகம் கிடையாது, சந்ததிவிர்த்தியடையும், சம்சார துக்கத்தை யொழித்து மோட்சத்தையடைகிறான். சேது யாத்திரைசெய்யச் சக்தியில்லாத அந்த பங்குமுதலானவர்கள், சுருதிஸ்மிருதி ஆகமங்களில் சேது மஹாத்மிய விஷயமாய்ச் சொல்லப்பட்ட மஹா புண்ணியமான கதைகளையாவது அல்லது இந்தச்சேது மஹாத்மியத்தையாவது பக்தியோடு படித்தாலும், கேட்டாலும் சேது ஸ்நானம்பண்ணின புண்ணியத்தையடைவார்கள் என்பதில் ஐயமே கிடையாது.

கேளுங்கள் ரிஷீசுவரர்களே! இந்தப் பிரகாரம் சேது யாத்திரை செய்கிற முறைமையையும் அங்கே ஸ்நானஞ்செய்கிற விதியையும் உங்களுக்கெடுத்துச் சொல்லிவிட்டேன். இந்த அத்தியாயத்தைப் படிப்பவரும், கேட்பவரும் ஸமஸ்த துக்கங்களினின்றும் விடுபடுகிறார்கள்,

ஐம்பத்தோராவது அத்தியாயம்

முற்றிற்று.

ஐம்பத்திரண்டாவது

சேதுமகிமை யுரைத்த

அத்தியாயம்

ரிஷீசுவரர்களே! சேதுவின் மகிமையை உங்களுக்கு மறுபடியும் சொல்லுகிறேன் ஆதரவுடன் கேளுங்கள். இந்தச் சேதுவானது எல்லாக்ஷேத்திரங்களைக் காட்டிலும் அதிக உத்தமமானது; இங்கே ஜபிக்கப்பட்ட ஜபமும், பண்ணப்பட்ட ஹோமமும் செய்யப்பட்ட தபசும், கொடுக்கப்பட்டதானமும் அக்ஷயபலமாகும். இந்த இடத்திலிருக்கிற தநுஷ்கோடியில் ஸ்நானம் பண்ணுகிறதினாலுண்டாகும் பலமானது காசியில் பத்துவருஷம் வாசம்பண்ணப்பட்ட பலத்துக்குச் சமானமாகும். இங்கேயிருக்கிற தநுஷ்கோடியில் ஸ்நானம்பண்ணி, இராமநாதரைத் தரிசித்துப் பக்தியோடு கூட மூன்றுநாள் வாசம்பண்ணினால் புண்டரீகபுரத்தில் பத்துவருஷம் வாசம்பண்ணின பலனை யடைவான். இவ்விடத்தில் ஷடாக்ஷரத்தைப் பக்தியோடு ஆயிரத்தெட்டுத்தடவை ஜபித்தால் சிவசாயுஜ்யத்தை யடைவான், இந்தத் தநுஷ்கோடியில் மாகமாசத்தில் சந்தோஷத்தோடுகூட ஸ்நானம் பண்ணுகிறவன், கும்பகோணம், மத்தியார்ஜுனம், மாயூரம், சுவேதாரணியம், ஆலாசியம், கஜாரணியம், (திருவானைக்கா) வேதாரணியம், நைமிசாரணியம், ஸ்ரீபர்வதம், ஸ்ரீரங்கம், விருத்தாசலம், சிதம்பரம், வல்மீகக்ஷேத்திரம் (திருவாரூர்) சேஷாத்திரி (திருப்பதி) அருணாசலம், தக்ஷிணகைலாசம் (காளஹஸ்தி) வேங்கடகிரி, காஞ்சீபுரம், பிரமபுரம் (சீர்காழி) வைத்தீசுவரபுரம் (வைத்தீசுவரன் கோவில்) இன்னும் மற்றுமுண்டான சிவஸ்தல விஷ்ணுஸ்தலங்களில் ஒருவருஷம் வாசம்பண்ணின பலத்தை அடைவான். "தவௌஸமுத்ரௌ"—"அகேரயக்தாரௌ"—"விஷ்ணோர்கர்மாணிபச்யத"—"தத்விஷ்ணோ: பரமம்பதம்"—என்கிற நான்கு சுருதிவாக்கியங்களும், இதிகாசங்களும், புராணங்களும், ஸ்மிருதிகளும், ஏகவாக்கியமாய்ச் சேது மஹாத்மியத்தைக் கொண்டாடுகின்றன. சந்திரகிரகண சூரியகிரகணகாலங்களில் சேது ஸ்நானம்பண்ணுகிறவன் அவிமுக்தக்ஷேத்திரத்தில் (காசியில்) பத்துவருஷம் கங்காஸ்நானம்பண்ணினபலனையும், ஆயிரம் அசுவமேதம்பண்ணின பலனையும், கோடி ஜன்மங்களிற்செய்த பாபக்ஷயத்தையும் அடைகிறான். விஷுபுண்யகாலம், தக்ஷிணாயன உத்தராயண புண்ணியகாலங்கள், சோமவாரம், பர்வகாலங்கள் இவைகளில் சேதுவைக்கண்டமாத்திரத்தில் ஏழு ஜன்மங்களில் செய்த பாபங்களை யொழித்துச் சொர்க்கலோகம் போய்விடுகிறான். சூரியன் மகரத்திலிருந்து கும்பத்தில் பிரவேசித்தபின் மூன்றுநாள் தநுஷ்கோடியில் ஸ்நானம்பண்ணுகிறவன் ஸமஸ்த பாபங்களையு நீங்கிக் கங்காதி தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணின பலன்களையும் அடைவான். தநுஷ்கோடியில் ஐந்துநாள் ஸ்நானம்பண்ணினவன் அசுவமேதாதிகள் பண்ணின பலனையும், சாந்திராயணாதி—கிருச்சிரங்கள் பண்ணினபலனையும், சகல வேதங்களையும் பாராயணம்பண்ணின பலனையும் அடை-

கிறான். மாகமாசத்தில் பத்துநாள் தநுஷ்கோடியில் ஸ்நானம் பண்ணுகிறவன் பிரமலோகத்தையும், பதினைந்துநாள் ஸ்நானம் பண்ணுகிறவன் வைகுண்டத்தையும், இருபதுநாள் ஸ்நானம் பண்ணுகிறவன் சிவசாமீப்பியத்தையும், இருபத்தைந்துநாள் ஸ்நானம் பண்ணுகிறவன் சிவசாரூப்பியத்தையும், முப்பதுநாள் ஸ்நானம்பண்ணுகிறவன் சிவசாயுஜ்யத்தையும் அடைவான். இதில் சந்தேகமேயில்லை. ஆகையால் பிராமணர்களே! புத்திசாலியானவன் மாகமாசத்தில் இராமசேதுவில் ஸ்நானம்பண்ணவேண்டியது. சந்திரகிரகணம், சூரியகிரணம், அர்த்தோதயம், மஹோதயமென்கிற புண்ணியகாலங்களில் சேது ஸ்நானம்பண்ணுகிறவன் அநேக துக்கங்கள் நிறைந்த கர்ப்பவாசத்தைப் பார்க்கிறதேயில்லை. பிரமஹத்தியாதி பாபங்களையொழிந்து, ஸமஸ்த சம்பத்துக்களையும் இகத்தில்பெற்று, நரகங்களைப்பாராமல், இந்திராதி புவனபோகங்களையும் அநுபவித்து, அந்தத்தில் சாலோக்கியாதி முக்திகளையும்அடைகிறான். ஆகையால் ரிஷீசுவரர்களே! மேற்சொல்லிய புண்ணியகாலங்களில் சேதுஸ்நானம் அவசியம். இராவணனைச் சம்ஹாரம் பண்ணுவதற்காக ராமனால் நிர்மாணம் பண்ணப்பட்டதும், இப்பொழுது சித்த சாரண கின்னர உரகர்களாலும், பிரமரிஷி, ராஜரிஷி, தேவரிஷி, பிதுர்க்கூட்டங்கள், பிரமாதி தேவர்கள் இவர்களால் வாசம்பண்ணப்பட்டதுமான சேதுவை நினைத்துக்கொண்டு எங்கேயாவதிருக்கிற குளம் குட்டைகளில் ஒருவன் ஸ்நானம்பண்ணினால் அவனைப்பாபமே அணுகாது. சேதுவினுடைய மத்தியிலிருக்கிற புண்ய தீர்த்தக்கரையில் ஒரு பிடி அன்னங்கொடுக்கிறவனுக்குச் சகல ரோகங்களும், புருணஹத்தியாதி பாபங்களும் நீங்கிவிடும். இராமன் தன்னுடைய வில்லால் செய்த புண்ணியமான கோடாகிய தநுஷ்கோடியைப் பார்க்கிறவன் வைகுண்டத்திலிருந்து திரும்பி வரவே மாட்டான். உலகத்திலிருக்கிற பாபங்களை யெல்லாம் போக்கடிக்கிறதும், விபீஷணனுடைய வேண்டுகோளால் ஸ்ரீராமனால் செய்யப்பட்ட புண்யமான தநுஷ்கோடிதீர்த்தத்தில் பக்தியோடு ஸ்நானம்பண்ணிப், பணத்தையும், க்ஷேத்திரத்தையும், பசுவையும், திலத்தையும், அரிசியையும், தானியத்தையும், பாலையும், வஸ்திரத்தையும், ஆபரணத்தையும், அன்னத்தையும், தயிரையும்,

நெய்யையும், ஜலத்தையும், சாகத்தையும், சுத்தமானமோரையும், சர்க்கரையையும், கனிகளையும், தேனையும், மோதகத்தையும் அப்பத்தையும் மற்றுமுள்ள வஸ்துக்களையும் தானம்பண்ணுகிறவனுக்கு ஸர்வாபீஷ்டசித்திஉண்டாகிறது. ஆகையால் ரிஷீசுவரர்களே! இராமதநுஷ்கோடியில் கிருபணத்வமில்லாமல் தானம்கொடுத்தால் அது அநந்தகோடிபலத்தைத்தருவதாகும். மேலும் அவ்விடத்தில் தேவர்களும், ரிஷிகளும், பிதுர்க்களும், பிரமவிஷ்ணுருத்திரர்களும், நாகர்களும், கிம்புருஷர்களும், யக்ஷர்களும் எல்லாரும் திருப்தியடைகிறார்கள். சந்தேகமேகிடையாது. இந்தத் தநுஷ்கோடியை ஒருவன் கண்ணாலே பார்த்தால் அவன் அநேகதுக்கம் நிறைந்த கர்ப்பவாசத்தைப் பார்க்கிறதில்லை. தான் பரிசுத்தமாகிறது மல்லாமல் தன்னுடைய முன்னோர்களையும், தன்சந்ததிகளையும், கரையேற்றிவிடுகிறான். இந்த இராமதநுஷ்கோடியில் ஸ்நானம்பண்ணுகிறவனுக்குக் கோடிபஞ்சமஹா பாதகங்களும் உடனே போய்விடுகின்றன. சீதை அக்கினிபிரவேசஞ்செய்த சீதாகுண்டத்தில் ஸ்நானம்பண்ணினால் நூறுபுருணஹத்திபாபம் க்ஷணமாத்திரத்தில் போய்விடுகின்றன. இராமனுக்கும், இராமசேதுவுக்கும், விஷ்ணுவுக்கும் கங்கைக்கும் பேதமில்லாதபடியால் கங்கையையாவது ஹரியையாவது, இராமனையாவது இராமசேதுவையாவது உச்சரித்துக்கொண்டு எந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினாலும் பரமகதிகிடைக்கிறது.

கந்தமாதன பர்வதத்திலிருக்கிற சேதுவில் அர்த்தோதய புண்யகாலத்தில் ஸ்நானம் பண்ணிப் பிதுர்க்களை உத்தேசித்து கடுகளவு பிண்டங்கொடுத்தால் அவனுடைய பிதுர்க்களெல்லாரும் சூரிய சந்திரர்கள் உள்ளவரைக்குந் திருப்தியடைந்திருக்கிறார்கள். வன்னியிலையளவு பிண்டம் பிதுர்க்களையுத்தேசித்துக்கொடுத்தால் அவனுடைய பிதுர்க்கள் சர்வ பாபங்களினின்றும் முக்தர்களாகி நரகத்திலிருந்தால் சொர்க்கத்துக்கும், சொர்க்கத்திலிருந்தால் மோட்சத்துக்கும் போகிறார்கள். சேதுவிலும், பத்மநாபபுரம் (அநந்தசயனம்) கோகருணம், புருஷோத்தமம் இந்த ஸ்தலங்களிலும் எப்பொழுதும் சமுத்திரஸ்நானம் பண்ணலாம். சந்தானகாமியாயிருக்கிறவன் வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளாகிய மூன்றுதினங்களிலும் சேதுவைத்தவிர மற்ற இடங்களில் சமுத்திர ஸ்நானம் செய்யக்கூடாது. பிரேதகாரியஞ்

செய்யாதவனும், கர்ப்பவதியான மனைவியுள்ளவனும் சேதுவைத் தவிர மற்ற இடங்களில் சமுத்திர ஸ்நானம் பண்ணப்படாது. சேது ஒழிந்த மற்றைய சமுத்திரஸ்நானத்துக்குத்தான் இவ்வா நட்சத்திர நியமங்களுண்டு. சேதுவில் காலவரையறையில்லாமல் எப்பொழுதும் ஸ்நானம் பண்ணலாம். உயிரோடிருக்கிறவனைக் குறித்துச் சேதுவில் ஸ்நானம் பண்ணலாமே தவிர இறந்துபோனவனை உத்தேசித்து ஸ்நானம் பண்ணக்கூடாது. தர்ப்பத்தால் கூர்ஜம்செய்து, பூர்வம் விஷ்ணுவினால் தரிக்கப்பட்டுப் பவித்திரமாயிருக்கிற கூர்ஜமே! நீ ஸ்நானம் பண்ணினவுடனே யாருக்காக நீ உத்தேசிக்கப்பட்டிருக்கிறாயோ அவனும் ஸ்நானம் பண்ணினவனாய்விடுகிறான்". என்கிற மந்திரத்தைச் சொல்லி யந்தக்கூர்ஜத்தை ஸ்நானம் பண்ணிவைக்கவேண்டியது. பருவகாலந்தோறும் எவ்விடத்திலும் சமுத்திரமானது ஸ்நானத்துக்கு யோக்கியமானதாயிருக்கிறது. சேதுவிலும், சிந்துநதியும் சமுத்திரமும் சேருகிற இடத்திலும், கங்காநதி சங்கமமாகிற இடத்திலேயும், கோகர்ணத்திலேயும், புருஷோத்தமத்திலேயும், நித்தியம் சமுத்திரஸ்நானம் பண்ணலாம். பருவகாலமல்லாத காலங்களில் சேதுவைத் தவிர மற்ற இடங்களில் சமுத்திரத்தைத்தொடவுங்கூடாது. பூர்வகாலத்தில் சீதாலட்சுமண சமேதரான ஸ்ரீராமர், பிதுர்தேவதைகளும், முனிவர்களும், சகல தேவர்களும் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது நானிவ்விடத்தில் செய்த இந்தச்சேதுவில் ஸ்நானம் பண்ணுகிறவர்கள் என்னுடைய பிரசாதத்தினாலே சமஸ்தபாபங்களும் அற்று மறுபிறப்பையடையமாட்டார்கள். இதைக் கண்ணாலே பார்த்தாலும் சமஸ்த பாபங்களும் நீங்கிப்போகின்றன. இராமநாதருடையவும், சேதுவினுடையவும் வைபவத்தை கோடிவருஷம் முயன்றாலும் என்னாலே வர்ணிக்கமுடியாது என்று உறுதியாகச் சொன்னதைக்கேட்டுத் தேவர்கள், ரிஷிகள், பிதுர்க்களெல்லாரும் நேர்த்தி நேர்த்தியென்று சொல்லி யானந்தப்பட்டார்கள். அப்பேர்ப்பட்ட இந்தச்சேது மத்தியில் நான்முகப் பிரமாவானவர் சம்பந்தமான தேவர்களோடும் ஈசுவரனுடைய ஆக்ஞையின்படி சேதுவைக் காப்பதற்காக இங்கே வாசமாயிருக்கிறார். விஷ்ணுவும் காலில் விலங்கிடப்பட்டுச் சேதுமாதவன் என்கிற பெயரோடும் வசித்துக்கொண்டிருக்கிறார், பிதுர்தேவதைகளும், ஸ்மிருதிகர்த்தர்களாகிய ரிஷிகளும், தேவர்களும், கந்தர்வர்களும், கின்னரர்களும், கிம்புருஷர்களும், உரகர்களும், வித்யாதரர்களும், சாரணர்களும், யக்ஷர்களும், மற்றவர்களுமிவ்விடத்தில் இரவும், பகலும் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்தச்சேதுவைப்பார்த்தாலும், கேட்டாலும், ஸ்மரித்தாலும், தொட்டாலும், அதில் முழுகினாலும் சமஸ்த பாபங்களும் பஞ்சாய்ப்பறந்துவிடுகின்றன. தைமாதத்தில் ஞாயிற்றுக்கிழமை, அமாவாசை, திருவோணநட்சத்திரம், வியதிபாதம், சதுஷ்பாதகரணம், இவைகூடிய தினம் அர்த்தோதய புண்ணியகாலமாம், இந்த அர்த்தோதய புண்ணியகாலத்தில் சேதுஸ்நானம் பண்ணினால் சாயுஜ்யமுக்தி நிச்சயமாய்க்கிடைக்கும். 'ஆயிரம் வியதிபாத புண்ணியகாலத்துக்கு ஒரு அமாவாசை சமமாகிறது. பதினாயிரம் அமாவாசை புண்ணியத்துக்குச் சமானம் ஒரு பானுவார அமாவாசை; பானுவாரத்தில் சிரவண நட்சத்திரத்தோடு கூடிவந்தால் அது மகாபுண்ணியமானது. மேற்சொல்லிய ஒவ்வொன்றிலும் ஸ்நானமாவது, தானமாவது, ஜபமாவது, அர்ச்சனையாவது செய்தால் முக்தி கைகூடிவருகிறது. இவ்வைந்துங்கூடிய புண்ணியகாலத்தில் ஸ்நானாதிகளையொருவன் செய்தால் அவனுடையபலனை நம்மால் சொல்லமுடியாது. சிரவணமோ நட்சத்திரங்களெல்லாவற்றிலும் சிரேஷ்டமானது. திதிகளில் அமாவாசை சிறந்தது. வியதிபாதம் யோகங்களில் முக்கியமானது. ஞாயிற்றுக்கிழமை வாரங்களில் சிறந்தது. இந்த நாலும் கூடிவருகிற தைமாதத்தில் இராமசேதுவில் ஒருவன் ஸ்நானம் பண்ணினால் அவனுக்குக் கர்ப்பவாசமேயில்லாமல் சாயுஜ்யம் கைகூடிவருகிறது. அர்த்தோதயத்துக்குச் சமமான புண்ணியகாலம் இல்லவேயில்லை. இதேமாதிரிமகோதயமும் மஹா புண்ணியகாலமாம். இந்தப் புண்ணியகாலங்களில் சேதுவில் தானங்கொடுப்பது விசேஷமாகும்.

ஆசாரம், தபசு, வேதாத்தியயனம், வேதார்த்தசிரவணம், சிவவிஷ்ணுவாதி தேவதார்ச்சனை, புராணார்த்த ஆராய்ச்சி இவைகளோடு கூடிய பிராமணன் தானம் வாங்கத்தகுந்தவனாவான். அப்படிப்பட்ட பிராமணனுக்குத்தான் சேதுவில் தானங்கொடுக்கவேண்டியது. அப்படிப்பட்ட பிராமணன் சேதுவில் அகப்படாமல்போனால், தான யோக்கியமான பிராமணனை உத்தேசித்து, அங்கே தானஞ்செய்துவிட்டு, ஊருக்குவந்தபின் உத்தேசித்த பிராமணனிடம் தானஞ்செய்த பொருள்களைச் சேர்த்துவிடவேண்டியது. பூர்வத்தில் தானங்களை யறியவேண்டுமென்ற பிரியமுள்ள திலீப

மஹாராஜனுக்கு வசிஷ்டர் சொன்னதைச் சொல்லுகிறேன். பிரம புத்திரரான புரோகிதரே! யாருக்குத் தானம் செய்யவேண்டியது? சிஷ்யனாகிய என்னிடத்தில் தயவுகூர்ந்து இதனுண்மையைச் சொல்லியருளவேண்டுமென்று பிரார்த்தித்த திலீபனைப்பார்த்து வசிஷ்டர் சொல்லத்தொடங்கினார். வேதோக்த ஆசாரங்களையுடைய பிராமணன் பாத்திரங்களில் உத்தமமான பாத்திரம்; அவனைக் காட்டிலும் உத்தமமானவன் சூத்திரான்னம் புசியாதபிராமணன். வேதம், புராணம், மந்திரம் இவைகளையறிந்து, வருணாச்ரமாசாரம் தவறாமல், சிவவிஷ்ணுவாதி தேவதாபூஜைசெய்துகொண்டு, தரித்திரத்தால் வருந்தி, குடும்பியாயிருக்கிற பிராமணன் எல்லாரிலும் மேலான உத்தமபாத்திரம்; அப்பேர்ப்பட்ட பாத்திரத்தில் கொடுத்த தானந்தான் தர்மார்த்த காமமோட்சமென்கிற சதுர்வித புருஷார்த்தங்களையும் கொடுக்கும். விசேஷமாய்ப் புண்ணியஸ்தலங்களில் அப்பேர்ப்பட்ட பாத்திரத்திலேயே தானங்கொடுக்கவேண்டும். அப்படி பாத்திரமறிந்து கொடாத தாதாவானவன் பத்து ஜன்மம் ஓணானாகவும், மூன்று ஜன்மங் கழுதையாகவும், இரண்டு ஜன்மந் தவளையாகவும், ஒரு ஜன்மம் சண்டாளனாகவும், பிறகு சூத்திரனாகவும், வைசியனாகவும், க்ஷத்திரியனாகவும், பிராமணனாகவும் முறையே பிறந்து தரித்திரத்தையடைந்து, ரோகங்களால் பீடிக்கப்பட்டுத் துன்பமடைவான். மஹாராஜனே! துர்ப்பாத்திரதானமானது இவ்வகையான துன்பங்களை யுண்டாக்குகிறபடியால் சற்பாத்திரத்தையறிந்தே தானஞ்செய்யவேண்டும். அப்படிப்பட்ட சற்பாத்திரன் அகப்படாதபட்சத்தில் ஒரு சற்பாத்திரத்தை யுத்தேசித்துச் சங்கற்பஞ்செய்து தானம்பண்ணித் தானஜலத்தைக் கீழேவிட்டு அவனிடம் சேர்ப்பிக்கவேண்டியது. உத்தேசிக்கப்பட்டவன் இறந்துபோய்விட்டால் அவனுடைய பிள்ளைக்கு அந்தத் தானப்பொருளைச் சேர்ப்பிக்கவேண்டியது. அவனு மிறந்துவிட்டால் மஹாதேவனுக் கர்ப்பணஞ்செய்துவிடவேண்டியது. கேளும் மஹாராஜனே! அதமமான பாத்திரத்தில் ஒருபோதும் தானஞ்செய்யலாகாது. விசேஷமாய்ப் புண்ணியதீர்த்தக்கரையில் சற்பாத்திரத்திலேயே தானம் கொடுக்கவேண்டியது என்று வசிஷ்டர் சொன்னதைக் கேட்ட திலீபராஜன் சற்பாத்திரத்திலேயே தானஞ்செய்துகொண்டுவந்தான். ஆகையால் புண்ணியஸ்தலமாகிய சேதுவில் சற்பாத்திரம் கிடையாதபட்சத்தில் சற்பாத்திரத்தை யுத்தேசித்துச் சங்கற்பம்பண்ணித் தானஞ்செய்து தானஜலத்தைப் பூமியில்விட்டு, ஊருக்குத்திரும்பிவந்த பிறகு உத்தேசித்த பிராமணனுக்கு அந்த பொருள்களைச் சேர்த்துவிடவேண்டியது. சேர்த்த அந்தத் தாதாவானவன் ஒருவிதமான துக்கத்தையுமனுபவியாமல் சாலோக்கியாதி நாலுவித முக்திகளையும் அடைவான். அப்படிக் கொடாமல்போனால் தாதாவுக்குத் தானபலன் கிடையாது.

கும்பகோணம், சேதுமூலம், கோகருணம், நைமிசாரணியம், அயோத்தி, தண்டகாரணியம், விருபாட்சம், வேங்கடம், சாளக்கிராமம், பிரயாகை, காஞ்சி, துவாரகை, மதுரை, பத்மநாபம், காசி, ஸமஸ்தநதிகள், சமஸ்தமான சமுத்திரங்கள், பாஸ்கரபருவதம், இவ்விடங்களில் உபவாசம் இருக்கவும் வேண்டும், க்ஷௌரமும் செய்துகொள்ளவேண்டும். உலோபத்தாலாவது, அஞ்ஞானத்தாலாவது உபவாசமிருத்தலும், க்ஷௌரஞ் செய்துகொள்வதுமில்லாமல் ஒருவன் வீட்டுக்குத் திரும்பிப்போனால் அவனுடைய பாதகம் அவனைப் பின்தொடர்ந்து போகிறது. கந்தமாதன பர்வதத்திலிருக்கிற இருபத்துநாலு தீர்த்தங்களுக்குள் இலட்சுமண தீர்த்தக்கரையில் தலை க்ஷௌரமாத்திரம் செய்துகொண்டு தட்சிணை கொடுத்து ஸ்நானம்பண்ணி, இலட்சுமணசங்கரரைத் தரிசித்தவன் சமஸ்த பாபமுமொழிந்து சங்கரபதத்தையடைகிறான். அர்த்தோதய புண்ணியகாலத்தில் இந்தமாதிரி ஸ்நானம்செய்யவேண்டியது. சேதுவுக்குச்சமானமான புண்ணியமாவது தீர்த்தமாவது, தபசாவது, கதியாவது, கிடையாது. அர்த்தோதய புண்ணியகாலமானது ஆயிரம் கிரகணத்துக்குச் சமானமானது. அர்த்தோதய புண்ணியகாலத்தைவிடச் சமுசார துக்கத்தை நீக்குகிற வேறு புண்ணியகாலம் கிடையாது. அந்தப் புண்ணியகாலத்தில் சேது ஸ்நானத்தாலுண்டாகிற புண்ணியத்துக்குச் சமானமாகச் சாஸ்திரங்களில் புண்ணியங்கள் சொல்லப்படவில்லை. பாகீரதியில் அறுபதினாயிர வருஷகாலம் ஸ்நானம்பண்ணின புண்ணியமானது சேதுவில் அர்த்தோதயத்திலும் மஹோதயத்திலும் ஒருவேளை ஸ்நானஞ்செய்வதால் வந்துவிடும். மாகமாசத்தில் சூரியன் மகரத்திலிருக்கும்பொழுது பாபமோசன பிரயாகையில் ஆயிரமாக ஸ்நானஞ்செய்த பலனும், மூன்று லோகங்களிலிருக்கிற தீர்த்தங்களில் ஸ்நானம்பண்ணுகிறபலனும், இராமசேதுவில் அர்த்தோதய புண்ணியகாலத்தில் செய்கிற ஒருபலனால் கிடைத்துவிடுகிறது. பிரமஞானமில்லாதவன், செய்தநன்றி மறந்தவன், துஷ்டசுபாவமு

ணடையவன், மஹாபாதகஞ்செய்தவன், இந்தப் பாபிகளெல்லாருக்கும் சேதுவில் அர்த்தோதயத்தில் ஸ்நானஞ் செய்வதால் பரிசுத்திவந்துவிடுகிறது. செய்த நன்றி மறந்தவனுக்கு வேறெங்கும் பிராயச்சித்தம் கிடையாது. அப்பேர்ப்பட்ட பாபிகளுக்கும் சேதுவில் அர்த்தோதய ஸ்நானம் பிராயச்சித்தமாக விதிக்கப்பட்டிருக்கிறது. சேதுவில் அர்த்தோதயகாலத்தில் அஞ்ஞானத்தால் ஸ்நானம்பண்ணாதவர்கள் சமுசாரத்தில் முழுகி அந்தகர்களைப்போல அதோகதியடைகிறார்கள். அர்த்தோதயத்தில் ஸ்நானம்பண்ணினால் அவன் சூரியமண்டலத்தைப் பிளந்துகொண்டு பிரமலோகம் போகிறான் என்பதில் சந்தேகமில்லை.

அர்த்தோதய புண்ணியகாலத்தில் சேதுவில்ஸ்நானம்பண்ணி ஜகந்நாதரான இராமனையும், சீதையையும் தியானம்பண்ணி, இராமநாதரையும், சுக்கிரீபன் முதலானவர்களையுந் தியானித்து, தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், பிதுர்க்களுக்கும் தர்ப்பணம்பண்ணி அர்த்தோதயகாலத்தில் சேதுவிலிருக்கிற அர்த்தோதயமென்கிற பரிசுத்தரான ஜகந்நாதரைப்பூஜைபண்ணி, திவாகரா! தேஜோராசியே! ஜகத்பதியே! உமக்கு வந்தனம். தேவேசா! நீர் அர்க்கியத்தைப் பெற்றுக்கொண்டு என்னிடத்தில் எப்பொழுதும் பிரசன்னராயிரும். அத்திரிகோத்திரத்திலுண்டான இலட்சுமிதேவிக்குச் சகோதரராயும், அமிர்தகலசராயுமிருக்கிற பகவானே உமக்கு வந்தனம். நீர் அர்க்கியத்தைப்பெற்றுக்கொள்ளும்; வியதீபாதா! மகாயோகா! மஹாபாதகநாசனா! ஸஹஸ்ரபாகுவே! ஸர்வாத்மாவே! உமக்கு வந்தனம் அர்க்கியத்தைப் பெற்றுக்கொள்ளும்; திதிவாரநட்சத்திரங்களுக்கு அதீசனும், பரமேசுவரனும், மாசரூபியாயும், காலரூபியாயுமிருக்கிற உமக்குவந்தனம் அர்க்கியத்தைப்பெற்றுக்கொள்ளும்" என்கிற நாமமந்திரங்களைச்சொல்லி, அர்க்கியங்கொடுத்துப் பதினாறு, பனிரண்டு, எட்டு, ஏழு, ஆறு, அல்லது ஐந்து பிராமணர்களுக்குச் சக்தியட்டில் அன்னங்கொடுத்து அலங்காரம்பண்ணி "ஜகந்நாதரான கேசவா! உம்முடைய ஜன்ம நட்சத்திரமாகிய சிரவண நட்சத்திரத்தில் நான் பிராமணர்களுக்குச்செய்த தானமானது உமக்கு அக்ஷயமாயிருக்கட்டும்" "நட்சத்திரங்களுக்கெல்லாம் அதிபதியாயும், தேவர்களுக்கு அமிர்தத்தைக்கொடுக்கிறவனும், கலாசேஷனும், ரோகணிபதியுமாகிய சந்திரா உமக்கு நமஸ்காரம் என்னைக்காப்பாற்றும்." "தினநாதா; ஜகந்நாதா; கலாநாதா; திரு

பர்மூர்த்தியே உம்முடைய இரண்டு பாதாரவிந்தங்களில் எனக்கு அசஞ்சலமான பக்தியிருக்கட்டும்" "சோம சூரியபுத்திரா! பிரபுவே! வியதிபாதா! உமக்கு நமஸ்காரம். ஏதோ நான்செய்கிறதானமானது உமக்கு அக்ஷயமாக இருக்கட்டும்." "ஜநார்த்தனா! வாசுதேவா! மாசம், ரிது, அயனம், காலம் இவைகளுக்கீசனாகிய ஹரியே! யாசகர்களுக்குக் கற்பகவிருட்சமாயிருக்கிற நீர் என்னுடைய பாபத்தைச் சமனம்பண்ணும்." இந்த மந்திரங்களைச்சொல்லி அர்ச்சனைபண்ணி வெண்கலப்பாத்திரம், கன்று இவைகளோடுகறவைப்பசுவையும், பழத்தையும், வெல்லத்தையும், நெய்யையும், யக்ஞோபவீதத்தையும் தாம்பூலம்தட்சிணையோடு அவர்களுக்குத் தானம்பண்ணி, ஹிரண்யசிராத்தத்தையாவது, ஆமசிராத்தத்தையாவது, அன்னசிராத்தமாகிய பார்வணசிராத்தத்தையாவது குறைவில்லாமல்செய்து, பின் ஆசாரியருக்கு வஸ்திரம், பூஷணம், குண்டலம், பதுமை, பசுமாடு, குடை, ஒருஜோடிப்பாதரக்ஷை இவைகளைக்கொடுத்து அவரைப்பூஜிக்கவேண்டியது. இந்தமாதிரி அர்த்தோதய புண்ணியகாலத்தில் சேதுவிலும், மற்றையபுண்யக்ஷேத்திரங்களிலும் விரதாநுஷ்டானஞ்செய்யவேண்டியது. இப்படிச்செய்தால்தான் அவன் கிருதார்த்தனாவான். அவன் வேறு ஒருதர்மமுஞ் செய்யவேண்டியதில்லை.

கந்தமாதனத்தில் சமுத்திரத்திலே ஸ்ரீராமனால் கட்டப்பட்ட சேதுவை ஸ்நானகாலத்தில் தியானித்துக்கொண்டு ஸ்நானஞ்செய்தால் அநேககோடிபாபங்களுந் தொலைந்து, அவன் விஷ்ணுபதவியையடைகிறான்; சேதுவில் ஒருநிமிஷமாவது, அரைநிமிஷமாவது தங்கியிருக்கிறவனுடைய கண்ணுக்கெதிரில் யமகிங்கரர்கள் வரப்பயப்படுகிறார்கள். இராமசேது, தனுஷ்கோடி, இராமன், சீதை, இலட்சுமணன், அநுமான், சுக்ரீவன், முதலான கபீசுவரர்கள், விபீஷணன், நாரதர், விசுவாமித்திரர், அகஸ்தியர், வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், இராமனுடைய இராப்த்தர்கள், ஸ்ரீராமநாதர் இவர்களெல்லாரையும் சதாமனதினால் தியானம்பண்ணினால் சமஸ்தபாபங்களையுமொழித்துப்பரமபதவியை யடையலாம். ஸத்தியக்ஷேத்திரம், ஹரிக்ஷேத்திரம், கிருஷ்ணக்ஷேத்திரம், நைமிசாரணியம், சாலக்கிராமம், பதரிகாச்ரமம், அக்நிசைலம், விருஷாசலம், சேஷாத்திரி, சித்திரகூடம், லட்சுமீக்ஷேத்திரம், ஸ்ரீரங்கம், காஞ்சி, கும்பகோணம், மோகினீபுரம், சுவேதாசலம்,

பத்மநாபம், புல்லம், கடிகாத்திரி, ஸாரக்ஷேத்திரம், ஸ்ரீநிவாசக்ஷேத்திரம், நாதக்ஷேத்திரம், அனிதக்ஷேத்திரம், சுகக்ஷேத்திரம் வாருணக்ஷேத்திரம், மதுரை, ஸ்ரீகோஷ்டி, புருஷோத்தமம், ஸ்ரீரங்கம், புண்டரீகாட்சம், முதலான ஹரிக்ஷேத்திரங்களில் ஸ்நானம்பண்ணி நீங்காத பாபங்களெல்லாம் சேது ஸ்நானத்தினால் நீங்கிவிடுகிறது. சந்தேகமில்லை. இராமனால் கட்டப்பட்டு ரிஷிகளெல்லாரும் வசிக்கிற சேதுவில் ஸ்நானம் பண்ணாதவர்களுக்கு ஒருநாளும் துக்கமொழியாது. "நமசிவாய" என்கிற ஸ்ரீபஞ்சாட்சரத்தையாவது, "ஓம் நமோநாராயணாய" என்கிற அஷ்டாட்சரத்தையாவது, ராமஷடக்ஷரத்தையாவது ஜபிக்காமலும், காதாலே கேட்காமலும், ஸ்மரிக்காமலுமிருக்கிறவர்கள் சுபமான ஹரிதினத்தில் உபவாசம் பண்ணாதவர்கள் ஜாபாலோபநிஷத்தில் சொல்லப்பட்ட ஏழு மந்திரங்களை யுச்சரித்துச் சிரசு முதலான இடங்களில் விபூதியை உத்தூளனம் செய்துகொண்டு திரிபுண்டரமாய் அணியாதவர்கள், சிவன் விஷ்ணு முதலான தேவர்களை வேதோக்தவிதிப்படி பூஜை பண்ணாதவர்கள், சிவவிஷ்ணுவாதி தேவர்களுக்குப் பக்தியோடுகூடத் தூபம், தீபம், சந்தனம், புஷ்பமிவைகளைக் கொடாதவர்கள்; ஸ்ரீருத்திரம், சமகம், புருஷசூக்தம், பாபமான்யாதி ஸூக்தம், திரிஸுபர்ணம், பஞ்சசாந்தி முதலிய மந்திரங்களைச்சொல்லிச் சிவவிஷ்ணுக்களை யபிஷேகஞ் செய்யாதவர்கள்; சிவவிஷ்ணுவாதி தேவர்களைப் பக்தியோடு பிரதட்சண நமஸ்காரஞ் செய்யாதவர்கள்; தநுர்மாசத்தில் உஷக்காலத்தில் மஹாநைவேத்தியத்தை வைத்துச் சிவவிஷ்ணுவாதிகளை யாராதிக்காதவர்கள்; விஷ்ணு நாமங்களையாவது, சிவநாமங்களையாவது கீர்த்தனம் பண்ணாதவர்கள்; சாளக்கிராம சிலையையாவது, கண்டகீநதியில் உற்பத்தியாகிற சிவநாபமென்கிற சிலையையாவது, துவாரகாசக்கிரமென்கிற வெளுப்பான சிலையையாவது, அஞ்ஞானத்தினால் பூஜைபண்ணாதவர்கள்; கங்காமிருத்திகை, துளசிமிருத்திகை, கோபீசந்தனமிவைகளை நெற்றி, மார்பு, இரண்டு கைகள், கழுத்துமுதலான இடங்களில் தரித்துக்கொள்ளாதவர்கள்; ருத்திராட்சம், துளசிகாஷ்டமிவைகளைத் தாரணம் பண்ணிக்கொள்ளாதவர்கள்; பிராம்மமுகூர்த்தத்தில் எழுந்திருந்து கலக்கமில்லாமல் ஹரிஹரநாமங்களையாவது, ஸ்தோத்திரங்களையாவது வேறு விசேஷமான மந்திரங்களையாவது சிந்திக்காதவர்கள்; விடியற்காலத்தில் ஆறு குளங்களுக்குப்போய் ஸ்நானம்பண்ணி, ஆசமனம்பண்ணிச் சந்தி

தே. பாஸ்திபண்ணி [illegible] உப வர்கள்; விடியற்காலத்திலும், சாயங்காலத்திலும் ஔபாசந அக்கினிஹோத்திரங்களைச் செய்யாதவர்கள்; மத்தியானத்தில் மாத்யானிகம் பிரமயக்ஞம், வைசுதேவம், யதிபூஜை, அதிதிபூஜை செய்யாத பாபிகள்; சாயங்காலத்தில் அதிதிபூஜை பண்ணாதவர்கள்; அத்தியயனம்பண்ணின வேதத்தைமறந்த மூடர்கள்; வேதங்களையும், வேதாங்கங்களையும் படியாதவர்கள்; பிரதிவருஷமும் மாதுர்சிராத்தம், பிதுர்சிராத்தம், மஹாளயசிராத்தம், அஷ்டகாசிராத்தம், இதரநைமித்திக சிராத்தங்களைச் செய்யாத லோபிகள்; சித்திரைமாசம்பௌர்ணமியில் சித்திரகுப்தனை யுத்தேசித்துப், பானகம், கனிந்தவாழைப்பழம், பாயசம் சர்க்கரை, வெல்லம், மாம்பழம், பலாப்பழம், பாதரட்சை, குடை, வஸ்திரம், புஷ்பம், சந்தனம், இவைகளைப் பிராமணர்களுக்குக் கொடாத பாபிகள்; இவர்களுடைய பாபங்களெல்லாம் சேதுவில் ஸ்நானம்பண்ணினமாத்திரத்தில் பஞ்சாய்ப்பறந்துபோகின்றன. நல்ல நடக்கையுடையவனானாலும், கெட்ட நடக்கையுடையவனானாலும், தனுஷ்கோடியில் ஸ்நானம்பண்ணினமாத்திரத்தில் சம்சார துக்கமொழிந்து புனர்ஜன்மத்தை யடைகிறதில்லை. சம்சாரசாகரத்தைத்தாண்டப் பிரியமுடையவன் உடனே இராமதனுஷ்கோடிக்குப் புறப்படவேண்டியது. தனுஷ்கோடியில் ஸ்நானம்பண்ணுவதைத் தவிர முக்திக்கு வேறு உபாயமில்லை. தனுஷ்கோடியில் ஸ்நானம்பண்ணுகிறவர்களுக்குச் சம்சாரபயநாசனமாயும், ஸத்தியமாயும், ஞானமாயும், அநந்தமாயும், பூர்ணமாயும், நித்தியமாயுமிருக்கிற பிரமமானது வெகு சுலபமாய்க் கிடைக்கிறது. ஆகையால் ரிஷீசுவரர்களே! நீங்கள் முக்தியடைய வேண்டுமானால் தனுஷ்கோடிக்கு உடனே புறப்பட்டுப்போங்கள். சத்தியத்தைச் சொன்னேன்; இதத்தைச்சொன்னேன்; ஸாரத்தைச்சொன்னேன்; பலதரமும் சொன்னேன்.

ரிஷீசுவரர்களே! கேளுங்கள். இந்தப்பிரகாரம் உத்தமமான சேதுவினுடைய மஹாத்மியத்தை உங்களுக்கெடுத்துச் சொல்லிவிட்டேன். இந்த மஹாத்மியமானது கேட்பவர்களுக்கும், படிக்கிறவர்களுக்கும், மஹா துக்கங்களையும், மஹாரோகங்களையும், துர்ச்சொப்பனங்களையும், அபமிருத்தியுக்களையும் போக்கிச், சாந்தியைக்கொடுத்துச், சகல தீர்த்தபலன்களையும், அக்கினிஷ்டோமா

[illegible] ணுஞ்செய்த பலனையும் அளித்துச், சொர்க்காதி புவனபோகங்களையும் தந்து, அந்தத்தில் மோட்சத்தையும் கொடுத்துவிடும். இந்தச் சேதுமாகான்மியத்தில் ஒரு அத்தியாயத்தைப்படிக்கிறவனும் கேட்கிறவனும், அசுவமேதபலனை யடைகிறான். இரண்டத்தியாயங்களைப் படிப்பவரும், கேட்பவரும், கோமேதயாகபலனை யடைகிறார்கள். பத்து அத்தியாயங்களைப் பக்தியுடன் படிப்பவரும், கேட்பவரும் சொர்க்கலோகம்போய் இந்திரனோடு சந்தோஷமாயிருக்கிறார்கள். இருபதத்தியாயங்களைப் படிப்பவரும், கேட்பவரும் சத்தியலோகம்போய் பிரம்மாவோடு வாழ்ந்திருப்பார்கள். முப்பதத்தியாயம் படிப்பவரும், கேட்பவரும், விஷ்ணுலோகத்துக்குப் போய் விஷ்ணுவோடு சுகமாயிருக்கிறார்கள். நாற்பது அத்தியாயம் படிப்பவரும், கேட்பவரும் ருத்திரலோகம்போய் ருத்திரரோடு வாழ்ந்திருக்கிறார்கள். ஐம்பது அத்தியாயம் படிப்பவரும், கேட்பவரும், சந்திரசேகரரான ஸாம்பபரமேசுவரரை யடைகிறார்கள். இந்த மஹாத்மியத்தை ஒருதடவை முற்றிலும் படிப்பவரும், கேட்பவரும் சிவசாலோகத்தையும் இரண்டுதரம் படிப்பவரும், கேட்பவரும் சிவசாமீப்பியத்தையும்; மூன்றுதரம் படிப்பவரும் கேட்பவரும் சிவசரூப்பியத்தையும். நாலுதரம் படிப்போரும் கேட்போரும் சிவசாயுஜ்யத்தையும் அடைவார்கள். தினந்தோறும் ஒரு சுலோகத்தையாவது, கால்சுலோகத்தையாவது, ஒரு பதத்தையாவது, இரண்டு அக்ஷரத்தையாவது, ஒரு அக்ஷரத்தையாவது சொன்னால் அன்றன்று பண்ணின பாபம் அப்பொழுதே தொலைந்துபோய்விடுகிறது. இந்தச் சேது புராணத்தை முற்றிலும் ஒருதடவை படித்தாலும், கேட்டாலும் அந்தப்புஸ்தகத்தில் எவ்வளவு அக்ஷரங்களிருக்கின்றனவோ அவ்வளவு பிரமஹத்தியாதிப்பாபங்களும், சுராபானபாபங்களும், சொர்ணஸ்தேயாதிபாபங்களும், குருபத்தினி கமனாதிபாபங்களும், இந்த நால்வரோடுகூடினதினாலுண்டாகிற ஸம்ஸர்க்க தோஷங்களும் உடனேநசித்துப்போகின்றன; இதுவுமல்லாமல் கந்தமாதனபருவதத்திலிருக்கிற இருப்பத்துநாலு தீர்த்தங்களிலும், அங்குள்ள மற்றைய தீர்த்தங்களிலும், அவ்வளவுதடவை ஸ்நானம்பண்ணின பலனும் வருகிறது. இந்தப் புராணத்தைப் பக்தியோடு எழுதுகிறவன் அஞ்ஞானகூட்டங்களினின்றும் விடுபட்டுச் சிவசாயுஜ்யத்தை யடைகிறான். எழுதப்பட்ட இந்தப் புஸ்தகம் எந்த வீட்டிலிருக்கிறதோ அந்த வீட்டில் வியாதி பீடையும், சோரபயமும், சி[illegible]டையும் எட்டிக்கூடப் பார்க்காது. ரிஷீசுவரர்கம[illegible]டை; இராமசேதுவாக அறிந்துகொள்ளுங்கள். அந்த வீட்[illegible] இருபத்துநாலு தீர்த்தங்களும், புண்ணியமான கந்தமாதன பர்வதமும், பிரமவிஷ்ணு ருத்திரர்களும் வசிக்கிறார்கள். அதிகமாய்ச் சொல்வானேன்: அந்த வீட்டில் மூன்றுலோகங்களும் குடிகொண்டிருக்கின்றன. சிராத்தகாலத்தில் இந்தப் புராணத்தில் ஒரு அத்தியாயத்தைப் படித்தால் சிராத்தத்திலுண்டான குறைவு நீங்கிப் போம். பிதுர்த்தேவதைகளும் திருப்தியடைகிறார்கள். பருவகாலத்தில் இதில் ஒரு அத்தியாயத்தையாவது, ஒரு சுலோகத்தையாவது பிராமணர்களுக்கெடுத்துச் சொல்கிறவனுடைய பசுமாடுகளும், எருமைகளும் ரோகமற்றுப் பால்பெருகிக் கன்றுகளுடன் வாழ்ந்திருக்கும். இந்தப் புராணத்தை மடத்திலும், தேவாலயத்திலும், நதீதீரங்களிலும், தடாகதீரங்களிலும், புண்ணியமான காடுகளிலும், அல்லது வேதந்தெரிந்த பிராம்மணர்களுடைய வீடுகளிலும் வாசிக்கவேண்டியதே தவிர வேறெங்கும் வாசிக்கத்தகாது. விஷுபுண்யகாலத்திலும், அயனபுண்ணிய காலங்களிலும், புண்ணியமான ஹரிதினங்களிலும், அஷ்டமி, சதுர்த்தசியாகிய இரண்டு திதிகளிலும், சிராவணமாசத்திலும், புரட்டாசிமாசத்திலும், தநுர்மாசத்திலும் நியதமாய்ப் படிக்கவேண்டும். படிப்பிக்கவும் வேண்டும். இதைக்கேட்கிறவர்களும் நியமத்தோடு கேட்கவும்வேண்டும். இந்தப் புராணத்தில் அநேக புண்யதீர்த்தங்களும், புண்ணியவான்களான அநேக இராஜரிஷிகளும், மஹரிஷிகளும், தர்மாதர்மங்களும், பிரமவிஷ்ணு ருத்திரர்களென்கிற மும்மூர்த்திகளும் சொல்லப்படுகிறார்கள். பாபத்தைப்போக்கடித்துப் பரிசுத்தியைக்கொடுக்கிற இந்தப் புராணமானது வேதார்த்தங்களைக்கொண்டு நிரூபிக்கப்பட்டிருக்கிறபடியாலும், ஸ்மிருதி கர்த்தர்களுக்கும், வியாசமுனிவருக்கும் சம்மதமாயிருக்கிறபடியாலும், க்ஷேமத்தை யடையக்கோருகிறவன் இதைப் படிக்கவும்வேண்டும். கேட்கவும்வேண்டும். இந்தப் புராணத்தை வாசிக்கிறவருக்குக் கேட்பவர்கள் லோபித்தனமில்லாமல் தங்களுடைய சக்திக்குத் தக்கப்படி சொர்ணம், தானியம், பூமி, பசுமாடு, வஸ்திரமிவைகளைக்கொடுத்து மரி

றவருக்கு மரியாதைப் பண்ணி
யாதை பண்ணினதாகும்; திரிமூர்த்
பண்ணினல் திரிலோகங்களுக்கும் மரியா
தாகும். இப்படி மரியாதை பண்ணினவர்களுக்கும், மரியாதை பண்ணப்பட்டவருக்கும், விஷ்ணுவாயிருந்து மனுஷாவதாரம்பண்ணின சீதா இலட்சுமண சமேதரான ஸ்ரீராமர் பூலோகத்தில் போகபோக்கியங்களைக் கொடுத்து, அந்தத்தில் முக்தியும் கொடுக்கிறார். வியாசரிஷியினுடைய முகாரவிந்தத்திலிருந்து பெருகின சுபமான இந்தச் சேதுபுராணத்தை யுதிஷ்டிரராஜாவானவர் பீமசேனன் முதலான தம்பிகளோடும், பரிவாரத்தோடும், ஆசாரசீலராய்த் தமது புரோகிதராகிய தௌமியரிடத்திலிருந்து பிரதிதினமும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ஓ நைமிசாரணியவாசிகளான முனீசுவரர்களே! இந்த இரகசியமாயும், வேதசம்மதமாயும் நீங்கள் சிரத்தையோடு என்னிடத்தில் கேட்டதாயிருக்கிற இந்தப்புராணத்தைப் பக்தியுடன் நித்தியமும்படித்துச் சிரத்தையுடைய உங்கள் சிஷ்யர்களுக்கும் சொல்லிவாருங்கள் என்று சொல்லி ஆனந்தபரவசராய்ச், சரீரம்புளகித்தக், கண்ணீர் பெருகத் தமது குருவான வியாசமகாமுனிவரை ஸ்மரித்து ஆனந்தக்கூத்தாடினர்.

இந்தச்சமையத்தில் மகாவிஷ்ணுவாகியும், பராசரபுத்திரராயுமிருக்கிற வியாசமுனிவர் தமதுசிஷ்யனுக்கு அனுக்கிரகம்பண்ணும்பொருட்டு எதிரில்தோன்றினர். அப்படிவந்த சத்தியவதிசுதரான வியாசரைக்கண்டு சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளான ரிஷிகளோடுகூட எதிர்கொண்டழைத்து, ஆனந்தக்கண்ணீர்பெருக அவருடைய சரணாரவிந்தங்களில் தண்டம்போலவிழுந்து பணிந்திருந்தார். அப்படிப்பணிந்த தமது பிரியசிஷ்யரான சூதரை யிரண்டு கைகளாலும் வாரியெடுத்து, ஆசீர்வதித்து, அடிக்கடி கட்டிக்கொண்டு, நைமிசாரணிய வாசிகள் போட்ட பயாசனத்தில் வீற்றிருந்து, தம்முடைய ஆக்ஞையின்படி சூதரும், ரிஷிகளெல்லாரும் உட்கார்ந்தபின், நைமிசாரணிய வாசிகளான சௌனகாதியர்களைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினர். ஓ நைமிசாரணியவாசிகளே! என்னுடைய சிஷ்யனான இந்தச்சூதன் சுருதி, ஸ்மிருதி, புராண இதிகாச சாஸ்திரங்களின் முடிவானபொருளை விளக்குகிற

தாயும், எல்லாப்புராணங்களாத்
ஸாரசனுமிருக்கிற இந்தச்சேது புராண
பொழுது சொல்லிமுடித்தாரென்பதை நான் அறிவேன்..,
ஜாவானவர் தௌமியரிடத்தில் என்னுடைய ஆக்ஞையின்படி தினந்தோறும் கேட்டுக்கொண்டு வருகிறார். ஆகையால் நீங்களுமிந்தப் புராணத்தைப் படித்தும், கேட்டும், உங்களுடைய சிஷ்யர்களுக்கு உபதேசித்தும் வாருங்கள் என்று சொன்னதைக் கேட்ட சௌனகாதிரிஷிகளும் அப்படியே ஆகட்டும் என்றுசொன்னார்கள் பிறகு வியாசமுனிவர் தமது சிஷ்யராகிய சூதரோடு, முனிவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு ஸ்ரீகைலாசம்போய்ச் சேர்ந்தார். சௌனகாதி ரிஷீசுவரர்களும் பரமானந்தபரிதர்களாய்த்தினந்தோறும் சேதுபுராணத்தைப் படித்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் வருகிறார்கள்.

ஐம்பத்திரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

152
11RS914

சம்பூரணம்.

Armenian Street, Madras.

aitran Press.

s & Book-binders.

ss for High Class Printing.

For terms & estimates.

APPLY TO THE MANAGER.

ஸ்ரீ தேசமித்திரன்.

(தென்னிந்தியாவில் தினப்படிப் பிரசுரமாகும் தமிழ்ப்பத்திரிகை இதைத்தவிர வேறில்லை. அநேக பெரியமனிதர்கள், உத்தியோகஸ்தர்கள், மிராசுதார்கள் வியாபாரிகள் முதலாயினோர் வாங்கி வாசிக்கும் பத்திரிகை. வியாபாரச் சரக்குகளை விளம்பரப் படுத்தவேண்டுவோர்க்கு இதைவிடத் தக்கபத்திரிகையில்லை.)

சந்தா விவரம்.

தினப் பதிப்பிற்கு.

இந்தியாவில் :

1-வருஷத்திற்கு ரூபாய் 14 0 3-மாதத்திற்கு ரூபாய் 3 8
6-மாதத்திற்கு ,, 7 0 1-மாதத்திற்கு ,, 1 4
மோரீஸ், சிங்கப்பூர், நேட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு ,, 18 0

சென்னை கையொப்பக்காரர்களுக்கு.

வருஷத்திற்கு ரூபாய் 12, மாதத்திற்கு ரூபாய் 1.

வாரம் மும்முறைக்கு.

1-வருஷத்திற்கு ரூபாய் 7 0 3-மாதத்திற்கு ரூபாய் 2 4
6-மாதத்திற்கு ,, 4 0 1 மாதத்திற்கு ,, 0 12
மோரீஸ், சிங்கப்பூர், நேட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு ,, 10 8

* * *

தீனதயாளு.

(அங்கிலேய பாஷையில் நாவல் என்று எழுதப்பட்டிருக்கும் கதைபோல் தமிழில் எழுதப்பட்டது)

425

ஸ்ரீ சுதேசமித்திரனால்
எழுதப்பட்டது

விலை அணா 8.] [தபாற்கூலி அணா 1.